தொல்குடி வேட்டுவர்

வாழ்வும் வரலாறும்

தொகுதி - 2

பதிப்பாசிரியர்கள் :

திரு.கோபிநாத் ஸ்டாலின்
முனைவர் கா.காமராஜ்,
மருத்துவர் தே.வாழை பரமேஸ்வரன்
திரு.க.மல்லீஸ்வரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை,
ஈரோடு.

நூல் விவரக்குறிப்பு

நூல் தலைப்பு	:	**தொல்குடி வேட்டுவர் வாழ்வும் வரலாறும்** தொகுதி -2
பதிப்பாசிரியர்கள்	:	திரு.கோபிநாத் ஸ்டாலின் முனைவர் கா.காமராஜ், மருத்துவர் தே.வாழை பரமேஸ்வரன் திரு.க.மல்லீஸ்வரன்
வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை- 600 113 தொலைபேசி எண்: 044-22542992
வெளியீட்டு எண்	:	**1164**
பதிவு எண் (ISBN)	:	978-81-983429-3-5
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2025
பயன்படுத்திய தாள்	:	70 ஜி.எஸ்.எம் என்.ஸ் தாள்
நூலின் அளவு	:	1/8 டெமி
எழுத்தின் அளவு	:	11 புள்ளிகள்
பக்க எண்ணிக்கை	:	460
அச்சுப்படிகளின் எண்ணிக்கை	:	500
விலை	:	ரூபாய் : 350
அச்சகம்	:	ASX பிரிண்டர்ஸ், சென்னை
பொருண்மை	:	வேட்டுவர் வரலாறு

கோபிநாத் ஸ்டாலின், எம்.ஏ.,
இயக்குநர் (கூ.பொ.)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

வேட்டை, வேளாண்மைக் காலம் முதல் சங்க காலம் வரையிலும் தமிழ்நாட்டு இலக்கியங்களிலும் வேட்டுவர்களைப் பற்றி வாழ்வியல் வரலாற்றுக் குறிப்புகள் பரவிக்கிடக்கின்றன. சங்க காலம் முதலாக விஜயநகர அரசர்கள் காலம் வரையிலும் வேட்டுவர் அரசர்கள் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பொ.ஆ. 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அல்லாள இனய நாயக்க அரசன் தன் அரசுக்கு உள்பட வேளாளர் மக்களின் வனத்தைக் கருதி இராஜ வாய்க்கால் எனும் பெயரில் நீர்வழித் தடத்தை அமைத்துப் பல்லாயிரம் நிலங்களை வளமைப்படுத்தி உள்ளான்.

மாண்புமிகு தமிழ் நாட்டு முதலமைச்சர் திரு.மிகு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அல்லாள இனயை நாயக்கரின் சமூகப் பணிகளை அறிந்து 14-01-2025 தை நாள் 1-ஆம் நாள் அரசு விழாவாக நடத்தப்படும் என்று ஆணையை வழங்கி, தமிழ் நாட்டு வரலாற்றில் பெரு முத்திரைப் பதித்துள்ளார். அவர்களுக்கு நிறுவனத்தின் சார்பாகப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பழங்குடிகள் குறித்த ஆய்வேடுகளையும் வழங்கி உள்ளது. மேலும், கருத்தரங்குகளையும் நடத்திச் சிறப்பைச் சேர்த்துள்ளது. ஈரோடுஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளையினர், தங்கள் கல்வி நிறுவனத்தில் 25-ஆவது ஆண்டு நிறைவையொட்டியும், வேட்டுவ அரசன் அல்லாள இனைய நாயக்கன் அவர்களின் பெயரில் நடத்தப்பெற இருக்கும் முதல் அரசு விழாவில் தொல்குடி வேட்டுவர் வரலாறும் வாழ்வியிலும் எனும் பொருண்மையில் ஊஞ்சலூரில் ஒரு கருத்தரங்கம் நடத்த இருப்பதாகவும் தெரிவித்தனர். வேட்டுவர் குறித்து மட்டும் ஒரு கருத்தரங்கம் நடைபெற வேண்டுமென அவர்களின் ஆர்வத்தை அறிந்து பெரிதும் மகிழ்கிறேன்.

அண்மைக் கால பல ஆய்வுகளில் இந்த ஆய்வும் விழாவும் அதையொட்டி ஆய்வாளர்களின் கட்டுரைகளின் தொகுப்பை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலமாக வெளியிடவும் வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

எண்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எதிர்ப்பாக்கிறோம் என்றனர் தற்பொழுது 100 கட்டுரைகள் பெறப்பட்டுள்ளன. அக்கட்டுரைகளைத் தொகுப்பாக நிறுவனத்தின்மூலம் வெளியிட அனுமதி அளித்த தமிழ் நாட்டு தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களுக்கு நன்றி.

இக்கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியீட அனைத்து முயற்சிகளையும் சிறப்பாகச் செய்த நிறுவனப் பணியாளர்கள், நூலின் மெய்ப்புத்திருத்தம் செய்த முனைவர் திரு. காமராசு அவர்களுக்கு கணிப் பொறியாளர் திரு... ஆகியோர்களும் என் நன்றிகள் இத்தொகுப்பை அழகுற அச்சிட்டு அளித்த........ அச்சகத்தார்க்கும் என் பாராட்டுகள்.

மாணவர்களும், பழங்குடி ஆய்வு ஆர்வலர்களும் படித்துப் பயன் பெற வேண்டும்.

முத்தமிழறிஞர் அவர்கள், தமிழ் மீதும் தமிழர் மீதும் தமிழ்நாட்டின் மீதும் தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டிருந்த அன்பும் கருணையும் அளப்பரியது. அந்தவகையில், தமிழ் வளர்ச்சிக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்த்த தமிழ்நாட்டின் மேனாள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றியைப் பதிவு செய்கின்றேன்.

தமிழ் வளர்ச்சிக்கும் இந்நிறுவன வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ் மீது அளவற்ற அன்பும், ஆழ்ந்த அறிவும் கொண்டு, தமிழ் வளர்ச்சித் துறை மூலமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலமும் எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் வழிகாட்டிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமான திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சியில் எங்களை வழிநடத்தி வரும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு வே. ராஜாராமன் இ.ஆ.ப மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ந. அருள் அவர்களுக்கும் என் இனிய நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இயக்குநர் (கூ.பொ)

வாழ்த்துரை

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தக்குடி வேட்டுவர் போர்க்குடி. வேட்டுவர் குடியானது அரசு உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்தது. இவர்கள் ஆநிரை கவர்தல் ஆநிரை மீட்டல் எயில் காத்தல் போன்ற வீரச் செயல்களை தொல்காப்பியர் காலத்தில் இருந்தே வீரமுடனும், தீரமுடனும் செயல்பட்டு வாழ்ந்து வருகின்றனர் இந்த நிகழ்வில் உயிர் நீத்தோர் புகழை நிலைபெறச் செய்ய நடுகல்நட்டு வழிபடத் தொடங்கினர். இந்த வழிபாட்டு முறை வளர்ந்து ஐயன் கருப்பணசாமி என்ற குலதெய்வமாக வளர்ச்சி அடைந்தது. இந்த வளர்ச்சி போர்த் தெய்வமான கொற்றவைத் தெய்வத்தையும் இணைக்கும் குலதெய்வ வழிபாடாக கொங்கு மண்ணில் வேட்டுவர் வழிபட்டு வந்தனர். மக்களிடையே நாகரிக வளர்ச்சி அடையத் தொடங்கியது சிறுகுடித் தலைவன் வேளீர்சிற்றரசன் அரசர் வேந்தன் என்று வளர்ச்சி அடைந்தனர். தமிழ்நாடு 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு சேர, சோழ, பாண்டிய தொண்டை மண்டலங்கள் மற்றும் கொங்கு மண்டலங்கள் என்று உருவானது சேர, சோழ, பாண்டியர் மற்றும் பல்லவர்கள் பெரும் வேந்தர்களாக உருவான நிலையில் கொங்கு மண்டலத்தில் வேட்டு அரசர்கள் ஆட்சி செய்த பல்வேறு கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் போன்றவை கிடைக்கபட்டுள்ளன. மேலும் சங்க இலக்கியங்களில் பூர்வ குடியான வேட்டுவர்களைப் பற்றி எண்ணற்ற தரவுகளைக் கொண்டுள்ளன. இதில் வல்வில் ஓரி, அதியமான், கடிய நெடுவேட்டுவன், கண்டிரம் கோ பெருநள்ளி, போன்றோர் சங்க கால அரசர்கள் ஆவார்கள். மேலும் திருப்பாண்டிக் கொடுமுடி, வெஞ்சமான், அல்லளா இளைய நாயகன், பல்லவராயன், அப்பிச்சிமார் காவியத்தின் தலைவரான ராஜ ராஜேந்திரமாராயன் என்கின்ற அப்பிச்சி மாராயன் போன்றோர் கொங்கு மண்டலத்தை ஆட்சி செய்த வேட்டுவ அரசர்கள் இவர்கள் அனைவரும் சிவபக்தர்கள் ஆவார்கள். இவர்களின் கல்வெட்டு செப்பேடு போன்றவை எண்ணற்று உள்ளன. இதில் கொங்கு வேட்டுவ அரசர்களின் சைவ சமய வளர்ச்சிக்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளை செப்பேடு வழியாக நாம் அறிய முடிகிறது.

தொல்குடி வேட்டுவர் மொழியை உருவாக்கினார்கள்; பாறை ஓவியங்கள் மூலம் எழுத்தை உருவாக்கினார்கள், வானசாத்திரங்கள் இரும்பு மற்றும் உலோகங்களைக் கண்டறிந்தனர்; போர்க் கருவிகள் கண்டறிந்தனர். விவசாயம் மற்றும் நீர் மேலாண்மையை உருவாக்கி விவசாயத்தில் புரட்சி செய்தனர். அரசு உருவாக்கி உணவு வழங்குதல் வரி வசூலித்தல் மக்களைப் பாதுகாத்தல் என பன்முகத் தன்மையுடன் வேட்டுவர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதனைத் தனது ஆய்வுக் கட்டுரைகள் மூலம் வெளிக்கொண்டு வந்த அனைத்துக் கட்டுரையாளர் களுக்கும் நன்றியும் வாழ்த்துக்களும். வேட்டுவ அரசர்கள் கன்னியாகுமரி முதல் வேங்கடம் வரை சிறப்பாக ஆட்சி செய்து வந்தார்கள் என்பதை கட்டுரைகளில் பேராசிரியர்களும், ஆராய்ச்சி மானவர்களும் தெளிவாக விளக்கி உள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த வேட்டுவர் வாழ்வும் வரலாறும் என்ற ஒரு நாள் கருத்தரங்கு நடத்த வேண்டும் என்று ஆனந்தபுரம் கிருஷ்ணமூர்த்தி ஐயா அவர்களிடம் கேட்டுக்கொண்ட போது அவர் சிறிதும் தயக்கம் இன்றி உடனே உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு திரு. கோபிநாத்ஸ்டாலின் ஐயா மற்றும் முனைவர் கா.காமராஜ் ஐயா ஆகிய இருவருடனும் பேசி அவர்களைச் சந்திக்க அனுமதி பெற்று கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை நிர்வாகக் குழு உறுபினர்களைச் சென்னைக்கு அழைத்து சந்திப்புக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். தொல்குடி வேட்டுவர்களின் வாழ்வியல் மற்றும் வரலாற்றுச் செய்திகளை உலக அரங்கில் கொண்டு செல்லும் வகையில் இந்தக் கருத்தரங்கிற்கு அனுமதி அளித்து ஆதரவு கொடுத்த ஐயா திரு.கோபிநாத் ஸ்டாலின் மற்றும் பேராசிரியர் முனைவர் கா. காமராஜ் ஐயா இருவருக்கும் ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை சார்பாகவும் வேட்டுவர் டிவியின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஸ்ரீ கண்ணப்பர் அறக்கட்டளைத் தலைவர் மருதுவர் மயிலேறு ரவீந்திரன், செயலாளர் ஐ.கே.சுப்பிரமணியம், பொருளாளர் ராமசாமி, துணைத் தலைவர் பழனிசாமி கவுண்டர், மேலும் ஸ்ரீ கண்ணப்பர் கல்வி மடல் ஆசிரியர் மல்லிஸ்வரன் சிவானந்தம், கண்டியன்னன், தங்கவேலு மற்றும் முனைவர் ப.சசிகலா, திரு.எழில்வாணன் முனைவர் மு. கருப்புசாமி, முனைவர் குமாரசாமி, திரு.வடிவேலு ராமசாமி, வரலாற்று ஆசிரியர் திரு.ராஜசேகர் தங்கமணி, அடசப்பாளையம் திரு. சந்திரசேகர்,

திரு. கோவிந்தராஜ் ஆகியோருக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றியைக் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தச் சிறப்புமிக்க வரலாற்று நிகழ்வைப் பதிவு செய்த வேட்டுவர் டி.வி. மற்றும் vettuvar.com ஆகிய நிர்வாகத்திற்கும் ஆரம்ப வசதி செய்து கொடுத்த திருமதி. வேணுகாதேவி அவர்களுக்கும் எங்களது நன்றி கலந்த வணக்கத்தையும், வாழ்த்து களையும் தெரிவித்துக் கொள்கிறோம். அதேபோல் ஆணித்தரமாகக் கருத்துக்களை எடுத்துரைத்த ஆய்வாளர் பெருமக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி!

செல்வத்தின் பயன் ஈதலே என்பது போல் கல்வியின் பயன் யாது? தாம் கற்றதை, கேட்டதை, பார்த்ததை, அனுபவித்ததை ஒரு சேரக் கொண்டு கற்றவரும், மற்றவரும் பாராட்டும் வண்ணம் எடுத்துரைக்க வேண்டும்; எடுத்துச்சொல்ல வேண்டும். அதுதான் கற்றதன் பயன். எனவே இந்த நூல் சமுதாய ஆர்வலர்கள், வரலாற்று ஆய்வாளர்களின் இல்லங்களில் எல்லாம் சென்று அலங்கரிக்க வேண்டும். மேலும் கருத்தரங்கு தேசியக் கருத்தரங்காக நடத்த திட்டமிட்டோம் ஆனால் வெளிநாடுகளில் இருந்தும் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு பன்னாட்டு கருத்தரங்காக மாற்றம் பெற்றதில் எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

50 கட்டுரைகள் வரும் என எதிர்பார்த்தோம். ஆனால் நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் வந்து எங்களைத் திக்கு முக்காடச் செய்து விட்டார்கள் அறிஞர் பெருமக்களுக்கும் இக்கருத்தரங்கு சிறக்க உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி! அவர்களுக்கும் விழாகுழு சார்பாக நெஞ்சார்ந்த நன்றி!

வாழ்த்துக்களுடன்,

மருத்துவர் வாழை பரமேஸ்வரன் M.D..

நிறுவனர். வேட்டுவர் டி.வி.

வாழ்த்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை மற்றும் ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை ஈரோடு இணைந்து நடத்தும் தொல்குடி வேட்டுவர் வரலாறும் வாழ்வியலும் பற்றி ஒருநாள் கருத்தரங்கம், காவிரியில் தடுப்பணை கட்டி [illegible] விழாவை அரசுவிழாவாகக் கொண்டாடும் 14.01.2025, தைத்திருநாளில் நடைபெற உள்ளது என்பது எவ்வளவு பெரிய விடயம். நினைக்க, நினைக்க [illegible]

வேட்டுவர் பற்றிய ஆராய்ச்சிகளை சமூக அக்கறையுடன் தங்கள் நாவும், பேனாவும் சுழன்று கட்டுரைகளை அனுப்பிய அறிஞர் பெருமக்களை ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை இருகரம் கூப்பி வணங்குகிறது.

[illegible]

[illegible]

C.மயிலேறு ரவீந்திரன்
தலைவர். ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை

பொருளடக்கம்

1. சைவ இலக்கியங்களில் வேட்டுவர்கள் 15
- **புதுவைக் கலைமாமணி செல்லூர் கண்ணன்**

2. குறிஞ்சித் திணை வேட்டுவர்களின் மலை சார்ந்த உணவாதாரம்
- **வே.அரிகிருஷ்ணன்** 23

3. வேட்டுவரின் புழங்குபொருள் பண்பாடு 28
- **ரா. நித்யாதேவி**

4. நற்றிணை முல்லைத் திணைப் பாடல்களில் வேட்டுவர் 33
- **முனைவர் ச.முரளி**

5. திருக்குற்றாலக் குறவஞ்சியில் வேட்டுவர் 37
- **மு.சுவேதா**

6. சிலப்பதிகாரத்தில் வேட்டுவர் - **ஏ.கிருபாகணேஷ்** 41

7. A STUDY OF TRIBAL AND HUNTER GATHERER'S LIFE 45
- D. A. MEENAKSHI SUNDARAM

8. The Vettuvar Community: An Anthropological Exploration of Culture, History, and Identity 53
- G. SOWPARNIKA

9. சங்க இலக்கியத்தில் வேட்டுவன் 61
- **முனைவர் ஜா.கீதா**

10. சங்க இலக்கியம் காட்டும் வேட்டுவர்களின் தொழில்நுட்ப ஆளுமை - **முனைவர் ஜா. கிரிஜா** 66

11. வேட்டுவர்குல மெய்யடியார்களும் அவர் தம் மெய்யுணர்வுகளும் - **முனைவர் சி. உமா சாரதா** 72

12. பெரியபுராணத்தில் வேடர் வாழ்வியல் 78
- **முனைவர் யாழ். சு. சந்திரா**

13. சிலப்பதிகாரம் வேட்டுவவரி காட்டும் வேட்டுவரின் வாழ்வியல் 86
- **முனைவர் ஜெ.சுந்தரபாண்டியன்**

14. இலக்கியங்களில் வேடுவர்களின் வாழ்வியல் 92
- **முனைவர் சு. காளீஸ்வரி**

15. கரூர் மாவட்ட வேட்டுவர் நடுகற்கள் 98
- **பெ.இராமலிங்கம்**

16. வரலாற்றுப் பெட்டகத்தில் வேட்டக்குடி 106
- **முதுமுனைவர் மு.தெய்வேந்திரன்**

17. வேட்டுவர் வணங்கும் தெய்வங்களின் வரலாறும் வழிபாடும் 114
- **வீ.கோவிந்தராஜ், பொ.திருநாவுக்கரசு,**

18. கொங்கு நாட்டு ஆவணங்களில் வேட்டுவர்கள் 121
- **எம்.ராஜலிங்கம்**

19. வேட்டுவர் என்னும் தொல்குடியினரின் கொடைகள் 131
- **சௌ.சந்தானகிருஷ்ணன்**

20. வேட்டுவர்களும் அவர்களின் வாழ்க்கை நிலையும் 137
- **முனைவர் கு.பிரபாகரன்**

21. வரலாற்றில் வேட்டுவர்களின் வாழ்வியல் 142
- **ச. செந்தில்குமார்**

22. கொங்கு நாடும் வேட்டுவர் வரலாறும் 149
- **பா. கமலவேணி** எம்.ஃபில்

23. நொய்யல் செல்லாண்டியம்மன் கோவில் வரலாறும், வழிபாடும் - **முனைவர் ப.சசிகலா** 155

24. இலக்கியத்தில் வேட்டுவர் வரலாறு - ஓர் ஆய்வு 163
- **முனைவர் க.சந்தானம்**

25. வேட்டுவர்குல வரலாற்று இலக்கியங்களின்
செம்பதிப்புத் தேவை 169
- **முனைவர் கா. திருநாவுக்கரசு, சு. விக்னேஷ்**

26. பெருமைமிகு வேட்டுவர் சில நினைவுகள் 178
- **பேராசிரியை ஆர்.தமிழ்ப்பொன்னி**

27. வேட்டுவ மாதரின் இறைப்பணிகள் 182
- **செல்வி இ.பிரதிக்ஷா**

28. வேட்டுவக் குடியினரின் சிறப்புகள் 187
- **புலவர் ப. எழில்வாணன்**

29. வேட்டுவக் கவுண்டர் குலமும் குலதெய்வமும் 196
- **எம்.சிவானந்தம்**

30 வேட்டுவ அரசர் செயங்கொண்ட சோழ கொங்காள்வான் 209
- **மூ.விகாஷினி**

31. வேட்டுவ அரசி - செம்பியன் மாதேவியாரின்
கோயிற்கலைப் பணிகள் 212
- **வரலாற்றுச் சிற்பி பேராசிரியர் தங்கமணி**

32. செப்பேட்டில் சைவ சமய வளர்ச்சியில் கொங்கு வேட்டுவ
அரசர்களின் பங்களிப்பு 216
- **எம். செல்வராஜ்**

33. கொங்குநாடும் வேட்டுவரின் வரலாறும் 227
- **முனைவர் சி.குமாரசாமி**

34. தொல்குடி வேட்டுவர்களின் தொடக்ககால வேளாண்மையும்
தனித்துவமடைந்த நெற்பயிரும் 232
- **க. பிரவீன்குமார்**

35. கோயில் கல்வெட்டுக ள் சுட்டும் வேட்டுவர்கள் 239
- **எஸ்.ரங்கசாமி**

36. ராஜ வேட்டுவரின் யானைப்படை 246
- **மருத்துவர் வாழை பரமேஸ்வரன்**

37. வேட்டுவ அரசரது தினமும் வேட்டுவர் தொலைக்காட்சியும் 262
- **எஸ். அர்ச்சுனன்**

38. பட்டக்காரர்கள் - **எம்.எம். நடராஜன்** 267

39. வேட்டுவ அரசர்கள் வரிசை 275
- **ஈ.ராமசாமி**

40. ராஜவேட்டுவர் 286
- **கவிதா வாழைபரமேஸ்வரன்**

41. மதுரை புலிக்கவுண்டர் 296
- **முனைவர் வே.ப.சுதாமகேஸ்வரி**

42. புலிக்குத்திக் கற்களில் வேட்டுவர் வீரமும் திறமும் 299
- **வீ.குலோத்துங்கராயர்**

43. வேட்டுவ அரசன் வல்வில் ஓரி 302
- **மா. முனுசாமி எம்.ஏ.,**

44. கரைய வேட்டுவன் 305
- **முனைவர் கா. காமராஜ்**

45. இரும்பைக் கண்டறிந்தவர்கள் : வேட்டுவர்கள் 309
- **க. மல்லிஸ்வரன்**

46. மாந்தரஞ்சேரல் : மெய்க்கீர்த்தி 323
- **மகேஸ்வரி சுப்ரமணி, MCA**

47. ஒடுவங்க நாட்டு வரலாறு 330
- **சரோஜினி சந்திரசேகரன்**

48. ஒப்பீட்டு நோக்கில் கண்ணப்பரும் காரைக்காலம்மையாரும் 343
- **பாரதி. சா, பேரா. ச. இரவி**

50. தியாகச் செம்மல் ஐயா ஆண்டமுத்துக் கவுண்டர் 352
- **திருமதி. வேணுகா தேவி, மயிலேறு ரவீந்திரன்**

51. பக்தி இலக்கியங்களில் வேட்டுவர் 356
- **திருமதி. தி. பவள சங்கரி**

52. வரலாற்றில் வல்வில் ஓரி 381

- **முனைவர் மு.கலா**

53 வரலாற்றில் வேட்டுவர்களின் நிர்வாகப் பணிகள் 388

- **ப.செழியன்**

54. வரலாற்று ஆதாரங்களில் வேட்டுவர் 392

- **முனைவர் ம.ஜெயலட்சுமி**

55. வேட்டுவ அரசன் அல்லாள இளையான் பட்டயம் ஓர் ஆய்வு 400

- **வடிவேலு ராமசாமி**

56. வேட்டுவ மாமன்னன் அல்லாள இளைய நாயக்கர் 415

- பொறியாளர்; **கோபிநாத்**

57. வேட்டுவர் ஆளுமையும் கலைப் பண்பாடும் 420

- **அனந்தபுரம் கோ.கிருஷ்ணாமூர்த்தி**

58. வேட்டுவரின் குலங்களும் அரசர்கள் வரலாறும் 429

- **முனைவர் வி.முருகன்**

59. புதுக்கோட்டை மாவட்டச் சிற்றரசர்களில்
வேட்டுவ நிசாத அரசர்கள் 436

- **புலவர் பு.சி.தமிழரசன்**

60. பெருமைமிகு வேட்டுவர் - சில நினைவுகள் 444

- **பேராசிரியை சு.தமிழ்ப்பொன்னி** M.Sc., B.Ed.,

61. கொங்குநாட்டு முருகன் மலைக்கோயில்களில்
வேட்டுவர் முதல் உரிமை 448

- **ஆர். பழனிசாமி**

சைவ இலக்கியங்களில் வேட்டுவர்கள்

புதுவைக் கலைமாமணி செல்லூர் கண்ணன்
வரலாற்றாசிரியர் (ஓய்வு)
60, முதலியார் தெரு, செல்லூர்,
காரைக்கால் - 609 607
அலைபேசி எண் : 97887 54746

மனிதனின் ஆதித் தொழில் வேட்டையாடுதல். அதனால் வேட்டைத் தொழிலில் ஈடுபடும் வேடர்கள் தொல்பழங்குடியினராவர். வேட்டுவக் குடியினரை மதிக்காதவர்களை இறைவனே தண்டித்ததையும், வேடர்களை உயர்த்திப் பிடித்ததையும் பற்றிய காட்சிகளை சைவ இலக்கியங்கள் வெகுவாக எடுத்துரைத்துள்ளன. அது பற்றி விவரிக்கிறது இக்கட்டுரை.

வேடர் வடிவமெடுத்த கிராத மூர்த்தி

வேடர் இனத்தவர் தொல்குடியினர் என்பதைப் போன்றே தொன்மை மிக்க சமயம் என சைவ சமயத்தைக் கொள்ள முடியும். உலகில் தோன்றிய முதல் சமயம் எனப்படும் அது சிவவழிபாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். “அருவம், அருவுருவம், உருவம் எனும் மூவகைகளில் சிவன் பக்தர்களுக்குக் காட்சி தருகிறார்” என்பது சிவாகமக் கோட்பாடு. “கண்ணுக்குப் புலப்படாத அருவக் காட்சி தவவலிமை மிக்க யோகிகளுக்கு மட்டுமே கிட்டக்கூடியது. அதனால் எளிய மக்களும் சிவனைத் தரிசிக்கும் வகையில் அருவுருவமாக லிங்கமும், உருவமாக மகேஸ்வர மூர்த்தங்களும் ஆலயங்களில் அமைக்கப் படுகின்றன” என்கின்றன ஆகமங்கள். சிவனுடைய உருவத் திருமேனிகளைக் காட்டும் மகேஸ்வர மூர்த்தங்களில் ஒன்றாகிய கிராத மூர்த்தி என்பது சிவன் ஒரு வேடனின் வடிவில் தோன்றிய திருவிளையாடலுடன் தொடர்புடையதாகும்.

இவ்வுருவத்தின் தோற்றத்தை மகாபாரதக் காலத்துக்குக் கொண்டு செல்கின்றன தொன்மங்கள். “பாண்டவர்கள் வனவாசத்திலிருந்த

காலத்தில் அவர்கள் படும் துயரத்தை எண்ணி வருந்திய வியாச முனிவர் அவர்களுடைய துயர்நீங்க வேண்டுமெனில், சிவபெருமானை வணங்கித் தவம் இருக்குமாறு அறிவுரை கூறினார். அதை ஏற்ற அர்ச்சுனன் ஒற்றைக் காலில் நின்றபடி சிவனை நோக்கித் தவமிருந்தான். அர்ச்சுனனின் தவத்தைக் கலைக்க விரும்பிய துரியோதனன், அர்ச்சுனனை அழிக்க மூகாசுரனின் உதவியை நாடிப் பெற்றான். அதனால், மூகாசுரன் பன்றியாக உருவெடுத்து அர்ச்சுனனின் தவத்தைக் கலைக்க முற்பட்டான். பன்றியைக் கொன்றாலன்றி தவத்தைத் தொடரமுடியாது என்று முடிவெடுத்த அர்ச்சுனன் பன்றியைத் துரத்திச் சென்றான். அந்நேரத்தில் அம்பிகை அர்ச்சுனன்மீது கருணை கொண்டு, அவனுக்கு அருள் வழங்குமாறு இறைவனிடம் கேட்டுக் கொண்டாள். அதையொட்டி வேடன் உருவெடுத்த சிவனார், வேட்டுவப் பெண் வடிவில் உமையம்மை துணைவர வனத்தை அடைந்தார். அர்ச்சுனன் துரத்திக் கொண்டிருந்த பன்றியைத் தானும் துரத்தி அதைக் கொல்ல முயன்றார். அர்ச்சுனன் பன்றியின் முன்புறம் சென்று கணைதொடுத்த அதே நேரத்தில், சிவன் பன்றியின் பின்புறத்திலிருந்து அம்பு எய்தார்; பன்றி இறந்தது. ஆயினும் பன்றியைக் கொன்றது யார்? என்பதில் அர்ச்சுனனுக்கும், வேடனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

அதற்கான பூசலின்போது அர்ச்சுனனின் காண்டீபத்திலிருந்த நாணை வேடன் அறுத்தெரிய, அதில் கோபமுற்ற அர்ச்சுனன் நாணறுந்த வில்லால் வேடனைத் தாக்கினான். அந்த அடி, உலக உயிர்கள் அனைத்தின் மீதும் பட்டது. அதைக் கண்ட அர்ச்சுனன் இறைவனே வேடனுருவில் தோன்றினார் என்பதை அறிந்து வேடனின் தாள் தொழுதான். இறைவன், அர்ச்சுனனின் தவத்தைப் போற்றி அவனிடம் பாசுபத அஸ்திரத்தை வழங்கினார். அர்ச்சுனனுக்கு அருள் செய்ய இறைவன் எடுத்த வேடர் வடிவமே கிராத மூர்த்தி” என்பர்.

இக்கதையை அவ்வாறே ஏற்று தேவார ஆசிரியர்கள் சிவபெருமான் வேடர் வடிவத்திலும், உமையம்மை வேட்டுவப் பெண் வடிவத்திலும் தோன்றியதைக் குறிப்பிட்டுப் பல பாடல்களைப் பாடியுள்ளனர். வேடர்களை உயர்குலத்தாரும் போற்றித் துதிக்கும் வகையிலமைந்த அப்பாடல்கள் ஆலயங்களில் இன்றளவும் பாடப்படுகின்றன. அர்ச்சுனன் ஒற்றைக் காலில் நின்று தவமிருக்கும் காட்சி சில ஆலயங்களில் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. அதேபோல் கிராதமூர்த்தி உருவமும் சன்னிதியில்

இடம் பெற்றிருக்கிறது. இவ்வுருவத்திற்குத் தினசரிப் பூசைகளும், ஆண்டு விழாக்களும் நடைபெறுகின்றன. சாதிப் பாகுபாடு பாராமல் வேடனுக்கு அர்ச்சனை செய்கின்றனர் சிவாச்சாரியார்கள். இது சிவாலயங்களில் சாதிய ஏற்றத்தாழ்வு பார்ப்பது கிடையாது என்பதை மக்களுக்கு எடுத்துரைக்கத் தக்க ஏற்பாடாகும். வேடர்கள் மற்றவர்களால் வணங்கத் தக்கவர்களே என்பதை அனைவருக்கும் உணர்த்தும் ஆலயப் பாங்காகவும் இதைக் கொள்ளலாம். வேட்டுவ உருவத்தினருக்குப் பூசை செய்யும் போது மற்ற சாதியினர் அனைவரும் கைதொழுது வணங்குவது வேடர் இனத்துக்கே பெருமை சேர்க்கும் நடைமுறை என்பதில் ஐயமில்லை.

கண்ணப்ப நாயனார்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக வைத்துப் போற்றப் படுபவர்களில் கண்ணப்ப நாயனார் வேடர் குலத்தில் பிறந்தவர் என்பதை நாமறிவோம். அவருடைய முற்பிறவி வரலாறு திருத்தொண்டர் புராணத்தில் இடம்பெறவில்லை என்றாலும் அது பற்றி விவரிக்கும் சைவ இலக்கியங்கள் சில உள. பாசுபதக் கணையை வேண்டி அர்ச்சுனன் சிவனை நோக்கித் தவமிருந்தபோது அவனது தவத்தைச் சோதித்தல் பொருட்டு ஒரு பன்றியின் காரணமாகப் போர் புரிகின்றார். அக்காட்சியின் இறுதியில் தன் முன்நின்று வாதம் புரிவது சாதாரண வேடன் எனக் கருதிய அர்ச்சுனன் வேடர்குலம் பற்றி இழித்துரைக்கிறான்; தாக்கவும் செய்கிறான். அதன் பின்னரே வேடனாகவும், வேட்டுவச்சியாகவும் தன்முன் தோன்றியது இறைவனின் திருவிளையாடல் என்ற உண்மை அவனுக்குப் புலப்படுகிறது. வேடனாகத் தோன்றிய இறைவனிடம் அடிபணிகிறான்.

பாசுபதக் கணையைப் பெறுவதைவிடவும் இறைநிழலை அடைவதே மேலானது என்ற முடிவிற்கு வந்து அதற்கேற்ப வரம் கேட்கிறான். அவன் முதலில் விரும்பியபடி பாசுபதக் கணையை அவனுக்கு அளிக்கும் இறைவன், வேடர் குலத்தை அவன் இழித்துரைத்ததைச் சுட்டிக் காட்டி மறுபிறவி ஒன்றில் வேடனாகப் பிறந்து அதற்குரிய இன்னல்களை அனுபவித்த பின்னரே இறையருள்பெறத் தகுதிபெற முடியும் என்பதை அவனுக்கு உணர்த்தி மறைகிறார் இறைவன். அதன் நிமித்தமாகவே அர்ச்சுனன் தன் மறுபிறவியொன்றில் கண்ணப்பராகப் பிறந்து இறைவனின் அன்புக்குப் பாத்திரமானார் என்கிறது காளத்திப் புராணம். கண்ணப்ப நாயனார் முற்பிறவியில்

அர்ச்சுனனாகப் பிறந்து இறைதரிசனம் பெற்றவர் என்ற இக்கருத்து நக்கீரதேவரின் பதினோராம் திருமுறைப் பாடலொன்றில்,

வாமான்றேர்வல்ல வயப்போர் விசயனைப்போல்
தாமாருலகில் தவமுடையார் - தாமார்க்குங்
------------ பாசுபதமீந்த பதம் போற்றி - நேசத்தால்
வாயில்நீர்கொண்டு மகுடத்துமிழ்ந் திறைச்சி
ஆயசீர்ப் போனகமா அங்கமைத்துத் தூயசீர்க்
கண்ணிடந்த கண்ணப்பர் தம்மைமிகக் காதலித்து
விண்ணுலகமீந்த விறல்போற்றி

என்ற வரிகளின் வழியாக ஏற்றுக் கொள்ளப் படுவதைக் காண்கிறோம். இவை வேடர்களை அவமதிப்பு செய்தவன் அரசகுலத்தில் பிறந்து உயர்புகழ் பெற்றிருந்த விசயனேயானாலும் அச்செயலைச் சிவன் ஏற்கமாட்டார் என்பதைத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டி அனைவருக்கும் வேடர்களின் பெருமையை உணர்த்துகின்றன.

கொடுந் தொழில் புரியும் வேடர் குலத்திலுதித்த கண்ணப்பர் கொண்டிருந்த முரட்டுச் சிவபக்தியை அற்புதமாகப் படம்பிடித்துக் காட்டுகிறது பெரியபுராணம். “கொடிய விலங்குகள் திரியும் வனத்தில் தனித்திருக்கும் சிவலிங்கத்தைக் கண்ட கண்ணப்பர் அதற்கு இரவுக் காவல் புரிகிறார். சிவபூசை செய்யும் விருப்பத்துடன் நீர் கொணர வெளிச் செல்லும் சமயத்தில் சிவகோசரியார் வந்து முறைப்படி பூசைகள் செய்கிறார். அவர் துகிலை இடையில் சுற்றி, தூநீராட்டி, விரைமலர் சூட்டி, விளக்கேற்றி, புகைகாட்டி, மாலையால் அலங்கரித்து அமுதிட்டு அருச்சனை செய்து முத்திரை காட்டி, மந்திரம் எண்ணி, வலம் இடம் வந்து வழிபாடு செய்கிறார்.” இது ஆகமவிதிப்படி அமைந்ததாகும். அதன் பின் அவ்விடம் ஏகும் வேடர் செய்யும் பூசை முறைகள் முற்றிலும் மாறுபட்டவை.

வேடர் அவ்விடத்தைத் தூய்மை செய்யும் நோக்கில், “கால் செருப்பால் பொருட்களை அப்புறப் படுத்துகிறார். வாய்க்குள் கொணர்ந்த நீரை இறைவன்மேல் பெய்து, தலையில் செருகி எடுத்துவந்த மலரை அவருக்குச் சூட்டி, தாம் சுட்டுச் சுவைத்துக் கொணர்ந்த இறைச்சியைப் போனகமாகப் படைத்து உள்ளம் கசிந்து காதலில் கூத்திட்டு” வழிபடுகிறார். பக்தர்களால் ஏற்றுக்கொள்ள இயலாதன அனைத்தும் அரங்கேறுகின்றன. இருந்தும், சிவகோசரியார் நிகழ்த்தும் பூசனையைக்

காட்டிலும், வேடரின் பலன் கருதா அன்புப் பொழிவையே இறைவன் விரும்பி ஏற்பதாகக் கூறுகிறது கண்ணப்பதேவர் திருமறம் என்ற நூல். சிவகோசரியாரை, "வழிபடக் கடவ மறையோன்" என்றும், "அவர் செய்தது தொழில்முறைப் பூசனை" என்றும் குறிப்பிடும் அந்நூல், கண்ணப்பரை, "குரைகழல் அன்பொடும் இறுக" இறைஞ்சுபவராகக் காட்டுகிறது. அதேபோல், சிவகோசரியாரின் பூசனையை, "எய்திய சீர்ஆகமத்தில் இயம்பிய பூசனை" என்று சுருங்கக் கூறும் சேக்கிழார், கண்ணப்பரின் வழிபாட்டையும், அதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகளையும் பல பாடல்களில் மிக வரிவாகப் பேசிக்களிக்கிறார்.

மறைந்து நின்று வேடரின் பூசை முறைகளைக் கவனிக்கும் சிவ கோசரியார், வேடர் அவ்விடத்தை விட்டு அகன்ற பின், இறைவனிடம் முறையிடுகிறார். "உற்றது கேட்டருள் உன் தனக்கழகா?" எனத் தொடங்கும் அவரது முறையீடு, "வேட்டுவன் செய்தனவெல்லாம் உனக்கு இனியதா?" என்ற கேள்வியுடன் முடிகிறது. இதற்கு விடைகூற இறைவன் சிவகோசரியாரின் கனவில் தோன்றுகிறாரே அல்லாமல் நேரில் வரவில்லை. கண்ணப்பரின் செருப்படியைத் தூவும் பூவாகவும், வாயைத் தூய பொற்குடமாகவும், அதில் தங்கும் நீரைக் கங்கையின் புனலாகவும், பற்களை நீரிலிட்ட மணிகளாகவும், மீசைமுடிகளைத் தருப்பையைவிட உகந்ததாகவும், தலையில் சூடிக் கொணர்ந்த இலைச் சருகினைக் கற்பக மலராகவும், இறைச்சி உணவை நெய்யமுதாகவும் இறைவன் கொண்டதாக அந்நூல் விவரிக்கின்றது. வாழ்நாள் முழுதும் அரணாருக்கு முறைப்படி அமைந்த பூசனைகள் செய்கிறார் சிவாச்சாரியார். அவருக்குக் கிட்டாத இறைப் பேற்றினை ஆறுநாள் தொடர்பிலேயே கண்ணப்பர் பெற்றுவிடுவதைச் சுட்டிக் காட்டி வேடரின் அன்புப் பெருக்கை உலகுக்கு அறிவிக்கின்றது பெரியபுராணம். இது சிவகோசரியாரின் கடமை தவறாப் போக்கைக் காட்டிலும், வேடர் எனும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த கண்ணப்பரின் தன்னலம் கருதா அன்பு வெளிப்பாட்டுக்கு இறைவன் அளித்த முதன்மையைக் காட்டுகிறது. இவ்வாறாக, இறைவனே வேடர் வடிவினராகிறார். வேடருக்காகப் பரிந்து அரச குல அர்ச்சுனனைச் சபிக்கிறார். குலத்தொழில் புரியும் அந்தணரை விடுத்து கண்ணப்பராகிய வேடரைத் தடுத்தாட் கொண்டு அருள் வழங்குகிறார். இவ்வாறெல்லாம் சைவ இலக்கியங்கள் வேடர் குலம் பெருமை கொள்ளத்தக்க நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டினாலும், சமுதாயத்தில் அதன் பிரதிபலிப்பு ஏதுமுண்டா? என்பது இங்கு எழும் வினா.

அதற்கு விடையாக அமையத் தக்க சான்றொன்றை அளிக்கின்றன திருவாரூர் இறைவனாகிய தியாகராஜரின் லீலைகளைப் பற்றி விளக்கும் சமயநூல்கள். இறைவன் வேடர்களின் நலனில் அக்கறை கொண்டு செயல்பட்டது பற்றிய விளக்கங்கள் திருவாரூர் இறைவனாகிய தியாக ராஜரின் லீலைகளிலும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக அவர் சண்டாளன் வேடத்தில் யாகத்தில் தோன்றியபோது (லீலை எண் :106) நிகழ்ந்தவற்றின் விளைவு இன்றும் சமூகத்தில் பிரதிபலிப்பதாகக் கூறப்படுவது இங்கே அறியத் தக்கதாகும். அதன்படி, “உமா மகேஸ்வரன் எனும் ஆரூர்ப் பிராமணர் ஒருகால், பரமேசனைப் பணிந்து அருள் பெற எண்ணி, பௌண்டரீகம் எனும் சிறந்ததொரு யாகத்தைச் செய்கிறார். யாகம் சிறப்பாக நடந்தால் அங்கே அவிர்பாகம் பெற, இறைவன் தோன்றுவான் என்ற எண்ணத்தில் அவர் இருக்கிற நிலையில், அப்பிராமணரின் மனதைப் பரிசோதிக்க விரும்பும் இறைவன், சண்டாள வேடத்தில் யாகம் நடைபெறும் இடத்தை அடைகிறார். இடுப்பில் கருப்புத் துணி அணிந்து, சிகப்பு முண்டாசு கட்டி, கையில் தோல் வடம் தாங்கி சண்டாள வேடனொருவன் யாகசாலையை நோக்கி வருவதைக் கண்ட பிராமணர்கள் அனைவரும் அவ்விடமே தீண்டத் தகாததாக ஆகியதாகக் கொண்டு ஆளுக்கொருபுறம் ஓடி ஒளிகின்றனர். ஆயினும், வேடனின் வாயிலிருந்து சிவநாமம் திரும்ப திரும்ப ஒலிப்பதைக் கண்டும், கேட்டும் ரசிக்கும் உமாமகேஸ்வரன் வேதமோதிய பிராமணர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கிறார்.

சண்டாளனின் வருகையால் எந்தத் தீட்டும் ஏற்படாதென்றும், சிவ நாமத்தை உச்சரிப்பவர் யாராகினும், எக்குலத்தவராயினும் உயர்வானவரே என்ற எண்ணமே அவரிடம் மேலோங்கி நிற்கிறது. அதனால், உமாமகேஸ்வரர் அந்தச் சண்டாளனுக்கு உரிய மரியாதைகள் செய்கிறார். அதில் மகிழ்ந்த இறைவன் அவருக்குத் தன் உருவத்தைக் காட்டி அருள்பாலிக்கிறார் அதேசமயம் சண்டாளனைப் பாவியாகக் கருதிய மற்ற வேதியர்கள் தினமும் பகலில் உச்சிவேளைக் காலத்தில் தீண்டத்தகாதவர்களாக ஆகி விடுமாறு சபிக்கிறார்” என்கிறது அக்கதை.

இவ்விடத்தில் கவனிக்க வேண்டியது என்னவெனில், இறைவனின் சாபத்தைப் பெற்ற அந்த பிராமணர்களின் வழித் தோன்றல்கள் அச்சாபத்தின் விளைவாக இன்றளவும் வேத பிராமணர்களால் ஒதுக்கப்படும் ஒரு பிராமணப் பிரிவினராகத் தஞ்சை மாவட்டக்

கிராமங்கள் சிலவற்றில் வாழ்ந்து வருவதாகக் கூறப்படுவதுதான். அவர்களை விபரமறிந்தவர்கள் “கர்ம சண்டாளர், மத்தியான பிராமணர் அல்லது மத்தியானப் பறையர்” என்று அழைக்கிறார்கள் எனப்படுகிறது. கி.பி. 1869ஆம் ஆண்டில் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய “திரு அம்பர்ப் புராணம்” என்ற நூல் இச்சம்பவத்தைப் பற்றி விரிவாகப் பேசுகிறது. “முசுகுந்த சகஸ்ரநாமம்” என்ற நூலில் இடம்பெறும் நான்கு செய்யுள்களில் இது பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

இவற்றைக் கருத்தில் ஏற்றி, களஆய்வு மேற்கொண்ட எஃப். ஆர். ஹெமிங்வே என்ற அயலகப் பெரியாரின் முடிவுகள் 1915-ஆம் ஆண்டுக்குரிய தஞ்சாவூர் கெஜட்டில் வெளியாகியிருக்கின்றன. அதில் நன்னிலத்துக்கருகே அமைந்துள்ள கோயில் திருமாளம் என்ற ஊரில் நடைபெறும் ஆலயப் பெருவிழாவின் போது நிகழும் கூத்தில் மத்தியான பிராமணரின் வாழ்வின்போக்கு பற்றித் தெளிவாக விளக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார். தியாகராசர் லீலையில் வரும் கதையே நாடகமாகக் கோயிலில் அரங்கேறினாலும் நன்னிலத்தை ஒட்டி அமைந்துள்ள சேதானிபுரம் என்ற கிராமத்தில் ஒரு காலனி போன்ற இடத்தில் மத்தியான பிராமணர் என்ற ஒருவகை பிராமணர் அக்காலத்தில் வாழ்ந்தனர் என்பதையும் அவர் அறிந்து எழுதியுள்ளார். அவர்கள் தினமும் மதியம் உச்சிவேளையில் தங்களின் இல்லத்தை விட்டு வெளியேறி பின் ஒன்றரை மணிநேரம் கழித்துத் திரும்பி சில சடங்குகளைச் செய்த பின்னரே வீட்டிற்குள் திரும்பவும் நுழைகிறார்களாம். அவர்கள் தற்காலத்தில் மத்தியானப் பறையர் என்று அழைக்கப்படாமல் பிரதமசகிகள் என்று அழைக்கப்படுகிறார்கள் என்றும் பிரதம சகிகளுடன் மற்ற வேதபிராமணர்கள் கொள்வனை கொடுப்பினை செய்து கொள்வதில்லை என்றும் மத்தியானப் பிராமணர்களைப் பற்றிக் கடந்த காலங்களில் மேலாய்வு செய்தவர்கள் கருத்துரைத்துள்ளதற்கும் சான்றுள்ளது. இவற்றையெல்லாம் நோக்கும் போது, சமூகத்தில் ஒதுக்கப் பட்டவர்களை உருவாக்கிய ஓரினத்தின் ஒரு பகுதியே அதற்கான இன்னல்களை அனுபவிக்க நேர்வதாக நம்மால் உணர முடிகிறது.

துணை நூல்கள்:

1. சைவ சமயம் - 1978 - கொழும்பு விவேகாநந்த சமய வெளியீடு, இலங்கை

2. சிவாகம செய்தி விளக்கம் - சிறுவாபுரி ஸ்ரீ பாலசுப்ரமணிய ஸ்வாமி - மார்ச் 2008 T.L.S பிரிண்டர்ஸ், பொன்னேரி.

3. பெரிய புராண ஆய்வு முத்துக்கள். - வேல். கார்த்திகேயன் - பிப்ரவரி 2005 - பரிமளவேல் தமிழ் உராய்வு மையம், மயிலம்.

4. பெரிய புராண ஆய்வுக் களஞ்சியம் - வேல். கார்த்திகேயன் - பிப்ரவரி 2005 - பரிமளவேல் தமிழ் உராய்வு மையம், மயிலம்.

5. ஸ்ரீபுரம் என்னும் திருவாரூர் ஸ்ரீதியாகராஜ லீலைகள் - உத்தராயண லீலை - மு. இராஜகோபாலப் பிள்ளை - 2011 - ஸ்ரீ வாணி விலாஸ் அச்சகம், ஸ்ரீரங்கம்.

6. The Lord of Arur The Thyagaraja Cult in Tamilnadu – A Study in Conflict and Accomodation - Rajeshwari Ghose – 1996 – Motilal Banarsidass Publishers Private Limited – Delhi.

குறிஞ்சித் திணை வேட்டுவர்களின் மலை சார்ந்த உணவாதாரம்

வே. அரிகிருஷ்ணன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் முதுகலை (ம) ஆய்வுத்துறை
புதுக்கல்லூரி (தன்னாட்சி)
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
அலைப்பேசி: 8220183758, 8939319730
hari.hk409@gmail.com

முன்னுரை

பண்டைய வழக்கில் குறிஞ்சி நிலமென்பது மலையைக் குறித்திருக்கின்றது. மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி எனப்படும். மலைக்கும் வேட்டுவனுக்குமான தொடர்பைப் பலவாறு சங்க இலக்கியங்கள் உரைக்கின்றன. மலைக்கும் வேட்டுவனுக்குமான தொடர்பை இலக்கியச் சான்றுகளைக் கடந்து பார்கின்றபோது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கழுகுமலையில் ஒற்றைப் பாறையில் செதுக்கப்பட்ட வேட்டுவன் கோவில் வரலாற்று ஆவணமாக இன்றைக்கும் இருந்து வருகிறது. குறிஞ்சித்திணையில் வாழ்ந்த வேட்டுவர்கள் இயற்கைக்கும் பண்பாட்டிற்கும் பாலமாகத் திகழ்ந்துள்ளனர். இந்தப் பாலத்தின் ஊடாகத் தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் யாவும் உயிர் வாழ்கின்றன. இந்த வாழ்வில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவை ஒன்றை ஒன்று சார்ந்து தொழிற்படுகின்றன. பண்பாட்டின் ஒரு பகுதியாகிய உணவும் இவை சார்ந்தே அர்த்தப்படுகிறது. அத்தகைய குறிஞ்சித்திணை வேட்டுவர்களின் உணவுமுறையை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

அடிப்படை உணவாதாரம்

குறிஞ்சித் திணையில் வாழ்ந்த வேட்டுவர், கானவர், முதலானவர்கள் தினை, வரகு, புல்லரிசி, மூங்கிலரிசி, ஐவன நெல்,

அவரை, கிழங்கு, தேன் வேட்டைப் பொருள்கள் பிற காடுபடு பொருள்கள் முதலானவற்றை உணவுக்கான அடிப்படைகளாகப் பயன்படுத்தினர். இதனை மதுரைக்காஞ்சி பின்வருமாறு கூறுகின்றது:

“நறுங்காழ்கொன்று கோட்டின் வித்திய
குறுங்கதிர்த்தோரை நெடுங்கால் ஐயவி
ஐவன வெண் நெல்லோடு அரில் கொள்பு நீடி
இஞ்சி, மஞ்சள் பைங்கறி பிறவும்
பல்வேறு தாரமொடு கல் அகத்து ஈண்டி”
- (மதுரைக்காஞ்சி, ப.231)

என்று நவில்கிறது. வேட்டையாடி உணவு சேகரித்தலே இங்கு அடிப்படை உணவாதாரமாக விளங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து வன்புல வேளாண்மையிலும் குறிஞ்சி நில வேட்டுவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

உணவு சேகரித்தல்

வேட்டையாடி உணவு சேகரிக்கும் இனக்குழு வாழ்வில் உணவு சேகரித்தல் மிக முக்கியமானதாகும். பெரும்பாலும், இதனைப் பெண்களே செய்துள்ளனர். எனினும் கிழங்ககழ்தல், தேனெடுத்தல் ஆகியவற்றில் ஆண்களுங்கூட பங்கேற்றுள்ளனர் என்பதைப் பின்வரும் குறுந்தொகைப் பாடல்,

“கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்
தேனிழைக்கும் நாடன்” - (குறுந்தொகை, ப.32)

என்று விவரிக்கிறது.

கிழங்கெடுத்தல், தேனெடுத்தல், மா, பலாக்கொட்டை போன்ற உணவுப்பொருள்களைச் சேகரித்ததை நற்றிணையும் கூறுகிறது. குறிஞ்சித் திணை மக்கள் மிளகின் பயன்பாட்டை அறிந்திருந்தனர். மலைச்சாரலில் விளைந்த மிளகினைச் சேகரித்து உணவில் சேர்த்துக் கொண்ட செய்தியைக் குறுந்தொகை,

“கறிவளர் அடுக்கத்து இரவின் முழங்கிய
மங்குல் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்”
- (குறுந்தொகை, ப.229)

என்று பதிவிடுகிறது.

பகுத்துண்ணுதல்

வேட்டையில் கிடைத்த இறைச்சியைக் குழுவினர் அனைவரும் சமமாகப் பகிர்ந்து கொண்டனர். கானவன் வேட்டையாடிய முள்ளம் பன்றியின் இறைச்சியைக் கொடிச்சி, தம் சிறுகுடியினருக்கு மகிழ்ச்சியுடன் பகுத்துக் கொடுத்ததை,

> **"கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை**
> **தேம் கமழ் கதுப்பின் கொடிச்சி மகிழ்ந்துகொடு**
> **காந்தளம் சிறுகுடிப் பகுக்கும்" - (நற்றிணை, ப.161)**

என்னும் நற்றிணைப் பாடல்வழி அறிந்துகொள்ளலாம். வேட்டைச் சமூகத்தில் பகுத்துண்ணுதல் கூட்டு வாழ்வின் விழுமியமாக இருந்துள்ளது. இது ஓர் உலகளாவிய பண்பாகும்.

பாதீடு மற்றும் பண்டமாற்றம்

வேட்டையாடி உணவு சேகரிக்கும் இனக்குழுச் சமூக வாழ்வில், சமூகப்பொதுவுடைமை மிக அதிகமாகக் காணப்பட்டதால் கிடைத்த உணவைப் பாதீடு செய்துகொண்டனர். இதனால் மட்டுமே உணவாதாரம் முழுமைபெறவில்லை. கிடைத்த பொருள்களை பண்டமாற்றம் செய்து உணவாதாரத்தை விரிவுபடுத்திக் கொண்டனர். அந்த வகையில் குறிஞ்சித் திணை வேட்டுவக் குடியினர் அண்டைச சமூகத்தாரிடம் தம்மிடம் கிடைத்த பொருள்களைக் கொடுத்து வேண்டிய பொருள்களைப் பெற்றுள்ளனர். வேட்டுவர் கொண்டு வந்த மானிறைச்சியைப் பெற்றுக்கொண்டு மருதநில மகளிர் அதற்குப் பதிலியாக வெண்ணெய் கொடுத்ததைப் புறநானூறு பேசுகிறது.

யானையின் வெண்மையான தந்தங்களோடு கள்ளினையும் விற்று அவற்றிற்று ஈடாக நெல்லைப் பெற்று வாழ்ந்ததை அகநானூற்றில் மாமூலனார் குறிப்பிடுகின்றனர். இதை

> **"அண்ணல் யானை வெண்கோடு கொண்டு**
> **நறவுநொடை நெல்லின் நாள் மகிழ் அயரும்"**
> **- (அகநானூறு, ப.108)**

என்கிறது அகநானூறு பாடல்.

வன்புல உணவுப் பயிர்கள்

குறிஞ்சித் திணையிலேயே விவசாயம் தோன்றி இருக்கிறது. கானவர், கானக்குறவர், கானுழுகுறவர் என அறியப்பட்ட குடியினர் புனம், ஏனல், துடவை, படப்பை முதலான இடங்களில் காட்டை அழித்து எரித்துச் சாம்பலாக்கி உருவாக்கிய புனங்களில் தினை, வரகு, தோரை, நெல், ஐவனநெல், வெண்சிறுகடுகு, பயறு, கொள், இஞ்சி, மஞ்சள், மிளகு, அவரை, எள், கூவைக் கிழங்கு, வள்ளிக்கிழங்கு முதலான வற்றைப் பயிரிட்டார்கள்.

“புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை”
- (குறுந்தொகை, ப.267)

என்றும்,

“கரும்பு மருண் முதல பைந்தாட் செந்தினை”
- (குறுந்தொகை, ப.491)

என்றும் குறுந்தொகை குறிப்பிடுகிறது. தினைப்புனத்தில் தினையோடு கலந்து பருத்தியையும் விளைவித்தனர். தினைக் கதிர்களைக் கொய்த பின்னர் அடித்தாள் மட்டும் உள்ள புனத்தில் அவரையை விதைத்தான் என்பதை,

“சிறுதினை கொய்த இருவி வெண்கால்
காய்த்த அவரைப் படுகிளி கடியும்” - (ஐங்குறுநூறு, ப.384)

என்றும் ஐங்குறுநூறு அடிகள் குறிப்பிடுகின்றன.

குறிஞ்சியில் உணவுமுறை

மனிதகுல வரலாற்றில் தோன்றிய ஆதி வாழ்க்கைமுறை வேட்டையாடி உணவு சேகரித்தலாகும். இதனைச் சங்ககாலக் குறிஞ்சித் திணை வேட்டுவர்களின் வாழ்வு முறையில் காணமுடிகிறது. ஆதியில் வேட்டுவர்கள் நெருப்பைக் கண்டுபிடிக்கும் முன்னர் இறைச்சியைப் பச்சையாகச் சமைக்காமல் உண்டனர். இதனைச் சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது.

“பச்சூன் தின்று பைந்நிணப் பெருத்த
எச்சில் ஈர்ங்கை வின்புறம் திமிரிப்
புலம் புக் கனனே புல் குணற் காளை
ஒருமுறை உண்ணா அளவைப் பெருநிரை
ஊர்ப்புறம் நிறையத் தருகுவன்” - (புறநானூறு, ப.260)

என்ற புறநானூற்றுப் பாடல் போர்முனைக்குச் செல்லும் வேகத்தில் வீரன் பச்சை ஊனைத் தின்று, கள்ளை மாந்தி கையை வில்லில் துடைத்துக் கொண்டு சென்றான் என்ற செய்தி இடம்பெற்றுள்ளது. ஆதி மனிதனின் மிகச் சிறந்த கணடுபிடிப்பு நெருப்பாகும். இது சமைத்தலுக்கும் மற்ற நாகரிக வளர்ச்சிக்கும் வழிகோலியது. குறிஞ்சித் திணை மக்கள் ஆதியில் உடும்பு, பன்றி, மான் முதலானவற்றைச் சுடும்பாறையின் மேல் போட்டு இயற்கையான சூட்டில் வேகவைத்து உண்டனர். இதுவே சமைத்தலின் தொடக்கமாகும். இதன்பின்னர், நெருப்பில் சுட்டுத் தின்னும் முறையை உருவாக்கினார்கள்.

முடிவுரை

குறிஞ்சித் திணை வேட்டுவர்களின் வாழ்வு ஒவ்வொரு நாளுக்கும் தேவையான உணவாதாரத்தை ஈட்டுதலே அங்குப் பிரதானமாக இருந்தது. இதுவே வேட்டுவப் பொருளாதாரத்தின் அடிப்படைப் பண்பாகும். பெரும்பாலான குறிஞ்சித் திணைக் குடிகள் பிழைப்பிற்கு மட்டும் உணவு ஆதாரங்களைத் தேடும் பாரம்பரியப் பொருளாதார முறையைக் கொண்டிருந்தனர். பாரம்பரியத் தொழிலான வேட்டை யாடுதல், காட்டுப் பொருள்களைச் சேகரித்தல் ஆகிய இரண்டையும் விட்டுவிடவில்லை. எனினும் சில குடிகளிடம் இதன் அளவு குறைந்திருந்தது.

துணை நூற்பட்டியல்

1. பத்துப்பாட்டு மூலமும் விளக்கமும், ஞா.மாணிக்கவாசகன், உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை - 600 001.
2. நற்றிணை மூலமும் விளக்கமும், அ.ப.பாலையன் சக்தி பிளாட்ஸ், சென்னை - 600 014.
3. புறநானூறு தெளிவுரை, புலியூர்கேசிகன், ஸ்ரீசெண்கா பதிப்பகம்
4. அகநானூறு தெளிவுரை, அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608 001.
5. ஐங்குறுநூறு, புலியூர்கேசிகன், தமிழ் வளர்ச்சி இயக்ககம், எழும்பூர், சென்னை - 600 008.
6. குறுந்தொகை, ம.பிரபாகரன், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை - 600 006.

வேட்டுவரின் புழங்குபொருள் பண்பாடு

ரா. நித்யாதேவி,
முதுகலைத்தமிழ் இரண்டாம் ஆண்டு,
தமிழாய்வுத்துறை,
நேரு நினைவுக்கல்லூரி,
புத்தனாம்பட்டி.
nithyadevi443@gmail.com

முன்னுரை

முதன்முதலில் மனிதன் தோன்றிய காலத்தில் இருந்தே, தான் உயிர் வாழ்வதற்காகப் பிற விலங்குகளை வேட்டையாடிஉண்டு வாழும் வழக்கம் வழக்கத்தில் இருந்தது. வேட்டையாடுதல் வீரத்தின் அடையாளமாகப் பார்க்கப்பட்டது. மனிதன் பிறவிலங்குகளை வேட்டையாடத் தொடங்கிய காலத்தில்வேட்டுவர் என்ற குலம்தோன்ற ஆரம்பித்தது. வேட்டுவர்கள் வேட்டையாடப் பயன்படுத்திய பொருள்கள் மட்டுமல்லாமல் வீட்டு உபயோகப் பொருள்கள், உணவுப் பொருள்கள், அணிகலன்கள் என அனைத்தும் புழங்கு பொருள்கள் ஆகும். வேட்டுவர்கள் பயன்படுத்திய புழங்கு பொருள்கள் மூலம் அவர்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் அறிய முடியும்.

புழங்கு பொருள்

புழங்கு என்பதற்குக் கதிரைவேற்பிள்ளை தமிழ் மொழியகராதி (1990:1047) வழங்குதல் என்றும், தமிழ் லெக்சிகன் (1982:2793) கையாளுதல், புழங்குதல் என்றும் விளக்கம்தருகின்றன.[2] புழங்குபொருள் என்பது மக்கள் அன்றாடம் தங்கள் தேவைக்காகப் பயன்படுத்தி வந்த, வருகின்ற பொருட்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஹாரிஸ் (1978:208) உணவுகள், தெய்வ நம்பிக்கையுள்ள சடங்குகளில் பயன்படுத்தப்படும் பொருள்கள் போன்றவற்றுடன் மறைமுகமாகச் சம்மந்தப்படும் பொருட்கள் அவற்றைவிற்கும் முறை, விலை நிர்ணயம் செய்யும்முறை போன்றவற்றையும் புழங்குபொருள் பண்பாட்டில் அடக்கலாம் என்கிறார்.[1]

புழங்குபொருள் வகைப்பாடு

நமது முன்னோர்களின் கலைத் திறமையை வெளிப்படுத்துகின்ற புழங்குபொருள்கள் குறித்து ஆழமாக ஆய்வு செய்தல் இன்றைய தேவையாகும். எனவே புழங்குபொருட்களை ஆய்வு நோக்கில் மூன்றாக வகைப்படுத்தலாம். அவை, 1.உணவு சார்ந்த புழங்கு பொருள்கள், 2.வீட்டு உபயோக புழங்குபொருள்கள் 3.தொழிற் களபுழங்கு பொருள்கள்

- உணவு சார்ந்த புழங்கு பொருள் என்பது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் உணவுவகைகள் குறித்ததாக அமைகின்றது.
- வீட்டு உபயோகப் புழங்குபொருள் என்பது மக்கள் வீட்டில் பயன்படுத்துகின்ற பொருட்களைக் குறித்ததாக அமைகிறது.
- தொழிற்கள புழங்குபொருட்கள் என்பது மக்கள் செய்கின்ற தொழில்கள், தொழில்நுட்பங்கள், தொழில்கருவிகள்குறித்ததாக அமைகின்றது.

ஆடை, அணிகலன்கள்

வேட்டுவர்கள் ஆரம்பகாலத்தில் இலை, தழைகளை ஆடையாக அணிந்தனர். தாங்கள் வேட்டையாடிய விலங்குகளின் பற்களையும் எலும்புகளையும் அணிகலன்களாக அணியும் வழக்கம் இருந்தது. குறிப்பாக முதிர்ந்த காட்டுப் பன்றியின் பல்லினையும், புலியின் பற்களையும் அணிகலன்களாக அணிவர்.

> **“...நின்னொடுவினவல்கேளாய்!**
> **பொன்னொடு புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி**
> **ஒலிக்குழைச்செயலைஉடைமான்..."**[2]

என்னும் அகநானூற்றுப் பாடலில் கானவன் மகள் பொன் இழையில் புலிப்பல்லைக் கோர்த்த ஒலி எழுப்பக்கூடிய மணித்தாலியை உடையவள் என்பதையும்,அசோகத் தளிராலான தழையாடையை அணிந்திருந்தார் என்பதையும் அறிய முடிகிறது.

வீடுகள்

கொலைத் தொழிலைச் செய்யும் வேட்டுவர்கள் காட்டில் மறைந்து வாழ்வர். அவர்கள் மலைப்பகுதியில் உயரமான மரங்களில் பரண் அமைத்து வாழும் இயல்புடையவர்கள். மலைச்சரிவில் வீடு அமைத்தும் வாழ்வர்.

“ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையும் கவைக்கடைப் புதையொரு”[3]

என்ற பெரும்பாணாற்றுப்படைப் பாடல்வழிவேட்டுவரின் வீடுகள் ஊகம்புல்லால் வேயப்பட்டு உயரமாக இருந்ததுஎனக்கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறுகிறார்.மாலைநேரத்தில் காட்டில் வாழும் வேடர்கள் வானத்தைத்தீண்டும் பரண்மேல் ஏறி அமர்ந்து விளக்கு ஏற்றினர் எனக் குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 225 - 226 ஆவது பாடல்வரியில் குறிப்பிடுகிறார்.

குறிஞ்சிப்பண் இசை

வேட்டுவ மகளிர் குறிஞ்சிப்பண் இசையை அறிந்திருந்தனர். தினைப்புனத்தைக் காக்கும் வேட்டுவனின் மனைவி குறிஞ்சிப்பண் இசைக்க அப்பண்ணைக்கேட்ட இளம் களிறு தான் உண்ணவந்த தினைப்புனத்தைத் தின்னாமல் உறங்கியது என்ற செய்தியை அகநானூறு

"...பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலும் கொள்ளாது, நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற்று, ஓய்யென
மறம்புகல் மழ களிறு உறங்கும் நாடன் ”[4]

என்ற பாடல்வழி அறியமுடிகிறது.

தழல் மற்றும் தட்டை

மலைப்பகுதியில் வாழும் வேட்டுவர்கள்தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல். வேட்டையாடுதல், மீன் பிடித்தல் போன்ற தொழில்களைச் செய்தனர். இது மட்டுமல்லாமல் தினைப்பயிரையும் விளைவித்தனர். தினைப் பயிர்களைத் தின்ன வரும் கிளிகளையும்மற்ற பறவைகளையும் விரட்ட தழல், தட்டை, குளிர் போன்ற கருவிகளைப்பயன்படுத்தினர் என்பதை கபிலர்,

"...சாரற் சூரல் தகைபெறவலந்த
தழலுந்தட்டையுங் குளிரும் பிறவும்"[5]

என, குறிஞ்சிப் பாட்டில் குறிப்பிடுகிறார்.

கவைக்கோல்

வேட்டுவர்கள் மலைப் பகுதியில் முட்புதர்களை விலக்க கவைக்கோலைப் பயன்படுத்தினர் என்ற செய்தியை அகநானூறு,

"தொடுதோள் கானவன்கவைபொறுத்தன்ன"[6]

என்ற பாடல் வழி அறியமுடிகிறது. இந்த கவைக்கோலானது இன்றளவும் மக்களிடம் புழக்கத்தில் உள்ளது.

கவண் கற்கள்

தினைப்புனத்தைக் காவல் செய்யும் கானவன்(வேட்டுவன்) யானை வரும் ஓசை கேட்டு யானை வரும் திசையை நோக்கி கவண் கல்லை எறிந்து யானையை விரட்டும் காட்சியானது அகநானூறு 202 -ஆவது பாடலிலும், கலித்தொகை 5 - ஆவது பாடலிலும் இடம் பெற்றுள்ளது.

வேட்டுவன் ஒருவன் ஒரு இலக்கை மட்டும் கவனித்துக் குறிவைக்கும் திறனைப் பெற்றிருக்க வேண்டும்.வில் அம்பு, வேல், ஈட்டி, கவண் கற்கள் போன்ற சிறிய கருவிகளைப் பயன்படுத்தி விலங்குகளை வேட்டையாட, குறிவைத்தல் திறன் அவசியமானதாகும்; அதில் வேட்டுவர்கள் சிறந்து விளங்கினர்.

வேட்டையாடப் பயன்படுத்திய கருவிகள்

மலைப்பகுதியில் வாழும் வேட்டுவர்கள் விலங்குகளிடமிருந்து தங்களைத் தற்காத்துக்கொள்ள பல்வேறு வகையான ஆயுதங்களைப் பயன்படுத்தினார்கள். ஆரம்பகாலத்தில் கூர்மையான கற்களையும், மரக்குச்சிகளையும், விலங்குகளின் எலும்பையும் பயன்படுத்தினார்கள். மனிதநாகரிக வளர்ச்சியில்வில்அம்பு, வேல், வலைகள்,கவண் கற்கள், தூண்டில் போன்றவற்றைப் பயன்படுத்தி பிற விலங்குகளை வேட்டையாடினர். வேட்டுவன்வேட்டையாட வேட்டை நாய்களையும் பயன்படுத்தினான்.

புழங்குபொருளின் தன்மை

புழங்கு பொருடள்கள் நிலைத்த தன்மை கொண்டவை அல்ல. அவை காலத்திற்கேற்ப பல்வேறு வடிவங்களாக மாற்றம் பெற்றுத் திகழ்கின்றன. உதாரணமாக வேட்டையாடும் வேட்டுவர்கள் ஆரம்ப

காலத்தில் பிற விலங்குகளை வேட்டையாட, கூர்மையான கல்லைப் பயன்படுத்தினர். தற்பொழுது இரும்பாலான கத்தியைப்பயன்படுத்தி வருகின்றனர். காலத்திற்கேற்ப புழங்குபொருள் தன்னுடைய நிலையில் இருந்து அடுத்த நிலைக்கு வளர்ந்து செல்லும் தன்மை உடையது. ஏனெனில் அவை மக்கள் பயன்படுத்தும் பொருளாக இருக்கின்றன. எனவே புழங்குபொருள்கள் தன்மை மாறுபட்டு அமைகின்றது.

முடிவுரை

இயற்கையோடு இணைந்து வாழும் வேட்டுவர்கள் இயற்கையைப் புரிந்து வாழ்பவர்களாகவும், அறிவுநுட்பம் உடையவர் களாகவும் இருந்தனர். இவர்கள் மற்ற மக்களைவிட உணவு முறைகளிலும், வேட்டையாடக் கருவிகளைப் பயன்படுத்துவதிலும், குறி வைக்கும் திறனிலும் அறிவு நுட்பத்திலும் மேம்பட்டு இருந்ததைப் புழங்குபொருள் பண்பாடு மூலம் அறிய முடிகிறது. வேட்டுவரின் புழங்குபொருள்கள் அவர்களுடைய பண்பாட்டை விளக்குவதாக அமைகின்றன.

சான்றெண் விளக்கம்:

1. நாட்டுப்புறஇயல், த. ரெஜித்குமார். பக். 209.
2. சங்க இலக்கியம் அகநானூறு, மூலமும் உரையும் உரை. வ.த. இராமசுப்பிரமணியம் பக்.41.
3. பெரும்பாணாற்றுப்படை மூலமும் உரையும் டாக்டர் கதிர் முருகு பக். 30.
4. சங்க இலக்கியம் அகநானூறு, மூலமும் உரையும் உரை. வ.த. இராமசுப்பிரமணியம் பக்.197.
5. கபிலர்குறிஞ்சிப்பாட்டு மூலமும் உரையும் டாக்டர் கதை டாக்டர் கதிர் முருகு பக்.31
6. சங்க இலக்கியம் அகநானூறு, மூலமும் உரையும் உரை. வ.த. இராமசுப்பிரமணியம் பக்.83-84.

நற்றிணை முல்லைத் திணைப் பாடல்களில் வேட்டுவர்

முனைவர் ச.முரளி
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி-621007.
அலைபேசி: 9751345866
sathamurali86@gmail.com

முன்னுரை

இலக்கியங்கள் காலம் காட்டும் கண்ணாடியாகத் திகழ்கின்றன. அவ்வகையில் நமது மரபும், பண்பாடும் மாறாமல் இன்றும் பெறுஞ் சிறப்புடன் திகழ்வது தமிழ் இலக்கியங்கள் ஆகும். அவ்விலக்கியங்களில் காணப்படும் வேட்டுவர்களின் நிலையும், அவர்களின் பண்பாடு, கலாச்சாரம் மற்றும் தொழில் பற்றி இலக்கியங்களில் கூறப்படும் செய்திகளே இங்கு முதன்மைப் படுத்தப்படுகிறது.

சங்க காலங்களில் வேட்டுவக் குடியினர் வில் எயினர்,வில் கானவர், வில்லர் போன்ற சிறப்புப் பெயர்களில் அழைக்கப்பட்டனர். அதேபோன்று புற இலக்கியங்களில் வேட்டுவக் குடியைச் சார்ந்தவர் களைக் குறிப்பிடும் பொழுது மழவர், மறவர், பயனர், கூளியர் போன்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டனர்.

நற்றிணையும் முல்லைத்திணையும்

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகைப் பாடல்களில் சிறப்புடைய நூலாக திகழ்வது நற்றிணை ஆகும்.நல்+திணை என்ற பகுப்போடு காணப்படும் நூல் இதுவே ஆகும். இந்நற்றிணைப் பாடல்களில் சிறப்புப் பெற்றுத் திகழக்கூடியது முல்லைத் திணை ஆகும். முல்லை என்பது கற்பின் அடையாளமாகக் காட்சி அளிக்கின்றது. இம்முல்லைத்திணைப் பாடல்களில் காணப்படும் வேட்டுவர்களின் வாழ்வியல் செய்திகளும், பண்பாடும், பழக்கவழக்கங்களும் சிறப்பு உற்றுத் திகழ்வது கருப்பொருள் களாகவும் அமைகின்றன. மேலும் வேட்டுவர்களின் அடிப்படை

உவமையாகக் கூறி அகவாழ்வோடு கூறுவதால் இத்திணை சிறப்புப் பெறுகிறது.

வேட்டுவர் -சொல் பொருள்

வேட்டுவர் என்ற சொல் ஒரு குடிப்பெயர் ஆகும். விலங்கு களிடமிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ள விலங்குகளை வேட்டையாடிய மனிதன் பின் தம் குடியினர் களவு, கொலை, கொள்ளை போன்றவற்றில் இருந்து பாதுகாத்தனர். மேலும் ஊரையும், நாட்டையும் பாதுகாத்தனர். இதனால் வேட்டுவக் குடியினர் காவல்காரன் என்றும் அழைக்கப்பட்டனர்.

தொல்காப்பியத்தில் வேட்டுவர்

ஆயர் குடியைச் சேர்ந்த ஆண் பெயர் ஆயர் என்றும் வேட்டுவக் குடியைச் சேர்ந்த ஆண் பெயர் வேட்டுவர் என்றும் அழைக்கப்பட்டனர் என்பதை,

> **"ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர்**
> **ஆவியின் வருஉம் கிழவரும் உளரே".** (தொல்-அகம்நூ-21)

என்ற தொல்காப்பிய நூற்பா மூலம் முல்லைநில மக்களின் வேட்டுவர்களைப் பற்றி குறிப்பிட்டுக் கூறுவதை அறிய முடிகின்றது. மேலும் வேட்டுவக் குடியினர் தங்களது உணவுக்காக மான்,முயல் மற்றும் பறவைகளை வேட்டையாடிப் பிடித்தனர். இதனால் வேட்டுவக் குடியினர் வேடர் அல்லது வேட்டைக்காரன் என்றும் அழைக்கப்பட்டனர்.

முயல் எறிந்த வேட்டுவன்

முல்லைத்திணைப் பாடல்களை ஆய்ந்து பார்க்கும் பொழுது வேட்டுவர்களின் நிலை இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்புடையதாக அமைகின்றது. வினைமுற்றிமீளும் தலைமகன் தேர்பாகற்குச் சொல்லியதாக அமைந்த பாடலில்,

> **"உடும்பு கொலீஇ , வரி நுணல் அகழ்ந்து**
> **நெடுங்கோட்டு புரத்து ஈயல்கெண்டி**
> **எல்லுமுயல் எறிந்த வேட்டுவன் சுவல"** (நற்றிணை -59)

என்ற நற்றிணைப் பாடலில் தலைவன் கூறும் பொழுது என் பிரிவைப் பொறுத்துக் கொண்டு அவள் துன்புறும் ஊர் முல்லை பூத்துக் கிடக்கும்

நிலம் ஆகும்; அது வேட்டுவன் வாழும் நிலம் ஆகும். அங்கு அவன் உடும்பைக் கொல்வான் மணல் புற்றில் இருக்கும் ஈயைக் கிண்டி எடுப்பான். இப்படி முயன்று தோளில் சுமந்துகொண்டு வருவான். அந்தப் பல்வேறு பணிச்சுமையை மறந்து இல்லத்தில் இருக்கும் பொழுது இருமரக் கள்ளைப் பருகி செருக்குடன் இருப்பான் என்பதிலிருந்து வேட்டுவனின் நிலை இங்கு உணர முடிகிறது.

கொலைவல் வேட்டுவன்

> **“கொலைவல் வேட்டுவன் வலைபிரிந்து போகிய**
> **கானப் புறவின் சேவல் வாய்நூல்**
> **சிலம்பி அம் சினை வெரூஉம்**
> **அலங்கல் உலவை அம் காடு இறந்தோரே.”. (நற்-189)**

என்ற நற்றிணைப் பாடலில் தலைவனின் நிலைமையை எண்ணி தலைவி வருந்திக் கூறுவதாக அமைந்த பாடலில் புறாக்களைக் கொல்வதற்காக வேட்டுவன் வலைவிரிப்பான். அந்த வலையில் பட்ட காட்டுப் புறாவின் ஆண் வலையைப்பிய்த்துக்கொண்டுபறந்தோடும். அங்கே மரத்தில் சிலந்திப்பூச்சி கட்டி இருக்கும் கூட்டைப் பார்த்து இதுவும் வலையோ என்று எண்ணி அஞ்சி நடுங்கும். அப்படிப்பட்ட உலர்ந்த மரம் உள்ள காட்டு வழியில் சென்ற அவர் இப்போது என்ன செய்கின்றாரோ என வருத்தம் அடைகிறாள் - என்பதிலிருந்து வேட்டுவத் தொழிலில் நுட்பமும் அவர்கள் வலைமூலம் வேட்டையாடுதலையும் அறிய முடிகிறது.

பார்வை வேட்டுவன்

வேட்டுவர்கள் வேட்டுவத் தொழிலை மேற்கொள்ளும் பொழுது பல உத்திகளைக் கையாளுவதும் உண்டு. ஒருசில இனப் பறவைகளைப் பிடிப்பதற்காக அதன் இனத்தை பழக்கும் வழக்கம் அவர்களிடம் இருந்தது. இதை,

> **“பார்வை வேட்டுவன் படுவலைவெரீஇ**
> **நெடுங்கால் கனந்துள்அம்புலம்பு**
> **கொள் தெள் விளி .”. (நற்-212).**

என்ற நற்றிணைப் பாடலில் தான் பழகி வைத்திருக்கும் பெண் பறவையை வைத்து மயக்கி ஆண் பறவைகளைத் தன் வலைக்குள்

விழச்செய்துபிடித்துக் கொள்வான். இப்படிப்பட்ட வலையில் கனத்துள் என்னும் பறவை விழுந்து புலம்பி ஒலி எழுப்பும் காட்டு வழியில்செல்லும் கொடியர் யாழ் நரம்பில் இசை எழுப்புவர்.

இந்த இசைபோல கனத்துள்பறவை ஒலி கேட்டதுஅந்தப் பெருமலை வழியில் கடுமையான ஓசை எழுப்பும் பம்பை, வேட்டை நாய் ஆகியவற்றுடன் வடுகர் வேட்டைக்குச் செல்வர். என்பதிலிருந்து வேட்டை நாய்களையும் வேட்டுவர்கள் பயன்படுத்தியதை உணர முடிகின்றது. மேலும் நற்றிணைப் பாடல் ஒன்றில்,

"நோகோமானே. நோம்என் நெஞ்சே
பினிப்புதல்ஈங்கைஅம்குழைவருட
சிறை குவிந்திருந்த பைதல் வெண்குருகு
பார்வை வேட்டுவன் கால் களைந் தருள,
மாறி நின்ற மையல் அற் சிரம் .".   (நற் -312)

என்று காழார்க்கீரன் எயிற்றியார் கூறும் பொழுது பார்வை வேட்டுவன் பழகி வைத்திருக்கும் தன் குருகின் கால்கட்டைஅவிழ்த்து விட்டதும் அது பறந்து சென்று பனிப்பொழியும் காலை வேளையில் முள் இருக்கும் இண்டம் புதரில்அதன் அழகிய இலைகள் தன் சிறகுகளை வருடிக் கொடுக்க அமர்ந்திருக்கும் என்பதிலிருந்து வேட்டுவன் பறவைகளைப் பழகி வைக்கும் விதமும் அதனால் கட்டு அவிழ்த்தாலும் அது வேட்டுவனை விட்டு செல்லா நிற்பதையும் காண முடிகின்றது.

முடிவுரை

திணையின் அடிப்படையில் பார்க்கும் பொழுது முல்லை சிறப்புடையதாக அமையக் காரணம் அந்நில மக்களாகவே கருதப்படுகின்றனர். வேட்டுவர்கள் வேட்டைத் தொழிலை முதன்மையாகக் கொண்டு செயல்பட்டனர். மேலும் தன் இனப் பாதுகாப்பிற்காகவும் உணவுக்காகவும் மட்டுமே வேட்டுவத் தொழில் அவர்களுக்கு அவசியமான ஒன்றாகத் திகழ்கின்றது. முல்லைத் திணையில் வேட்டுவர்கள் வாழ்வியல் கலைகள் அதிகம் காணப்படுவதால் திணையும் சிறப்பு அடைகிறது.

திருக்குற்றாலக் குறவஞ்சியில் வேட்டுவர்

மு. சுவேதா,
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு,
நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி,
திருச்சிராப்பள்ளி (மா), 621 007.

முன்னுரை

சிற்றிலக்கிய வகைகளில் புகழ்பெற்ற நூலாகத் திகழ்வது திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகும். திரிகூட ராசப்ப கவிராயர் தன் கற்பனையில் தலைவிக்குக் குறி கூறும் வஞ்சி வாழும் கானகப் பகுதியில் விலங்குகளை வேட்டையாடுதல், தேன் எடுத்தல், பறவைகளை வேட்டையாடுதல் போன்ற தொழில்களை மேற்கொண்டார்கள் என்பதற்கு இணங்க இந்நூலில் வேடர்கள் வாழும் மலை சார்ந்த காடு பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.

குறவஞ்சி

தலைவன் பொருள்வயிற் பிரிந்த காலகட்டத்தில் தலைவி தலைவனது நினைவால் உடல் மெலிவுற்றுக் காணப்படுவாள். தோழி தலைவியின் துயரைப் போக்க வஞ்சியைக் குறி கூறக் கேட்டுத்(நற்சொல் கேட்டல்) தலைவியைத் தேற்றுவாள். இந்நிகழ்வை,

**“கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்”[1]
- (தொல்-பொரு-கள:25.112-113)**

என்ற தொல்காப்பிய நூற்பாவின்வழி குறத்தியின் குறிகூறும் பண்பினைச் சிறப்பாக நம்மால் அறிய முடிகிறது.

குறிஞ்சி மக்கள்

குறிஞ்சிநில மக்கள் கரடு முரடான மலைப்பகுதியைச் சார்ந்தவர்கள். சங்க இலக்கியங்கள் இவர்களை வேடர் என்றும் வேட்டுவர் என்றும் அழைத்தன.

வேடனின் தோற்றம்

வனங்களில் கிஞ்சித்தும் அச்சமின்றிச் சென்று வேட்டையாடு பவர்கள். அவர்களைக் கண்டு கொடிய விலங்குகளான சிங்கம், புலி, கரடி போன்றவை அஞ்சியோடின. அவர்கள் நல்ல கட்டான உடல் தோற்றத்தையும், மனவலிமையும் ஒருங்கே கொண்டவர்கள். கொக்கினின்று எடுத்த முத்தாலான மாலையைக் கழுத்தில் அணிந்தும், தலையில் தான் வேட்டையாடிய கொக்கின் இறகைச் சூடியும், புலியின் தோலை இடுப்பில் அணிந்தும் வீரத் தோற்றம் கொண்டவராக விளங்கினார். இதனை,

"...சிகைமுடித்து வரித்தோற் கச்சை
தொக்காக வரிந்திறக்கித் தொடர்புலியைக்
கண்டுறுக்கித் தூணி தூக்கி..."[2] - (குற்.., குறவஞ்சி -35)

என்ற குற்றாலக்குறவஞ்சிப் பாடல்வழி வேட்டுவரின் வீரமிகு தோற்றத்தினை நம்மால் காணமுடிகிறது.

வேட்டையாடுதல்

வேட்டையின் நுட்பங்களை நன்கறிந்தவர்கள் ஆவர். வேட்டை அவர்களின் குலத் தொழிலாகும். அவர்கள் விளை நிலங்களிலும், நீர்நிலைகளிலும் கண்ணி வைத்துப் பறவைகளைப் பிடித்தனர். அவர்கள் நாய்போல் பறவையின் தடங்கண்டும், பூனைபோல் பதுங்கியும், நரிபோல் ஒடுங்கியும், பேய்போல் தொடர்ந்தும், சிங்கம்போல் பாய்ந்தும் பறவைகளைத் துல்லியமாக வேட்டையாடிப் பிடித்தனர். இவர்கள் மனிதர்களின் தலைமுடியைக் கத்தரித்து, கண்ணிகளாகத் திரித்து, பொறிவைத்துப் பறவைகளைப் பிடித்தனர். இதனை,

"மலர்ந்த கண்ணியைக் கவிழ்த்துக் குத்தினால் வக்கா
வும்படுமே குளுவா வக்கா வும்படுமே
உலைந்த கண்ணியை இறுக்கிக் குத்தினால் உள்ளா
னும்படுமே குளுவா-உள்ளா னும்படுமே"[3]
- (குற்றாகுற-கண்ணி வகை.16.1-6)

என்ற குற்றால குறவஞ்சியின் பாடல் மூலம் குறவரின் வேட்டை தொழில் பற்றி நம்மால் உணர முடிகிறது.

வேட்டையாடுதலின் சிறப்பு

வேட்டுவர்கள், வேட்டைத் தொழிலை உயர்வாகவும் உயிர் போன்றும் மதித்தனர். ஆனால் அக்காலத்தில் இத்தொழில் சிறுமைப்படுத்தப்பட்டது. எனவே வேட்டுவர் தம் தொழிலைச் சிறப்புடன் உயர்த்திக் கூறினர். தாம் செய்யும் தொழில் உயர்வானது என்றும் தெய்வங்களே இவ்வேட்டைத் தொழிலை மேற்கொண்டிருந்தன என்றும் நம்பினர்:

"பிள்ளைக் குறும்பாற் பிடித்துக் கொண் டேகினார்
பன்னரும் அன்னத்தை நன்னகர் ஈசர்
பரிகலம் ஈர்ந்திடும் பார்ப்பானுக் கீந்தனர்"[4]
- (குற்றா குற-கண்ணி கொண்டுவரல்.14.1-6

எனவே வேட்டுவர்கள் அக்காலத்தில் தம் தொழிலான வேட்டைத் தொழிலை உயர்வானதாகக் கருதி வாழ்ந்தனர் என்பது புலனாகின்றது.

வேட்டுவர்கள் - காதல்

வேட்டுவர் காதலித்து மணம் செய்தும், உறவினில் மணமுடித்தும் இல்வாழ்க்கை நடத்தினர். ஆணும், பெண்ணும் பணி நிமித்தமாய் பலவிடங்களுக்கும், பல ஊர்களுக்கும் சென்றதால் அவர்கள் ஓரிடத்தில் தங்கி நிலையாய் வாழ்க்கை நடத்த இயலவில்லை. ஆனால் இந்தப் பிரிவு அவர்கள் அன்பைக் கூட்டியதேயொழிய குறைக்கவில்லை. ஊடுதலும், கூடுதலும் அவர்களுக்கு வழக்கமான ஒன்று. தலைவன் தனது தலைவிமீது உயிரையே வைத்திருந்தான்.இதனை,

"கிள்ளைமொழி கேட்கவொரு
கிள்ளையா னேனில்லையே"[5]
- (குற்றாகுற-சிங்கியைநினைத்தல்.17.3-4)

இவ்வாறு வேட்டுவரின் காதல் வாழ்வு இயற்கையோடு இயைந்து நீடித்து உறுதியாய் நிலைத்தது.

பேச்சு வழக்கம்

அக்காலத்து மலையின மக்களின் பேச்சு மொழியாக அது திகழ்ந்தது. அக்கால வட்டார வழக்கு எப்படி இருந்தது என்பதை இந்நூல் கொண்டு எளிதில் அறிய முடிகின்றது. சிங்கன் பேசும் பேச்சின் ஊடாக அது வெளிப்பட்டு நிற்கின்றது.இதனை,

"அதுக்குகிடந்துகொதிக்குதென்பேய்மனம்"[6] (குற்றா குற.114.4)

என்ற பாடல் வரிகளின் மூலம் வேட்டுவர்களின் பேச்சு வழக்கம் குறித்த விவரத்தை நம்மால் அறிய முடிகிறது.

முடிவுரை

தமிழ் மொழியில் நாடகமாக நடிக்கப்படும் இலக்கிய வடிவமே குறவஞ்சி நாடகமாகும். அவ்வகையில் பொதுமக்களை மகிழ்விக்க ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன் முதன்முதலாய் குமரகுருபர சுவாமிகள் மீனாட்சியம்மை குறம் என்ற நூலை இயற்றினார். அதனை வழியாகக் கொண்டு பல குறவஞ்சி நூல்கள் தமிழில் தோன்றின. ஆனால் குறவஞ்சி நூல்கள் யாவற்றிலும் சிறந்ததாகக் கருதப்படுவது குற்றாலக் குறவஞ்சியாகும். இது சிறந்த நாடக நூலாக அனைவராலும் போற்றப்பட்டு, பலகாலம் நடிக்கப்பட்டது. இந்நூலின் பல்வகைச் சிறப்புகளான நல்ல கதையமைப்பு, சிறந்த கருதுகோள், அழகு வர்ணனைகள், எளிமை நலம், வார்த்தை ஜாலம் போன்றவற்றுடன் வேட்டுவரின் பேச்சு வழக்கும் இந்நூலில் காணமுடிகிறது .

துணைநூற்பட்டியல்:

1. புலியூர் கேசிகன், குற்றாலக் குறவஞ்சி, சாரதா பதிப்பகம், சென்னை. (2009)
2. தொல்காப்பியம் - பொருளதிகாரம், திருஞானசம்பந்தம் உரை, திருவையாறு பதிப்பகம் திருவையாறு.

சிலப்பதிகாரத்தில் வேட்டுவர்

ஏ.கிருபாகணேஷ்,
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு ,
நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி,
அலைபேசி:9626435652

முன்னுரை

ஐம்பெரும் காப்பியங்களில் முதன்மையாகத் திகழ்வது சிலப்பதிகாரமாகும். குடிமக்கள் காப்பியம் என்ற சிறப்புப் பெயர் பெற்ற நூலாகும். குறிஞ்சிநில மக்களான வேட்டுவர் இனம் பற்றியும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. அக்காதையின் பெயர் வேட்டுவவரி எனப்படுகிறது. இவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தவர்கள்; மழை காடுகளைத் தமது வாழ்விடமாகக் கொண்டவர்கள்.

வேட்டுவர் இலக்கணம்

விலங்குகளை வேட்டையாடி உண்டு வாழ்ந்து வந்தனர். தேன் எடுத்தல், கிழங்கு விளைவித்தல், போன்ற தொழில்களை மேற்கொண்டனர் வேட்டுவர் இலக்கணத்தை,

> **“ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர்**
> **ஆவையின் வரூஉம் கிழவரும் உளரே.”[1]**
> **-தொல்-பொருள்(அகம்)நூற் 23**

என்ற தொல்காப்பியரின் நூற்பாவில் வேட்டுவ மக்களின் பெயருக்கு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது என்பதை நம்மால் தெரிந்துகொள்ள முடிகிறது.

சிலப்பதிகாரம் கூறும் வேட்டுவர்கள்

குடிமக்களைப் பற்றிய அமைந்துள்ள நூல் சிலப்பதிகாரம் ஆகும் வேட்டுவர்கள் வரிப்பாடல் பாடி கூத்து ஆடும் நிகழ்வை எடுத்து இயம்புகிறது. எனவேதான் சிலப்பதிகாரத்தை,

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்"[2] -பாரதியார் கவிதைகள்

என்று மகாகவி பாரதியார் இந்நூலுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவேதான் சிலப்பதிகாரம், முதன்மையான காப்பியமாகச் சிறப்புற்று விளங்குகிறது.

வேட்டுவர் கூத்து (வள்ளிக் கூத்து)

வேட்டுவர் பெருமையைப் போற்றும் விதமாகப் புகழ்ந்து கூறப்படும் நோக்கில், அவர்கள் மலை சார்ந்த காடுகளில் இயற்கையைத் தாயாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் ஆவர் .இதனை,

" பொற்றொடி மாதர் பிறந்த குடிப்பிறந்த
விற்றொழில்வேடர் குலனேகுலனும்!."[3] -சிலம்பு .(வே.வரி.04)

என்ற இளங்கோவடிகளின் பாடல் வரிகள் மூலம் வேட்டுவர் குலமே சிறந்த குலம் என்பதை நம்மால் அறிய முடிகிறது. மேலும், பறவைகளை வில்லால் வேட்டையாடியும் மரங்களில் பழங்களைப் பறித்தும் உட்கொண்டு, தன் பசியைப் போக்கினர். இத்தகைய வில்லையுடைய என் குலம் சிறந்தகுலம் என்பதனை,

"பையரவுஅல்குல் பிறந்த குடி பிறந்த
எய்வில் எயினர்குலனே குலனும்."..[4] -சிலம்பு(வே.வரி.05)

என்ற சிலப்பதிகாரப் பாடல் மூலம் வேட்டுவகுலம் நிகரற்ற தன்மையைப் பெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது.மூங்கிலைப் பயன்படுத்தியும் வேட்டுவர்கள் வேட்டையாடினர் என்பதனை,

"ஆய்தொடி நல்லாள் பிறந்த குடி பிறந்த
வேய்வில்எயினர் குலமே குலனும்"[5] -சிலம்பு. (வே.வரி.06)

எனும் இளங்கோவடிகள் வரிகளின் வழி தலைசிறந்து திகழ்ந்துள்ளனர் என்பதையும் வரிப்பாட்டுப் பாடி வள்ளிக் கூத்தாடினர் என்பதையும் நம்மால் அறிய முடிகின்றது.

வேட்டுவக் கொடை

வேட்டுவர்களும் கொடை அளிப்பதற்கு உரியவர்கள் ஆவர். தன்னுடைய வாழ்வில் ஆநிரைகளைக் கொடையாக அளித்துள்ளார்கள். வறுமையில் வாழ்ந்த மக்களுக்குப் பெரிதும் உறுதுணையாக இக்கொடை அமைந்தது. இதனை,

“இளமா எயிற்றி இவை காண்நின் ஐயர்
தலைநாளை வேட்டத்து தந்தநல் ஆன்நிரைகள்”[6]
- சிலம்பு (வே.வரி.14)

என்ற சிலப்பதிகாரப் பாடல்மூலம் வேட்டுவர்கள் கொடையில் சிறப்புடன் திகழ்ந்தனர் என்பதை நம்மால் உணர முடிகிறது. கொடை பற்றி வள்ளுவர்,

“இலனென்னும் எவ்வம் உரையாமை அதில்
குலனுடையான் கண்ணேயுள.” - குறள். 223.

என்ற திருக்குறள் வழி தமக்குள்ள வறுமை நிலையினைக் காட்டிக்கொள்ளாமல் பிறருக்கு ஈவது உயர்ந்த குடியில் பிறந்தவரின் பண்பாகும் எனத் தெரிந்து கொள்ள முடிகிறது.

வேட்டுவரின் பலிக்கொடை

கொற்றவைக்குப் பலிக்கொடையாக எயினர்கள் அளித்த முறை சிறப்புடையது. அவ்வகை குறித்துச் சிலப்பதிகாரம், கடவுளுக்குப் பலி கொடுக்கும் முறை முற்காலத்திலிருந்து கடைபிடிக்கப்பட்ட முறை ஆகும் என்கிறது. இதனை,

“வம்பலர்பல்கி வழியும் வளம்பட
அம்புடை வல்வில் எயின் கடன் உண்குவாய்”[8]
-சிலம்பு (வே.வரி.20)

என்ற இளங்கோவடிகளின் பாடல் வரிகள் மூலம் எயினர் பண்பாட்டு முறையினை நம்மால் உணரமுடிகிறது. மேலும்,

“துண்ணென்துடியொடுதுஞ்சவர்எறிதரு
கண்ணில்எயினர் இடுகடன்உண்குவாய்”
- சிலம்பு (வே.வரி.21)

என்ற சிலப்பதிகார வரிகள் மூலம் எயினர் குலத்தின் பலிக்கொடையை அறிய முடிகின்றது. இத்தகைய சிறப்புகொண்ட எயினர்கள் வாழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

“பொருள் கொண்டு புண்செயின் அல்லதை யார்க்கும்
அருள்இல்எயினர் இடுக்கடன் உண்குவாய்”[10]
- சிலம்பு.(வே.வரி.22)

எனும் சிலப்பதிகாரச் செய்யுள்மூலம் வேட்டுவர்களின் குண நலன்கள் பற்றி நம்மால் தெரிந்துகொள்ள முடிகின்றது.

முடிவுரை

சிலப்பதிகாரம் முப்பெரும் உண்மைகளைக் கூறும் நூலாகும்; முத்தமிழ் காப்பியம் என்று போற்றப்படும் பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரம் வேட்டுவர்களின் பலிக்கொடை, கொடை, கூத்து மற்றும்குணச்சிறப்பு போன்றவற்றோடு வாழ்க்கைமுறை, உணவு, உறைவிடம்முதலானவற்றையும் புலப்படுகிறது.

துணைநூற் பட்டியல்:

1. சிலப்பதிகாரம், புலியூர் கேசிகன் உரை,சாரதா பதிப்பகம், சென்னை.

2. திருக்குறள், கலைஞர் கருணாநிதி உரை, திருமகள் நிலையம், சென்னை 17.

3. தொல்காப்பியம் முனைவர். திருஞானசம்பந்தம் உரை, திருவையாறு பதிப்பகம்,திருவையாறு.

4. பாரதியார் கவிதைகள்- மணிவாசகர் பதிப்பகம், சென்னை .

A STUDY OF TRIBAL AND HUNTER GATHERER'S LIFE

D. A.MEENAKSHI SUNDARAM
Head of the Department,
Department of History,
Latha Mathavan Arts and Science College,
Kidaripatti, Madurai, 625 301.

Abstract

The hunters lived mostly in Tamil Nadu and Kerala region where they hunted deer, hare and birds for their food consumption. Commonly, *Vedtuva* (Hunters) people were called Vedar or Vedtavakar or Vedtava caste or Veduvar. Their social status and professional rituals are clearly stated in this study.The Vedtuvans, who are nominally Hindus, worship the seven virgins, the primordial deities worshiped by the Erulas. The Kodi caste grow their hair long, these tribal women wear cloth as clothing. The Beringalas tie their hair in a knot on the scalp.

Keywords: Hunters, History of Hunters, Life Style in Hunters, Hunter birth and death riruals, Hunters in Tamilnadu

Introduction

The Vettuvas lived primarily in Tamil Nadu, Kerala, and the Kannada region. During the Sangam period in Tamil Nadu, Vettuvas were known by various names such as Vil Einar, Vil Ganavar, and Villar. The warriors belonging to Vettuwa Gudi were referred to as Malavar, Maravar, Vayavar, Kuliyar, etc. Those who were called 'Vettuvar' in the Sangam literature were referred to as 'Puluvar', 'Kavalan', 'Vettuvar', 'Mavaliyar', 'Vedar', or 'Hunter' in inscriptions. The term 'hunter' is a common name, but it doesn't do justice to their role. They protected citizens from murder, robbery,

and other threats, thereby safeguarding the village and the country. Thus, the Vettuva citizens were known as Kavalan. This study details their hunting lifestyle, social status, professions, rituals, marriage customs, and death ceremonies.

History of Hunters

The description given in the 1901 Madras State Census Report about the Tamil Veduvars is as follows: The Veduvars are mainly found in the Salem, Coimbatore, and Madurai districts and belong to a caste whose occupation is cultivation and hunting. The word Veduvar means hunter. They also belong to the Vedan caste. Although these two castes stem from a common origin, their relationship is not clear. Today, they claim to be a higher caste than the Vedanas and have begun identifying themselves as Vedana Velala. Historical records indicate that the Kongu kings brought hunters from Chola and Pandya regions to aid them against Kerala. Another account states that these hunters helped the Chola king Adityavarman conquer the Kongu region in the late ninth century. In the 1897 census report, paragraph 538, there is a reference indicating that the Vetters and Vedans from Eelam are one and the same. As proof of this claim, the Vettuva people state that they worship Goddess Kandi, potentially referring to a goddess from Kandi in Eelam. Among the self-restrained sections of this caste, Venkanji, Kigangu, Pasari, Viraku, Pannadai, and Willi are the largest in number. These castes have their own barber, forming a separate sect called VettuvaAmbattar or Navidar, both of which are terms referring to amputations. They do not agree to work for the lower castes of Kongu Velar.

The Vettuvans, who are nominally Hindus, worship the seven virgins, the primordial deities worshiped by the Erulas. Some of them who were accustomed to eating meat and drinking alcohol have become vegetarians to raise their social status. They do not allow widows to remarry. They burn or bury the dead and do not perform any other rites for the ancestors. In this way, their customs are a mixture of the customs of the upper and lower castes. Covunter is a common title for them. About the Malayalam Vettuvans living in

Malabar and the southern part of the South Kannada District, the Madras State Census Report of 1907 states thatthey are agricultural slaves, hunters, and gatherers of simple things in the forests of Malabar. Among them, there are two independent sub-divisions, namely Kodi and Beringala. The Kodi caste grows their hair long, and these tribal women wear cloth as clothing. Whereas, the Beringalas tie their hair in a knot on the scalp. Women of this caste wear leaves as a dress, and they change those leafy clothes every day. The Beringalas are unhygienic; they live in huts made of bamboo and reeds and eat everything, including the carcasses of dead animals. However, they consider themselves superior to the Serumans and Pulayans and take care not to be defiled by them. In Malabar, the masons and salt pickers living in the plains have the same name for themselves.

A fanciful case history is said to illustrate that the hunters of Malabar were not formerly in the lowest condition they are today. A member of their tribe went to a Nair, a high-caste Hindu, and asked him to marry his daughter. The Nair said that all the members of their tribe should come to his house and dance on the betel-nut-covered ground, and that those who fall down would be shot with arrows. If they agreed to this, he would give his daughter in marriage. Those tribesmen, not realizing the consequences, agreed and danced there. One by one, they stumbled and were mercilessly shot and killed. A benevolent Nair took a girl who survived this ordeal secretly and married her into his family. Those born of this relationship are hunters who claim their origin. To this day, the hunters are very devoted to the family of the Nairs who came to protect their race. The details of these Vettuvans' costumes are as follows: They tie a small dhoti in between and tighten it with a girdle. The same girdle is also used to hang tools during hunting. They wear brass earrings, have cane mustaches and bushy beards, and the women hang long bunches of leaves tied in three loops to a girdle of cheap thread.

At the time of the creation of the world, God also provided clothes for the many races living in the world. Hunter caste women were asked to choose between a daily change of clothes and a yearly change of clothes, and they chose the daily change of clothes. History

provides a case where the goddess, considering this an unforgivable offense of arrogance, commanded them to gather fresh leaves every morning and put them on. If the hunter caste women are asked to wear cloth instead of leaves, they say that they are obeying the command of the deity and that they can only do so if the deity appears in person and gives them permission to change their clothes. When the Governor of Chennai State visited the South Kannada district, the officials marched a group of candidates in front of him. One of them wore an aluminum coronation medallion. When the District Collector asked who had given it to him, he humbly replied, “My Tambiraan.” A recent reference to the hunters who wear leaves as garments states: They also believe that Katiravan enters through a cave in the earth in Malapil and disappears and reappears in the east the next morning. They calculate time in a strange way. A hunter told his farmer on which hills he was sowing paddy that children were born to him. The women of their caste, known for their faith and virtue, regard chastity as the most sacred.

Mr. T.K. Gopal Panicker has summarized the Vettuvans from Malabar as follows: It cannot be said that they are completely slaves. However, considering the social status they have, there is no other option but to classify them as one of the slave castes. They live in the coconut groves of Nairs and other wealthy castes, making a living from the income they get from picking coconuts, digging the earth, and building fences and protecting them. They live with their wives and sometimes other relatives in huts that are slightly more advanced than those of other lower castes. They are not subjected to strict caste restrictions like others. Due to their daily contact with the upper castes, they are more educated and civilized than other slave castes. Their staple food is rice, which they are very fond of. Their condition was never as bad as that of other classes. Cultivators sometimes employ them as labourers for cultivation. The women of this caste also work in the fields during harvest. In the months of December and January, these women weave coconut husks for thatching houses. The men wear brass earrings in their ears and the women wear brass kadukans on their noses, fingers, and necks. They wear the same cloth given by the farmer once a year for the whole year. They do not

eat the carcasses of dead animals. They are interested in fish food and like to eat the meat of animals that other castes do not usually eat, such as fish, cat, and rat. They practice the same diet as the upper castes. The number of days they work for the farmer is equal to the number of days the farmer works for them. If they work in a Nair's farm or garden, they observe a fortnight's fast. Brahmin farm labourers only fast for ten days. Among the Nairs, these are also days of ablution by Brahmins, whose rites are performed by the caste's priests or monks. The consent of these priests of the caste is essential for a ritual to be considered proper. Their marriage ceremonies are similar to those of the Deeras, though the feasts and gala events are not as elaborate. Like the Nairs, they tie their hair in a knot at the front of the head. Petty thefts of coconuts, bananas, betel nuts, and yams are the crimes they engage in. Similarly, they believe in some malevolent angels. Sacrifices are offered to these deities on a certain day every year. They are not a very grateful class to their equals like other classes. Their name Nambu Vettuvar is to make it clear that they are believers.

Vettuvans are divided into fourteen houses. The house names of the farmers under whom they work are the proper names of their house units. They are appointed by the zamin and the caste leader is called Gran. Sometimes he is also called drum boy. When the women are in labour, they are left alone with some water in a hole dug in a hilltop hut. No one approaches her until the cry of the new-born child is heard. Vettuvar is also known as VettuvaPuliyar. They are labourers who do all the work related to agriculture, such as ploughing, sowing, planting, weeding, watering, and harvesting. As soon as the news of an unmarried pregnancy emerges, her parents report it to the local caste leader known as Kuruppan. He will gather a group of elders from his caste and make arrangements to find out who her lover is. If the person accepts the truth, he asks her to marry him. The case does not end here. They will go to their district magistrate and report everything that happened. The magistrate will make the offender drink water called "kindi flood". Along with drinking this water, the offender should also drink a little green water. Then a few drops of blood will be drained from her body. After this, she will say that her sin is over,

and if her lover refuses to marry her, he will be kicked and castigated. Both of them will face social exclusion. The woman who has been absolved of the sin is entitled to marry another man, and the Dandan receives four gana, four bundles of betel, eight betel leaves, and three pieces of tobacco as his due penalty. The local caste leader gets his share, and everyone else spends the rest on celebrations.

The Hunters follow the secular ethos of Hinduism

Dead ancestors are also worshiped as gods. Sacrifices to ancestors are different from those to deities. Sacrifices to the ancestors hold an essential place. When I collected notes from hunters in and around Orak, they said that coconuts are not unloaded from the coconut trees and that the coconuts brought there for sale are more expensive ones mixed with water. Their deities are not satisfied with the creation of this level of fraud. They told me that it is believed that due to the anger of these deities, defects such as deafness, blindness, loss of eyesight, etc., appear. They also worship Kali. The death rituals of the hunters are very elaborate. When a person dies, his relatives, friends, and caste members are informed. They come and take part in the death rituals. The corpse is bathed and wrapped in a new cloth, a little gold is melted into a stone and poured into the mouth of the deceased by his sons and daughters. The initiation ceremony called Karuanguga is an important ritual performed by the sons and daughters of the deceased. During this ritual, after putting some rice in sixteen small banana pieces and placing them on the forehead, neck, chest, stomach, thighs, arms, legs, feet, etc., of the dead body, the younger family members bathe the legs and feet in water. After this, four people carry the corpse to the burial ground. They pour some sugar, liquor, and water on the stone. They believe that the spirit of the deceased enters the stone by the power of certain mantras. The stone is brought home and wiped in a coconut shell containing oil mixed with turmeric, and it is kept outside the house until the period of impurity is over, which lasts fifteen days. On the night of the fifteenth day, family members fast without eating. On the morning of the sixteenth day, all the invited castes from the coast bring with them rice, materials for curry powder, etc. All apply oil and take a bath. After that, as a

sign that they have been freed from the defilement, they will be sprinkled with green water and the stone taken from the burial pit will be dipped in the water and brought into the house. After that, all the assembled will depart after feasting. The mourner does not wash his face for a year and does Diksa every morning. Before leaving for work, he offers a sacrifice to the deceased. After doing this for a year, he washes his face and performs a feast called Masam in honor of the deceased. The stone hut in which the spirit of the deceased is believed to reside is placed on a raised platform for all to see. Sometimes this stone image is replaced by a wooden or copper image. It is regularly worshiped in the hope that it will bring good health to the family. Pilgrims worship the idol during Karkatakam, Libra Sankranti, Onam, Vishu, and local temple festivals.

Hunters are considered untouchable, so if they come within sixty-four feet of a higher caste, they are defiled. They should stand at a distance of twenty-four feet from the Kammatar. The Naiyadis and Inadans keep aloof from them, and owing to their low wages and disability, many of them have become Christians and Muslims, and they work for wages ranging from two and a half annas to three annas a day. In Malabar, there is a class called Vetans or Ketvans, who are not to be confused with the forest tribes of the Vattuvans. They were once salt miners and today they work as masons, earth movers, and stone masons in quarries. Among them, there are two groups who follow the Malabar tradition of matrilineal inheritance and those who follow the patrilineal tradition. Those who follow the patrilineal tradition are considered to be immigrants from the south, according to Malabar district information.

Conclusion

The information about Vettuvars who lived in the Tamil Nadu and Kerala regions is given here. Their cultural practices, professional roles, and social status are also mentioned. The people of Vettuva who lived in the northern part of Tamil Nadu were called Panas (derived from the word Panam, meaning arrow). They were mighty men who fought fiercely in all four armies. They were referred to as Mavaliyar in the inscriptions.

Reference:

1. N.C., Kanthaiya, Thenninthiya Kudikalum Kulangalum (Tamil), Udhayam Printers, Chennai, First Edition, 1999
2. Dr.K.Rathnam, Thenninthiya Kulangalum Kudikalum (Tamil), Tamil University Maruthonri Printers, Thanjavur, First Edition, 2005
3. Monograph Ethnological survey of Cochin 1905
4. Malabar and its folk, 1900
5. Madras Museum Bull. III, I, 1900
6. Crawley the mystic rose. Fide jagor. 2 eitsch. Ethrol. IX.164
7. A Chatterton Monograph on Training and working a Leather 1904
8. Mdras Mail, 1907

The Vettuvar Community: An Anthropological Exploration of Culture, History, and Identity

G. Sowparnika,
Ph.D. Research scholar, Anthropology,
Department of Tribal studies,
Tamil University, Thanjavur.

Introduction

Anthropology, the study of human civilizations and cultures, provides important insights into how communities develop and interact with their surroundings. Understanding such communities are crucial to maintaining their identity and guaranteeing inclusivity in larger social frameworks. The Vettuvar community, which is mainly located in Tamil Nadu, is a lesser-known group with a rich cultural and historical background. This article explores the anthropological aspects of the Vettuvar community, examining their social organization, economic practices, cultural traditions, and contemporary challenges.

Historical Background

The origins of the Vettuvar community are closely tied to the socio-political history of Tamil Nadu. The name "Vettuvar" is believed to be derived from their association with the practice of "vettu" (cutting), reflecting their traditional roles as hunters or agricultural workers. Historically, the Vettuvars were known for their close relationship with nature, relying on the forest for sustenance. Over time, they transitioned into agrarian roles, contributing significantly to the local economy. During colonial authority, the Vettuvar community experienced substantial disturbances, including land alienation and economic marginalization. Despite these hurdles, they adapted to new conditions while retaining their cultural identity.

From an anthropological perspective, it is significant to note that the Vettuvar community comprises 153 distinct clans. These clans serve as vital social units, reflecting the community's intricate kinship structure, cultural diversity, and mechanisms of social organization. The existence of these clans underscores the importance of lineage, identity, and traditional practices within the Vettuvar social framework.

Various Titles of Vettuvar

The anthropological names of the Vëttuvar reflect their diverse roles, status, and cultural identities within society, as documented in inscriptions and historical records. These names include:

1. Uran (Chieftain)	2. Vettaiykkaran (Hunter)
3. Vedars	4. Vettuvans
5. Verpan	6. Silamban
7. Eyinan	8. Veduvan
9. Vettuvan	10. Vettuvadiyaraiyan
11. Urali	12. Kongar
13. Naˇalvan	14. Urali Vettuuvan
15. Pandiyan descendants	16. Kurukularayar
17. Pallikondar	

These names also indicate their occupations, territorial affiliations, and sociopolitical roles, such as hunters, rulers, or landowners, shedding light on their integration into various strata of society. The multiplicity of names illustrates their fluid identity and significant role in the historical and cultural landscape of Tamil Nadu.

Edgar Thurston, in his anthropological observations, suggested that the Muthurayar, Vettuvar, and Valaiyar communities share a common ethnological or sociocultural lineage, indicating a potential historical or ancestral connection among these groups.

Social Organization and kinship

The Vettuvar community has strong kinship ties, which are characterized by social organization and kinship. The community's marriage practices frequently involve endogamy, with alliances formed within the same community to maintain cultural continuity. Clan divisions that are present, help in regulating marital alliances and strengthen social bonds.

Economic Practices

The Vettuvars were traditionally hunters and gatherers, with a traditional reliance on forest resources for their livelihood. Over time, their focus shifted to agricultural work, where they cultivated crops like rice, millets, and pulses. In certain areas, they also took part in cattle raising and fishing.

Many Vettuvars moved to cities in search of employment as a result of industrialization and urbanization. Currently, they are working in various fields, such as construction, small-scale industries, and government services. The community continues to face challenges as a result of economic disparities and limited access to resources.

Cultural Practices and Beliefs

Rituals, festivals, and oral traditions are all expressions of the rich cultural heritage of the Vettuvar community. Their agrarian roots are highlighted by their great fervor in celebrating festivals like Pongal. Nature worship rituals reveal their profound connection to the environment. The community has a variety of religious practices, with many Vettuvars adhering to Hindu traditions. The worship of deities like Mariamman and Ayyanar is a common practice, and temples are central to their social and cultural life. Folk songs and tales are oral traditions that serve as a repository for their history and collective memory.

Kannappar Nayanar and the Vettuva Community

Kannappar Nayanar, one of the 63 Nayanar saints venerated in Tamil Shaivism, is traditionally associated with the Vettuva

community, which is often considered to be of hunter or tribal origin. The Vettuvas were historically known for their occupations related to hunting and forest-dwelling livelihoods. Kannappar's life story emphasizes devotion that transcends social status, showcasing his unwavering love and service to Lord Shiva despite his humble origins.

In the hagiographies, Kannappar's devotion is illustrated through the legend of his offering raw meat and even his own eyes to the deity in a spontaneous act of bhakti (devotion). This tale underscores the inclusivity of Tamil Shaivism, which honors devotion over ritual orthodoxy, thus elevating Kannappar's status as a saint and bringing recognition to the Vettuva community within the spiritual and cultural milieu of Tamil Nadu.

Thalaiyur Kali: A Socio-Historical and Cultural

Thalaiyur Kali represents a significant figure in the sociocultural and historical fabric of Kongu Nadu, a region known for its diverse communities and rich traditions. Emerging from the Kongu Vettuva Gounder community, Thalaiyur Kali is remembered as a leader whose martial prowess and spiritual devotion shaped local history and collective memory. According to archaeologists, the Talaiyur Kali temple is over 1,400 years old, and the Talaiyur Kali statue is more than 4,000 years old.

•Ethnographic and Historical Context

Kongu Nadu, historically recognized as a semi-autonomous region, comprise several distinct ethnic and occupational groups. Among these were the Vettuva Gounders, a sub-community often associated with forest-based livelihoods and martial traditions.

Thalaiyur, located near present-day Chinnadharapuram, functioned as a center of governance for this community, with Thalaiyur Kali as a central figure in its sociopolitical organization. Thalaiyur Kali is deeply tied to the cultural institution of deity worship, particularly the veneration of Kali or Kortravai, the goddess of war and victory. This reflects the syncretic blending of indigenous tribal deities with broader Dravidian religious practices. The worship of

Kali as a clan deity underscores the interplay between belief systems and kinship networks, with rituals centered around war, fertility, and prosperity.

•Ritual Leadership and Clan Identity

As a chieftain, Thalaiyur Kali was both a political leader and a ritual figurehead. His association with the goddess Kali, seen as a protector and guide in battle, exemplifies the interconnection between spiritual and temporal authority. This dual role reinforced his legitimacy as a leader while unifying the community under a shared religious and cultural identity.

•Narratives of Valour

The oral histories surrounding Thalaiyur Kali emphasize his martial valour, particularly his confrontation with wild tigers and his decisive role in battles such as the one against the Valanadu forces at Virappur. These narratives, often recounted in folk songs and rituals, serve as both historical recollections and symbolic expressions of courage and resilience. The use of weaponry such as spears and swords in these tales reflects the material culture of the time, illustrating the community's adaptation to its environment and challenges.

•Conflict and Memory

The battle between Thalaiyur Kali and the Valanadu forces represents more than a historical event; it embodies the territorial and socio-political tensions that shaped the region.

Anthropologically, these conflicts can be understood as contests over resources, boundaries, and authority, common in premodern agrarian societies. However, as with many oral traditions, the details of these events are contested. The integration of Thalaiyur Kali into broader mythological frameworks, including his association with figures like Ponnar and Sankar, highlights the dynamic interplay between history and folklore. Such narratives often undergo reinterpretation, serving the needs of different communities and political agendas over time.

•Continuity and Commemoration

The annual Masi festival at the Thalaiyur Kali temple illustrates the enduring significance of Thalaiyur Kali in the cultural consciousness of the community. This event, marked by rituals and collective celebrations, reinforces communal identity and provides a space for intergenerational transmission of history, memory and values.

•Anthropological Insights of Thalaiyur kali

From an anthropological perspective, the figure of Thalaiyur Kali offers a lens into:

1. **Power and Kinship**: His role as a chieftain underscores the integration of kinship-based leadership with broader political structures.
2. **Ritual and Identity**: The worship of Kali as a clan deity reveals how rituals mediate relationships between individuals, communities, and the divine.
3. **Oral Tradition and Social Memory**: The narratives of Thalaiyur Kali, while rooted in historical events, are shaped by the collective memory and sociocultural dynamics of the Kongu Nadu region.
4. **Conflict and Integration**: The depiction of conflicts with neighbouring regions reflects the strategies employed by communities to negotiate power and maintain autonomy.

To conclude, Thalaiyur Kali is a figure who combines history, myth, and cultural identity in his legacy. Through oral tradition and ritual practice, his story remains relevant in the Kongu Nadu community, providing valuable insights into their social structure, belief systems, and historical consciousness. The reconstruction and preservation efforts for the Thalaiyur Kali temple represent a significant cultural and ritual endeavor, reflecting the community's dedication to safeguarding their historical and spiritual heritage.

Challenges and Modern Adaptations

The Vettuvar community is facing several challenges in the modern era. Furthermore, traditional practices and knowledge systems have been gradually disappearing due to the pressures of globalization and urbanization.

The community has demonstrated remarkable resilience even with these challenges. Non-governmental organizations and local initiatives have played a crucial role in empowering the Vettuvars through education, skill development, and advocacy for their rights. Modern adaptations, such as being involved in political processes and being represented in local governance, have also improved their social standing.

Anthropological Insights

The Vettuvar community provides valuable insights into how tradition and modernity interact from an anthropological point of view. Their practices embody wider sociocultural themes, including the significance of familial connections, the influence of the natural environment on livelihoods, and the tenacity of marginalized communities when confronted with challenges.

Conserving indigenous knowledge systems and cultural heritage is highlighted when studying the Vettuvar community. The importance of inclusive policies that address the unique challenges faced by such communities is also highlighted.

Conclusion

Acknowledging and protecting the cultural heritage of the Vettuvar community is vital for fostering inclusivity and appreciating the diverse array of human civilizations. Future research could analyze how they adapt to the complexities of a globalized world.

Reference:

1. Bhakthavachala Bharathi. Tamizhaga pazhankudigal (Tribals of Tamilnadu). Adaiyaalam publish, 2017.

2. Edkar Thurston. Caste and tribes of southern India. Government press, Madras, 1909.

3. M. R. Thangamani.Vettuvar samuthayam oru parvai. kongu pathipakam, 2014.

4. Dr. S. Krishnaswami Aiyangar. Ancient India and South Indian History and Culture.The Oriental Books Agency, Pune in 1941.

5. S. Rasu. Appachimaar kaviyam. 2013

6. M. R. Thangamani. Kongu nadu vettuva kavundarkal verra varalaru. 1993.

சங்க இலக்கியத்தில் வேட்டுவன்

முனைவர் ஜா.கீதா,
உதவிப்பேராசிரியர்,
எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை.
8056058845
geethram104@gmail.com.

முன்னுரை

தொல்பழங்காலத்தில் மக்கள் ஒன்றாகச் சேர்ந்து கூடி வாழ்ந்தனர். இவர்கள் வாழ்வதற்கு உண்ண உணவும் அருந்த நீரும் அடிப்படைத் தேவையானது. இத்தேவையை நிவர்த்திசெய்யும் வகையில் நீர்நிலைகளுக்கு அருகில் குழுவாக வாழ்ந்தனர். மலையிலும் காட்டிலும் கிடைக்கும் காய்களையும் கனிகளையும் உண்டும் ஊற்றுநீரிலும் ஆற்றுநீரிலும் தாகத்தைத் தணித்தும் வாழ்ந்தனர். இப்பூர்வீகக் குடிகள் நெருப்பைக் கண்டபின்னர் அவித்தும் வேகவைத்தும் உண்டனர். பூர்வீகக் குடியினர் தங்களைச் சுற்றியுள்ள மரங்களையும் விலங்குகளையும் நேசித்து வாழ்ந்தனர். மலையின் சமதளத்திலும் காட்டின் ஓரங்களிலும் வாழ்ந்த மக்கள் விலங்குகளிலிருந்து தங்களைப் பாதுகாக்க வேட்டையாடக் கற்றனர். இவ்வாறு வேட்டையாடிய மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர்? சங்க இலக்கியங்களின் வாயிலாக இம்மக்களின் வாழ்வியலை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

வேட்டுவன்

வேட்டுவன் என்னும் சொல் வேடு என்னும் சொல் அடியாகத் தோன்றியது ஆகும்.வேடு என்னும் சொல் வேட்டையாடும் தொழிலைக் குறிக்கிறது. இச்சொல் அகநானூற்றில் இடம்பெற்றுள்ளது. வேட்டொடு வேய்பயி லழுவத்துப் பிரிந்த நின்னாய் (அகநா. 318). வேடு என்னும் சொல்லிலிருந்து வேட்டு, வேட்டை, வேட்டுவன், வேடுவன், வேடன் போன்ற சொற்கள் உருவாகியுள்ளன. இச்சொற்களின் பொருளாக வேட்டையாடும் தொழில் செய்பவனையே உணர்த்துகிறது.

தமிழ் இலக்கிய இலக்கண மரபில் நிலத்தினைப் பிரித்து முதற்பொருள், உரிப்பொருள், கருப்பொருள் ஆகியவற்றைக் குறித்துள்ளனர். தொல்காப்பியம் இதனை நான்கு திணையாகக் கூறியுள்ளது. தொல்காப்பியம் ஒவ்வொரு திணைக்கும் உரிய மக்களைப் பற்றிக் குறிக்கையில் குறிஞ்சி நிலத்தில் வாழும் ஆடவர்க்கு உரிய பெயராக வேட்டுவரைச் சுட்டுகிறது.

“ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப் பெயர்
ஆவயின் வருஉம் கிழவரும் உளரே” (தொல், அகம் 21)

இதிலிருந்து குறிஞ்சிநிலத்துக்குரிய தலைவனே வேட்டுவன் என்பது பெறப்படுகிறது. ஆனால் திணைக்குரிய கருப்பொருள் விரவியும் வரும் என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் குறிஞ்சியிலும் முல்லையிலும் வேட்டுவர் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. குறிஞ்சிநில மக்களின் முதன்மையான தொழில் வேட்டையாடுதலே ஆகும். முல்லைநில மக்களின் முதன்மையான தொழில் ஆநிரைகளைப் பாதுகாத்தலே ஆகும். முல்லைநில மக்கள் தங்களின் ஆநிரைகளைப் பாதுகாப்பதற்கும் தங்களைப் பாதுகாப்பதற்கும் வேட்டையாடுதலைச் செய்திருந்தனர்.

வேட்டுவரின் செயல்

வேட்டுவக் குடியினர் காட்டில் கிடைத்த காந்தள் பூவால் தொடுக்கப்பட்ட மாலையினையும், கொலைபுரியும் வில்லினையும் வைத்திருந்தனர். செம்மையான கொம்பினையுடைய காட்டுப்பசுவின் இறைச்சியோடு, காட்டிலுள்ள வலிமையுடைய யானைகளின் வெண்மையான தந்தங்களையும் எடுத்துக்கொண்டு, அவற்றைப் பொன்னை உடைய கடைத்தெருக்களில் கள்ளுக்கு விலையாகக் கொடுக்கும் குன்றுகள் கூடிக்கிடக்கும் பின்புல ஊர்களில் வாழ்ந்த மக்களே.

“காந்தள் அம் கண்ணி கொலை வில் வேட்டுவர்
செம் கோட்டு ஆமான் ஊனொடு காட்ட
மதன் உடை வேழத்து வெண் கோடு கொண்டு
பொன் உடை நியமத்து பிழி நொடை கொடுக்கும்
குன்று தலைமணந்த புன்புல வைப்பும்” (பதி 30/ 9-13)

இப்பாடலிலில் இருந்து வேட்டையாடிக் கிடைத்த யானையின் தந்தத்தினையும் காட்டுப்பசுவின் இறைச்சியையும் கொடுத்துத் தங்களுக்குத் தேவையான பொருள்களைப் பண்டமாற்று முறையில் பெற்றனர்.

காட்டில் வாழும் வேட்டுவன் சினமுள்ள நாயையும் உடன் வைத்திருந்தான். மேலும் இவன் வேட்டையாடி மான் தசைகளைக் கடகப்பெட்டியில் கொண்டுவந்திருந்தான். ஆயர்குலப் பெண்கள் தயிரைக் குடங்களில் கொண்டு வந்து நிறைத்தனர்.

“கான் உறை வாழ்க்கை கத நாய் வேட்டுவன்
மான் தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பும்” - (புறம் 33/1-3)

இப்பாடல் வேட்டுவக் குடியினர் காட்டில் வாழ்ந்தனர் என்பதையும் வேட்டையாடி மானிறைச்சி கொண்டு வந்ததையும் கூறுகிறது.

வேட்டுவர் காட்டில் வாழ்ந்தனர் என்பதைப் பெருங்கதை நூலும் உரைக்கிறது. அவர்கள் காட்டில் கடுமையான வாழ்க்கை வாழ்ந்தனர்:

‘காட்டகத் துறையும் கடு வினை வாழ்க்கை
வேட்டுவர்’ பெருங்கதை, உஞ்சை காண்டம் (வரி 107 -108)

வெட்சிச் செடிகள் நிறைந்த காட்டில் வேடர்களால் விரட்டப்பட்ட மதங்கொண்ட யானை புகலிடம் இல்லாமல், காட்டில் மணியோசையை எழுப்பி, பொன்னின் தூள்கள் சிதறி மிளிருமாறு, வெகு விரைவாக ஓடும் நெடிய மலைப் பக்கத்தில் உள்ள நாட்டில் சென்றது. இதனைப் பின்வருமாறு புறநானூறு எடுத்துரைக்கிறது.

வெட்சிக் கானத்து வேட்டுவர் ஆட்டக்
கட்சி காணாக் கடமா நல்லேறு
கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிரக் (புறம்.202)

இதுவரை கூறியவற்றிலிருந்து முல்லைநிலத்திலும் வேட்டுவர் வாழ்ந்தனர் என்பது அறியமுடிகிறது.

வேட்டுவனும் ஊரும்

குடபுலவியனார் பாண்டிய நெடுஞ்செழியனைப் பாடிய பாடலில் வேட்டுவர் பற்றிய செய்தி தெளிவாகிறது. உயர்ந்த தகைமைப் பண்பு

கொண்டவன். பந்தலில் இடையன் தன்னிடமுள்ள நெய்யை ஊற்றி ஏற்றிவைத்த சிறிதாகக் கொழுந்து விட்டு எரியும் விளக்கொளியில் பாணரின் யாழிசையைக் கேட்டுக்கொண்டு நாணத்தோடு அமர்ந்திருக்கும் பெருந்தகை. குமிழும் பழும் போல வெள்ளை வாயைக் காட்டிச் சுவைத்துக்கொண்டு அமர்ந்திருக்கும் நெடுந்தகை. வெண்முத்துக்கள் உதிர்ந்துகிடக்க, வலிமையான கால் நட்ட பந்தலுக்கு அடியில் இருக்கும் நெடுந்தகை.

"இரும்புலி வேட்டுவன் பொறிஅறிந்து மாட்டிய
பெருங்கல் அடாரும் போன்ம் என விரும்பி,
முயங்கினேன் அல்லனோ யானே!" (புறம் 19)

அவன் ஊர் சீறூர் அவனது ஊர்மக்கள் வேட்டுவர். வேட்டுவ மக்கள் ஆண் காட்டுப்பூனைப் போல் வெகுண்டு நோக்கும் பார்வையை உடையவர்கள். கயந்தலை (யானைக்குட்டி) போலத் தலையை உடையவர்கள். பறவைகளை வேட்டையாடி அதன் கறியைத் தின்று புலவுநாற்றம் வீசும் வாயை உடையவர்கள். வெளுத்த வாயினை உடையவர்கள். இவர்கள் அந்த வேடர்களின் மக்கள். விரும்பிப் போற்றும் மக்கள். துணையாகச் சேர்ந்தே விளையாடும் மக்கள். தாமே வில்லும் அம்பும் செய்துகொண்டு விளையாடுவர். சிறிய இலையை உடையது உடைமரம். அதில் கூர்மையான வெண்ணிற முள் இருக்கும். ஊகம் எனப்படும் நாணாத்தட்டை அவர்களுக்கு அம்பு. அந்த அம்பின் நுனியில் உடைமுள்ளைச் செருகி வைத்திருப்பர். வலார் என்பது வளைந்து நிமிரக்கூடிய மலார் என்னும் கோல். அதனை வளைத்துக் கட்டி வில் செய்துகொள்வர். கருப்பை என்னும் காட்டு எலியை வேட்டையாடக் குறி பார்ப்பர். இப்படிப்பட்ட பின்புலம் தழுவிக் கிடப்பதுதான் அந்த வல்லாளன் ஊர். என்று பாடியுள்ளார்.

முடிவுரை

சங்க இலக்கியப் பாடல்களை அணுகும்போது வேட்டுவர் என்னும் குடி தொல்காப்பியம் குறிப்பிடும் குறிஞ்சித் திணைநில மக்களைக் குறிக்கவில்லை. சங்க இலக்கியப் பதிவுகளில் காட்டில் வாழும் மக்களே வேட்டுவர் என்பது அறியமுடிகிறது. மேலும் வேட்டுவர் என்னும் சொல் அதிகமாகப் புறநானூற்றிலே காணமுடிகிறது. வேட்டுவர் என்போர் மன்னர்களாகவும் வள்ளல்களாகவும் வாழ்ந்து மக்களையும்

புலவர்களையும் பாதுகாத்துள்ளனர். வேட்டுவர் என்பது வேட்டையாடிய இனம் அல்ல. பிற விலங்குகளைப் பாதுகாக்கவும் போருக்காவும் வேட்டைத் தொழிலைத் திறம்பட கற்றிருந்தவர்களே என்பதும் அறியமுடிகிறது.

துணை நூல்கள்:

1. தொல்காப்பியம், பொருளதிகாரம்
2. புறநானூறு மூலமும் உரையும், உ.வே.சா.பதிப்பு,
3. பெருங்கதை , கழக வெளியீடு
4. http://tamilconcordance.in/TABLE-sang.html

சங்க இலக்கியம் காட்டும் வேட்டுவர்களின் தொழில்நுட்ப ஆளுமை

முனைவர் ஜா. கிரிஜா
உதவிப் பேராசிரியர்,
ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஜல்லடம்பேட்டை, சென்னை -100.
அலைபேசி : 9360358157
malairani1981@gmail.com

முன்னுரை

திணை வாழ்வியலை முன்னெடுத்து இயற்கையோடு இணைந்து வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஐந்நிலப் பகுப்பில் ஒவ்வொரு நிலப் பகுப்பிற்கும் திணைப்பெயர்கள் வழங்கப்பட்டிருந்ததைச் சங்க இலக்கியங்கள் வழி அறியலாம். திணைநிலத் தொழில்களில் ஒன்று வேட்டைத் தொழில். அத்தொழிலைச் செய்தவர்கள் வேடன், வேட்டுவன் என்று அழைக்கப் பட்டனர். அவர்களின் தொழில்நுட்ப ஆளுமை குறித்து இக்கட்டுரை முன்னெடுக்கிறது.

வேட்டுவர் என்ற சொல்

பழந்தமிழ் இலக்கியங்கள் வேட்டுவக் குடியினரை வில் எயினர், வில் கானவர், வில்லர் போன்ற சிறப்புப் பெயர்களில் பதிவு செய்துள்ளன. இக்குடி சார்ந்த போர் வீரர்கள் மழவர், மறவர், வயவர், கூளியர் போன்ற பெயர்களிலும் அழைக்கப்பட்டனர். இத்தொல்குடி மரபினர் கல்வெட்டுகளில் பூலுவர், காவலன், வேட்டுவர், மாவலியர், வேடர், வேட்டைக்காரன் போன்ற பெயர்களில் குறிக்கப்பட்டுள்ளனர்.

வேட்டுவர் என்ற சொல் ஒரு குடிப் பெயராக இருந்து வந்துள்ளது என்பது இலக்கியம் மற்றும் கல்வெட்டுகள் வழித் தெரிந்துகொள்ள முடிகிறது.

வேட்டுவர்களின் சிறப்பு

தொல்குடி மரபினைச் சார்ந்த இச்சமூகத்தினரைச் சங்க இலக்கியங்கள் மட்டுமல்லாது பிற்காலத்தில் தோன்றிய பெரிய புராணமும் சிறப்பித்துரைக்கிறது. பெரியபுராணத்தில் வரும் கண்ணப்பநாயனார் வரலாறு வேட்டுவத் தலைவனான திண்ணப்பன் பற்றியதாகும். இப்புராணக் கதை மூலம் வேடுவர்கள் வீரம், செய்யும் தொழிலோடு மனமும் ஒன்றிணைத்துச் செயல்படும் ஆற்றல் கொண்டவர்கள் என்பதினையும் அறியலாம். 'வீரத்தாலொரு வேடுவனாகி' என்ற தேவாரப் பாடல் வரியும், "கண்ணப்பர் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என்னப்பன் என்னையும் ஆட்கொண்டருளி" என்ற திருவாசக வரியும் இத்தொல்குடி மக்களின் ஆளுமைத் தன்மையை விளக்குகின்றன.

வேட்டுவத் தொழில் நுட்பம்

வேட்டைக்குச் செல்வோர் அதற்குத் தேவையான கருவிகளுடன் செல்லுதல், காட்டில் வேட்டை விலங்குகள் இருக்கும் இடத்தை அறிதல், வலையைச் சரியாக விரித்தல், பார்வைப் பறவை அல்லது விலங்கைச் செலுத்துதல், பதுங்கியிருக்கும் விலங்கை வெளிக்கொணர்தல், வலையில் சிக்கியவுடன் அஞ்சாது பாய்ந்து தாக்குதல் போன்ற பல்வேறு கூறுகளுடன் விளங்குவது வேட்டைத் தொழிலாகும். இதனை,

"செம்பொறிக் கேற்ற வீங்கிறைத் தடக்கையின்
வண்ண வரிவில் ஏந்தி அம்புதெரிந்து
....
முளைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி
திளையாக் கண்ண வளைகுபு நெறிதர"

(குறிஞ்சிப்பாட்டு.123-132)

என்று கபிலர் குறிஞ்சிப்பாட்டில் அழகுறச் சித்திரித்துள்ளார்.

பார்வைப் பறவை அல்லது விலங்கைச் செலுத்தும் காட்சி

வேட்டைக்குப் புறப்பட்டுச் சென்ற வீரர்கள் தங்கள் தொழில் நுட்பங்களில் ஒன்றாக, பார்வைப் பறவை அல்லது விலங்கைச் செலுத்தும் மரபைக் கைக்கொண்டிருந்தனர். இதனை நற்றிணைப்பாடல் காட்சி படுத்துகிறது. பார்வைப் பறவையின் சூழ்ச்சியால்

துணையிடமிருந்து நீங்கிச் சென்ற கணந்துள் என்னும் பறவை ஓரிடத்தே தனித்திருந்து கூவியது. இக்காட்சியினைக் குடவாயிற் கீரத்தனார்,

"படுவலை வேட்டுவன் பார்வையின் ஒரீஇ
நெடுங்காற் கணந்துளம் புலம்புகொள் தெளவிளி"
(நற்றிணை.212:1-2)

எனப் பதிவுசெய்துள்ளார்.

வெண்குருகைப் பார்வைப் பறவையாக வேட்டுவன் பயன்படுத்தியதை நற்றிணை 312 - ஆம் பாடலும் குறிப்பிடுகிறது.

அம்புகளால் வேட்டையாடல்

வேட்டுவச் சிறுவர்களும் வேட்டுவத் தொழிலை அறிந்திருந்தனர். அவர்கள் மரத்தின் முள்ளை அம்பாக எய்யும் தொழில் ஆளுமையில் சிறப்புப் பெற்றிருந்தனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது. பறவை இறைச்சிகளைத் தின்று புலவு நாறும் வாயுடைய வேட்டுவரது சிறுவர்கள் ஊகம் புல்லின் ஈர்க்கில் உடை மரத்தின் முள்ளை அம்பாக வைத்துப் பருத்திக்காட்டு வேலிப்புறத்தில் எலியைக் குறிபார்த்திருப்பர் என்பதினை,

"வெள்வாய் வேட்டுவர் வீழ்துணை மகாஅர்
சிறியிலை உடையின் சுரையுடை வால்முள்
ஊக நுண்கோற் செறித்த அம்பின்,
வலாஅர் வல்வில் குலாவரக் கோலிப்,
பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலம் தழீஇய அங்குடிச் சீறூர்க்" (புறநானூறு .324:3 - 8)

என்றுரைக்கிறது. வேட்டை நாயைப் பயன்படுத்துதல்

"கான் உறை வாழ்க்கை, கத நாய், வேட்டுவன்
மான் தசை சொரிந்த வட்டியும்" (புறநானூறு. 33 :1 -2)

என்ற புறநானூற்று வரிகள் வேட்டைக்கு நாய்கள் பயன்படுத்தியதைப் புலப்படுத்துகின்றன.

வேறுபட்ட மணங்கமழும் தேன் ஒழுகும் கண்ணியை உடைய வனான வேட்டுவன், விரைந்தோடும் நாய்களுடன் பல மலைகளையும்

கடந்து சென்றான் என்று அகநானூறு 28 - ஆம் பாடலும் வெளிப்படுத்து கின்றது.

வேட்டை நாயை அழைப்பதற்கும் ஊது கொம்பினை ஊதும் வழக்கம் இருந்துள்ளது. இதனை,

ஊதல் வேண்டுமாற் சிறிதே வேட்டொடு
வேய்பலில் அழுவத்துப் பிரிந்தநின்
நாய்பயிர் குறிநிலை கொண்டகோடே
(அகம்.318:13-15)

என்னும் அகநானூற்றுப் பாடல் அடிகளால் அறியலாம்

வேடவர் இல்லத்துத் தூண்களில் வேட்டை நாய்கள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்தன என்ற

"கடும் துடி தூங்கும் கணை கால் பந்தர்
தொடர் நாய் யாத்த துன் அரும் கடி நகர்"
(பெரும்பாணாற்றுப்படை. 124 -125)

பாடல்வரிகள் மூலம் வேட்டைக்கு நாயைப் பயன்படுத்தும் நுட்பம் வேட்டைத்தொழிலின் நுட்பங்களில் ஒன்றாக இருந்து வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

விலங்குப் பொறிகளைப் பயன்படுத்துதல்

அக்காலத்தில் வேட்டுவர்கள் பொறிகளை உருவாக்கும் நுட்பத்தையும் அறிந்திருந்தனர். நற்றிணை 98 - ஆம் பாடல் முள்ளம் பன்றியைப் பிடிப்பதற்குப் பொறி பயன்படுத்தியதைப் பின்வரும் பாடல் வெளிபடுத்துகிறது:

"எய்ம் முள் அன்ன பரூஉ மயிர் எருத்தின்
செய்ம்மம் மேவல் சிறு கட் பன்றி
ஓங்கு மலை வியன் புனம் படீஇயர், வீங்கு பொறி
நூழை நுழையும் பொழுதில், தாழாது" (நற்றிணை. 98 : 1 -4)

பெரும் புலியைப் பொறி வைத்துப் பிடிக்கும் தொழில் நுட்பத்தை,

"இரும் புலி வேட்டுவன் பொறி அறிந்து மாட்டிய
பெருங் கல் அடாரும் போன்ம்" (புறநானூறு.19 : 5 - 6)

என்ற வரிகள் சுட்டிக்காட்டுகின்றன.

பிற வேட்டுவக் கருவிகள்

உடும்பை ஈட்டியால் குத்தி வேட்டையாடல், வளைதடியால் முயலை எறிந்து பிடித்தல் போன்றவும் வேட்டைத்தொழிலில் இருந்தது என்பதை நற்றிணை 59 - ஆம் பாடல் புலப்படுத்துகின்றது. வலை விரித்து வேட்டையாடலை நற்றிணை 189, 212 - ஆம் பாடல்கள் பதிவுசெய்துள்ளன. கவண் கற்களைக் கொண்டு வேட்டையாடும் வழக்கத்தைக் குறுந்தொகை 272 - ஆம் பாடலும், கலித்தொகை 22 - ஆம் பாடலும் விளம்புகின்றன.

தினை உணங்கலைப் பரப்பிக் கண்ணி வைத்து அவற்றை உண்ணும் கோழி, புறா முதலியவற்றைப் பிடித்தல் அக்கால வேட்டை மரபாக இருந்து வந்துள்ளது என்பனவும் இலக்கியங்கள் வழியாக அறியமுடிகின்றது.

முடிவுரை

வேட்டுவர்கள் தங்கள் வேட்டைத் தொழிலுக்குப் பறவை மற்றும் விலங்குகளைப் பழக்கும் விலங்கியல் அறிவு, கருவிகள் செய்து வேட்டையாடும் இயந்திர அறிவு ஆகியவற்றையும் பெற்றிருந்தனர்; வில்லாற்றலில் சிறந்து விளங்கினர். விலங்குகளையும் பறவைகளையும் அழிக்கும் எண்ணத்தில் அவர்கள் வேட்டைத் தொழிலில் ஈடுபடவில்லை என்பது சங்க இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது. மேலும் அவர்கள் வேட்டையில் கிடைத்த பொருள்களைப் பண்டமாற்றாகக் கொடுத்துத் தனக்குத் தேவையான பொருள்களையும் வாங்கியுள்ளனர்; வீரமும் மன உறுதியும் கொண்டு வாழ்ந்தனர் என்பனவும் வேட்டுவர் என்னும் தொல்குடியினர் குறித்து இலக்கியங்கள் வழியாக அறிந்து கொள்ளமுடிகின்றன.

துணைநூற் பட்டியல்

1. இராகவய்யங்கார் இரா. குறுந்தொகை விளக்க உரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னை, 1947.
2. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் - பொருளதிகாரம் - கழகம், சென்னை, 1977.
3. சோமசுந்தரனார் பொ.வே., சிலப்பதிகாரம் விளக்க உரை, கழகம், சென்னை, 1972.

4. பின்னத்தூர் நாராயணசாமி அ., நற்றிணை நானூறு உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1967.

5. ராஜம் மர்ரே எஸ்., சங்க இலக்கிய தொகுதிகள், (நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு, பாட்டும் தொகையும்) நியுசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1981.

6. வையாபுரிப்பிள்ளை எஸ்., பாட்டும் தொகையும், பாரி நிலையம், சென்னை, 1947.

வேட்டுவர்குல மெய்யடியார்களும் அவர் தம் மெய்யுணர்வுகளும்

முனைவர் சி. உமா சாரதா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சேலம் - 05.
அலைப்பேசி ; 8870331203
sivasaradha025@gmail.com,

அறிமுகம்

எல்லாம் வல்ல இறைவனின் படைப்பில் மனிதன் மகத்துவமானவன். இயற்கை சூழ்ந்த நிலையில் வாழ்வினை வடிவமைத்துக்கொள்ள தனி மனிதனாக மட்டுமல்லாமல் கூட்டமாக வாழத் தொடங்கினான். மனிதன் தன் கூட்டத்திற்கான பெயர், தொழில், வாழ்வியல்முறை தனி அடையாளம் எனத் தகவமைத்துக் கொண்டு வாழத்தொடங்கினான். அவ்வகையில் உருவானவைகளில் ஒன்று வேட்டுவர் குலம். பெருமைமிக்க தொல்குடி வரலாற்றினை உடையது வேட்டுவர் குலம். வேட்டுவரின மக்கள் ஆளும் தலைவர்களாகவும், பேரரசர்களால் பெரும் சிறப்பு பெற்றவர்களாகவும் இருந்துள்ளனர். நீர்வளம் பெருக்கிய நேயர்களாகவும், கூத்துக் கலையில் வல்லவர்களாகவும், உழவுத் தொழில் செய்து வேளாளர்கள் எனப் பெயர் சிறப்பும் பெற்று விளங்கியுள்ளனர். அதோடு மட்டுமல்லாமல் ஆலய திருப்பணிகளிலும் தொடர்ந்து தங்களை ஈடுபடுத்தி வந்துள்ளனர். சிலர் கோயில் முழுவதையும் கட்டும் திருப்பணி செய்துள்ளனர். சிலர் கோயில் திருப்பணி நடைபெறும் பொழுது பெருந்திருவாசல், நிலை கால்தூண், போதிகை, முகவனை, நிர்மாலியத்கொட்டி, அர்த்தமண்டபம், மகா மண்டபம், பாவக்கால் மண்டபம் ஆகியவற்றைக் கொடையாகக் கொடுத்துள்ளனர். வேட்டுவர் சமுதாய ஆண்களும் பெண்களும் பல கோயில்களில் விளக்குகள் எரிய கொடை கொடுத்துள்ளனர். இதற்கெல்லாம் குன்றின் மேல் இட்ட விளக்காக வேட்டுவற்குலத்தில்

அவர்தம் முன்னோர்கள் மெய்யாடியார்களாக மெய்யுணர்வுகளுடன் இறைப்பணி செய்துள்ளனர். அவ்வகையில் வேட்டுவர்குல மெய்யடியார்களும் அவர்தம் மெய்யுணர்வுகளும் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மெய்யடியார்கள்

மெய்யடியார்கள் மெய்யடிமை திறமற்றவை அனைத்தும் மெய்யடிமைத் திறத்தால் வெல்லப்படும் என்பது ஆன்றோர் வாக்கு. குறுகிய நோக்கங்களைக் கடந்து நிற்பவரே மெய்யடியார்கள். அவர்கள் இறைவனுடைய ஆற்றலுக்கு உட்பட்டவர்கள். உலகியல் மரபுகளை பெரிதென இவர்கள் கருதுவதில்லை. மெய்யடியார்களைப் பற்றி நாரதர் பக்தி சூத்திரம் அத்தியாயம் எட்டில், ‘‘தழுதழுத்த குரலுடன் மெய்சிலிர்ப்போடும் கண்களில் நீர் பெருகவும் அவர்கள் தம்முள் உரையாடுவர். தாங்கள் பிறந்த குடிகளையும் உலகத்தையும் அவர்கள் தூய்மையுறச் செய்கின்றனர்’’ (68), என்றும் ‘‘பிறப்பு, கல்வி, அழகு, குடி, செல்வம், தொழில் போன்றவற்றால் ஏற்படும் உயர்வு தாழ்வுகள் அவர்களுக்கு கிடையாது’’(72)[1] என்றும் நாரதர் தன் பக்தி சூத்திரத்திரம் அத்தியாயம் 8-இல் குறிப்பிட்டுள்ளமை மெய்யடியார் களுக்குத் தக்க சான்றாக அமைகிறது.

இடங்கழி நாயனார்

‘‘மடல் சூழ்ந்த தார் நம்பி இடங்கழிக்கும் அடியேன்’’ எனத் திருத்தொண்டத் தொகையில் பாடப்பட்ட இடங்கழி நாயனார் சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் நாயன்மார்களில் ஒருவர். தில்லையம்பத்தானுக்கு பொன்வேய்ந்த ஆதித்தனுக்கு முன்னோராக யாதவர் குல ஆய்வேளிர் குடியில் பிறந்தவர். கோனாட்டின் தலைநகர் ஆனிய கொடும்பாளூரில் வேளிர் குலத்து அரசாட்சி செய்துவந்தவர். பிற்காலத்தில் வேளிர் என்ற ஒற்றை அடையாளத்தில் நிலை பெற்றனர். கொடும்பாளூர் யாதவ வேளிர்கள் சோழர்களுடன் இணைந்து இருந்தனர் என்பதை வரலாறு உறுதிப்படுத்துகின்றது. ஆய்வேளிர் குலத்தில் பிறந்தவர் மன்னர் இடங்கழி நாயனார் என்று அபிதான சிந்தாமணி நூல் விளக்குகிறது. இவன் விஜயாலய சோழன் குடிப்பிறந்தவன் என்பதைப் பெரியபுராணம் கூறுகிறது. இவர் சிவபெருமானுக்குத் திருவடித் தொண்டு புரிவதைக் கடமையாகக் கொண்டிருந்தார். இவரது ஆட்சிக்காலத்தில் சைவ நெறியும் வைதீக

நெறியும் வளர்ந்தது. திருக்கோயில்கள் எங்கும் வழிபாட்டு அர்ச்சனைகள் விதிப்படி திகழச் செய்தார். இவர் ஆட்சிக்காலத்தில் சிவனடியாருக்கு உணவளிக்கும் தவமுடைய அடியார் ஒருவர் உணவு சமைத்ததற்குரியன எதுவும் கிடைக்காமல் செய்வதறியாது அரண்மனையில் நெல்லைக் களவு செய்தார். அந்நிலையில் காவலர்கள் அவரை இடங்கழி மன்னர் முன்னிறுத்தினர். மன்னர் விசாரித்த நிலையில் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்யப் பொருளின்மையால் நான் இவ்வாறு செய்தேன் என்றார். அது கேட்டு மனமிறங்கிய மன்னர் சிவனடியார்களுக்கு எனது நெருப்பண்டாரம் மாத்திரமின்றி நிதிப்பண்டாரங்களையும் கவர்ந்து கொள்க என எங்கும் பறையறிவித்தார். அருள் வேந்தராகிய இவர் தன் நிலையால் நெடுங்காலம் திருநீற்றின் ஒளிபொருந்த ஆட்சிபுரிந்து சிவபாதம் அடைந்தார்.

கண்ணப்ப நாயனார்

வேட்டுவர் குலத்தில் பிறந்தவர் கண்ணப்ப நாயனார். ‘‘கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்’’[3] என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ’’தொண்டு செய்து நாளாறில் கண்ணிடந்து அப்பவல்லேன் அல்லன்’’[4] என பட்டினத்தாரும் கண்ணப்பரைக் குறிப்பிடுகின்றனர். மேலும் மாணிக்கவாசகர் தனது திருவாசகம் திருக்கோதும்பி பகுதியில் ’’கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என்னையும் ஆட்கொண்டருளி’’[5] என்று கூறுகிறார். அதாவது கண்ணப்பரின் அன்புக்கு ஒப்பாக அன்பு காட்ட இயலாத எனக்கும் இறைவன் அருள்செய்தார் என்று கூறுகிறார். நாணன், காடன் என்ற நண்பர்களோடு வேட்டையாடச் சென்றபோது காளத்தி மலையில் இலிங்கத்தைக் கண்டார். அன்று முதல் வாயில் நீர் சுமந்து வந்து அபிஷேகம் செய்தும் தலையில் சொருகி வந்த மலர்களாலும் இலைகளாலும் அர்ச்சனை செய்தும் பக்குவப்படுத்தப்பட்ட பன்றி இறைச்சியைப் படைத்தும் வந்தார். இதைக் கண்டு சிவக்கேசரியார் என்னும் பிராமணர் மனம் வருந்தி இறைவனிடம் முறையிட்டார். கண்ணப்பரின் அன்பினைக் சிவக்கேசரியாருக்கு உணர்த்த சிவலிங்கத்தின் கண்களில் குருதி வருமாறு செய்தார் சிவபெருமான். அதைக் கண்ட திண்ணனார் பச்சிலையிட்டு மருத்துவம் பார்த்தார். அப்பொழுதும் அடங்காத குருதியினை நிறுத்த தன் கண்களில் ஒன்றினை அம்பினால் அகழ்ந்து லிங்கத்தில் கண்ணிருக்கும் இடத்தில் இட்டார். லிங்கத்தின் வலக்கண்ணில்

வரும் குருதி நின்று இடக்கண்ணில் குருதி வழியத் தொடங்கியது. மற்றொரு கண்ணையும் அகழ்ந்தெடுக்க முற்பட்டபொழுது சிவபெருமானால் நில் கண்ணப்பா என மும்முறை கூறித் தடுத்தாட் கொள்ளப்பட்டார்.

நரசிங்கமுனையரைய நாயனார்

சைவ சமய மெய்யடியார்களில் நரசிங்க முனையரைய நாயனார் மின்ன வேட்டுவ குலத்தின் குறுநில மன்னர் மரபிலே வந்தவர். இவர் பகைவரை வென்று தீதகலச் செய்தவர். சிவனடியார்களின் திருவடி அடைதலே அரும்பேறென அடியாரைப் பணிந்தவர். சிவன் கோயிலின் செல்வங்களைப் பெருக்கிக் காத்தலைச் சிறப்பாகச் செய்தவர். சிவத்திருத் தொண்டுகளைக் கனவிலும் மறவாமல் கடமையாகச் செய்து வந்தவர். திருவாதிரை நாளன்று சிவபெருமானுக்குப் பூசை செய்து அன்றையதினம் அடியார்கள் ஒவ்வொருவருக்கும் நூறு பொன் குறையாமல் கொடுத்து திருவமுது அளித்து வழிபட்டு வந்தவர். எவர் ஆயினும் திருநீறு அணிந்தவர்கள் உய்ய வேண்டும் என்ற எண்ணம் உடையவர். நரசிங்கமுனை அரையார் சடையனாரிடம் நம்பியாரூரை வளர்த்ததற்குரிய அருள் தருமாறு வேண்டினார். நம்பியைப் பெரும் செல்வம் எனக் கொண்ட நரசிங்கமுனையார் அவரை வளர்த்து வந்தவர். இவ்வாறு அன்பர் பணி செய்து நம்பியை வளர்க்கும் பேரு பெற்றமையாலே இறைவனது திருவடி நிழலில் சேர்ந்து மீளாத நிலை பெற்றார்.

புகழ்ச் சோழ நாயனார்

புகழ்ச் சோழ நாயனார் சோழ வேட்டுவ குலத்தினைச் சார்ந்தவர். உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவர். சிவனடியார்களின் மீது இருந்த பற்றின் காரணமாக, போரில் வென்றோர்களின் தலைகளில் ஒன்றாக அடியார் தலை இருப்பதைக் கண்டு கருவூரில் பெருந்தீ ஏற்படுத்தி அதில் அடியாரின் தலையைத் தட்டில் வைத்துச் சென்று உயிர் துறந்தவர்.

கோச்செங்கோடு சோழ நாயனார்

கோச்செங்கோடு சோழ நாயனார் சோழ வேட்டுவ குலத்தில் உறையூரில் பிறந்தவர். சிவபெருமானது திருவருளினாலே முன்னைப் பிறப்பின் உணர்வோடு பிறந்து சைவத்திருநெறி தழைக்க தன்னாட்டில் சிவாலயங்கள் பலவற்றைக் கட்டும் திருப்பணிகளை மேற்கொண்டார்.

முற்பிறப்பில் சிலந்தியாக இருந்து இறைவன் திருவடிமேல் நூலால் பந்தரிழைத்து அருள் பெற்ற வரலாற்றினை அறிந்தவராக அங்கு இறைவன் வீற்றிருக்கும் ஞான சார்புடைய வெண்ணாவல் மரத்தின் உடனே கூத்தம்பெருமாள் வீற்றிருந்தாலும் அதனைப் பெருங்கோயிலாக அமைத்தார். அமைச்சர்களை ஏவி சோழ நாட்டின் உள்நாடுகள் தோறும் சிவபெருமான் அமர்ந்தருளும் அழகிய திருக்கோயில்கள் பலவற்றை அமைத்து கோயில்களில் நிகழும் பூஜைக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து உதவினான். பின்னர் இறைவன் திருவடியை ஏற்றுத் தில்லைப்பதத்தை அடைந்து பொன்னம்பலத்தின் திருவடிகளை வணங்கி, போற்றி அங்குத் தில்லைவாழ் அந்தணர்களுக்குத் திருமாளிகைகள் கட்டுவித்து, பின்னும் பல தீர்ப்புகள் செய்து கொண்டிருந்து தில்லையம்பலவாணர் திருவடி நீழலை அடைந்தார்.

நிறைவுரை

வேட்டுவர் தொன்மைக் காலத்தில் மலை விவசாயமும் வேட்டையும், தேன் கிழங்கு சேகரிப்பும் என புராதான பொருளாதார செயல்பாடுகளை கொண்டிருந்தனர். மூல இனக்குழு நாகரிகத்தில் இருந்து இவர்கள் காலச்சக்கரத்தில் மெல்ல மெல்ல தங்களைத் தகுந்த முறையில் உயர்த்திக் கொண்டனர். நல்லார் ஒருவருக்கு செய்த உபதேசம் கல் மேல் எழுத்து போல் காணுமே என்ற கூற்றுக்கு ஏற்ப இவர்களின் சமுதாயப் பணிகளும் வளர்ச்சி நிலையும் வியக்கத்தக்கன. இவர்களுள் கருவில் திருவுடையோரும் வாழ்வின் நுண்பொருள் அறிந்தவர்களாகவும் இருந்துள்ளனர். வேட்டுவர் குலத்தில் அவதரித்த மெய்யடியார்களின் மெய்யுணர்வுகளும் திருப்பணிகளும் அறிந்து கொள்வது நாம் பெற்ற பெரும்பேறாகும். மனிதனின் உயிர் நோக்கத்தினை அடைய வழிகாட்டும் வரலாற்றினை அறிந்துணர்ந்து வாழ்வில் உய்வோமாக.

பார்வை நூல்கள் :

1. செ.இராசு, வேட்டுவர் சமூக ஆவணங்கள், ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை, ஈரோடு.
2. எம்.ஆர்.தங்கமணி, வேட்டுவர் குலங்களும் குலதெய்வக் கோயில்களும், கரூர்.

3. டி.எம்.பி. மகாதேவன், மெய்யடியார்கள், சென்னைப் பல்கலைக்கழகம் ஜெமினி பிரசுரம், சென்னை - 06 ஆகஸ்ட் 1959.

4. அ. ச. பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதர், நாரதர் பக்தி சூத்திரம், பத்தி வேதாந்த கட்டளை வெளியீடு.

5. ஆ.சிங்காரவேலு, அபிதான சிந்தாமணி, மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு, டில்லி ஏசியன் எஜுகேஷன், 11-ஆம் பதிப்பு 2008.

6. சி. எஸ். முருகேசன், சித்தர் பாடல்கள் பெரியஞானக் கோவை, சங்கர் பதிப்பகம், சென்னை 49.

7. புலவர் பி.ரா.நடராசன், திருவாசகம்(உ.ஆ), உமா பதிப்பகம், சென்னை 01.

பெரியபுராணத்தில் வேடர் வாழ்வியல்

முனைவர் யாழ். சு. சந்திரா
இணைப்பேராசிரியர் & தலைவர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த),
அலைபேசி: 9843267403
yazh.chandra@gmail.com

முன்னுரை

திருத்தொண்டர் புராணம் என்றழைக்கப்படும் பெரியபுராணத்தில் அரசர், வணிகர், அந்தணர், வேளாளர், மாமத்திரர், ஆதிசைவர், ஏகாலியர், புலையர், குயவர், பாணர், இடையர் எனப் பல இனத்தாரும் குறிப்பிடப்படுவது போல் வேடர் ஒருவரும் சுட்டப்படுகிறார். அவர், "கலை மலிந்த சீர்நம்பிக் கண்ணப்பர்" ஆவார். அவ்வகையில் புராணம் வழி வேடர் வாழ்வியலை ஆய்கிறது இவ்வரைவு.

வேடுவர்

வேடர் என்பது தொழில் பற்றி வரும் பெயராகும். இதனை, பெயரும் வினையும் என்று இருவகையாகத் திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே (தொல்.அகத்.20) என்ற தொல்காப்பிய நூற்பாவழி பெறலாம். மேலும், ஆயர், வேட்டுவர் என்பன ஆடூஉ திணைப்பெயர் (மேலது.21) எனவும் உரைப்பர். இதற்கு உரை கூறும் உரையாசிரியரும் திறனாய்வாளரும் முல்லைநிலப் பெயர் என்பதனைவிடப் பாலைக்கும் உரிய மக்கட்பெயர் என்பது பொருத்தமானது எனவும், கானவர், வேட்டுவர், குறவர் என்பன குறிஞ்சி நில மக்கள் பெயர் எனவும் உரைப்பது எண்ணுதற்குரியதாகும். (அருணாசலம்பிள்ளை.மு. (தொ.ஆ) ஆகவே, குறிஞ்சி நிலமாம் மலையும் மலைசார்ந்த நிலத்தில் இருந்தவர் வேட்டுவர். இவரைக் கானவர் எனச் சுட்டுவதும் தமிழ் மரபாகும்.

வாழிடம்

சேயோன் மேய மைவரை உலகம் எனக் குறிஞ்சிநில வேடர் வாழிடத்தைத் தொல்காப்பியர் குறிப்பிடுவார். அதற்கேற்ப வேடர் குலத்தவரான கண்ணப்பர் வாழிடம் பெரியபுராணத்தில் மலைப் பகுதியாகச் சுட்டப்படுவது எண்ணற்குரியதாகும்.

கண்ணப்பரது நாடான பொத்தப்பி நாட்டை "நித்தில அருவிச் சாரல் நீள்வரை சூழ்ந்த பாங்கர்" என விவரிப்பார் சேக்கிழார். இதற்கான உரைக்குறிப்பில் காளத்திமலைச் சாரலுக்கு வடக்கே 40-50 நாழிகையில் உள்ளது குறிஞ்சிப் பகுதியைச் சேர்ந்த மலைநாடு என உரையாசிரியர் குறிப்பிடுவார் (சுப்பிரமணியமுதலியார் சி.கே., (உ.ஆ) திருத்தொண்டர் புராணம் (இரண்டாம் பகுதி ப.829)

கண்ணப்பரது தந்தை வேடர் குலத்தலைவனாம் நாகன் குறிச்சியில்(8:4); மலைகள் ஆளும் மறக்குலம்; (29:4) வாழ்வதாகச் சுட்டும் சேக்கிழார் வேடர்கள் குடியிருப்பை, சீறூர் என்பது குறிஞ்சி நிலத்து ஊர்களின் பெயர், ஏற்றமும் இழிவுமாயுண் நில அமைப்பினாலும், காடுகள் சூழ்வதாலும் மருத நிலத்திற் போலப் பெரு நகரங்கள் குறிஞ்சி நிலத்தில் அமைத்தல் இயலாது. சிற்சில மலைகள் கூடிய தொகுதிகளால் அங்கங்கு அமைத்து வாழ்வார், அந்நிலமக்கள் ஆதலின் இவை சீறூர் - சிறுகுடி எனப் பெயர் பெறும் என்ற உரைக்குறிப்பு மலைவாழ் வேடர்களின் வாழிடம் பற்றிய உரையாசிரியரின் விளக்கம் ஆகும். (மேலது.ப.8:34) மேலும் அகன்குடி என்ற சொல்லாட்சி வேடர் குலத்தின் தொன்மையையும் சுட்டுகிறது. மேலும் புறச்சிறுகாண் (25:4) பெருங்குறிச்சி (43:2) மலையுறை மாக்கள் (33:4) நித்தில அருவிச் சாரல் என வேடர் வாழிடம் கண்ணப்பர் புராணத்திலும் சுட்டப்படுகிறது.

மலைப்பகுதிகளிலும் மலைச்சாரலிலும் குடியிருக்கும் வேடுவர் குடியிருப்புகள் சீறூர், குறிச்சி எனப் பெயர் பெறுகிறது. இப்பகுதிகளில் உள்ள வேடுவர் வாழிடத்தைச் சேக்கிழார்,

> **"குன்றவ ரதனில் வாழ்வார் கொடுஞ்செவி ஞமலி யார்த்த**
> **வன்றிரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்**
> **பன்றியும் புலியும் எண்கும் கடமையும் மானின் பார்வை**
> **அன்றியும் பாறை முன்றில் ஐவனம் உணங்கும் எங்கும்"** (3)

என விவரிக்கிறார்.

வேடர் உணவு

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்பதற்கேற்ப உணவே உயிர் வளர்க்கிறது. மலையுறை வாழ்பவர்களாகிய வேடர் உணவையும் பக்திப்பாவலர் தமது புராணக் காப்பியத்துள் சுட்டுகிறார்.

கண்ணப்பரது தந்தையாகிய நாகன், தனது மகன் ஆயுதப்பயிற்சி பெறும் காலம் வந்தபோது அருகிலிருக்கும் பிற மலைகளில் உள்ள தனது உறவினரான வேட்டுவக் குடியினரை அழைத்து வில்விழா நடத்துகிறான். அந்த வில்விழாவில் வேடர்கள் உண்ணும் விருந்துணவினைச் சேக்கிழார் விவரிக்கிறார்.

ஐவன நெல்லைத் தம் வீட்டுக் கல்முற்றத்தில் உலர்த்திய வேடுவர்கள் மலைநெல், தினை, புல்லரிசி, மூங்கலரிசி ஆகியவற்றால் சமைத்த சோற்றையும் ஊனையும் கிழங்கு வகைகளையும் குன்றுபோல் குவித்துள்ளனர் (35). செந்நெல்போலச் சிறந்ததொரு தினை வகையான செந்தினையை இடித்து மாவாக்கித் தேனோடு அருந்துவார்கள்; வெந்த ஊனினையும் தேனில் தோய்த்து உண்பர்; தேன் கலந்த விளங்கனியை உருட்டி உண்பர்; பெருந்திரளாக ஈசலைக் கூட்டி உண்பர்;(36) இவ்வாறு காடுறைப் பொருளையே வேடுவர் உணவாகக் கொள்வதன் சிறப்பு புலப்படுமாறு, வெவ்வேறு அந்தமில் உணவின் மேலோர் (15:4) என்கிறார். அதாவது விருந்து என்பதால், அளவில்லாமல் அளவிற்கு மேல் உண்டனர் என்றார். மேலும், இயல்வகை உணவு (16:2) என்பது செயற்கை முறையில் இல்லாத இயற்கை உணவு இது என்றும் சுட்டுகிறார்.

சிறுவர் உலகம்

பயக்குறை மக்களை இல்லோர்க்கு இல்லை தாம் வாழ்நாளே என்பது புறநானூறு. அவ்வகையில், நாகனும் தந்தையும் மனமொத்து வாழ்ந்தபோதும் இவர்க்கு இனிப் புதல்வப்பேறு அரிது எனப் பிறர் சுட்டும் முதுமையை அடைந்தனர். ஆயினும் செவ்வேல் முருகவேளைப் பராய்க்கடன் செய்து நாளும் வழிபட்டமையால் - தவத்தின் பயனால், நிறைமதி போன்ற கண்ணப்பரை உவரிக்கடல் ஒத்த தத்தை ஈன்றாள் எனச் சேக்கிழார் கண்ணப்பராம் வேட்டுவரின் பிறப்பை உரைக்கிறார். இந்தக் குழந்தை வளரும் பான்மையில், வேட்டுவச் சிறுவர் உலகம் பெரியபுராணத்தில் விரிகிறது. தனது வீட்டு முற்றத்தில் பார்வை

மிருகமாகக் கட்டப்பட்டிருக்கிற புலியின் அகன்ற வாயினைக் குகையெனக் கருதித் தனது சிறுகையை வாயினுள் நீட்டி விளையாடுகிறார். (23:1-4) உடுக்கை போன்ற குறட்டினை உருட்டி விளையாடுவதும் கட்டப்பட்ட நாயின் கயிற்றை அறுத்து விடுவிப்பதும் வேட்டுவச் சிறுமியினர் கட்டிய சிறு வீடுகளைத் தமது சிற்றடியால் சிதைப்பதும் (24). கண்ணப்பரது குழந்தைப் பருவ விளையாட்டு களாகும்.

முயல், காட்டுப்பன்றி, புலி, செந்நாய் ஆகியவற்றின் குட்டிகளை விரட்டிப் பிடித்துத் தன் வீட்டு முற்றத்தின் மரத்தில் கட்டி விளையாடுகிறார். (26) தாயாலும் செவிலியாலும் சீராட்டிப் பாராட்டி வளர்க்கப்படும் திண்ணன் அவ்விருவரும் உணவூட்ட உணவினை உண்கிறார். இவ்வாறு சின்னஞ் சிறுவனாகிய திண்ணனாரின் சிறுவர் உலகம் இளம் விலங்குகளோடு கழிகிறது எனலாம்.

தவறு செய்கிறபோது பொய்க்கோபத்தோடு தந்தை கண்டிப்பதும், தாய் வாரி முத்தமிட்டு அணைத்துக் கொள்வதும் நிகழ்கிறது. இவ்வாறு, வேட்டுவச் சிறுவர்களின் உலகம் விலங்குகள், இளங்குட்டிகள் ஆகியவற்றோடு நிரம்பி வழிகிறது.

அணியும் அடையும்

வேட குலத்தவர்கள், மலைக்காட்டில் வாழ்பவர்கள். அவர்கள் விலங்குகளின் தோலை ஆடையாகவும், அவற்றின் பல், நகம் போன்றவற்றை அணிகலன்களாகவும், பறவைகளின் இறக்கைகளைக் கிரீடமாகவும், தழைகளையும் இலைகளையும் மாலையாகவும் அணிந்தனர்.

திண்ணனாரின் தாயாராகிய தத்தையை அறிமுகப்படுத்தும் சேக்கிழார், அவள் புலிப்பல் தாலியை அணிந்தவளாகவும் சங்குகளைக் கோத்து மாலையாக அணிந்தவளாகவும், மயிலின் தோகையையும் சில தாவரங்களின் தழை, இலைகளை மலர்களோடு சேர்த்து மாலையாக அணிந்தவளாகவும் இருந்தாள் என்பார்.(9)

பெற்றோரின் பெருந்தவத்தால் பிறந்த திண்ணனார்க்குச் சிறுவயதிலேயே குஞ்சியை முடித்துப் புலிப்பல்த் தாலியை அணிவிக்கின்றனர். ஏனைய மணிகளோடு சேர்ந்து சலங்கை ஒலிக்கக் காசுடன் கூடிய காப்புக் கயிறுகளைக் கட்டியிருந்தனர். கால்களில்

சலங்கைகள் கட்டப்பட்டிருந்தன. நாய்க்காசு, செப்புக்காசு முதலியவற்றை இணைத்து அரைஞாண் கயிற்றில் கோர்த்திருக்கின்றனர். காப்புக்காக வேப்பங் கொட்டையை அரைஞாண் கயிற்றில் கோர்ப்பர் (20-21)

இடையில் விலங்குகளின் தோலையே ஆடையாக அணிந்திருப்பர். காலில் அணியும் செருப்பும் தோலே ஆகும். இவ்வாறு, காட்டுச்சூழலில் உள்ள பொருள்களையே அணியாகவும் ஆடையாகவும் அணிகிற மரபு வேடர் குலத்தில் உள்ளது.

வழிபாட்டுச் சடங்குகள்

உலகின் தொல்குடிகளான வேடர்கள் மலையுறைக் கடவுளை வணங்கினர். அந்த வகையில், நாகனும் பிற வேடர்களும் சேயோனாம் முருகனையே வழிபடுகின்றனர். இதனையே, பிள்ளைப்பேரற்ற நாகன் முருகலர் அலங்கச் செவ்வேள் முருகவேள் முன்றில் சென்று வழிபட்டான்; நாள்தோறும் பராய்க்கடன் பூண்டு வழிபட்டான் (10%11). அந்நெறியில் சேவற் கோழிகளையும், மயில்களையும் காணிக்கையாகக் கொடுத்தான். மணிகளையும், கடப்ப மாலைகளையும் தோரணமாகத் தொங்கவிட்டான் (18). குரவைக் கூத்தாடியும், அணங்காடல்; செய்தும் முருகனை வணங்கினான். இதன் பயனாய்ப் பிள்ளைப்பேறு வாய்த்தது.

திண்ணன் பிறந்தபிறகும் வரையுறைக் கடவுளைக் காப்பாக வழிபட்டு வேப்பந்தழைகளுக்கிடையே கட்டப்பட்ட பலகறை மணிக்கோவையைக் கட்டி வழிபட்டான். இறைவனுக்குப் படையலிட்டதோடு உறவினர்களை அழைத்துப் பெருவிருந்துக்கு ஏற்பாடு செய்தான்.

திண்ணனான குழந்தை வளரும் பருவத்தில் வளம்மிக்க திருவிழாக்களோடு தெய்வங்களுக்குப் பெருமடைகளைப் பலியாகக் கொடுத்து, வழிபாடாற்றினான் (19). பின்னர், திண்ணனுக்குத் தக்க பருவம் வந்தபோது வில் பயிற்சியை அளிக்க குலமுதற் வஞ்சியாகிய தேவராட்டியை அழைத்து வழிபாடும் விழாவும் எடுத்தான். இதனை, “பல்பெருங் கிளைஞர் போற்றப் பராய்க்கடன் பலவுஞ் செய்து வில்விழா வெடுக்க” (31:3-4) என்பார். பின்னர் வேடர் குலத்தலைமைப் பொறுப்பைத் திண்ணனுக்கு அளிப்பதற்கும் கடவுளை வழிபட்டு கன்னிவேட்டைக்குத் திண்ணனை அனுப்புகிறான். அப்போதும் கடவுளை வழிபட்டு, தேவராட்டியை வணங்கி ஆசிபெற்றே செல்கிறார்

(65,66). பின்னர், பன்றியைத் துரத்திச் சென்ற திண்ணன் குடுமித் தேவரைக் கண்டு ஊனும், உள்ளமும் உருக வழிபட்டு கண்ணிடந்து அப்பியமை புராண வரலாறு.

மருத்துவ அறிவு

மலைவாழ் வேடர்கள் வேடர் குடித் தலைவனாகப் பொறுப்பேற் பதற்குத் தன் வேட்டைத் திறனை வெளிக்காட்ட கன்னிவேட்டையாடச் செல்கிறான் திண்ணன். ஆனால், காளத்தி மலையின் குடுமித் தேவர் திண்ணனின் உள்ளம் கவர் கள்வனாகிறார். வேட்டுவர் குல வழிபாட்டு மரபின்படி ஊனினை நன்றாக நெருப்பில் சுட்டு இறைவனுக்குப் படைத்தான். ஏற்கனவே, வழிபாடு செய்து வந்த சிவகோச்சாரியாருக்கு உண்மையை உரைக்க விரும்பிய இறைவன் தனது வலது கண்ணிலிருந்து இரத்தம் ஒழுகச் செய்தார். அதனைக் கண்டு பதறிய திண்ணனார் பல்வேறு காடுகள் சென்று மருந்து மூலிகைகளைப் பறித்துக் கொண்டு வந்து காளத்தினாதரின் குருதி வழிந்த கண்ணில் பிழிந்தார் (171).

மருந்தினால் திருக்காளத்திக் கொற்றவர் கண்ணில் வழிந்த புண்ணீர் குறைவுபடவில்லை. யோசித்த திண்ணன் உற்றநோய் தீர்ப்பது ஊனுக்கு ஊன் என்ற முடிவுக்கு வருகிறார்(172). ஊனுக்கு உற்ற நோய் தீர்ப்பது ஊன் என்பது வேடர்களுக்குள் வழங்கிவரும் பழமொழிகளுள் ஒன்று. இவர்களது குலத்தொழிலாகிய வேட்டைப் போரில் பலகாலும் உடற்பகுதிகள் சிதையும். இவ்வாறு சிதைந்து ஊறுபட்ட போதும் பிற மனித உடல்களிளேனும் பிற விலங்கு முதலியவற்றிலேனும் அவற்றிற்கு ஒத்த பகுதிகள் பெற்று இரத்தச் சூடு மாறாமுன்னம் சிதைந்த பகுதிகளை ஒட்டிப் புணண்ணாற்றுவது என்பது ஒருவகை மருத்துவ முறை.(சுப்பிரமணிய முதலியார். சி.கே.(உ.ஆ), மு.நூ, ப.1309) இது வேடர்தம் மரபு மருத்துவமாகும். இம்மருத்து வத்தையே திண்ணனார் காளத்தியப்பருக்குக் கண்ணப்பராய் உய்திபெற்றார்.

தொகுப்புரை

- வேட்டைத் தொழில் செய்பவர் வேடர் என வினை அடிப்படையில் வேடுவர் பெயர் பெறுபவர்.

- கானவர், வேட்டுவர், குறவோர், இறவுளர், மறவர், எயினர் எனப் பல பெயர்களால் வேடர்களைச் சேக்கிழார் சுட்டுகிறார்.
- குறிச்சி, சீறூர் எனப் பெயரிய ஊர்களில், விளாமரம் சூழ்ந்தும் கற்பாறைகளை முற்றமாகக் கொண்டும் வேடர் குடில் அமைக்கப்பட்டுள்ளது.
- ஐவனம், மலைநெல், புல்லரிசி, மூங்கிலரிசி, ஆகியவற்றைச் சோறாகச் சமைத்தும், செந்தினையை மாவாக இடித்தும் ஊனினைச் சுட்டும் தேனோடு கலந்து உண்பர்; ஈயலையும் உண்பர். வேடர்களது உணவு, இயல்வகை உணவு எனப்படும் மண்ணில் விளையும் இயற்கை உணவாகும்.
- புலி, செந்நாய், காட்டுப்பன்றி, முயல் ஆகிய பார்வை விலங்கு களையும் அவற்றின் குட்டிகளையும் தங்கள் வீட்டு முற்றத்தில் கட்டிவைத்து வேடர்குலச் சிறுவர்கள் விளையாடுவர்.
- புலி முதலிய மலைவாழ் விலங்குகளின் பல், நகம் முதலியவற்றையும் வேப்பங்கொட்டைகளையும் மணிகளாகக் கோர்த்து அணிவர். மயில் முதலிய பறவைகளின் இறகுகளையும் வேடர்கள் அணிந்து கொள்வர். இளம் தளிர்களிலும் மலர்களையும் மாலைகளாக அணிவர். விலங்குகளின் தோலை ஆடையாகக் கொள்வர்.
- வேட்டுவர்களது வழிபடுதெய்வம் மலையுறைக் கடவுள் முருகன். விலங்குகளைப் பலியிட்டும், தேன், கிழங்கு முதலியவற்றையும் படைத்து வழிபடுவர். பிள்ளைப்பேறு வேண்டியும், குழந்தைப் பிறப்பு, வித்தைகற்றல் என வாழ்வின் எல்லா நிலைகளிலும் வேடர்கள் உறவினர்களோடு கூடியும் விருந்துணவு உண்டும் குரவையாடியும் சடங்குகளோடு முருகனை வழிபடுவர்.
- காடுறை வாழ்வினை உடைய வேடுவர்கள் இயற்கை மூலிகை முதலியவற்றைப் பயன்படுத்தி, காயங்களை ஆற்றும் மருத்துவ அறிவு உடையவர்களாக உள்ளனர்.

துணை நூல்கள்

1. அருணாசலம் பிள்ளை.மு., (தொ.ஆ), தொல்காப்பியம் - அகத்திணையியல் - உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழக, வெளியீடு, 1994.

2. சுப்ரமணியன் ச.வே.(உ.ஆ) தொல்காப்பியம் தெளிவுரை (கையடக்கப் பதிப்பு), மணிவாசகர் பதிப்பகம், 1998.

3. சுப்ரமணிய முதலியார்.சி.கே., (உ.ஆ) திருத்தொண்டர் புராணம் (பகுதி 2), சேக்கிழார் நிலையம் , 2001.

4. பட்டுச்சாமி ஓதுவார்.தி.,(உ.ஆ) திருத்தொண்டர் புராணம் (உரைநடை), திருப்பனந்தாள், வெளியீடு 2009.

சிலப்பதிகாரம் வேட்டுவவரி காட்டும் வேட்டுவரின் வாழ்வியல்

முனைவர் ஜெ.சுந்தரபாண்டியன்
கௌரவ விரிவுரையாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி(த), மதுரை -2.
அலைப்பேசி : 89400 73539

முன்னுரை

தமிழ்ச் சமூகத்தின் தொடக்கநிலை வரலாறு வேட்டைச் சமூகத்திலிருந்து தான் தொடங்குகிறது. இனக்குழுச் சமூகத்தின் தலைமைத்துவப் பண்புகளைக் கட்டமைப்பது தொடங்கி, சமூக இயக்கத்தின் தொடக்கமாகவே வேட்டைச் சமூகம் விளங்குகிறது. எளிய வாழ்க்கைமுறை, காவல் காக்கும் தன்மை, உணவு சேகரித்தல், இறைவழிபாட்டு முறை, பகிர்ந்தளித்தல் தன்மை, வீரப்பண்பு ஆகியவை சிலப்பதிகாரம் காட்டும் வேட்டுவர்களின் வாழ்வியல் முறைகளாக அமைகின்றன. இதனை முன்றுத்தி இவ்வாய்வுக் கட்டுரையானது அமைகிறது.

வேட்டுவர் - பண்பாடு

எளிய வாழ்க்கை முறையைக் கொண்டுள்ள வேட்டுவர்கள் புறச்சூழலின் தன்மைக்கேற்ப, தன்னைத் தகவமைத்துக் கொள்கின்றனர். ஆயினும் தங்கள் பண்பாட்டைத் தொடர்ந்து விட்டுவிடாமல் கடத்தியுள்ளனர். இதனை, "வேட்டுவர் முதலிய வகுப்பினர் ஓர் உணவும் விளையாத கடுங்கோடைக் காலத்தில் வாழ்வை மேற்கொள்ள நேர்ந்தது. அங்ஙனம் நேரினும் பண்பாட்டைக் கைவிடவில்லை. தெய்வ வணக்கம், எளியார் பொருளைக் கவராமை, புலவரையும் முனிவரையும் போற்றல், விருந்தோம்பல், அரசப்பற்று, ஈகையாளரைக் காத்தல் முதலிய நற்கொள்கைகளைக் கடைப்பிடித்தனர்"[1] என்று தேவநேயப்பாவாணர் கூறுவது குறிப்பிடத்தக்கது.

மக்கள் இனங்களில் பாகுபாட்டுத் தன்மைகளும் புவியியல் அமைப்புக்கு ஏற்றவாறே அமைந்திருக்கின்றன. அவ்வடிப்படையில் விவசாயிகள், மேய்ச்சல் தொழிலை மேற்கொள்வோர், வேட்டை யாடுபவர், கடற்கரைவாழ் மக்கள், பாலைவனத்தில் வாழ்பவர்கள் எனப் பகுக்க முடியும். அவ்வகையில் வேட்டுவத்தின் பண்பாடு தனித்த நிலையில் அடையாளம் பெறுகிறது.

சிலம்பு காட்டும் வேட்டுவர் வாழ்வியல்

மதுரைக் காண்டத்தில் இரண்டாவது பகுதியான வேட்டுவ வரி - கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் இளைப்பாறு கின்றனர். அவ்விடத்தில் சாலினி தெய்வமுற்று கண்ணகி வாழ்வின் பின் நிகழ்வுகளைக் கூறுகிறாள். அதன்பிறகு வேட்டுவ வரிப்பாடல் பாடி கூத்தாடுகின்றனர். இவ்விடத்தில் வேட்டுவரின் வாழ்வியல் வெளிப்படுகின்றது.

வாழ்வில் வெற்றியினை அடையும்போது மனம் உந்தப்பட்டு இயல்பு நிலையிலிருந்து மேல் எழுந்து மகிழ்ச்சி அடைவது இயல்பான ஒன்றாகும். அவ்வெற்றியின் அடையாளத்தைக் கூத்தாக ஆடுவது இங்கு வெளிப்படுகிறது. தன் குலத்தின் பெருமையை விளக்கும் இடத்தில்,

பொற்றொடி மாதர் பிறந்தகுடிப் பிறந்த
விற்றொழில் வேடர் குலனே குலனும் (சிலம்பு வேட்டுவ :89-90)

என்ற பாடலடியில் வில் தொழிலில் வல்ல வேட்டுவராகிய எம்குலமே சிறந்த குலம் என்று பாராட்டுவது வெளிப்படுகிறது.

வேட்டுவர் குலத்தைச் சிறந்த குலம் என்று சிலப்பதிகாரத்தின் வேட்டுவவரிப் பகுதி சிறப்பிக்கிறது. மேலும் குறிப்பட்ட நிலத்திற்கு, குறிப்பிட்ட வாழ்வியல் ஒழுக்க நெறி என்று உறுதியிட்டுக் கூறமுடியாது. ஏனென்றால் அரசர்களிடம் இருந்து விலகி நின்ற வேட்டுவர் குலத்தைச் சிறந்த குலம் என்று சிலப்பதிகாரத்தின் வேட்டுவவரிப் பகுதி சிறப்பிக்கிறது.

வேட்டுவர் குலத்தைச் சிறந்த குலம் என்று சிலப்பதிகாரத்தின் வேட்டுவவரிப் பகுதி சிறப்பிக்கிறது. மேலும் குறிப்பட்ட நிலத்திற்கு, குறிப்பிட்ட வாழ்வியல் ஒழுக்க நெறி என்று உறுதியிட்டுக் கூறமுடியாது. ஏனென்றால் அரசர்களிடம் இருந்து விலகி நின்ற மேலும் குறிப்பட்ட நிலத்திற்கு, வேட்டுவர் குலத்தைச் சிறந்த குலம் என்று சிலப்பதிகாரத்தின்

வேட்டுவவரிப் பகுதி சிறப்பிக்கிறது. மேலும் குறிப்பட்ட நிலத்திற்கு, குறிப்பிட்ட வாழ்வியல் ஒழுக்க நெறி என்று உறுதியிட்டுக் கூறமுடியாது.

ஏனென்றால் அரசர்களிடம் இருந்து விலகி நின்ற குறிப்பிட்ட வாழ்வியல் ஒழுக்க நெறி என்று உறுதியிட்டுக் கூறமுடியாது.

ஏனென்றால் அரசர்களிடம் இருந்து விலகி நின்ற வேட்டுவர் குலத்தைச் சிறந்த குலம் என்று சிலப்பதிகாரத்தின் வேட்டுவவரிப் பகுதி சிறப்பிக்கிறது. மேலும் குறிப்பட்ட நிலத்திற்கு, குறிப்பிட்ட வாழ்வியல் ஒழுக்க நெறி என்று உறுதியிட்டுக் கூறமுடியாது. ஏனென்றால் அரசர்களிடம் இருந்து விலகி நின்ற நிலத்தின் இனக்குழுவினர் தான் இதற்குக் காரணமாக இருந்துள்ளனர். ஆகையால்தான் மூங்கிலாலான எய்யும் வில்லினை உடைய இனக்குலமே தனிச்சிறப்புடையது எனச் சிலப்பதிகாரம் பகர்கிறது. இதனை,

ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த ஆய்தொடி நல்லாள்
பிறந்த குடிப்பிறந்த ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த
வேய்வில் எயினர் குலனே குலனும்!
(சிலம்பு வேட்டுவ :97-98)

என்று பாடல் கூறுகிறது.

பரிணாமப் படிநிலைகளில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தவையாக, உணவு சேகரிக்கும் கட்டம், வேட்டை ஆடுவோர் மற்றும் மீன்பிடிப்போர் கட்டம், மேய்ச்சல் தொழில் சார்ந்த நாடோடித் தன்மையைத் துணைமைக் கூறாகக் கொண்ட குலக்குழு உழவர் கட்டம், வேளாண் சமூகங்களுடைய கட்டம், தொழில் மையச் சமூகம் மற்றும் நவீன நகராக்கம் என்னும் கட்டம்[2] என்று கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் கூறுவது பொருத்தப்பாடுடையது. வீரம் முதன்மைப் பொருளாகக் கொள்ளப்படுவதால் அதனைச் சார்ந்தே வேட்டுவரின் வாழ்வியல் தொடங்குகிறது. வீரத்தினைப் பெற்றுத்தரும் கருவியாகிய வில்லினை,

பொறா மறவன் கைவில் ஏந்திப்

..

கொடியெடுத்துக் கொற்றவையும்
கொடுமரமுன் செல்லும் போலும்!

என்ற பாடல் வரி இயங்குகிறது. வேட்டுவன் வில்லினை எடுத்துவிட்டால் கொற்றவை வெற்றியைத் தருவாள். வில்லின் முன்னைப்பினை அமர்ந்து, அவனுக்குத் துணையாகச் செல்வாள் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

வேட்டையிலிருந்து கிடைப்பவற்றை அனைவருக்கும் கொடுத்து வாழும் தன்மையில் வாழ்வியலின் அறப்பண்பு வெளிப்படுவதைக் காணலாம். தன்னைச் சார்ந்தோரின் வாழ்க்கை நலனிலே தன்னுடைய நலனும் அடங்கியிருக்கிறது என்பதை இது பறைசாற்றுகிறது. பகிர்ந்தளிக்கும் பண்பின்வழி மேம்பட்ட சமூக விழுமியத்தை வேட்டுவரின் வாழ்க்கை நமக்குக் கற்றுத் தருகிறது. இதனை,

“தலைநாளை வேட்டத்துத் தந்தநல் ஆன்நிரைகள்
கொல்லன் துடியன் கொளையுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர் தம் முன்றில் நிறைந்தன”

என்று வேட்டுவவரி எடுத்துரைக்கிறது.

வாழ்வில் ஒற்றைக் குறிக்கோளுடன் பயணிக்கும் மனித இனம் தங்களைத் தாங்களே தகவமைத்துக் கொள்ள வேண்டிய தேவையிருக்கிறது. இதற்கு, தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்கிறான். அதற்கு இசையும், ஆட்டமும் பாட்டமும் உறுதுணை புரிகிறது. இது வேட்டுவரின் வாழ்வியலில் இடம்பெறும் உயரிய மதிப்பீடாக அமைகிறது. இதனை,

“பாலைநில மக்கள் வேட்டுவர், எயினர், மறவர் எனப்பட்டனர். ஐயை, கொற்றவை என்பவை இவரின் தெய்வங்கள் ஆகும். கொற்றவை முன் ஆடிப் பாடுவது என்பது தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்து வதற்காகச் செய்தனர்”[3] என்று அ.கா பெருமாள் கூறுகிறார். இது குறித்து,

“துடியொடு சிறுபறை வயிரொடு துவைசெய
வெடிபட வருபவர்”

என வேட்டுவவரி விளக்குகிறது.

ஆராய்ந்து, திட்டமிட்டுச் செயல் வெற்றி பெற்ற சமூகக்குழு, மேலும் தன்னை அடுத்த நிலைக்கு உயர்த்தச் சிறிது மனமகிழ்வும் கொண்டாட்டமும் தேவையாகிறது. அதனைத் தங்கள் வாழ்வின் பெருமையாகக் கருதுகின்றனர். எனவே, கூத்து ஆட்டத்தைத் தொடங்கி

உடலையும் மனதையும் வாழ்வின் அடுத்த நிலைக்கு நகர்த்துகின்றனர். வாழ்வியலில் தவிர்க்க இயலாத போரும் அதனைச் சார்ந்த பிறவகைச் செயல்பாடுகளும் தொடர்ந்து அவர்களை விவேகத்துடன் இயங்கச் செய்கிறது என்பதே மறுக்க இயலாத உண்மையாகும்.

நிறைவுரை

வாழ்க்கையை இல்லறம் துறவறம் என்ற அடிப்படையில் பிரித்து எண்ணுங்கால் சமூகக் கடமையும் பொறுப்பும் இருவகை வாழ்விலும் தேவையாகிறது. காதலும் போரும் தவிர்க்க இயலாத ஒன்றாகவே சமூக அமைப்பில் காணப்படுகின்றன. சமூகத்தின் அடுத்த இயங்கு தளத்திற்கும், பரிணாமத்திற்கும் வேட்டுவர்களின் இயங்கு சக்தி தேவையான ஒன்றாக இருந்திருக்கிறது. வேந்தனை மையப்படுத்திய சமூகப் போக்கை நகர்த்திவிட்டு வேட்டுவரின் சமூகக்குழு ஆய்வைத் தொடங்கினால் இக்குடியின் தலைமைத்துவமும் சமூக நகர்வும் வாழ்வியலின் அடுத்த நிலையையும் அறிந்து கொள்ள முடியும்.

மேற்கோள் குறிப்புகள்

1. ஞா. தேவநேயப் பாவாணர், பண்டைய தமிழ் நாகரிகமும் பண்பாடும், ப. 218.
2. கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைச் தமிழ்ச் சமூகம், வரலாற்றுப் புரிதலை நோக்கி, ப. 172.
3. அ.கா.பெருமாள், தமிழக வரலாறும் பண்பாடும், ப. 48. முதன்மை நூல் 1. புலியூர்க்கேசிகன் - சிலப்பதிகாரம் (தெளிவுரை), பாரி நிலையம் சென்னை, பாரி நிலையம் சென்னை, பாரி நிலையம் சென்னை, இரண்டாம் பதிப்பு -2009.

துணைநூற் பட்டியல்:

1. கந்தையா பிள்ளை.ந.சி., தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், சந்தியா பதிப்பகம், முதல்பதிப்பு - 2005, சென்னை.
2. கார்த்திகேசு சிவத்தம்பி., பண்டையச் தமிழ்ச் சமூகம், வரலாற்று புரிதலை நோக்கி, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், சென்னை, இரண்டாம் பதிப்பு - 2017. தேவநேயப் பாவாணர்
3. தேவநேயப் பாவாணர்.ஞா.,

3. தேவநேயப் பாவாணர்.ஞா., - பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், தமிழ் வளரச்சி இயக்கம்தமிழ் வளரச்சி இயக்கம், சென்னை, சென்னைதமிழ் வளரச்சி இயக்கம், சென்னை, , தமிழ் வளரச்சி இயக்கம், சென்னை, முதற் பதிப்பு - 2014.

4. பெருமாள்.அ.கா, தமிழக வரலாறும் பண்பாடும், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், சென்னை, நான்காம் பதிப்பு - 2024.

இலக்கியங்களில் வேடுவர்களின் வாழ்வியல்

முனைவர் சு. காளீஸ்வரி,
கௌரவ விரிவுரையாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைகல்லூரி (த), மதுரை -02.

முன்னுரை

சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் வேடர்களின் வாழ்வியல் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் மறக்குடி மக்களின் வழிபாடு பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. கம்பராமாயணத்தில் குகனை 'நாவாய் வேட்டுவன்' என்று கம்பர் குறிப்பிடுகிறார். குகன் சார்ந்த சமுதாயத்தின் வாழ்க்கையைக் கம்பர் விரிவாகப் பேசவில்லை. இராமன் மீது குகன் கொண்ட அன்பின் திறத்தினையே கம்பர் மையப்படுத்தி உள்ளார். இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்களை நுணுகி நோக்கும்போது வேடர்களின் வாழ்வியலை விரிவாக அறியும் வகையில் எந்த நூலும் அமையவில்லை. சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் 63 நாயன்மார்களின் வரலாறுகளைக் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் பல இனங்களைச் சார்ந்தவர் ஆவர். அவர்தம் சமுதாய வாழ்க்கையைக் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார். எனினும் கண்ணப்ப நாயனார் புராணத்தில் கண்ணப்பர் பிறந்த வேடுவ குலத்தின் வாழ்வியலை விரிவாகப் பேசி செல்லும் பாங்கைப் காணமுடிகிறது. இந்நிலையில் இலக்கியங்களின் வாயிலாக அறியப்படும் வேடுவர் வாழ்வியல் பற்றிய செய்திகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வேட்டுவர் யார்?

வேட்டுவர் எனப்படுவோர் இலங்கைக் காடுகளில் வேட்டையாடி வாழும் வாழ்க்கையைப் பழக்கமாகக் கொண்டு வாழும் மனிதர்கள் ஆவர். இவர்கள் இலங்கைக்கு வேறு எந்த நாட்டில் இருந்தும் வந்து குடியேறாதவர்கள் என்பதால் இவர்கள் இலங்கையின் பழங்குடி மக்களும்

ஆவர். இவர்கள் இலங்கைக்கு ஆரியரின் வருகைக்கு முன்னரே இலங்கையின் வரலாற்றுக் காலம் முதல் வசிப்பவர்கள் என்றும் இவர்கள் தென்னிந்தியப் பழங்குடி மரபினருடன் ஒத்தத்தன்மை கொண்டவர்கள் என்றும் வில்ஹெய்ம் கெய்கர் தெரிவித்துள்ளார்.[1] இலங்கைக் காடுகளில் வசிக்கும் இவர்கள் சாதாரண மனிதர்களின் வாழ்க்கைக்குப் பண்படாதவர்களாக, காடுகளில் வேட்டையாடி வாழ பழக்கப்பட்டவர்கள் என்பதால் வேடுவர் என அழைக்கப்பட்டாலும் அண்மைக் காலங்களாக சாதாரண மனித வாழ்க்கை முறைக்கு தம்மை மாற்றிக்கொண்டு இலங்கையில் வாழும் ஏனைய சமுதாயத்தினரை போன்று வாழும் நிலைக்கு மாறி வருகின்றனர். இருப்பினும் தற்போதும் காட்டு வாழ்க்கைக்கே பழக்கப்பட்டவர்களாக வேடுவராக வாழ்வோரும் உள்ளனர் எனும் செய்திகள் உள்ளன.[2] இவர்கள் எந்த பொருட்களையும் எண்ணுவதற்கு விரல்களுக்கு பதில் காடுகளில் கிடைக்கும் சிறிய குச்சிகளைச் சேகரித்து அதன் மூலம் கணக்கிடுகிறார்கள்.[3]

போரை விரும்பிச் செய்தவர்களை வேட்டுவர் என்று அழைத்தனர். தொல்காப்பியர் இவர்களை வேட்டுவக் குடியினர் என்று அழைத்தார். சங்க காலத்தில் வேட்டுவக் குடியினரை நாண்(வில்லில் இருக்கும் கயிறு) உடை மாக்கள் வேள்மாக்கள், வேந்து மாக்கள் என்று அழைக்கப்பட்டனர்.

"காட்டு மாவும் உறுகண் செய்யா வேட்டு ஆங்கு" (பெரும்-43)

"வேட்டுபுழை அருப்பம் மாட்டி காட்ட" (முல்லை- 26)

"தூறு இவர் துறகல் போல போர் வேட்டு
வேறு பல் பூனையோடு உழிஞ சூடி" (பட்டி- 234- 235)

"வெம் திறல் இளையவர் வேட்டு எழுந்து ஆங்கு"
(நற்றிணை- 11:5)

"குவளை குறுநர் நீர்வேட்டு ஆங்கு" (நற்றிணை- 332:2)

"இரை வேட்டு எழுந்த சேவல் உள்ளி" (254:3)

"உடன் பெய்தோரே அழல் வேட்டு அஅவி" (பரிபாடல்- 5:41)

வாய் ஆக யாம் கூற வேட்டு ஈவாய் கேள் இனி"
(கலித்தொகை- 93:16)

"நாள் வேட்டு எழுந்த மள்ளர் கையதை" (அகம் 187:22)

"தான் வேண்டு மருங்கின் வேட்டு எழுந்து ஆங்கு"
(புறம்- 52 /4)

வேட்டுவரின் வாழ்க்கை நிலை

வேட்டுவர்கள் தங்கள் ஊரினைச் சுற்றி முள்வேலிகளைச் சுற்றி இருப்பார்கள் என்பதையும், ஆயர்களின் குடியிருப்புகள் காட்டுப்பகுதியில் அமைந்திருந்தன என்பதையும் குறவர்கள் மலையில் தங்கள் குடியிருப்புகளை அமைத்திருந்தனர் என்பதையும் சிலப்பதிகாரம் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

"கையெடுத்து ஓச்சிக் கானவர் வியப்ப,
இடுமுள்வேலி எயினர் கூட்டு உண்ணும்" (சிலப்பதிகாரம்- 9 :10)

மனிதன் தனது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பொருளாதாரம் மிக இன்றியமையாத பங்கு வகிக்கின்றது. வேட்டுவர்கள் பாலை வழியில் செல்லக்கூடியவர்களிடம் உள்ள பொருட்களைக் கொள்ளை அடித்துக் கிடைக்கும் பொருட்களை ஆதாரமாகக் கொண்டு தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர் என்பதை

"மறக்குடித் தாயத்து வழி வளம் சுரவாது, அறக்குடி போல்
அவிந்து அடங்கினர் எயினரும்" (சிலப்பதிகாரம் -14 /15)

வேட்டுவக் குடியினரின் கொற்றவை வழிபாடு

ஆரம்பத்தில் வெட்சிப் போரின் வெற்றிக் கடவுளாக, கொற்றவையை வேட்டுவக் குடியினர் வழிபட்டார்கள். "கொற்றவை நிலையும் அஃதிணை புறனே" (பொருள்- புறத்திணை- 4/2)

தமிழகத்தை ஆண்ட அரச பரம்பரையினர் பெண் தெய்வத்தையே குலதெய்வமாக வணங்கி வந்தனர். சிலம்பின் வேட்டுவவரி வேட்டுவக் குடியினரின் கொற்றவை வழிபாடு குறித்த தகவல்களின் களஞ்சியமாக இளங்கோவடிகளால் படைக்கப்பட்டுள்ளது. வேட்டுவக் குடியினரின் வீரத்தையும், வாழ்க்கை முறையும் போர்க்கடவுளான கொற்றவையை வழிபடும் பாங்கையும் அற்புதமாகக் கூறுகிறார் இளங்கோவடிகள். "மதியின் வெண்தோடு சூடும் சென்னி நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்துப் பவள வாய்ச்சி தவளவாள்

நகைச்சி நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து அரவு நாண் பூட்டி நெடுமலை வளைத்தோள் துளைஎயிற் றுரகக் கச்சுடை முலைச்சி வளையுடைக் கையில் சூலம் ஏந்தி கரியின் உரிமை போர்த்தணாங் காகிய அரியின் உரிவை மேகலை யாட்டி சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை இரண்டுவே றுருவில் திரண்டதோள் அவுணன் தலைமிசை நின்ற தையல்" (சிலம்பு - வேட்டுவவரி: 54-66). இப்பாடலில் பிறையாகிய வெள்ளிய இதழைச் சூடும் சென்னியள். நெற்றியைத் திறந்து விழித்த இமையாத கண்ணினள். பவளம் போன்ற வாயை உடையவள். முத்துப் போன்ற ஒளி வீசும் நகையுடையவள். நஞ்சு உண்டதால் கருத்த கண்டம் உடையவள். கொடிய சினமுடைய வாசுகி என்னும் பாம்பாகிய நாணினைப் பூட்டி நீண்ட மேருவாகிய வில்லை வளைத்தவள். துணை அமைந்த பொருந்திய பல்லையுடைய நச்சரவினைக் கச்சாக அணிந்த மார்பினள். வளையல் அணிந்த கையில் சூலம் ஏந்தியவள். யானையின் தோலைப் போர்த்து அதன் மேல் சிங்கத்தின் தோலை மேகலையாக அணிந்தவள். இடக்காலிலே சிலம்பும் வலக்காலிலே வீரக்கழலும் ஒலிக்கும் சிற்றடிகளை உடையவள். எருமைத் தலையும், மனித உடலும் கொண்டு திரண்ட தோலுடன் திகழ்ந்த மகிடாசுரனைக் கொன்று அவனது தலை மேல் நிற்பவள் என்று வேட்டுவக் குடியினரின் கொற்றவை வழிபாடு பற்றி கூறப்படுகிறது.

மேலும் சிலப்பதிகார வேட்டுவவரி கொற்றவை வழிபாட்டைச் சித்தரிக்கின்றது. இவ் வழிபாட்டில் மந்திரமும் கலந்து காணப்படுகின்றது. தெய்வம் ஏறப்பெற்ற வேட்டுவகுலப் பெண்ணை கொற்றவையாக நினைத்து வழிபடுகின்றனர். சசலினி என்னும் பெண் தெய்வம் ஏறப்பெற்று அவள் கூறும் மொழிகளைத் தெய்வ மொழியாக நம்புகின்றனர். அதன்படி தங்கள் தலையினை வீரர்கள் நேர்த்திக்கடனாக கொற்றவைக்கு செலுத்துகின்றனர்.

"கலை அமர் செல்வி கடன் உணின் அல்லது
சிலை அமர் வெள்றி கொடுப்போள் அல்லல்"
(சிலம்பு- வேட்டுவ வரி -16/17)

என்ற வரிகள் இதனை உறுதி செய்கின்றன. ஆய்ச்சியர் குரவையில் பால் உறையாமல் இருப்பதையும், எருது கழுத்தில் உள்ள மணி அறுந்து நிலத்தில் விழுவதையும், தீ நிமித்தமாகக் கருதி நன்மை உண்டாக கண்ணனை வணங்குகின்றனர்.

"மாயவனுடன் தம்முன் ஆடிய
வால சரிதை நாடகங்களில்,
வேல் நெடுங்கண் பிஞ்ஞயோடு ஆடிய,
குரவை ஆடுதும் யாம் என்றாள்
கறவை கன்று துயர் நீங்குக எனவே"
(சிலம்பு- ஆய்ச்சியர் குரவை: 26-31)

என்ற அடிகளின் வாயிலாகப் புலப்படுகின்றது. பாலைநில மக்களின் பெருமை வேடுவர் - கொற்றவை ஐயைக் கோலத்தில் நிற்கின்றாள். பாயும் ஆண் சிங்கத்தில் இருப்பவளின் கோலத்தில் நிற்கின்றாள். இந்தப் பாவை செய்த தவம் என்ன தெரியுமா? வில் எய்யும் வேடர்குலம். எயினர் பிறந்த நம் குலக் கொடியில் பிறந்தவள் என்று பாலைநில மக்களான வேடுவரின் தெய்வமான கொற்றவையைப் பாராட்டிக் கூத்தாடும் செய்தியை

"பொற்றொடி மாதர் பிறந்த குடிப்பிறந்த,
வில் தொழில் வேடர் குலனே குலனும்,
பைஅரவு அல்குல் பிறந்த குடிப்பிறந்த,
எய்வில் எயினர் குலனே குலனும்,
ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த,
வேய்வில் எயினர் குலனே குலனும்"
(சிலப்- வேட்டுவ வரி- 3-4 , 7-8, 11- 12)

வேடுவர் குலமே சிறந்த குலம் என்ற செய்தியைச் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது.

முடிவுரை

- வேடுவ குலத்தின் வாழ்வியலை எடுத்துரைக்கிறது.
- வேடுவர் என்பதற்கான விளக்கமும், வேடுவர்கள் யார் என்பதை பற்றியும், வேடுவர்களின் வகைகளைப் பற்றியும் விளக்கியுள்ளது.
- வேடுவர்களின் வாழ்க்கைநிலை பற்றி விளக்கியுள்ளது.
- கொற்றவை நிலை வழிபாடு குறித்து விளக்கப்பட்டுள்ளது.
- பாலைநில மக்களின் பெருமைப் பற்றி விளக்கம் கண்டுள்ளது.

துணைநூற் பட்டியல்:

1. இலங்கையின் வேடுவர் தென்னிந்திய திராவிட மரபினர், 2009-02-15

2. இலங்கை ஆதிகுடி வேடுவர்.

3. வகுப்பறைக்கு வெளியே, விரல் விட்டு எண்ண ஆயிரம் ஆண்டுகள், தி இந்து தமிழ், அக்டோபர், 05,2016

கரூர் மாவட்ட வேட்டுவர் நடுகற்கள்

பெ.இராமலிங்கம்
M.A.,M.Sc.,M.Ed.,M.Phil.,
தலைமை ஆசிரியர் (ப.நி.) , இயக்குநர்,
தென்னிந்திய வரலாற்றுக் கழகம். கரடிப்பட்டி,
ramalingam.arasu56@gmail.com

தமிழகத்தின் மையப் பகுதியாக விளங்குவது கரூர் மாவட்டமாகும். பெயருக்கேற்ப தமிழகத்தின் மையக்கருவாக விளங்குவதால் கருவூர் என்று பண்டு அழைக்கப்பட்டது. தொல் பழங்காலத்திலிருந்தே வேட்டுவர்கள் நிறைந்த மாவட்டமாகும். கரூர் மாவட்டத்தில் பல ஊர்களின் பெயர் வேட்டுவர் பெயரால் அமைந்துள்ளது. அரவக்குறிச்சி, நாகம்பள்ளி, வேட்ட மங்கலம், வேடிச்சிபளையம், வேட்டைக்கரன் புதூர், வலையப்பட்டி, வெஞ்சமாக்கூடலூர், தென்னிலை, வலையம் பாளையம் காவல்காரன்பட்டி, நங்கவரம் போன்ற பெயர்கள் வேட்டுவர் பெயர் தாங்கி நிற்கின்றன. வேட்டுவ இனங்களான வேட்டுவக்கவுண்டர், முத்தரையர் வேட்டைநாயக்கர், கம்பளத்து நாயக்கர் பெருவாரியாக உள்ளனர். இக்கட்டுரையின்கண் உள்ள அரவக்குறிச்சி வட்ட நடுகற்கள் அனைத்தும் கட்டுரை ஆசிரியரால் கண்டறியப்பட்டதாகும்.

நடுகல்

வீரத்தையும், காதலையும் இரு கண்களாகப் பாவித்த தமிழர்கள் போர்க் களத்தில் புறங்கொடாமல் வெற்றிபெற்ற வீரனைப் போற்றினார்கள். போர்க்களத்தில் வீரன் உயிர் நீத்தால், அவன் வீரத்தைப் போற்றுவதற்கும், அவனை நினைவு கூர்வதற்கும் நடுகல் என்னும் வீரக்கல் நட்டு வாழ்த்தி வழிபட்டனர்.

நடுகல் வகைகள்

வீரமரணம் அடைந்த வீரர்க்கும், அரசர்க்கும் நடுகல் எடுக்கப்பட்டன. கணவனுடன் உயிர் நீத்த பெண்டிருக்கு நடுகற்கள் நடப்பட்டன. புலியுடன்

போராடி புலியைக் கொன்று தானும் மரணமடைந்த வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகல் 'புலிக்குத்திப் பட்டான் கல்' என்றழைக்கப்படுகிறது. இதுபோன்று பன்றி, யானை, குதிரை ஆகியவற்றுடன் போராடி வீரமரணம் அடைந்த வீரர்களுக்கும் நடுகற்கள் எடுக்கப்பட்டன.

அஞ்சாக்கவுண்டம்பட்டி நடுகற்கள்

கரூர் - ஈசனத்தம் பிரிவுச் சாலையில் ஆறு கிலோமீட்டர் தொலைவில் பண்ணப்பட்டியில் இருந்து அஞ்சாக்கவுண்டம்பட்டி செல்லும் சாலையோரம் மேற்கு நோக்கியவாறு மூன்று நடுகற்கள் உள்ளன. இவற்றில் கல்வெட்டுகள் எதுவும் இல்லை. இப்பகுதி நாயக்கர் ஆட்சிக் காலத்தில் ஆண்டிபட்டி ஜமீனுக்கு உட்பட்டதாக இருந்தது .

இராணி மீனாட்சியின் மீது ஆற்காடு நவாப் படை எடுத்துச் சென்றபோது ஆண்டிபட்டி ஜமீன்தார் பெரியதம்பி நாயக்கர் மகன் குமார பொம்மா நாயக்கன் படையுடன் சென்று போரிட்டான். அவனது படைத்தலைவனாக அஞ்சாக் கவுண்டனும் அவனது படைவீரர்களும் போரிட்டு வீர மரணம் எய்தினர். அஞ்சாமல் போரிட்டதால் அஞ்சாக் கவுண்டன் என்று பெயர் பெற்றார். ஊருக்கும் அவரது பெயரே வழங்கலாயிற்று. இவரது இயற் பெயர் குஞ்சா கவுண்டர் என்பதாகும். இவரது கல்வெட்டு ஆண்டிபட்டிக் கோட்டைத் தொடக்கப்பள்ளி அருகே உள்ள தரை மட்டப் பாறையில் உள்ளது. ஆண்டிபட்டிக் கோட்டையில் மந்தையும் மடமும் ஏற்படுத்தியதைக் குறிப்பிடுகிறது அஞ்சாக்கவுண்டம் பட்டிப் பெரியநாயகி துணை என்றும் குறிப்பிட்டுள்ளது.

அஞ்சாக்கவுண்டம்பட்டியில் உள்ள பெரிய நாயகியம்மன் கோயிலின் வலதுபுறம் ஒரு செட்டி குல வீரரனின் நடுகல் கோயிலும் கோயிலுக்கு இடதுபுறம் மேற்கு நோக்கி முத்தரைய வீரனின் நடுகல்லும் உள்ளன.

நடுகல் 1

அஞ்சாக்வுண்டன் மற்றும் அவனது மனைவிக்கும் ஒரே பலகைக்கல்லில் (நாற்கர வடிவில்)நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. வலது கையில் வாளும் இடது கையில் கேடயமும், நாயக்கர் காலக் கொண்டையுடன், அரையாடை அணிந்து அஞ்சாக்கவுண்டன் காணப்படுகிறார். இவரது வம்சாவளியினர் அய்யாசாமி முத்தரையர் அரவக்குறிச்சியில் வசிக்கிறார் .

நடுகல் 2

இந்நடுகல்லில் இரண்டு வீரர்கள் செதுக்கப்பட்டுள்ளனர். முதலாம் வீரர் வலது கையில் அம்பும் இடது கையில் வில்லும் ஏந்தியுள்ளான். அரையாடை இவனின் இடுப்பில் உடை வாள் உள்ளது. காதில் குண்டலமும் நேரான கொண்டையும் உள்ளது. கழுத்தில் அணிகலன் அணிந்துள்ளார் .

இரண்டாவது வீரர் கையில் ஈட்டி வைத்துள்ளார், இடது கையைத் தொங்க விட்டவாறும், சாய்ந்த கொண்டையுடனும் காணப்படுகிறார்.

நடுகல் 3

ஒரே பலகைக் கல்லில் வீரன் மற்றும் அவனது மனைவி இருவரது சிலைகளும் செதுக்கப்பட்டுள்ளன. வலதுபுறமுள்ள வீரரின் வலது கையில் அம்பும் இடது கையில் வில்லும் உள்ளது. குண்டலம் அணிந்த நீண்ட காதுகள், சாய்ந்த கொண்டை, இடுப்பில் அரையாடை மற்றும் உடை வாளும் உள்ளது. இடதுபுறம் உள்ள அவர் மனைவி சாய்ந்த கொண்டையுடன் காட்சி அளிக்கிறார்.

நடுகல் 4

பெரியநாயகியம்மன் கோயிலின் இடப்புறம் கிழக்கு நோக்கியவாறு நடுகல் உள்ளது. வீரனது வலதுகை ஓங்கிய வாளுடனும் இடதுகைக் கேடயத்தை ஏந்தியவாறும் உள்ளது. மார்பில் ஆரமும் நீண்ட கொண்டையுடனும் காணப்படுகிறார்; நீண்ட கால்சட்டை அணிந்துள்ளார். அரவக்குறிச்சியிலுள்ள முத்தரையர்குல மக்கள் குலதெய்வமாக வணக்கி வருகின்றனர்.

வஞ்சிவேள் அடியான் நடுகல்

கரூர் நகரில் தற்போதைய பேருந்து நிலையத்திலிருந்து ஜவகர் கடை வீதியில் கிழக்கு நோக்கி 1 கி.கீ. தூரம் சென்றால் வ.உ.சி தெரு அமராவதி ஆற்றின் வடகரையில் உள்ளது. அங்கே தற்போது பொதுமக்களால் வழிபாடு செய்து வரும் வீரனுடைய எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த நடுகல் ஒன்றுள்ளது. இந்நடுகல் தரை மட்டத்திலிருந்து 37செ..மீ உயரமும் 28 செ .மீ. அகலமும் கொண்டதாகக் காணப்படுகிறது. இந்நாடுகள் தனிக் கல்லினால் வடிவமைக்கப் பட்டுள்ளது. ஒழுங்கற்ற செவ்வக வடிவிலான இக்கல்லின் ஒருபக்கத்தில்

வாளுடன் கூடிய வீரனது புடைப்புச் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது.

வெஞ்சமரில் பட்டான் நடுகல்

கரூர் நகரின் தென்கிழக்கில் அமராவதி ஆற்றின் வட கரையில் மாவடியான் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் வரலாற்றுச் சிறப்புள்ள நடுகல் ஒன்று தற்போது மக்களின் வழிபாட்டில் உள்ளது. தரையில் இருந்து 35 செ.மீ. உயரமும் 24செ.மீ. அகலமும் கொண்ட செவ்வக வடிவிலான பலகைக் கல்லின் ஒரு பக்கத்தில் புடைப்புச் சிற்பமாக வீரனுடைய உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

வீரன் ஒருவன் தனது இடது கையினால் எதிரி ஒருவனின் கழுத்தை இறுகப் பற்றிக் கொண்டு இடது காலில் மற்றொரு எதிரியை மிதித்தபடி வலது கையில் உள்ள வாளின் மூலம் எதிரியை வீழ்த்துவது போன்று சிற்பம் வடிக்கப்பட்டுள்ளத . இச்சிற்பத்தின் மேல் பகுதியில் ,

'கோ கலியன் மவன் கருவூரிடை
தன் ஆநிரை கொளல் எறிந்துப்பட்டன்.'
(கருவூர் அகழ்வாய்வு ப- -41)

என்று இரு வரிகளில் பொ.ஆ. 8-9 - ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த எழுத்தமைதியில் தமிழ்க் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. கருவூரைச் சேர்ந்த கலியன் என்பவன் ஆநிரையை மீட்கின்ற போரில் இறந்து பட்டான். அவ்வீரனின் நினைவாக எடுக்கப்பட்டதுதான் இந்த நடுகல் .

குதிரை குத்திப் பட்டான் நடுகற்கள்

கரடிப்பட்டி நடுகல்
அரசு: கொங்குச் சோழர்.
காலம் :9-10 நூற்றாண்டு

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சிப் பேரூராட்சிக்கு உட்பட்ட கரடிப்பட்டி நன்காஞ்சி ஆற்றின் கரையில் இந்நடுகல் இருந்தது. பின் இங்கு அம்மன் கோயில் குட முழுக்கின்போது இந்நடுகல்லை அக்கோயில் மண்டபத்தில் வைத்தனர்.

இந்நடுகல்லில் உள்ள வீரனைப் பெண் தெய்வமாகக்கருதி புடவை அணிவித்துப் பூசை செய்தனர். இந்நடுகல்லை நானும் கிணத்துக் கடவு டாக்டர் சுரேந்திரனும் ஆய்வு செய்தோம்.

குதிரைக் குத்திப்பட்டன் நடுகல் என்பதை அறிந்தோம்

நடுகல்லில் உள்ள வீரன் நீண்ட கொண்டையுடனும், நீண்ட காதுகளில் குண்டலமும் அணிந்துள்ளான். இடுப்பில் வார் கச்சையும் அரையாடையும் அணிந்துள்ளான். இடது கையால் குதிரையைத் தடுத்தவாறும் வலது கையால் உடை வாளால் குத்துவது போன்றும் சிலை வடிக்கப்பட்டுள்ளது.

தோகைமலை நடுகல்

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், தோகைமலை என்ற ஊரின் மலையின் வடகிழக்குத் திசையில் மலையில் இருந்து சுமார் நூறு மீட்டர் தொலைவில் பம்படான் குல வடகரையில் பெரியசாமித் தோட்டத்தில் தனிக்கல்லில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது .

வீரனைக் குத்திக் கொன்று தானும் இறந்து பட்டான் என்ற செய்தி பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் கீழ் குதிரையில் அமர்ந்துள்ள வீரனோடு தரையில் நிற்கும் வீரன் ஈட்டியுடன் போரிடுவது போன்று வரைகோட்டு உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. தொடூரில் ஆநிரை கவர்கின்ற போரில் சேந்தனன்தனார் என்பவன் ஊரின் எல்லையில் குதிரை வீரனைக் குத்திக் கொன்று தானும் இறந்துபட்டான் என்ற செய்தி வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு

1. தொடூறு ஆண் கோலன்று
2. ஊரத்துள் குதிரை குத்
3. தி பட்டாரு சேந்த னந்தனார் (த.நா .க..தொகுதி III) ப.-137.

பவுத்திரம் நடுகல்

கரூர் கோவை நெடுஞ்சாலையில் கரூரில் இருந்து ?? கி.மீ ஈசனத்தத்தில் புடைப்புச் சிற்பமாக நடுகல் உள்ளது. இந்நடுகல்லில் இரு வீரர்கள் குதிரையையும், குதிரைமீது வந்த வீரனையும் குத்திக் கொள்வது போல் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. குதிரையின் மீதமர்ந்து வந்து ஆநிரை கவர்ந்த பகை நாட்டு வீரனோடு போரிட்டு மாண்ட இரு வீரர்களின் மறப்பண்பைப் போற்றி இந்நடுகல் எடுக்கப்பட்டுள்ளது.

ஆலமரத்துப்பட்டி நடுகல்

கரூர் மாவட்டம், ஈசநத்தத்தில் இருந்து ஆலமரத்துப்பட்டி செல்லும் சாலையில் தேநீர் கடைக்கு அருகில் தென்திசையைப் பார்த்த வண்ணம் நடுகல் அமைந்துள்ளது. நடுகல்லில் கல்வெட்டுகள் எதுவும் இல்லை. இங்குள்ள மக்கள் வளவ முத்தரையன் சாமி என்று அழைக்கின்றனர் .

நடுகல்

பீடத்தில் அமைந்துள்ள கல்லில் வீரன் சிலை செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லை ஏந்திய வண்ணமும் வலது கையைத் தடி ஒன்றில் ஊன்றிய வண்ணமும் உள்ளது. வலது தோளில் அம்புகளுடன் அம்புறாத் துணி உள்ளது. கழுத்தில் அணிகலன்கள் காணப்படுகின்றன. இடைக்கச்சையுடன் கூடிய அரை ஆடையும் காதில் குழைகளும் காணப்படுகின்றன. (முத்தரையர் நடுகற்கள் ப- 69-70)

வாங்கல் நடுகற்கள்

பழைய வாங்கலம்மன் கோயிலின் உட்புறத்தில் வலப்பக்கத்தில் துவாரபாலகர் சிலையின் அருகே இரு நடுகல் வீரர் சிலைகள் உள்ளன. கோயில் கட்டுமானத்திற்கு முன்னர் நடந்த போர்களில் உயிர் நீத்த முத்தரைய வீரர்களின் சிலைகளை வாங்கல் பகுதியில் இருந்து கொண்டு வந்து இக்கோயிலில் வைத்திருக்கின்றனர்.

நடுகல் 1

பீடத்துடன் கூடிய பலகைக் கல்லில் சிலை வடிக்கப்பட்டுள்ளது. சிலையில் உள்ள வீரர் பக்கவாட்டுக் கொண்டை பூட்டுக் குண்டலங்கள், கூர்மையான மீசையுடன் உத்தர பந்தம் இறுக்கப்பட்டு, பட்டு வேட்டியுடன் திரிபங்க நிலயில் நின்று இடது கையில் வில் வலதுகையில் அம்பு ஏந்தியுள்ளார். இடது இடுப்பில் கடகம் எனும் கட்டாரி உறையில் செருகப்பட்டுள்ளது. சிற்பத்தின் காலம் 17-18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

நடுகல் 2

பீடத்துடன் சிலை வடிக்கப்பட்டுள்ளது. சிலையில் உள்ள வீரர் வலப்பக்கக் கொண்டையுடன் வலக்கையில் ஏந்திய அரிவாளுடனும் இடக்கை இடையில் கடகத்தில் இறுத்தியும் காதுகளில் குண்டலங்களுடன்

சமபாத ஆசனத்தில் இடதுபாதம் சற்றே உயர்த்தியும் உள்ளார். காலம் 18 - ஆம் நூற்றாண்டு.

தலைப்பலி நடுகல்

வாங்கலம்மன் கோயிலின் முன் மண்டபத்தில் கிழக்கு நோக்கி 'நம்பியண்ணன் சாமி' என்ற தலைப்பலி நடுகல் கிழக்கு முகமாக பீடத்தில் வைக்கப்பட்டுள்ளது. கொற்றவைக்குத் தன் மன்னன் வெல்ல வேண்டும் என்று தன தலையைத் தானே அறிந்து பலியிடுவது பண்டைய வழக்கம். 10-11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிண்டுகள் ஆகும். இவ்வீரனின் பெயர் நம்பியண்ணன் என்று எழுதப்பட்டுள்ளது. இச்சிலையை அழிந்த கோயிலில் இருந்து எடுத்து வந்து புதிய கோயில் வைத்துள்ளார். 2½ அடி உயமுள்ள சிலை. இரு கால்களையும் மண்டியிட்டவாறு உட்கார்ந்த நிலையில் வீரனின் சிலை உள்ளது. இடது கையால் கொண்டையைப் பிடித்துக்கொண்டு தனது வலது கையால் கழுத்தின் பின்புறம் வைத்து அறிவது போன்றுள்ளார். (பொன்னர் - சங்கர் கதை ப - 440)

சாந்தபாடி கோவிலூர் நடுகற்கள்

தலையூர் பட்டக்காரர்கள்

அரவக்குறிச்சிக்கு மேற்கே எட்டு கி.மீ. தொலைவில் உள்ள கோவிலூரிலுள்ள பெரியம்மன் கோயில் வேட்டுவப் பட்டக்காரர்களின் கோயில் ஆகும். இங்குள்ள கோயிலின் மேல்புறம் கிழக்கு நோக்கி தலைய நாட்டுப் பட்டக்காரர்கள் வள்ளல் கவுண்டர்களின் இரு சிலைகள் உள்ளன.

இருவரும் கை கூப்பிய நிலையில் சமபாத ஸ்தானக நின்ற கோலத்தில் உள்ளனர். இடப்பக்கம் சாய்ந்த கொண்டைகளுடனும் நீண்ட காதுகளுடனும் காட்சி அளிக்கின்றனர். கழுத்தில் கண்டிகை, சரப்பளி, முத்தாரம் அணிந்துள்ளனர். கைவளை, தோள்வளையும் அரையில் அரைப்பட்டிகையும் அணிந்துள்ளனர். இருவரும் இடதுகையில் தோளில் வாளை அணிந்த வண்ணம் உள்ளனர். முதலாமவர் இடது இடுப்பில் கடகம் எனும் கட்டாரி உள்ளது. அமைதி தவழும் முகத்துடன் காட்சி அளிக்கிறார். இரண்டாமவர் வலது இடுப்பில் கட்டாரி உள்ளது; சிரித்த முகத்துடன் காணப்படுகிறார்.

தலைப்பலி நடுகல்

சாந்தபடி - கோவிலூர் பெரியம்மன் கோயிலில் பழைய தலைப்பளிக்கல்லும், புதிய தலைப்பலிக் கல்லும் உள்ளன. பழைய தலைப்பலிக் கல் 15-16 ஆம் நூற்றண்டைச் சேர்ந்தது. அர்த்த பத்மாசன நிலையில் கழுத்தில் கண்டிகை, சரப்பளி, அரைப்பட்டிகை அணிந்து காட்சி அளிக்கிறார். காதில் குழைகளும், கைவளையும், தோள்வளையும் அணிந்துள்ளார். இடது கையால் குடுமியைப் பிடித்தவாறு வலதுகையால் கழுத்தின் பின்புறம் வாளால் அறிவது போன்றுள்ளார்

புதிய தலைப்பலி நடுகல் கோயிலின் திருப்பணியின் போது கோயிலின் சுற்றுப் பிரகாரத்தில் மேல்புறம் மண்டபத்தில் வைக்கப் பட்டுள்ளது. பழைய சிலையைப் போன்று சிலை வடிக்கப்பட்டாலும் சிற்ப அமைதியில் வேறுபாடு காணப்படுகிறது. வலது கையால் கழுத்தின் முன்புறம் அரிவது போன்று சிலை உள்ளது. இவ்வாறு அமைந்துள்ள நடுகற்கள் வேட்டுவரின் பழுங்கால வாழ்வியலை எடுத்தியம்புகின்றன.

துணை நின்ற நூல்கள்:

1. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி - III
2. கருவூர் சேரர் அகழ்வைப்பகம்
3. கருவூர் அகழாய்வு
4. முத்தரையர் நடுகற்கள் மூபெ -இராமலிங்கம்.

வரலாற்றுப் பெட்டகத்தில் வேட்டக்குடி

முதுமுனைவர் மு.தெய்வேந்திரன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கோபி கலை அறிவியல் கல்லூரி,
கோபிசெட்டிபாளையம் - 638 453.
அலைப்பேசி: 9655306345
tamzhldeiva@gmail.com

முகவுரை

தமிழ் வரலாற்றில் கிட்டியுள்ள முதல் இலக்கிய நூற்களான சங்க இலக்கியங்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய பழமையுடையன. இலக்கியங்களில் விளம்பப்பட்டுள்ள செய்திகள் யாவும் மக்களின் மனங்களில் என்றும் நிலைத்திருக்கக் கூடியவனாகும். சங்ககால மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வினை வாழ்ந்துள்ளனர். அக வாழ்க்கையிலும் புற வாழ்க்கையிலும் பண்பாடோடு இணைந்த வாழ்க்கையினை வாழ்ந்து சிறந்தனர். அதனுள், ஒரு குழுவின் செயற்பாட்டு வடிவங்களையும் அத்தகைய செயற்பாடுகளுக்குரிய சிறப்புத் தன்மைகளையும் முக்கியத்துவங்களையும் மேம்பட்ட வாழ்க்கை முறையின் வெளிப்பாடாகப் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் அருந்தமிழ் இலக்கியங்களில் வரலாற்றுப் பெட்டகமாகப் போற்றப்படும் புறநானூற்றுள் வேட்டக்குடியின் தனிச்சிறப்புமிக்க வாழ்வியல் விழுமியங்களை முன்வைப்பது இவ் ஆய்வுக் கட்டுரையயின் திண்ணமாகும்.

திறவுச்சொற்கள்

நானிலங்கள், வேட்டக்குடியினர், கந்தாரம், காவற்காடுகள், காட்டுப் பூனை, மனையாள், இல்லாள், சிறு தீ விளக்கு, வேட்டைத்திறம், ஒடு மரம், கைச்சரடு.

தொல்குடிகளின் வாழ்வியல்

சங்ககால மக்களின் வாழ்க்கை முறை இயற்கையினை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. ஐவகைத்திணை மக்களும் தத்தமக்குரிய நிலச்சூழலுக்கு ஏற்ப தங்கள் வாழ்வியலை அமைத்துக்

கொண்டு வாழ்ந்துள்ளனர். இவ்வாழ்க்கை முறையானது காலப்போக்கில் பல்வேறு மாற்றங்களைக் கடந்து நிற்கின்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசை நிலையில் மனிதன் பரிணாம வளர்ச்சியை எட்டியுள்ளனர் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். மனிதனின் தோற்றம் மலைப்பகுதியில் தொடங்கிப் பின் சமவெளிப் பகுதியை அடைந்துள்ளதனை நன்குணர முடிகிறது. ஆக, ஒவ்வொரு காலகட்டத்திலும் மனிதன் இயற்கையிலிருந்து படிப்படியாக விலகிச் சென்று இயற்கைக்கு மாறான செயற்கை வாழ்வியலுடன் கலந்து நிற்கின்றான்.

சிலம்பு. நா.செல்வராசு அவர்கள், “குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசைமுறையை மனித சமூகப் பரிணாமத்தின் வரிசை முறையினைக் கொண்டு அதன் அடிப்படையில் சங்க அகப்பாடல்களைப் புரிந்து கொள்வதும் ஆராய்வதும் சிறப்பு மிக்கதாகும்”[1] என்று குறிப்பிடுகிறார்.

நானிலங்களில் குறிஞ்சியும் முல்லையும் தொல்குடிகளின் அடித்தளமாகும். குறிஞ்சிநில மக்கள் இயற்கையாகக் கிடைத்த காய், கனி, கொட்டை முதலானவற்றை உணவாகக் கொண்டதால் இயற்கை இயற்கையாகவே இருந்தது. உற்பத்தியின் புதுமைகளைக் கற்றறிந்த பிறகுதான் காடுகள் எல்லாம் களைந்து விளைநிலங்களாக மாற்றப்பட்டன. இதுபோன்ற காரணங்களால் இயற்கை படிப்படியாக அழிவுக்கு உள்ளாயின.

குறிஞ்சி, முல்லை நில மக்கள் உற்பத்தியை ஈட்டுவதற்கு அறிய முற்படாத காரணங்களால் அம்மக்கள் இயற்கையை அழிக்க முற்படவில்லை. இக்குழுவான சமுதாயமாதலால் அதிகப்படியான உற்பத்திக்கு அவர்களுக்கு அவசியம் இருந்திருக்காது. குறிஞ்சி, முல்லை ஆகிய இரு நிலங்களிலும் புன்செய் வேளாண்மை நிகழ்ந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

வேட்டக்குடிகளின் வாழ்வியல் திறம்

வேட்டைச் சமூகக் காலகட்டத்தில் ஊன் உணவினைப் பச்சையாகவும் நெருப்பினை அறிந்த பிறகு சுட்டும் தின்றனர். பகைப்புலத்தில் தாம் கவர்ந்த நிரைகளைக் கந்தாரம் என்னும் மதுவிற்கு விலையாக வெட்சி வீரர் பெற்ற திறத்தினை,

“முட்கால் காரை முதுபழன் ஏய்ப்பத்
தெறிப்ப விளைந்த தீம் கந்தாரம்
நிறுத்த ஆயம் தலைச்சென்று உண்டு
பச்சூன் தின்று பைந்நிணம் பெருத்த
எச்சில் ஈர்ங்கை விற்புறம் திமிரிப்
புலம்புக் கனனே புனல் அணற்காளை
ஒருமுறை உண்ணா அளவை பெருநிரை
ஊர்ப்புறம் நிறையத் தருகுவன் யார்க்கும்” (புறநா.258:1-8)

என்னும் அடிகளின் வழியாகப் புலனாகின்றது. அதாவது, பச்சை ஊன் உணவைத் தின்ற வீரன் நிணமிக்க எச்சிலாகிய ஈரம் கொண்ட தன்னுடைய கையை வில்லில் முறுகேற்றுவதற்குப் பூசுவதையும் உய்த்துணர முடிகின்றது. வேட்டைச் சமூகத்தில் பச்சை ஊனினை நிலையான உணவாகக் கொண்டதையும் இப்பாடலின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

வேட்டக்குடிகளின் வாழ்வியல் விழுமியங்கள்

வேடர்கள் வாழ்ந்த சிற்றூரில் பகைவர்கள் நுழைவதற்கு அரிய கடுமையான காவற்காடுகளைக் கொண்டதாகும். இவர்கள் வாழுகின்ற வீட்டின் வேலிகளில் காட்டுப் பூனையானது பதுங்கியிருந்து, மாலை வேளையில் அங்கிருக்கும் கோழியின் குஞ்சுகளைத் தனக்கு இரையாகக் கவர்ந்து செல்ல காத்திருந்ததாம். இத் திறத்தினை, தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர், “படைப்பை வேலியும் புதலும் பற்றி, விடக்கிற்கு வேற்றுயிர் கொள்ளும் வெருகினை இல்லுறை பூசையின் பெயர் கொடுத்துச் சொல்லலும் அமையுமென்றவாறு”[2] என்று உரை பகர்ந்துள்ளார். அதனை, அறிந்த கோழி பெருங்குரலை எழுப்பித் தன் குஞ்சுகளைத் தன்னிடம் அழைத்து அரவணைத்துக் காத்துக் கொள்ள விரும்பியதாம். அக்கோழியின் குரலினைக் கேட்டு மனையாள் காட்டுப்பூனையை அடித்து விரட்ட முற்படுவள். அவ்வேளையில் பருத்திப் பெண்டிரின் சிறிய தீயாகிய விளக்கின் ஒளியில் பெடைக்கோழி தன் ஆண்கோழியுடன் கூடித் தன்னுடைய நடுக்கத்தை விலக்கியது.

அக்குடியின் சிறுவர்கள் நெடுந்தொலைவு சென்று வேட்டை யாடாமல் அருகிலிருக்கின்ற ஆழமான மடைப் பகுதிகளிலிருந்து உடும்புகளைப் பிடித்துக் கொண்டு வந்து அன்னையரிடம் வழங்குவர். அவர்கள், அவற்றை அறுத்துத் தயிருடன் சேர்த்துச் சுவையாகச் சமைப்பதுடன்; புதிய சுவையுடன் பிற உணவுகளையும் சமைத்து

விருந்தினருக்கு வழங்கியுள்ளனர். அவளுடைய கணவன் பெருநில வேந்தர்களுடன் போரிட்டு அவனுடைய பட்டத்து யானையை வீழ்த்தி அவ்யானையின் நெற்றிப் பட்டத்தைப் பரிசாகப் பெறும் ஆற்றலுடையவன் என்பதனை,

"ஊர்முது வேலிப் பார்நடை வெருகின்
இருள்பகை வெரீஇய நாகுஇளம் பேடை
உயிர்நடுக் குற்றுப் புலாவிட்டு அரற்றச்
சிறையும் செற்றையும் புடையுநள் எழுந்த
பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்துக்
கவிர்ப்பூ நெற்றிச் சேவலின் தணியும்
அருமிளை இருக்கை யதுவே மனைவியும்
வேட்டச் சிறாஅர் சேட்புலம் படராது
படுமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்குநிணம் பெய்த தயிர்க்கண் மிதவை
யாணர் நல்லவை பாணரொடு ஒராங்கு
வருவிருந்து அயரும் விருப்பினள் கிழவனும்
அருஞ்சமம் ததையத் தாக்கிப் பெருஞ்சமத்து
அண்ணல் யானை அணிந்த
பொன்செய் ஓடைப் பெரும்பரி சிலனே" (புறநா.326:1-15)

எனும் அடிகள் அறியச் செய்கின்றன. இப்பாடலின் வழி வேட்டக்குடிச் சிறுவர்களின் வேட்டைத் திறமும்; மனையாளின் விருந்தோம்பல் பண்பும்; தலைவனின் பேராற்றல் கொண்டு பெற்ற போரின் வெற்றியும் விதந்து போற்றப்பட்டுள்ளது சுட்டதக்கதாகும்.

காவலரண் கொண்ட குடியிருப்புகள்

காவற்காடுகள் சூழ்ந்த வேட்டக்குடிகளின் குடியிருப்புகள் வேனிற் காலத்தில் நீர்வளம் இன்றி காணப்படுகின்றது. வறட்சியின் காரணமாகப் போரிடும் ஆண்யானைகளால் களர்நிலம் புழுதிபடிந்தன. வறண்ட அந்நிலத்தில் புதுமழை பெய்தமையால் அங்கிருந்த குழிகளில் நீர் நிரம்பின. அந்நீரைக் கன்றுகளையுடைய பசுக்கள் குழிகளில் தேங்கியிருந்த நீரைப் பருகின. சேறுடன் கலந்து சிறுமையுடையதாக வேட்டக்குடியினரின் வறுமை நிலையினை, "நிறையா வாழ்க்கை" என்று சுட்டியுள்ளார் உறையூர் முதுகண்ணன் சாத்தனார். அந்

நிலத்திலுள்ள ஆண்கள் முள்ளம்பன்றியினை வேட்டையாடி மகிழ்வர். அவ்வாறு வேட்டையாடிப் பெற்றதனைப் பலருக்கும் பகுத்துத்தந்து உண்டு மகிழ்ந்துள்ளனர். இத்திறத்தினைத்தான் வள்ளுவப் பெருந்தகையும்,

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை”[3]

எனும் குறட்பாவினுள் குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர்கள் வாழும் குடில்களின் கதவுகள் ஒடு மரத்தின் கம்புகளால் ஆனவை என்றும்; சிறுவர்கள் இத்தி மரத்தின் நிழலில் அம்பு எய்தி விளையாடி மகிழ்வதனையும்,

“களிறுநீறு ஆடிய விடுநில மருங்கின்
வம்பப் பெரும்பெயல் வரைந்துசொரிந்து இறந்தெனக்
குழிகொள் சில்நீர் குராஅல் உண்டலின்
சேறுகிளைத் திட்ட கலுழ்கண் ஊறல்
முறையின் உண்ணும் நிறைய வாழ்க்கை
முளவுமாத் தொலைச்சிய முழுச்சொல் ஆடவர்
உடும்பு இழுதுஅறுத்த ஒடுங்காழ்ப் பாடலைச்
சீறில் முன்றில் கூறுசெய் திடுமார்
கொள்ளி வைத்த கொழுநிண நாற்றம்
மறுகுடன் கமழும் மதுகை மன்றத்து
அலந்தலை இரத்தி அலங்குபடு நீழல்
கயந்தலைச் சிறாஅர் கணவிளை யாடும்
அருமிளை இருக்கை யதுவே ....” (புறநா.325:1-13)

எனும் அடிகளின் வழி அறியலாகின்றது. இத்தகைய சிறப்புகளுடன் இந்நிலத் தலைவனின் பேராற்றலானது பேரரசர்கள் தம்முடன் பகைத்து வந்தபோதும் தனி ஒரு வீரனாக நின்று எதிர்த்துத் தாங்குவதற்குரிய மிக்க வலிமையும் வரையறுக்க முடியாத கொடைப் பண்பினையும் உடைய மிகப்பெருந் தகுதியையுடைய மாவீரனின் ஊரானது கடப்பதற்கு அரிய காவற்காடு சூழ்ந்த இருப்பிடத்தை உடையதனையும்,

“ .... வென்வெல்
வேண்டுதலை வரினும் தாங்கும்
தாங்கா ஈகை நெடுந்தொகை ஊரே” (புறநா.325:13-15)

எனும் அடிகள் புலப்படுத்தி நிற்கின்றன.

வேட்டக்குடிகளின் விருந்தோம்பல் பண்பும் கொடைத் திறமும்

வேட்டக்குடிகளின் இல்லங்கள் அனைத்தும் விருந்தோம்புகின்ற பண்புகள் மிகுந்திருந்தமையும் அறிய முடிகிறது. இதனை, இக்குடியிருப்பு களைக் கடந்து சான்றோர்களும் இரவலர்களும் செல்ல நேரிடும் பொழுது விருந்தினை உபசரிக்க விழையும் இல்லத்தாள் தம் இல்லத்திலுள்ள வரகையும் தினையையும் இரவலர்களுக்கு உணவாகக் கொள்ள வழங்கப்பட்டு விட்டதால் அவை தீர்ந்து போயின. அதனால், கைமாறாகப் பெறக்கூடிய வாய்ப்பு இல்லாததாலும்; அவை கிடைக்கப் பெறவில்லை என்றாலும் கவலைப்பட மாட்டாள். அவ்வேளையில் விதைப்பதற்காக வைத்திருந்த தினையைக் குத்தி உணவாகச் சமைத்து வழங்கிப் பசியாற்றி மகிழ்ச்சியடைவாள். அவ் உணவைப் போருக்குச் செல்லுகின்ற வீரனாகிய தலைவனுக்கும் உணவாக வழங்கி இன்புற்றாள். இத்தகு வீரனின் இல்லாள் விருந்தோம்பும் மாண்பு இப்பாடலுள் அழகுற எடுத்தோம்பிய புலவர் இன்னார் என்பதனை அறிய இயலவில்லை. அத்துடன், பகைவர்களுடன் போர் செய்து வென்றமைக்காக அரசர்கள் வழங்கிய பெரும்பொருளைப் பெற்ற பெருமையில் சிறந்தோன் பாணர் முதலானவர்களுக்குப் பரிசாக வழங்கி மகிழும் சிறப்பிற்குரியவன் என்பதனையும்,

“நீருள் பட்ட மாரிப் பேர்உறை
மொக்குள் அன்ன பொகுட்டுவிழிக் கண்ண
கரும்பிடர்த் தலைய பெருஞ்செவிக் குறுமுயல்
உள்ஊர்க் குறும்புதல் துள்ளுவன உகளும்
தொள்ளை மன்றத்து ஆங்கண் படரின்
உண்கஎன உணரா உயவிற்று ஆயினும்
தங்கினிர் சென்மோ புலவிர் நன்றும்
சென்றதற் கொண்டு மனையோள் விரும்பி
வரகும் தினையும் உள்ளவை எல்லாம்
இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென
குறித்துமாறு எதிர்ப்பைப் பெறாஅ மையின்
குரல்உணக்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து
சிறிது புறப்பட்டன்றோ இலளே தன்ஊர்
வேட்டக் குடிதொறும் கூட்டு ....
...உடும்பு செய்

பாணி நெடுந்தேர் வல்லரோடு ஊரா
வம்புஅணி யானை வேந்துதலை வரினும்
உண்பது மண்ணும் அதுவே
பரிசில் மன்னும் குரிசில் கொண்டதுவே" (புறநா.333:1-19)

என்ற அடிகளில் விளக்கப்பட்டுள்ளன. மேலும், மற்றொரு சிறப்பாக இப்பாடலுள், உடும்பின் தோலினைக் கைச்சரடாகப் பயன்படுத்திய திறமும் குறிக்கப்பட்டுள்ளமை சுட்டத்தக்கதாகும்.

முடிபுகள்

புறநானூற்றில் வெட்சி, கரந்தை உள்ளிட்ட பன்னிரு வகை புறத்திணைகளுக்குரிய பாடல்களில் வெட்சியும் கரந்தையும் வேட்டை மற்றும் விளைச்சல் சார்ந்த சமூகப் பின்புலத்தை விளக்கி நிற்கின்றன.

அக்காலத்தில் ஊனினைப் பச்சையாகவும் சுட்டும் உண்டுள்ளனர்.

வேட்டக்குடி சமூகம் தொடங்கிய அழகிய வாழ்வியல் விழுமியங்களுள் தனித்த வடிவங்களாய் :

- பகைப்புலத்தில் தாம் கவர்ந்து வந்த நிரைகளைக் 'கந்தாரம்' என்னும் ஊக்க உணவிற்கு விலையாகத் தந்து உண்டு மகிழ்ச்சியில் திளைத்தவன்.
- பச்சை ஊனைத் தின்று கொழுப்பு மிக்க ஈரம் பொருந்திய கையினைத் தன்னுடைய வில்லினை முறுக்கேறப் பூசியவன்.
- வேட்டக்குடிச் சிறுவர்களும் வேட்டையில் தேர்ந்திருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
- வேட்டக்குடியினரின் குடியிருப்புகள் காவற்காடுகள் சூழ்ந்திருந்து அரணாக நின்றுள்ளன.
- குரால் என்னும் பசுவினும் பற்றி அறியலாகின்றது.
- வேட்டக்குடியினர்களின் இல்லங்கள் அனைத்தும் விருந்தோம்பல் பண்பு மிளிர்திருந்தது சுட்டத்தக்கது.
- விருந்து படைக்க விளையும் இல்லத்தாள் இரவலர்களுக்கு வழங்கித் தீர்ந்து போயினும் கவலை கொள்ள மாட்டாள் என்பது நோக்குதற்குரியது.

- விதைப்பதற்கு வைத்திருந்த தினையை உரலிலிட்டு பக்குவமாக்கி உணவு செய்து படைத்து வழங்கி மகிழ்ந்த பண்பு நாயனாருக்கு வித்தாகும்.

சான்றெண் விளக்கம்

1. செல்வராசு, நா. சிலம்பு., - தொல்காப்பியத்தில் மணமுறைகள், ப.65.
2. பேராசிரியர், (உ.ஆ.), தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளதிகாரம், மரபியல்: 68, ப.660.
3. திருக்குறள், 322.

துணைமை நூற்கள்

1. உரையாசிரியர்கள் - புறநானூறு (மூலமும் உரையும்) - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்., சென்னை - 600 098, ஐந்தாம் பதிப்பு, அக்டோபர், 2014.
2. கணேசையர் (பதிப்பு) - தொல்காப்பியம், பொருளதிகார மூலம், பின்னான்கியல்களும் பேராசிரியமும், இரண்டாம் பாகம், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை - 600013, இரண்டாம் பதிப்பு, 2007.
3. செல்வராசு, நா. சிலம்பு., - தொல்காப்பியத்தில் மணமுறைகள், சமூக மானுடவியல் ஆய்வு, காவ்யா பதிப்பகம், சென்னை, 2010.
4. துரைசாமி, சு. ஔவை. திரு., (உ.ஆ.), - புறநானூறு மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை - 600018, மறுஅச்சு : 2007.
5. Thomas Lehmann and Thomas Malten – A Word Index for Cankam Literature, Institute of Asian Studies, Chennai - 600119, India - 1993.

வேட்டுவர் வணங்கும் தெய்வங்களின் வரலாறும் வழிபாடும்

வீ. கோவிந்தராஜ்,
தொல்லியல் ஆய்வாளர்,

பொ. திருநாவுக்கரசு,
புவியியல் ஆராய்ச்சியாளர்.

முன்னுரை

பழமையான வரலாறும், சிறந்த பாரம்பரியமும், உயர்ந்த பண்பாடும் அரிய பழக்க வழக்கமும் உடைய கொங்குச் சமுதாயத்தில் பல நடைமுறைகள் காலப் போக்கில் மறைந்தன; சில மாற்றம் பெற்றன; புதியன புகுந்தன. ஆனால் அன்றும் இன்றும் மாறாமல் நிலைத்து நிற்பது குலதெய்வ வழிபாடு ஒன்று மட்டுமே.

கொங்கு நாட்டில் உள்ள அனைத்துச் சமுதாயத்திற்கும் குலதெய்வக் கோயில்கள் உள்ளன. பலர் ஆண்டுக்கு ஒரு முறையேனும் குடும்பத்தோடு குலதெய்வக் கோயிலுக்குச் சென்று வழிபடும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். பலர் சுபசடங்குகளைத் தங்கள் குலதெய்வக் கோயில்களில் நடத்துகின்றனர். பலர் தங்கள் புதிய முயற்சிகளைத் தொடங்கக் குல தெய்வத்தின் அருளை வேண்டிப் பெறுகின்றனர்.

பலர் போக்குவரத்துக் குறைவு, போதிய காலம் இன்மை காரணமாகத் தங்கள் குடியேறி வாழும் பகுதியிலேயே தங்கள் குலதெய்வக் கோயிலை அமைத்து வழிபடுகின்றனர். அதற்காக மூலக் கோயில் பிடிமண் எடுத்து வந்து புதுக் கோயில் கட்டுவர். பல காரணங் களால் சொந்த ஊரை விட்டு வேறு பகுதிகட்கு மக்கள் குடியேறும்போது குலதெய்வத்தைக் கல் உருவில் எடுத்துச் செல்வதும் உண்டு. அதனைக் குடியேறும் பகுதியில் பிரதிட்டை செய்து கோயில் கட்டுவர்.

நாட்டுப்புறத் தெய்வங்களின் தோற்றங்களும் கதைகளும்

நாட்டுப்புறத் தெய்வங்கள் தோன்றிய வரலாறு கதைகளாகவே கூறப்படுகின்றன. ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒரு கதை விளங்கப் படுகிறது. தெய்வங்கள் இறந்த மனிதர்களாகவும் கனவில் தோன்றிய தெய்வவாக்கின் மூலமாகவும் கண்டெடுக்கப்பட்ட சிலைகளின் வழியாகவும் கூறப்படுகின்றன. மனிதர்களே தங்களுடைய அனுபவத்தின் அடிப்படையில் தெய்வங்களை அமைத்துக் கொள்கின்றனர்.

‘‘தெய்வங்களது தோற்ற வரலாறுகள் வாய்மொழி வழக்காறுகளாகவே பின்வரும் சந்ததியினருக்குக் காலங்காலமாக எடுத்துரைக்கப்பட்டு வந்திருக்கின்றன. கால ஓட்டத்தில் இதுபோன்ற தெய்வங்களின் தோற்ற வரலாறுகள் மறைந்தும் விட்டன எனலாம். பல தெய்வங்களின் தோற்ற வரலாறுகள் மிகத் தெளிவாகக் கிடைக்கா விடினும் அத்தெய்வங் களுக்கான வழிபாட்டு மரபுகள் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தெய்வங்களின் தோற்ற வரலாறுகளில் அப்பகுதியில் வாழும் மக்களின் வரலாறுகளும் இடம்பெறுவதால் இவ்விடத்தில் வாய்மொழி வரலாறு பற்றி அறிந்துகொள்வது அவசியமாகிறது” (வெ.அமுதா, சிறுதெய்வத் திருவிழாக்கள், பக்கம் 75) எனக் கூறுகிறார். இந்த அடிப்படையில் நாட்டுப்புறத் தெய்வங்கள் உருவான முறைகளைப் பலவகையாகப் பிரித்துக் காட்டுகின்றனர். 1. இயல்பாக இறந்தோர்க்கு உருவானவை 2. கொல்லப்பட்டோருக்கு உருவானவை 3. விபத்தில் இறந்தோருக்கு உருவானவை 4. தற்கொலை செய்தோருக்காக உருவானவை 5. பிடிமண் தெய்வங்கள் 6. பெட்டியிலிருந்து கண்டெடுக்கப்பட்டவை எனப் பலவகைகளில் தெய்வங்கள் காணப்படுகின்றன. கடுமையான நோய்களால் இறந்தவர்களும் கற்பொழுக்கத்திற்குச் சிறந்தவர்களும் பாலியல் பிரச்சினைகளால் மாண்டவர்களும் வீரவிளையாட்டு நிகழ்த்தியவர் களும் நாட்டுப்புறத் தெய்வங்களாக அறிமுகப்படுத்தப்படுகின்றன. கருப்புசாமி வீரம் செறிந்த அச்சம் தரத்தக்க தெய்வமாகக் கருதப்படுகிறார்.

சிறுதெய்வக் கோயில்கள் இடமும் தோற்றமும்

சிறுதெய்வக் கோயில்கள் மிகுதியும் ஊர்ப்புறத்தை ஒட்டியே காணப்படுகின்றன. சில கோயில்கள் ஊரின் நடுவில் அமைந்துள்ளன. ஊரின்கண் அமைந்துள்ள கோயில்கள் மண்மேடைகளாகவும் சுதையால் ஆன மேடைகளாகவும் மண் கட்டடமாகவும் காரைக்கட்டடமாகவும்

அமைந்துள்ளன. கோயில்கள் பெரும்பகுதியும் நான்கு திசைகளை நோக்கியும் காணப்படுகின்றன. கிழக்கு, மேற்கு, வடக்கு என்னும் மூன்று திசைகளை நோக்கியவாறு கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றுள் பெரும்பாலான கோயில்கள் கிழக்கு நோக்கிக் காணப்படுகின்றன. கருப்பண்ணசாமி கோயில்கள் பெரும்பாலும் மேற்குநோக்கி உள்ளன. நாட்டுப்புறத் தெய்வங்களுக்கென்று தனி உருவங்கள் காணப்படு கின்றன. சில இடங்களில் தெய்வங்களுக்கு உருவம் இல்லாமல் கல், பாறை, மரம், அரிவாள் ஆகியவற்றைக் கொண்டு வணங்குகின்றனர். இவற்றையும் தெய்வங்களாகவே கருதுகின்றனர். தெய்வங்கள் இருக்கும் கிராமங்களில் பொருளாதார சமூகச் சூழலுக்கு ஏற்றவாறு தெய்வ உருவங்களும் கோயில்களும் அமைக்கப்படுகின்றன என்று தெய்வங்களின் தோற்றம் கூறப்படுகிறது.களிமண் சிலை, கற்சிலை, மரச்சிலை, சுதையினால் ஆனசிலை ஆகியவற்றால் தெய்வ உருவங்கள் அமைக்கப்படுகின்றன.

சமாதித் தெய்வங்கள்

‘சமாதி செய்தல்’ என்பது இறந்தோரை அடக்கம் செய்தல் என்னும் பொருளுடையது. இறந்த உடலை அடக்கம் செய்யும் இடம் (குழி) என்றும் இது கூறப்படும்.

“அட்டயோகத்துள் ஒன்று; அஃது இந்திரிய முதலிய தத்து வசேட்டைகட் கேதுவாய் யாக்கையுள் நின்றவற்றோடு கூடினும் அவற்றில் பற்றின்றியிருக்கும் ஆன்மாவாகித் தன்னைத்தான் காண்டல்; அமைதி; ஓரலங்காரம் ; அது முக்கியப் பொருள்மேல் ஏற்றிக் கூறுவது, சமப்படுத்தல், சாவு, பிரேதக்குழி (கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, பக்கம் 590) என்று தமிழ் அகராதியும் பொருள் கூறுகிறது. இங்கு, ‘சமாதித் தெய்வங்கள் என்ற தொடருக்கு இறந்தோரை அடக்கம் செய்தல் என்ற பொருளே பொருந்துவதாகக் காணப்படுகிறது.

ஒரு குடும்பத்தில் அல்லது ஊரில் தலைமையாக இருப்போர் இறந்தால் அவர்களின் உடலை வீட்டின் தோட்டத்திலோ அல்லது அருகாமையிலுள்ள ஓர் இடத்திலோ அடக்கம் செய்து, விசேட நாட்களில் அவ்விடத்திற்குச் சென்று மக்கள் வழிபட்டு வருவது நாட்டுப்புறங்களில் காணப்படும் வழக்கமாக உள்ளது. இறந்தோரை வீட்டுப் பகுதியில் அடக்கம் செய்து மேலே மேடை ஒன்று அமைக்கின்றனர். இவ்வாறு அடக்கம் செய்யப்பெறும் ஆண் அல்லது பெண்களைத் தம் தெய்வமாகப்

போற்றி வருகின்றனர். இவ்வாறு வணங்கப்படுவோர் “சமாதித் தெய்வம்” என்று அழைக்கப்படுகின்றனர்.

துணைத் தெய்வங்கள் ஆண் தெய்வங்களுடனும் பெண் தெய்வங்களுடனும் காணப்படுகின்றன. அய்யனார், வீரன், மாரியம்மன் போன்ற தெய்வங்கள் இருக்கும் இடத்தில் அவற்றிற்குரிய குதிரை, யானை போன்ற விலங்குகளும் (வாகனங்கள்) காணப்படுகின்றன. சில தெய்வங்களுக்கு வாயிற்காவலாகச் சில துணைத் தெய்வங்களைச் சிலை வடிவில் அமைத்துள்ளார்கள். துணைத் தெய்வங்கள் முதன்மைத் தெய்வங்களுக்குச் சிறப்பை நல்குமாறு அமைக்கப்பட்டுள்ளன.

வீரனும் மதுரை வீரனும்

மதுரைவீரன் என்னும் பெயரில் தமிழகத்தின் பல இடங்களிலும் கோயில்கள் காணப்படுகின்றன. இவ்வீரன் கோயில்கள் பெரிய கற்கோயில்களாக இல்லாமல் மரத்தடியில் சிறுசிறு மண்டபங்களாகக் காணப்படுகின்றன. பெரும்பகுதியும் இக்கோயில்கள் காடுகள் மலையடிவாரத்தலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழர் மரபில் ஏற்பட்ட சிறுதெய்வம் என்பதால் இத்தெய்வங்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் மிகுந்து காணப்படுகின்றன. அபிதான சிந்தாமணியில் மதுரைவீரன் பற்றிக் கூறப்படும் பதிவுகள் இத்தெய்வங்களின் பழைய மரபை உணர்த்தும்.

இவன் காசிராஜன் புத்திரன். இவன் பிறந்த காலத்தில் மாலையுடன் பிறந்ததால் சோதிடம் சொற்படி அரசன் இவனைக் காட்டில் விட்டனன். இவனை ஒரு சக்கிலி எடுத்து வளர்க்க அவன் வளர்ந்து நாகராசனால் பல சித்திகள் பெற்றுப் பொம்மணநாய்க்கன் மகள் பொம்மியை மணந்து விஜயரங்கனிடம் சேவகத்திற்கமர்ந்து திருமலை நாயக்கன் பட்டணத்தில் களவுபிடிக்க வந்து கள்ளரை வேரறுத்து வெள்ளச்சியை மணந்து செல்கையில் அரசனால் கைகால் வாங்கப்பட்டு மனைவியர் தீக்குளித்திறக்கத் தான் மீனாட்சி சந்நிதியில் உயிர் போக்கிக்கொண்டு தெய்வமாக அமர்ந்தவன் என்பது இந்நூல் (ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, மதுரை வீரன்) தரும் விவரக் குறிப்பாகும்.

பின்னாளில் தமிழகக் கிராமங்களில் மக்களுக்குக் காவல் தெய்வமாக இவன் கருதப்பட்டான். வீரனும் மதுரை வீரனும் ஒருவர் என்ற கருத்தும் உண்டு. நாட்டுப்புற ஆய்வில் மதுரை வீரனே மிகுதியும் எடுத்துக்கூறப் பெறுகிறான். மதுரைவீரன் கோயில்களில் குதிரையும்

குதிரையின்மீது வீரன் ஒருவன் கையில் வாளுடன் அமர்ந்திருக்கும் சிலைகளும் காணப்படுகின்றன. மதுரைவீரன் குலதெய்வமாகவும் கருதப்படுகிறது. ஓர் ஊருக்கருகில் இக்கோவில் அமைந்திருப்பின், அவ்வூரிலுள்ள குடும்பத்தினர் சிலரே வழிவழியாக இத்தெய்வத்தை வணங்கி வருகின்றனர். பெரும்பகுதியும் கிழக்கு நோக்கிய மண்டபமும் சிலைகளும் காணப்படுகின்றன. ஆண்டுக்கொருமுறை குறிப்பிட்ட குடும்பத்தினர் வந்து பூசைகள் செய்கின்றனர். புலால் படையல், சுருட்டு, சாராயம் போன்ற மதுவகைகள் படையல் பொருளாக அமைகின்றன.

இவன் வீரனாகையால் வீரர்க்குக் கல் நாட்டுவதுபோல் இவனையும் கல்லில் பதித்திருக்கின்றனர். நாட்டுப்புறத் தெய்வங்கள் பெரும்பகுதியும் மறைந்தவர்கள்(இறந்த மக்களின் வழியினர்). ஆகையால் அம்மக்களுக்குச் சமூகத்திலுள்ள இடமே தெய்வங்களுக்கும் தரப்படுகிறது.

ஆண் தெய்வங்கள்

‘‘ஆண் தெய்வங்கள்’ என்ற பெயர் அமைப்புத் தெய்வங்களுக் கிடப்பட்டுள்ள பெயர்களாலும் அவற்றின் செயல்களாலும் மக்கள் வழக்கத்தாலும் ஏற்பட்டது. பொதுவாகத் தமிழ்ப் பெயர்கள் ஆண், பெண் என்ற முடிவுக்குக் கொண்டு வருவதற்குச் சில இலக்கண முறைகள் உள்ளன. ஆண்பாற் பெயர்கள் அன், ஆன் என இரண்டால் முடிவது பெரும்பான்மை. அர், ஆர் என்ற விகுதிகளும் இதில் இணையும். மேலும் ஆண்பாற் சொல் முடிபுகள் ஏற்கும் விகுதியைக் கொண்டு ஆண், பெண் என்ற பாகுபாடு அமைக்கப்படுகிறது. தமிழ் இலக்கணத்தில் ஆண்பாற் பெயர் அமைவதற்குரிய காரணங்கள் விதியாகச் செய்யப்பட்டிருக் கின்றன. (ஆறுமுக நாவலர் உரையாசிரியர், நன்னூல்- பெயரியல், நூற்பா 21)

நாட்டுப்புற மக்களில் ஆண்களும் பெண்களும் தனித்தனி உடை அணிதல் காணப்படுகிறது. ஆண்களுக்குரிய உடையை ஆண் தெய்வங்களுக்கு அணிவித்து மக்கள் வழிபாடு செய்கின்றனர். ஆண்கள் உண்ணும் உணவுப் பொருள்களும் இத்தெய்வங்களுக்குப் படையல் பொருள்களாகக் காணப்படுகின்றன. மக்கள் செய்யும் தொழிலில் சில ஆண் தெய்வ வழிபாட்டுக்குரியனவாகக் காணப்படுகின்றன. 1.அய்யனார் 2.கருப்பண்ணசாமி 3.கருப்பு 4.பெரியாண்டவர் 5.பெரியண்ணசாமி 6.வீரன் 7.மதுரைவீரன் ஆகியவை ஆண் தெய்வங்களாகும்.

'அய்யனார்', 'அய்யன்' என்ற அடிச் சொல்லைக் கொண்டு எழுந்துள்ளது. அய்யன் என்பது தலைவன் எனும் பொருளுடையது. 'அய்யன் திருவள்ளுவர் ' எனக் கடந்த காலங்களிலிருந்து மக்கள் வழங்கி வருவதைக் காணமுடிகிறது. தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் வருவதற்கு முன் இச்சொல் 'ஐயன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் பெரும்பான்மையான ஊர்களில் இத்தெய்வச் சிலைகள் காணப்படு கின்றன. அய்யனார் கோயில் உள்ளதென்பதற்கு அடையாளமாக மரங்களும் யானை, குதிரைச் சிலைகளும் இருக்கின்றன. இவை அய்யனாரின் அடையாளங்கள். தமிழக நாட்டுப்புற ஆய்வுகள் அய்யனார் பற்றி மேலும் பல விவரங்களைத் தெளிவுபடுத்துகின்றன.

"ஊர்த் தெய்வங்களில் எல்லாக் கிராமங்களிலும் இருக்கும் தெய்வம் அய்யனார் ஆகும். அய்யனார் கோவில் எல்லாக் கிராமங்களிலும், பெரும்பாலும் திறந்த வெளியில் ஒரு மரத்தடியில் உள்ள பீடத்தில் சிலை கொண்ட அமைப்பாகத்தான் இருக்கிறது" (துளசி இராமசாமி, நாட்டுப்புறத் தெய்வங்கள், பக்கம் 30)

கருப்பணசாமி என்னும் இத்தெய்வப் பெயர் நிறத்தால் அமைந்த பெயர் என்பர். சிவன், மாயோன் போன்று கருப்பண்ணசாமியும் நிறத்தால் பெயர் பெற்றவர். மாயோன், மால் என்ற சொற்களுக்குரியவர் என்ற பொருளுண்டு. திருமாலின் கூறாகக் கருதப்படும் கிருட்டிணன் என்பவரும் கருமை கொண்ட சொல்லின் அடிப்படையில் தோன்றியவரே (ஆ.கருப்பாயி, நாட்டுப்புறச் சிறுதெய்வ வழிபாடு, பக்கம் 70) என்று கருப்பண்ணசாமியின் பெயர் பற்றி ஆ.கருப்பாயி கூறுகின்றார். இதைப் போல வேறு சிலரும் கருப்பண்ணசாமியின் பெயர் குறித்த சில விவரங்களைத் தந்துள்ளனர். கருப்பு, கருப்புச்சாமி என்ற பெயர்களாலும் இத்தெய்வம் அழைக்கப்படுகிறது.

தென்தமிழ்நாட்டில், குறிப்பாக, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் கருப்புசாமி வழிபாடு மிகுதியாக உள்ளது. இத்தெய்வம் பெரும்பாலான இடங்களில் தலைமைத் தெய்வமாகத் தனிக்கோயில் அமைப்புடன் விளங்குகிறது. கருப்புச்சாமி எனப் பொதுவாகக் கூறினும் இடத்திற்கு இடம் பொதுவாக வெவ்வேறு வகையான பெயர்களில் இத்தெய்வத்தை அழைக்கின்றனர்(கு.சந்திரன், மதுரை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், பக்கம் 30) என விளக்குகின்றார். கருப்பசாமி என்ற பெயர் வண்ணம் பற்றி வந்தது. கிருஷ்ணனான கண்ணனே

புராணக் கடவுளாகிப் பின்னர்க் கருப்பன் என்ற பெயரினைப் பெற்றான் என்றும் கூறுவர். (மேலது, பக்கம் 31) மாயோன், சேயோன் போன்ற பெயர்கள் நிறம் பற்றிய தெய்வப் பெயர்கள் ஆகும்.

சில ஊர்களில் கருப்பண்ணசாமியின் திருக்கோயில்கள் இல்லையெனினும் அங்குள்ள மக்கள் அக்கோயில் உள்ள ஊர்களுக்குச் சென்று வழிபட்டு வருகின்றனர். வேண்டுதல்களையும் செய்கின்றனர். சில குடும்பங்கள் தங்களின் குலதெய்வமாகவே கருப்பண்ணசாமியை வணங்கி வருகின்றனர்.

கருப்பண்ணசாமியைப் பொருத்தவரையில் சிலை அமைப்பில் வைத்து மக்கள் வழிபடுகின்றனர். வீரன் மாதிரியே கருப்பரும் ஒரு காவல் தெய்வம். எல்லாக் கோயிலிலும் கருப்பருக்கு ஒரு சந்நிதி உள்ளது. இத்தெய்வத்தின் கையில் ஆயுதங்கள் காணப்படுகின்றன. சில இடங்களில் இரு கைகளிலும், ஒரு கையிலும் ஆயுதங்கள் காணப்படுகின்றன. இவ்வாயுதங்கள் அரிவாள்களாகவும், சூலம் போன்ற நீண்ட ஆயுதங்களாகவும் காணப்படுகின்றன (மேலது, பக்கம் 31) என்கிறார் கு.சந்திரன். அச்சந்தரும்படியான ஆயுதங்கள் சிலைகளில் காணப்படுகின்றன. கருப்பசாமி கோயிலில் பூசாரி உடுக்கையடித்து அருள்வாக்கு வரச் செய்து மக்களுக்குக் கூறுகின்றனர். மக்கள் கருப்புச்சாமிக்கு விழா எடுத்துப் பொங்கலிட்டுப் படையல் செய்கின்றனர். கிடா வெட்டிப் படையல் செய்கின்றனர். மக்கள் செய்யும் தவறுகளைக் கூறி மன்னிப்புக் கேட்டால் உடனே மன்னித்து அருள் வழங்கும் தன்மை கருப்புச்சாமிக்கு இருப்பதாக மக்கள் நம்புகின்றனர். முடிவுரை

கொங்கு நாட்டில் தான் கோயில் திருப்பணிகள் மிகுதியாக நடைபெறுகின்றன. குலதெய்வக் கோயில்களில்தான் அவை பெரும்பாலும் நடைபெறுகின்றன. குலக் கோயில் குடிப்பாட்டு மக்கள் ஒன்றிணைந்து குலதெய்வக் கோயில்களில் அறக்கட்டளை, நற்பணி மன்றம், சங்கம் என்ற பெயரில் பொது அமைப்புக்கள் தொடங்கிப் பல சமய, சமூகப் பணிகள் ஆற்றிவருகின்றனர். இதனால் பல நன்மைகள் விளைகின்றன. சில குலதெய்வக் கோயில்கள் ஒரு சமூகத்திற்கு உரியதாக இருந்தாலும் பல வரலாற்றுக் காரணங்களால் பிற சமூகப் பெரியவர்களும் வணங்கப்படும் காட்சிகளைக் காணலாம். வேட்டுவர்கள் உருவாக்கி வழிபட்டு வந்த கோயில்கள் இன்று ஊர்க் கோயிலாகவும் அனைத்துச் சமூகத்தவர் வழிபடும் பொதுக் கோயிலாகவும் மாற்றம் அடைந்துள்ளன.

கொங்கு நாட்டு ஆவணங்களில் வேட்டுவர்கள்

எம்.ராஜலிங்கம்,
நிர்வாக குழு உறுப்பினர்,
ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை
அலைப்பேசி : 94427 27111.

முன்னுரை

தமிழகத்தின் பண்டைய காலத் தொல்குடிகளாகிய வேட்டுவர்கள் வேடர், வேட்டுவர், வெற்பன், சிலம்பன், எயினன், ஊரன், வேட்டைக்காரன், வேடுவன், வேட்டுவன், வேட்டுவதியரையன், வெட்டுவதியரையன், ஊராளி, கொங்கர், நாடாழ்வான், ஊராளி வேட்டுவன் (ஊராண்மை), பாண்டிய புத்ரவர்க்கம், குருகுலராயர், பள்ளிகொண்டார் முதலான பெயர்களால் கல்வெட்டுகளிலும், செப்பேடு களிலும் குறிக்கப் பெறுகின்றனர். கவுண்டர், காடவராயர், மன்றாடியார், பல்லவராயர், வானவதிராயன், நாயக்கர், காடுவெட்டி, முத்தரையர், வள்ளல், கொங்குராயர், ராயர், காங்கயன், ஊர்க்கவுண்டன், கங்கதிராயர், கண்டன், சாமந்த முதலி முதலான பட்டங்களை இவர்கள் பெற்றிருந்தனர் என்பதனைச் சாசனங்களால் அறிகிறோம். வேட்டுவ ராசாக்கள் பல்லவராயர், பூலுவராயர், சந்தனராயர், நரசிங்கராயர், வாளரசர், வாளரச மணவாளர் முதலான பெயர்களால் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றனர்.

தென்னிலைச் செப்பேடு - 1

கரூர் மாவட்டம் கரூர் வட்டம் தென்னிலைக் கிராமத்தில் உள்ள வேட்டுவ சமூகப் பட்டக்காரர் எம்.ஏ. பகவதிக்கவுண்டர் அவர்களிடம் உள்ள செப்பேடு:

கொங்கு நாட்டின் பூர்வீக மக்கள் வேட்டுவர்குலப் பெரு மக்கள். அவர்கள் ஒக்கிலியர் முதலிய பகைவர்களை வெட்டி முடிக்கின காரணத்துக்காகப் பல ஊர்களைக் காணியாகப் பெற்றனர்.

சேரன், சோழன், பாண்டியன், செட்டி, சிவப்பிராமணன் ஆட்சிக் காலத்தில் கொங்கு வேளாளர்கள் குடியேற்றம் கொங்கு நாட்டில் ஏற்பட்டது.

ஆத்தூர், அஞ்சூர், கார்வழி, கோடந்தூர், காரைப்பரப்பு, தலையநல்லூர், நாகம்பள்ளி போன்ற பல ஊர்களில் வேட்டுவ சமூகத்திற்குரிய ஊர்கள், நிலம் (எல்லை கொல்லை) வேளாளர் பெருமக்களுக்கு உரியதாக மாறுகிறது. ஊராட்சி உரிமை, கோயில் காணி உரிமை இவைகளும் வேளாளருக்கு மாற்றப்படுகின்றன. (இராச முப்பாடு, கோயில் முப்பாடு).

சில ஊர்களுக்கு ஐயர், கணக்கர், தட்டார், பறையர், நாவிதர் யார் என்று நியமனம் ஆகின்றனர். பல நாடுகளில் வேட்டுவர்கள் காணி பெற்ற விவரமும் ஊர்களின் எல்லைகளும் எல்லைகளில் பொறிக்கப் பட்டுள்ள சின்னங்களும் குறிக்கப் பெறுகின்றன.

வேட்டுவக் கவுண்டர்கள், வேளாளக் கவுண்டர்கள் இருவருமே சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். காசித்தட்டான் என்பவர் இச்செப்பேட்டை எழுதியுள்ளார். இதற்குப் பல நகல்கள் எடுக்கப்பட்டு ஆங்காங்கு வைக்கப்பட்டுள்ளதாக இடங்களும் இறுதியில் கூறப்படுகின்றன.

தென்னிலைச் செப்பேடு-2

இப்பட்டயமும் கரூர் மாவட்டம், கரூர் வட்டத் தென்னிலை வேட்டுவப் பட்டக்காரர் எம்.ஏ. பகவதிக் கவுண்டர் அவர்கள் வீட்டில் உள்ளது.

கொங்கு நாட்டின் பூர்வீகக் குடிகள் வேட்டுவர் குலப் பெருமக்கள், அவர்களுக்குச் சொந்தமான ஊர்களையும், கோயில்களையும் கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டில் குடியேறிய போது படிப் படியாகப் பொன்னும், பொருளும் கொடுத்துப் பெற்றனர். அதனையே இப்பட்டயமும் முந்தைய தென்னிலைப் பட்டயமும் விளக்குகிறது.

ஒக்கிலியரை விரட்டியதால் வேட்டுவர் தாம் பெற்ற தென்னிலைக் காணியில் கால் பங்கு உரிமையை 1000 பொன்னுக்குப் பெருங்குடி வேளாளராகிய கொங்கு வேளாளருக்கு விலைக்கு விற்றனர். இதேபோல் நீலியம்மன் கோயில், வேங்கபுரம் அம்மன் கோயில், கண்டியம்மன் கோயில், மங்கலம் காளியம்மன், மின்னாம்பள்ளி வன்னியம்மன் கோயில் ஆகியவற்றின் காணி உரிமைகள் வேட்டுவர் குலத்தாரிடமிருந்து வேளாளருக்கு மாறுகின்றன. ஆனால் கோயில் உற்சவங்களும்

உற்சவத்தின் போது கோயில் பணியாளர்கட்குக் கொடுக்கின்ற கொடைகளும் எந்தவித மாற்றமும் இல்லாமல் அப்படியே முன்பு நடைபெற்ற முறை போலவே நடைபெற வேண்டும் என்பதையும் தெளிவாக எழுதிக் கொடுத்துள்ளனர்.

ஊசிப்பாளையம் செப்பேடு

ஈரோடு மாவட்டம் அறச்சலூர் ஊசிப்பாளையத்தில் உள்ள அறச்சாலையம்மன் கோயில் முப்பாட்டுக்காரர் வேட்டுவர் சமூக பி. ஆறுமுகக் கவுண்டர் அவர்களிடம் இச்செப்பேடு உள்ளது.

மேல்கரைப் பூந்துறை நாட்டில் ஊசிப்பாளையத்தில் சாந்தப் படை வேட்டுவர் சக்கரைக் கவுண்டர், நல்ல காளியப்ப கவுண்டர் இருவரும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வீட்டில் ஒரு வெள்ளைப் பெண் இருந்தாள். அப்பெண்ணை எவரும் திருமணம் செய்து கொள்ளவில்லை.

சோழியனூர் மிளகு வியாபாரியாகிய செட்டியாருடன் பண்ணைக் கிணற்றில் தங்கியிருந்த கரைய வேட்டுவர் காளியப்ப கவுண்டருக்குத் தம் வெள்ளைப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்து ஊசிப்பாளையம், அறச்சலூர்க் காணியாட்சியும் தருகின்றனர்.

காளியப்ப கவுண்டர் தன் சொந்த ஊர் சென்று வரும்போது அறச்சலூர் பத்ரகாளியம்மன் திருவிழா நடைபெறுகிறது. மருமகனாகிய தான் இல்லாதபோது திருவிழா நடத்தியது ஏன் என்று கோபித்துக் காளியப்ப கவுண்டர் தன் மாமனாராகிய சாந்தப்படை வேட்டுவரைத் துரத்திவிட்டு அவர் காணியாட்சி முழுவதையும் கைப்பற்றிக் கொள்ளுகிறார்.

அறச்சலூர் ஆலயம் கட்டிக் குடமுழுக்கு விழா செய்து தன்னை ஆதரித்த செட்டியாருக்கு இரண்டாவது உரிமை கொடுக்கிறார். (கோயில்கட்குப் பலர் கொடையளித்தனர். அதைக் குறிக்கும் கல்வெட்டுகளும் கோயிலில் உள்ளன. காளியப்பகவுண்டர் மகன் செய்யான் பல்லவராயன் பெயரும் ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது.)

கோப்பண மன்றாடியார் திருப்பணிச் செப்பேடு

மூவேந்தராலும் சிறப்பிக்கப்பட்ட கனகசபை பெரிய முதலிப் பண்டிதர் பெருமை முதற்கண் கூறப்படுகிறது. அவர் பேரூர் உட்படப் பல கோயில்களில் தெய்வப் படிமங்களைப் பிரதிட்டை செய்தார்.

மதுரை விசயரங்க சொக்கலிங்க நாயக்கர் பிரதிநிதி அழகாத்திரி நாயக்கர் வேண்டுகோள்படி புரவிபாளையம் வேட்டுவ சமூகப் பாளையக்காரர் இம்முடிப் பட்டம் முத்துவேல்மணி சந்திரகோப்பண மன்றாடியார் பேரூர், கிணத்துக்கடவு போன்ற பல ஊர்களில் கோயில் திருப்பணிகள் செய்தார்.

சந்திர கோப்பண மன்றாடியாரை மதுரை மன்னன் அழைத்துப் பல்வேறு சிறப்புக்கள் அளித்தான். குருக்கள் சமூகத்தில் கோப்பண மன்றாடியார் உடல், பொருள், ஆவியைத் தத்தம் செய்து செப்பேடு எழுதிக் கொடுத்தார். பல விளைநிலங்களையும் குருக்களுக்குக் கொடையாக அளித்தார்.

கபிலமலைச் செப்பேடு

கபிலக்குறிச்சியில் ஒரு வீட்டிலிருந்து நாமக்கல் தாசில்தார் மூலம் பெற்று மைய அரசு தொல்பொருள் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் இச்செப்பேட்டைப் படி எடுத்துள்ளனர்.

கபிலமலையில் உள்ள திருவள்ளுவர் குலப்பெருமாள் தம்புரானுக்குக் கபிலமலை, திருச்செங்கோடு, பழனி மடங்களை எழுதித் தந்து பல கொடைகளை விட்டதை இச்செப்பேடு கூறுகிறது.

கபிலமலையில் மலைக்கோயில், உச்சிப்பிள்ளையார் கோயில், பால்வாவி கட்டப்பட்ட விவரமும், தைப்பூச விழா விவரமும், விழாவின் போது திருமஞ்சன நீரினை அந்தணர் கொண்டு வர ஏற்பாடு செய்ததும், நடைக்கு 1/8 ரூபாய் கொடுத்த விவரமும், கபில மலைக் கோயிலுக்கும் திருமடத்திற்கும் வரி நிர்ணயம் செய்த விவரங்களும் விரிவாகக் கூறப்படுகின்றன.

வேட்டுவர் சமூகத்தைச் சேர்ந்த அல்லாள இளையா நாயக்கர் திப்புவின் காலத்தில் செய்த பல கொடைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. வரி கொடுக்காவிட்டால் தண்ணிக்கிணற்று மறியல், தலைவாசல் மறியல், வீடு மறியல் என்பது இச்செப்பேட்டில் அறியப் படும் புதிய செய்தியாகும்.

1604 ஆம் ஆண்டு இச்செப்பேடு எழுதப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. திப்பு சுல்தானும் கூறப்படுகிறார். இச்செப்பேடு முற்றுப் பெறாமல் உள்ளது.

அஞ்சு சாதி வரலாறு

இந்த ஆவணத்தில் சேரநாடு, தோன்றிய வரலாறும், மன்னன் சேரமான் பெருமாள் வரலாறும் முதலில் கூறப்படுகிறது.

தொண்டை மண்டலத்தில் காளகத்தி மலைப்பகுதியில் வேட்டுவர் சமூகத்தவர் உடுப்பூரில் வாழ்ந்த வரலாறும், நாகன் - தத்தை தம்பதியினருக்குத் திண்ணன் பிறந்ததும் வேட்டைக்குச் சென்ற திண்ணனுக்கு மிருகங்கள் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

சிவபெருமானே வேடன் வடிவில் வந்து மலையில் வேட்டை மிருகங்கள் கிடைக்கும் இடத்திற்குத் திண்ணனை அழைத்துக் கொண்டு சென்றதால் வேட்டை மிருகங்கள் அகப்பட்டன. காளகத்தி யீசர் திண்ணனிடம் நீ தின்று பார்த்து ருசியான கரியை எனக்குப் படைப்பாயாக என்று கூறியதாக அரிய செய்தியும் உள்ளது. பின் திண்ணன் காளகத்தி ஈசருக்குக் கண் அப்பி கண்ணப்பர் ஆன செய்தியும் கூறப்படுகிறது.

இதைக் கேள்விப்பட்ட சேரமான் பெருமாள் தொண்டை மண்டலம் உடுப்பூர் சென்று பதினாயிரம் வேட்டுவ சமூகத்தினரைக் கொங்கில் குடியேற்றிய செய்தியும் சேரமான் பெருமாளை வென்று சோழர்களும், பாண்டியர்களும் கொங்கு நாட்டில் ஆட்சி செய்த விபரமும் கூறப்படுகிறது. மகாமேருவில் பாண்டியர், சோழர் தங்களுடைய மீன், புலிச் சின்னம் பொறித்த அரிய செய்தியும் இந்த ஆவணத்தில் உள்ளது சிறப்புக்குரிய தாகும்.

ஆத்தூர்ச் செப்பேடு

கரூர் அருகேயுள்ள ஆத்தூர்ச் சோழியம்மன் கோயிலில் இச்செப்பேடு உள்ளது. கரூர் பவர் டெக்ஸ் சுப்பிரமணியம் மூலம் இச்செப்பேடு கிடைத்தது. தென்னிலைச் செப்பேட்டோடு ஒத்த செப்பேடு. சில வேறுபாடுகள் உள்ளன.

ஒக்கிலியரை வெட்டி விரட்டிய காரணத்தினால் அண்டவாணி வேட்டுவர், பூலுவ வேட்டுவர் போன்றவர்கட்குக் காணி பூமி கொடுத்தது கூறப்படுகிறது.

வேட்டுவப் பெருமக்கள் காணியுரிமையில் இருந்த ஆத்தூர், அஞ்சூர், கோடந்தூர், அரையநாடு (தலையநல்லூர்), நடந்தை,

மின்னப்பள்ளி, கண்டியம்மன் கோயில் ஆகிய ஊர்களும், கோயில்களும் வேளாளர்கட்கு அளிக்கப்பட்ட விபரம் கூறப்பட்டுள்ளது. இச்செப்பேட்டைக் காசித் தட்டான் என்பவர் எழுதியுள்ளார்.

கோசணம் செப்பேடு

கோபிசெட்டிப்பாளையம் வட்டம், கோசணம் அருகேயுள்ள செல்லிபாளையம் பெருமாள் நாடார் என்பவரிடம் இச்செப்பேடு உள்ளது. இதைப் பெற்றுப் பதிப்புக்கு அளித்தவர் சமூகவியல் ஆய்வாளர் நெல்லை நெடுமாறன் அவர்கள் ஆவார்.

விசயநகர மன்னர் சீரங்கராயர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1603-இல் கோசணம் கோட்டையில் குருகுலத்து வம்சச் சிற்றரசர்கள் பூலுவ வேட்டுவர் மகாகாளியண்ண கவுண்டர் நாட்டு நிர்வாகம் செய்து வந்தார். அவருக்கு உதவியாக மணிய வேட்டுவர் மகன் ராக்கியாக் கவுண்டர், புன்ன வேட்டுவர் பச்சையாக் கவுண்டர் ஆகியோர் இருந்தனர்.

கோசணம் கோட்டை மீது அன்னியர் படை எடுத்தனர். மேற்கண்ட மூன்று பேருக்கும் ஆதரவாக தாளி சடையமூப்பன், பொன்னி சின்னான், மசைக்குட்டை ராக்கி, மணியராக்கி ஆகியோர் கோட்டை மேற்குக் கொத்தளத்தில் போர் செய்து வெற்றி பெற்றனர். அதனால் வேட்டுவத் தலைவர்கள் நாடார் சமூகத்தவர்கட்குச் சிறப்புச் செய்து பச்சை நாயகியம்மன் கோயிலில் சில உரிமைகளையும் அளித்தனர். நாடார் சமூகத்தினருக்கு வெள்ளைக்குடை, வெண்சாமரம் சிறப்பு கூறப்படுகிறது. இச்செப்பேட்டிற்கு ரங்கப்ப சேருவைகாரன், வேளராசி திருமலைக் கவுண்டர் ஆகியோர் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளனர்.

கொங்கு வரலாற்று ஆவணங்களில் வேட்டுவர் சமூகம்

கொங்கு நாட்டில் செப்பேடுகளிலும், ஓலைகளிலும் எழுதப்பட்ட பல்வேறு ஆவணங்கள் கிடைத்துள்ளன. அவை பலவற்றில் வேட்டுவர் சமூகத்தினர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

1. கொங்கு காணியான பட்டயம்

வேளாளர்கள் சோழ நாட்டிலிருந்து குடியேறிக் கொங்கு நாட்டில் காணி பெற்ற விபரம் இப்பட்டயத்தில் கூறப்படுகிறது. 124 குலங்கள் பிரிக்கப்பட்டு அவர்களுக்குரிய காணிகள் வகுக்கப்பட்டதை இந்த ஆவணம் கூறுகிறது. இதற்குரிய ஆவணம் எழுதப்பட்ட போது மூவேந்தர்

களும் கையெழுத்திட்டதாகக் கூறும் இந்த ஒப்பந்தத்திற்குச் சாட்சிக் கையெழுத்திட்ட சிலருள் 'பூவிலுவரில் அரியிபிராட்டி வில்லவராயக் கவுண்டர்' என்பவரும் ஒருவர்.

2. பெருந்துறைச் செப்பேடு

பெருந்துறை வெள்ளை வேட்டுவர், சிவப்பிராமணர், கொங்கச் செட்டி ஆகியோருக்குச் சொந்தமாக இருந்தது. கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுப் படைவீடு என்ற ஊரைச் சேர்ந்த கொங்கு வேளாளரில் மேதி குலத்தார், மேற்கண்ட மூவரிடமிருந்தும் 500 நாகரம் பொன்னுக்குப் பெருந்துறையை விலைக்கு வாங்கினர். வெள்ளை வேட்டுவர்கள் காகம் பகுதிக்குக் குடியேறினர். பின்னர் பெருந்துறையின் பாதி உரிமையை நசியனூர்க் கண்ணகுல செங்கோடன் நல்லதம்பிக் கவுண்டர் என்பவர் மேதிகுலம் பழனிக்கவுண்டரிடமிருந்து விலைக்குப் பெற்று தன் மருமகன் பூந்துறைக் காடைகுலத் தம்பி நல்லய்ய கவுண்டருக்கு அளித்தார்.

3. காரையூர்ச் செப்பேடு

நத்தக்காரையூர் என வழங்கும் காரையூரின் உரிமையுடைய காணியாளர்கள் காசவேட்டுவர், கொங்கு வேளாளர் மணிய குலத்தார், கொங்குச் செட்டியார் ஆகியோர் ஆவர். விசயநகர ஆட்சியாளர் நஞ்சராசன் இந்த மூன்று காணியாளர்களின் உரிமையைப் பயிரகுல அழகன் சர்க்கரைக்கு வழங்கினார். அதற்குச் செப்பேடும் எழுதித் தந்தார். இதில் கையெழுத்திட்ட பெருமக்கள் விசயமங்கலம் வேட்டுவர் விசயக்கவுண்டர், கார்வளி வெள்ளை வேட்டுவர் முத்தரைக் கவுண்டர், கீரனூர் குடுமி வேட்டுவர் செம்பராயக் கவுண்டர் ஆகியோர் ஆவர்.

4. நீலம்பூர்ச் செப்பேடு

வேணாடுடையார் கொங்கு வேளாளர் ஈஞ்ச குலத்தார்க்கு நீலம்பூர்க் காணி அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது. அப்பகுதியில் முன்பு அதிகாரம் செலுத்தியவர் காவுலுவர் விசயகாளிராயக் கவுண்டர் என்பவர் ஆவார்.

5. திருவாச்சிச் செப்பேடு

மேல்கரைப் பூந்துறைநாட்டுத் திருவாச்சி பூவாணி வேட்டுவர், கொங்கச் செட்டியார்களில் வேலாயுதம் செட்டியார் ஆகியோருக்கு உரிமையுடையதாக இருந்தது. திருவாச்சிக்காணியை மேற்கண்ட இருவரிடமிருந்தும் கொங்கு வேளாளர்கள் பரஞ்சேர்வழி ஓதாள குல

குள்ளகாளியப்ப கவுண்டரும், வெள்ளகோயில் ஆந்தை குலம் சென்னிமலைக் கவுண்டரும் 1500 பொன் கொடுத்து வாங்கியதை இச்செப்பேடு கூறுகிறது.

6. வெள்ளோடு காணிப்பட்டயம்

வெள்ளோடு கிராமத்தில் வடமுகம் வெள்ளோடு வெள்ளை வேட்டுவருக்கும், தென்முகம் வெள்ளோடு வெள்ளைப் பெரிச்ச மூப்பன் ஆகியோருக்கும் உரிமையாக இருந்தது. வல்லிபுரம் சாத்தந்தைகுல முத்துக்கவுண்டர் இருவர் உரிமைகளையும் பெற்றார்.

7. கன்னிவாடிக் கண்ணகுலப் பட்டயம்

தலையநாடு கன்னிவாடியிலிருந்து கொங்கு வேளாளர் கண்ண குலத்தார் வெளியேறிப் பல ஊர்களை ஏற்படுத்தியதையும், பல ஊர்களில் காணி பெற்றதையும் இப்பட்டயம் விரிவாகக் கூறுகிறது. இப்பட்டயத்தில் கண்ணகுலத்தார் வேட்டுவர் சமூகத்தைச் சேர்ந்த வில் வேட்டுவர், விளக்கு வேட்டுவர், கரும்பிளி வேட்டுவர், குண்ணாடி வேட்டவர், மாச்சாடி வேட்டுவர், ஜநூத்தாம் செட்டியார்கள் ஆகியவர்களைத் தங்கள் 'பாதிப் பங்காளிகள்' என்று குறிக்கின்றனர். முக்கிய பல ஆலோசனை களை அவர்களிடம் கேட்டுள்ளனர்.

8. பூந்துறை நாட்டார் மேலோலை

காங்கய நாட்டுக் காரையூருக்கும், மேல்கரைப் பூந்துறை நாட்டு அறச்சலூருக்கும் எல்லைத் தகராறு ஏற்பட்டுப் பெரும் சண்டை நடந்தது. மதுரை நாயக்கர் அரசின் அலுவலர்கள் நேரில் வந்து எல்லையை அளந்து ஒரு பட்டயம் எழுதினர். இப்பட்டயத்தில் மேல்கரைப் பூந்துறை நாட்டின் சார்பாகக் கையெழுத்திட்ட பெருமக்களில் "வேட்டுவர் பட்டாலிக் கவுண்டர்" என்பவர் ஒருவர்.

9. மொடவாண்டிகள் பட்டயம்

பூந்துறை கொங்கு வேளாளர் காடைகுல வாரணவாசிக் கவுண்டர் முடவர் பாதுகாப்பு நிலையம் ஒன்றை சத்தியமங்கலம் (இன்றைய கஸ்பாபேட்டை) என்ற ஊரில் ஏற்படுத்தினார். அதற்கு வேட்டுவர்கள் வீட்டுக்கு எட்டுப் பணமும், பட்டிக்கு ஒரு பணமும் தந்தனர். இப்பட்டயத்தில் வேட்டுவர்கள் "கொங்கு வேட்டுவர்' என்று குறிக்கப்பட்டுள்ளனர்.

10. முத்தூர்ப் பட்டயம்

விசயநகருக்கு வரி கொடுப்பதில் ஏற்பட்ட சிக்கலால் முத்தூரைச் சேர்ந்த 15 பேர் சிவசமுத்திரத்தில் சிறை வைக்கப்படுகின்றனர். கொங்கு வேளாளர், செட்டியார்கள், கணக்கர்கள், உப்பிலியர்கள், வேட்டுவர்கள் ஆகியோர் கைதாகினர். 'காவுள' மணலூர் நாட்டினர் மணலூர் நாட்டு 18 பங்காளிகள். கொங்கு 24 நாடுகளில் மணநாடு என்பதும் ஒன்று. அது மணல் நாடு, மணலூர் நாடு எனவும் அழைக்கப்படும்.

மணலூர் நாட்டு எல்லைகளை விரிவாகக் கூறும் மக்கென்சி ஆவணம் ஒன்று உண்டு. தமிழக அரசின் பழஞ்சுவடி நூலகத்தில் உள்ளது. (எண் டி.3139) மணலூர் நாடு, தென்னிலை, கூடலூர், கோடந்தூர், நடந்தை, சின்னதாராபுரம், ராஜபுரம், சூடாமணி, இலவனூர் ஆகிய எட்டு ஊர்களையுடையது.

இவைகளைத் தொகுத்து, "தென்னிலைக் கூடலூர் சேர்கோடந் தூர்நடந்தை சின்னத்தா ராபுரமும் சேர்ந்துமிக - உன்னிதங்கள் சூழ் ராஜமாபுரமும் சூடாமணி இலவை வாழ் மணலூர் நாடாய் வழுத்து" என்ற வெண்பா கூறுகிறது.

இந்த நாட்டில் வேட்டுவர் சமூகத்தில் உள்ள 18 பேருக்காக எல்லை வகுத்தது மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவர்கள்,

1. சிறுத்தலை வேட்டுவர் 2. மோக்காளி வேட்டுவர் 3. சாந்தப்படை வேட்டுவர் 4. வைய வேட்டுவர் 5. முன்னை வேட்டுவர் 6. வெங்கச்சி வேட்டுவர் 7. மாந்த வேட்டுவர் 8. புல்லை வேட்டுவர் 9. சதிப்பு வேட்டுவர் 10. குண்ணாடி வேட்டுவர் 11. வெந்தை வேட்டுவர், 12. புன்னகுடி வேட்டுவர் 13. பறப்படை வேட்டுவர் 14. சோள வேட்டுவர், 15. முளை வேட்டுவர் 16. சாலியன் வேட்டுவர் என்போர் ஆவர். (இருபெயர்கள் ஆவணத்தில் விடப்பட்டுள்ளன.)

முடிவுரை

சங்க காலத்தில் வேட்டுவக் குலத் தலைவர்கள் சிலர் குறுநில மன்னர்களாகத் திகழ்ந்தனர். இதனைச் சங்கப் பாடல்களால் அறியலாம். இவர்களுள் கோடைமலைத் தலைவனான கடிய நெடு வேட்டுவன், தோட்டிமலைத் தலைவனான கண்டீரக் கோப்பெருநள்ளி, கொல்லிமலைத் தலைவனான வல்வில் ஓரி ஆகியோர் புகழ் பெற்று

விளங்கினர். அகநானூறும் கோடைமலைத் தலைவனின் பெருமையைப் பேசுகின்றன. ஓரி மிகச் சிறந்த வில் வீரனாகத் திகழ்ந்தான். ஆமூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த குறும் பொறைக்கோமான் (கொடுமுடி) மாவீரனாகத் திகழ்ந்தான். சேரரை வென்றான். தனது அரசை விரிவுபடுத்தினான்.

இளவெயினனார், எயிற்றியனார், எயினந்தையார், எழூஉப்பன்றி நான்குமரனார் போன்ற புலவர் பெருமக்களும் வேட்டுவர் குடிக்குப் பெருமை சேர்த்தனர். வேட்டுவகுலப் பெண்பாற் புலவர்களுள் வெறிபாடிய காமக்கண்ணியார், கழாரர் சீரன் எயிற்றி ஆகியோர் சிறந்த புலவர்களாகத் திகழ்ந்தனர்.

ஓரிடத்தில் நிலையாகத் தங்காமல் அலைந்து திரிந்து வேட்டையாடிய வேட்டுவர், சில காலம் சென்ற பின்னர் ஓரிடத்தில் தங்க ஆரம்பித்தனர். ஒருவகையாக நிலைத்து வாழ்ந்த இவர்கள் உணவு தேடும் நிலைமாறி உணவை உற்பத்தி செய்யும் நிலைக்கு முன்னேறினர்.

துணை நூல் பட்டியல்

1. இராசு,செ; வேட்டுவர் சமூக ஆவணங்கள், கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை, ஈரோடு, 2008

2. இராஜசேகர தங்கமணி,ம.இரா; கொங்குச் சமுதாயம்(வேட்டுவர்), கொங்கு பதிப்பகம், கரூர், 2003

3. பரணன், இல., பொன்னர் சங்கர் கதை ஒரு சமூகவியல் ஆய்வு, சமூக வரலாற்றுச் சங்கம், பெரியாரியல் கலை இலக்கிய ஆய்வு மன்றம், கரூர், 2010.

வேட்டுவர் என்னும் தொல்குடியினரின் கொடைகள்

சௌ. சந்தானகிருஷ்ணன்,
தொல்லியல் ஆய்வாளர்,
M.A, DCE, DIP.Org, DEH,
12, லெட்சுமாங்குடி,
திருவாரூர் மாவட்டம்.

முன்னுரை

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு என்றார் பாரதிதாசன். 'இளமையில் கல்வி கற்றல் பசுமரத்தாணி போல்" என்றார் ஔவையார். "நல்லார் ஒருவருக்குச் செய்த உபதேசம் கல்மேல் எழுத்துபோல் காணுமே" என்றனர் சான்றோர். இளமையில் கல்வி சிலையில் எழுத்துபோல என்ற பொன்மொழிக்கேற்ப, கல்வெட்டுகள் சுட்டும் சரித்திர நிகழ்வுகள் பசுமரத்தாணிபோல மனத்தில் பதிகின்றன. நம் முன்னோர்களின் கல்வி, வீரம், தீரம், போர், வெற்றி, கொடை, புகழ், நிர்வாகம் எப்படி திறமையாகவும் நேர்த்தியாகவும் கையாண்டனர் என்பதற்குக் கல்வெட்டுகளே காலத்தைக் காட்டும் கண்ணாடிபோல் பிரதிபலிக்கின்றன. அடர்ந்த காட்டை அழித்து நகரமாக்கி அதில் ஆலயங்களை எழுப்பி மக்கள் பயன்பாட்டிற்காகக் குடியிருப்புகளை உருவாக்கி இறைவன் உறையும் தலமாகவும் அவ்வாலயங்கள் காலம் காலமாக வாழ்ந்து வரலாற்று அதிசயங்களை உண்மைப் பொருள்பட எதிர்காலத் தலைமுறைக்குக் கொண்டு வந்து காட்டும் நிர்வாகமுறை காலக் கண்ணாடியாகவும் விளங்குகின்றன.

கல்வெட்டுகள் வழி வேட்டுவர் கொடைகள்

வேட்டுவர்கள் என்பவர்கள் வேடர்கள் ஆவார்கள். தொல்காலத்தில் அடர்ந்த காடுகளை அழித்து அதில் மக்களும் கால்நடைகளும் தங்களுடைய பயன்பாட்டிற்காக விவசாய நிலங்களாகவும் வழித்தடங் களாகவும் மாற்றினர். கொடிய காட்டில் விலங்குகளை வேட்டையாடிக்

கொன்றும் உணவுக்காகப் பயன்படுத்தியும் மனித சமூகத்தினர் நோய் தீர்க்கும் மூலிகைகளைக் கண்டறிந்தும் இவர்கள் வாழ்க்கையை மேம்படுத்தினார்கள். இவர்கள் போர்களில் ஈடுபட்டு வீர, தீரச் செயல் களைப் புரிந்து நடுகல் வீரர்களாகவும் திகழ்ந்து வருகின்றனர். இவர்களே விவசாயத்திற்காக அணைகளை ஏற்படுத்தியும் நீர்மேலாண்மையை மேம்படுத்தினர். இந்த வகையில் வேட்டுவர்கள், வேடவர்கள், வேடர்கள், செம்படவர்கள் என்ற பிரிவுகளோடு தனித்தனியாகப் பிரிந்து வாழ்ந்து வந்தனர். இவர்களில் சிலர் ஊரைக் காக்கும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு ஊராளிகளாக, ஐயனார், பிடாரி, கொற்றவை, காளி, நாட்ராயன், முனியப்பன், வேடியப்பன் என்ற தெய்வத்தை வழிபட்டனர். இவை பிற்காலத்தில் கருப்பணசாமி, வீரன், காத்தவராயன், கவுண்டப்பார், செல்லாண்டி அம்மன், சோழியம்மன், பெரியகாண்டி அம்மன் என்ற பெயர்களே கால மாறுதல்களுக்கேற்பத் தெய்வப் பெயர்களை மாற்றிக்கொண்டு மக்களுக்குத் தொண்டூழியம் செய்து நல்வழிப்படுத்தி உள்ளனர்.

இதில் முக்கியமாக முத்தரையர் என்பவர்களும் பங்கு பெறுகின்றனர். அதேபோல் கடலில் உள்ள முத்துகளை எடுத்து அதை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வணிகத் தொடர்பை ஏற்படுத்தி ரோமாபுரி, கிழக்கத்திய நாடுகள், அரேபிய நாடுகள், மத்தியத்தரைக்கடல் பகுதி நாடுகளோடு சந்தை பெருக்குதலை மேற்கொண்டார்கள்.

மேலும் வேட்டுவர்கள் ஊர் நாட்டாண்மைக்காரர்களாகவும், அரண்மனையாளராகவும், பட்டக்காரராகவும் நிர்வாகம் செய்துள்ளனர். சோழ முத்தரையன் நீர் மேலாண்மையைப் பெருக்குவதற்காகக் காட்டை அழித்து காவிரியில் அணையைக் கட்டியுள்ளான். கரைய வேட்டுவர் நடுகல் பெரும்பாலும் கொங்கு நாட்டிலும் அதை ஒட்டிய பகுதிகளிலும் வேட்டுவக் கவுண்டர்கள் கல்வெட்டுகள் நூற்றுக்குமேல் கிடைத்துள்ளன. நடுகற்களும் புலிக்குத்திக் கல்வெட்டுகளும், சதிகற்களும், தலைப்பலி நடுகற்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. அவை, வீரத்தின் விளைநிலமாக இவர்கள் வாழ்ந்ததைக் காட்டுகின்றன. உதாரணமாக மாற்றார் படையெடுப்பின்போது போரிட்டு வீரமரணம் அடைந்த புகழ்மங்கலம் கரைய வேட்டுவர் சமூக சொக்கனேந்தல் நடுகல்லில் அவரது பெருமையும் புகழும் வெண்பா வடிவில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்நடுகல்லே தென்னிந்தியாவின் ஒரே நடுகல் என்ற புகழையும் பெருமையையும் பெற்றுள்ளது.

இந்நடுகல் பார்ப்பதற்கு அமைப்பில் ஆலயம் போல் உள்ளது. குலோத்துங்கச் சோழனின் ஏழாம் ஆட்சியாண்டில் கி.பி.1203 ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் ஈங்கூர் குட்டைத் தோட்டம் காவலர் குறும்பின்னர் என்ற வேட்டுவத்தலைவர் 1203 - ஆம் ஆண்டில் ஐயனார் சிலை வடிவமைத்து படிமத்தை அமைத்தார். புல்லை வேட்டுவர் வானவதரையன் (அரையன்) வலங்கை வாழ வந்தானான சுந்தரபாண்டிய வீரசிங்க தேவனுக்கு வெங்கம்பூர் என்னும் ஊர் கொடையாக அளிக்கப்பட்டது. அவர்கள் வெங்கம்பூரில் வசூலாகும் வரிப்பணத்தைச் சிவன் கோயில் அமுதுபடைக்கத் தந்தார். இவர் வரி வசூலிக்கும் உரிமை உடைய ஆட்சித் தலைவராக வாழ்ந்தார். நீர்வளம் பெருக்கிய வேட்டுவர் நீரை நிலத்தோடு சேர்ப்பார் புகழே உலகில் நிலைத்து நிற்கும் என்று குடபுலவியனார் என்ற சங்ககாலப் புலவர் பாடியுள்ளார்.

காவிரி ஆறு கொங்கு நாட்டின் வழியாகச் சென்றாலும் விவசாயத்திற்குப் பயன்படவில்லை. காரணம் நிலம் மேடாக இருந்ததுதான். ஆனால் அல்லாளன் இளையா நாயக்கர் (வேட்டுவர்) காவிரியின் கிழக்குக் கரையில் ஜேடர்பாளையம் என்னும் இடத்தில் காவிரி நீரைப் பாய்ச்சும் அளவில் அணைகட்டி, கால்வாய் வெட்டி வேளாண்மை செய்தான் என்ற செய்தி வியப்பை அளிக்கிறது.

“மூவருக்கும் அகத்திய மாமுனிவருக்கும் அரசிநந்த முன்னையோர்க்கும் தேவருக்கும் திரும்பாத காவிரியைத் தொங்கேற்றி திரை கொண்டாயே பூவிருக்கும் உரமாயின் கடலடைத்தான் அவன் வேடயம் புனைந்தவாறோ யாவர்க்கும் இளையானே அள்ளாளன் திருமலையா ஈகையோனே” என்று அல்லாள இளையானைப் பற்றி ஒரு பாடல் புகழ்ந்துரைக்கிறது.

மோடமங்கலம் பூச்சந்தை வேட்டுவர் பெரிய பெருமாள் முத்தாண்டான் என்பவர் வடபரிசார நாட்டுக்கப்பலன் பிடாரன் என்னும் ஊரில் குளமொன்றை வெட்டி கொடிவேலி அணை கட்டி நீர்ப்பாசனம் செய்ய வாய்க்காலையும் வெட்டினான்.

நல்வாழை வேட்டுவர் முளையூரான அஞ்சாத கண்ட நல்லூரில் மணலூர் கிழவன் சோழகோன் நல்வாழை வேட்டுவன் கிணறு ஒன்றை வெட்டினான். தஞ்சை திருச்சென்னம் பூண்டியில் நிருபதுங்கவர்மனின் 22ஆம் ஆட்சியாண்டில் கல்வெட்டு கிடைத்துள்ளது. இதில்

கொண்டநாடுடைய வேட்டுவதிரையர் என்பார் திருச்சென்னம் பூண்டியில் எழுந்தருளி இருக்கும் இறைவனான திருக்கடைமுடிமாவுக்கு நந்தா விளக்கு ஒன்றை எரிக்கப் பதினைந்து கழஞ்சு பொன் அளித்த செய்தி குறிக்கப்பெற்றுள்ளது: கி.பி. 872 - ஆம் ஆண்டு ஆகும்.

தஞ்சை திருக்கோடிகாவில் நிருபதுங்கவர்மனின் 24 - ஆம் ஆண்டு ஆட்சியாண்டில் கிடைத்துள்ள கல்வெட்டில் ‘‘கொண்டநாடுடைய வேட்டுவதிரையரான மல்லன் வேங்கடவன்‘‘ என்பான் நாரண சதுர்வேதி மங்கலத்துச் சபையாரிடம் இறைவனுக்கு நந்தாவிளக்கு எரிக்க 15 கழஞ்சு பொன் அளித்ததாகவும் சபையாரும் அப்பொன்னைக் கொண்டு திருக்கோடிகாவில் மகாதேவர் ஆலயத்தில் அட்டியின்றி நந்தாவிளக்குகள் எரிக்க ஒப்புக்கொண்ட செய்திகள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

வீரராஜேந்திர சோழனின் 9 - ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் ஈரோடு கொடிவேரி முன்னையீசுவரர் கோயிலில் கிடைத்துள்ள கல்வெட்டில் ‘‘சிறுத்தலை வேட்டுவரில் இருங்கோளன் மகன் தருமன் திருமுன்னை ஆளுடையாருக்குச் சந்தியா தீபம் வைத்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இது கி.பி.1216 ஆகும்.

இக்கோயிலில் கிடைத்துள்ள மற்றொரு கல்வெட்டில் கி.பி. 1162-இல் குலோத்துங்கச்சோழன் ‘‘சிறுத்தலை வேட்டுவரில் தாமன் தாமனான இருங்கோளன் என்பான் சந்தியாதீபம் வைத்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. வீர ராஜேந்திர சோழனின் 24 - ஆம் ஆட்சி ஆண்டில் ஈரோடு பவானி உலகடம் ஒலச்சுவரர் கோயில் கல்வெட்டில் ‘‘உலகவிடங்கத்தில் தன்னை வேட்டுவன் ஊராளிகளில் கருஞ்சொக்கன் வலிய சொக்கன் என்பான் முருகன் கோயில் கட்டி வழிபடச் செய்தனர். இதில் செயங்கொண்ட சோழமண்டலத்தில் உள்ள பெரிய வயலூரைச் சேர்ந்த வேட்டைக்காரன் சோழமுத்தரையன் மகன் பந்தலும் ஆகிய இருவரும் வேட்டைக்குச் சென்றபோது சீயமுத்தரையன் விட்ட அம்பு பந்தன் என்பவன் மீது எய்து அவன் இறந்துவிட இக்குறை நீங்க ஆளுடையார் திருவோத்தூர் கோயிலுக்குச் சீய முத்தரையன் தானம் வழங்கிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாம் குலோத்துங்கச் சோழனின் 10 - ஆவது ஆட்சி ஆண்டைச் சேர்ந்த திருநாவலூர் ஈசுவரன் கோயில் கல்வெட்டில் பருதூர் நாட்டுச் சேந்த மங்கலத்து வேட்டைக்காரன் மானியனான கரிகாலச் சோழ

இருங்கோளப்படி நாடாள்வான் என்பான் சந்தியா விளக்கு எரிக்க 113 ஆடுகளும் தயிர் எடுக்க ஒரு பசுவும் 50 பலம் எடையுள்ள வெங்கலத் தாரிகையும் அச்சிரப்பாக்கம் திருத்தொண்டீசுவரம் உடைய தேவருக்குக் கொடை அளித்துள்ளார். இக்கோயிலுக்கு இவன் பேரன் சேந்த மங்கல நாடாள்வான் 22 பலம் எடையுள்ள வெண்கலம் தானமாக அளித்துள்ளார்.

ஆகவே முனையதரையன் வேட்டுவன் ஆளவந்தான் இருங்கோளன் என்பான் வானகோபாடி இராசேந்திரசோழபுரத்துடையார் திருவமுதுபடிக்கு நிலம் கொடை அளித்ததைப் பற்றித் திருக்கோயிலூர் ஜம்பை ஜம்புநாதர் கோயில் துண்டு கல்வெட்டு கூறுகிறது. இது கி.பி. 1213 ஆகும்.

ஆளும் தலைவர்கள்

வேட்டுவர் சமூகப் பெருமக்கள் பலர் ஆளும் தலைவர்களாகச் சிறப்புடன் விளங்கியுள்ளனர். அவர்கட்கு ‘‘ஊராளி’’, ‘‘நாடாழ்வான்’’, ‘‘கொங்காள்வான்’’, ‘‘கொங்குராயன்’’ போன்ற அடைமொழிகள் காணப்படுவது அதனை விளக்கும். சிலர் அதிகாரன் என்று அழைக்கப்பட்டுள்ளனர். ‘‘மன்றாடி’’ பட்டம் பெற்றவர் பலர்.

‘‘கொடிவேரி குளவாற்றூர் ஊராளி செம்ப வேட்டுவரில் தொண்டைமான் பிள்ளன் ஆன செயங்கொண்ட சோழக் கொங்காள்வான்’’

‘‘நாமக்கல் புல்லை வேட்டுவரில் நற்காவிரி நாடாழ்வான் தேசி ஆளப்பிறந்தான் மும்முடிச் சோழச் சக்கரவர்த்தி அரங்கராயன்’ "வடகரையாற்றூர் புல்லை வேட்டுவரில் வளர்ந்த அம்மத திருவ நாடாழ்வான் வீரசிங்கன்" "துக்காச்சி ஊராளி வேட்டுவன் அழகன் காளி’’

‘‘கீரனூர் காவலன் மேலைக்கரையரில் சொக்கன் ஊராளி’’ ‘‘பருத்திப்பள்ளி ஊராளி பாண்டிய வேட்டுவரில் அதியமான் நடுவில் நங்கன்’’ ‘‘பெரியவிலங்கி ஊராளியாகிய சுண்டை வேட்டுவன் சிலம்பன் சிறியர் ஆன எழுகரை நாட்டு அக்கசாலைகள் மாத்த ஆராத பிள்ளை ‘‘பட்டில் ஊராளிகளில் கொடும்பூர் வேட்டுவர் பெரிய தேவன்’’ ‘‘உலகவிடங்கம் கள்ளை வேட்டுவரில் ஊராளிகளில் கருஞ்சொக்கன் வலிய சொக்கன்’’ போன்ற பலர் ஊர், நாடு ஆட்சி செய்த அரசு அலுவலர்களாக இருந்ததை கல்வெட்டுகள் கூறுகின்றன. வேட்டுவகுலப் பெருமக்கள் பலர் மூவேந்தர்களால் மன்றாடி’’ பட்டம் பெற்று ஊர்

அதிகாரம் செய்ததைச் "சோழன் பூர்வ பட்டயம்" விளக்குகிறது.

வேட்டுவ வீரர்களாக வெஞ்சமன், வல்வில் ஓரி, மலையமான் திருமுடிக்காரி, தலையூர் காளி, கொங்குராயன், குகன், ஏகலைவன், கண்ணப்பர், அல்லாள இளையான், அப்பிச்சிமார், வள்ளல் கவுண்டர், நிமிந்தபட்டி நீலியப்ப கவுண்டர் ஆகியோர் திகழ்ந்து வந்துள்ளனர்.

முடிவுரை

வேட்டுவர்களைப் பற்றிய கருத்துகளைப் பல்வேறு அறிஞர்கள், நிபுணர்கள், பேராசிரியர்கள் மற்றும் தொல்லியல் ஆய்வாளர்கள் மத்தியில் பல்வேறு விதமான கருத்துகள் எழுந்தாலும் முத்தரையர் களின் ஒரு பிரிவினர் வேட்டுவர்கள் என்ற கருத்தைப் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். எனவே, முத்தரையர்களும் வேட்டுவர்களும் சமகாலத்தவர்கள் என்ற கூற்றும் சங்க இலக்கியங்கள், புலவர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரிடமிருந்து அறிய முடிகிறது. வேட்டுவர் முத்தரையர் இருவருக்கும் உள்ள தொடர்புகள் கட்டுரையில் சான்று களுடன் காட்டப்பட்டுள்ளன. வேட்டுவர்கள் பல்வேறு தொழில்கள், அரசியலில் பங்கு வகித்தார்கள்; வகிக்கிறார்கள் என்பது மறுப்பதற் கில்லை; மறப்பதற்கில்லை; மறைப்பதற்கில்லை.

துணைநூற் பட்டியல்

1. இராசு,செ., வேட்டுவர் சமூக ஆவணங்கள், கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை, ஈரோடு, 2008

2. இராஜசேகர தங்கமணி,ம.இரா., கொங்குச் சமுதாயம்(வேட்டுவர்), கொங்குப் பதிப்பகம், கரூர், 2003

வேட்டுவர்களும் அவர்களின் வாழ்க்கை நிலையும்

முனைவர் கு.பிரபாகரன்,
கௌரவ விரிவுரையாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி,
மதுரை-02.

முன்னுரை

சங்க காலத்திலும் அதற்கு முன்பும் வேட்டுவர்கள் வாழ்ந்து வந்தனர் என்பதைச் சங்க இலக்கியச் சான்றுகளால் அறிய முடிகிறது. இக்கால கட்டத்தில் இவர்கள் வேட்டையாடுதலைத் தங்கள் தொழிலாக கொண்டிருந்தனர். பின்னர் இவர்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டது. பின்னர் இம்முன்னேற்றம் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. இவர்கள் போர்ப்படையில் வீரர்களாகப் பணிபுரிந்தனர். போர்த்தெய்வமான கொற்றவை, காளி ஆகியவற்றை இவர்கள் வணங்கினர். வேட்டுவர் களின் சொற்பொருளும், அவர்களின் வேறுபெயர்களையும், அவர்களின் வாழ்வியலையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

வேட்டுவர் சொற்பொருள் விளக்கம் :

வேட்டுவர் என்ற பெயரை வேட்டம், வேட்டை, வேட்டைக்காரன், வேடர், வேடுவர் என்று அழைப்பது தவறு. இந்தச் சொற்களுக்கு வேறுபாடு உண்டு. வேட்டுவர்- இனப்பெயர், வேட்டம்- வேட்டை புரிதலைக் குறிக்கும் பெயர், வேட்டை - வேட்டை புரிதலைக் குறிக்கும் பெயர், வேட்டைக்காரன் - வேடர், வேட்டுவர் - வேட்டை புரிபவனைக் குறிக்கும் பெயர்கள்.

வேட்டுவரின் பிற பெயர்கள்

வேட்டையாடுதலைத் தமது முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள் வேட்டுவர்கள். வேடர் என்ற சொல் வேட்டுவர் என

ஆயிற்று. இவர்கள் வேடன், வெற்பன், சிலம்பன், எயினன், ஊரன், வேட்டைக்காரன் வேட்டுவன், வேட்டுவதியரையன், ஊராளி மற்றும் நாடாள்வான் முதலான பெயர்களாலும் அழைக்கப்பட்டனர். இவர்கள் கவுண்டர், காடவராயன், மன்றாடியார், வானவதிராயன், காங்கேயன், நாயக்கர், முத்தரையர், காடுவெட்டரராயர், வள்ளல், கொங்குராயர், ஊர்க்கவுண்டர், கங்கதிராயர் மற்றும் பிள்ளை முதலான பட்டங்களைப் பெற்றிருந்தனர் என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம். வேட்டுவ வேந்தர்களோ பல்லவராயர், புலவராயர், சந்தனராயர் மற்றும் நரசிங்கராயர் முதலான பட்டப்பெயர்களைப் பூண்டிருந்தனர் என்பதனைக் குறிப்பு நாட்டுச் செப்பேட்டால் அறியலாம்

கல்வெட்டுகள், செப்பேடுகள் மற்றும் ஓலைச் சுவடிகளில் வேட்டுவர்களின் சிறப்புப் பெயர்கள்

1. காவலியர், பூவலியர், மாவலியர், வேடர், வேட்டுவர்
2. காவலன், பூவலன், மாவலன், வேடர் ,வேட்டுவர்
3. காவளவர்,பூவளவர், மாவளவர், வில்வேடுவர், வேட்டுவர்.

பாணநாட்டில் இருந்த வேட்டுவர்களை கி.பி. ஆறாம் நூற்றாண்டுகளில் மாவலி வேட்டுவர் என அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. கொங்கு நாட்டில் இருந்த வேட்டுவர்களை கி.பி. 12 - ஆம் நூற்றாண்டுகளில் பூலுவ வேட்டுவர் என அழைக்கப் பட்டதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. சேர, சோழ, பாண்டிய, கோனாடு, பாணநாடு போன்ற நாடுகளில் இருந்த வேட்டுவகுலத் தலைவர்கள் ஆட்சித் தலைவர்களாக இருந்தார்கள். இதனால் இவர்களைக் காவலர் வேட்டுவர் என அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

சிலப்பதிகாரத்தில் வேட்டுவர்

சிலப்பதிகார வேட்டுவவரி வேட்டுவர் குலத்தவரை மறவர் எயினர் கொங்கர் கானவர் தொல்குடி வேடர் எனப் பல பெயர்களில் குறிப்பிடுகிறது. சிலப்பதிகாரத்தில் மறவர்களை வேட்டுவ வரியைக் காட்டிலும் வேந்தர் சொல் படைகளிலே அதிகமாக விளக்கியுள்ளனர். புகார் நகரில் கரிகால் வளவனுடன் இந்திரவிழா தொடங்கி கொற்றவைப் பணியில் கடந்து மதுரை பாண்டியன் இறந்து மதுரை காவடி விட்டு மறவர்கள் நீங்கியது வரை அதன் பின்பு சேரன் செங்குட்டுவனுடன் சென்று

ஆரியவேந்தரைக் வென்று கண்ணகிக்குச் சிலை எடுத்து இமயத்தில் வில் பொறித்தது வரை மறவரின் குறிப்புகள் காணப்படுகின்றன

“----------பெருங்களற்று ஒருத்தின்,
மறமிகு வாளும் மாலை வெண்குடையும்" (சிலப்- காட்சிக்காதை)

வாள் ஏந்திய மறவர்கள் காக்கும் பாண்டியன் அரண்மனையை, "மறவரும் பிறழாக் காப்பில் பாடி இருக்கைப் பகல் வெய் யோன்தன்" (சிலப்- காட்சிக் காதை- 90)

சங்க நூல்களில் வேட்டுவர்

மாற்பித்தியார் என்ற புலவர் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் 'சொல்வளை வேட்டுவன்' என்று குறித்திருக்கிறார். அப்பாடல்,

"கறங்கு வெள் அருவி ஏற்றலின் நிறம் பெயர்ந்த
தில்லை அன்ன புல்லென் சடையோடு
அள் இலைத் தாளி கொய்யும்மோனே
இல் வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே"

என அமைந்துள்ளது. இப்பாடலில் ஒலிக்கும் வெள்ளிய அருவியில் பலகாலம் நீராடுவதால் தன் கருநிறம் மரித்தில்லை. இவை போன்று நிறம் மரிய சடையோடு கூடியவனாக அடர்ந்த தாளி இலையைப் பறித்துக் கொண்டிருக்கிறானே, இவனேதான் முன்னர் மயில் போன்ற இளம் அழகிகளை வேடன் வலையை விரித்துப் பறவைகளைப் பிடிப்பது போல வார்த்தை வலை விரித்துத் தன்வசம் விழச் செய்தவன். வேடன் வலை விரித்து விலங்கினைப் பிடிப்பது போல சொல்லால் வலைவீசிப் பெண்களைத் தன்வசப்படுத்துபவன் என்பதால், 'மடமயில் பிணிக்கும் சொல்வளை வேட்டுவன்' எனப் புலவர் சுட்டியிருக்கிறார்.

“வல்வில் வேட்டுவன்” (புறம் 150) 'யானை வேட்டுவன்' (புறம்-214) போன்ற சொல்லாட்சிகளும் சங்க இலக்கியங்களில் காணப்படு கின்றன. வல்வில் ஓரியின் வம்சாவழியினர் புல்லை வேட்டுவ குலத்தவர்கள் ஆவார்கள். வல்வில் என்று அவன் பெயரின் அடைமொழி குறிப்பிடுகிறது. வில்லுக்கு உரிமையுடையவர்கள் யார்? வேட்டுவர்கள். ஓரியைப் பற்றி வன்பரணர் பாடிய பாடல்

“யாம் நாட்டிடன் நாட்டிடன் வருதும் ஈங்கோர்
வேட்டுவர் இல்லை நின் ஒப்போர்” (புறம் 152)

என்று விறலியர் புகழ்வதாகக் கூறுகின்றது. பல நாடுகளுக்குச் சென்று வருபவர்கள் நாங்கள். ஆனால் எங்கும் உனக்கு நிகரான வேட்டுவர் எவரும் இல்லை என்பது இதன் பொருள். ஆக வல்வில் ஓரி வேட்டுவர் சாதியைச் சேர்ந்தவன் என்பது உறுதிபடுகிறது. வல்வில் ஓரியின் வம்சாவழியினர் கொல்லி மழவர்கள் ஆவார்கள்.

“காந்தளம் கண்ணி கொலைவில் வேட்டுவர்
செங்கோட்டு ஆமான் ஊனொடு காட்ட
மதன் உடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன் உடை நியமத்து பிழி நொடை கொடுக்கும்
குன்று தலை மணந்த புன்புல வைப்பும்” (பதிற்றுப்பத்து 30:9-13)

காந்தள் பூவால் தொடுக்கப்பட்ட தழைமாலையினையும், கொலை புரியும் வில்லினையும் கொண்ட வேட்டுவக் குடியினர் செம்மையான கொம்பினையுடைய காட்டுப் பசுவின் இறைச்சியோடு காட்டில் உள்ள வலிமையுடைய யானைகளின் வெண்மையான தந்தங்களையும் எடுத்துக்கொண்டு அவற்றைப் பொன்னை உடைய கடைத் தெருக்களில் கள்ளுக்கு விலையாகக் கொடுக்கும் குன்றுகள் கூடிக்கிடக்கும் புன்புலமாகிய பாலைநில ஊர்களின் மக்கள் ஆவர் என்கிறது.

“கான் உறை வாழ்க்கை கத நாய் வேட்டுவன்
மான்தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பும் நிறைய” (புறம் 33- 1 / 3)

இப்பாடலில் காட்டில் வாழும் வாழ்க்கையுடைய, சினம் உள்ள நாயையும் உடைய, வேட்டுவக் குடியைச் சேர்ந்த ஒருவன் மான் தசைகளைக் கொண்டு வருவர் என்றும், இடைச்சியர் தயிரைக் குடங்களில் கொண்டு வருவர் என்றும், வேட்டுவக் குடியினர் முல்லை நிலத்தில் வாழ்ந்தார்கள் என்பதை இச்செய்யுள் கூறுகிறது.

“--------------------------------வெவ்வினை
பயில் அரில் கிடந்த வேட்டு விளி வெரீஇ” (அகம்- 387 -8 /9)

கடுமையான வினைகளை உடையரும், காடுகளில் தங்கி கிடப்பாருமாகிய வேட்டுவக் குடியினரின் ஓசையைக் கேட்டு அஞ்சி வாழ்ந்தார்கள் என்பதை இச்செய்யுள் கூறுகிறது.

புறப்பொருள் வெண்பாமாலையில் வேட்டுவர்

முல்லை நிலத்தை ஆண்ட வேட்டுவக் குடியினரைப் பற்றி புறப்பொருள் வெண்பாமாலையின் வாகைப் படலத்தில் கூறப்பட்டுள்ளது.

"செருமுனை உடற்றும் செஞ்சுடர் நெடுவேல்
இருநிலம் காவலன் இயல்பு உரைத்தன்று" (அரச முல்லை-171)

பெரும்பகையை வருத்தும் சிவந்த சோதியால் பொலிந்த நெடிய வேலினையுடைய பெரிய நிலத்தை (முல்லை) ஆளுகிற காவலன் (வேட்டுவன்) தன்மையைக் கூறியது. மேலும் ஊருந்திரை ஆரவாரிக்கும் குளிர்ந்த கடலை வேலியாக உடைய நிலத்து கமழ்தார் உடைய மன்னன் பாதுகாத்துச் சிறப்பித்ததை,

"தவழ்திரை முழங்கும் தண்கடல் வேலைச்
கமழ்தார் மன்னவன் காவன் மிகுந்தன்று"
(காவன் முல்லை -178)

மூதின் முல்லை என்பது புறத்திணைக்குரிய ஒரு துறையாகும். புறத்திணையில் ஒன்றான வாகைத்திணையில் வரும் துறை மூதின் முல்லை. மூதில் என்பது மூத்தகுடி, மூத்த முல்லைக்குடி, அது மேம்பட்ட குடி எனப்பட்டது. வேட்டுவக் குடியைச் சேர்ந்த பெண்களை (வேட்டுவச்சி) சங்க மற்றும் காப்பிய கால இலக்கியங்கள் மூதிற் பெண்டிர், மூதில் மகளிர் என அழைக்கப்பட்டனர். (புறம் 19/15, 279/) மூதின் மகளிரைப் பற்றி புறநானூறு கூறுகிறது. (புறம் 326,333) முல்லை நிலத்தில் "சிலைவில் பகழிச் செந்துவர் ஆடைக் கொலைவில் எயினர் தங்கை" (ஐங்குறுநூறு 363) தலைவியாக கூறப்படுகிறது.

முடிவுரை

வேட்டுவர்களின் சொற்பொருள் விளக்கமும், அவர்களின் வேறுபெயர்களையும் பற்றி இக்கட்டுரை விளக்கியுள்ளது.

வேட்டுவர்களின் வாழ்வியலைப் பற்றி சிலப்பதிகாரத்திலும், சங்க இலக்கியங்களிலும் சில இடங்களில் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

புறப்பொருள் இலக்கண நூலில் வேட்டுவக் குடியினரின் வாழ்வியல் நிலைகளைப் பற்றி விளக்கியுள்ளதைக் காணலாம்.

வரலாற்றில் வேட்டுவர்களின் வாழ்வியல்

ச. செந்தில்குமார்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலை மற்றும் ஆராய்ச்சி வரலாற்றுத்துறை,
தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

முன்னுரை

வேட்டுவர் சமூகப் பெருமக்கள் பலர் அரசு, அரையர், மந்திரி, நாடாழ்வான் என்ற சிறப்புப் பெற்றும் அதியமான், சேனாவரையன், காலிங்கராயன், தொண்டைமான் என்ற சிறப்புப் பெயர் அளிக்கப்பட்டும் பெரும் சிறப்புப் பெற்றுள்ளனர். பலருக்கு அரசர்கள் தங்கள் பெயர்களையே வைத்துக் கொள்ளும் உரிமையையும் கொடுத்துள்ளனர். 12-14ஆம் நூற்றாண்டுகளில் கொங்கு நாட்டுச் சமுதாய வாழ்வில் உயர்நிலையில் அவர்கள் இருந்துள்ளனர் என்பது இதனால் தெளிவாகத் தெரிகிறது. பெயர் அமைப்பே அதனை விளக்குகிறது.

> **“வெங்கம்பூர் புல்லை வேட்டுவரில் வானவதரையன் வலங்கை வாழவந்தான் ஆன சுந்தரபாண்டிய வீரசிங்கதேவன்” “காங்கயம் காவலன் வெண்கொற்றரில் செய்யாழ்வி சூரியதேவன் ஆன தொண்டைமான்” “கீரனூர் வேட்டுவர் கீழைக்கரையரில் பெரிய அரசு அழகிய பிள்ளை" "திங்களூர் வேட்டுவர் செய்யர்களில் போத்தன் கோன் ஆன சேனாவரையன்” “முளையூர் மணலூர் கிழவன் சோழகோன் நல்வாளை வேட்டுவர்” “பொழில்வாய்ச்சி பூலுவர் சிலம்பன் பிள்ளையான அதியன் காலிங்கராயன்” “பருத்திப்பள்ளி ஊராளி வேட்டுவரில் அதியமான் நடுவில் நங்கன்” “பூலுவ வேட்டுவரில் மேற்சேரி**

வெள்ளைகளில் இராசன் நிறை யுடையான் ஆன தொண்டைமான்" "வேட்டமங்கலம் பூலுவரில் சோழன்" என்பன அவற்றைக் குறிக்கும் கல்வெட்டுத் தொடர்களாகும்.

பல்லவராயன் பட்டம்

அரசர்கள் தங்கள் உயர் அலுவலர்கட்கு விருது கொடுக்கும் வகையில் பல்வேறு பட்டப் பெயர்களை அளிப்பது வழக்கம். அப்படிப்பட்ட பட்டப் பெயர்களில் "பல்லவராயன்" என்பதும் ஒன்று. கொங்கு வேளாளர்களில் செங்கண்ண குலத்து லிங்கையனுக்குச் சோழ மன்னன் "பல்லவராயன்" என்ற பட்டப் பெயரை அளித்துக் கௌரவித்தான்.

"போரிட்ட பல்லவன் தேகத்தை வெட்டியே பொன்மகுடம் நீ பறித்தாய் செங்கதிர்ப் பரிதிகுல மகராச ராசனாம் திரிபுவனச் சக்கரவர்த்தி சித்தமகிழ் தளகர்த்தர் லிங்கயப் பல்லவன்" என்பது ஒரு தனிப்பாடல் பகுதியாகும். அவர்கள் வழிவழியாக அப்பெயரை வைத்துக் கொண்டதைப் பல இலக்கியங்களும் ஆவணங்களும் எடுத்துரைக்கின்றன.

வேட்டுவர் சமுதாயத்தில் பலர் அச்சிறப்புமிகு பல்லவராயன் பட்டத்தைப் பெற்றுள்ளதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

"அறச்சலூரில் கரைய வேட்டுவரில் செய்யான் பல்லவராயன்"

"பட்டாலியில் காவலன் வெண்கொற்றரில் சோணாப் பல்லவரையன்"

"முத்தூர் காவலன் வளவரில் உத்தமசோழப் பல்லவரையன்"

"ஈங்கையூரில் காவலன் குறும்பிள்ளரில் போத்தன் செய்யான் ஆன குலோத்துங்க சோழப் பல்லவரையன்"

"கரூரில் கரடி வேட்டுவரில் மானாபரணப் பல்லவராயன்' "கவையன்புத்தூர் பூலுவர் முட்டைகளில் அடையன் போத்தன் ஆன உத்தமசோழப் பல்லவரையன்" இவர்கள் அனைவரும் அரசர்களால் சிறப்பிக்கப்பட்டு உயர் அலுவலர்களாக இருந்தவர்கள் ஆவர்.

நீர்வளம் பெருக்கிய நேயர்

நீரை நிலத்தோடு சேர்ப்பார் புகழே உலகில் நிலைத்து நிற்கும் என்று குடபுலவியனார் என்ற சங்கப் புலவர் பாடினார். அதற்கேற்ப

நீர்வளம் பெருக்கிய வேட்டுவர் சமூகத்தார் பலர் இலக்கியங்களிலும் செப்பேடுகளிலும் புகழப்படுகின்றனர்.

மதுரைத் திருமலை நாயக்கர் காலத்தில் வடகரை ஆற்றூரில் அல்லாளன் இளையா நாயக்கர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் வேட்டுவர் சமுதாயத்தில் பரமத்திச் சீமை முளை கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்று செப்பேடு கூறுகிறது. நாயக்கர் என்பது மதுரை நாயக்கர் அளித்த பட்டப்பெயர் ஆகும்.

அல்லாளன் இளையா நாயக்கருக்கு முன்னரே கொங்கு நாட்டில் பல வேட்டுவர் சமுதாயப் பெரியவர்கள் மக்கள் நலம் பேண நீர்நிலை ஏற்படுத்தியுள்ளனர்.

மோடமங்கலம் பூச்சந்தை வேட்டுவர் பெரிய பெருமாள் முத்தாண்டான் என்பவர் வடபரிசார நாட்டுக் கப்பலன் கிடாரன் என்னும் ஊரில் குளம் ஒன்றை வெட்டி அதற்குத் "தாமரைக்குளம்" என்று பெயரிட்டார்.

குளவாற்றூர் ஊராளி செம்ப வேட்டுவரில் தொண்டயன் பிள்ளான் ஆன செயங்கொண்ட சோழக் கொங்காள்வான் குளம் ஒன்றை வெட்டி நீர்ப்பாசனம் செய்ய வாய்க்கால்களும் அமைத்தார்.

முளையூரான அஞ்சாதகண்டன் நல்லூரில் மணலூர் கிழவன் சோழகோன் நல்வாளை வேட்டுவர் கிணறு ஒன்றை வெட்டி வைத்தார்.

பெரிய விலங்கி ஊராளியாகிய சுண்டை வேட்டுவர் சிலம்பன் ஒரு குளம் வெட்டி அதற்கு "அக்கசாலை கங்கை" என்று பெயரிட்டார். வாழவந்தி இரும்புளை வேட்டுவரில் வடசேரி ஆறங்காடி குளம் ஒன்றை வெட்டினார். இவ்வாறு நீர்நிலை தந்த வேட்டுவர் சமுதாயப் பெருமக்கள் பலராவர்.

உழவுத் தொழில்

உழவுத் தொழிலுக்கு முற்பட்டது வேட்டையாடும் தொழில். வேட்டைத் தொழிலில் ஈடுபட்ட வேட்டுவர் குலப் பெருமக்கள் பலர் உழவுத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். அதனால் அவர்கள் வேள்-வேளான் என்ற பெயர்களையும் பெற்றுள்ளனர். இதனைக் கல்வெட்டுகள் மூலம் அறிகின்றோம். வேட்டுவர் சமூகச் செப்பேடுகள் மூலம் அவர்கள் 'மேழிக்கொடி" பெற்ற உரிமையுடையவர்கள் என்பதையும் அறியலாம்.

உழவுத் தொழிலுக்கு உதவியாகப் பலர் அணை, ஏரி, குளம், வாய்க்கால்கள் அமைத்துள்ளனர். பலர் கோயிலுக்கு நிலக்கொடை அளித்துள்ளனர். சிலர் பொன் கொடுத்து நிலம் வாங்கிக் கொடை கொடுத்துள்ளனர்.

"பட்டாலி காவலன் குறும்பிள்ளரில் செயங்கொண்ட வேளான்" "புன்னத்துப் பூவாணி வேட்டுவரில் வேளான் கரியான் ஆன மருதங்க வேளான்" "கவையன்புத்தூர் வேட்டுவர் பூலுவர் மயிலரில் வேளான் வேள் பெரிய பிள்ளை " "திருவகழிமங்கலத்து கரைய வேட்டுவரில் காளிப் பிடாரன் ஆன கரைய வேளான்" என்பன வேளான் பட்டம் பெற்ற சில வேட்டுவர் சமுதாயப் பெருமக்கள் ஆவர்.

ஆலயத் திருப்பணிகள்

பண்டைய அரசர்கள் காடுகளை அழித்து மக்கள் வாழும் நாட்டுப் பகுதியாக்கி, நீர்நிலைகளை ஏற்படுத்தி, கோயில்களைக் கட்டிய பின்னரே மக்களைக் குடியமர்த்தினர்.

''காடு கொன்று நாடு ஆக்கி குளம் தொட்டு வளம் பெருக்கி கோயிலொடு குடி நிறுவி" என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

திருக்கோயில் இல்லாத ஊர்களைத் திரு இல்லாத ஊர் என்று தேவாரப் பாடல் கூறும். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி. எனவே எல்லாச் சமுதாயத்தினரும் கோயில் திருப்பணிகளில் பங்கு கொண்டது போல் வேட்டுவர் சமுதாயத்து ஆண்களும் பெண்களும் கோயில் திருப்பணிகளில் பங்கு கொண்டதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

சிலர் கோயில் முழுவதையும் திருப்பணி செய்துள்ளனர். சிலர் கோயில் திருப்பணி நடைபெறும்போது பெருந்திருவாசல், நிலைகால், தூண், போதிகை, முகவணை, நிர்மாலியத் தொட்டி, அர்த்தமண்டபம், மகாமண்டபம், பாவுகல், மண்டபம் ஆகியவற்றைக் கொடையாகக் கொடுத்துள்ளனர். இவ்விதக் கொடைகள் தனியாகவும் பலர் சேர்ந்தும் கொடுத்துள்ளனர். சிலர் குதிரை போன்ற வாகனங்கள் செய்தளித்துள்ளனர். சிலர் இறை படிமங்களையும் எழுந்தருளச் செய்துள்ளனர். இவ்வாறு திருப்பணிகளில் பங்கு கொண்ட,

"ஆறுதொழு காவலன் புன்னகரில் கரியான்வீரன்" "கீரனூர் கீழைக்கரையரில் பெரிய அரசு அழகியபிள்ளை " "பிரமியம் காவலன்

காச்சரில் சிலம்பன் அடைக்கலவன்" "ஒலகடம் கள்ளை வேட்டுவரில் கருஞ்சொக்கன் வலிய சொக்கன்" "திங்களூர் கரைய வேட்டுவரில் சமயமந்திரி'' ''பெரும்பழனம் பூலுவ வேட்டுவரில் மேற்சேரி வெள்ளைகளில் இராசன் நிறையுடையான் தொண்டைமான்'' ஆகிய பெயர்களைக் கல்வெட்டில் காணலாம்.

புதிய கோயில்கள் கட்டுவதைக் காட்டிலும், அல்லது அதில் பங்கு பெறுவதைக் காட்டிலும் பழைய கோயில்களைப் பழுது பார்த்துத் திருப்பணி செய்வது நான்கு மடங்கு புண்ணியம் தரும் செயல் என்று நூல்கள் கூறுவதை "முரிந்து வீழ்ந்தன வெடித்தன உடைந்தன முதிய நெரிந்த வாகிய கோபுர நெடுமதிள் பிறவும் தெரிந்து முன்னையில் சீர்பெறப் பதுக்குவோர் பண்டு புரிந்து ளோர்பெறும் புண்ணியம் நான்மடங் குறுவர்'' என்ற பாடல் மூலம் உணர்ந்து பழைய கோயில்களைப் பலர் பழுது பார்த்துள்ளனர். "அர்த்தமண்டபமும் மகாமண்டபமும் அழிவு சோர்ந்து தூபி பரியந்தமாகச் சாந்தும் பண்ணி எழுவித்து

நிர்மாலியத் தொட்டியும் சமைப்பித்தேன்" என்று பவானி வட்டம் பட்டிலூர் வாகீசுவரர் கோயிலில் 1337 ஆம் ஆண்டு தான் செய்த பணிகள் பற்றி வேட்டுவர் சமூகப் பெரியவா பிள்ளை என்பவர் கல்வெட்டில் பொறித்துள்ளார்.

கொடுமணல் கணபதிபாளையத்தில் செல்லாண்டியம்மன் கோயிலைப் பழுது பார்த்ததை ஒட்டப்பாளையம் வேட்டுவக் கவுண்டர்கள் பின்வருமாறு குறிக்கின்றனர்.

"ருத்ரோத்காரி வருஷம் ஆவணி மாதம் 6ஆம் தேதி வேட்டுவ ராஜகுல வம்சம் ஒட்டபாளையம் வேட்டுவக் கவுண்டர் அவர்களால் செல்லாண்டியம்மன் கோயில் ஜீர்ணோத்தாரம் செய்யப்பட்டது"

விளக்குக் கொடையளித்தோர்

விளக்கெரிக்கக் கொடையாக நிலம், நெல், பொன், காசு, ஆடு, மாடு, எருமைகள் ஆகியவை மூலப்பொருள்களாகக் கொடுக்கப் பட்டன. திருவிளக்குகள் ஏற்றும் பணியைச் செய்யத் 'திருவிளக்குக் குடிகள்'' என்போர் இருந்தனர். விளக்கேற்றுவது புண்ணியம் என்றும், விளக்கை அணைப்பது மிகப் பெரிய பாவம் என்றும் கருதப்பட்டது. வேட்டுவர் சமுதாய ஆண்களும், பெண்களும் பலர் கோயில்களில் விளக்குகள் எரியக் கொடை கொடுத்துள்ளனர்.

"கொடிவேரி சிறுத்தலை வேட்டுவரில் தாமன் தாமனான இருங்கோளன்'' ''பட்டாலி காவலன் புன்னாடியரில் காளி காளி'' "திங்களூர் கொடுகத்தாளி வேட்டுவரில் மதவபிள்ளை சேனன்" "முத்தூர் காவலன் வளவரில் சிங்கனான அங்கராயன்'' ''துடுமல் காட்டு வேட்டுவரில் முத்தன் சக்கயன்" "நடுவச்சேரி கரடி வேட்டுவர் செய்ய பிள்ளை", "தென்சேரி பூலுவ வேட்டுவரில் சிலம்பன் செஞ்சிறுபிள்ளை" முதலியோர் விளக்கேற்றியோருள் சிலராவர்.

கூத்துக்கலை வல்லவர்கள்

இயல், இசை, நாடகம் என்பன முத்தமிழின் மூன்று பிரிவுகள். நாடகம் என்பதைக் "கூத்து" என்றும் கூறுவர். சங்க இலக்கியங்களில் கூத்துக் கலைவல்ல கூத்தர் குறிக்கப் பெறுகின்றனர். கொங்கு நாட்டில் மக்கள் ஆதரவு பெற்ற ஐந்து வகைத் தமிழ்வாணர்களில் கூத்தாடி என்பவர் ஒருவர்.

வேட்டுவர் சமூகத்தில் பலர் ''கூத்தன்'' என்று பெயர் பெற்றுள்ளனர். கூத்தன் என்பது தில்லையில் நடனம் ஆடுகின்ற நடராசப் பெருமானையும் குறிப்பதாகக் கொள்வர். ஆனால் கூத்தன் கூத்தன் (கூத்தாடுகின்ற கூத்தன்) ஆனந்தக் கூத்தன் என்பன போன்ற தொடர்களால் இவர்கள் கூத்துக் கலை வல்லவர்களாகவே இருக்க வேண்டும். 'பட்டாலி காவலர் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான

வாழவந்தான்'' ''பட்டாலி காவலன் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான அதியமான்" ''பட்டாலி கூத்தன் கூத்தன் ஆன அகளங்க நாடாழ்வான்'' ''பந்தரத்தை பூவாணி வேட்டுவரில் பெரும்பற்றார்

கூத்தன் உடையாரான ஆனந்தக் கூத்தர்'' ''வடகரையாற்றூர் புல்லை வேட்டுவரில் கூத்தாடும்தேவன் இருங்கோளனான வலங்கை மீகாமன்'' என்பன கல்வெட்டுகளில் காணப்படும் சில கூத்தர்கள் ஆவர். பட்டாலிக் கல்வெட்டு ஒன்றில் ''யாழ்வல்லான்'' என்று ஒருவர் குறிக்கப்பட்டுள்ளார். அக்காலத்தில் பட்டாலி வேட்டுவ குலப் பெருமக்கள் கலைப்பயிற்சி உடையவர்களாகவும், கலையார்வம் மிக்கவர்களாகவும் இருந்துள்ளனர்.

மகளிர் மாண்பு

வேட்டுவர் சமூகப் பெண்கள் ஆண்களுக்கு நிகராகக் கோயில் திருப்பணிகள் பலவற்றில் பங்குபெற்றதுடன், கோயில்களில் எப்பொழுதும் எரியும் நந்தா விளக்கும், குறிப்பிட்ட பூசை வேளை களில் எரியும் சந்தி

விளக்கும் ஏற்றப் பொன்னும், பொருளும் பெரும் கொடையாக அளித்துள்ளனர்.

பட்டாலியில் காவலர் குறும்பிள்ளரில் காவன் அரையன் என்ற தன் கணவனுக்காக நாயக விச்சி நாயன் சிலம்பி என்ற வேட்டுவர் சமூகப் பெண் தன் கணவன் நினைவாகப் பிடாரி கோயிலையே கட்டியுள்ளாள்.

"காங்கயம் காவலன் குறும்பிள்ளரில் செங்காளி மனைக்கிழத்தி புளியம்மை" "ஆறுதொழு வேட்டுவர் குலப் பெண் பல்லாண்டி" "பட்டாலி காவலன் வளவர் மனைக்கிழத்தி சோழாண்டி' "பட்டாலி காவலன் குறும்பிள்ளரில் போடன் மனைக்கிழத்தி கோவி" "பட்டாலி காவலன் வெண்கொற்றர் சோணாப் பல்லவரையன் மனைக்கிழத்தி செங்கூத்தாண்டி" "கொற்றனூர் காவலன் கள்ளிப்பிள்ளரில் செய்யான் வையான் மனைக்கிழத்தி உடையபிராட்டி" "ஒலகடம் புன்னம் ஊராளி வேட்டுவர் மனைக்கிழத்தி பாண்டாண்டி" "பட்டாலி வேட்டுவரில் காவலன் குறும்பிள்ளரில் அதியமான் மனைக்கிழத்தி வீரி" "காவலன் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான அகளங்க நாடாழ்வான் மனைக்கிழத்தி அவினாசியாண்டி" ஆகியோர் கோயில் திருப்பணி செய்தவர்களில் சிலராவர்.

முடிவுரை

இவ்வாறாக வேட்டுவர்களின் பங்கு சமூகத்தில் பல மடங்கு விரிவடைந்துள்ளது. வேட்டுவர் சமுதாயப் பெண்கள் செல்வ வளத்துடன் தாங்கள் விருப்பம்போல் செலவுகள் செய்யும் பொருளாதாரச் சுதந்திரத்துடன் வாழ்ந்துள்ளனர். தமிழகப் பெண்கள் வரலாற்றில் இது அரிய செய்தி ஆகும். மனைக்கிழத்தி என்பது உயர் மதிப்புடைய சொல்லாகும். இவ்வாறு பல்வேறு செய்திகள் இக்கல்வெட்டுகளில் காணக் கிடைக்கின்றன.

துணை நூல் பட்டியல்

1. இராசு,செ., வேட்டுவர் சமூக ஆவணங்கள், கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை, ஈரோடு, 2008

2. இராஜசேகர தங்கமணி,ம.இரா., கொங்குச் சமுதாயம் (வேட்டுவர்), கொங்குப் பதிப்பகம், கரூர், 2003

3. பரணன், இல., பொன்னர் சங்கர் கதை ஒரு சமூகவியல் ஆய்வு, சமூக வரலாற்றுச் சங்கம், பெரியாரியல் கலை இலக்கிய ஆய்வு மன்றம், கரூர், 2010.

கொங்கு நாடும் வேட்டுவர் வரலாறும்

பா. கமலவேணி எம்.ஃபில்.
க/பெ. கே. ஆறுமுகசாமி,
A-13 விஸ்கோஸ் பார்க்,
தொட்டிபாளையம் - சாலை,
சின்னியம்பாளையம் (அஞ்), கோவை - 641 062
அலைப்பேசி எண்: 9486406710
kamalaarumugasamy@gmail.com

முன்னுரை

சமூகவியல் ஆய்வில் மனித இனங்களைப் பற்றிய ஆய்வு தனியிடம் பெறுகின்றது. மேலும் தொன்மையான இனங்கள் பற்றிய வரலாற்று ஆய்வு புதிய புதிய செய்திகளைத் தருவதை மானுடவியலார் காட்டி வருகின்றனர். கூடவே அவ்வாய்வுகள் அகழாய்வுகள் போல புதுப்புது செய்திகளைத் தந்து கொண்டே இருக்கின்றன. தமிழ்நாட்டின் ஆதிகுடிகளில் முல்லை நிலத்தைச் சார்ந்த வேட்டுவர், பாலைநில வேட்டுவர் பற்றிய குறிப்புகளைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. குறிஞ்சிநிலப் பகுதிகளிலும் வேட்டுவர்கள் இருந்திருக்கின்றனர் என்பதையும் இலக்கியங்களின் மூலம் அறியலாம். கொங்கு நாட்டிலும் பல்வேறு பகுதிகளிலும் வேட்டுவ இன மக்கள் பரவிக் கிடக்கின்றனர். இவர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும் இவர்கள் சமுதாயத்திற்கு ஆற்றிய அருஞ்செயல்களையும் நாம் இவ்வாய்வுக் கட்டுரையில் காணலாம்.

கொங்குநாடு

பொதுவாக கொங்கு நாட்டின் தென் எல்லை பொதினி (பழனி வைகாவூர்) மேற்கு எல்லை வெள்ளிமலை; கிழக்கு எல்லை குளித்தலை, வடக்கு எல்லை தலைமலை என்று பெரும்பாலை என்றும் கூறப்படுவது வழக்கமாக உள்ளது.

“வடக்கு தலைமலையாம்” என தொடங்கி

"தெற்கு குழித்தண்டலை அளவும் கொங்கு"

என்று முடிகிறது ஒரு தனிப் பாடல். ஆனாலும் கொங்கின் வட எல்லை கன்னட நாட்டின் ஸ்ரீரங்கப்பட்டினம் வரை பரவி இருந்தது என்கிறார் மயிலை சீனி.வேங்கடசாமி.

சேர, சோழ, பாண்டியர் மூவரும் களப்பாள அரசன்மீது போர் தொடுக்க வேட்டுவ ராசாக்களின் உதவியை நாடினர். வேட்டுவராசாக் களும் அவ்வரசன் மீது போர் தொடுத்து அவர்களை வென்று, மூவேந்தர்களுக்கும் அவர்களுடைய நாட்டை மீட்டுக் கொடுத்தனர். இதனால் உவகை அடைந்த மூவேந்தர்களும் தங்களுடைய நாடுகளின் ஓரப்பகுதிகளை ஒன்று சேர்ந்தார் போல் சேர்த்து பரிசாகக் கொடுத்தனர். இந்த கொங்குப் பகுதிகளே கொங்கு என்று ஆகியிருக்கும் என்று கருதுவும் இடமுண்டு.

பழமையும் பெருமையும்

கொங்குமண்டலம் பழமையும் பெருமையும் உடையது. இந்த மண்ணின் பல பகுதிகளில் காணப்படும் முதுமக்கள் தாழிகள், பழைய மட்பாண்டங்கள், கல்வட்டங்கள் இதன் பழமையைக் காட்டுகின்றன.

"கொங்குப்புறம் பெற்ற கொற்ற வேந்தே" என்ற புறத்தொடர் இந்த நாடு தனிப்பிரிவாக இயங்கியதைக் காட்டுகிறது. தமிழ்நாட்டின் ஏனைய உட்பிரிவுகள் அனைத்தும் கடற்கரை கொண்டு துவங்க, கொங்கு நாடு மட்டும் கடற்கரை இல்லாத உள்நாடாக அமைந்துள்ளது. மேலும் மழைவளமும் இங்கு மிகக் குறைவு. இதனைக் "கொங்கு மலிந்தால் எங்கும் மலியும்" என்ற தொடர் காட்டுகிறது.

கொங்கு நாட்டில் கிடைக்கும் உரோமாபுரி நாணயங்கள் கடற்கரையும், துறைமுகமும் இல்லாத இந்த நாடு பண்டைக் காலத்தில் மேலை நாட்டோடு கொண்டிருந்த வணிகத் தொடர்புக்குக் கட்டியம் கூறுகின்றன. இந்த மண்ணை ஆண்ட குறுநில மன்னர்கள் வள்ளல் தன்மையில் வான்புகழ் பெற்றதோடு முடியுடை வேந்தர்க்கு மக்கட் கொடை நேரும் தகுதி கொண்டோராயும் திகழ்ந்திருந்தனர்.[1]

கொங்கு நாட்டில் வேட்டுவர்கள்

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட ஓவியங்கள் கொங்கு நாட்டிலும் அதை ஒட்டிய பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில்

வேட்டையாடும் காட்சியும் அதன் தொடர்பான காட்சிகளும் விலங்குகளும் தீட்டப்பட்டுள்ளன. இவையாவும் வேட்டுவ வாழ்க்கை முறையினைச் சித்தரிப்பவையே. கொங்கு நாட்டின் இரண்டு பகுதிகளில் ஈமச்சின்னங் களும், புதைகுழிகளிலும், இறந்தோர் நினைவுக்கற்களும், பெருங்கற்காலச் சின்னங்களும் காணப்படுகின்றன. இவையாவும் வேட்டையாடும் தொழிலைக் கொண்ட வேட்டுவருடையதே என்று அயல்நாட்டு ஆராய்ச்சி அறிஞர் நிக்கல்சன் குறிப்பிடப்பட்டுள்ளார்.

வேட்டுவர்களைக் கொங்கு நாட்டின் பூர்வகுடிகள் என்றும் கருதுவதுண்டு. சங்க இலக்கியங்களும் கல்வெட்டுகளும் இக்கருத்தையே உறுதி செய்கின்றன. வேட்டுவர்களைக் கொங்கு நாட்டில் ஆதிகுடிகள் என்று சோழன் பூர்வபட்டயம் சுட்டுகிறது.

அயல்நாட்டு ஆராய்ச்சி அறிஞர். மு.ஹ.நிக்கல்சன் கூறிய கருத்துக்கள் வேட்டுவர்கள் "கொங்குநாட்டின் பூர்வகுடிகள் என்ற கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

குடியேற்றம்

கொங்கு நாட்டின் குடிகளான வேட்டுவர்களுடன் மேலும் பல பகுதிகளிலிருந்து வந்தும் வேட்டுவர்கள் கொங்கில் குடியேறினார்கள். கொங்கு நாடு களப்பிரர்களின் ஆதிக்கத்தில் இருந்தபோது காளத்தி6 நாட்டுப் பகுதிகளினின்றும், பிற வடபகுதிகளிலிருந்தும் வந்து வேட்டுவர்கள் கொங்கு நாட்டில் குடியேறினார்கள். பின்னர் ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் நட்புறவு சிறந்திருந்த காலத்தில் காளத்தி நாட்டிலிருந்து 16,000 வேட்டுவக் குடும்பங்கள் கொங்கு நாட்டில் குடியேறினர். இவ்வேட்டுவர்கள் கொங்குநாடு முழுவதும் பரவியிருந்தபோதும், தெற்கு தென்கிழக்குக் கொங்கு நாட்டிலேயே மிகுதியாகக் குடியேறிருந்தனர். இதனைச் சுந்தரர் தேவாரமும் உறுதி செய்கிறது.

"முடுகு நாறிய வடுக வேடுவர் வாழ் முருகன் பூண்டி"[3]

என்று குறிப்பிடுவது இக்கருத்தை வலியுறுத்தும்.

காணியாளர்கள்

கொங்கு நாட்டில் வேட்டுவர் சிலர் காணியாளர்களாகச் சிறப்புற்று விளங்கினர். இவர்கள் பகைவர்களை வெட்டி முடிக்கின்ற காரணத்துக்காகப் பல ஊர்களைக் காணியாகப் பெற்றனர். 24 நாடுகளிலும் காணி உரிமை

பெற்றிருந்தனர். வடபரிசார நாட்டுக் கோசனம் காணியாளர்களாக முன்னை வேட்டுவரும், அறச்சலூர் காணியாளர்களாகச் சாந்தப்படை வேட்டுவரும், பூந்துறை நாட்டு அறச்சலூர்க் காணியாளராகக் கரைய வேட்டுவரும் உரிமை பெற்றிருந்தனர். வெங்கஞ்சி வேட்டுவர்கள் சிற்றூர்ப் படலோடு குறிச்சி, மழபாடி வடகரை நாட்டு இருப்புலி, தென்னிலை முதலிய ஊர்களுக்குக் காணியாளர்களாக விளங்கினர். மின்ன வேட்டுவர்கள் கவுந்தப்பாடி, மின்ன வேட்டுவம்பாளையம், பட்டைய காளிபாளையம், பெருமாம்பாளையம், ரங்கன் காட்டூர் முதலிய ஊர்களுக்குக் காணியாளர்களாக இருந்தனர். பள்ளக்குழி, தும்பங்குறிச்சி, கழனூர், இளநகரி, காளிபட்டி, பழமங்கலம் ஆகிய ஊர்களின் காணியர்களாக வேட்டுவரை மட்டுமே நூல்கள் குறிக்கின்றன.

காணி உரிமை ஊர்களுக்கு மட்டுமன்றிக் கோயில்களுக்கும் இருந்தது. நீலியம்மன் கோயில், வேங்கபுரம் அம்மன் கோயில், கண்டியம்மன் கோயில் ஆகியவற்றின் காணி வேட்டுவர்களுக்கே உரியதாக இருந்தது. உரிமைகள்

முப்பாட்டுக்காரர்

பல கோயில்களுக்கு முப்பாட்டுக்காரர்களாக வேட்டுவரே இருந்துள்ளனர். இன்றும் "ஆத்தூர் சோழியம்மன் திருக்கோயிலுக்கு முப்பாட்டுக்காரராக விளங்கும் சிறப்பு வேட்டுவர் சமுதாயத்திற்கே உரியதாக உள்ளது."[5]

காணி உரிமை மாற்றம்

வேட்டுவர்கள் தாங்கள் ஆண்டு அனுபவித்த காணி உரிமை களைப் பொன்னும் பொருளையும் வாங்கிக் கொண்டு வேளார்களுக்குக் கொடுத்துவிட்டனர். தற்போது வேளார்கள் அனுபவித்துவரும் காணி உரிமைகள் பெரும்பாலும் வேட்டுவப் பெருமக்களுடையதே. "வேட்டுவர்கள் உக்கலியரை விரட்டியதால் தாம் பெற்ற தென்னிலைக் காணியில் கால்பங்கு உரிமையை 1000 பொன்னுக்கு வேளாளருக்குக் கொடுத்துவிட்டனர் என்ற செய்தி இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது."[6]

வெள்ளோட்டுப் பட்டயம், புதுப்பாளையம், புங்கம்பாடி, மயிலாடி ஆகிய கிராமங்கள் வெள்ளை வேட்டுவன் அதிகாரத்தில் இருந்தன வென்றும் முத்துக்கவுண்டன் என்ற சாத்தந்தைக் குல வேளாளன் அவ்வூர்களைக் காணியாகப் பெற்றான் என்றும் கூறுகிறது.

வேளான் கையிலே பொன் வாங்கிக்கொண்டு இராசமூப்பாடு கோயில் மூப்பாடு அளித்தனர். வேட்டுவர்கள் அளித்துவந்த படியே முப்பாட்டுக்காரன், பண்டாரம், சக்கிடுபறையன் காவல்காரன் ஆகியோர்க்கு பொன்னும் நெல்லும் கொடுக்க[7] என்று பட்டயச் செய்தி உரிமை மாற்றத்தைக் கூறுகிறது. இதேபோல் நீலியம்மன் கோயில், வேங்கபுரம் அம்மன் கோயில் கண்டியம்மன் கோயில், மங்கலம் காளியம்மன், மின்னாம்புலி வன்னியம்மன் கோயில் ஆகியவற்றின் காணி வேளாளருக்கு மாறுகின்றன. உரிமைகள் வேட்டுவர்களிடமிருந்து சில ஊர்களுக்கு ஐயர், கணக்கர், தட்டார், பறையர், நாவிதர் யார் என்று கூட நியமனம் ஆகின்றனர். இன்றும் வேட்டுவ நாவிதன், வெள்ளாள நாவிதன் என இருக்கின்றனர்.

பாளையக்காரர்கள்

மூவேந்தரின் ஆட்சிக்குப் பின்னர் கொங்கு மண்டலத்தை வேட்டுவ இனத்தைச் சேர்ந்த பாளையக்காரர்கள் ஆண்டு வந்தனர். சங்ககிரி, தென்னிலை போன்ற பகுதிகள் இவர்களால் ஆளப்பட்ட பகுதிகளில் குறிப்பிடத்தக்கவை. இவர்கள் கோட்டைகள் கட்டிக் கொண்டு சிறப்புடன் ஆண்ட பெருமை பெற்றவர்கள். பாளையக்காரர்களில் நல்லண்ண பாண்டியவேந்தன் அறியப்படுகிறது.

வேட்டுவக் கவுண்டர்களில் மிகவும் புகழ்பெற்ற தலைவராகத் திகழ்பவர் பொள்ளாச்சி புரவி பாளையம் பாளையக்காரர் என்று குறிப்பிடப்படும் 'இம்மடி கோபண்ண மன்றாடியார்' ஆவர். "இவர் மலையாளக் குறுநில மன்னர்களுக்கும் பாலக்காடு அரசர்களுக்கும் முடிசூட்டி வைக்கும் உரிமையும் பெருமையும் கொண்டவர்."7 இவ்வாறு வேட்டுவர்கள் பலர் பாளையக்காரர்களாகச் சிறப்புடன் இருந்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

முடிவுரை

கொங்குநாடும் வேட்டுவர் வரலாறும் என்பதில் கொங்கு நாட்டின் பெயர்க்காரணம் பற்றிப் பல்வேறு கருத்துகள் இடம்பெற்றுள்ளன. இயற்கைப் பொருள்களின் அடிப்படையிலும், மன்னர்கள், மக்களால் வந்த பெயர் எனவும் கருத்துகள் இடம் பெற்றுள்ளன. கொங்கு நாட்டின் பூர்வ குடிகள் வேட்டுவர்கள் என அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் களப்பிரர்களின் ஆதிக்கத்தில் கொங்குநாடு இருந்தபோது காளத்தி நாட்டுப் பகுதிகளிலும், பிற வட பகுதிகளியிருந்தும் வேட்டுவக் குடும்பங்கள் கொங்கு நாட்டில் குடியேறியுள்ளனர்; இதைப் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளலாம்.

மேற்கோள் குறிப்புகள்

1. தனிப்பாடல்
2. புறநானூறு
3. தங்கமணி பேரா. ம. இரா. கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் வீர வரலாறு, சென்னை, முதற்பதிப்பு 5-12-1993, ப.22.
4. இராமமூர்த்தி வித்துவான். வி .(நூ.ஆ) கொங்கு நாட்டுக் கவுண்டர்கள், லோட்டஸ் பப்ளிஷிங் கம்பெனி (பி)திருச்சி முதற்பதிப்பு 1977. ப. 156
5. இராசு புலவர் செ, ஆத்தூர் காணியாளர் வரலாறு, ஆத்தூர் அருள்மிகு ஸ்ரீ சோளியம்மன் ஸ்ரீ முத்துசாமி ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா மலர். ப. 65
6. இராசு. புலவர். செ.. (ப.ஆ.). கொங்கு நாட்டு சமுதாய ஆவணங்கள் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு 1991. ?.143.
7. இராமமூர்த்தி. வித்துவான். வி. (நூ.ஆ.), மு.கு.நூல்.ப.326,

துணைநூற் பட்டியல்:

1. முத்துசாமி ப.(க.ஆ) கொங்கு நாட்டுப் பழங்குடிகள் கொங்கு நாட்டியல் கோபி செட்டிபாளையம் முதற் பதிப்பு டிசம்பர் 1977
2. இராசு.புலவர், செ. கொங்கு நாட்டு சமுதாய ஆவணங்கள், தமிழ் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் மு.ப.1991
3. இராமமூர்த்தி, வித்துவான் வி.,(நூ.ஆ), கொங்கு நாட்டு கவுண்டர்கள் லோட்டஸ் பப்ளீசிங் கம்பெனி (பி) திருச்சி, மு.ப.1977
4. தங்கமணி, மா. இரா., கொங்கு நாட்டு - வேட்டுவக் கவுண்டர்கள் வீர வரலாறு, 1999.
5. இராசு.புலவர். செ., கொங்கு நாட்டுச் சமுதாய வாழ்வில் வேட்டுவர் நிலை, தமிழ்நாட்டு வரலாற்று கருத்தரங்கு, சென்னை, முதற்பதிப்பு, மே 1979.
6. இராச, புலவர், செ., ஆத்தூர் காணியாளர் வரலாறு, ஆத்தூர் அருள்மிகு ஸ்ரீ சோனியம்மன் ஸ்ரீ முத்துசாமி ஆலய அஷ்டப் பந்தன் மஹா கும்பாபிஷேக விழா மலர்.

நொய்யல் செல்லாண்டியம்மன் கோவில் வரலாறும், வழிபாடும்

முனைவர் ப.சசிகலா
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு-16.

முன்னுரை

'இயற்கையிடமும், மரணத்திற்குப் பின்வரும் நிலைமையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம்' என்று சிக்மண்ட் பிராய்டு கூறுகிறார். அவை இயற்கை வழிபாடு, குலதெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு எனப் பல்வேறு வகையான வழிபாட்டு முறைகளாக மக்களிடையே காணப்படுகின்றன. இவற்றில் சிறுதெய்வ வழிபாட்டு முறையே பல்வேறுபட்ட மக்களும் வழிபடக்கூடிய வழிபாட்டு முறையாக உள்ளது. ஏனென்றால் பாமர மக்கள் சிறு தெய்வங்களைத் தங்கள் வாழ்க்கையோடு, ஒவ்வொரு காலகட்டத்திலும் இணைத்துக் கொண்டு செல்கின்றனர். அத்தகைய சிறுதெய்வங்களில் ஒன்றான நொய்யல் செல்லாண்டியம்மனைப் பற்றிக் காண்போம்.

செல்லாண்டியம்மன் கோவில்

கரூர் மாவட்டத்தில், கரூரிலிருந்து மேற்கே ஈரோடு செல்லும் வழியில் காவிரியும், நொய்யலும் இரண்டறக் கலக்கின்ற இடத்தில் நொய்யல் என்ற கிராமத்தில் செல்லாண்டியம்மன் கோவில் உள்ளது. இத்தெய்வத்தை நொய்யல் கிராம மக்கள் மட்டும் வழிபடுவது கிடையாது. நொய்யலைச் சுற்றியுள்ள நாயக்கனூர், நொய்யல், வேட்டமங்கலம், வெள்ளியம்பாளையம், குந்தாணிபாளையம், குளத்துப்பாளையம், காளிபாளையம், கவுண்டன் புதூர், முத்தனூர், சேமங்கி, சொட்டையூர், வெல்லக்கல்மேடு, மரவாபாளையம், வடுகப்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் அனைவருக்கும் பொதுவான கோயிலாக இருக்கிறது.

ஒவ்வொரு கிராமத்திலும் தெய்வங்கள் பல இருந்தாலும், 18 பட்டி மக்களும் வழிபடும் சிறப்புத் தெய்வமாகச் செல்லாண்டியம்மன் கருதப்படுகிறது.

இக்கோயிலை 1972 இல் இந்து சமய அறநிலையத்துறை எடுத்துக் கொண்டது. உண்டியல் பணம் அரசாங்கத்திற்குச் சொந்தமானது. கோவிலின் பராமரிப்புச் செலவை அரசாங்கம் செய்கின்றது. இருந்த போதிலும், கோயில் மிராஸ்களாகக் கருதப்படுகின்ற மரவாபாளையம் குமாரசுப்பிரமணியம் வகையறா ஐயரும், கரடி வேட்டுவ இனத்தைச் சேர்ந்த பூசாரியப்பன், வேட்டமங்கலம் பெரியசாமி வகையறா, ஆவுடையார்பாறை தர்மகர்த்தா, நொய்யல் ஊர்க்கவுண்டர், மரவாபாளையத்தைச் சேர்ந்த செல்லியாண்டியம்மன் கோவில் முப்பாடு, மாரியம்மன் கோவில் முப்பாடு, மரவாபாளையம் ஊர்க்கவுண்டர், சேமங்கி மணிக்காரர் வகையறா, அரிவாள் பிடிப்பவர் மற்றும் ஊர்க் கொத்துக்காரர்கள் போன்றோர் கோயில் நிர்வாகத்தில் கலந்து கொண்டு செயல்படுகின்றனர். முப்பாடு என்பது தலைமைப் பொறுப்பு வகிப்பவரைக் குறிக்கும்.

கோவில் வரலாறு

சுமார் 300 வருடங்களுக்கு முன் வேட்டுவக் கவுண்டர் இனத்தைச் சேர்ந்த கரடி வேட்டுவரான ஆவுடையார் பாறையைச் சேர்ந்த கவுண்டிய செல்லப்பக் கவுண்டரின் முன்னோரின் பரம்பரையில் இருந்த பசு ஒன்று தான் ஈன்ற கன்றுக்குப் பால் சுரக்காமல் மேய்ச்சலுக்குச் சென்ற போது, ஒரு இடத்தில் அருவி போல் பால் கரந்ததாகவும், அருகில் இருந்து இக்காட்சியைக் கண்டு அதிசயித்த மக்கள், அங்கு அம்மன் சிலை எழுப்பி வழிபடவும் ஆரம்பித்தனர். இத்தகைய வரலாறு செவிவழிச் செய்தியாகச் சொல்லப்பட்டு வருகிறது. அம்மன், செல்லாண்டியம்மன் என வழங்கப்படுகிறது.

வழிபாட்டு முறைகள்

கோயிலின் தினவழிபாடு, மாத வழிபாடு, விழாக்கள் என்ற அடிப்படையில் வழிபாட்டு முறைகளைக் காணலாம். தினமும் காலை 8 மணிக்கும், மதியம் 12 மணிக்கும், இரவு 7 மணிக்கும் என மூன்று கால பூஜை எப்பொழுதும் உண்டு. மார்கழி மாதம் முழுவதும் அதிகாலை 4.30 மணிக்குச் சிறப்புப் பூஜை உண்டு.

மாதந்தோறும் அமாவாசை அன்று மதியம் 12 மணிக்குப் பூஜை முடிந்தவுடன் பூசாரி ஆணிகள் பதிக்கப்பட்ட காலணி மீது நின்று குறி சொல்வார். இரவு செல்லாண்டியம்மனையும், மாரியம்மனையும் ஆவுடையார்பாறை பறையர் குலத்தவர் தப்பட்டை கொட்ட, நாதஸ்வரம் முழங்க கிராமத்தைச் சுற்றி ஊர்வலமாகக் கொண்டு வருவர்.

2002 - இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்திற்குப் பிறகு பௌர்ணமி பூஜை நடைபெறுகிறது. அதை நாயக்கனூர் சடகோபன் வகையறா செய்து கொண்டு வருகின்றனர். மேலும் ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதி அன்று இரவு சிறப்பு வழிபாடும், அன்னதானமும் நடைபெற்று வருகின்றன.

ஆடிப் பதினெட்டு

ஆடி மாதம் பதினெட்டாம் நாள் அன்று காவிரியும், நொய்யலும் இணைகின்ற இடத்திற்குச் செல்லாண்டியம்மனைப் பரிசலில் கொண்டு சென்று, பரிசலை வலமிருந்து இடமாகவும், இடமிருந்து வலமாகவும் சுற்றி, அம்மனைக் கிராம மக்கள் மகிழ்விப்பர்.

சித்துப் பொங்கல்

‘சிறு பொங்கல்’ என்பதே காலப்போக்கில் ‘சித்துப் பொங்கல்’ என்று மருவி வழங்கியிருக்க வேண்டும். கார்த்திகை மாதம் வளர்பிறையில் வியாழக்கிழமை இப்பொங்கல் நடைபெறும். இதில் 18 பட்டியைச் சார்ந்த மக்களும் கலந்து கொள்வர். செல்லாண்டியம்மனுக்குப் பச்சரிசிப் பொங்கலும், கோயில் காவல் தெய்வமான வேலாமரத்தையனுக்கு ‘அடசப் போடுதல்’’ என்று சொல்லி கோழியைப் பலி கொடுப்பதும் நடைபெறும். இந்த மாதத்தில் நெல், கதிர் கொண்டு நிற்கும் காலம் ஆகவே பயிர் நன்றாக வளர்ந்து விளைச்சல் பெருகப் பொங்கலிட்டு பலியிடுகின்றனர்.

கார்த்திகை தீபம்

கார்த்திகை மாதத்தில் தீபத்தன்று அம்மன் கோவிலில் 2 லிட்டர் எண்ணெய் பிடிக்குமளவு, இரண்டு பொயீய விளக்குகள் ஏற்றப்படும் ஒரு விளக்கைக் கோயில் தர்மகத்தாவும், மற்றொன்றை மரவாபாளையம் கவுண்டரும், முப்பாடும் ஏற்றி வைப்பர்.

தீபம் ஏற்றிய பிறகு இரவு ‘‘சொக்கப்பனை ஏறுதல்’’ என்ற நிகழ்ச்சி நடைபெறும். சொக்கப்பனை என்பது கம்பு, சோளத் தட்டுகளால் குடிசை

போல் தீப்பற்ற வைப்பர். சிறுவர்கள் ஓடிவந்து தீயை உயரத் தாண்டி மகிழ்வர். அத்தீயினுள் உப்பை மக்கள் வீசுவர். பின்னர், அச்சாம்பலை மக்கள் வயல்களில் தெளிப்பர். இந்நிகழ்ச்சியில் நொய்யலில் சிறப்புச் செய்யப்படும் செல்லாண்டியம்மன், மரவாபாளையம் சென்று அங்கும் சொக்கப்பனை ஏறும் நிகழ்ச்சி மூலம் சிறப்பு செய்யப்படும், மீண்டும் நொய்யல் வந்து சேரும்.

தேர்த் திருவிழா

செல்லாண்டியம்மன் கோவிலில் பலவிதமான வழிபாட்டு முறைகளும், விழாக்களும் நடைபெற்றாலும் பங்குனி மாதம் நடைபெறுகின்ற தேர்த்திருவிழா சிறப்புப் பெற்றது. விவசாய மக்கள் அறுவடை எல்லாம் செய்து முடித்த பிறகு மகிழ்ச்சியான மனநிலையில் அம்மனைச் சிறப்பாக விழா கொண்டாடி வழிபடுகின்றனர்.

காப்புக் கட்டுதல்

பங்குனி மாதத்தில் காப்புக் கட்டிய 9 - ஆவது நாளில் திருவிழா நடைபெறும். காப்புக் கட்டிற்கும், தேர்த்திருவிழாவிற்கும் இடையில் பங்குனி மாத உத்திரம் இருக்கும். புதன்கிழமை அன்று காப்புக்கட்டப்படும். அம்மனுக்குக் காப்புக் கட்டும் உரிமை பெற்றவர்கள் வேட்டமங்கலம் கிராம மக்கள் இவர்கள் புதன்கிழமை இரவு தாரை, தப்பட்டை முழங்க வேட்டமங்கலத்தில் இருந்து புறப்பட்டு மரவாபாளையம் சென்று ஊர்க்கவுண்டர், முப்பாட்டுக்காரரை அழைத்துக் கொண்டு அம்மன் கோவிலுக்கு வருவர். புதுமண்சட்டியில் பொங்கல், அகத்திக்கீரை போன்றவற்றை செல்லாண்டியம்மனுக்குப் படைப்பர். முத்தனூர் பெரியசாமிக் கவுண்டர் வகையறாவைச் சேர்ந்தவர்கள் மஞ்சள்காப்பு, ஜவ்வாது கொண்டு வருவர். அக்காப்பை மரவாபாளையம் கோயில் ஐயர், செல்லாண்டியம்மன், மாரியம்மன், சிம்மவாகனம், திருவிழா முறைப்பண்டாரம், மிராஸ்களில் முப்பாட்டிற்கும் கட்டுவார். பின்னர் 18 பட்டி முக்கியஸ்தர்களும் விழாவைப் பற்றிக் கலந்து பேசுவர். காப்புக்கட்டன்று நாய்க்கனூர் ஊர்ப் பொதுமக்கள் ஆட்டுக் கெடாக்குட்டியைப் பலி கொடுப்பர்.

அன்றிலிருந்து திருவிழா முடியும் வரை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊர்ப் பொதுமக்களும் அம்மனுக்கு அபிஷேகம் செய்து, அன்னதானம் கொடுத்து, அம்மனை ஊர்வலமாக அழைத்துச் செல்வர்.

ஆயக்கால் போடுதல்

மூன்றாம் நாள் வெள்ளிக்கிழமை இரவு தேருக்கு மேலே பல அடுக்குகளை 18 படியைச் சேர்ந்த கொல்ல ஆசாரியும், தச்சு ஆசாரியும் செய்வர். அதுவே ‘ஆயக்கால் போடுதல்’ என்பதாகும். ஆறாம்நாள் திங்கட்கிழமை தச்சு ஆசாரி தேருக்குக் கவசம் வைப்பார். தேரின் மீது 18 பட்டி வண்ணான்கள் துணியில் அலங்காரம் செய்வர்.

குதிரையிடம் சகுனம் கேட்டல்

கோயில் சார்பாக வளர்க்கப்பட்டு வருகின்ற குதிரைக்குச் செவ்வாய்க்கிழமை இரவு சந்தனம், மாலைகள் போட்டு, அரிவாளுடன் மேள, தாழத்துடன் மரவாபாளையம் கவுண்டர் வீட்டிற்கு அழைத்துச் சென்று பூஜைகள் செய்து குதிரையைத் துலிர்க்கச் செய்வர். பின்னர், அதே ஊரில் உள்ள முப்பாட்டுக்காரர் வீட்டிற்குச் சென்று அங்கு முப்பாட்டு மாவிளக்கு பூஜை செய்து குதிரையைத் துலிர்க்கச் செய்வர்.

முப்பாட்டு மாவிளக்கு

மரவாபாளையம் முப்பாட்டு வீட்டில் உள்ள பெண்கள் 10 படி பச்சரிசி குத்தி, கருப்பட்டிப்பாகு காய்ச்சி, சுக்கு, மிளகு சேர்த்து ஒரே மாவாகச் செய்து, அதை ஓலைக்கூடையில் வைத்து, கூடையைச் சுற்றிலும் தென்னம்பாளையில் தோரணம் கட்டி, மாவின் மீது விளக்கு ஏற்றிப் பற்றவைத்துப் புதன்கிழமை அதிகாலை அம்மன் முன்னிலையில் பூஜை செய்து, குதிரையைக் காவிரி ஆற்றுக்கு அழைத்துச் செல்வர்.

ஊஞ்சல் பாட்டு

ஆற்றில் பச்சைக் குடிசையில் சாம்புவனுக்குப் பொங்கல் வைத்துப் பூஜை செய்வர். இதனை ‘அம்மன் அழைத்தல்” என்பர். பின்னர் ‘நொய்யல் செல்லாண்டியம்மனையும், சேமங்கி மாரியம்மனையும் ஊஞ்சலில் அமர வைத்து உன்னூத்துப்பாளையம் பரம்பரைப் புலவர்கள் ஓலைச்சுவடியில் உள்ள அம்மன் பாடல்களைப் பாடி ஊஞ்சலாட்டுவர்.

தேரோட்டம்

வியாழன் காலை செல்லாண்டியம்மன் காவிரி ஆற்றில் குளித்து புத்தாடை அணிந்து தேரில் ஏறிக் காட்சியளிப்பார். அன்று மதியம்

முதற்கொண்டு 18 பட்டி மக்களும், பச்சரிசிப் பொங்கல் வைப்பர். இரவு 7 மணிக்கு மேல் பொங்கல், மாவிளக்குப் பூஜை நடைபெறும். பின்னர் 18 பட்டி மிராசுகளும் தேரைக் கொஞ்சம் நகர்த்தி வைப்பர்.

இரவு 10 மணிக்கு மேல் நொய்யல், வேட்டமங்கலம் மிராசுகள், கோவில் ஐயர் மற்ற மிராசுகள், பண்டாலம், ஆசாரி போன்றோருக்கு வேட்டி, துண்டுடன் வெற்றிலை, பாக்கு வைத்துக் கொடுப்பர். இதனைப் புரிதானம் என்பர்.

இதற்குப் பிறகு தேர்வடம் பிடித்தல் நடைபெறும். அப்போது முதலில் நீர்பூசணியை வெட்டி, குங்குமம் தடவித் தேர்க்காலில் வைப்பர். அதன் பிறகு தேர் புறப்படும். 18 பட்டி மக்களும் ஊருக்கு ஒரு ஆட்டுக் கெடாக் குட்டியைக் காணிக்கையாகக் கொடுப்பர். அதைத் தேரில் அம்மன் ஊர்வலம் வரும்போது திரும்புகின்ற ஒவ்வொரு இடத்திலும் ஒரு ஆட்டுக்குட்டியைப் பலி கொடுப்பர். பின்னர் அது ஆசாரி, வண்ணான், பண்டாரம் முதலிய ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும். தேர் ஊர்வலம் வரும்போது தேர் நிற்க முன்பக்கமுள்ள இரண்டு சக்கரங்களில் ஒன்றிற்குச் கொல்ல ஆசாரியும், மற்றொன்றிற்குத் தச்சு ஆசாரியும் கட்டை போடுவார்கள் தேர் குழியில் இறங்கினால் பின்னால் இருந்து மரவாபாளையம் ஒட்ட நாய்க்கர்கள் தள்ளுவார்கள்.

இதர ஊர்வலம்

வியாழன் இரவு செல்லாண்டியம்மன் தேரிலிருந்து இறங்கியவுடன் ஆரத்தி எடுத்து கோயிலினுள் அழைத்து செல்வர். பின்னர் செல்லாண்டியம்மனையும், மாரியம்மனையும் இரதத்தில் வைத்து ஊர்வலம் கொண்டு செல்வர். இதற்கு ‘வண்டிக்கால் பார்த்தல்” என்று பெயர்.

எருமைக்கெடா பலிக்கொடுத்தல்

செல்லாண்டியம்மன் சைவக்கடவுளாக இருந்த போதிலும், எருமைக்கெடா வெட்டும் பழக்கம் உள்ளது. எருமைக் கெடாவைப் புதைக்கக் கோயிலின் முன்புறம் இரண்டு குழிகள் உண்டு. இந்த வருடம் ஒரு குழி என்றால், அடுத்த வருடம் மற்றொரு குழி தேர்வடம் பிடித்துச் செல்வதற்கு முன் தோட்டக்குறிச்சி முத்தரையர் இனத்தைச் சேர்ந்த பரியசாமி வகையறாவினர் மண்வெட்டியுடன் ஆற்றில் குளித்துவிட்டு, அருளுடன் கோயிலைச் சுற்றி வந்து எருமைக் கிடாவைப் புதைக்க குழி வெட்டுவர்.

இரத ஊர்வலம் முடிந்து வெள்ளிக்கிழமை அதிகாலை கோயிலை அடைந்தவுடன் நாமக்கல் மாவட்டம் கொந்தாளத்தைச் சேர்ந்த முத்தரையர் 5 பேர், 5 நீண்ட அரிவாளுடன் வந்து ஆற்றில் குளித்து, வேட்டி, துண்டு வாங்கிக் கொண்டு அருளுடன் ஒரே வெட்டில் எருமைக்கிடாவை வெட்டுவார்கள். பின்னர் செல்லாண்டியம்மன், மாரியம்மன் ஆற்றில் குழித்துவிட்டு வந்தவுடன், ஐயர் காப்பை அவிழ்த்துவிடுவார்.

18 பட்டியைச் சேர்ந்த மக்கள் தங்கள் வீட்டிலுள்ள எருமைக் கிடாவை விற்காமல் அம்மனுக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்து அளிப்பர். திருவிழாக்காலம் இல்லாத போது பெரிதாக வளர்ந்த எருமைக் கிடாவை விற்றுப் பணத்தை கோயில் உண்டியலில் கொண்டு வந்து அளிப்பர்.

தற்போது இந்த வழக்கம் மாறி வருகிறது. சடங்குக்காக ஓரிரு எருமைக் கிடாவை வெட்டிவிட்டு, மீதமுள்ளவற்றைக் கோவில் சார்பில் ஏலம்விட்டு, கோவிலுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

பூசாரியார் அரிவாள் ஏறுதல்

வெள்ளி இரவு அலங்கரிக்கப்பட்ட அம்மன்களின் முன் கோவில் பூசாரியார் அருள் ஏறப்பட்டு அரிவாள் மீது ஏறுவார். அரிவாளின் முனைப் பகுதியை நொய்யல் பூல வேட்டுவர்கள் பிடிக்க, பிடிப் பகுதியை நொய்யல் தோப்புத் தோட்ட வகையறா கரடி வேட்டுவர்கள் பிடிக்கப் பூசாரியார் அரிவாளின் மீது நின்று ஊரைச்சுற்றி வருவார். அப்போது அவர் கையில் தீப்பந்தத்துடன் வருவார். அந்தத் தீயைக் கண்டவுடன் தீயசக்திகள் ஊரை விட்டு ஓடிவிடும் என்பது மக்கள் நம்பிக்கை. அப்போது ஊரின் ஓரிடத்தில் நின்று மஞ்சள் நீர் குடித்து, ஊரின் நலனைப் பற்றி அருள்வாக்கு கூறுவார்.

அழைத்து விடுதல்

சனிக்கிழமை காலை மரவாபாளையம் முப்பாட்டை அவருடைய வீட்டிற்கு அழைத்துச் சென்று விடுவர். பின்னர் மாலையில் கோவில் பூசாரி மற்றும் பக்தர்களுடன் மங்கள வாத்தியங்கள் முழங்க ஆவுடையார் பாறை சென்று தர்மகர்த்தாவையும், பண்டாரத்தையும் அழைத்து விடுதல் நிகழ்ச்சி நடைபெறும். இவர்களைக் கிராம மக்கள் மஞ்சள்

நீராட்டு நிகழ்ச்சியுடன் வரவேற்று மகிழ்வர். மஞ்சள் நீராட்டு முடிவடைந்ததும் அம்மனுடன் ஆலயம் வந்தடைவர்.

சிறப்பு அம்சம்

இக்கோவிலில் நடைபெறுகின்ற பல்வேறு விழாக்கள் 18 பட்டி மக்களால் கொண்டாடப்பட்டாலும், பூசாரி அரிவாள் மீது ஏறி ஊரைச்சுற்றி ஊர்வலம் வருதல் என்று நிகழ்ச்சி பல்வேறு மாவட்ட மக்களையும் ஈர்க்கின்ற ஒன்றாக அமைந்துள்ளது. இந்தக் கோவில் பூசாரியாக வருபவர்கள் இஷ்டம் போல் தேர்ந்தெடுக்க முடியாது. ஒரு பூசாரி மறைவுக்குப் பின், அடுத்த பூசாரியைத் தேர்வு செய்யும் நாள், தேர்த்திருவிழாவிற்கு அடுத்த நாளான வெள்ளிக்கிழமை இரவு செல்லாண்டியம்மன், மாரியம்மன் இரண்டையும் அலங்காரித்துக் கொண்டு வருவர். அப்போது தீட்டிய கத்தியை மாலையிட்டு உயரத்தூக்கிப் பிடித்திருக்கும் போது, தாரை தப்பட்டைகள் முழங்கிக் கொண்டே இருக்கும். அப்போது கரடி வேட்டுவ குலத்தைச் சேர்ந்த ஒருவர் அருள்மேவப்பட்டு கத்தியின் மீது ஏறுவார். கத்தி மீது நின்று கொண்டே ஊரைச்சுற்றி உலா வருவார். அவரே பூசாரியப்பன் இவர் அம்மன் அருள் பெற்று துறவு வாழ்க்கை மேற்கொண்டு கோவிலிலேயே தங்குவார்.

முடிவுரை

செல்லாண்டியம்மன் கோவில் கரடி வேட்டுவ குலத்தைச் சார்ந்தவர்களால் நிறுவப்பட்ட போதிலும், ஐயர், வண்ணான், ஆசாரி, முத்தரையர், ஒட்ட நாயக்கர் எனப் பல்வேறு சமூகத்தைச் சார்ந்த மக்களுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. எனவே, நொய்யல் செல்லாண்டியம்மன் கோவில் இன்றளவும் புகழ்பெற்ற கோயிலாகத் திகழ்கிறது.

துணை நின்ற நூல்கள்:

1. முனைவர் அறு.இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், மாணிவாசகர் நூலகம்.

2. தினந்தந்தி நாளிதழ், 24.10.2004.

3. களஆய்வில் நேர்காணல் செய்யப்பட்டவர் பெயர்:

4. திரு. முருகேசன், மரவாபாளையம், கரூர் மாவட்டம்.

இலக்கியத்தில் வேட்டுவர் வரலாறு - ஓர் ஆய்வு

முனைவர் க.சந்தானம்
உதவிப்பேராசிரியர்,
நந்தா கல்வியியல் கல்லூரி, ஈரோடு-52.
அலைப்பேசி : 8344496815.

மனிதன் நிலையாகத் தங்காமல் அலைந்து திரிந்து வேட்டைத் தொழிலை மேற்கொண்டான். பின்னர் ஓரிடத்தில் நிலைத்து வாழத் தொடங்கினான். உணவு தேடும் நிலையை விட்டு உணவு உற்பத்தி செய்யும் நிலைக்கு முன்னேறினான். சமவெளிகளில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டான். இதுவே மனித வாழ்வில் நிகழ்ந்த மாபெரும் புரட்சியாகும். வரலாற்றுத் தொடக்க காலத்தில் வேட்டைத் தொழிலில் ஈடுபட்டவார்கள், இடைக்காலத்தில் வேளாண்மையில் நாட்டம் கொள்ளும் அளவிற்கு உயர்ந்தனர்.

மனிதகுல வரலாற்றைப் பற்றிச் சார்ச் தாமஸ்சன் ‘மனிதர்கள் முதலில் காட்டுமிராண்டிகளாக இருந்தார்கள், பறித்து உண்ணும் வாழ்க்கையைக் கொண்டிருந்தார்கள் பிறகு அவர்கள் வாழ்க்கை வேட்டைக்காரச் சமுதாயமாக மாறினர். பின்னர் கால்நடை சமுதாயமாகவும், வேளாண் சமுதாயமாகவும் மாறினர்.” எனக் குறிப்பிடுகிறார். இத்தகைய மாற்றங்கள் தோன்றிய பிறகுதான் சமுதாயம் உருவாகின. மனிதன் நீண்ட காலமாக வேட்டைக்காரச் சமுதாயமாகவே வாழ்ந்திருந்தனர் என்பதன் மூலம் வேட்டுவ சமுதாய மக்களே பழங்குடி மக்களாக இருந்திருக்கின்றனர் என்பது அறியப்படுகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் நிலப்பரப்புகளில் குறிஞ்சி நிலத்தில் இருந்தவர்களை மலை வேடர்கள் என அழைக்கப்படு கின்றனர். வேட்டுவ இனம் பற்றிய செய்திகளை அறியும் போதும் புராணங்கள், இதிகாச வரலாறுகளில் வேட்டைக்குச் செல்லாதவார்கள் இல்லை என்பதை அறியமுடிகிறது.

கொங்கு நாட்டில் பன்னெடுங்காலமாகப் பல்கிப் பெருகி வாழ்ந்து வரும் பல்வேறு சமுதாயங்களில் வேட்டுவர் சமுதாயமும் ஒன்றாகும்.

கொங்கு நாட்டு ஆவணங்கள் பலவற்றில் வேட்டுவர் சமூகத்தினரைப் பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகின்றனர். வேட்டுவர் சமூகத்தினரை "பூர்வ குடிகள்" 'கொங்கர்" என்றும் இவர்களின் தலைவரைக் "கொங்குராயன்" என்றும் இலக்கியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது.

வேட்டுவர்கள் பற்றிய குறிப்புகள் "குருகுல வம்சம்" என்றும் "குருகுல காவியம்", "பஞ்சவர்ண ராஜ காவியம்" மற்றும் 'அப்பிச்சிமார் காவியம்" போன்ற இலக்கியங்களில் இருந்துள்ளன. வேட்டுவர் சமூகத்தில் 200 - க்கும் மேற்பட்ட குலப்பிரிவுகள் உள்ளன. என்பவை "வேட்டுவர் கலிவெண்பா" சுவடியில் முழுமையாக குறிப்பிடப்பட்டுள்ளன.

அரசர்கள்

அக்கால அரசர்கள் கடமைகளில் ஒன்றாக, காட்டை அழித்து நாட்டை உருவாக்குவதும் கொடிய மிருகங்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதும் முதன்மையானதாக விளங்குகின்றன. இதனைப் புலிக்குத்தி மேடு பற்றிய கல்வட்டுக் குறிப்புகள் மனிதர்கள் காட்டு மிருகங்களுடன் போராடி வேட்டையாடிய செய்திகளால் அறியமுடிகிறது.

மன்னர்கள் அனைவரும் வேட்டைக்குச் செல்லும் முறையை அக்காலத்தில் பின்பற்றி உள்ளனர் என்ற செய்தியை "அரிச்சந்திர மகாராஜாவிடம் மக்கள் காட்டில் விலங்குகள் வந்துவிட்டன எனக் கூறி வேட்டையாட, காட்டிற்கு அழைக்கின்றனர். இச்சமயத்தில்தான் விசுவாமித்தரர் சூழ்ச்சியால் வஞ்சகம் செய்கின்றார்" எனும் கருத்துகளால் அரிச்சந்திர மகாராஜா வேட்டைக்குச் செல்வதை அறியமுடிகிறது.

தசரதன் வேட்டைக்குச் சென்ற இடத்தில் சிரவண குமாரனைக் கொன்றுவிட்டான் எனும் குறிப்புகளைக் காணமுடிகிறது. இவ்வாறு பல்வேறு அரசர்கள் வேட்டைக்குச் செல்லும் செய்திகளை அறிய முடிகிறது. இன்றைக்கு வேட்டை எனும் வேட்டுவர் இனம் மிகப்பழமையான ஒரு சமூகமாகக் கருதப்படுகிறது. பிற்காலத்தில் வேட்டை என்பது வீர விளையாட்டுகளில் ஒன்றாகவே அமைந்துள்ளது.

கடவுளர்கள்

கடவுளர்கள் வேட்டைக்காரார்களாக வந்து இருக்கும் நிலையை அறியமுடிகிறது. சிவபெருமான் தன்னை நோக்கி தவமிருந்த

அர்ச்சுனனுக்குப் பாசுவாசிரத்தை தருவதற்காக வேட்டைக்காரன் வேடம் அணிந்து வந்தார். இதனைக் காண பார்வதி குழந்தை முருகனுடன் வருவதை வில்லிபாரதத்தில்,

"ஓரேனந் தனைத்தேட ஒளித்தருளு மிருபாதத்
தொருவ னந்தப்
போரேனந் தனைத்தேடிக் கணங்களுடன் புறப்பட்டான்
புனங்க ளெல்லாம்
சீரேனல் விளைகிரிக்குத் தேவதையாங் குழவியையும்
செங்கை யேந்திப்
பாரேனை யுலகனைத்தும் பாவுடனே ஈன்றாள்தன்
பதிபின் வந்தாள்"
அந்தப்போரேனும் எனத்தேடி புறப்பட்டான்.

(வி.பா.இசருக்கம்-87)

எனும் பாடல் வரிகள் மூலம் ஒரு காலத்தில் பிரம்மனும் திருமாலும் அண்ண வடிவமும் பன்றி வடிவமும் எடுத்து தேடிய போது கிடைக்காத சிவபெருமான் இன்றைக்குப் பன்றியைத் தேடிப் போகின்றான் என்ற செய்தி மூலம் அறியமுடிகிறது.

கிருஷ்ண பெருமான் ஒரு வேடன் அவன் பெரு விரலில் அம்பு எய்திட அதற்கு வேடன் மான் எனக் குறிப்பிடும் செய்தியைக் கம்பராமயணத்தில் காணமுடிகிறது.

முருகப்பெருமான் வள்ளியை மணம்புரிந்திட வேலன், வேடன், விருத்தன் எனப் பல்வேறு வடிவங்களில் வந்துள்ளமையைக் காணமுடிகிறது. வேலனாய் வந்து வள்ளியிடம் இப்பக்கம் ஒரு மான் போனதா என வினவிய செய்தியைக் 'காயாத கானகத்தே" எனும் பாடல் வரிகளில் வள்ளி திருமணம் எடுத்துரைக்கிறது.

அர்ச்சுனன், கண்ண பெருமான் போன்ற கடவுளர்கள் வேடனாய் வந்துள்ள செய்திகளையும் காவியங்களில் காணமுடிகிறது. கங்கை வேடனும், காளத்தி வேடன் பற்றிய குறிப்புகளைப் பற்றி இரா.சேதுபிள்ளை குறிப்பிடும் போது,

கங்கை வேடன் குகன் அவன் வேட்டைத் தொழில் செய்து வருகின்றான். இதனால் இராமனுக்கு மீனும் தேனும் கொண்டு வந்த செய்தியை அறியமுடிகிறது.

தொண்டை மண்டலத்தில் காளகத்தி மலைப்பகுதியில் வேட்டுவர் சமூகத்தவர் உடுப்பூரில் வாழ்ந்த வரலாறும் நாகன்-தத்தை தம்பதியினருக்குத் திண்ணன் பிறந்ததும் வேட்டைக்குச் சென்ற திண்ணனுக்கு மிருகங்கள் கிடைக்கவில்லை. ஆகையால் சிவபெருமானே வேடன் வடிவில் வந்து மலையில் வேட்டை மிருகங்கள் கிடைக்கும் இடத்திற்குத் திண்ணனை அழைத்துக் கொண்டு சென்றதால் வேட்டை மிருகங்கள் அகப்பட்டன. காளகத்தி மீசார் திண்ணனிடம் நீ தின்று பார்த்து சுவையான கறியை எனக்குப் படைப்பாயாக என்று கூறிய செய்தியை அறியமுடிகிறது. பின் திண்ணன் காளகத்தி ஈசருக்குக் கண் அப்பி கண்ணப்பர் ஆன செய்தி கூறப்படுகிறது.

இதைக் கேள்விப்பட்ட சேரமான் பெருமாள் தொண்டை மண்டலம் உடுப்பூர் சென்று பதினாயிரம் வேட்டுவ சமூகத்தினரைக் கொங்கில் குடியேற்றிய செய்தியும் சேரமான் பெருமானை வென்று சோழர்களும், பாண்டியர்களும் கொங்கு நாட்டில் ஆட்சி செய்த விபரமும் இதன் கூலம் அறியப்படுகிறது.

கண்ணப்ப நாயனார், குகன், சிவன், முருகன், கிருஷ்ண பரமாத்மா, அரிச்சந்திரன் மற்றும் தசரதன் என வேட்டுவர் பற்றிய சிறப்புகள் இலக்கியங்களில் விரவிக் காணப்படுகின்றன. இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்களை நுணுகி நோக்கும் போது வேடர்கள் பற்றி அறியும் வகையில் குறிப்புகள் அங்காங்கே காணமுடிகிறது.

பெரியபுராணத்தில் வேட்டுவர்

சங்க இலக்கியத்தில் குறிஞ்சித் திணைப் பாடல்களின் வேட்டுவர் வாழ்வியல் பற்றிய குறிப்புகள் விரவிக் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரியில் மறக்குடி மக்களின் வழிபாடு பற்றிய செய்தி உரைக்கப்பட்டுள்ளது. கம்பராமாயணத்தில் குகன் பற்றிய செய்திகள் என வேட்டுவர் தகவல்களை அறியமுடிகிறது. இருப்பினும் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தில் கண்ணப்ப நாயனார் புராணமே நமக்கு வேட்டுவர் சமுதாய வாழ்க்கையை விரிவாக அறியும் இலக்கியமாக உள்ளது. இந்நிலையில் பெரியபுராணத்தின் வாயிலாக அறியப்படும் வேட்டுவர் வாழ்வியல் தொடர்பான செய்திகளாவன:

வாழிடம் : வேடர்கள் பெரும்பாலும் மலைப்பகுதிகளில் வாழ்பவராவர். அவர்களைக் குன்றவர், மலையர் என்று

குறிப்பிடுகிறார். மலர்ச்சோலைகளும், நீர்நிலைகளும் சூழ்ந்த பொத்தப்பி என்னும் நாட்டினில் முத்துகள் கொழிக்கும் நீரருவியின் சாரல் உடைய நீண்ட மலை சூழ்ந்த இடமாகிய உடுப்பூர் என்னும் இடத்தைக் கண்ணப்பன் பிறந்த இடமாகக் குறிப்பிடுகிறார். வேடர்கள் தாம் வாழும் ஊரைச் சுற்றி மதங்கொண்ட யானைகளில் கொம்புகளால் தொடர்ச்சியாக வேலியமைத்துப் பாதுகாத்தமை பற்றிய குறிப்புகள் அறியமுடிகிறது.

இறைவழிபாடு : வேட்டுவர்கள் குறிஞ்சி நிலக்கடவுளான முருகனை வழிபடுவர். நாகனுக்கு மகப்பேறு இன்றி வருந்திய போது 'முருகலர் அலங்கல் செவ்வேள் முருகவேள் முன்றில் சென்று" எனும் பாடல் வரிகள் மூலம் அறியப்படுகிறது.

தொழில் : வேட்டுவர் முக்கியத் தொழிலாக, ஆநிரைக் கவர்தல் அமைந்தமையை அறியமுடிகிறது.

விலங்குகளைப் பழக்குதல் : வேட்டுவர்கள் புலிக்குட்டிகள், யானைக் கன்றுகள், மான்கள் ஆகிய விலங்குகளைப் பழக்குதலை கடைபிடித்துள்ளனர். சிறுவர்கள் தாம் விளையாடும் போது முயல் காட்டுப் பன்றி, செந்நாய், புலி ஆகியவற்றின் குட்டிகளைப் பிடித்து வளர்த்து வந்துள்ளனர்.

உணவு : வேட்டுவர்களின் முன்றிலில் ஐவனம் எனப்படும் மலைநெல்லைக் காயவைப்பர் என்பதால் அது அவர்களின் முக்கிய உணவாக இருந்தமையை அறியமுடிகிறது. மலைத்தேனையும், ஊன் கலந்த சோற்றையும் உணவாக உட்கொண்டனர். காலையில் சிறுவர்களுக்குப் புலால் கலந்த உணவை உண்ணக் கொடுப்பர் முதலான செய்திகளைக் குறிப்பிடுகிறார்.

வேட்டை அறம் : வேட்டுவர்கள் யானைக் கன்றுகளைக் கொல்லமாட்டார்கள், சிறிய குட்டிகள், கருவுற்ற நிலையிலுள்ள தளர்நடை பெண் விலங்குகளையும் துன்புறுத்த மாட்டார்கள் என்பதை வேட்டை அறமாகப் பின்பற்றியுள்ளனர்.

இசையும் நடனமும் : கண்ணப்பன் பிறந்த போது அரியிடப் பெற்ற குறுந்துடியை ஆர்த்தனர். குன்றவர்கள் வரிக்கூத்தாடுவர், வேட்டுவப் பெண்கள் துணங்கைக் கூத்தாடுவர் என்ற செய்தியை அறியமுடிகிறது.

இவ்வாறு சேக்கிழார் பெரியபுராணத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றுகளைக் குறிப்பிட்டுள்ளார். அவர்களில் கண்ணப்ப நாயனார் புராணத்தில் வேட்டுவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் பற்றிய கருத்துக்களை மிகத் தெளிவாக அறியமுடிகிறது.

முடிவுரை

இலக்கியங்களில் வேட்டுவர் வரலாற்றுச் செய்திகள் விரவிக் காணப்பட்டாலும் முழுமையான செய்திகள் கண்ணப்ப நாயனார் வாழ்க்கை மூலமாக வேட்டுவர் சமூகத்தின் வாழ்வியல் தொடார்பான கருத்துகளை சேக்கிழார் மிக நுணுக்கமாகப் பதிவு செய்திருப்பதன் மூலம் அறியமுடிகிறது.

மேற்பார்வை நூல்கள் :

1. இராசு, (2008). வேட்டுவர் சமூக ஆவணங்கள், ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை, காயத்ரி பதிப்பகம், ஈரோடு.
2. சுந்தரம், (2021). வில்லிபாரதக் கதை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.
3. சீனிவாசன், (2000). கம்பராமாயணம், அணியகம் பதிப்பகம், சென்னை.
4. ஞானசம்பந்தன், (1999). பெரியபுராணம் ஓர் ஆய்வு, கங்கை புத்தக நிலையம், சென்னை.

வேட்டுவர்குல வரலாற்று இலக்கியங்களின் செம்பதிப்புத் தேவை

நெறியாளர்:
முனைவர் கா. திருநாவுக்கரசு
ஆய்வாளர்,

சு. விக்னேஷ்,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி,
பேரூர் 10.
அலைப்பேசி:9750070223.
vickytamil152@gmail.com

முன்னுரை

உலகில் நாகரீக வளர்ச்சிபெற்ற மனிதர்கள் பல இனக்குழுக் களாகப் பிரிந்து வாழத்தொடங்கினர். வேட்டுவர் குலமும் அவற்றுள் ஒன்று. சங்க இலக்கியங்களில் பல இடங்களில் வேட்டுவன் என்ற சொல் குறிக்கப்பட்டுள்ளது. இவ் வேட்டுவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான கண்ணப்ப நாயனார் வழிவந்தவர்களாகவும், மகாபாரதக் காவிய மரபினராகக் குருகுலர் எனவும் கூறப்படுகின்றனர். வேட்டுவர் வரலாற்றைப் பாடும் இலக்கியங்களாக அறியக் கிடைப்பன மூன்று. பஞ்சவர்ண ராஜ காவியம், குருகுலக் காவியம் ஆகிய இரண்டும் வேட்டுவர் குலத்தின் தோற்றத்தையும், தொன்மையையும் கூறுவன. அப்பிச்சிமார் காவியம் என்பது வேட்டுவர் குலத்தில் வாழ்ந்து, இறைநிலை எய்திய பெரியமாரைய்யன், சின்னமாரைய்யன் என்பாரது வாழ்வை எடுத்துரைப்பதாகும். இவற்றுள் குருகுலக் காவியம், அப்பிச்சிமார் காவியம் ஆகிய இரண்டு நூல்களினையும் பேரூராதீனச் சுவடியுடன் ஒப்பிட்டு, அவ்விலக்கியங்களைச் செம்மையுறப் பதிப்பிக்க, ஆதீனச்சுவடி உதவும் தன்மையைச் சுட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

பேரூராதீனச் சுவடியில் வேட்டுவர் வரலாற்று இலக்கியங்கள்

பேரூராதீனத் தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகத்துள், கொங்குநாட்டு உ.வே.சா. எனப் போற்றப்படும் வே.இரா.தெய்வசிகாமணிக் கவுண்டரவர்கள் தொகுத்தளித்த 376 சுவடிகள் உட்பட 512 சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வந்தன. கவுண்டரவர்களிடமிருந்து பெற்று, நீதியரசர் செங்கோட்டு வேலனார் வைத்திருந்த 210 சுவடிகளும் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டு 722 சுவடிகள் உள்ளன. இவை, இலக்கணம், இலக்கியம், மருத்துவம், சோதிடம், இசை ஆகிய பகுப்புகளில் அடங்குவன. தமிழ்க்கல்லூரியின் முன்னாள் மாணவர் திருமதி பிரேமாவதி அம்மையார் நூலகத்திற்கு அளித்த 7 சுவடிகளில் வேட்டுவர் வரலாற்றைக் கூறும் இலக்கியங்கள் எழுதப்பட்ட சுவடியும் இருந்தது. இச்சுவடியில், முதலில் குருகுலக் காவியமும், பிற்பகுதியில் அப்பிச்சிமார் காவியமும் எழுதப்பட்டுள்ளன. இதன் இடையில் வேட்டுவர் குலப் பெயர்கள் ஒவ்வொன்றிற்குமான வரலாறு ஏறத்தாழ 70 விருத்தங்களில் எழுதப்பட்டுள்ளன.

சுவடியின் புறவமைதியும் காலமும்

TSA-CAL-0393 எனும் எண்கொண்ட இச்சுவடி 330 பக்கங்கள் கொண்டது. கட்டையுடன் பிணைக்கப்பட்டுள்ளது. தலைப்புப் பகுதி அனைத்து ஓலைகளிலும் சிதைந்து, பூச்சி அரித்த துளைகளுடன் காணப்படும் இச்சுவடியை, ‘செய வருடம் ஆனி மாதம் 15ஆம் தேதி புந்திவாரத்தில் அப்பச்சிப்புலவர் குமாரன் நஞ்சயப் புலவர் குமாரன்’ எழுதியுள்ளார். ஏடெழுதியவர் பெயரில் முதலெழுத்து ‘கு’ என்பதைத் தவிர மற்றவை சிதிலமாகியுள்ளது. இறுதியில் கவிராயர் எனும் பெயர் மட்டும் உள்ளது. மேற்சொன்ன நஞ்சயப் புலவர் ஈரோடு மாவட்டம் திங்களூரில் வாழ்ந்து, தலையநல்லூர் முருகன் அருள்பெற்றுச் சிவகிரிப் புராணம் எனும் பனுவலை இயற்றியவர். இவர் காலம் 19 ஆம் நூற்றாண்டு என்பர் (இராமசாமிப் புலவர்.சு.ஆ.,1959:67). எனில் இச்சுவடி ஏறத்தாழ 200 ஆண்டுகள் பழமையானது எனலாம். இவரது மகன்கள் குமரகுருப்புலவர், கருமணப்புலவர் என்போர். சுவடியில் உள்ள முதலெழுத்தைக் கொண்டு இச்சுவடியை எழுதியவர் குமரகுருப் புலவர் எனும் கவிராயர் எனத் தெளியலாம்.

வேட்டுவர் வரலாற்று இலக்கியங்கள் - அச்சுப்பதிப்பு

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வெட்டு மற்றும் தொல்லியல் துறை மேனாள் தலைவராக இருந்த புலவர் செ. இராசு

அவர்கள் அப்பிச்சிமார் காவியம், குருகுலக் காவியம் எனும் இரண்டு நூல்களையும் பதிப்பித்துள்ளார். குருகுல காவியம் வெண்பா, அகவல், கலிவெண்பா, ஆசிரிய விருத்தம், தக்கை எனும் இலக்கிய வடிவங்களில் 206 பாடல்களைக் கொண்டுள்ளது. இதில் முதல் 11 பாடல்கள் பாயிரப் பகுதியாகவும், அடுத்து வரும் 191 பாடல்கள் காவியப் பகுதியாகவும், இறுதி 4 பாடல்கள் வாழ்த்துப் பகுதியாகவும் அமைந்துள்ளன. இவ்வாழ்த்துப் பாடலுள் ஒன்று கவிராசபண்டிதர் என்பவர் குருகுலக் காவியத்தைப் படைத்ததைச் சுட்டுகிறது. வேட்டுவர், காளத்தி அரசன் கண்ணப்பரது மரபின் கொடிவழியாக வந்தவர்கள் என்பதை இக்காவியம் பாடுபொருளாகக் கொண்டு சுவைபடப் பல வரலாறுகளைக் கூறுகின்றது.

அப்பிச்சிமார் காவியம் கொங்குப்பகுதியின் வாழவந்தி நாட்டுப் பிள்ளைக்கரை ஆற்றூரில் அவதரித்த பெரியமாரையன், சின்னமாரையன், பிள்ளைமாரையன், உத்தண்டராயன் ஆகிய நால்வரைப் பற்றியும், அவர்களது மக்களைப் பற்றியும், அவர்கள் திருமணம், பூவாணி ராசனுடன் போர்புரிந்த வரலாறு, இறுதியில் திருச்செங்கோட்டு மாதொருபாகன் அருளால் அவர்கள் தெய்வமானது குறித்தும் தக்கை இலக்கிய வகையில் இயற்றப்பட்ட நூலாகும். 356 பாடல்களைக் கொண்டுள்ள இந்நூலின் ஆசிரியர் பற்றி அறியக் கிடைத்திலது. தக்கை எனும் இசைக்கருவிக்கேற்பக் காவியங்களைப் பாடும் வழக்கம் கொங்குநாட்டிற்கு உரியதாக இருப்பதை எம்பெருமாள் கவிராயர் இயற்றிய தக்கைராமாயணம் முதலியவற்றாலும் அறியமுடிகிறது.

சுவடியின் உள்ளடக்கம்

165 ஏடுகள் கொண்ட இச்சுவடியில் எண் குறிக்கப்படும் தலைப்புப் பகுதி சிதைந்தமையால் ஏடுகளின் எண்ணிக்கை, நூலின் தொடர்ச்சி ஆகியவற்றைத் தெளிவுறச் சுட்டுதற்கியலாத சூழல் உள்ளது. பாடல்களின் யாப்பு விகற்பங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இக்கட்டினில் இடையிடையே கையெழுத்து மாற்றங்கள் காணப்படுகின்றன. சுவடிக்கட்டின் முதல் இரண்டு ஏடுகளில் ‘சங்கிராமன்’ என்பவரைப் பற்றிய பாடல் ஒன்றும், அர்த்தநாரீசுவர வணக்கமும் உள்ளன. சங்கிராமன் என்பவன், ‘காளத்தி நாதனை வணங்குபவன் என்றும், ஒட்டியர்களை விரட்டியவன் எனவும், பெரும்பாலை, குழித்தலை, தண்டலை ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட குருகுல நாட்டிற்கு ஒளிபோல வந்து ஆட்சி செலுத்தியவன் என்றும் பாராட்டப்பட்டுள்ளான். இவன் யார் என அறிதற்கு இவ்வொரு

பாடலைத் தவிரக் காவியங்களில் சான்றுகள் இன்றியுளது. அடுத்து, 'பொற்புயர் நாகக் குன்றில் பொற்புறு கோனைப் போற்றிப்' (குருகுலகாவியம்: கடவுள் வாழ்த்து) எனவரும் பாடலுடன் குருகுலக் காவியம் எழுதப்பட்டு, 40 - ஆம் பாடலுக்கு மேல் வேட்டுவர் வாழும் 24 நாடுகளைப் பற்றிய 8 பாடல்களும், 49ஆம் பாடல்முதல் 113 - ஆம் பாடல்வரை வேட்டுவர்குலப் பெயர்களுக்கான காரணங்களும் வரலாறும் எழுதப்பட்டுள்ளன. இப்பாடல்கள் கையெழுத்து வேறுபாட்டுடன் காணப்படுவதால் இவை பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டவையாகத் தோன்றுகின்றன. இதையடுத்துள்ள ஏடுகளில் பாடல்களின் எண் 105-லிருந்து தொடங்கியுள்ளது. இப்பாடல்கள் எழுதப்பட்ட ஏடுகளும் சிதிலமைடைந்துள்ளன. 105 முதல் 110 வரையான பாடல்களில் சில வரலாற்றுச் செய்திகள் காணப்படுகின்றன. 113 முதல் 445 பாடல்கள் வரை அப்பிச்சிமார் காவியம் முழுவதும் எழுதப்பட்டுள்ளது. அப்பிச்சிமார் காவியம் தொடங்கும் ஏட்டில் 112 எனும் எண்கொண்ட பாடலாக,

> **...மனமொன்றிய யிசுத்திரிபுருட கண்ணப்பன் றன்னுடன் மகிழ்ந்தே**
> **தனதியாகக் குகனுமவர் நகரிற் றுலங்கிப் பின்வருந் தனைமை**
> **யினமாய்ந்திட் டெங்கும் வாங்கிக் கொண்டுமிருந்து வளர்கின்ற**
> **காலத்திலே**

எனவரும் பாடல் காணப்படுகிறது. இதில் இராமாயணத்தில் இடம்பெறும் நாவாய் வேட்டுவனான குகனது பெயர் குறிக்கப்பட்டிருப்பது கவனித்தற் குரியது. புராணத் தொன்மத்தில் வரும்வேடர்களை இணைப்பதாக இவ்வரி அமைகிறது. இதையடுத்து, 113 - ஆம் பாடலிலிருந்து, 'வெண்பா' எனும் தலைப்போடு அப்பிச்சிமார் காவியத்தின் முதற்பாடல் ஆரம்பமாகிறது.

சுவடியும் பதிப்பும் ஒப்பீடு

குருகுல காவியப் பாயிரப்பகுதியில் பதிப்பிக்கப்பட்டுள்ள 11ஆம் பாடலும் சுவடியில் உள்ள பாயிரப் பாடலும் பொருண்மையால் வேறுபடுகின்றன. இப்பாடல்

> **வள்ளல் முத்தணி ராசன்கொங்கு வய்யகம் தன்னில் மாற்றலரை**
> **தெள்ளிமையுடன் வென்றரசு செய்த காவியம் தனைப்புகல**
> **வள்ளி தெய்வானை மணவாளன் வாழும் சுடர்நாகக் குன்றதனில்**
> **புள்ளி மயிலேறும் குமரர்பதம் போற்றில் கிருபையிற் புகல்வாம்**
> **(பாயிரம்-11)**

என்றவாறு பதிப்பில் அச்சாகியுள்ளது. குருகுலக் காவியத்தின் பாயிரமாக அமைந்த மேற்காண் பாடல் நூலுக்குப் பொருத்தமாய் உள்ளது. சுவடியில் உள்ள பாடலின் பின்னிரண்டு அடிகள் பெரும்பாலும் ஒற்றுமையுடையதாய், முதலிரு அடிகளில் நூலாசிரியர் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்வதாக அமைந்துள்ளது. அப்பாடல் பின்வருமாறு,

வள்ளல் சிங்கக் கவிராசர் வண்மைச் சேயெனவே வேயுகந்த
வள்ள லெனுஞ் சாமிநாதத் தமிழ்வாணன் றாமிந்தக் கவிகழற
வள்ளி தேவியானை மணவாளன் வாளுஞ்சுடர் நாக நாகந்தனிற்
கிள்ளலற வுய்யுங் குமரர்பதம் போற்றிக் கிருபையிற் புகல்வாமரோ.
(TSA-CAL-0393, gh.v.-10)

இப்பாடல், சுவடியில் குருகுலக் காவியப் பாயிரத்தில் எழுதப்பட்டிருப்பது ஆய்வுக்குரியது. இது பின்னால் எழுதப்பட்டுள்ள அப்பிச்சிமார் காவியத்தின் பாயிரப் பகுதியாக இருக்கலாம். மேலும் சிங்கக் கவிராசன் எனும் பெயர் சுவடியில் மூன்று இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளது. அப்பிச்சிமார் காவியத்தின் இறுதியில் அச்சில் இல்லாத 5 வாழ்த்துப் பாடல்கள் சுவடியில் உள்ளன. அவற்றுள்,

துணைவ ரீரிரண்டவரவர் வாழி சூழ் கற்பகத்தரன் றொன்னிலை வாழி
யிணையில்லா வள்ளல் சிங்கக் கவிராசன் வாழி சொற்றமிழ் வாழி
புணைகொண் டெழுந் தடம்புய சயிலப் பயிலாண்டரசர்களும் வாழி
பிணைநன் மதிற் புனைந்திடுந்திலகப் பெருமைசெறி ராக்கன் சீர்வாழி.
(கூளுஹ-ஊஹடு-0393,பா.எ.-442)

எனவரும் பாடலில் சிங்கக்கவிராயர் பெயர் சுட்டப்பட்டுள்ளது. குருகுலக்காவியம் சுவடியில் முழுமையாக எழுதாமல் உள்ளதை நோக்கும்போது, ஏடெழுதியவர் குருகுலக்காவியத்தின் பாயிரத்தில், அப்பிச்சிமார் காவியத்தின் பாயிரப்பகுதியின் ஒப்புமையைக் கண்டு முன்னே எழுதியிருக்கலாமென எண்ண இடமேற்படுகிறது. அச்சில் வந்த குருகுலக் காவியத்தின் இறுதியில் ஆசிரியர் பெயர் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதால், அக்காவியம் முழுமைபெறாத இச்சுவடியில் எழுதப்பட்டிருக்கும் பாயிரப் பாடல் அப்பிச்சிமார் காவியப் பாடலாக இருக்கலாம். இவ்வாறு கருதுவதற்குப், பதிப்பில் உள்ள அப்பிச்சிமார் காவிய இறைவணக்கப் பாடல், சுவடியில் குருகுலக் காவியப் பாடலாகச் சேர்க்கப்பட்டிருப்பதும் காரணமாகும். இதன்வழி, சிங்கக் கவிராசரைப் பற்றிய அப்பாடல் அப்பிச்சிமார் காவியத்திற்கு உரியது என்பதும்,

அப்பிச்சிமார் காவியத்தின் ஆசிரியர் பெயர் சாமிநாதத் தமிழ்வாணன் என்பதும் தெளிவாகிறது.

வழிவழி மரபினர் தந்த வரலாற்றுக் காவியங்கள்

அப்பிச்சிமார் காவியம் எழுதப்பட்ட ஏடுகளுக்கு முன்புள்ள ஏடுகளில் சில வரலாற்றுச் செய்திகள் பாடல்வடிவில் எழுதப்பட்டுள்ளமை மேலே சுட்டப்பட்டது. தியாகராச வள்ளல் என்பவர், கவிராசர் என்பாருக்குக் கொடை வழங்கிய செய்தியையும், அதைக் கல்வெட்டாகச் செய்து வைத்ததையும்,

வள்ளுறுந் தியாகராச வள்ளற் கவிராசருக்குத் தந்தோ
மென்றுதான்
தெள்ளுதமிழ் போலக் கனகம் நல் ..வர்த்த நாரீசுரற்குக்
கள்ளமகற்று மெய்யிடப்பாக ..கதிக்கு நாகத்திற் சிலைசாதன
முள்ள சனர்களெல்லாங் கூடியோ..மித்திவற்றிணைச்
செய்துவைத்தார்
(TSA-CAL-0393, gh.v.-107)

எனவரும் பாடலடிகள் காட்டுகின்றன. இப்பாடலில் வரும் கவிராசர் குருகுலக் காவியம் செய்த ஆசிரியராக இருக்கலாம். மேற்காண் பாடல் சுட்டும் தியாகராச வள்ளல் என்பவர், அப்பிச்சிமாரையன் குலத்திற்குக் குருவாக விளங்கியவர். இவர் முன்னர்க்கூறிய சிங்கக் கவிராயரது தந்தையார் ஆவார். இதனை,

....முதல் மாரேந்திரன் குருவின்
இனி தியாகராச வள்ளல் தரும்
சிங்கக் கவிவாணன் இருந்தனனே (அ.காவியம்., பா.எ.31)

எனவரும் பாடலால் அறியமுடிகிறது. இத்தியாகராச வள்ளல் காலத்தில் குருகுலகாவியமும், இவரது மகனான சிங்கக் கவிராசருக்குப் பிறந்த சாமிநாதத் தமிழ்வாணன் என்பவரால் அப்பிச்சிமார் காவியமும் இயற்றப்பட்டமையை மேற்சொன்னவாற்றால் அறியமுடிகிறது. சிங்கக் கவிராசன் என்பவர் பெரியமாரையன் அவைக்களப் புலவராக இருந்தவர். பெரியமாரையன் முதலான நால்வரது ஆண்மக்கள் எழுபது பேருக்கும் கல்வி கற்பித்தவர். அவர்களனைவரது திருமணத்திற்கும் பெண்பேசி முடித்தவர். இவர், ‘வள்ளல் சிங்கக் கவிராசன்’ (அ.காவியம்.,பா.எ.42), ‘கருணை விளைக்கும் சிங்கக் கவிராசன்’ (அ.காவியம்.,பா.எ.115) எனக்

காவியத்துள் போற்றப்படுகிறார். தந்தையைப் போலத் தானும் வள்ளலாகவும், கவிவன்மை கொண்ட வராகவும் சிங்கக்கவிராயர் இருந்தமை இவற்றால் புலப்படுகிறது. இவர் மகனான அப்பிச்சிமார் காவிய ஆசிரியரும் வள்ளலாக விளங்கியமையை, 'வள்ள லெனுஞ் சாமிநாதத் தமிழ்வாணன்' எனும் பாயிரப் பாடலடி காட்டுகின்றது.

வேட்டுவர் குலப்பெயர்க் காரணங்கள்

வேட்டுவன் என்ற சொல் வேட்டையாடுபவன் என்ற பொருளைத் தருகிறது. இலக்கியங்களில் வேடர் குலத்தலைவர்களை வேட்டுவன் என்ற சொல்லால் புலவர்கள் பாடுகின்றனர். வேட்டல் என்றசொல் தொல்காப்பியத்தில் வேள்வி செய்தலைக் குறிக்கிறது. இந்த வேட்டல் தொழிலைச் செய்தவர்களுடன் இருந்தமையாலும் வேட்டவர் எனப்பெயர்பெற்று, அது வேட்டுவர் என வந்திருக்கலாம்.

வேடர் மரபில் இறைநிலை எய்திய கண்ணப்பரது குல மரபினராக அடையாளம் காணப்படும் வேட்டுவர்களில் உட்பிரிவுகள் பல உள்ளன. அப்பிச்சிமார் காவியத்தில் 153 குல வேட்டுவர் இருப்பதைப் பதிப்பில் புலவர் செ. இராசு அவர்கள் தொகுத்துள்ளார். அவற்றுடன் மேலும் 3 குலங்கள் இருப்பது பேரூராதீனச் சுவடியால் தெரியவருகிறது.

பரட்டை வேட்டுவனும் சலங்கை வேட்டுவனும் பண்ணை வேட்டுவனும்
சுறட்டை வேட்டுவனும் பட்டாலி வேட்டுவனும் தும்பை வேட்டுவனும்
தொரட்டி வேட்டுவனும் மணிய வேட்டுவனும் சுண்டை வேட்டுவனும்
(அ.காவியம், பா.எ *ஙி* 130)

என்ற பாடல் பதிப்பில் மூன்று அடிகளைக் கொண்டதாக அச்சாகியுள்ளது. உண்மையில் இப்பாடல் நான்கு அடிகளைக் கொண்டது. இப்பாடலின் இறுதியடி,

முறட்டு வேட்டுவனும் முகிள வேட்டுவனும் முசுட்டை வேட்டுவனும்
(TSA-CAL-0393, பா.எ - 233)

என்பதாகும். இம்மூன்று குலங்களையும் சேர்க்க மொத்தம் 156 வேட்டுவர் குலங்கள் இருப்பது புலனாகிறது. இக்குலங்களுக்குரிய பெயர்க்காரணங்கள் குருகுலக் காவியத்திலும், அப்பிச்சிமார் காவியத்திலும் அறிதற்கு இயலவில்லை. பேரூராதீனச் சுவடியில் இக்குலங்களுக்கான பெயர்க்காரணங்கள் ஏறத்தாழ எழுபது பாடல்களில் இயற்றப்பட்டுள்ளன. சான்றாகச் சிலவற்றைக் காட்டலாம்.

உத்தமப் பொருளாவையி னெய்த உண்மை இசைக்கிசைந்த சொற்புரவலன்றன்
புத்திரன் போல இருக்குதென்றே பூபாலர்கள் அழைத்தே பேர் கொண்ட
புத்திமிகும் வேந்த வேட்டுவனும்
(TSA-CAL-0393, பா.எ - 49)

வாலையுடன் கவுத்துவ நித்தில மணியும் வயிரமும் தான் பதித்த
வாலை கேசரியாசனத்தில் வழியச்சென்று அதில் மேலிருந்த
கோலம்சேர் உயர வேட்டுவனும் குளிர்ந்த பாடலி நறையின்மலர்னு
மாலின் பொன்னாற் குற்றியும் மன்றற்கு வைகும் பூவாணி வேட்டுவனும்
(TSA-CAL-0393, பா.எ - 50)

கள்ளமகல் ஞானப்பூங்கோதைதன் கரணச் சிகரியில் பாண்டில் வைத்த
உள்ளப் புலன் பாண்டி வேட்டுவனும் உயிர் பட்டே அரன் மகிமையினால்
தெள்ளிடையாய் ஆலித்தெழுந்தே நெறிசிறந்த பட்டாலி வேட்டுவனும்
வள்ளியோர் என அனைவருக்கும் மனது சாந்தப்படை வேட்டுவனும்
(TSA-CAL-0393, பா.எ - 54)

மீறுஞ் சவுரியத்தால் மரத்தில் விரைந்துபாய் குரங்க வேட்டுவனும்
சீறும் சுறட்டையினால் மன்றற்கு செய்ய தோரணமும் கட்டி வைக்கும்
வாறுசேர் சுறட்டை வேட்டுவனும் நமன் கைத்து?ம்பில் போமுயிர் மீண்டுவந்து
ஈறுலாவும் பிரேதத்துக் குளிசையுந் தர அமர வேட்டுவனும்
(TSA-CAL-0393, பா.எ - 71)

எனவரும் பாடல்களில் முறையே வேந்த வேட்டுவர், உயர வேட்டுவர், பூவாணி வேட்டுவர், பாண்டி வேட்டுவர், பட்டாலி வேட்டுவர், சாந்தப்படை வேட்டுவர், குரங்கு வேட்டுவர், சுறட்டை வேட்டுவர், அமர வேட்டுவர் ஆகிய குலங்களின் பெயர்க்காரணங்களின் விளக்கம் பெற்றது. இவ்வாறுள்ள வேட்டுவர் குலங்களில் இமதூத வேட்டுவர் என்னும் ஒருபெயர் கூறப்பட்டுள்ளது. எழுபது பாடல்கள் இருப்பினும் இவை முறையான முடிவைப் பெறாமல் உள்ளன. இப்பாடல்கள் யாரால் இயற்றப்பட்டன என்பதையும் அறிதற்கில்லை. இச்சிக்கல்களைத் தீர்க்க வேறு சுவடிகளின் துணை வேண்டியுள்ளது.

முடிவுரை

வேட்டுவர் குல வரலாற்று இலக்கியங்களான குருகுலக் காவியம், அப்பிச்சிமார் காவியம் ஆகியவற்றின் ஆசிரியர் குறித்த தகவல்களும், நூலமைப்பில் அச்சுப்பதிப்புக்கும், பேரூராதீனச் சுவடிக்கும் உள்ள வேறுபாடுகள் குறித்தும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டது. அச்சாகியுள்ள இரண்டு நூல்களிலும் இல்லாத வேட்டுவர் குலப் பெயர்களுக்கான காரணம் கூறும் பாடல்கள் ஆதீனச் சுவடியில் இருப்பது கண்டறிந்து சுட்டப்பட்டது. இச்சுவடியுடன் வேறு பிரதிகளைத் தேடி, ஒப்பிட்டு நோக்கி ஆய்வது வரலாற்றுக் காவியங்களின் செம்மையான வடிவத்தைக் கண்டடைய உதவும். சுவடிகளில் பாடபேதங்கள் இருப்பது இயல்பு. ஆனால் வரலாற்றுச் சுவடிகளில் காணலாகும் இலக்கியப் பொருண்மையில் வேறுபாடுகள் இருப்பின் அவற்றை ஆராய்ந்து சரியானவற்றைப் பதிப்பிக்க வேண்டியது பதிப்புலகின் அடிப்படைக் கடமையாகும்.

முதன்மைச் சான்றாதாரம்

1. TSA-CAL-0393 அப்பிச்சிமார் காவியம், வே.இரா. தெய்வ சிகாமணிக்கவுண்டர் சுவடித் தொகுப்பு, தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூர் - 10.
2. இராசு.செ.,(பதிப்.) அப்பிச்சிமார் காவியம், டாக்டர்.ஊ. மயிலேறு ரவீந்திரன், 70, டாக்டர்ஸ் லே அவுட், சம்பத்நகர், ஈரோடு, 2018.
3. இராசு.செ.,(பதிப்.) குருகுல காவியம், கொங்கு ஆய்வு மையம், ஈரோடு, 2018.

மேற்கோள் நூல்கள்

1. இராமசாமிப் புலவர்.சு.ஆ. தமிழ்ப்புலவர் வரிசை (இருபத் தொன்றாவது புத்தகம்), சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, திருநெல்வேலி, 1959.

பெருமைமிகு வேட்டுவர் சில நினைவுகள்

பேராசிரியை ஆர்.தமிழ்ப்பொன்னி
M.Sc., B.Ed.,
கருவூர்.

கொங்கு நாட்டின் பூர்வ குடிகளான வேட்டுவர்கள் பண்டைக்காலத்தில் கோட்டை கட்டியாண்ட பெருமைக்குரியவர்கள். இவர்களது வரலாற்றுப் புகழ்மிக்க ஊர்களைப் பற்றியும், பக்திமார்க்கத்தில் தலைசிறந்து விளங்கிய கண்ணப்ப நாயனார் பற்றியும் சிந்தித்துப் பார்த்தேன்; பெருமகிழ்ச்சியடைந்தேன். ஆண்டாளுக்கு இணையான அப்பிபாளையம் சௌந்தரநாயகி, பழமங்கலம் நடுகல் புகழ் கரைய குலச் சொக்கன், வீரமிகு வெஞ்சமன், கடையெழு வள்ளல்களுள் முத்திரை பதித்த இணையற்ற கொடைவள்ளல், மாபெரும் வீரன் வல்வில் ஓரி, ராஜவாய்க்கால் வெட்டிய அல்லாள வேட்டுவன், பூலுவ வேட்டுவருள், புகழ்மிகு புரவிபாளையம் கோபண்ண மன்றாடியார், தலையூர் காளி, சிற்றரசன் கொடுமுடி ஆகியோரை சரித்திரம் என்றென்றும் போற்றிப் புகழும் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. என் எண்ணச் சிதறல்கள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் பேருவகை அடைகிறேன்.

தென்னிலை

வேட்டுவர் வரலாற்றில் தென்னிலைக்குச் சிறந்ததோர் இடமுண்டு. தென்னிலைப் பட்டக்காரரின் தலைமையிடம் தென்னிலை. தென்னிலையில் வேட்டுவர் கோட்டை கட்டி ஆண்டனர். தென்னிலைப் பட்டக்காரரின் குல தெய்வம் பொன்னீலியம்மன் இவருக்குச் சின்னதாராபுரம் அகிலாண்டேஸ்வரி கோயிலில் முதல் உரிமை உண்டு. இப்பகுதிகளில் வேட்டுவர் படைவீரர்களாகப் பணிபுரிந்தனர். எனவே வேட்டுவர் விழா கொண்டாடும் உரிமையைப் பெற்றனர்.

தென்னிலை ஒரு பெரிய கிராமம். இது கீழ்பாகம், மேல்பாகம், தென்பாகம் என்று மூன்று தனித்தனி கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு

மூன்று ஊராட்சிகள் செயல்படுகின்றன. கீழ்பாகம் மலையம்பாளையம் (P.T.தேவனகவுண்டரின் இருப்பிடம்).

இங்கு வசிப்பவர்களுக்கு தளிக்கோட்டையில் எழுந்தருளியுள்ள தேவியண்ணசாமியே குலதெய்வம். காட்டுப்பாளையம் தளிக்கோட்டை ஆகியவை இதனருகில் உள்ளன. தென்னிலை நீலியம்மன் வேட்டுவர்க்கு உரிமையுள்ள குலதெய்வம். மோக்காளிக்கு இக்கோயிலில் முதல் உரிமை. இரண்டாவது முதன்மை சிறுத்தலை வேட்டுவர்க்கு. வேளாளர் இனப் பெருங்குடியினர்க்கு மூன்றாவது உரிமை. நான்காவது உரிமை சோழிய வேளாளருக்கு. தென்னிலையில் வேங்கபுரம் அம்மன் கோயில், கண்டியம்மன் கோயில் மங்கலம் காளியம்மன், மின்னாம்பள்ளி வன்னியம்மன் கோயில் ஆகியனவும் இருந்தன. இவ்வூரில் சிறுத்தலை வேட்டுவன், மாகாளி வேட்டுவன், வெங்கச்சி வேட்டுவன், குட்டியாக்கவுண்டன், மாந்தாக்கவுண்டன் ஆகிய 5 பேருக்குரிய அரண்மனையும், 5 பிள்ளையாரும் இருந்தன.

வேட்டுவர் தென்னிலைக் கோட்டை மட்டுமின்றிக் கோசணக் கோட்டை, அந்தியூர்க்கோட்டை, பரமத்திகோட்டை, வெஞ்சமாக்கூடல் கோட்டை ஆகியவற்றையும் கட்டி ஆண்டனர்.

பட்டாலி

கொங்கு நாட்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்களுள் பட்டாலியும் ஒன்று. கொங்கு 24 நாடுகளில் ஒன்றான காங்கய நாட்டுக்குரிய பழமை மிக்க ஊர்களுள் 14 ஆவதாக வைத்து சிறப்பிக்கப்படுகிறது.

1820 இல் எழுதப்பட்ட மெக்கன்சி ஆவணத்தில் இவ்வூரும் இடம் பெறுகிறது.

தென்னிலைச் செப்பேடு வேட்டுவரின் சாதனையைக் கூறும் செப்பேடுகளில் ஒன்றாகும். இச்செப்பேடு தென்னிலை பட்டக்காரர் எம்.ஏ., பகவதிக் கவுண்டரிடம் இருந்தது. ஒக்கிலியர் முதலான பகைவர்களை வேட்டுவர் வெட்டி முடிக்கியதால் இச்செப்பேடு வழங்கப்பட்டது. தென்னிலையிலிருந்து பல வீரர்களின் நடுகற்கள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்று இன்று கரூர் அகழ் வைப்பகத்தில் உள்ளது. இதனால் தென்னிலை வீரம் விளைந்த ஊர் என்பது புலனாகும்.

செல்வப் பட்டாலி, பத்தர் பணி பட்டாலி எனப் புகழ்ப்பெற்ற பட்டாலிக்கு அருணகிரிநாதர் மூன்று திருப்புகழ்ப் பாடல்கள் பாடியுள்ளார்.

பயிரலி அருள் பட்டாலி , மயில்கள் நடமிகு பட்டாலி, கொங்கிற் பட்டாலி என அவர் பட்டாலியைப் புகழ்கிறார்.

சிவன்முருகன் பட்டாலி பால்வெண்ணீசுவரர் பாலன் எனக் குறிக்கப்பெறுகிறார்.

அன்னம் பயிலும் பட்டாலிச் சிவன்மலை,
ஞாலம் புகழும் பட்டாலிச் சிவன்மலை

என்பன இலக்கியத் தொடர்கள். சிவன்மலை முருகன் பட்டாலியூரன் என்றே அழைக்கப் பெறுவது சிறப்பாகும்.

பட்டாலி வேட்டுவருடன் வெண்கொற்றர், குறும்பில்லர் குல வேட்டுவர்களும் இங்கு வாழ்ந்தனர். ஆனால் பட்டாலிக் கிராமத்தின் 24 உட்கிராமங்களில் வேட்டுவர்கள் எவரும் இன்று இல்லை. வேட்டுவர்குலப் பெருமக்கள் பலர் செல்வம், செல்வாக்குடன் வாழ்ந்த பட்டாலியில் வேட்டுவர்களே கோயில் முப்பாட்டுக்காரர்கள். முப்பாட்டுக்காரர் கிராமத்தில் வேண்டும் என்பதற்காக இன்று 24 ஊர்க் கொங்கு வேளாண் பெருமக்களும் வேட்டுவர் ஒருவரை அழைத்துவந்து குடியமர்த்தியுள்ளனர்.

பட்டாலி வேட்டுவர் கல்வெட்டு

பிடாரிசிலை . 10.02.1995 அன்று பட்டாலியில் இராயவலசு, பூங்கந் தோட்டம், என்னும் பகுதியில் கரியகாளியம்மன் என வழங்கும் பிடாரிசிலை பார்வையிடப்பட்டது. முற்றிலுமாக அழிந்த அக்கோயில் நிலையில் கொங்கு சோழர் கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

1) ஸ்வஸ்திஸ்ரீ
2) கோ அபி
3) மானசோ
4) ழஸ்ரீராஜா
5) திராஜதேவ
6) ற்குத்திருநெ
7) வழுத்திட்டு
8) ச் செல்லா
9) நின்றதிரு
10) நள்ளியாண்
11) டு பத்தாவ
12) துநாயக
13) விச்சி நாக
14) ந் சிலம்பி
15) யேந் குறும்
16) புள்ளரில் எ
17) ந் மணவான
18) ந் காவன்அ
19) ரையனைச்
20) சாத்தி எடுப்
21) பிச்ச பிடாரி
22) கோயில் இ
23) துரக்ஷிப்பா
24) ந் காலிற்பொடி
25) எந்தலை மேலிது

பிற கல்வெட்டுகள்

பட்டாலி பால்வெண்ணீசுவரர் நல்மங்கையம்மன் கோயிலில் 17 கல்வெட்டுக்கள் உள்ளன. 1920 ஆம் ஆண்டு தாராபுரம் வட்டக் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் படியெடுக்கப்பட்டபோது அவைபடி எடுக்கப்பட்டுள்ளன. கூத்தன் யாழ்வல்லான் என்ற பெயர்களைப் பெற்ற ஆடவர் இங்கு இருந்துள்ளனர். கொங்கு அரசர்களின் உயர் அலுவலர்களான பெருமாள் முதலிகள் இங்கு பல திருப்பணிகளைச் செய்துள்ளார். கொங்குச் சோழன் வீரராசேந்திரன் இங்கு வந்து தன் பெயரால் சந்தி ஒன்றை நிறுவினான் என்பது கல்வெட்டால் புலனாகிறது.

வணிக மையமான பட்டாலி

கிபி 10 முதல் 14 ஆம் நூற்றாண்டு வரை இவ்வூர் மிகச்சிறந்த வணிக மையமாக புகழ்ப் பெற்றிருந்தது. பிரான்மலையில் நடைபெற்ற பெரும் சந்தையில் கலந்து கொண்ட காங்கய நாட்டு ஊர்களில் பட்டாலியும் ஒன்று என்பது பெருமைக்குரியது. இங்கிருந்த ஒரு வணிக மையத்திற்கு இரட்டருமொழி சோழப் பெருந்தெருவு என்று பெயர். உலகப் புகழ்பெற்ற வண்ணக் கல்மணி வணிகத் தலமான படியூர் என்னும் புகழ்மிக்க ஊர் பட்டாலியின் அருகில் உள்ள என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இவ்வூரில் மழைக்காலங்களில் மேல்மட்டத்திலும், பலவகையான கல்மணிகள் கிடைக்கின்றன.

பட்டாலியில் பல புகழ்மிக்க வேட்டுவத் தலைவர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் பட்டாலி வேட்டுவர் சொக்கன் ஞானசம்பந்தன் என்பான் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகேசுவர சுவாமி கோயிலில் சந்தியாதீபம் ஏற்றிவைத்துப் பெருமைபட்டான். பட்டாலியில் வேட்டுவர் பலர், பல திருக்கோயில் களுக்கு அறக்கட்டளை நிறுவியுள்ளனர்.

வேட்டுவ மாதரின் இறைப்பணிகள்

செல்வி இ.பிரதிக்ஷா
பி.இ., எம்.ஏ., (வரலாறு),
காந்திகிராமம், கரூர் - 5.

முன்னுரை

இந்தியா முழுவதும் பல பழங்குடியினர் வாழ்ந்து வந்ததாக, தமிழ்[1] மற்றும் சமஸ்கிருத[2] இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பில்லர் , செஞ்சுக்கள், குரவர், வெட்டர், இருளர், தோடர் மற்றும் பளியர், புலையர், மீனவர் மற்றும் பல பழங்குடியினரும் சற்று முன்னேறிய பழங்குடிகளும் (TRIBES AND SEMI TRIBALS) பஞ்சதிராவிடம் முழுவதும் (குஜரத் மற்றும் மகாராஷ்ட்ரம், ஆந்திரம், கர்நாடகம், பழந்தமிழகம் (இன்றைய தமிழ்நாடு மற்றும் கேரளம்) பரவி வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது. இப்பழங்குடியினரே திராவிடப் பண்பாட்டின் முன்னோடிகள் ஆவர்.

பண்டைய தமிழகத்தின் (சேரலம் உட்பட) இனங்களையும் பழங்குடிகளையும் பற்றி நுண்ணிதின் ஆய்ந்த வரலாற்றறிஞர் வி.கனகசபை பிள்ளை அவர்கள் வில்லவரும் (வேட்டுவரும்) மீனவரும் தமிழகத்தின் பூர்வகுடிகள் என்று அறுதியிட்டுக் கூறுவார். மீனவர் சமவெளிகளிலும் ஆற்றோரங்களிலும் கடற்கரைகளிலும் வில்லவர் மலைப்பகுதிகளிலும் வாழ்ந்ததாகவும், வில், மீன், ஆகிய இரண்டும் தூய திராவிடச் சொல் என்றும் இவர்களே தமிழகத்தின் மூத்த குடிகள் என்றும் கூறுவார்.[3]

வில்லவரே (வில்லைப் பயன்படுத்திய வேட்டுவரே) சேர குல முன்னோர் என்றும் நாகர்கள் இவ்விருவரையும் புறந்தள்ளி சேர நாட்டில் ஆதிக்கம் செலுத்தினர் என்றும் நாகர்களே சேர மரபினரின் முன்னோர் என்றும் பறை சாற்றிக் கொண்டதாகவும் அவர் குறிப்பிடுவார்.

வேட்டுவரும் முத்தரையரும் ஒரே குடும்பத்தினர் என்று எட்கார் தர்ஸ்டன் கூறுகிறார். சேலம் மாவட்ட விபரச்சுவடியும், இவ்விருவரும் ஒரே குலத்தவர் என்றும் பதிவு செய்துள்ளது.[4]

இறைப்பணியில் வேட்டுவர் இணையற்று விளங்கியது போன்று, வேட்டுவ மகளிரும் திருக்கோயில்களில் பல திருப்பணிகளும் அறப்பணிகளும் செய்துள்ளனர்.

பக்திமார்க்கம் பெருகவும், திருக்கோயில் பணிகள் சிறக்கவும், இறையன்பு வளரவும் பெருந்தொண்டு புரிந்த வேட்டுவர் குல மகளிருள் முன்னணியில் நிற்பவர் வேட்டுவப் பெருமாட்டியான நாயக விச்சி நாயன் சிலம்பி என்பவராவார். இவர் வேட்டுவக் கவுண்டருள் பெரும் பிரிவில் ஒன்றான காவலருள் குறும் பிள்ளர் குலத்தைச் சேர்ந்த காவன் அரையன் என்பாரின் மனைக்கிழத்தி ஆவார். ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டத்தில் குறும்பிள்ளர் குலத்தினர் பெருந்தனக்காரர் களாகவும், பெருஞ்செல்வாக்கு பெற்று விளங்கினர் என்பதனைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

நாயன் சிலம்பி எனும் பெண்ணரசி ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம் (பட்டாலி) இராயவலசு, புங்கந்தோட்டம் எனும் இடத்தில் தன் கணவர் பெயர் விளங்க பிடாரியம்மன் கோயில் ஒன்றைக் கட்டினார். இக்கோயில் தற்போது கரியகாளியம்மன் கோயில் எனும் பெயரில் அழைக்கப்படுகிறது. இத்திருக்கோயில் அபிமான சோழ இராசாதி ராசதேவரின் பத்தாம் ஆட்சியாண்டில் (பொது ஆண்டு 1095) கட்டி முடிக்கப்பட்டது என்பதனை இத்திருக்கோயில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு அறிவிக்கின்றனது.

அவினாசியாண்டி

காவலர் குறும்பிள்ளர் குலத்தில் கூத்தனான அகளங்க நாடாழ்வான் என்பான் பதின்மூன்றாம் நூற்றாண்டில் பெரும் புகழ் பெற்று விளங்கினான். இவன் கூத்துக் கலையில் பெரும் தேர்ச்சி பெற்று தன்னிகரற்றவனாகத் திகழ்ந்தான். இப்பெருமகனின் மனைவியே அவினாசியாண்டி எனும் நங்கையாவார்.

பட்டாலி பால் வெண்ணீசுவரர் இறைவர் மீது பெருங்காதல் கொண்ட இப்பெருமாட்டி, இத்திருக்கோயிலுக்குச் சந்தியா தீபம் ஒன்றினை நிறுவ பொன்தானம் அளித்துள்ளார். இதனால் வேட்டுவர் குல மகளிர் தீபமிட்ட செய்தி அறியப்படுகிறது. இதனை ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பட்டாலியில் உள்ள பால் வெண்ணீசுவரர் திருக்கோயிலில் காணப்படும் விக்கிரம சோழனின் 19 ஆம் ஆட்சியாண்டுக் (1292) கல்வெட்டுப் பதிவு செய்துள்ளது.

கோவி

விக்கிரம சோழனின் 12 ஆம் ஆட்சியாண்டில் (பொது ஆண்டு 1285) பட்டாலி பால் வெண்ணீசுவரர் திருக்கோயிலுக்கு வேட்டுவ இனத்தைச் சேர்ந்த காவலர் பிரிவைச் சேர்ந்த குறும்பிள்ளர் குலத்தைச் சேர்ந்த போசன் எனும் பெருமகனின் மனைக்கிழத்தி கோவி எனும் நங்கை சந்தியா தீபம் ஒன்றினை ஏற்றி வைக்கப் பொன்தானம் செய்து வேட்டுவரின் பெருமையை நிலைநாட்டினார்.

பட்டாலி பால் வெண்ணீசுவரர் திருக்கோயில் கல்வெட்டு, வேட்டுவ நங்கை கோவியின் அறச்செயலைப் பதிவு செய்துள்ளது. இக்கல்வெட்டில் இம்மாதரசியின் பெயர் கோவி எனும் தொடக்கத்தைக் கொண்டுள்ளது. அதன்பின் உள்ள எழுத்துக்கள் பொறிந்துள்ளது. எனவே கோவி வாணி என்பது முழுப் பெயராக இருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

சோழாண்டியின் பொன்தானம்

ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பட்டாலி பால் வெண்ணீசுவரர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள இராசகேசரி வீரராசேந்திர சோழனின் எட்டாமாட்சியாண்டு (கி.பி 1215) கல்வெட்டில், வேட்டுவர் காவலர் வளவரில் ஒருவருடைய மனைவியார் சோழாண்டி என்பார். இத்திருக்கோயிலில் சந்தியா தீபம் நிறுவப் பொன்தானம் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. இறைவர் கோயிலில் விளக்கெரிக்கப் பொன்னளித்த இவ்வேட்டுவப் பெண்மணியின் பெயர் கல்வெட்டில் பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட்டுள்ளமை வேட்டுவர் வரலாற்றின் அரிய செய்தியாகும்.

உடையபிராட்டியின் அறப்பணி

தென்கரை நாட்டு கொற்றனூர் வேட்டுவர் காவலர் கள்ளிப்பிள்ளரில் செய்யான் வைய்யான் எனும் அரசியல் அதிகாரியின் மனைவியான உடைய பிராட்டி காங்கயம் வட்டத்திலுள்ள முத்தூர் சோழீசுவரர் திருக்கோயிலில் சந்தியா தீபம் ஒன்றினை நிறுவி அழியாப் புகழ் பெற்றார். இராசகேசரி வீரராசேந்திர சோழனின் (1207-1255) நான்காம் ஆட்சியாண்டைச் சேர்ந்த (கி.பி 1211) முத்தூர் சிவன் கோயில் கல்வெட்டு இவ்வேட்டுவப் பெருமாட்டியின் திருப்பணியைப் பெருமையாகப் பேசுகிறது.

பாண்டாண்டி அளித்த சந்தியா தீபம்

சோழாண்டி எனும் வேட்டுவப் பெருமாட்டியின் திருப்பணியைக் கண்ட நாம் பாண்டாண்டி எனும் பெருமாட்டியின் அறப்பணியைக் காண வேண்டாமா? வடகரை நாட்டுப் புன்னம், வேட்டுவர் வரலாற்றில் சிறப்பனதோர் இடத்தைப் பெற்றுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்கள். புன்னத்துப் பூவாணிய வேட்டுவன் வேளான் கரியானான மருதங்க வேளான், கரூர் ஆநிலையருப்பருக்கு மூன்று கழஞ்சு பொன்கொடை கொடுத்துப் புகழ் பெற்றான். அதே ஊரைச் சேர்ந்த ஊராளி பாண்டிய வேட்டுவனின் மகள் பாண்டாண்டி எனும் பெருமாட்டி, பவானி வட்டம், ஓலகடம், ஓலகதீசுவரர் திருக்கோயிலில் சந்தியா தீபம் வைத்துப் பெருமை பெற்றாள். இதனை இத்திருக்கோயிலிலுள்ள வீரராசேந்திர சோழனின் 23 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி 1230) பெருமையாகப் பேசுகின்றது.

செங்கூத்தாண்டி வைத்த தீபம்

கொங்கு நாட்டு வேட்டுவ அரசியல் தலைவர்கள் சிலர் சோழரின் சீர்மிகு ஆட்சியைத் திறம்பட நடத்தினர். இத்தலைவர்களுள் காவலர் வெண்கொற்றரில் சோணாப் பல்லவரையன் என்பான் குறிப்பிடத் தக்கவன் ஆவான். இவர் மனைவி செங்கூத்தாண்டி என்பாள் பட்டாலி வெண்ணீசுவரர் திருக்கோயில் இறைவர் மீது பேரன்பு செலுத்தினார். இதனை நிரூபிக்கும் வகையில் இத்திருக்கோயிலில் சந்தியா தீபம் ஒன்றினை நிறுவிப் பெரும் புகழ் பெற்றார்.

இத்திருக்கோயிலில் வெட்டப்பட்டுள்ள விக்கிரம சோழனின் 19 ஆம் ஆட்சியாண்டுக் (பொது ஆண்டு 1292) கல்வெட்டு இப்பெண்மணியின் தானத்தை வியந்து பாராட்டுகிறது. இப்பெருமாட்டி கூத்துக் கலையில் வல்லராகத் திகழ்ந்தாள்.

மேற்கூறியவற்றான் வேட்டுவருக்கு இணையாக வேட்டுவப் பெருமாட்டிகளும் திருக்கோயில்களில் சந்தி விளக்கு , நொந்தாவிளக்கு ஆகியனவற்றை வைத்து, இறைப்பணியில் ஈடுபட்டு வரலாற்றில் தம் பெயர்களைப் பதிவு செய்யத்தவறவில்லை என்பது புலனாகிறது.

அடிக்குறிப்புகள்

1. V.Kanakasabhai Pillai has made extensive studies about the races and tribes of ancient Tamilakam.See his The Tamils Eighteen

Hundred Years Ago, 2nd Edition, Reprint, SISSWPS, Tirunelveli, 1966, pp.39-62.

2. The Classic work of A.L.Basham, The Wonder that was India, Rupa & Co., Calcutta, 1967, pp.35-36, states that the most powerful of the ten tribes was that of the Purus.

3. மேலதே பக்.80

4. சேலம் மாவட்ட அரசிதழ் பாகம் 1, பகுதி 1, பக்கங்கள் 140-152.

வேட்டுவக் குடியினரின் சிறப்புகள்

புலவர் ப. எழில்வாணன்

முன்னுரை

வேட்டுவக் குடியின் தோற்றம், தொன்மை, தொழில், கொடைத்தன்மை இவற்றின் அடிப்படையில் வேட்டுவக் குடியினரின் சிறப்புகளை இக்கட்டுரை எடுத்துக் கூறுகின்றது.

வேட்டுவக்குடித் தோற்றம்

“சாலித் தீவையும் தென்னாப்பிரிக்காவையும் தன்னுடன் இணைத்துக் கொண்டிருந்த பெருநாடே குமரிக்கண்டமாதலின், அந்நிலத்திலேயே மாந்தன் தோன்றினானென்றும், அத்தோற்றம் கி.மு. 5,00,000 ஆண்டுகளுக்கு முந்தியதென்றும் மறுப்பச்சம் இன்றிக் கூறலாம்” என்று பாவாணர், (தமிழர் வரலாறு: பக்கம்:6) குறிப்பிடுகின்றார்.

அவ்வாறு தோன்றிய முதல் மாந்தன் காட்டு விலங்காண்டியாகத் தான் தன் வாழ்க்கையைத் தொடர்ந்திருக்க முடியும். அவன் இயற்கையாய்க் கிடைக்கும் கனிகள், காய்களை உண்டு தன் பசியை அடக்கியவன், பின் விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடித் தின்றவன், காலப்போக்கில் வேட்டையைத் தன் தொழிலாக ஆக்கிக் கொண்டான். இயற்கைச் சூழலே முதல் மாந்தனுக்கு வேட்டையாடுதலை அவனின் தொழிலாகக் கொள்ளச் செய்தது. அவன் வழித்தோன்றல்களும் (வாரிசுகளும்) வேட்டையாடுதலையே பின்பற்றி வாழ்ந்திருப்பர். அவர்களை அடையாளப்படுத்தவே தொழிலடிப்படையில் வேட்டுவர் என்னும் பெயர் இயல்பாகவே ஏற்பட்டதெனலாம். பல்லாயிரம் ஆண்டுகள் பல தலைமுறைகள் தோன்றி வளர்ந்து படிநிலை வளர்ச்சிபெற்ற அவ் வழித்தோன்றல்கள் வேட்டைக்குரிய கருவிகளான கில்லி, வெட்டி, குத்தி, கத்தி, உளி, கோடரி, குத்துக்கோடரி முதலிய வற்றைக் கற்களால் உருவாக்கிக் கொண்டனர். அவர்களே கற்கால மாந்தர் ஆவர். காலம் தோராயமாக் கணக்கிடின் கி.மு. 5,00,000 -

50,000 எனலாம். அவர்களே பழங்குடிகள் எனப்படுவர். அவர்களையே தமிழர்களின் முன்னோர்களாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

“தமிழர் தென்னாட்டுப் பழங்குடி மக்களே என்னும் உண்மையை, (P. T.) சீநிவாசையங்கார் எழுதிய Stone Age In India, History of the Tamils என்னும் நூல்களையும், இராமச்சந்திர தீட்சிதர் எழுதிய Origin and Spread of the Tamils, Pre-Historic South India என்னும் நூல்களையும் படித்துணர்க ” என்பார் பாவாணர் (தமிழர் வரலாறு பக்கம்: 19). தமிழரின் முன்னோர் பழங்குடி மக்களே என்று குறித்த வரலாற்றாசிரியர்கள், அப்பழங்குடி மக்கள் வேட்டுவரே எனக் குறிக்காததால் வேட்டுவரின் தொன்மை, பின் தள்ளப்பட்டுள்ளது என்பதை எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

கற்கால வேட்டுவவழி மரபினர் குறிஞ்சி நிலத்திலும், புதுக் கற்கால வேட்டுவ மரபினர் குறிஞ்சியிலும், அதையடுத்த முல்லை நிலத்திலும் வாழ்ந்து வந்தனர். திணை நிலம் பற்றியோ, தொழில் பற்றியோ, தெய்வ வணக்கம் பற்றியோ அவர்களிடையே எவ்வகை வகுப்பு வேறுபாடும் இருந்ததில்லை. ஒரே வகுப்பினராகவே வாழ்ந்து வந்தனர் என அறியலாம்.

கற்காலம் (கி.மு.50,000) கழிந்து, புதுக் கற்காலத் தொடக்கத்தில் தான் நானிலப் பகுப்பு ஏற்பட்டது. பின், பாலையுடன் ஐந்திணை நிலங்கள் தோன்றின.

“முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே” (தொல்: 951)

வேட்டுவவழி மரபினர் மருதநிலத்தில் வாழத்தொடங்கிய பின்னரே தொழிற்பிரிவும், வகுப்பு வேறுபாடும் தோன்றின. பின், நெய்தல் நிலத்திலும் வாழத் தொடங்கினர். குறிஞ்சியில் வேட்டுவரும், அவர்வழி வந்த குறவரும்; முல்லையில் வேட்டுவரும், அவர்வழி வந்த ஆயரும்; மருதத்தில் வேட்டுவரும், அவர்வழி வந்த உழவரும்; நெய்தலில் வேட்டுவரும், அவர்வழி வந்த படவரும்; பாலையில் வேட்டுவரும், அவர்வழி வந்த மறவரும் என ஒவ்வொரு வகுப்பாக வாழ்ந்தனர் என அறியலாம்.

எல்லா நிலப்பகுதிகளிலும் வேட்டுவர் வாழ்ந்தாலும், காலப்போக்கில் வேட்டைத் தொழிலுக்கு மிக வாய்ப்பாக அமைந்த முல்லை நிலமே வேட்டுவர்க்கு உரியதாக இருந்தது. இதனைத் தொல்காப்பியர்,

"ஆயர் வேட்டுவர் ஆடூஉ திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே" *ஶ்ரீ* **(தொல்: நூற்பா: 967)**

என்று கூறிஉறுதிப் படுத்துகின்றார். ஏனை நிலப்பகுதிக்கு உரியவர்களின் பெயர்களைத் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை.

"ஏனோர் மருங்கினும் எண்ணுங் காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே" -(தொல்: 970)
என்று

பிற வகுப்பினரைக் குறிப்பிடாமல், முல்லைக்கு மட்டும் சான்றுகூறி வேட்டுவர் பெயரைக் குறிப்பிட்டிருப்பதன் மூலம் வேட்டுவரின் சிறப்பையும் முதன்மையையும் அறியலாம்.

இத் தென்புலத் தமிழ் மண்ணில் தோன்றி வளர்ந்த வேட்டுவக் குடியினர், வடபுலத்திலிருந்து வந்தவர் என்று கூறுவது தவறாகும்.

வேட்டுவர்

உலகின் முதல் மாந்தன் குறிஞ்சியாகிய மலைப்பகுதிகளில் வாழ்ந்து வந்த போதும், பின் முல்லைப் பகுதியாகிய காடுகளில் வாழ்ந்து வந்த போதும் அவன் மேற்கொண்ட முதன்மையான தொழில் வேட்டைத் தொழிலே. அதன் அடிப்படையிலேயே அவனுக்கு வேட்டுவன் எனவும், அவன் வழிமரபினர்க்கு வேட்டுவர் எனவும் பெயர் அமைந்ததாக முன்னர் கண்டோம். அவ் வழிமரபினர் எண்ணற்ற தலைமுறை யினராகத் தோன்றி வாழ்ந்து வந்த காலத்தில் (ஏறத்தாழ கி.மு.50,000 ஆண்டுகளுக்கு முன்னர்) மொழி தோன்றியது. அதுவே தமிழ்மொழி ஆகும். மொழி இறைவனால் படைக்கப்பட்டது அன்று.

மொழி, பல்லாயிரம் ஆண்டுகளாக மக்களால் பேசப்பட்டு, பயிலப் பெற்று, புலமக்களால் திருத்தப்பெற்றுப் படிப்படியாக வளர்த்தெடுக்கப் பெற்றதாகும். அதன்பின், கி.மு.11,000 ஆண்டளவில் இலக்கியங்களும், கி.மு.10,000 ஆண்டளவில் இலக்கணமும் தோன்றின. அதுவரை வேட்டுவன்/வேட்டுவர் என்னும் சொற்கள் எழுத்துப் பதிவில் இல்லை. அதன்பிறகே, தலைக்கழக(தலைச்சங்க), இடைக்கழக (இடைச்சங்க)க் காலத்து தமிழ் ஏடுகளில் பதிவு பெற்றிருக்கலாம். அவையெல்லாம் இயற்கைச் சீற்றத்துக் கடல்கோள்களால் அழிக்கப்பட்டு விட்டமையால் சான்றுகள் கிடைக்கவில்லை. என்றாலும், தமிழின் தொன்மையான

நூலாகக் கிடைக்கப்பெற்ற கி.மு. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல்காப்பியத்தில்,

“ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே “ *ஶி* என்று (நூற்பா: 967)

பதிவு பெற்றுள்ளது வேட்டுவரின் தொன்மையைக் காட்டக் கிடைத்த அரிய சான்றாகும்.

தொல்காப்பியம் இலக்கணநூல் ஆகையால், தொல்காப்பியர் காலத்திற்கு முன்னிருந்த பல்வேறு பழந்தமிழ் இலக்கிய நூல்களில் வேட்டுவர் குறித்த செய்திகள் இடம் பெற்றிருக்க வேண்டும் .அவற்றைக்கொண்டே தொல்காப்பியர் கூறியுள்ளார் என்பது உறுதியாம். ஏனெனில், ‘எள்ளின் நின்றே எண்ணெய் எடுபடுதல் போல இலக்கியத் திலிருந்தே இலக்கணம் தோன்றும்.’

வேட்டுவர் என்னும் சொல் வெற்றுச் சொல்லன்று. இடுகுறிச் சொல்லன்று. பொருளார்ந்த வேர் மூலம் தோன்றிக் கிளைத்த தொன்மையான சொல்லாகும்.கால வரலாற்றைக் கணக்கிட வாய்த்த உரம் பெற்ற அருஞ்சொல்லாகும்.

விள் - விரும்புதல் கருத்து வேர். விள்> வெள்> வேள் = விருப்பம். வேள்> வேள்+தல்> வேட்டல்= விரும்புதல்; வேட்டம்=விரும்புதல்;

வேள்+தை> வேட்டை= விலங்கு-பறவைகளை விரும்பிப் பிடிக்கும் தொழில்.

வேள்+துழுவேட்டுழுவேட்டுவன்=வேட்டைக்குச் செல்வோன்.

வேட்டுவன்ழுவேடுவன்ழுவேடன். இம்மூன்று சொற்களும் ஒரே பொருள் கொண்டவை. (காண்க: பாவாணர், வேர்ச்சொல் கட்டுரைகள்- நான்காம் பகுதி, பக்கம்;119 127)

வேட்டுவன் அல்லது வேட்டுவர் என்னும் சொல் தொல்காப்பியத்தில் இடம்பெற்றது போலவே, பழைமையான தமிழ் இலக்கியங்களாகிய எட்டுத்தொகை,

பத்துப்பாட்டு நூல்களிலும், திருக்குறளிலும் இடம் பெற்றுள்ளது. இது, வேட்டுவர் குடிக்குப் பெருமையையும், சிறப்பையும் சேர்ப்பதாகும்.

இலக்கியங்கள்		**பாடல் எண்**
நற்றிணை : ---	"வேட்டுவன் வலைபரிந்து போகிய"	189.
பதிற்றுப்பத்து: ---	"காந்தளம் கண்ணிக் கொலைவில் வேட்டுவர்"	30
கலித்தொகை: ---	"வேட்டுவர் உள்வழி செப்புவேன் "	144
அகநானூறு : ---	"வேட்டுவன் பெறலொடு அமைந்தனை"	28
புறநானூறு : ---	"இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து"	19
மதுரைக்காஞ்சி : ---	"நிரைதிமில் வேட்டுவர் கரைசேர் கம்பலை"	116 (அடி)
திருக்குறள் : ---	"வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று"	274

கழக(சங்க) இலக்கியங்களுக்குப் பின் தோன்றிய நூல்களிலும் வேட்டுவர் பற்றிய குறிப்புகளையும் காணலாம்.வேட்டுவன் என்னும் சொல், வேடுவன், வேடன், வேடு என்றும் வரும். சொல்லியல் நெறிப்படியும், இலக்கண முறைப்படியும் அவை சரியே. கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில், மதுரைக் காண்டத்தில் 12-ஆவது காதை வேட்டுவ வரி என்னும் தலைப்பிலேயே அமைத்துள்ளது பெருஞ்சிறப்பே.

சிலப்பதிகாரம் : ---	"விற்றொழில் வேடர் குலனே குலனும்"	4-4
தேவாரம் : ---	"வீரத் தாலொரு வேடுவன் ஆகி" (வேட்டுவன்மூ வேடுவன்)	485
சீவகசிந்தாமணி : ---	"வெந்தொழில் வேடர் ஆர்த்து"	421
கம்பராமாயணம்: ---	"ஏழைமை வேடன் இறந்திலன்"	2317
	"வேடு கொடுத்தது பாரெனும் இப்புகழ்"	2324

காலம் செல்லச் செல்ல, வேட்டுவர் என்னும் தொழிற்பெயர் குடிப்பெயராக மாறி, பின் குலப்பெயராக மாறியதுடன் பல்வேறு சிறப்புப் பெயர்களைப் பெற்றுப் பல வகுப்பினராகிக் காலத்தாலும், இடத்தாலும், நாகரிகத்தாலும் வேறுவேறு பெயர்களைப் பெறும் நிலை உருவாகி விட்டது.

சான்று:

"கையெடுத் தோச்சிக் கானவர் வியப்ப" (சிலப்-வேட்டுவ வரி: 9)

"மறக்குடித் தாயத்து வழிவளம் சுரவாது" (சிலப்-வேட்டுவ வரி:14)

"சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக் குமரியை"
(சிலப்-வேட்டுவ வரி:21)

"விற்றொழில் வேடர் குலனே குலனும்" (சிலப்-வேட்டுவ வரி:4-4)

"எய்வில் எயினர் குலனே குலனும்" (சிலப்-வேட்டுவ வரி:5-4)

சிலப்பதிகார வேட்டுவ வரியில், மேற்குறிப்பிட்ட பாடலடிகளில் கானவர், மறக்குடி, தொல்குடி, வேடர் குலம், எயினர் குலம் (கானவர், மறவர், வேடர், எயினர்) என்று வேட்டுவக் குடியைச் சேர்ந்தவர்களைச் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

முதலில் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்து வந்த வேட்டுவக் குடியினர் படிப்படியாகக் கால நீட்சியில் வேறுவேறு நிலங்களுக்குச் சென்று குடியேறியபின் நாளடைவில் பல வகுப்பினராக வாழத்தொடங்கினர். பல்வேறு குலப்பெயர்களும் குழுப்பெயர்களும் தோன்றத் தொடங்கின.

"குறிஞ்சி நிலத்தார், குறவர், குன்றவர், இறவுளர், கானவர், வேட்டுவர் என்றும்; முல்லை நிலத்தார், ஆட்டிடையர், மாட்டிடையர் என்றும்; நெய்தல் நிலத்தார், நுளையர், திமிலர், பரதர் (பரவர்) என்றும்; பாலை நிலத்தார், எயினர், மறவர், வேட்டுவர், வேடர் என்றும்; இடம் பற்றியும் தொழில் பற்றியும் கருவி பற்றியும் சிற்சில வகுப்பாராய் பிரிந்து போயினர்." என்று பாவாணர் தம் 'தமிழர் வரலாறு' என்னும் நூலில் (பக்கம்: அரு) கூறியுள்ளதையும் மேற்குறிப்பிட்ட கருத்திற்குத் தக்க சான்றாகக் கொள்ளலாம். இன்று கொங்கு நாட்டு வேட்டுவக் கவுண்டர் குலங்களாக 383 பெயர்கள் பட்டியலில் பதிவு பெற்றுள்ளன.

ஒரு பக்கம், வேட்டுவர் குலம் பல்கிப் பெருகுவதாகப் பெருமைப் பட்டுக் கொள்ளலாம் என்றாலும், பிரிந்து பிரிந்து ஒற்றுமையின்றி, எவ்வொன்றிலும் உடன் பாடுமின்றி, எண்ணற்ற சாதிகளாக உருவெடுத்துப் போட்டி வாழ்க்கை, போராட்ட வாழ்க்கை என்னும் நிலை ஆழமாய் வேரூன்றிப் பொதுநலம் குன்றித் தன்னலம் நின்று நிலைத்து, அனைவரின் அமைதி வாழ்க்கைக்கும் அச்சுறுத்தலாக அமைந்து விடுமோ என்னும் கவலை மறுபக்கம் நடுநிலையாளர்க்கு இருக்கத்தான் செய்கிறது.

பண்பு நலம் காத்த வேட்டுவ வள்ளல்கள்

எத்தனைக் குழுக்கள் எத்துணைப் பெரிய கூட்டம் என்பதைவிட, எத்தகைப் பண்பாடு கொண்டவர்கள் என்பதே பெருமைக்கும் அருமைக்கும் உரியதாம். அன்பு, இரக்கம், பிறர்நலம் பேணல், பிறர்க்குதவும் கொடைத்தன்மை, மாந்தர்நேயம் காத்தல் முதலிய பண்புநலம் போற்றிய வேட்டுவர் குடிக்கு /குலத்திற்குப் பெருமை சேர்த்த அரசர்களுள் ஓரிருவரைப் பற்றி உரைப்பதும் தக்கதாகும்.

வல்வில் ஓரி

இவன், நல்வளங்கொண்டு பல்வகையானும் சிறப்புற்ற கொல்லி மலையையும் அதனை அடுத்துள்ள நாட்டையும் அறநெறி பிறழாது ஆண்டு வந்தவன்.கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகப் போற்றப் படுபவன்.இவன் வள்ளல் தன்மையின் சிறப்பால்தான் பெரும்புகழ் பெற்றவன் என்பதைக் கீழ்க்கண்ட பாடல் அடிகளால் அறியலாம். ''நல்லிசை நிறுத்த வல்வில் ஓரி'' (அகம்:209); ''மாரி வண்மகிழ் ஓரி''. (நற்றிணை: 265). வல்வில் ஓரி வேட்டுவர் குலத்தைச் சார்ந்தவன். இதற்கான சான்றாக வன்பரணர் பாடிய புறநானூற்றுப் பாடல்(152) விளங்குகிறது.

''நாட்டிடன் நாட்டிடன் வருதும் ஈங்கோர்
வேட்டுவர் இல்லை நின்னொப் போர்என''

இதன் பொருள்:

''நாட்டின் இடந்தோறும், நாட்டின் இடந்தோறும் சென்று வருவோம். உன்னைப் போன்ற வேட்டுவர் ஒருவர் இங்கு எங்கும் இல்லை.'' இவ்வாறு உலகறிய வன்பரணர் எடுத்துரைத்திருப்பது வரலாற்று ஆசிரியர்களுக்குப் பெரிதும் துணைபுரிவதாகும். வேட்டுவக்குடியின் பெருமையை வெளிப்படுத்தி உண்மையை நிலைநாட்டுவதாகும். மேலும், இவன் கொல்லிமலைத் தலைவன் என்பதற்கும் அகச்சான்றாகப் பாடலிலே உள்ள பதிவைக் காணலாம். ''பிறங்குமிசைக் கொல்லி ஆண்ட வல்வில் ஓரி'' (புறம்:158) என்று பெருஞ்சித்திரனார் என்ற புலவர் பாடியுள்ளார்.

அவ்வாறே கழைதின் யானையார் என்ற புலவரும் ஓரியின் வள்ளல் தன்மையை எடுத்துரைத்துள்ளார்.

"வாழியர் ஓரி விசும்பின் கருவி வானம் போல
வரைந்து சுரக்கும் வள்ளியோய் நின்னே" (புறம்:204).

ஓரியின் நற்பண்புகளையும், அனைவரையும் ஏற்றத் தாழ்வின்றிச் சமமாகப் போற்றிவந்த பெருந்தன்மையையும், மன்பதைக்குச் செய்து வந்த ஒப்பற்ற வள்ளண்மையையும் எடுத்துக்கூறப் பலவாகிய சான்றுகள் உண்டு. அவை விரிவஞ்சி விடுக்கப்பட்டன. ஓரியின் புகழனைத்தும் வேட்டுவக் குடியின் வேருக்கு நீரூற்றும் சிறப்பெனக் கூறலாம்.

கண்டீரக் கோப்பெரு நள்ளி

மதுரைக்குத் தெற்கிலுள்ள மலைப்பகுதியின் ஒரு பகுதி முற்காலத்தில் கண்டீரோ எனப் பெயர் பெற்றிருந்தது. அருவி நலம் சான்ற, அழகு செறிந்த மலை நாடாகக் கண்டீர நாடு விளங்கியது. அந்நாட்டை ஆண்டுவந்தவன் நள்ளி ஆவான். இவனைக் கண்டீரக் கோப்பெரு நள்ளி என்றும், நளிமலை நாடன் என்றும் புலவர்கள் பாராட்டிப் பாடியுள்ளனர். இவனும் கடையெழு வள்ளல்களுள் ஒருவன் ஆவான். வேட்டுவக் குடியைச் சேர்ந்தவனும் ஆவான். தன் வள்ளன்மையால் தன் வேட்டுவக் குடிக்குப் பெருமை சேர்த்தவன். வன்பரணர் என்ற புலவர் இவனைப் பற்றி மூன்று பாடல்கள் பாடியுள்ளார். (புறம்:148,149, 150). நள்ளி வேட்டுவக் குடியைச் சேர்ந்தவன்

என்று இவர் தம் பாடலில் பாடிப் பெருமை சேர்த்துள்ளார்.

"வான்கதிர்த் திருமணி விளங்கும் சென்னிச்
செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்" - (புறம்: 150: 6-7)

வறுமையால் வாடிய புலவர் வன்பரணரும், அவரின் கூட்டத்தாரும், பொருள் தேடிச் செல்லும் வழியில் களைப்புற்று, ஒரு காட்டில் பலா மரத்தடியில் அமர்ந்திருந்த போது, அவர்களைக் கண்ட நள்ளி பார்த்த அளவில் அவர்களின் பசியை உணர்ந்து, தான் வேட்டையாடிய மானின் ஊனைத் தீயில் காய்ச்சிப் பக்குவப்படுத்தித் தேனுடன் கொடுத்து அவர்களின் கொடும்பசியைப் போக்கினான். பின், அவர்களின் வறுமை நிலையைப் போக்கத்தான் மார்பில் அணிந்திருந்த விலை மதிப்பற்ற முத்தாரத்தையும். முன்கையில் அணிந்திருந்த பொற்கடகம் இரண்டையும் கழற்றி வழங்கினான். பெற்றுக் கொண்ட புலவர் அவனை யாரென்று அறிய விரும்பிப் பேசிய போதும், மறுமொழி கூறாமல் போய் விட்டான். பின்னர் அவன்தான் நள்ளி என்று அவர்கள்

அறிந்து வியந்தனர். அவனின் அடக்கத்தையும், பெருந்தன்மையையும், உற்ற நேரத்தில் உதவும் ஈகைக் குணத்தையும், வரையாது வழங்கும் வள்ளன்மையையும் எண்ணியெண்ணி நெஞ்சம் நெகிழ்ந்தனர். பாடல் வடித்துப் பாடிப் பாடி அவன் புகழ் நிலைக்கச் செய்தனர். இன்று அவன் புகழெல்லாம் வேட்டுவக் குடிக்குப் பெருமை சேர்க்கிறது. குடியைத் தலைநிமிரச் செய்கிறது.

முடிவுரை

இக்கட்டுரை வேட்டுவக் குடி உருவான வரலாற்றையும், உருவான பின் பெயர் அடையாளமின்றியே எண்ணற்ற தலைமுறைகள் அதன்வழித் தோன்றிப் பின் காலத்தால் வேட்டுவர் என்னும் பெயர் பெற்று வலிமையுற்றதையும், அதன்பின் பல்வேறு குலங்களாகப் பிரிந்து வேறுபட்டுப் போனதையும், அதன் பின்னும் வேட்டுவக்குடியின் அரசர்களாலும் வள்ளல்களாலும் ஓங்கி வளர்ந்து புகழ் பெற்றதையும் இயலும் வகையில் சான்றுகளுடன் எடுத்துரைத்துள்ளது. இனி, எதிர்வரும் தலைமுறையினர் இவ்வரலாறு மட்டுமன்றி இன்னும் குடி சார்ந்த வரலாற்றினையும் அறிந்து குடியை வாழ வைத்து, இம்மண்ணில் வாழும் அனைவருக்கும் அறவழியில் துணைநின்று பெருமை சேர்ப்பார்களாக!

துணை நின்ற நூல்கள்

1. தமிழர் வரலாறு,தேவநேயன், நேசமணி பதிப்பகம், பதிப்பு:1972.
2. தொல்காப்பியம், ச.வே. சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், பதிப்பு:1993.
3. வேர்ச்சொல் கட்டுரைகள், பாவாணர், தமிழ்மண் பதிப்பகம், பதிப்பு:2000.
4. செம்மொழித்தமிழ், தமிழ்ப் பல்கலைக் கழகம், பதிப்பு: 2010.
5. கொடைவளம், குழந்தையகம், பதிப்பு:1954.
6. சங்க இலக்கியங்கள் மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பு.

வேட்டுவக் கவுண்டர் குலமும் குலதெய்வமும்

எம். சிவானந்தம்
வெள்ளக்கவுண்டன் வலசு, அறச்சலூர்,
ஸ்ரீகண்ணப்பர் கல்வி அறக்கட்டளை,
நிர்வாகக்குழு உறுப்பினர்.
அலைப்பேசி: 9443498249.

முன்னுரை

வேட்டுவக்கவுண்டர் சமுதாயத்தில் உள்ள குலம், குலதெய்வம் மற்றும் அதன் சிறப்பம்சங்கள் பலதிறம்பட்டவை. அவ்வகையில், அச்சமுதாயத்தின் குலம், குலதெய்வம் ஆகியன இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.

குலம் குலதெய்வப் பெயர் மற்றும் ஊர்

1. அக்னி வேட்டுவர் - ஞானப்பூங்கோதை - பட்டயகாளிபாளையம்

2. அந்தி வேட்டுவர் - பத்ரகாளி அம்மன் அந்தியூர்
   பொன் காளியம்மன் - வெப்படை
   மாகாளியம்மன் - எலந்தகுட்டை
   கரிய காளியம்மன் - கெஞ்சனூர்,
   கரிய காளியம்மன் - அவல்பூந்துறை
   தண்ணிக்கிணத்துகாளியம்மன்
   கண்டிப்பாளையம், நாமக்கல்

3. அந்துவ வேட்டுவர் பத்ரகாளியம்மன் - அந்தியூர்

4. அமுத வேட்டுவர் பத்ரகாளியம்மன் - ஆப்பக்கூடல், பவானி
   நல்லியம்மன் - பள்ளம் நதி (நாமக்கல்)

5. அரிச்சந்திர வேட்டுவர் - காளியம்மன், பேரூரம்மன் - புன்னம், கரூர்
   அப்பிச்சிமார் கோயில் - திருச்செங்கோடு

6. ஆத்தூரான் வேட்டுவர் சோளியம்மன் - ஆத்தூர்

7. ஆப்ப வேட்டுவர் - காளியம்மன் - ஆப்பக்கூடல், பவானி

8. ஆனைமலை வேட்டுவர் மாசானியம்மன் - ஆனைமலை, பொள்ளாச்சி

9. இரும்புளை வேட்டுவர் - மருதாயி மலையம்மன் பவுத்திரம்

10. இலங்க(கை) வேட்டுவர் - கரிய காளியம்மன் - மைலம்பாடி, பவானி
பெருமாள்- நைனாமலை

11. ஈங்கூர் வேட்டுவர் - கரிய காளியம்மன் - ஈங்கூர், சென்னிமலை

12. உத்தம வேட்டுவர் - பச்சை நாயகி அம்மன் - கோசனம், நம்பியூர்

13. உண்ணாடி வேட்டுவர் உரிமை அம்மன் பணிக்கம்பட்டி, பொள்ளாச்சி

14. உயர (ஒசர) வேட்டுவர் - கொண்டத்துக் காளியம்மன் - கவுந்தப்பாடி
அப்பிச்சிமார் - திங்களூர்

15. உரிமைப்படை வேட்டுவர்- அங்காள பரமேஸ்வரி- மணலூர், மூலனூர்

16. வெங்கச்சி வேட்டுவர் - பொன்நீலியம்மன் - தென்னிலை,கரூர்
மருதகாளியம்மன் - பவுத்திரம்,மருதூர்
நீலியம்மன் - ல.கள்ளிப்பட்டி, கோபி
பத்ரகாளியம்மன் - மதிப்பனூர் (சக்தி)
கரியகாளியம்மன், கன்னிமார் - தொட்டம்பட்டி
முத்துகருப்பண்ணசாமி - தொட்டம்பட்டி
நாட்ராயன், நாச்சிமுத்து
நீலாம்பாடி (தென்னிலை அருகில்)
பொன்நீலியம்மன் நீலாம்பாடி
(தென்னிலை அருகில்)

17. வெங்கஞ்சி வேட்டுவர்- பத்ரகாளியம்மன் - மதிப்பானூர்

18. வேங்கை வேட்டுவர் ரங்கநாதர் - காரமடை
செல்லாண்டியம்மன் - செல்லிபாளையம்
கருமலையான், மாசிமலையான்- துக்காச்சி

19. வேம்ப வேட்டுவர் - இருப்புலி காளியப்பன் - இருப்புலி
அப்புச்சிமார் - சிங்காநல்லூர்
பொன்காளியம்மன் - தலையநல்லூர், சிவகிரி
கரிய காளியம்மன் - அவல்பூந்துறை

20. வேந்த வேட்டுவர் - பத்திரகாளி அம்மன் - கொண்டம்பட்டி, நாமக்கல்

(வேந்தை) - காளியம்மன் - திங்களூர், பெருந்துறை, முத்துசாமி கோயில் களூர்

21. வேதாரி வேட்டுவர்- காளியம்மன் - புங்கப்பள்ளி, சக்தி

22. குன்னாடி வேட்டுவர்- பத்ரகாளியம்மன் - ஆதியூர்
கவுண்டச்சி அம்மன் - குட்டிமேய்க்கம்பட்டி
புளியமரத்துக்கண்டி அம்மன் - புஞ்சைபுகளூர்
பட்டத்தரசியம்மன் - பொள்ளாச்சி
கரியகாளியம்மன் - மண்மாரி
பெரியநாயகியம்மன்
காமாட்சியம்மன் - நவமரத்துப்பட்டி
பெரியநாயகியம்மன் - நவமரத்துப்பட்டி

23. குடுமி வேட்டுவர் வரதராஜப்பெருமாள் - நைனாமலை
பிராட்டியம்மன்(பெரியகோவில) - சென்னிமலை
குழலியம்மன் - கொளாநல்லி
தன்னாசியப்பன் - வீரப்பன் பாளையம்

24. குரு வேட்டுவர் - சோளியம்மன் ஆத்தூர், களூர்

25. கூச்சந்தி வேட்டுவர் - ராசாத்தியம்மன் - நம்பியூர்(பூச்சந்தை)

வீரமாத்தியம்மன் - இழுகானூர்

26. கூத்தாடி வேட்டுவர் கொண்டத்துக்காளியம்மன் - பாரியூர்,கோபி

27. கூரம்ப வேட்டுவர் - சொக்க நாச்சியம்மன் - கூத்தம்பூண்டி, அந்தியூர்

28. கொடையூர் வேட்டுவர் குங்குமக்காளியம்மன் - கொடையூர்,கரூர்

29. கொடும் (பரி) புலி வேட்டுவர் - தாந்தோன்றியம்மன்- குட்டிபாளையம், (பெருந்தலையூர்)

30. கொடுமுடி வேட்டுவர் தாந்தோன்றியம்மன் - குட்டிபாளையம், (பெருந்தலையூர்)

31. கொள்ளுக்களிவேட்டுவர் வீரமாத்தியம்மன் - வெள்ளாங்கோயில்

32. கோமாரி வேட்டுவர் - பச்சை நாயகியம்மன் - கோசணம்,நம்பியூர்

33. சத்திய வேட்டுவர் -செல்லாண்டியம்மன் - சக்தி

34. சரக்கு வேட்டுவர் இராஜகாளியம்மன் - நஞ்சை இடையாறு, ப.வேலூர்
அழகுநாச்சியம்மன்- தேரி முத்தல்
சங்கிலிகருப்பண்ணன் - நஞ்சை இடையாறு
நவலடிபெரியசாமி,காளியம்மன் கோவில் - மோகனூர், (வேலூர்)
கவுண்டச்சியம்மா - சர்க்கார்வாழவந்தி

35. மாச்சாளி வேட்டுவர் - பொன்காளியம்மன் - எழுமாத்தூர்
(மாச்சாடி) -கருப்பராயன் (கருப்பண்ணசாமி)
தொட்டம்பாளையம் (புளியம்பட்டி அருகே)

36. மானத்(ந்)தி வேட்டுவர் - அங்காளம்மன் - கல்வடங்கம்பி, குமராபாளையம்
(மான வேட்டுவர்) - காளியம்மன் - மோகனூர்(வேலூர்)

37. முடக்காளி வேட்டுவர் பொன்காளியம்மன் வடகரையாத்தூர்

38. முரட்டு வேட்டுவர் பத்ரகாளியம்மன் - ஆப்பக்கூடல்

39. மூளை வேட்டுவர் பத்ரகாளியம்மன் - மொஞ்சனூர்

40. மூல வேட்டுவர் மசிரியாத்தாள் - அப்புச்சிமார்மடம்
கொண்டத்துகாளியம்மன் - கவுந்தப்பாடி
பொன்காளியம்மன் - வடகரையாத்தூர்
அல்லாள பெரியசாமி - திருச்செங்கோடு
செல்லியம்மன் - மொஞ்சனூர்
கோட்டையண்ணசாமி, அழகுநாச்சியம்மன் - பரமத்தி வேலூர்

41. மின்ன வேட்டுவர் - சொக்கநாச்சியம்மன் - கிளாம்பாடி, சோளங்காபாளையம்
கன்னிமார் - தாண்டாம்பாளையம்
கரியகாளியம்மன் - நல்லூர், சத்தி
அத்தம் பெரியம்மன் ஆலபாளையம், பு.புளியம்பட்டி
வாழவந்தி மாரியம்மன் - வாழவந்தி
பத்ரகாளி, கருப்பண்ணசாமி - இறையமங்கலம்
கருப்பண்ணசாமி, வீரமாத்தி - பிரிதி அத்திப்பாளையம்
அப்புச்சிமார், மசிரியாத்தா - காட்டுப்பாளையம்
ராக்கியண்ணன் பட்டயகாளிபாளையம், ஈரோடு

42. மொயர வேட்டுவர் பொன்காளியம்மன் - வடகரையாத்தூர்

43. மோளை வேட்டுவர் பொன்காளியம்மன் - வடகரையாத்தூர்

44. படைத்தலை வேட்டுவர் - குங்குமக்காளியம்மன் - கொடையூர், கரூர்

45. பரிப்படை வேட்டுவர் - வீரமாத்தியம்மன் - வீரப்பம்பாளையம்
பத்ரகாளியம்மன்- சீராப்பள்ளி, பரமத்தி

46. பருத்தி வேட்டுவர் - கரிய காளியம்மன் - பருத்திப்பள்ளி

47. பறைப்படை வேட்டுவர் - பத்ரகாளியம்மன் - கோட்டைமேடு, பவானி (குமாரபாளையம்)

48. பவுத்தூரன் வேட்டுவர் - மருதகாளியம்மன் - பவுத்திரம் (கரூர்) (பௌத்ரம் வேட்டுவர்)- மருதாயி மலையம்மன் - பவுத்திரம் (கரூர்)

படைவெட்டியம்மன் - சித்தூர்

49. பாண்டிய வேட்டுவர் - அண்ணமார் - வெள்ளோடு(ஈரோடு)
குலவிளக்கம்மன் குலவிளக்கு,
மொடக்குறிச்சி ஈரோடு
குமாரசாமி கோயில் - எலத்தூர் செட்டிபாளையம்
அப்பிச்சிமார் - அப்புச்சிமார்மடம்
அத்தனூரம்மன் - ராசிபுரம், விட்டம்பாளையம்
அத்தனூரம்மன் - திருச்செங்கோடு

பொன்னாச்சியம்மன் - பெருந்தலையூர்
பொன்காளியம்மன் - குமாரமங்கலம்
கன்னிமார் - முசுக்கவுண்டனூர்
ராக்கியண்ணன் - நொச்சிக்குட்டை

50. பால வேட்டுவர் - செல்லாண்டியம்மன் - வெள்ளேரிவெளி, எடப்பாடி

51. பில்ல வேட்டுவர் - இராஜகாளியம்மன், இராக்கா கோயில் - கலியனூர்
(பிள்ளை, புல்லை) - தன்னாசியப்பன் - வெங்கம்பூர்
அக்கரைப்பட்டி முத்துசாமி- வெங்கம்பூர்
பொன்காளியம்மன்- ஜேடர்பாளையம்
அலகு நாச்சியம்மன் - முத்தூர்
கொலக்காட்டு கருப்பண்ணசாமி- வள்ளியரச்சல்
கோம்பு கருப்பண்ணசாமி - பழமங்கலம்
கோம்பு கருப்பண்ணசாமி - ஜமீன் இளம்பிள்ளை
பொன்காளியம்மன்- வெங்கம்பூர், கொடுமுடி
அப்பிச்சிமார் கோயில் - குன்னமலை
குங்குமக்காளியம்மன்- கொடையூர்
பத்ரகாளியம்மன்- ஜமீன் இளம்பிள்ளை

52. பீச்ச வேட்டுவர்- பச்சை நாயகியம்மன் - அயலூர், கோபி
பூங்குழலியம்மன் - குருமந்தூர், நம்பியூர்
ராக்கியண்ணன் - மாறம்பாளையம்
குலவிளக்கம்மன், பேரூரம்மன் - காளமங்கலம்

53. புலிமுக வேட்டுவர் குங்குமக்காளியம்மன் - கொடையூர்

54. பூவானி(ணி) வேட்டுவர்- மாரியம்மன் - வாழவந்தி, நாமக்கல்
கரியகாளியம்மன் - அவல்பூந்துறை (ஈரோடு)
பெரியூரம்மன்- புன்னம் (கரூர்)
ராக்கியண்ணசாமி - குப்பம்
வீரகுமாரசாமி- (ஆதியில்-வெள்ளகோயில்)
(தற்போது-புன்னம்சத்திரம் அருகில் தலையூத்துப்பட்டி)
கரியாம்பட்டி அங்காளம்மன் - புன்னம் சத்திரம் அருகில்

55. பூச்சந்தை(தி) வேட்டுவர்- காளியம்மன் - பிலிக்கல்பாளையம்
மலையாள கருப்பண்ணசாமி
பிலிக்கல்பாளையம்
கரியகாளியம்மன்- விளக்கேத்தி

56. பூச்சந்திர வேட்டுவர்- அங்காளப் பரமேஸ்வரி - புன்னம்,கரூர்

57. பூல வேட்டுவர்- அப்பிச்சிமார் - சிங்காநல்லூர்

(பூளை, பூழை)- ஊமைக்காளியம்மன், குகநாதன்-
கோயில்பாளையம்
பவுளியம்மன்- செவ்வந்தி பாளையம், புதூர்
உவமைக் காளியம்மன் - (நன்னியூர் கிராமம்)
மாரியம்மன் - கோயில் பாளையம்

58. பூலுவ வேட்டுவர்- பூதநாச்சி அம்மன்- சின்னகோசனம், நம்பியூர்
கரியகாளியம்மன் - கெஞ்சனூர் (சத்தி)
சூலக்கல் மாரியம்மன்- புரவிபாளையம், பொள்ளாச்சி

59. பொதிய வேட்டுவர்- குங்குமக் காளியம்மன்- கொடையூர்

60. பொன்ன வேட்டுவர்- கவுண்டிச்சியம்மன்- குட்டிமேய்க்கன்பட்டி
காளியம்மன் - வேமாண்டம்பாளையம்
செல்லியம்மன் - கொல்லாங்கோயில் (முத்தூர்)
கூலக் கருப்பண்ணசாமி- குட்டி மேய்க்கன்பட்டி

61. மகாவீரன் வேட்டுவர்- காளியம்மன்- மோகனூர், நாமக்கல்

62. மயில் வேட்டுவர்- காளியம்மன் - திங்களூர், பெருந்துறை

63. மைல வேட்டுவர்- பொன்காளியம்மன் - எழுமாத்தூர்

64. மணிய வேட்டுவர்- காளியம்மன் - மோகனூர், நாமக்கல்
அரளிமலை முருகன் - அரளிமலை, திங்களூர்
வீரமாத்தியம்மன் - மணியனூர், கந்தம்பாளையம்

65. சலங்கை வேட்டுவர் - குண்டடத்துக் காளியம்மன் - கவுந்தப்பாடி

66. சாந்தப்படை வேட்டுவர்- புளியமரத்தான், கண்டியம்மன் புகளூர், கரூர்

அரசமரத்தான், மணியரசு - குரவப்பட்டி
குங்குமகாளியம்மன்- கொடையூர் (கரூர்) மணலூர்
மருதாயி, மலையாயி - பவுத்திரம், கரூர்

67. சாதி வேட்டுவர் செங்கபிடாரியம்மன்- காவிலிபாளையம், சத்தி

68. சிறுத்தலை வேட்டுவர் - பூதேவி ஸ்ரீதேவி அம்மன் - காஞ்சிக்கோயில்

69. சுண்ட வேட்டுவர் - செல்லாண்டியம்மன், கரிய காளியம்மன் - தாழ்குளி

70. செம்ப வேட்டுவர் - கரியகாளியம்மன் - மொடக்குறிச்சி
பத்ரகாளியம்மன்- மொடக்குறிச்சி

71. சொர்ண வேட்டுவர்- சொக்க நாச்சியம்மன்- கூத்தம்பூண்டி, நம்பியூர்

72. தளும்ப வேட்டுவர்- செவிலாரியம்மன்- அவிநாசி அருகில்
அண்ணமார்சாமி- வெள்ளோடு (ஈரோடு)
காளத்தம்மன்- தோக்கவாடி
மாதேஸ்வரன், கோட்டையண்ணசாமி - பவானிசாகர்
அண்ணமார்- கவுந்தபாடி

73. தேரை வேட்டுவர் - செல்லாண்டியம்மன் - மல்லசமுத்திரம், நாமக்கல்

74. தூரன் வேட்டுவர்- கொண்டத்துக்காளியம்மன் - கவுந்தப்பாடி

75. நரி(ய) வேட்டுவர்- வள்ளியம்மன் - ஆயிபாளையம் (நம்பியூர்) குருமந்தூர்

76. நொய்யல் வேட்டுவர்- செல்லாண்டியம்மன் - நொய்யல், கரூர்

77. பதர வேட்டுவர் - பாரியூர் அம்மன் - பாரியூர், கோபி
கொண்டத்துக் காளியம்மன் - பாரியூர், கோபி

78. பட்டாலி வேட்டுவர்- பட்டாலி மாரியம்மன் - அரசம்பாளையம்
பால்வெண்ணீஸ்வரர்- சிவன்மலை
108 குமாரர் கோயில் - எலத்தூர், செட்டிபாளையம்
மாசிமலையான்- எழுமாத்தூர்
பொன்காளியம்மன்- எழுமாத்தூர்

79. மோக்காளி வேட்டுவர் - நவலடியான்(நவலடி பெரியசாமி)- மோகனூர், நாமக்கல்
காளியம்மன்- மோகனூர், நாமக்கல்
நாட்ராயன், நாச்சிமுத்து, மகாமுனி - தென்னிலை

80. வரவு வேட்டுவர் - புளியமரத்துக் கண்டியம்மன் - புஞ்சைப் புகழூர்

81. வன்னி வேட்டுவர்- கருப்பணசாமி, காளியம்மன் - பரமத்தி (நாமக்கல்)
முத்துசாமி கோயில் - பரமத்தி (நாமக்கல்)
முருகன் கோயில் - கபிலர் மலை
பொன்காளியம்மன்- விளக்கேத்தி, அறச்சலூர்
விஜயபுரி அம்மன் - விஜயமங்கலம்

82. விளக்கு வேட்டுவர் கொண்டத்துக்காளியம்மன்- பாரியூர், கோபி

83. விஜயமங்கல வேட்டுவர் - ரங்கநாதர் - காரமடை

84. வீணை வேட்டுவர் - வீரமாத்தியம்மன் - திண்டல்

85. வெள்ளை வேட்டுவர்- கருப்பணசாமி (கோம்பு)- வாய்ப்பாடி, திருப்பூர்
வீரமாத்தியம்மன்- கொள்ளுக்கட்டிபாளையம் (கோபி)

86. கது (வேரி) காலி வேட்டுவர் - சாமுண்டியம்மன் - ஓடப்பள்ளி, பள்ளிபாளையம்

87. கரைய வேட்டுவர் முப்பாட்டுக்கருப்பண்ணசாமி- பூசாரியூர் அறச்சாலையம்மன் - அறச்சலூர் காளியம்மன்- சௌதாபுரம் படைவெட்டியம்மன்- சோழசிராமணி அங்காளம்மன்- சோழசிராமணி அப்பிச்சிமார்- சிங்காநல்லூர்

88. கவுதாரி வேட்டுவர் சாமுண்டியம்மன்- பள்ளிபாளையம், ஈரோடு
முப்பாட்டுகருப்பணசாமி- பூசாரியூர், அறச்சலூர்

89. கரடி வேட்டுவர் செல்லாண்டி அம்மன்- நொய்யல் (கரூர்)
பண்ணையம்மன்- ஏளூர்
கருப்பண்ணசாமி- பொன்னம்பாளையம்

90. காக்காவாடி வேட்டுவர்- சாந்திவனம் செல்லாண்டியம்மன்- சணப்பிரட்டி, பசுபதிபாளையம்

சோளியம்மன்,முத்துசாமிகோயில்- ஆத்தூர்
பத்ரகாளி அம்மன் கொங்காளம்மன்- அந்தியூர், குப்பம்

91. காடை வேட்டுவர் நல்லியம்மன்- பெரியபுலியூர்

92. கார் வேட்டுவர் கன்னிமார் - உரிமையண்ணன் - பள்ளக்குடி,

93. காட்டு வேட்டுவர்- கண்டியம்மன் - பாலகுட்டப்பட்டி, பழையூர்
அப்பிச்சிமார்- குட்டிமேய்கன்பட்டி
அப்பிச்சிமார்- மடத்துப்பாளையம்
அப்பிச்சிமார், மசிரியாத்தா- திடுமல்ராசாம்பாளையம்
அப்பிச்சிமார்- திடுமல்ராசாம்பாளையம்
அப்பிச்சிமார்- திங்களூர்

94. கிளா(ச்)சி வேட்டுவர் பச்சைநாயகியம்மன்- கோசணம், நம்பியூர்
ரங்கநாதர்- காரமடை

95. கிழங்கு வேட்டுவர்- பத்ரகாளியம்மன்- ஆண்டிபாளையம், கடத்தூர்

96. கீர்த்தி(தை) வேட்டுவர்- பொன்காளியம்மன்- மணல்மேடு சோளங்காபாளையம்

97. கீரை வேட்டுவர் - கரியகாளியம்மன் ராமசாமி,
ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ சின்னம்மன்,
ஸ்ரீ ராஜலிங்க மூர்த்தி - கோடந்தூர் விடுபட்ட குலங்கள்

98. கரு அண்டவேட்டுவர்- குங்குமக்காளியம்மான் - கொடையூர்

99. பிள்ளை வேட்டுவர் - பொன்காளியம்மன் - பொன்காளியம்மன் நாச்சிமுத்து நாட்ராயன்- வடகாட்டுபாளையம் (பொம்மன் பட்டி)

100. பட்டாலிவேட்டுவர் பால் வெண்ணீஸ்வரர்- சிவன்மலை
வீரகாளியம்மன்- சிவன்மலை

101. பொண்ண வேட்டுவர்- கவுண்டச்சி அம்மன்- குட்டி மேயக்கம்பட்டி.
கூலக் கருப்பணசாமி- குட்டி மேயக்கம்பட்டி.

102. கரய வேட்டுவர்- மாணுவக்காட்டு கருப்பண்ணசாமி- மொசு கவுண்டனூர்

103. மும்முடி வேட்டுவர்- ஈஸ்வரன் கோயில்- பெரமியம் (மூலனூர்)

104. மயில் வேட்டுவர்- மீனாட்சி அம்மன் - திருமானூர்(மேல்பழுவூர்) (அரியலூர்)

105. கொடும்பைவேட்டுவர்- வாகீஸ்வரர்- பட்லூர்

106. பனைய வேட்டுவர் - பாரியூர் அம்மன்- பாரியூர் (கோபி)

107. சந்திர வேட்டுவர்- சந்திரமவுலீஸ்வரர்- திங்களூர்

108. பாண்டிய வேட்டுவர் - சுக்கட்டாம்பள்ளி கருப்பணசாமி - கணக்கம்பாளையம்

109. பிள்ளை வேட்டுவர் - பொங்காளி அம்மன் - வடகரையாத்தூர்

110. கரய வேட்டுவர் - மாணுவக்காட்டு கருப்பண்ணசாமி-மொசு கவுண்டனூர்

112. மும்முடி வேட்டுவர்- ஈஸ்வரன் கோயில் - பெரமியம் (மூலனூர்)

113. மயில் வேட்டுவர் - மீனாட்சி அம்மன் திருமானூர் மேல்பழுவூர் அரியலூர்

114. கொடும்பைவேட்டுவர் - வாகீஸ்வரர் பட்டலூர்

115. பனைய வேட்டுவர் - பாரியூர் அம்மன் - பாரியூர் (கோபி).

116. சந்திர வேட்டுவர் - சந்திரமவுலீஸ்வரர் - திங்களூர்

117. சந்திர வேட்டுவர் -சந்திரமவுலீஸ்வரர் திங்களூர்

118. மானந்தி வேட்டுவர் - சித்தேஸ்வரன் - பாலமலை பூங்குழலி அம்மன் குருமந்தூர்

119. பிள்ளை வேட்டுவர்- ராசாக் கோயில் -களியனூர் அல்லாள இளையான் -வடகரையாத்தூர். நாட்ராயன்- பெருமாம்பாளையம்

120. நரிய வேட்டுவர் -ஆனைமலையான் சித்தம்பூண்டி

121. தளும்ப வேட்டுவர் - காளியம்மன் - தோக்கவாடி செல்லாண்டியம்மன் காகம் செங்க மாமுனியப்பன் சங்ககிரி

122. தேரை வேட்டுவர் - அங்காளம்மன் - மல்லசமுத்திரம் கன்னிமார் கருப்பண்ணசாமி- மீனாட்சிபுரம்

123. சுண்டவேட்டுவர்- காளியம்மன் மந்திரிபாளையம் கவுண்டச்சி அம்மன்- கள்ளிப்பாளையம்

124. காட்டு வேட்டுவர்- பத்திரகாளி அம்மன் வெட்டுக்காட்டுவலசு கவுண்டச்சி அம்மன் கள்ளிப்பாளையம்

125. மின்ன வேட்டுவர் காளியம்மன் -பு.புளியம்பட்டி அத்தம் பெரியம்மன் ஆலபாளையம், பு.புளியம்பட்டி

126. மணிய வேட்டுவர்- கருப்பண்ணசாமி- பண்ணக்காடு

127. குடுமி வேட்டுவர் பொன் குழலி அம்மன் கொளாநல்லி

128. கதும்ப வேட்டுவர் செல்லாண்டியம்மன் - நடந்தை கொரங்காடு முத்துசாமி நடந்தை

129. கிழங்க வேட்டுவர் அப்புச்சிமார் - திங்களூர்

130. மூல வேட்டுவர் - பொங்காளி அம்மன் வடகரையாத்தூர்

131. பட்டாலி வேட்டுவர் - கருப்பண்ணசாமி ஆலம்பாடி ஆலமரத்துக் கருப்பண்ணசாமி கருத்திபாளையம்

132. மூலவேட்டுவர் - செல்வகுமார் சாமி - குப்பயண்ணன் முத்தூர்

133. கொடுமுடி வேட்டுவர் மகுடீஸ்வரர் - கொடுமுடி

134. வேந்த வேட்டுவர் - சடையப்ப சாமி கொண்டம்பட்டி

135. வெள்ளை வேட்டுவர் - தோப்பு கருப்பண்ணசாமி வாய்ப்பாடி வீரமாத்தி அம்மன் திண்டல்

136. பிரம்பவேட்டுவர்- செல்லாண்டி அம்மன் நொய்யல்

137. கரைய வேட்டுவர் -காளியம்மன் வெப்படை

138. பதற வேட்டுவர்- செல்லாண்டி அம்மன் ஒத்தக்குதிரை

139. பூவாணிவேட்டுவர்- முனியப்பன் பூந்துறை பொங்காளி அம்மன்- சின்னார்பாளையம்

140. மூளை வேட்டுவர் -ஊம காளியம்மன் -செவ்வந்திபாளையம்

141. செம்ப வேட்டுவர் காளியம்மன் கருப்பணசாமி- வேட்டுவ பாளையம்

142. பரிப்படை வேட்டுவர்- கொங்கலம்மன்- ஈரோடு

143. கரைய வேட்டுவர்- படைவெட்டி அம்மன்- அறச்சலூர்

144. அந்தி வேட்டுவர்- ஆலமரத்துக் கருப்பணசாமி- தெக்கலூர்

145. மாந்த வேட்டுவர்- சோழியம்மன்- ஆத்தூர்

146. மாந்த வேட்டுவர் -சோழியம்மன் ஆத்தூர்

147. காடை வேட்டுவர் கொங்காயி அம்மன் பெரியபுலியூர்

148. பூல வேட்டுவர்- மலை அம்மன் கொடுமுடி

முடிவுரை

மேற்கண்டவாறு வேட்டுவர் குலத்திற்குரிய குலதெய்வங்களைக் காணமுடிகிறது. வேட்டுவ இனம் பல்வேறு இடங்களில் பரவியிருக்கிற சூழலில் அவரவர் குலதெய்வங்கள் காலப்போக்கில் மாறலாம். அவ்வாறு மாறும் வேளையில் மேற்கண்ட பட்டியல் உதவியாக இருக்கும்.

தகவல் : ராஜசேகர் தங்கமணி அவர்கள்.

வேட்டுவ அரசர் செயங்கொண்ட சோழ கொங்காள்வான்

மூ. விகாஷினி
பெ/பெ. ஈஸ்வரமூர்த்தி, மோகனசுந்தரி
வெள்ளக்கவுண்டன்வலசு, அறச்சலூர்.
அலைப்பேசி: 99763 12757

முன்னுரை

சங்க காலத்தில் வேட்டுவ சமுதாயத்தினர் அரசாரகவும், குறுநில மன்னர்களாகவும் திகழ்ந்தனர். இவர்களுள் 'செயங்கொண்ட சோழ கொங்காள்வான்' என்ற அரசரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

செயங்கொண்ட சோழ கொங்காள்வான்

முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்(கி.பி. 1070-1125) காலத்தில் கொங்கின் 24 நாடுகளில் ஒன்றான வடகரை நாட்டை ஆட்சி புரிந்தவர் கொங்காள்வான். இவருக்கு ஊராழ்வான் என்ற பெயரும் இருந்தது. மேலும் கொடிவேரி அணைகட்டி நீர்ப்பாசனக் கால்வாய்கள் வெட்டி விவசாயம் பெருகச் செய்தார். இவரின் சிறப்பான ஆட்சியைப் பாராட்டி சோழமன்னர் ஜெயங்கொண்ட சோழ கொங்காள்வான் என்ற பட்டம் வழங்கினார். இவர் வடகரை நாட்டில் விவசாய உற்பத்தியைப் பெருக்க நீர்த்தேக்கம் ஏற்படுத்த முடிவு செய்தார். இதற்கான உகந்த இடத்தைத் தேர்வு செய்ய நேரிடும் போது 'குளவாற்றூர்' என்ற பகுதியைத் தேர்ந்தெடுத்தார்.

கொடிவேரிப் பகுதிகள் அடர்ந்த மரங்கள், விலங்குகள் இருந்த அடர்ந்த காட்டுப் பகுதியாகும். இந்தக் காடுகளின் இடையில்தான் பவானி ஆற்றுநீர் வழிந்தோடியது; ஓடுகிறது. இந்தப் பகுதி இயற்கையாகவே குளம் போல இருந்தது. ஆகவே இந்த இடத்தை அணைகட்டத் தேர்வு செய்தார்.

கொடிவேரி அணைக்கட்டு

தற்போதைய ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் தாலுக்காவில் உள்ள கொடிவேரி என்ற இடத்தில் பவானி ஆற்றுநீர் பாயும் இடத்தை அகலப்படுத்தி நீரைப் பெருங்கற்களைக் கொண்டு தேக்கி, கால்வாய் வெட்டினார். இன்று இது 'கொடிவேரி அணைக்கட்டு' என்று அழைக்கப்படுகின்றது (சான்று : பவானி ஆற்றங்கரைக் கல்வெட்டு)

நீர்ப்பாசனக் கால்வாய்கள்

கொடிவேரி அணையின் வடக்குப் பக்கம் ஒரு கால்வாயும், தெற்குப் பக்கம் ஒரு கால்வாயும் வெட்டினார். வடக்குப் பகுதியில் உள்ள கால்வாய் (10 கி.மீ. தொலைவு செல்கிறது). 'அரக்கன் கோட்டை கால்வாய்' என்று அழைக்கப்படுகிறது. தெற்குப் பகுதியில் உள்ள கால்வாய் (ஏறக்குறைய 15 கி.மீ செல்கிறது). 'தடப்பள்ளிக் கால்வாய்' என்று அழைக்கப்படுகிறது.

அணைகட்டிய வரலாறு

கொடிவேரியில் பாறைகள் இல்லாததால் சத்தியமங்கலத்தில் இருந்து 10 கி.மீ வடக்கே உள்ள கடம்பூரில் (கம்பத்தராயன் மலையில்) இருந்து பாறைகள் வெட்டிக் கொண்டு வரப்பட்டன. கட்டுமானப் பணிகளுக்காக ஒடிஷா, கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் இருந்து கல் வேலைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் வரவழைக்கப்பட்டனர். சுமார் 3 - ஆண்டுகளில் அணைகட்டி முடிக்கப்பட்டது. அணையைத் திறக்க நாள் குறித்து, மன்னர் வருவதாக ஏற்பாடானது. ஆனால் திடீரென்று வெள்ளம்பெருக்கெடுத்து அணை முற்றிலும் அடித்துச் செல்லப்பட்டது. தகவல் மன்னருக்குச் சென்றது. அவர் மீண்டும் அணையைக் கட்ட உத்தரவிட்டார். அதன்படி சுமார் ஒன்றரை ஆண்டுகளில் மீண்டும் அணை கட்டப்பட்டது. மறுபடியும் அணையைத் திறக்க மன்னர் வரவிருந்த நிலையில் மீண்டும் வெள்ளம். அந்தமுறை ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, செயங்கொண்ட சோழ கொங்காள்வான் எதிர்காலச் சிந்தனையுடன் இருகரைப் பகுதியில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பான கட்டுமானத்தை ஏற்படுத்தினார்.

மணல் போக்கித் தொழில்நுட்பம்

அணைக்கட்டின் மையப்பகுதியில் தண்ணீரின் குவிமையத்தில் கிணறு வடிவில் சுரங்கம் வெட்டப்பட்டிருக்கிறது. இது அணைக்கு

வெளியே தண்ணீர் திறக்கப்படும் இடத்துக்கு சுமார் 20 - அடி தூரத்துக்கு அப்பால் சென்று முடிகிறது. சுரங்கத்தின் வாய்ப்பகுதி அகலமாகவும் உள்ளே செல்லச் செல்ல குறுகலாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. சுரங்கத்துக்குள் கல்லால் ஆன நுட்பமான சல்லடை அமைப்புகள் மற்றும் கல்லால் செதுக்கப்பட்ட பல்வேறு வடிவமைப்புகள் செய்யப்பட்டிருக் கின்றன. மணல் போக்கிகளைக் கரையில் இருந்தே மூடும் வகையில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மணல் போக்கிகள் மணலையும் சேற்றையும் உள்ளே இழுத்து மறுபக்கச் சுரங்கத்தின் துவாரம் வழியாக அணைக்கு வெளியே தள்ளிவிடும். இதன்மூலம் அணையில் மணலும் சேறும் தங்குவதில்லை. மேலும் இதன் வழியாக, தண்ணீரும் வெளியேறாது என்பதும் இதன் தனிச்சிறப்பு. இவ்வளவு அரிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஊராளி செம்ப வேட்டுவர் சோழ கொங்காள்வான் இந்த அணைக்கட்டை கட்டினார். இதனால் இந்த அணைக்கட்டு "தன்னைத்தானே தூர் வாரிக்கொள்ளும் தனிச்சிறப்பு பெற்றுள்ளது".

நீர் மேலாண்மைத் தொழில்நுட்பம்

தடப்பள்ளிக் கால்வாயும் அரக்கன்கோட்டைக் கால்வாயும் ஆற்றை ஒட்டியே இருபுறமும் செல்கின்றன. இதனால் ஆற்றின் நீரோட்டம் திசைதிருப்பப் படுவதில்லை. மேலும் அணைக்கட்டுக்குக் கீழ் இருக்கும் விவசாயிகள் பாதிக்கப்படாத அளவில் நீர்வரத்து எந்த விதத்திலும் குறையாத வண்ணம் ஆற்றில் இருந்து கால்வாய்களுக்குச் செல்லும் தண்ணீர் வயல்களுக்குச் சென்று அதன் கசிவுநீர் மீண்டும் வாய்க்கால் வழியாக ஆற்றுக்கு வந்துவிடும். கசிவுநீர் பாசனத்துக்குச் செல்லும் வகையில் கால்வாய்களை ஊராளிச் செம்ப வேட்டுவர் சோழ கொங்காள்வான் வெட்டியுள்ளது சிறந்த தொழில்நுட்பம் என்பதை அறியமுடிகிறது.

முடிவுரை

சிறப்பான ஆட்சியாளர், விவசாயம் பெருக்க நீர்த்தேக்கம் அமைத்தவர், அணை கட்டிய வர், தியாக உணர்வு மிக்கவர், நீர் மேலாண்மைத் தொழில்நுட்பம் நிறைந்தவர் என்று போற்றத் தகும் வேட்டுவ மன்னரான சோழ கொங்காள்வானைப் பற்றி இக்கட்டுரை விளக்கியுள்ளது.

வேட்டுவ அரசி - செம்பியன் மாதேவியாரின் கோயிற்கலைப் பணிகள்

வரலாற்றுச் சிற்பி பேராசிரியர் **தங்கமணி**
அலைப்பேசி : 94430 88144.

தமிழக வரலாற்றிலும் சைவசமய வரலாற்றிலும் தமிழகக் கலை வரலாற்றிலும் செம்பியன் மாதேவியாருக்குத் தனித்தோர் சிறப்பும் இடமும் உண்டு சோழவேந்தன் கண்டராதித்தனின் அரசியான இவர், உத்தம சோழனின் கல்வெட்டில், ஸ்ரீ பராந்தக தேவரான பெரிய சோழன் மகனார் கண்டராதித்த தேவரின் தேவியார் மழப் பெருமானடிகள் மகளார், ஸ்ரீ உத்தம சோழர் தங்களாட்சி செம்பியன் மாதேவியார் என்று பாராட்டப் பெற்றுள்ளார். வேட்டுவர் குலத்தின், பொன் விளக்காகத் திகழும் இப்பெருமாட்டி கோயில்கள் பல கட்டிய கோமகளாக, செங்கள் கோவில்களைக் கற்றளியாக மாற்றிய மாதரசியாவார். 37 கவின்மிகு ஐம்பொன் தெய்வப் படிமங்களைத் திருக்கோயில்களில் பிரதிட்டை செய்த பெண்ணரசியாக எண்ணிறந்த சிற்பங்களை எழுந்தருளுவித்த கலையரசியாவார். 26 பழைய கல்வெட்டுக்களைப் படியெடுத்து, புதுக் கோயில்களில் வெட்டுவித்த வேட்டுவர் குலத் திருமாகளாக வரலாற்றுச் சிற்பியாவார். பராந்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், சுந்து சோழன் ஆதிந்நகரிகாலன் உத்தம் சோழன், இராசராசன் எனும் ஏழு சோழ மன்னர்கள் காலத்தில் ஏறத்தாழ அறுபதாண்டுகள் கோயில் பணிகள் பல புரிந்தவர். 80 வயது வரை வாழ்ந்து சிவஞானச் செல்வியாக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பெறும் தகுதி படைத்த இத்தவமணியாரின் கோயில் பணிகளைப் பற்றி இங்கு காண்போம்.

நாயகவிச்சி நாயன் சிலம்பி

நாயகவிச்சி நாயன் சிலம்பி எனும் வேட்டுவ நங்கை தன் கணவன் காவன் அரையனின் நினைவாக பிடாரி கோயில் கட்டியதைப் போன்று இச்சிவ மணியும் தன் கணவன் கண்டராதித்த சோழனின் நினைவைப் போற்றும் வகையில் திருநல்லத்து மகாதேவா கோயிலை

'ஸ்ரீ கண்டராதித்தம்' என்னும் பெயரில் கற்றளியாக்கினார். அதில் திருநல்லமுடையாரைத் தொழுவது போன்று கண்டராதித்தர் உருவத்தையும் வடித்துள்ளார்

உத்தமசோழரின் 11-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 981) தஞ்சை மாவட்டம் திருவாடுதுறைக்கு அருகில் உள்ள திருக்கோடிகாவல் திருக்கோமீஸ்வரர் கோயிலைக் கொல்லிமலை வேட்டுவ இளவரசியான இவர் கற்றளியாகக் கட்டினார்.

இப்பெருமாட்டி கடலூர் மாவட்டம் விருத்தாஜலம் பழமலைநாதர் (விருத்த கிரீஸ்வரர்) திருக்கோவில் ஒன்றைக் கட்டுவித்தார்: (கி.பி.-882) கணவர் பெயரால் கண்டரதித்தன் கோபுரமும் கட்டப்பட்டது. திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயிலுக்குள் இவர் செம்பியன்மாதேவி ஈஸ்வரம் எனும் கோயிலைக் கட்டியுள்ளார்.

நிலதானமும் கட்டுமானப் பணிகளும்

நாயகவிச்சி நாயன் சிலம்பி, மாயவரம்(மயிலாடுதுறை) அருகேயுள்ள ஆனாங்கூரில் திருஅகத்தீஸ்வரம் திருக்கோயிலைக் கட்டியதுடன் அந்தக் கோயிலுக்கு நிலதானமும் வழங்கியுள்ளார் (கி.பி. 980). மாயவரம் வட்டத்திலுள்ள மாயவரத்தில், மழவர்குல மாணிக்கமாகிய இவ்வம்மையார். மயூரநாத்சுவாமி கோயிலைக் கட்டுவித்தார். செங்கல்லால் ஆன இக்கோயில் இவரால் புதுப்பிக்கப்பட்டது.

ஆடுதுறையில் (பாபநாசம் வட்டம்) இச்சிவ மணியர் செங்கற்களால் கட்டப்பட்டிருந்த சிவன் கோயலை, கி.பி-986-இல் கற்றளியாக்கி மகிழ்ந்தார். கோயிலில் மாமன்னன் இராஜராஜனின் 9-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி-994) பல்வேறு நிவந்தங்களையும் மனமுவந்து வழங்கி உள்ளார்.

திருவாரூர் மாவட்டம் திருவாரூரில் இக்கலைச் செல்வியார் கி.பி. 987- இல் திருவரநெறி அழ்வார் திருக்கோயிலைக் கட்டியதனை முதல் இராசராசப் பெருமன்னனின் ஏழாமாட்சி ஆண்டுக் கல்வெட்டு பதிவு செய்துள்ளது.

உத்தம சோழனின் 15-ஆம்ஆட்சியாண்டில் (கி.பி.985) இத் தவமணியார் காரைக்காலுக்கு அருகில் செம்பியன் மாகேவியர் சதுர்வேதி மங்களம் எனும் சிற்றூரை உருவாக்கி, அவ்வூரில் ஸ்ரீகைலாசமுடைய மகாதேவர் திருக்கோயிலைக் கட்டுவித்து, தன் இறையன்பை

உலகிற்குணர்த்தினார். மேலும் இக்கோயில் வழிபாடு குறைவற நடைபெற பொன்தானமும் நிலதானமும் வழங்கி உள்ளார்.

மண்டபம் மற்றும் கட்டுமானப் பணிகள்

மாயவரம் அருகே உள்ள குத்தாளம் சிவன் கோயிலில் ஸ்ரீ விமானத்தையும் மண்டபத்தையும் மற்றும் சில கட்டுமானப் பணிகளையும் இவ்வேட்டுவச் செல்வி மேற்கொண்டதாக உத்தம சோழர் கல்வெட்டு தெரிவிக்கிறது.

விழுப்புரம் மாவட்டத்திலுள்ள திருவக்கரை சிவலோகம் உடையார் பரமசுவாமிகள் திருக்கோயிலை இக்கலைச் செல்வி கற்றளியாக எடுத்துள்ளார். மேலும் இத்திருக்கோயிலில் வழிபாடுகள் சிறப்புற நடைபெறவும் விழாக்கள் கொண்டாடப் பெறவும் பலவித நிவந்தங்களை உவப்புடன் அளித்துள்ளார். இவர் தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகே திருமணஞ்சேரி உத்வாகநாத சுவாமி கோயிலைக் கட்டியதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்றான திருவேள்விக்குடிக் கல்யாணசுந்தரர் உடனுறை பரிமள சுகந்தநாயகி திருக்கோயில் இம்மழவர்குல மாணிக்கத்தால் தன் மகன் உத்தம சோழரின் ஆட்சிக்காலத்தில் கற்றளியாகக் கட்டப்பெற்றது என்று தொல்லியல் அறிஞர் அ.இராசேந்திரன் கூறுவார். இத்தலம் மாயவரம் கும்பகோணம் இரும்புப் பாதை இடையே அமைந்துள்ள குற்றாலம் இரயில் நிலையத்திலிருந்து வடகிழக்தில் இரண்டுகல் தொலைவில் உள்ளது இதனை, காவிரியின் வடகரைத் தலங்களுள் இருபத்து மூன்றாவது தலமாக எண்ணிப் போற்றுவர்.

உத்தம சோழன் ஆட்சிக் காலத்தில் சக்கடி சமுதையன் செம்பியன் மாதேவிப் பெருந்தட்டான் என்பான் மழவர்குல அரும்பெருஞ்செல்வியின் கலைப்பணிகளை மேற்பார்வை இட்டான். அதன் காரணமாக, கண்டன் மதுராந்தக தேவரான ஸ்ரீ உத்தம சோழதேவரை திருவயிறு வாயித்த உடைய பிராட்டியார் ‘பராந்தக மாதேவடிகள் ஸ்ரீ செம்பியன் மாதேவியார் என்று இவர் கல்வெட்டில் சிறப்பிக்கப்படுகிறார் .

சிவபெருமானே திருமண வேள்விசெய்து திருமணத்தை நடத்தி வைத்ததால் இத்தலம் திருவேள்விக்குடி எனப் பெயர்பெற்றது.

மேற்கூறியவற்றால் செம்பியன் மாதேவியான நாயகவிச்சி நாயன் சிலம்பியின் கோயிற் பணிகள் அறியப்படுகின்றன.

சன்றெண் விளக்கம்:

1) ST. Vol. 3. No. 146.
2) A.R.E/360/1931
3) S..1.1. vol. 19. No 3,02
4) இல.தியாகராஜன். வேட்டுவர் வரலாறு, ப. 54
5) A.RE. 75 of 1926.
6) S.1.1. Vol. 23. No. 372
7) S.1.1. Vol 23. No.362.
8) A.R.E. 57 of 1904.
9) $.1.1.Vol.19.No.379.
10) S.S.I. vol. 17. No.222.
11) S.R.Balasupramaniyam, Early chola TemplesCAD 907-985) PP. 188-190.
12) இரா. குருநாதனஞ்சியம் அ.இராஜேந்திரன்: 'திருவேள்விக்குடி) வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 10. பக். 585-86. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)-5.

செப்பேட்டில் சைவ சமய வளர்ச்சியில் கொங்கு வேட்டுவ அரசர்களின் பங்களிப்பு

எம். செல்வராஜ்
நிர்வாகக்குழு உறுப்பினர்
ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை
அலைப்பேசி : 9486106354

சைவ சமயம்

சிவம் என்ற சொல் பல நூற்றாண்டு திரிபுச் சொல்லாக மாறி சைவம் என்று மாறியதாகக் கூறப்படுகிறது. இச்சைவநெறி சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வணங்கும் சமயமாகும். இன்றைய இந்து மதத்தின் ஒரு பிரிவாக அமைந்துள்ளது.

பழங்குடித் தொடர்ச்சி

மலைச் சாரலில் வாழ்ந்த மலைக்குடி வேட்டுவர்களின் நீத்தார் வழிபாடே சிவவழிபாடாக வளர்ந்திருக்கின்றது என்று நம்பப்படுகின்றது. சைவம் என்ற சொல்லின் சரியான தமிழ் வடிவம் சிவனியம் ஆகும். தென்னகத்தே எழுந்த மலைத்தெய்வ வழிபாடே சிவவழிபாடாக வளர்ந்து, மக்கள் குடிப்பெயர்ச்சியால் இமயம்வரை நகர்ந்திருக்கின்றது என்றும் சொல்லப்படுகின்றது. சிவனை உருவகிப்பதில் சாம்பல் பூசுதல், புலித்தோலாடை தரித்தல், மானையும் மழுவையும் கையில் வைத்திருத்தல், பன்றிக்கொம்பு, எலும்புகளை அணிதல் போன்ற பழங்குடிகளின் கூறுகள் முக்கியப்பங்கு வகிப்பதால், வேட்டுவர் இனக்குழுக்களின் நீத்தார் வழிபாட்டின் விளைவாகப் பிறந்த பெருந்தெய்வமே சிவன் எனலாம். நாகர் பழைமை வாய்ந்த தனி இனம் என்று வழக்காடுவோர், சிவனின் அணிகலனாக நாகங்கள் காணப்படுவதைக் கொண்டு, சிவன் நாகரின் தெய்வம் என்பர். சிவலிங்க வழிபாட்டுக்கு அடிப்படையாக நடுகல் வழிபாடே அமைந்திருக்கலாம் என்ற கருதுகோளும் உண்டு. இத்தகைய சான்றாவணங்களால், சிவவழிபாடு மிகத் தொன்மையானது என்றும், மானுடர்களின்

மிகப்பழைய தெய்வங்களில் ஒருவன் சிவன் என்றும் அறிய முடிகின்றது.

வேட்டுவர் பற்றிய கல்வெட்டுகள்

1. கி.மு 300 வத்தலகுண்டு -அந்துவ வேட்டுவன் என்ற பெயர் பொறித்த நடுகல்.

2. கி.மு 400 கொடுமணம் -வேட்டுவர் பெயர் பொறித்த கணையாழிகள்.

3. அந்தியூர் செல்லீஸ்வரர் கோவில் பாசறை - வேட்டுவன் கொங்கன்.

4. சோழன் பூர்வ பட்டயம் - ஆதித்ய சோழன் இராஜ வேடர்களை வென்று கொங்கு நாட்டை கைப்பற்றினான் என்று உள்ளது.

   தென்னிலை செப்பேடு - வேட்டுவர்கள் வேளாண் காடை குலத்துக்கு ராசா கோவிலில் முப்பத்து உரிமையை கொடுத்தது.

5. திருமுருகன் பூண்டி முருகநாதர் கோவில் - ஊராண்மை பொலுவ வேட்டுவன் கல்வெட்டு.

6. ஒட்டியர் மற்றும் சல்லியர்களை தோற்கடித்து குடிகளை காத்தனர் என்று வேட்டுவ பாளையக்காரர் வரலாறு கூறுகிறது.

7. கருவூர் அய்யர்மலை கல்வெட்டு "படித்துறை வேடன் அதிட்டனம்"கி.பி 1 ம் நூற்றாண்டு.

8. வேட்டுவன் ஏழுநூற்றவன் வேனாட்டிலுள்ள வாழையூரில் இருந்த வாழையூர் அடிகளுக்கு மங்கள்பாடி என்ற ஊரை தானமாக வழங்கினான்.

9. நந்திவர்மன் பல்லவன் உதய்யெந்திரன் செப்பேடு சுலோகம் (58) உதயணன் என்ற வேதா அரசனைப்பற்றி கூறுகிறது.

குருகுலவம்சம்

1. மானூர்பாளையம் செப்புபட்டயம் வேட்டுவர்களை குருகுல வம்சம் என்றும் வணராயக் கவுண்டர் ஆட்சி செய்ததையும் கூறுகிறது.

2. கொடுமணல் கணபதி பாளையம் செல்லாண்டி அம்மன் கோவில் கல்வெட்டு-வேட்டுவர்கள் குருகுல வம்சத்தவர்கள் என்று கூறுகிறது.

"மூன்று கொலாம் கணை கையது வில் நான்
மூன்று கொலாம் புர மெய் தன தாமே
- பாடியவர் : திருஞானசம்பந்தர்

"வில்லை வட்டப்பட வாங்கி அவுணர்தம் வல்லை வட்டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்தில்லை வட்டந்திசை கைதொழுவார் வினை ஒல்லை வட்டங் கடந்தோடுதல் உண்மையே" - பாடியவர்: திருநாவுக்கரசர், தலம்: தில்லை சிதம்பரம்

"கானவர்
கரிபுனம் மயக்கிய அகன்காட் கொல்லை
ஐவனம் வித்தி மையுறக் கவினி
ஈனல் செல்லா ஏனற்கிழுமெனக்
கருவி வானம் தலை இ" - புறநானூறு (159)

(வேட்டுவர் சுடப்பட்டுக் கரிந்த புனத்தை மயங்க உழுத அகன்ற இடத்தையுடைய கொல்லைகக்கண் ஐவன நெல்லோடு வித்தி இருட்சியுற அழகு பெற்றுக் கோடை மிகுதியில் ஈன்றலைப் பொருந்தாத தினைக்கு இழு மென்னும் ஓசையுடன் மின்னலும் இடியும் முதலாகிய தொகுதியுடைய மழைத்துளி சொரிந்தது)என்று புற நானூறு கூறுகிறது.

வேட்டுவ குலத்தை சேர்ந்த நாயன்மார்கள்
கோச்செங்கட் சோழ நாயனார்-சோழ வேட்டுவ குலம்
இடங்கழி நாயனார் -குடுமி வேட்டுவ குலம்
நரசிங்க முனையரைய நாயனார்-மின்ன வேட்டுவ குலம்
புகழ்ச்சோழ நாயனார்-சோழ வேட்டுவ குலம்
கண்ணப்ப நாயனார்-காளத்தி வேட்டுவ குலம்

கொங்குநாடு பூர்வக்குடி வேட்டுவர்கள்

நடுகல் வழிபாடு மற்றும் கொற்றவை வழிபாட்டைப் பிரதான தெய்வ வழிபாடாகக் கொண்டு உள்ளார்கள் தாய்தெய்வ வழிபாடு கொற்றவை வழிபாடு வேட்டுவர்களின் முதன்மையானவை ஆகும். இதைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது. மேலும் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின் வேட்டுவவரியில் சாலினி என்ற வேட்டுவப் பெண்ணை கொற்றவை தெய்வமாக வேட்டுவர்கள் வழிபட்டதை நம் கண்முன்னே கொண்டுவந்து காட்டியுள்ளார். அதே போல் ஐயனார் வழிபாடு வேட்டுவர் நடுகல் வழிபாட்டின் தொடக்கமே

ஆகும். இன்று ஐயனார் கருப்பணசாமி மற்றும் ஐயப்பன் போன்ற தெய்வவழிபாடுகள் தொல்குடித் தமிழரான வேட்டுவர் வாழ்வியலின் வெளிபாடே ஆகும்.

வேட்டுவர்கள் இனக்குழு வாழ்வியல் முறையிலேயே அரசு உருவாகியது என்று அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். தெய்வ வழிபாட்டில் வேட்டுவர் நீத்தார் வழிபாடே கடவுள் உருவாக்கம் என்பதை அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். எனவே அரசு உருவாக்கம் மற்றும் கடவுள் வழிபாட்டின் தொடக்கம் வேட்டுவர் இனக்குழுக்களைச் சாரும். வேட்டுவ இனக்குழுக்கள் நடுகல் வழிபாடும் அதன் தொடர்ச்சியாக ஐயனார் கருப்புசாமி, முனிசாமி போன்ற தெய்வங்கள் வழிபாடும் தோன்றின. மேலும் குலதெய்வங்கள் வழிபாடு போன்றவை கொங்கு நாட்டில் மிகவும் பிரதான வழிபாடாக இருந்தது. இந்த நிலையில் முதலாம் ஆதித்த சோழன் (கி பி 871-890) ஆட்சிக் காலத்தில் கொங்கு நாட்டின் மீது போர் செய்து கொங்கு வேட்டுவ அரசர்களை வெற்றி கொண்டு கொங்கு நாட்டின் பசும்பொன்னைச் சிதம்பரம் ஈஸ்வரன் கோவிலுக்குப் பொன் வேய்ந்தான் என்பதைச் சிற்றம்பல முகட்டை அழகுபடுத்தினான் என்பதைச் சிற்றம்பல முகடு கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்யன் என்று நம்பியாயண்டார் நம்பி தமது திருத்தொண்டர் திருவந்தாதியில் குறிக்கப்பட்டு உள்ளதன் மூலம் அறிய முடிகிறது. இந்தப் போருக்குப்பின் முதலாம் ஆதித்தன் பார்வை கொங்கு தேசத்தின் மீது திரும்பியது. சோழர்களின் பெரும்படைக்கு வேட்டுவ ராஜாக்களின் தங்கத்தைக் கொள்ளையடிக்க முடிந்த ஆதித்ய சோழனால் வேட்டுவ அரசர்களின் மற்றும் கொங்கு மக்களின் கடவுள் நம்பிக்கையை மாற்ற முடியவில்லை. இதனால் பூர்வக்குடி வேட்டுவ அரசர்களை சைவ வழிபாட்டிற்கு மாற்றுவதற்குச் சில புதிய முறைகளைக் கையாண்டுள்ளனர். அதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளனர் என்பதை சோழன் பூர்வ பட்டயம் மூலம் அறிய முடிகிறது.

1. சோழன் பூர்வ பட்டயம்

கொங்கு நாட்டில் கோட்டைகட்டி பேட்டை அமைத்து, கோயில் மற்றும் ஊர்களை நிர்மாணித்து அதில் வேட்டுவர்களுக்கு வரிவசூலிக்கும் அதிகாரத்தையும் அந்த ஊர்களில் நீர்நிலைகளைப் பராமரிக்கும் அதிகாரத்தையும் மன்னாடி என்ற பெயரையும் கொடுத்தனர். இதன் மூலம் வேட்டு அரசர்கள் தங்களின் குலதெய்வ வழிபாட்டின் மூலம்

சிவராத்திரியும் இணைத்து கோயில் திருவிழாவாக வழிபாடு செய்து வந்துள்ளனர். அதாவது, கொங்குநாட்டில் வாழும் பூர்வக்குடிகளின் குலதெய்வ நம்பிக்கை மற்றும் தெய்வ வழிபாட்டை மாற்றாமல் அவர்களின் குலதெய்வ வழிபாட்டுடன் சைவ வழிபாட்டையும் இணைத்தார்கள். இதில் அவர்கள் சைவசமையத்தைப் பரப்புவதில் ஓரளவு வெற்றியும் பெற்றனர். இதன்மூலம் பூர்வக்குடிகளான வேடுவர்களின் நம்பிக்கையை மாற்றம் இல்லாமல் புதிய முறையான சிவ வழிபாட்டை மேற்கொண்டனர்.

வேட்டுவர்கள் தங்கள் குலதெய்வங்களுக்கு வருடம் ஒருமுறை விழாக்கள் எடுப்பது வழக்கம். அந்த விழாவைச் சிவராத்திரியில் எடுக்கவைத்து சிவ வழிபாட்டை மேம்படுத்தினர்.

சோழர் பூர்வ பட்டயத்தில் உள்ளபடி இன்றும் வேட்டுவர் குலதெய்வம் கோவில்களில் சிவராத்திரித் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுவதைப் பார்க்க முடிகின்றது.

2) அல்லாள இலையான் செப்பேடு

கி.பி. 1584-ஆம் ஆண்டு வைகாசி விசாகத் திருவிழா மதியத்தன்று இப்பட்டயம் எழுதப்பட்டுள்ளது.

வைகாசி மாதம் 14-ந் தேதி
வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறிதான் தழைத்தோங்குக
தெய்வ வென் திருநீரு சிறக்கவே

என்று தொடங்கும் இந்தச் செப்பேடு கடவுள் வாழத்து, விஜய நகர அரசர்கள் மெய்கீர்த்தி, அவர்கள் அரசர்கள் பரம்பரை மற்றும் ஆட்சி செய்த ஊர்களின் பெயர்கள் குறிக்கபட்டுள்ளன. மேலும், கொங்கு வேட்டுவ அரசர்கள் திருச்செங்கோட்டு மாலையில் ஒன்றுகூடி அர்த்தனாரீஸ்வரர் கோவிலில் மடம் கட்டி வைத்த நிகழ்வை இந்தச் செப்பேடு குறிப்பிடுகிறது.

செப்பேட்டின் மூலம் :

1) நாககிரி வேலாயுத சுவாமி அற்தனாரீசுபர சுவாமி திருவிடத்தில்

1) காவலற் 2) பூலுவர் 3) வளவர் 4) வேடர் 5) வேட்டுவர்

2) கங்கையைத் தரித்த கடவுளாற்கு எச்சமிட்டு கண்ணை பிடந்து சாத்தி முத்தி பெற்ற கண்ணப்ப நாயனார் பெரியோர்

3) விதிரி மலை காவலர்

4) செம்பொற்சிலை கொண்டுவந்தவர்

5) வில்வத்தி லேறியே சிவறாத்திரி கண்ட பெரியோர்

6) சித்திரபுத்திர சீமைக்குடைய பெரியோர்

7) சேவுகத்துக்கும் உடையபேர்

8) கொங்கு தேசத்துங்குடையபேர்

9) கொற்றவர்கள்

10) கற்றவர்கள்

11) கொல்லிகிரிக்குடையவர்கள்

12) கூற்றிய (குறுப்பு) நாடு தனிலே வாசகங் கூறி வைத்துக் கொண்ட பெரியவர்கள்

13) வங்கக் கடலொலி கைவர வாகை மாலையுடயவர்

14) சித்திரமேழிக் கொடிப் படைத்த பெரியோர்

15) வாகிருது சொன்னவறை வாயைக்கிழித்திடும் வெற்றிவாழரசர் மணவாளர் ஏன்ற பெரியோர்

16) குன்றத்தூர் துருகம் குன்னாடிக் கவுண்டர்

17) மோரூறு பொன்ன வேட்டுவர்

18) கீழ்கரை பூந்துரை நாட்டில் பாண்டிய கோத்திரத்தில் பேரக்ககவுண்டன்

19) வேம்ப கோத்திரத்தில் குமரகவுண்டன் சினாக்கவுண்டர்

20) பரமத்திச் சீமை மூளை கோத்திரத்தில் அல்லாளயிளையான் நாயக்கர் திருமலை நாயக்கரவர்கள் மண்னாதகவுண்டர் முத்துக்காழி கவுண்டர்

21) தலையவாடு குன்னாடிகோத்திரத்தில் வெள்ளய கவுண்டர்

22) மணல் நாடு பிள்ளைத் தேவணகவுண்டர்

23) நடந்தை குமாரகவுண்டர்

24) வேங்கல நாடு காளத்தி கவுண்டர் நீலியப்ப கவுண்டர்

25) கெழுங்குநாடு திருமலை கவுண்ஸ்^டர், குமாரசாமி கவுண்டர்

பின்னுங் கொங்கு மண்டலத்திலுள்ள வாழர^ச மணவாழரெலாருங் கூடித் திருச்செங்கோட்டில் கலியுக சகாற்பிம் 4685 கு மேல் செல்ல நின்ற ஈசுரரு வைய்யாசி மீ யரு உ பூர்ணமும் விசாக நட்செத்திரமும் பெற்ற சுபதினத்தில் காமாட்சித் தம்பிரானுகு மட தற்மம் உண்டு பண்ணிக் குடுத்தது.

மடம்

(கி.பி. 1584-ஆம் ஆண்டு வைகாசி விசாகத் திருவிழா மதியத்தன்று இப்பட்டயம் எழுதப்பட்டுள்ளது. வைகாசி மாதம் 14-ந் தேதி.)

நாககிரியன் மேல்

1. அர்தனாரீசுபர சுவாமியார் சன்னதிக்கு மேற்கு
2. விஷ்னு தீர்த்தக்கு தெற்கு
3. துற்கை அம்மன் சன்னதிக்கு வடக்கு
4. அமர மணியார் மண்டபத்துக்கு கிழக்கு

இது நடுவில் மடம் இதில் இருந்துக் கொண்டு அற்தனாரீசுபர சுவாமி சன்னதியில் திருவிழக்கும் திருமாலைக் கட்டிக்கொண்டு வரவும்.

1) பல்லக்கிள் வருவோர் கம்பு உக (21)

2) குதிரையேரிய வருபவர் கம்பு ரு (5)

3) சேறுவைகாறனுக்கு கம்பு ரு(5)

4) பண்ணைய்குடிக்கி ஏறுக்கு கம்பு வள்ளம் உ (2)

5) கலியாணத்துக்கு மாப்பிளை வீடு கம்பு க (1)

6) பென்வீடு கம்பு க (1)

தொடர் செலவுகளுக்கும் ஏற்பாடு செய்கின்றனர்.

7) இந்த முறையில் நடத்தி குடுக்குறோமென்று நாங்கள அனைவருங் கூடி எழுதி குடுத்த தற்ம சாசனப் பட்டையம்.

இதன்படி சந்திராதித்தருள்ள வரைக்கும் மலையுள்ள காலத்துக்கும் நிலையுள்ள தர்மமாகக் கட்டளையிட்டது இந்த தர்மம் தேசம் சீமை நாடு எங்கிருந்தாலும் வாழரசர் மணவாழர் தற்ம பரிபாலனம் பண்ணி நடப்பிச்சி கொண்டவர்களாக இந்ததிராதி போகமும் அனுபவிச்சு சந்திராதித்தருள்ளவறைக்கும் சாட்சியாக இருப்பார்கள்

இந்தத் தர்மத்துக்கு விகாதம் பண்ணின பேர் கெங்கைக் கறையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவார்கள்.

நட்டகல் லிட்ட சூலம் நீடுகள் வெட்டெல்லை வட்டமாவயவங்கள் தோறு மகதேவர் தான தர்மம் இட்டிடை பண்னி மெத்த இடஞ்சல் செய்புவாற்க்கு குட்டனோய் நறகந்தன்னில் தீகுழிப்பது தின்னந்தானே.

செங்கோடர் ரட்கிப்பார் உ.

3) ஊசிப்பாளையம் செப்பேடு

வேட்டுவர் இனத்தைச் சார்ந்த காளியப்ப கவுண்டரின் மகனான காணியாளன் செய்யானுக்கு, போசள மன்னனான மூன்றாம் வீரவல்லாளன் பல்லவராயர் எனும் சிறப்புப் பட்டமும் பெருமைப் படுத்தினான். இச்செய்யான் பல்லவரையன் அறச்சலூர் புற்றிடங் கொண்டீசுவரர் மீது அளவற்ற பக்தி கொண்டவன். எனவே, இத்திருக்கோயில் திருப்பணியின் போது இவன் திருநிலைக்காலும் படியும் அமைத்துக் கொடுத்துத் தன் இறையன்பை வெளிப்படுத்தினான்.

அரச்சலூர் கரைய வேட்டுவன் செய்யான் பல்வரையன் திருக்கோயிலுக்குச் செய்த புனித செயலை போசள வேந்தன் மூன்றாம் வீரவல்லாளன் கல்வெட்டு (கி.பி.1335) பதிவு செய்துள்ளது. கரைய வேட்டுவர்களான காளியப்ப கவுண்டர் மற்றும் அவரது மகன் செய்யான் பல்லவரையன் ஆகிய இருவரைப் பற்றியும் ஊசிப்பாளையம் செப்பேடு குறிப்பிடுகின்றது.

ஊசிப்பாளையம் செப்பேட்டை வெளிக் கொணர்ந்த பெருமை கொட்டாரத் தோட்டம் அமரர் ஒ.எஸ்.துரைசாமி (முன்னாள் சர் எம்.எல்.சி.) அவர்களையே சாரும். காதல் பிரபந்தத்தின் தலைவன் கரைய வேட்டுவனான நல்ல மாகாளி என்பானின் மகன் முத்தணன் மீது பரமுத்துக் கவியராயர் காதல் பிரபந்தம் ஒன்றைப் பாடியுள்ளார். இதனால் இக்கரைய வேட்டுவரின் சமுதாயத்தில் பெரிதும் மதிக்கப்பட்டான் என்பது புலனாகும்.

4) கபிலர்மலைச் செப்பேடு

1991 இல் கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள் என்ற நூல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் புலவர் இரா. ராசு அவர்களால் வெளியிடப்பட்டது. கபிலக்குறிச்சியில் ஒரு வீட்டிலிருந்து நாமக்கல் தாசில்தார் மூலம் பெற்று மத்திய அரசுத் தொல்பொருள் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப்பிரிவினர் இச்செப்பேட்டைப் படி எடுத்துள்ளனர். வேட்டுவ அரசர் அல்லாள இளையா நாயக்கன் செய்த பலகொடைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கபிலர்மலையில் உள்ள வள்ளுவர் குலப் பெருமாள் தம்புரானுக்குக் கபிலர்மலை, திருச்செங்கோடு, பழனி மடங்களை எழுதித் தந்து பல கொடைகள் விட்டதை இச்செப்பேடு கூறகிறது.

கபிலர்மலையில் மலைக்கோயில், உச்சிப்பிள்ளையார் கோயில், பால்வாவி கட்டப்பட்ட விவரமும், தைப்பூச விவரமும், விழாவின் போது திருமஞ்சன நீரினை அந்தணர் கொண்டுவர ஏற்பாடு செய்ததும், நடைக்கு 1/8 ரூபாய் கொடுத்த விவரமும், கபிலர்மலைக் கோயிலுக்கும் திருமடத்திற்கும் வரி நிர்ணயம் செய்த விவரங்களும் விரிவாகக் கூறப்படுகின்றன.

1604 ஆம் ஆண்டு இச்செப்பேடு எழுதப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இச்செப்பேடு முற்றுப்பெறாமல் உள்ளது. வைய நீடுக மாமழை மன்னுக மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

முடிவுரை

கொங்கு மண்டலத்தில் வேட்டுவ அரசர்கள் ஆட்சி செய்த பல்வேறு கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி போன்றவை கிடைக்கப் பெற்றுள்ளது. மேலும் சங்க இலக்கியங்களில் பூர்வக்குடியான வேட்டுவர்கள் பற்றி எண்ணற்ற தரவுகளைக் கொண்டுள்ளது. இதில் கடையெழு வள்ளல்களில் சிறந்தவரான வல்வில் ஓரி அதியமான் கடிய நெடு வேட்டுவன் கோப்பெரு நள்ளி விச்சிகோ போன்றோர், சங்ககால வேட்டுவ அரசர்கள் ஆவார்கள். மேலும் திருப்பாண்டிக்கொடுமுடி வெஞ்சமான் அல்லாள இளையான் நாயகன் பல்லவரையன் அப்புச்சிமார் காவியத்தின் தலைவன் ராஜ ராஜேந்திர மாராயன் என்கின்ற அப்புச்சிமார் ஐயன், போத்திராஜன் போன்றோர்கள் கொங்கு மண்டலத்தில்

ஆட்சிசெய்த வேட்டுவ அரசர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் சிவபக்தர்கள் ஆவார்கள். இவர்களின் கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி போன்றவை எண்ணற்று உள்ளன. இதில் கொங்கு வேட்டுவ அரசர்களின் சைவ சமய வளர்ச்சிக்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் செப்பேடு வழியாக ஆராய்ச்சிக்குப் பின் விளக்கியுள்ளோம். வேட்டுவ அரசர்கள் 440 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்திய சிவராத்திரி வழிபாட்டு முறையானது இன்றும் சீரும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இது நமது முன்னோர்களின் பக்தி மார்க்கத்தையும் அவர்களின் அறிவுத் திறத்தையும் நாம் போற்றும் வண்ணம் உள்ளது.

சிவராத்திரி கண்ட பெரியோர்கள் என்று அல்லாள இளையான் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. அதை உறுதிப்படுத்தும் வகையில் 440 ஆண்டுகளுக்குப் பின்பு வேட்டுவ இன மக்கள் தங்களின் குல தெய்வங்களான கருப்பண்ணசாமி அறச்சலூர் நாட்ராயன் கோயில், தோட்டாணி தவசி மாரியம்மன் கோயில் காளிப்பட்டி இன்னும் பல ஊர்களில் தங்களது குலதெய்வ வழிபாட்டுடன் சிவராத்திரியும் மிக சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். இதைப் பார்க்கும் பொழுது 440 ஆண்டுகளுக்குப் பின்பும் தங்களது குலதெய்வ வழிபாட்டுடன் சிவனையும் போற்றி சிவராத்திரியை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வரும் வேடுவ மக்களை அல்லாள இளையான் செப்பேட்டில் கூறியபடி சிவராத்திரி கண்ட பெரியோர்கள் என்று சிறப்பிப்பது போற்றத்தக்கதாகும்.

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நூல்கள்

1. பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி - கார்த்திகேசு சிவத்தம்பி.

2. களப்பிரர் போர் தமிழ் வேட்டுவர் வெர்சஸ் கன்னட வேட்டுவர் ஏ.கே. சந்திரசேகரன்.

3. பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ் சமூக உருவாக்கம் ராஜ்கவுதமன்.

4. புராண இதிகாசங்களில் வேட்டுவர் வரலாறு -மூர்த்தி.

5. 2000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் நிலம் தொல்லியல் நோக்கில் சங்ககாலம் நிலவரைபடம் -சி இளங்கோ.

6. தமிழர் தளபதி - புலவர் கா கோவிந்தன்.

7. தமிழர் மானிடவியல்- பக்தவச்சல பாரதி.

8. ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும் - ராஜ் கவுதமன்.

9. தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு சங்க காலம் -ராஜ்கவுதமன்.

10. கொங்கு நாட்டு கவுண்டர்கள் -வீயாரம்.

11. தமிழ்நாட்டு வரலாற்றில் புதிய கண்டுபிடிப்பு வரலாற்று வித்தகர்- பேராசிரியர் இராசசேகர தங்கமணி.

12. வில்லோர் உழவர்கள் சங்க இலக்கியங்கள் புகழும் சங்க கால வேட்டுவர் வேளிர்கள் -ஆசிரியை இறைவி எம்.ஏ.,பி.எட்.

13. கரூர் ஆனிலையப்பர் திருக்கோயில் தல வரலாறு -வரலாற்று வித்தகர் பேராசிரியர் இராசசேகர தங்கமணி.

14. அரை நாட்டு மன்னன் அல்லாள இளையான்- வெளியீடு அல்லாள இளையான் அறக்கட்டளை.

15. வேட்டுவர் வேந்தர் மரபினர் டாக்டர் னு.வாழைபரமேஸ்வரன்.

16. வேட்டுவ மன்னன் வல்வில் ஓரி - கவிதா வாழைபரமேஸ்வரன்.

17. தொல்குடி வேட்டுவர் ஆவணம் - பா.ஆனந்தகுமார் .

18. வேட்டுவர் சமூக ஆவணம் - புலவர் இராசு.

19. குருகுல காவியம்.

20. கொங்குமண்டலச் சதகம்.

21. கொங்குதேச ராஜாக்கள்.

செப்பேடு

1. அல்லாளா இளையான் செப்பேடு.

2. குறிப்பு நாட்டுப் பட்டயம்.

3. சோழர்கள் பூர்வ பட்டயம்.

4. ஊசிப்பாளையம் செப்பேடு.

5. கபிலர்மலைச் செப்பேடு

கொங்குநாடும் வேட்டுவரின் வரலாறும்

முனைவர் சி.குமாரசாமி
எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
காங்கேயம் -638108.

முன்னுரை

ஒரு நாட்டின் பண்பாட்டை - வரலாற்றை அறிய அந்நாட்டில் வாழ்ந்த பல்வேறு இனக்குழுக்கள் பற்றிய அடிப்படைப் புரிதல் இன்றியமையாத ஒன்றாகும். ஊடயளே என்று மனிதவியலாளர்களால் அழைக்கப்பட்ட இனக்குழுக்கள் பின்னாளில் குலங்களாக - குடிகளாக - சாதிய அடையாளமாக அறியப்பட்டன. அத்தகைய இனக்குழுக்களில் வேட்டுவர் குழுக்கள் பற்றிய வரலாற்றை அறிவது தமிழ் நிலத்தின் ஒருபகுதி வரலாற்றை அறிவதற்கு ஒப்பானது. இக்கட்டுரை வேட்டுவர் பற்றிய வரலாற்றை நோக்கமாகக் கொண்டது.

பண்டைக் காலம் முதற்கொண்டு கொங்கு நாடு ஒரு தனி நாடாகக் கருதப்பெற்று வந்திருக்கிறது. அவ்விதக் கூற்றுக்குப் பண்டையக்காலம் முதல் பழைய சங்கச் செய்யுள்கள் ஆதியான பல ஆதாரங்கள் இருக்கின்றன. கடைச்சங்கத்துப் புலவர்கள் கொங்கு நாட்டை ஒரு தனி நாடாக எடுத்தாண்டிருக்கிறார்கள். புறநானூற்றில் "கொங்கு புறம் பெற்ற கொற்ற வேந்தே" (373) என்ற அடியினால் கொங்கு நாடு ஒரு தனி நாடகக் கருதப்பெற்று வந்ததை அறியலாம். அந்நாட்டுமக்களைக் கொங்கர் என்ற பெயரால் அழைத்தனர்.

பண்டைய குடிகள்

கொங்கு நாட்டைச்சுற்றிலும் பெரும் பாகங்கள் மலைத் தொடர்களாக இருப்பதை அறிவோம். அம்மலைத்தொடர்கள் உயர்ந்த மரங்கள் முளைத்த காடுகளாக இருக்கின்றன. அக்காடுகளில் தேக்கு முதலிய மரங்களும், புலி, சிறுத்தை, யானை முதலிய காட்டு விலங்குகளும், மயில், வல்லூறு போன்ற அழகிய பறவைகளும், பாம்பு,

உடும்பு போன்ற அழகிய ஊர்வனவும் நிரம்ப இருக்கும். அன்றியும் அழகிய சுனைகளும், அருவிகளும் செழிப்புச் செய்கின்றன. இத்தகைய நிலப்பகுதிகளில் சாதாரண பொது மக்கள் வாழ்தல் அரிது. அங்கு மலைபடு பொருள்கள் சிறப்பாகக் கிடைக்கும். அவைகளைக் கொண்டு விலங்குகளோடு உறவு பூண்டு வாழும் மக்களும் உண்டு.

நீர் அருவிகள் ஓடுகின்ற பள்ளத்தாக்குகளுக்கு அருகே பாறைகளுக்கிடையில் சின்னஞ்சிறு மேட்டிடங்களில் வட்ட வடிவமான ஓலைக் குடிசைக்களைக் கட்டிக்கொண்டு அவைகளில் பிழைக்கும் சில வகுப்பர்களை அங்கே காணலாம். அவர்களைக் கண்டால் காட்டு விலங்குகள் மானிட உருவில் திரிகின்றனவோ என்று சந்தேகிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆட்கள் தான் நமது காட்டுப் பண்டைய குடிகள். சென்ற ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாகரிகம் இன்னதென்று அறியாமல் இந்தக்காட்டு மக்கள் வாழ்ந்தார்கள்.

மலைகளில் வாழும் குடிகள் ஒரேவகுப்பினர் அல்லர். பல வகுப்பினார்களாகப் பிரிவு பட்டு தங்கள் தங்கள் பழக்க வழக்கங்களை நழுவ விடாமல் பாதுகாத்து வருகிறார்கள். கொங்கு நாட்டு மலைகளில் வாழ்ந்த இக்காட்டுமக்கள் நாட்டு மக்களோடு உறவு கொள்ளாமலும் உரிமைகளை இழக்காமலும் வாழ்ந்து வந்தார்கள்.

கொங்கு நாட்டுப் பழைய குடிமக்கள்

கொங்கு நாட்டு குடிமக்களிலே தற்போது பலவகைப்பட்ட மக்களிருக்கிறார்கள். கொங்கு நாட்டில் சமநிலத்தில் வாழும் குடிமக்களிலே இரண்டு பெரிய தொகுதிகள் இருக்கின்றன. அவர்கள் நாட்டிற்கு உரிமை உள்ளவர்கள் என்றும் கூறும் கதைகளும் கொள்கைகளும் பல உண்டு. அவர்கள் தான் வேட்டுவர், வேளாளர் என்ற இரண்டு வகுப்புப் பெயர்களை கொண்டவர்கள். இவ்விரு குடிமக்களும் கவுண்டர் என்ற பட்டப் பெயரை வகித்திருப்பவர்களே. இவ்விரு வகுப்பார்களின் வகுப்புப் பெயர்களே இவர்களுடைய குணங்களையும் எடுத்துக்காட்டும்.

வேட்டுவர் - வேளாளர்

வேட்டுவர் என்றால் வேட்டையாடி பிழைப்பவர் என்று பொருள். வேளாளர் என்றால் நிலத்தை அண்டிப் பிழைப்பவர் என்று பொருள். தற்போது இரண்டு வகுப்பார்களும் நிலத்தை அண்டிப் பிழைப்பவர்களே. ஆனால் முன்னாளில் வேட்டுவர்கள் வேட்டையாடுதலையே பிழைப்புத்

தொழிலாகக் கொண்டிருந்தார்கள் என்று அறியவேண்டும். காட்டிற்கும் நாட்டிற்கும் உள்ள வேற்றுமையே வேட்டுவர்க்கும் வேளாளர்க்கும் இருந்திருக்க வேண்டும்.

இந்த இரண்டு குலத்தாருக்கும் கருத்து வேறுபாடும் மிகுதியாக இருந்தன. ஆகவே இவ்விரு வகுப்பார்களுக்குள் பகைமை மிகுதியாக இருந்திருக்கவேண்டுமல்லவா? பகையினால் சண்டை சச்சரவுகளும் கட்சிப் பிரதி கட்சிகளும் ஏற்பட்டுப் போர்களில் முடிவதே இயற்கையல்லவா? அவ்வாறு ஏற்பட்டுப் பெரிய கலவரங்கள் நாட்டில் விளைந்தன என்று நாட்டுக் கதைகளும், பாடல்களும் முழங்குகின்றன. இச்செய்தியைக் கூறும் ஒரு சிறந்த நாட்டுப்பாடலை இந்த நாளிலும் நாட்டுப் புறங்களில் படிப்பார்கள். அப்பாடல்களை படிக்கும்போது ஊர்மக்கள் வெகு ஆவேசத்தோடு கேட்பார்கள். இந்த நாளிலும் இக்கதைகளைக் கேட்கிற நாட்டுப்புறத்தார்களுள் அடிக்கடி உணர்ச்சி எழும்பி வீராவேசம் பொங்குவதுண்டு.

கள்ளழகர் அம்மானை என்ற பாடல் தெளிவாகவும் உருக்கமாகவும் இருப்பது அது மக்களுடைய உணர்ச்சியில் வெகுவிரைவில் படிந்து விடும். குன்றுடையாக்கவுண்டன் அக்கதைக்கு வீரன். அவன் வேளாளர்களின் தலைவன். அவனுக்குப் பொன்னர்-சங்கர் என்ற இரண்டு வீர மக்களும், நல்லதங்கை என்ற ஒரு பெண்மணியும் உதித்தார்கள். குன்றுடையாக் கவுண்டனும் அவன் மக்களும் வேளாளருக்குள் தலைமை பூண்டு மிகசெழிப்போடு விளங்கினார்கள்.

காளி என்பவன் வேட்டுவர்களுக்குத் தலைவன். அவன் போரில் வல்லவன். வேளாளர்களிடம் பரம்பரையாகப் பகை பூண்டவன் ஒரு காலத்தில் இந்த இரண்டு தலைவர்களுக்கும் ஒரு வஞ்சகனுடைய தூண்டுதலாலே பகை ஏற்பட்டுப் போர் மூண்டது. அப்போரின் விளைவாக இரு தலைவர்களும் அவர்களுடைய ஆட்களும் தொலைந்தனர். ஆனால் பகை போகவில்லை. அவ்விரு வகுப்பார் களுக்குள் இன்னும் பகை உண்டு. அவைகளைத் தற்போது தேர்தல்களில் காணலாம்.

மேற்கூறிய செய்திகளாலே கொங்குநாட்டுப் பழங்குடிகள் இரண்டு வகுப்பினர்களாக இருந்த செய்தியை அறிய முடிகின்றது. இவ்விரு வகுப்பார்களுக்குள் காணும் பழக்க வழக்கங்கள் மாறுபட்டிருப்பதையும் காணலாம். இவ்விரு வகுப்பார்களை அண்டி இவர்களுக்குத் தொழில்

செய்யும் தொழிலாளிக் கூட்டங்களும் அத்தலைவர்களுடைய வேறுபாடு களையே தாங்களும் கொண்டிருக்கின்றனர்.

பூர்வக்குடிகள்

கொங்கு நாட்டில் பன்னெடுங்காலமாகப் பல்கிப் பெருகிச் சிறப்புடன் வாழ்ந்து வரும் சமுதாயம் வேட்டுவர் சமுதாயம் ஆகும். கொங்கு நாட்டு ஆவணங்கள் பலவும் வேட்டுவர் சமுதாயத்தினரைப் 'பூர்வக்குடிகள்' என்று குறிக்கின்றன. வேட்டுவர் சமூகத்தினரைக் 'கொங்கர் ' என்றும் அவர்கள் தலைவரைக் 'கொங்குராயன்' என்றும் இலக்கியங்கள் ஆவணங்கள் கூறுகின்றன.

'குருகுலவம்சம்' என்று கூறிக்கொள்ளும் வேட்டுவர் இலக்கியம் 'குருகுலக்காவியம்' 'பஞ்சவர்ண ராஜகாவியம்' மற்றொரு காவியம், அப்பச்சிமார் பெயரில் குறவஞ்சி போன்ற இலக்கியங்களும் இருந்துள்ளன. வேட்டுவர் சமூகத்தில் ஏறக்குறைய 200க்கும் மேற்பட்ட குலப்பிரிவுகள் உள்ளன. அண்மையில் கிடைத்த "வேட்டுவேர் கலி வெண்பா" சுவடி இவற்றைச் சிறப்புடன் தொகுத்தளிக்கிறது. வேட்டுவர் சமூகத்தினரை "வாளரசர்" "வாளரசமணவாளர்" என்று சிறப்பாக அழைத்ததுடன் "பாதிப்பங்காளிகள்" என்று வேளாளர்கள் அழைத்துள்ளனர். கொங்கு வேளாளர் சமுதாய ஒப்பந்தங்கள் பலவற்றில் வேட்டுவர் குலப்பெருமக்கள் முன்னிலை வகித்து சாட்சி கையொப்ப மிட்டுள்ளனர்.

கொங்கு நாட்டின் பல பகுதிகளில் வேளாளர்கள் குடியேறும் முன் பல ஊர்ப்பகுதிகளும் பல நிலங்களும் வேட்டுவர் சமுதாயத்தினருக்கு உரிமையுடையதாக இருந்துள்ளன. கொங்குவேளாளர் ஆவணங்களில் 'கொங்கு வேட்டுவர்' என்று வேட்டுவர் சமுதாயத்தினர் குறிப்பிடப் பட்டுள்ளனர். 'கும்பிட்டாரை வெட்டாத குருகுல வங்கிசம்' என்ற தொடர் அண்ணன்மார் காவியத்தில் காணப்படுகிறது. வரலாற்று சிறப்புமிக்க கொங்கு நாட்டு வேட்டுவர் சமுதாயம் பற்றிய செய்திகள் வரலாற்றில் போதுமான அளவு இடம்பெறவில்லை என்பது உண்மையாகும். 'ஊராளி' 'நாடாள்வான்' 'கொங்காள்வான்' போன்ற ஆவணச்சொற்கள் வேட்டுவர் ஆட்சி பொறுப்பிலும் இருந்தனர் என்பதைக் காட்டுகின்றன.

கூத்துக் கலையில்தேர்ந்த வேட்டுவர்கள் கொடை, வீரம், பக்தி என்னும் முப்பெரும் நிலைகளிலும் சிறப்புற்று இருந்தனர். வேட்டுவர்கள்

காவலியர், மாவலியிர், பூவலியர், வேடர், வேட்டுவர்கள் என ஐவகையாகப் பிரிக்கப்பட்டிருந்ததையும் ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

கொடையும் வீரமும்

வேட்டுவர்கள் அளித்துள்ள கொடை பற்றிய செய்திகளை அர்த்தமண்டபம், மகாமண்டபம் கட்டி திருப்பணி செய்தமை, சிவராத்திரி பூஜை கொடை வழங்கியமை, இறையிலி நிலம் அளித்தமை, சந்தியா தீபம் கொடுத்தமை, நெற்கொடை, கறவைப்பசு, குதிரைச் சிலை வழங்கியமை போன்ற ஆவணக் குறிப்புகளால் அறியலாம்.

வீரத்திலும் வேட்டுவர்கள் சிறந்திருந்தனர் என்பதை மன்னர்களுக்குப் படை உதவி அளித்தல், ஆநிரை மீட்டல், கள்ளர்களை அடக்குதல், நாட்டிற்காக வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபடுதல் போன்ற பலவகை வீரதீரச் செயல்களில் ஈடுபட்டிருந்ததாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

முடிவுரை

வேட்டுவ மக்களின் வரலாற்றுப்புள்ளி சங்க மரபிலிருந்து தொடங்கிய ஒன்றாகும். இடைக்காலங்களில் களப்பிரர், பல்லவர், நாயக்கர், முகமதியர், கிறிஸ்தவர் என்று பல்வேறு ஆட்சியாளலர்களால் தமிழகம் ஆட்சி கண்டது. ஆனாலும் ஒரு நாட்டின் - பிரதேசத்தின் வரலாற்றை அதன் பூர்வகுடிகளைத் தவிர்த்து எழுதினால் அது சவலைப் பிள்ளையின் வரலாறாகவே அமையும். எனவே தமிழ் நாட்டின் பூர்வகுடிகளான வேட்டுவர் வரலாறு முழுமையாக எழுதப்படுவதன் மூலம் தமிழக வரலாறும் ஊட்டச்சத்து மிக்கதாக அமையும்.

தொல்குடி வேட்டுவர்களின் தொடக்ககால வேளாண்மையும் தனித்துவமடைந்த நெற்பயிரும்

க. பிரவீன்குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்.
தஞ்சாவூர்-613010
அலைப்பேசி : 9894367413
thamizharivu777@gmail.com

முன்னுரை

கற்காலத்தை முக்காலமாக வகுத்துக் கொள்ளுதலின் அடிப்படையில் மனித இனம் முழு அளவிலும் வேட்டைச் சமூகமாக இருந்தனர் என்பது அறிவியலாளர்களின் கருத்து. வேட்டுவர்கள் முதன்மையாக குறிஞ்சி மற்றும் முல்லை நிலங்களில் வாழ்வாதாரத் தினைக் கொண்டிருந்தாலும், காலப்போக்கில் நெய்தல் நில வேட்டுவர்களாகவும் பரவினர். இடைக்கற்காலத்தில் குழுவாகப் பிரிந்து வாழத் தொடங்கிய நிலையில் இடத்திற்கேற்றவாறான வேளாண் முறைகள் தோற்றம் பெற்றதனால், அதற்கேற்ற விரிவடைந்த பண்படுத்தப்பட்ட நிலங்களும் தேவையெனப்பட்டது. இது மருதநிலம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்ததெனலாம். புதிய கற்கால சூழலில் வேளாண்முறைகளென்பது பல்வேறு வகையில் மாற்றமடைந்திருந்தாலும், முதற்சமூகமாக விளங்கிய வேட்டுவர் சமூகத்தின் தொடக்ககால வேளாண் முறைகளே நாகரிக வளர்ச்சியின் முதற்புள்ளி. இவற்றை மையக்கருத்தாகக் கொண்டு, தமிழில் முதல் இலக்கியங்களாக கிடைக்கப்பெற்றுள்ள

சங்கப் பனுவல்களைக் கொண்டும், அறிவியலாளர் மற்றும் மூதறிஞர்களின் கருத்துக்களின் வழி நின்றும், ஆய்வில் கிடைக்கப்

பெறும் தரவுகளைப் பின் வரிசையிலும் முடிபினை இறுதியிலும் காணலாம்.

சங்கப்பனுவல்கள் வழி - வேட்டுவர்

மக்களின் அடிப்படை வாழ்க்கைமுறைத் தொடங்கி உயர்மட்ட வாழ்வாதாரம் வரையில் மீளப்பார்க்க வேண்டுமெனில், அம்மக்கள் சார்ந்த அடிப்படை இலக்கியங்களை நுண்ணோர்ந்து காண்பதே ஆய்வின் முறைமையாக அமையும். அவற்றின் அடிப்படையில் தமிழில் கிடைக்கப்பெற்றுள்ள சங்க இலக்கியங்கள் என அறியப்படும் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு ஆகிய பதினெட்டு நூல்களின் வழிநின்று வேட்டுவர்கள் குறித்த செய்திகளை அறிய முற்படுவது சிறந்த ஒன்றாக அமையுமெனக் கொள்ளலாம். சங்கப் பனுவல்களின் வழி நோக்கினோமானால் குறிஞ்சி மற்றும் முல்லை நில வேட்டுவர்கள் விலங்கின வேட்டைத்தொழிலையும், நெய்தல் நில வேட்டுவர்கள் மீன்பிடித்தல் முத்துக்குளித்தல் போன்ற வேட்டைத் தொழிலையும் மேற்கொண்டு வந்ததாக அறிய முடிகிறது.

குறிஞ்சி மற்றும் முல்லை நில வேட்டுவர்கள்

வேட்டுவர் = வேட்டு + அர் = வேட்டு+வ்+அர் = ஆடூஉ உத்திணைப் பெயர்

எனக்கொள்ளப்படுகிறது. செந்தமிழ் இயற்கை சிவனிய நிலத்தின் குறிஞ்சி முதலான நிலங்களில் வாழும் வேட்டைத்தொழில் செய்யக்கூடிய மாந்தர் எனப் பொருள் கொள்ளலாம். தலைவி ஒருவள் முயல் ஒன்றிடம் வேடன் வந்தால் அகப்பட்டு விடுவாய் எனப் பிதற்றுகிறாள்.இதனை,

“வேட்டுவர் உள்வழிச் செப்புவேன்; ஆட்டி, (கலி*ஙி* 144)

என கலித்தொகை அடிகளானது எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. பொருள் அளித்த தலைமகன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியதாக,

“சிறைகு விந்திருந்த அற்றினை பைதல் வெண்குருகு
பார்வை வேட்டுவன் காழ் களைந்தருள” (நற்- 312)

எனும் நற்றிணை அடிகள் குறிப்பிடுவதனைக் காண முடிகிறது.

வேட்டுவர்கள் பழக்குதலுக்கு உட்படுத்தி வைத்திருக்கக்கூடிய குருகினுடைய கால் கட்டினை அவிழ்த்து விடும் நேரத்தில் அதன் தன்மையினை, தலைவியோடு தலைவன் இருக்கும் தன்மையோடு கழார்க்கீரன் எயிற்றியார் ஒப்பிட்டுள்ளார்.

"கைம்மான் வேட்டுவன் கனை துயில் மடிந்தென"
மற்றும் (புறம்-320)

இவ்விடந்தனில் கைம்மான் என்பது யானை எனப் பொருள் கொள்ளப்படுகிறது. பழங்கள் நிறைந்திருக்கக்கூடிய பலாமர நிழலில் யானை வேட்டுவன் ஒருவன் உறங்குவதாக, தலைவனின் சிறப்பு குறித்து கூற முற்படும் நோக்கில் வீரை வெளியினார் இயற்றிய மேற்கண்ட புறநானூற்றுப் பாடல் வரிகள் அமைந்துள்ளது. நல்வினைகளைச் செய்ய அச்சப்படுதலாகா தென்பதனை,

"யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங் கையும் வருமே
அதனால், உயர்ந்தவேட்டத்த உயர்ந்திசினோர்க்கு" (புறம்-214)

விலங்கினத்தில் அச்சுறுத்தும் வகையில் பெரிய வடிவமைப் பினையுடைய யானையினை வேட்டையாடச் செல்லும் வேட்டுவர்கள் அதனைப் பெறவும் இயலும்? அதே கணத்தில் சிறிய பறவைகளை வேட்டையாடச் செல்லும் வேட்டுவர்கள் அதனை இழக்கவும் இயலும். ஆதலால் உயர்ந்ததை உள்ளி ஊக்கம் கொள்ளுதல் வேண்டுமென வடக்கிருந்து உயிர் துறந்த கோப்பெருஞ்சோழன் சொல்லியதாக மேற்கண்ட புறநானூற்றுப் பாடல் அமைந்துள்ளதனைக் காண முடிகின்றது. மேற்கண்ட சங்கப் பாடல்கள் விளம்பியதன் அடிப்படையில் குறிஞ்சி மற்றும் முல்லை நிலங்களை சேர்ந்த வேட்டுவர்கள் விலங்கின வேட்டைகளை முதன்மைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் என்பதை புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

நெய்தல்நில வேட்டுவர்கள்

குறிஞ்சி மற்றும் முல்லை நிலங்களில் கூடி வாழ்ந்த வேட்டுவர்கள் குழுக்களாகப் பிரிந்து நெய்தல் நிலங்களில் பரவிய போது தங்கள் தொழில்தனிலிருந்து மாற்றம் பெற்று கடல் சார்ந்த மீன்பிடித்தல், முத்துக்குளித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட வேண்டிய காலச் சூழல்கள் ஏற்பட்டதாகக் கருதலாம். நெய்தல் நிலத்தில் வாழ்ந்த வேட்டுவர்கள் திமில் வேட்டுவர்கள் என்று அழைக்கப்பட்டதற்கானக் குறிப்புகள் சங்க இலக்கியங்களின் வழி கிடைக்கலாகின்றன. திமில் என்பது நீரினைக் கடப்பதற்கு உதவும் ஒருவகைக் கலன் என உரையாசிரியர்களால் பொருள் கொள்ளப்படுகிறது. தமிழ் அகராதி

நூல்களில் திமில் என்றால் திமிங்கலம் எனவும் பொருள் கொள்ளப்படுகிறது.

"குளிப்பொ தும்பர் நளித்தூவ
னிரைதிமில் வேட்டுவர் கரைசேர் கம்பலம் (மதுரை- 115,116)

கடலிடைபட்டு மீன்பிடித்தல் தொழிலில் ஈடுபட்டிருந்த வேட்டுவர்கள் திமில் என்னும் படகு போன்ற ஒரு கலனைப் பயன்படுத்தியதனை மேற்கண்ட மதுரைக்காஞ்சி பாடலின் மூலம் அறியலாம். கடலுக்குள் வேட்டையாடச் சென்றிருந்த தமது தமையன்மார்களின் படகுகள் விரைவில் கரை திரும்பிவிடுமென நெய்தல் நில மகளிர் நம்பிக்கை கொண்டிருந்ததனை,

"பன்மீன் வேட்டத் தென்னையர்திலே" (குறுந் - 123)

என மேற்கண்ட குறுந்தொகை அடிகள் எடுத்தாளுவதனைக் காணமுடிகிறது.

"திமில் மேற்கொண்டு திரைச்சுரம் நீந்தி" (குறுந் - 5)

திமில் எனும் படகினைப் பயன்படுத்தி சுறா மீன் போன்ற பெரிய வகை மீன்களைப் பிடிக்க கடற்பரப்பின் கண்ணே தலைவன் கடந்து சென்றதாக மேற்கண்ட குறுந்தொகைப் பாடலின் வழி அறியமுடிகிறது. இனமீன் வேட்டுவர்கள் கழியில் மலர்ந்த நீலமலரையும் கரை மரத்தில் மலர்ந்த ஞாழல் மலரையும் சூடிக்கொள்ளும் பழக்கமுடையவர்கள். புலால் நாற்றம் வீசும் சிறுகுடிப்பாக்கத்தில் வாழ்ந்தவர்கள் என்பதனை ,

" இனமீன் வேட்டுவர் ஞாழலோடு மிலையும்" (அகம் - 270)

மேற்கண்ட கலித்தொகைப் பாடல் வரிகளின் மூலமாக அறியலாம். சான்றாதரமாய் எடுத்தாளப்பட்ட மேற்கண்ட சங்கப் பாடல்களின் வழி குறிஞ்சி மற்றும் முல்லை நிலத்தில் வாழ்ந்த வேட்டுவர்கள் நெய்தல் நிலத்திற்கு பரவி வந்த நிலையில், மீன்பிடித்தல், முத்துக்குளித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டதனையும் திமில் என்ற குறிப்பிட்ட நீர்க்கலனை பயன்படுத்தியதால் திமில் வேட்டுவர்கள் என அழைக்கப் பட்டதனையும் அறிய முடிகிறது.

வேளாண்மையின் தொடக்க நிலையும் நெற்பயிரின் தனித்துவமும்

பழங்கற்காலத்தில் ஆண்கள் வேட்டைக்குச் சென்று விலங்குகளை வேட்டையாடியும், பெண்கள் காடுகளுக்குச் சென்று தாவரங்களிலிருந்து

கிடைக்கக்கூடியவற்றைக் கொண்டும் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு வந்துள்ளதனை முற்கால ஆய்வுகள் மூலம் அறிய முடிகிறது. இரண்டாம் கட்டமாக இடைக்கற்காலத்தில் அடியெடுத்து வைக்கும் சூழலில் மனிதர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு குழுவாகப் பிரிந்து வாழத் தொடங்கினர். இதுவே நாகரிகத்தின் வளர்ச்சிக்கு அடிக்கோலியதாகக் கொள்ளலாம். பின்னர் நாளடைவில் உணவுப் பற்றாக்குறை மற்றும் இடத்தின் சூழல் அடிப்படையில் வேட்டைத் தொழிலென்பது எல்லாவிடத்திற்கும் பொருந்தா சூழலை ஏற்படுத்தியது. அதன் விளைவால் காலம், இடம் போன்ற சூழல்களுக்குத் தகுந்தாற்போல் தானிய வகைகளையும் பயிர் வகைகளையும் உற்பத்தி செய்யும் நிலை ஏற்பட்டதன் பின்னர் இடத்தினை உருவாக்கி தேவைக்கும் அதிகமான விளைச்சலைப் பெருக்கி சேமித்து வைக்கவும், பண்டமாற்று முறை செய்யவும் தொடங்கினர். இட அடிப்படையில் நீராதாரத்தை மையமாகக் கொண்டு நன்செய் புன்செய் என நிலம் இருவகையினதாகப் பிரித்துக் கையாளப்பட்டது. நன்செய் நிலமானது பாசன முறைகளை ஆதரமாகக் கொண்டும் புன்செய் நிலமானது மழையினை மட்டுமே ஆதாரமாகக் கொண்டும் விளங்கி வந்தன. இவற்றின் அடிப்படையில் வேளாண்மை என்பது மேன்மேலும் பல்வேறு பரிணாமங்களில் வளர்ச்சிப் படிநிலைகளை அடைந்தது. இந்தியாவை இரு பகுதிகளாக பிரித்துக் கொள்ளுதலின் அடிப்படையில் வட இந்தியப் பகுதிகளில் வெப்பநிலை குறைவாகவும் குளிர்நிலை அதிகமாகவும் காணப்படுவதால் உடல்நிலைக்கேற்றார் போல் அங்கு நீரேற்றம் குறைந்த பயிர் வகைகள் அதிகமாக பயிரிடப்பட்டதாகக் கொள்ளலாம். தென்னிந்தியப் பகுதிகளில் வெப்பநிலை அதிகமாகவும் குளிர் நிலை குறைவாகவும் இருப்பதன் காரணமாக நீரேற்றம் மிகுந்த பயிர்கள் அதிகமாக பயிரிடப்பட்டதாகக் கொள்ளலாம். இதன் அடிப்படையில் தமிழகத்தில் திணை, சாமை, வரகு போன்ற பல்வேறு தானிய வகைகள் அதிகமாக பயிரிடப்பட்டிருந்தாலும் அனைத்து நிலங்களிலும் நெற்பயிரின் தேவை என்பது இன்றியமையாத ஒன்றாக உருவெடுத்தது. நெற்பயிரில் உள்ள அதிகமான நீர் ஏற்றம், குறைந்த பண்படுத்துதலில் அதிகமான விளைச்சல், எக்கால கட்டத்திலும் பயன்படுத்தும் தன்மை, ஏற்றமிகு ஊட்டச்சத்துக்கள் போன்ற காரணிகளால் அதிகமாக விளைவிக்கப்பட்டது. தொல்குடி வேட்டுவர்கள் நெற்பயிரை முதன்மை உணவாகக் கடைபிடித்துள்ளனர் என்பது சங்க இலக்கியங்கள் மூலமாகவும், அகழாய்வுகளின் வழியும், கிடைக்கலா கின்றது. வேட்டுவர்கள் காடுகளில் அலைந்து நாய்களின் உதவியுடன்

வேட்டையாடிய மான் தசைகளைக் கொடுத்துவிட்டு நெற்பயிரை வாங்கிச் சென்ற பண்டமாற்று முறையினை,

“கான் உறை வாழ்க்கை, கத நாய், வேட்டுவன்
மான் தசை சொரிந்த வட்டியும், ஆய்மகள்
தயிர் கொடு வந்த தசும்பும், நிறைய,
ஏரின் வாழ்நர் பேர் இல் அரிவையர்,
குளக் கீழ் விளைந்த களக் கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப, உகந்தனர் பெயரும்
தென்னம் பொருப்பன் நல் நாட்டுள்ளும்,
ஏழ் எயில் கதவம் எறிந்து, கைக்கொண்டு, நின்
பேழ்வாய் உழுவை பொறிக்கும் ஆற்றலை;” (புறம் - 33)

என மேற்கண்ட புறநானூற்றுப் பாடலின் வழி அறிய முடிகிறது. மான் தசைகளுக்கு ஈடாக நெற்பயிரை வாங்கிச் சென்ற முறைமை அவற்றிற்கான அலாதிய முக்கியத்துவத்தினை கண்முன் நிறுத்துகின்றது. இதன் வழி தொல்குடி வேட்டுவர்கள் வேளாண்மைக்கு அளித்த முக்கியத்துவமும் அவற்றில் குறிப்பாக நெற்பயிருக்கு அளித்த தனித்துவமும் புலனாகின்றது.

முடிவுரை

காலத்தின் சுழற்சியாலும் சூழ்ச்சியாலும் இவ்வுலகம் செயற்கை நிகழ்வுகளோடு இணைந்து பல்வேறு நிலைகளுக்கு மாற்றம் பெற்றிருந்தாலும், இயற்கைக்கு நிகரான ஒன்று இப்பேரண்டத்தில் தோன்றப்போவதில்லை. ஒரு இனம் சிறந்த வளர்ச்சி நிலைகளை அடைய வேண்டுமெனில் முதலாவதாக அந்நிலம் சார்ந்த இயற்கையோடு இயைந்த வேளாண்மையானது தழைத்தோங்கியிருத்தல் வேண்டும். தொல்குடி வேட்டுவர் சமூகம் இயற்கையினை மட்டும் அடிப்படைத் துணையெனக் கருதி பழங்கற்காலத்தில் வேட்டை தொழிலிலும், இனக்குழுக்களாகப் பிரிவுற்ற பின்னர் இடைக்கற்காலம் தொடங்கி வேளாண் தொழிலிலும், ஈடுபட்டு சமூக முன்னேற்றத்திற்கான மையக்கருவாகத் திகழ்ந்துள்ளனர். வேளாண்மையில் பெரும்பங்காற்றும் விதமாகவும், காலநிலை மாற்றங்கள், நில அமைப்பு முறைகள் எனப் பல்வேறு சூழல்களைக் கடந்தும், அடிப்படையில் தொல்குடி வேட்டுர் சமூகத்தின் முக்கியக் காரணியாக தனியிடத்தினைப் பெற்று விளங்கியதென்பதில் சிறு இடறலுமில்லை.

துணைநூற் பட்டியல்

1. செ.இராசு, (2008) வேட்டுவர் சமூக ஆவணங்கள், ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை, ஈரோடு - 638 455.

2. புலியூர்க் கேசிகன் உரை:, (2010) புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை-14 .

3. ஆ.தனஞ்செயன், (2023) சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலியலும், பரிசல் புத்தக நிலையம், சென்னை- 06

4. புலியூர்க் கேசிகன் உரை:, (2010) அகநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை-14.

5. புலியூர்க் கேசிகன் உரை: (2010) நற்றினை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை-14 .

6. உ.வே.சாமிநாத ஐயர் உரை: (2013) கலித்தொகை, கழக வெளியீடு.

7. புலியூர்க் கேசிகன் உரை: (2010) குறுந்தொகை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை-14 .

8. சி.நடேசன், (1998) சங்க இலக்கியத்தில் வேளாண்மை.

கோயில் கல்வெட்டுகள் சுட்டும் வேட்டுவர்கள்

எஸ்.ரங்கசாமி
நிர்வாகக்குழு உறுப்பினர்
ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை
அலைப்பேசி : 97157 52680

கல்வெட்டுகள்

நமது முழுமையான வரலாற்றை நம் கண்முன்னே கொண்டு வந்து காட்டும் காலக் கண்ணாடி கல்வெட்டுகள் ஆகும். நமது உண்மை வலாற்றை அறிய உதவும் பல்வேறு சான்றுகளில் கல்வெட்டுகள் மிக முக்கியமானவை. கல்லில் வெட்டப்பட்ட எழுத்துக்களைக் கல்வெட்டுகள் என்று கூறுகிறோம். கல்லில் எழுத்துக்களைப் பொறித்தால் அவை நீண்டகாலம் அழியாமல் நிலைத்து நிற்கும் என்பதை முன்னோர் கண்டனர்.

"நல்லார் ஒருவர்க்குச் செய்த உபதேசம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே"

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"

- என்ற தொடர்கள் இதனை விளக்கும்.

கோயிலுக்குக் கொடுத்த கொடைகளையும், கோயிலில் செய்த திருப்பணிகளையும், சபையார் ஊரார் - கோயில் நிர்வாகிகள் எடுத்த முடிவுகளையும், அரசனது ஆணைகளையும் கோயிலில் கல்வெட்டுக் களாகப் பொறித்து வைத்தனர். மறு உலகின் புண்ணியத்தின் பொருட்டும், இவ்வுலகில் புகழ் பெறுவதன் பொருட்டும் வெட்டி வைத்த கல்வெட்டுகளே நமக்கு அக்கால வரலாற்றைக் கூறுகின்றன.

பெரும்பாலும் கொங்கு நாட்டிலும், கொங்கு நாட்டை ஒட்டிய பகுதிகளிலும் வேட்டுவர்கவுண்டர்கள் கல்வெட்டுகள் நூற்றுக்கும் அதிகமாக கிடைத்துள்ளன. நடுகற்களும், புலிகுத்தி கல்வெட்டுகளும் வேட்டுவர்கவுண்டர்கள் சமுதயாதில் மிகுதியாக உள்ளன. இவை

வீரத்தின் விளைநிலமாக இவர்கள் இருந்ததைக் காட்டுகிறது. மாற்றார் படையெடுப்பின் போது போரிட்டு வீரமரணம் அடைந்த புகழ்மங்கலம் (இன்றைய பழமங்கலம்) கரையவேட்டுவர் சமூகச் சொக்கனேந்தல் நடுகல்லில் அவரது பெருமையும் புகழும் வெண்பா வடிவில் பொறிக்கப்பட்டிருப்பது மிகவும் சிறப்புக்குரியது. தென்னிந்தியாவில் வெண்பா வடிவில் பொறிக்கப்பட்ட நடுகல் இது ஒன்றேயாகும்.

கரைய வேட்டுவர் நடுகல்

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், பழமங்கலம் நத்தக்காடு வேடன் சாமிகல். காலம் :கி.பி. 10ஆம் நூற்றாண்டு

செய்தி : எதிர்த்த பகைவர்களைக் கொன்று வென்ற கரையகுலச் சொக்கன் வீரமரணம் அடைந்தான். அவனுக்கு நடுகல் எடுத்துப் பீடும், பெயரும் எழுதப்பட்டுள்ளது. செய்தி வெண்பா வடிவில் எழுதப்பட்டிருப்பது வேறு எங்கும் இல்லாத சிறப்பாகும். இந்நடுகல் அமைப்பில் கோயில் போல அமைக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுச் செய்தி

வாய்த்த புகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரைச் சாய்த்தமருள் வென்ற சயம்பெருக - சீர்த்தபுகழ் நிக்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரையகுலச் சொக்கனேந்த லே உலகில் தான் இக்கற்பொறி இரக்ஷிப்பான் ஸ்ரீபாதம் எந்தலைமேலே.

அய்யனார்கல்வெட்டு

காவலர் குறும்பிள்ளர் என்ற வேட்டுவர் தலைவன் 1203 ஆம் நூற்றாண்டில் அய்யனார் சிலை படிமத்தை அமைத்தார்.

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஈங்கூர் குட்டைத் தோட்டம். காலம் : குலோத்துங்க சோழனின் ஏழாவது ஆட்சியாண்டு; கி.பி. 1203

செய்தி : வேட்டுவர் காவலர் குறும்பிள்ளரில் போத்தன்செய்யான் ஆன குலோத்துங்கப் பல்லவரையன் அய்யநார்படிமத்தை அமைத்தார். (இப்போது கல்வெட்டும் அய்யனார் படிமமும் ஈரோடு கலைமகள் பள்ளி அருங்காட்சியகத்தில் உள்ளது)

கல்வெட்டுச் செய்தி

1. ஸ்ரீ நன்மங்
2. கலஞ்சிறக்க
3. ஸ்ரீ கொலோத் துங்கசோழதே
5. வர்க்குத்திருவெ
6. முத்திட்டுச் செல்
7. லாநின்றதிருநல்லி
8. யாண்டுஏழாவது
9. மேல்கரைப்பூந்து
10. றை நாட்டு ஈங்கை
11. யூரிலிருக்கும்காவ
12. லன்கும்பில்லரில்
13. போத்தன்செய்யானான
15. அய்யநாரை எழுந்தருளு வித்ததன்மம்.

கல்வெட்டில் வேட்டுவர் ஆட்சி அதிகாரம், பக்தி, கொடை, பெண்களின் நிலை.

புல்லை வேட்டுவர்கல்வெட்டு வேட்டுவர் ஆட்சி அதிகாரம் பற்றிக் கூறுகிறது.

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், வெங்கம்பூர் சோழீசுவரர் கோயில் முன்பு கிடக்கும் கல். காலம் : வீரபாண்டியனின் இரண்டாம் ஆட்சியாண்டு; கி.பி. 1267

செய்தி: புல்லை வேட்டுவர் வானவதரையன் வலங்கை வாழ வந்தானான சுந்தரபாண்டிய வீரசிங்கதேவனுக்கு வெங்கம்பூர் கொடையாக அளிக்கப்பட்டது. அவர் வெங்கம்பூரில் வசூலாகும் பணத்தை சிவன்கோயில் அமுதுபடிக்குத் தந்தார். இவர் வரிவசூலிக்கும் உரிமை உடைய ஊர் ஆட்சி தலைவராக இருந்துள்ளார்.

கல்வெட்டு:

1. (ஸ்வஸ்தி) ஸ்ரீ கோவிரா
2. சகேசரிபன்மரான திரிபு
3. வனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீ

4. ர பாண்டிய தேவற்குயாண்டு
5. 2வது மேல்கரையரையநாட்
6. வெண்கம்பூரில் புல்லை வே
7. ட்டுவரில்வானவதரையன்
8. வலங்கை வாழவந்தானான
9. சுந்தரபாண்டியவீரசிங்
10. க தேவனேன் நாயனார் வீ
11. ரபாண்டிய தேவ
12. ரெனக்கிவ்வெண்
13. கம்பூரைத்தருகையில்இவ்
14. வூர்தரகை இவ்வூர்நாயனா
15. ர்வீரசெயங்கொண்டசோ
16. ழீச்சுரமுடையார்க்கும்சிவ
17. காமிஅம்மைக்கும் சந்தி
18. க்கு அமுது படித்தரம்
19. குடுத்தேன்சுந்தர பாண்
20. டியவீரசிங்கதேவனே

வேட்டுவர் நீர்மேலாண்மை:

நீரை நிலத்தோடு சேர்ப்பார் புகழே உலகில் நிலைத்து நிற்கும் என்று குடபுலவியனார் என்ற சங்கப் புலவர் பாடினார். அதற்கேற்ப நீர்வளம் பெருக்கிய வேட்டுவர் சமூகத்தார் பலர் இலக்கியங்களிலும் செப்பேடுகளிலும் புகழப்படுகின்றனர்.

மதுரைத் திருமலை நாயக்கர் காலத்தில் வடகரைஆற்றூரில் அல்லாளன் இளையநாயக்கர் என்பவர் ஆட்சி செய்து வந்தார். அவர் வேட்டுவர் சமுதாயத்தில் பரமத்திச் சீமை மூளை கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்று செப்பேடு கூறுகிறது. நாயக்கர் என்பது மதுரை நாயக்கர் அளித்த பட்டப்பெயர்.

காவிரியாறு கொங்கு நாட்டின் வழியாகச் சென்றாலும் அந்த ஆறால் கொங்கு நாட்டுக்கு ஒரு பயனும் இல்லை. கொங்கு நாட்டில் காவிரி பள்ளத்தில் ஓடுகிறது. நிலம் மேடாக உள்ளது. யார் முயன்றும் காவிரி நீரைக் கொங்கு நாட்டில் பாசனத்திற்குப் பயன்படுத்த முடியவில்லை.

ஆனால் அல்லாளன் இளையநாயக்கர் காவிரியின் கிழக்குக்கரையில் சேடர்பாளையம் என்னும் இடத்தில் காவிரி நீரைப்பாய்ச்சும் வகையில் அணை கட்டி வாய்க்கால் வெட்டி ஏற்பாடு செய்தார். அந்த வாய்க்கால் ராசவாய்க்கால் என்னும் பெயரில் இன்றும் நல்ல பயன்பாட்டில் உள்ளது. ராசாவாக ஆட்சியுரிமை பெற்று ஆட்சி செய்த அல்லாளன் இளையநாயக்கர் பணி காரணமாக இன்றும் அவ் வாய்க்கால் ராச வாய்க்கால் என்ற பெயரோடு விளங்குகிறது.

அவர் செய்த பெரும் பணியைக் கொங்கு மண்டலசதகம்;

"வடமுக நின்றும் வருகாவிரியின் வளத்தை என்றும்
திடமுறு கொங்கினும் பாசனமாகச் செலப்பிரித்த

அடல்கொள் அல்லாளன் இளையான் பெருக்கம் அமைந்துவளர்
வடகரைஆற்றூர் திகழ்வதுவும் கொங்குமண்டலமே"

என்று புகழ்கிறது

மற்றொரு தனிப்பாடலும் அல்லாளன் இளைய நாயக்கர் புகழைப் பாராட்டிக் கூறுகிறது.

"மூவருக்கும் அகத்தியமாமுனிவருக்கும் அரசிருந்த
முன்னை யோர்க்கும் தேவருக்கும் திரும்பாத
காவிரியைக் கொங்கேற்றித் திறைகொண்டாயே
பூவிருக்கும் உரமாயன் கடலடைத்தான் அவன்
வேடம் புனைந்தவாறோ யாவருக்கும் இளையானே
அல்லாளன் திருமலையா ஈகையோனே"

என்பது அப்பாடலாகும். திருச்செங்கோட்டுத்திருப்பணிமாலையும் இவர் புகழ் பாடுகிறது. அல்லாளன் இளையநாயக்கருக்கு முன்னரே கொங்கு நாட்டில் பல வேட்டுவ அரசர்கள் ,உராளிகள் குறுநில மன்னர்கள் மக்கள் நலம் பேண நீர்நிலைகளை ஏற்படுத்தியுள்ளனர். மோடமங்கலம் பூச்சந்தைவேட்டுவர் பெரிய பெருமாள் முத்தாண்டான் என்பவர் வடபரிசாரநாட்டுக் கப்பலன்கிடாரன் என்னும் ஊரில் குளம் ஒன்றை வெட்டி அதற்குத் “தாமரைக்குளம்” என்று பெயரிட்டார். குளவாற்றூர் ஊராளி செம்பவேட்டுவரில் தொண்டயன் பள்ளான் ஆன செயங்கொண்ட சோழக்கொங்காள்வான் குளம் (கொடிவேரி அணை கட்டி நீர்ப்பாசனம் செய்ய வாய்க்கால்களும் அமைத்தார்.

செம்பவேட்டுவர்

இடம் : ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் வட்டம், கொடிவேரி பவானியாற்றங்கரை. காலம்: குலோத்துங்கசோழனின் 55ஆம் ஆண்டு, 12ஆம் நூற்றாண்டு

கல்வெட்டு செய்தி : குளவாற்றூர் ஊராளி செம்பவேட்டுவர் தொண்டயன் பள்ளான் ஆன செயங்கொண்ட சோழக்கொங்காள்வான் குளம் கட்டி வாய்க்காலும் வெட்டி வைத்த செய்தி கூறப்படுகிறது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்
2. துங்கசோழதேவற்
3. குயாண்டுஐம்பத்து அ
4. ஞ்சாவதுவடகரை நாட்டு
5. க்குளவாற்றூரிலிருக்கும்
6. ஊராளிசெம்பவேட்டுவ
7. ன்தொண்டயன்பள்ளா
8. நானசயங்கொண்டசோழ
9. க்கொங்காள்வானேன் இக்குள
10. ம்அட்டிக்
11. காலும் வெட்டி
12. விச்சேன் இது
13. ஆக்குவான் பா
14. தம் எந்தலைமேல்
15. இது அழிப்பான் வழி
16. அறுவான்.

முளையூரான அஞ்சாத கண்டன்நல்லூரில் மணலூர் கிழவன் சோழகோன் நல்வாளை வேட்டுவர் கிணறு ஒன்றை வெட்டி வைத்தார்.

பெரிய விலங்கி ஊராளியாகிய சுண்டைவேட்டுவர் சிலம்பன் ஒரு குளம் வெட்டி அதற்கு "அக்கசாலை(காசு தயாரிக்கும் நிறுவனம்) கங்கை" என்று பெயரிட்டார்.

வாழவந்தி இரும்புளை வேட்டுவரில் வடசேரி ஆறங்காடி குளம் ஒன்றை வெட்டினார். இவ்வாறு நீர் நிலை தந்த வேட்டுவர் சமுதாயப் பெருமக்கள் பலராவர்.

முடிவுரை

கொங்குநாட்டில் கிடைக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக் களில் கோயில் சார்ந்த கல்வெட்டுகள் எண்ணற்றவை கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றை ஆய்வு செய்யும் பொழுது கொங்குநாட்டில் வாழ்ந்துவரும் தொல்குடிகள் வேட்டுவர்கள் என்பது திண்ணம். இவர்கள் சங்க இலக்கியக் காலமுதல் வீரயுக நாயகர்களாகவும், கொடை வள்ளல்களாகவும், நடுகல் எடுத்து வழிபடும் வீரமறவர்களாகவும், அய்யனார் சிலையை அமைத்துக் கொடுத்தவர்களாகவும், நீர்நிலை அமைத்து விவசாயத்தைப் பெருக்கிய பெருந் தலைவர்களாகவும், சைவ சமயத்தை வளர்த்த தலைவர்களாகவும் நாம் அறிய முடிகிறது. இத்தகைய ஆதாரங்களை தொகுத்து வழங்கிய புலவர் ராசு அவர்களின் வேட்டுவர் சமூக ஆவணங்கள் என்ற புத்தகத்தில் கல்வெட்டாக நமக்கு ஆவணப்படுத்தியுள்ளார். அவரின் இந்தச் செயல் போற்றுதலுக்கு உரியது. அவர் தொகுத்து வழங்கிய இந்தப் நூலில் 92 கல்வெட்டு களைத் தொகுத்து வழங்கியுள்ளார். இந்த நூலை வெளியிட்ட டாக்டர் மயிலேறு ரவீந்திரன் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தக் கல்வெட்டுகளை இன்னும் ஆராய்ச்சி செய்வதன் மூலம் கொங்குநாட்டில் நடந்த வரலாற்று நிகழ்வுகளை மிகத் தெளிவாகக் கண்டுணர முடியும். அதற்கான வாய்ப்புகளும் சிறப்பாக உள்ளன. மேலும் சங்ககாலம் முதற்கொண்டு இன்றுவரை வேட்டுவர் என்ற பெயரைத் தவிர வேறு பெயர்களில் வழங்கப்படாத ஒரே இனக்குழு வேட்டுவர் இனக்குழு ஆக்கும். கடவுளுக்குக் கண் தந்தவர், முருகனுக்குப் பெண் தந்தவர் என்று புராணங்களில் கூறப்படும் தமிழ் இனக்குழு. நமது தமிழர் வரலாறுகளை வரும் தலைமுறைக்கு எடுத்துச் செல்வோம்! தமிழர் வரலாற்றைப் பேணிக் காப்போம்!

துணைநின்ற நூல்கள்:

1. தமிழ்நாட்டு வரலாறு - தொல்பழங்காலம் தமிழ்நாடு அரசு வெளியீடு.
2. தோல்மனித இனங்களும் மனிதகுல இடப்பெயர்வுகளும் -க. சுபாஷினி.
3. வேட்டுவர் வேந்தர் மரபினர் -Dr.Valaiparameswaran.MD.
4. வேட்டுவர் சமூக அவணங்கள் புலவர் செ.இராசு
5. சங்ககல மறவர் - செ.மா. கணபதி
6. அய்யன் சமூகம் தோற்றமும் வளர்ச்சியும்

ராஜ வேட்டுவரின் யானைப்படை

மருத்துவர் வாழை பரமேஸ்வரன்
ஒசூர்.
9884242351.

முன்னுரை

உலகத்தில் ஆயுதங்களைக் கண்டுபிடிக்காத காலத்தில் வாலும் வேலும் வில் அம்பும் கண்டுபிடித்து வேட்டையாடியவர்கள் வேட்டுவர். வேட்டை ஆயுதத்தையே போர் ஆயுதமாக மாற்றிப் போர் செய்தவர் வேட்டுவர். தன்னை எதிர்த்துப் போர் செய்தபொழுது யானையோடு எதிரியை எதிர்த்துப் போர் செய்தவர். அவ்வேட்டுவர் யானையை வைத்து எதிரிகளைப் பயந்து ஓடச் செய்தனர். குதிரைகளுடன் போர் செய்ய எதிரி வரும் பொழுது பல்லாயிரக்கணக்கான யானைகளைக் கொண்டு போர் செய்தனர். ஆடு, மாடு, யானை போன்ற விலங்குகளைப் பயன்படுத்தி தனது ஆநிரைச் செல்வங்களைப் பெருக்கிக் கொண்டனர். அதைக் கவர்ந்து செல்பவர்களை எதிர்த்துப் போரிட்டு அவர்களின் நாடுகளையும் கவர்ந்து கொண்டனர். இதுவே மன்னராட்சி உருவாகக் காரணமாக அமைந்தது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். சிறூர் தலைவனாக இருந்து வேளிராக மாறி வேந்தனாக மாறினார்கள். தமிழ் மொழியைக் கற்று உணர்ந்தவனாகவும் போர்த்திறன் மிக்கவனாகவும் வாழ்ந்த இவர்கள் போர்ப் பயிற்சிகளிள் சிறந்தவர்களாக இருந்தனர். தன்னை நாடிவரும் புலவர்களுக்கும் அவர்களின் பாடல்களுக்கும் அவர்களின் திறமையை உணர்ந்து பரிசுகளை வாரி வழங்கியதாகச் சங்ககாலப் புலவர்களே குறிப்பிடுகிறார்கள். இத்தகைய உயர்ந்த நிலையில் வாழ்ந்த வேட்டுவர்கள் யானையைத் தனது நாட்டுப் பெருக்கத்திற்குப் பயன்படுத்திக் கொண்டார்கள் அதைப்பற்றி பார்ப்போம்.

கரந்தை செப்பேடு

கரந்தைச் செப்பேடு, முதலாம் இராஜராஜன் யானைப்படையைப் பற்றி குறிப்பிடுகிறது. திருவலங்காட்டுச் செப்பேடு முதலாம் ராஜேந்திர

சோழன் தன் யானைக் கூட்டங்களை ஆற்றில் நிறுத்தி அவற்றைப் பாலம் போல் பயன்படுத்தியதைக் குறிப்பிடுகிறது.

அவ்வளவு சிறப்பு வாய்ந்த யானைகள் எவ்வாறு பிடிதார்கள்? எவ்வாறு வளர்த்தார்கள்? எப்படிப் பயிற்சி அளித்தார்கள்? எப்படிப் போரில் பயன்படுத்தினார்கள்? என்றும் , இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இது எப்படிச் சாத்யமாகியது? என்ற கேள்விக்குப் பதில் என்னவென்றால் வேட்டுவர்கள்தான் இந்தச் சாதனையைச் செய்தவர்கள். ஆம், அதற்கான ஆதாரங்கள் சங்க இலக்கியங்களில் மிகுதியாக உள்ளன. வேட்டுவர்கள் எதற்கும் அஞ்சாதவர்கள்; அறிவாற்றல் மிக்கவர்கள்; ஆகையால் வேட்டுவர்கள் யானையைத் தனது நண்பனாக, குடும்பத்தில் ஒருத்தனாகப் பகை மன்னர்களுடன் போர் செய்து நாட்டைப் பிடித்திடப் போர் அறிவிக்கும் போர்க்காலத் துணைவனாக மாற்றினான். ஆகோள் பூசலில் யானையைப் பயன்படுதிப் போர் செய்தவர் பெரு வேந்தர்களாக உருவாகினர்.

1. சோழன் ராஜ சூயம் வேட்ட பெருநள்ளி (புறம் 16) (ராஜ சூயம் செய்த ஆற்றல் மிக்க சோழ வேட்டுவ பெருநள்ளி) அ கோள் பூசலில் பக்கத்து நாட்டு மன்னனை குதிரை மற்றும் யானைப்படை கொண்டு தாக்கினான் என்பதை கொண்டு உணரலாம் மேலும் இம்மன்னனை முருகக் கடவுளுடன் ஒப்பிடுகிறார் புலவர் இதன் மூலம் இவர் வேட்டுவ மன்னன் என்பதை உணரலாம் (புறம் 16)

வினை மாட்சிய விரை புரவியொடு,
மழை யுருவின தோல் பரப்பி,
முனை முருங்கத் தலைச் சென்று,
அவர் விளை வயல் கவர்பு ஊட்டி,
மனை மரம் விறகு ஆகக்
கடி துறைநீர்க் களிறு படீஇ,
எல்லுப்ப இட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரின் தோன்றப்,
புலம் கெட இறுக்கும் வரம்பில் தானைத்,
துணை வேண்டாச் செரு வென்றிப்,
புலவு வாள் புலர் சாந்தின்

முருகன் சீற்றத்து, உருகெழு குருசில்
மயங்கு வள்ளை, மலர் ஆம்பல்,
பனிப் பகன்றைக் கனிப் பாகல்,
கரும்பு அல்லது காடு அறியாப்
பெருந் தண்பணை பாழ் ஆக.
ஏமநன் னாடு ஒள்ளி ஊட்டினை,
நாம நல்லமர் செய்ய,
ஓராங்கு மலைந்தன, பெரும! நின் களிறே

இவ்வேட்டப் பெருநள்ளி ஆற்றல் மிக்க பெரும்படை யொன்று இருந்தது. பகைவர் நாட்டை விரைந்து குதிரைமேற் சென்று வென்று, அவர்தம் நெல் விளையும் கழனியைக் கொள்ளையிட்டு, வீடுகளை இடித்து எரியூட்டிக் காவற்குளங்களில் யானைகளை இறக்கி அழித்துக், கொடும் போர் புரியும் திறம் மிகுந்தது படை. அது சென்ற பகைவர் நாடு சுடுநெருப்பால் வெந்து செக்கர் வானைப் போலச் செந் தீ ஒளிபரப்பிக் கொண்டிருக்கும். 'துணை வேண்டாது தனித்தே போரிடும் பெரிய படையினது வலுவும், புலால் நாற்றம் நாறும் கொலைவாளும், பூசிப் புலர்ந்த சாந்தும், முருகனைப் போன்ற வெஞ்சினமும் உடைய அச்சம் ஊட்டுந் தலைவனே! வளமிகுந்த நல்ல நாட்டை, நின்னோடு மாறுபட்டவர் நாடு என்பதற்காக இவ்வாறு எரியூட்டிக் கொடுமை செய்தனையே! நின் குதிரைப் படையுடன் சேர்ந்து களிற்றுப் (யானை) படையும் அழித்தனவே'' எனினும் 'புலவர்பால் மட்டும் நீ அன்புடையாய்' உள்ளாய் நீ நன்றாக இருப்பாயக என்று கூறுகிறார்.

2) காடிய நெடுவேட்டுவன் யானைகளையும் பொன்னையும் வாரி வழங்கினான். இவனை மூவேந்தரை விட மதிப்பு மிக்கவனாகப் புலவர்கள் குறிபிடுகிறார்கள். (புறம் 205)

முற்றிய திருவின் மூவர் ஆயினும்,
பெட்பின்றி ஈதல் யாம்வேண் டலமே
விறற்சினம் தணிந்த விரைபரிப் புரவி
உறுவர் செல்சார்வு ஆகிச், செறுவர்
தாளுளம் தபுத்த வாள்மிகு தானை
வெள்ளீவேலிக் கோடைப் பொருந!

சிறியவும் பெரியவும் புழைகெட விலங்கிய
மான்கணம் தொலைச்சிய கடுவிசைக் கத்நாய்
நோன்சிலை, வேட்டுவ! நோயிலை யாகுக!
ஆர்கலி யாணர்த் தரீஇய, கால் வீழ்த்துக்
கடல்வயிற் குழீஇய அண்ணலங் கொண்மூ
நீரின்று பெயரா ஆங்குத், தேரொடு
ஒளிறுமறுப்பு ஏந்திய செம்மற்
களிறின்று பெயரல, பரிசிலர் கடும்பே.

விளக்கம்: மூவேந்தரே எனினும், எம்மைப் பேணி மதியாது கொடுப்பின், அதனை யாம் வேண்டுவோம் அல்லேம். அஞ்சி வந்து அடைந்த பகைவர்க்கோர் புகலிடமாயும், எதிர்த்து வந்தவரைக் கொன்று அழிக்கும் வாள்வலி யுடையவனாயும் விளங்கும் முல்லை வேலிக் கோடை மலைத் தலைவனே! சிறிய பெரிய புழைகளிலிருந்து மான் கூட்டத்தைக் கலைக்கும் சினநாய்களும், வலிய வில்லும் கொண்ட வேட்டுவனே! கடலைச் சார்ந்த முகிலினங்கள் நீர் முகந்தன்றி மீளா; அது போலப் பரிசிலர் சுற்றம், கோடுயர்ந்த, களிறுகளை(யானைகளை) வழங்கிப் போற்றினாலன்றித், திரும்பிச் செல்லாது என அறிவாயாக!

3) காடியா நெடு வேட்டுவன்: (அகம் 13)

தன்கடற் பிறந்த முத்தி னாரமு
முனைதிறை கொடுக்குந் துப்பின் றன்மலைத்
தெறலரு மரபின் கடவுட் பேணிக்
குறவர் தந்த சந்தி னாரமு
மிருபே ராரமு மெழில்பெற வணியுந்
திருவீழ் மார்பின் றென்னவன் மறவன்
குழியிற் கொண்ட மராஅ யானை
மொழியி னுணர்த்துஞ் சிறுவரை யல்லது
வரைநிலை யின்றி யிரவலர்க் கீயும்
வள்வா யம்பிற் கோடைப் பொருநன்
பண்ணி தைஇய பயங்கெழு வேள்வியின்
விழுமிது நிகழ்வ தாயினுந் தெற்கேர்ப்பு

கழிமழை பொழிந்த பொழுதுகொள் ளமையத்துச்
சாய லின்றுணை யிவட்பிரிந் துறையி
னோயின் றாக செய்பொருள் வயிற்பட
மாசிற் றூமடி விரிந்த சேக்கைக்
கவவின் புறாமைக் கழிக வளவய
லழனுதி யன்ன தோகை யீன்ற
கழனி நெல்லின் கவைமுத லலங்க
னிரம்பகன் செறுவில் வரம்பணையாத் துயல்வரப்
புலம்பொடு வந்த பொழுதுகொள் வாடை
யிலங்குபூங் கரும்பி னேர்கழை யிருந்த
வெண்குருகு நரல வீசும்

விளக்கம்: தன்னுடைய தென்கடலில் உண்டான முத்தினால் ஆகிய மாலையும், பகைவர் திறைகொடுக்கும் வலிமையையுடைய தனது மலையிலுள்ள யாராலும் அழிக்கமுடியாத மரபையுடைய கடவுளாகிய முருகனுக்குப் பூசையிட்டுக் குறவர்கள் தந்த சந்தனத்தின் மாலையும் ஆகிய இரண்டு பெரிய மாலைகளையும் அழகுற அணிந்திருக்கும், செல்வம் விரும்புகின்ற மார்பின் பாண்டியனின் படைத்தலைவனான - குழியில் (விழுவைத்துப்) பிடித்த பழக்கப்படாத யானைகளை விலங்கு மொழியால் புரியவைக்கும் குறுகிய பொழுதில் அன்றி, (மற்ற நேரங்களில்) தனக்கெனக் கொள்ளும் நிலை இன்றி இரவலர்களுக்கு ஈயும், கூர்மையான வாயைக்கொண்ட அம்பினை உடைய கோடைமலைத் வேட்டுவர் அரசன் - பண்ணி என்பான் செய்த பயன் மிகுந்த களவேள்வியைப் போல (காட்டிலும்) சிறந்த பயன் நிகழுமாயினும் தெற்கே ஏறிச்சென்று மிகுந்த மழையைப் பொழிந்த ஞாயிறு கொண்ட அதிகாலைநேரத்தில் வனப்பில் இனிய துணையாகிய இவளைப் பிரிந்துபோய்த் தங்கினால், எக்குறையும் இல்லாமல் இருப்பதாக நீ ஈட்டும் பொருள்! நல்ல பக்குவமாக, குற்றமற்ற தூய்மையான மடிக்கப்பட்ட துணி விரித்த படுக்கையில் தழுவி இன்புறுதல் இன்றிக் கழிக வளமுடைய வயல்களில் தீக்கொழுந்துகளைப் போன்ற தோடுகள் ஈன்றவயற்காட்டு நெல்லின் கவைத்த அடியைக் கொண்ட நெற்கதிர் நிரம்பிய அகன்ற வயலில் வரப்புகளை அணைத்து அசைய, தனிமைத் துயரைக் கொண்டுவரும், மாலைபொழுதைக் கொண்ட வாடைக் காற்று

மின்னுகின்ற பூக்களைக் கொண்ட கரும்பின் ஓங்கி உயந்த கழையின் மீது இருந்த வெண்குருகு ஒலி எழுப்பும் அளவுக்கு வீசுகின்ற நுண்ணிய பல துளிகளைக் கொண்ட குளிர்ந்த பனிக்காலத்து நாட்கள். இம்மன்னனும் முருகனை வழிபடுவானகவும் யானைகளை பிடிது பழக்கி பரிசலிதான் மேலும் போர்களிலும் யானைக்களை பயன்படுதி உள்ளதை நாம் அறியலாம். இப்பாடலின் மூலம் வேட்டுவர் தொல்குடியினர் என்பதை அறியலாம்.

4) வேட்டுவ மன்னன் வல்வில் ஓரி தன்னை நாடி வருவோர்க்குப் பொன்னும் மணியும் அணிந்த யானையைத் தந்தான் என்பதைக் (புநானூறா பாடல் 153) குறிப்பிடுகிறது.

மழையணி குன்றத்துக் கிழவன், நாளும்,
இழையணி யானை இரப்போர்க்கு ஈயும்,
சுடர்விடு பசும்பூண், சூர்ப்புஅமை முன்கை
அடுபோர் ஆனா, ஆதன் ஓரி
மாரி வண்கொடை காணிய, நன்றும்
சென்றது மன், எம் கண்ணாளங் கடும்பே;
பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை
வால்நார்த் தொடுத்த கண்ணியும்,
கலனும், யானை இனத்தொடு பெற்றனர்; நீங்கிப்
பசியார் ஆகல் மாறுகொல்; விசிபிணிக்
இன்னியம் கறங்க,
ஆடலும் ஒல்லார், தம் பாடலும் மறந்தே !

விளக்கம்: மழையணி குன்றத்திற்குத் தலைவன்; இரப்போர்க்கு யானைகளாகவே வழங்கி மகிழ்பவன்; பொற்பூணும் கடகமும் அணிந்த கொல்போர் மறவன்; அத்தகைய வேட்டுவ மன்னன் ஆதன் ஓரியின் மழைபோலும் வள்ளிய கொடையைக் காணச் சென்றது எம் கூத்தச் சுற்றம். அவர்க்குப் பொன்னரி மாலைகளும் பிற நல்லணிகளும் யானைகளும் அவன் வழங்கினான். பசி தீர்ந்து பேரூண் உண்டு களித்தனர் அவர்கள். அதனால், இயங்களை ஒலித்து இசைக்கவும், ஆடவும் பாடவும் மறந்தவராக, அவர் பெரிதும் மாறிவிட்டனர்!

5) வேட்டுவ மன்னன் வல்வில் ஓரியின்(புறம்.152) வில் ஆற்றலையும் யானைகளை வேட்டையாடும் பாங்கினையும் நாம் அறியலாம்.

வேட்டுவ மன்னன் வல்வில் ஓரியின் சிறப்பு

வேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப்
புழல்தலைப் புகர்க்கலை உருட்டி,
உரல்தலைக் கேழற் பன்றி வீழ, அயலது
ஆழற் புற்றத்து உடும்பில் செற்றும்,
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்,
புகழ்சால் சிறப்பின் அம்புமிகத் திளைக்கும்
கொலைவன் யார் கொலோ? கொலைவன் மற்று இவன்
விலைவன் போலான் ; வெறுக்கை நன்கு உடையன்;
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்,
சாரல் அருவிப் பயமலைக் கிழவன்,
ஓரி கொல்லோ? அல்லன் கொல்லோ?
பாடுவல், விறலி! ஓர் வண்ணம்; நீரும்
மண்முழா அமைமின்; பண்யாழ் நிறுமின்;
கண்விடு தூம்பின் களிற்று உயிர் தொடுமின்;
எல்லரி தொடுமின்; ஆகுளி தொடுமின்
பதலை ஒருகண் பையென இயக்குமின்;
மதலை மாக்கோல் கைவலம் தமின்' என்று,
இறைவன் ஆகலின், சொல்லுபு குறுகி,
மூவேழ் துறையும் முறையுளிக் கழிப்பிக்,
'கோ' வெனப் பெயரிய காலை, ஆங்கு அது
தன்பெயர் ஆகலின் நாணி,
மற்று, யாம் நாட்டின் நாட்டின் வருதும்;
ஈங்கு ஓர் வேட்டுவர் இல்லை, நின்ஒப் போர்' என,
வேட்டது மொழியவும் விடாஅன், வேட்டத்தில்

தான் உயிர் செகுத்த மான்நிணப் புழுக்கோடு,
ஆன்உருக்கு அன்ன வேரியை நல்கித்,
தன்மலைப் பிறந்த தாவில் நன்பொன்
பன்மணிக் குவையொடும் விரைஇக், 'கொண்ம்' எனச்,
சுரத்து இடை நல்கி யோனே; விடர்ச்சிமை
ஓங்க இருங் கொல்லிப் பொருநன்,
ஓம்பா ஈகை விறல்வெய் யோனே

விளக்கம்: விறலியே! அருவிகள் வழியும் சந்தனச் சாரலுக்கு உரியவனான வல்வில் ஓரிதான் இவன். அம் ஏவுந்தொழிலிலே மிக வல்லவன். எனினும், விலைப்பொருட்டாகக் கொல்லும் எளியனும் அல்லன். மிக்க செல்வன். சந்தனம் பூசிப் புலர்ந்த பரந்த மார்பினன். பல இசைக் கருவிகளையும் இசைத்து இருபத்தொரு பாடல் துறையையும் பாடி வாழ்த்தும்போது வேந்தே' எனத் தொடங்கவும், தன்புகழ் தன்னெதிரே கேட்க நாணித், தொடர்ந்து நின் போன்றார் ஒருவரும் இலரே' என வாழ்த்து முன்னர், மான் தசையும் ஆநெய் போன்ற மணமுள்ள மதுவும் கலந்து ஊட்டிப், பொன்னும் மணித்திரளும் இடைவழியிலேயே எமக்கு வழங்கினான். உயர்ந்த மலைக்குத் தலைவன்; வரையாத ஈகையினை உடையவன்; வெற்றி வீரன்; வேட்டுவ மன்னன் வல்வில் ஓரி. அவன் வாழ்வானாக! என்று புலவர் வல்வில் ஓரியின் யானை வேட்டையை பற்றி குறிபிடுகிறார் யானைக்கு அம்பு எய்து புலி,, ,மான், முள்ளம் பன்றி மற்றும் உடும்பு ஆகியவற்றை ஒரே அம்பினால் ஐந்து விலங்கினைக் கொன்றான். இதன் மூலம் வேட்டுவரின் போர் மற்றும் வேட்டைத் திறனை நாம் அறியலாம். வேட்டுவ மன்னன் வல்வில் ஓரி மழவர் பெருமான் ஆவார். இவன் சேரர் மரபினன் என்று சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம் .

6) **கண்டீரம் கோபெரும் நள்ளி (புறம் 148)**

கறங்கு மிசை அருவிய பிறங்குமலை நள்ளி ! நின்
அசைவுஇல் நோன்தாள் நசைவளன் ஏத்தி,
நாடொறும் நன்கலம் களிற்றொடு கொணர்ந்து,
கூடுவிளங்கு வியன்நகர்ப், பரிசில் முற்று அளிப்பப்;
பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்

செய்யா கூறிக் கிளத்தல் எய்யா தாகின்று,
எம் சிறுநெந் நாவே.

உயர்மலை வேட்டுவர் கோமானான நள்ளியே! அணிகலன் பலவும் களிற்றுடன் கொணர்ந்து, நெற்கூடு விளங்கும் நின் நகரின் கண் இருந்து, வரும் பரிசிலர்க்கு வழங்கிக் கொண்டே இருக்கின்றாய். அதனால், எம் நாவானது, பெருமையற்ற மன்னர்பால் புகழ்ச்சி வேண்டிச் சென்று, அவர் செய்யாதன வெல்லாம் கூறிப் பொய்ம்மை யாகப் புகழாதாயிற்று.

7) வேட்டுவ மன்னன் ஆய் (அகம் 374) வேட்டைத் திறன் மற்றும் கொடைத்தன்மையையும் யானைத்தந்தம் பரிசலிது யானை வேட்டை செய்தான் என்பதை அறியலாம்.

கானல் மேய்ந்து வியன்புலத் தல்கும்
புல்வாய் இரலை நெற்றி யன்ன,
பொலம் இலங்கு சென்னிய பாறுமயிர் அவியத்
தண்பனி உறைக்கும் புலரா ஞாங்கர்,
மன்றப் பலவின் மால்வரைப் பொருந்தி, என்
தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றி,
இருங்கலை ஓர்ப்ப இசைஇக், காண்வரக்,
கருங்கோற் குறிஞ்சி அடுக்கம் பாடப்,
புலிப்பற் றாலிப் புன்றலைச் சிறா அர்
மான்கண் மகளிர், கான்தேர் அகன்று உவா
சிலைப்பாற் பட்ட முளவுமான் கொழுங்குறை,
விடர்முகை அடுக்கத்துச் சினைமுதிர் சாந்தம்,
புகர்முக வேழத்து மருப்பொடு, மூன்றும்,
இருங்கேழ் வயப்புலி வரி அதள் குவைஇ,
விரிந்து இறை நல்கும் நாடன், எங்கோன்,
கழல்தொடி ஆஅய் அண்டிரன் போல,
வண்மையும் உடையையோ?
ஞாயிறு! கொன்விளங் குதியால் விசும்பி னானே!

விளக்கம் : ஞாயிறே! எம் அரசன் ஆய் அண்டிரன் போல உன்னால் கொடை வழங்க முடியுமா? வீணாகப் பகட்டிக்கொண்டு உலவுகிறாயே -இப்படிப் புலவர் புகழ்கிறார். புலவர் குறிஞ்சி பூத்திருக்கும் ஆய் அரசனின் மலையைப் பாடினாராம். கிணைப்பறையைத் தட்டிக்கொண்டு பாடினாராம். அவன் ஊர் மன்றத்துப் பலாமர நிழலில் இருந்துகொண்டு பாடினாராம். பனிமூட்டம் நீங்காத காலை வேளையில் பாடினாராம். அந்த இசையை அங்கிருந்த கலைமான்கள் எல்லாம் உன்னிப்பாகக் கேட்டனவாம். அப்போது அவரது தலையானது காட்டிலே மேய்ந்துவிட்டு வெட்டவெளியில் படுத்துறங்கும் இரலைமான் நெற்றி போலப் பொன்-தாமரை அணியுடன் திகழ்ந்ததாம். (ஆய் வள்ளல் வழங்கிய பொன்னணி). இப்படிப்பட்ட புலிப்பல் தாலியைச்சங்ககாலச் சிறுவர்கள்தம் கழுத்தில் அணிந்திருந்தனர் புலவரோடு வந்த சிறுவர்கள் புலிப்பல்லைப் கோத்துக் கட்டிய தாலியை (தொங்கும் ஆரம்)க் கழுத்தில் அணிந்திருந்தனராம். மகளிர் மான் போல மருண்டு பார்க்கும் கண்ணோட்டம் கொண்டவர்களாம். புலவர், சிறுவர், மகளிர் மூவர்க்கும் ஆய் மூன்று வகையான பரிசில்களை வழங்கினானாம். முள்ளம்பன்றிக் கறி, சந்தனக்கட்டை, யானைத்தந்தம் ஆகிய மூன்று வகைப் பரிசுப் பொருள்கள். இவற்றைப் புலித்தோலில் குவித்துத் தந்தானாம். இறை (திறை) என்று சொல்லிக் கொடுத்தானாம். (சிற்றரரசர் பேரரசர்க்குத் தருவது இறை. இங்கே அரசன் புலவர்க்கு இறை தருகிறான்). இதன்மூலம் குறிஞ்சி நில வேட்டுவ மன்னனின் கொடைத்தன்மையை அறியலாம்.

8) அரிசி கேட்டதற்கு யானை அளித்த வேட்டுவ வேந்தன் ஆயி அண்டிரன் (புறம் 140)

தடவுநிலைப் பலவின் நாஞ்சில் பொருநன்
மடவன், மறை; செந்நாப் புலவீர்!
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை ஆக, யாம் சில
அரிசி வேண்டினெம் ஆகத், தான் பிற
வரிசை அறிதலின், தன்னும் தூக்கி,
இருங்கடறு வளைஇய குன்றத் தன்ன ஓர்
பெருங்களிறு நல்கி யோனே! அன்னதோர்

தேற்றா ஈகையும் உளதுகொல்?
போற்றார் அம்ம, பெரியோர் தம் கடனே?

செவ்விய நாவையுடைய புலவர்களே! பலா மிகுந்த இந் நாஞ்சில் மலைவேந்தன் அறியாமையே உடையான் போலும்! விறலியர் பறித்த இலை உணவின்மேல் தூவுவதற்குச் சில அரிசியே வேண்டினோம். அவனோ, எம் வறுமையை எண்ணாது, தன் மேம்பாட்டையே எண்ணியவனாக, மலை போன்ற பெரிய யானையை எமக்கு அளித்தனன். இவ்வாறு, தெளியாது கொடுக்கும் கொடையும் உலகில் உளதோ? பெரியோனான அவன் முறையறிந்து ஈதலைச் செய்யானோ! (குறை கூறுவது போலப் புகழ்ந்தது). இதன் மூலம் வேட்டுவர் வேந்தரின் கொடைத்தன்மையை அறியமுடிகிறது .

9) ஆயி அண்டிரன் (புறம்130)

விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய்! நின்னாட்டு
இளம்பிடி ஒரு சூல் பத்து ஈனும் மோ?
நின்னும் நின் மலையும் பாடி வருநர்க்கு
இன்முகம் கரவாது உவந்த ந அளித்த
அண்ணல் யானை எண்ணின் கொங்கர்க்
குடகடல் ஒட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே!

விளக்கம்: பூணாரம் பூண்டவனே! ஆயே! நின் நாட்டுப் பெண் யானை ஒருவொரு முறையும் பத்துக் கன்றுகள் விதம் ஈனுமோ? நீ இரவலர்க்குக் கொடுத்த யானைத் தொகையை எண்ணினால் கொங்கரை மேற் கடற்கண்ணே நீ போரிட்டுத் துரத்திய காலத்து, நினக்கு தோற் றோடிய கொங்கர் படையினர், தம் கையினின்றும் எறிந்து சென்ற வேலினும் பலவாகுமே!

10) யானை வேட்டையை வேட்டுவர்கள் இரவில் வேட்டையாடுதல்:

முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப்.
பந்தர் வேண்டாப் பலர்தூங்க நீழல்,
கைம்மான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தெனப்

பார்வை மடப்பிணை தழீஇப், பிறிதோர்
தீர்தொழில் தனிக்கவை திளைத்து விளையாட,
இன்புறு புணர்நிலை கண்ட மனையோள்
கணவன் (எழுதலும் அஞ்சிக், கலையே
பிணைவயின் தீர்தலும் அஞ்சி, யாவதும்
இல்வழங் காமையின், கல்லென ஒலித்து,
மான் அதட் பெய்த உணங்குதினை வல்சி
கானக் கோழியொடு இதல்கவர்ந்து உண்டென,
ஆர நெருப்பின், ஆரல் நாறத்,
தடிவு ஆர்ந் திட்ட முழுவள் ளூரம்
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்க இனித அருந்தித்,
தங்கினை சென்மோ, பாண! தங்காது
வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க்கு என்றும்
அருகாது ஈயும் வண்மை
உரைசால் நெடுந்தகை ஓம்பும் ஊரே

விளக்கம் : கொடியும் அடர்ந்து முற்றத்திலே பலருங் கூடிப் படுத்துறங்கும் அளவு நிழல் தந்து நின்ற ஒர பெரிய மரம் ; அதன்மேல் முன்னை படர்ந்துள்ளது. வேறு பந்தர் வேண்டாது அதுவே முற்றத்தின் பந்தராக நிழல் செய்ய, அந்நிழலிலே யானை வேட்டையாடி. வரும் வேட்டுவனான அவ்வீட்டின் தலைவன் கிடந்து உறங்கக் கொண்டிருக்கிறான். பகல் வேளையிலும், தன் பிணைமேல் காதல் மிகுந்து, அதே நினை வாக வருந்தும் கலைமான், அதனோடுங் கூடி மகிழ்ந்து திளைத்துக் கொண்டிருந்தது. அந்நிழலின் ஒருபுறத்தே தன் கணவனை அழைக்க வந்த மனைவி, அது கண்டு, கணவன் அவற்றின் விளையாட்டால் எழுந்து விடுவானோ என அஞ்சி, மானின் கூட்டம் கலைந்துவிடக் கூடாதே எனவும் அஞ்சி, செய்வதறியாது, தான் ஓசை எழ நடத்தலும் செய்யாதவளாக, ஒரு புறமாக அமைந்து நின்றனள்; அத்தகைய அருளுடைய இல்லத் தலைவியாதலின், பாணனே! நீ வருந்தாது அவன் வீடு செல்வாயாக. சென்றால், மான் தோலின் மேல் பரப்பி வைத்திருக்கும் தினையரிசியைக் கானக்கோழிகளும் இதலும் ஆர வாரித்துத் தின்பனபோல, நீயும் நின் சுற்றத்துடன் சுட்ட இறைச்சியும்

ஆரல் மீனும் ஒருங்கே கூடியிரந்து தின்று மகிழலாம். அங்கேயே தங்கிச் செல்வாயாக! மேலும், வேந்தன் அவன் செயலுக்கு மகிழ்ந்து தரும் பெருஞ் செல்வத்தைப் பரிசிலர்க்குக் குறையாது கொடுக்கும் வண்மையும் உடையவன் அவன், புகழ்பெற்ற அந்நெடுந்தகை வேட்டுவன் ஆட்சி செய்யும் ஊர் அதுவே. செல்க! நின் பசியும் தொலைக!

11) யானையைக் கவண் கல்லால் தாக்கிய வேட்டுவன்: (புறம் 292)

கூறாய், செய்வது தோழி! வேறு உணர்ந்து,
அன்னையும் பொருள் உகுத்து அலமரும்; மென் முறிச்
சிறு குளகு அருந்து, தாய் முலை பெறாஅ,
மறி கொலைப் படுத்தல் வேண்டி, வெறி புரி
ஏதில் வேலன் கோதை துயல்வரத்
தூங்கும்ஆயின், அதூஉம் நாணுவல்;
இலங்கு வளை நெகிழ்ந்த செல்லல்; புலம் படர்ந்து,
இரவின் மேயல் மரூஉம் யானைக்
கால் வல் இயக்கம் ஒற்றி, நடு நாள்,
வரையிடைக் கழுதின் வன் கைக் கானவன்
கடு விசைக் கவணின் எறிந்த சிறு கல்
உடு உறு கணையின் போகி, சாரல்
வேங்கை விரி இணர் சிதறி, தேன் சிதைஇூஉ,
பலவின் பழத்துள் தங்கும்
மலை கெழு நாடன் மணவாக் காலே

விளக்கம் : எரிமீன் வீழ்ச்சி போல் கவண் கல் வீச்சு விசை தோழி! நான் என்ன செய்யவேண்டும் என்று நீ சொல், என்று தலைவி தோழியை வேண்டுகிறாள். மலைநாடன் தழுவாததால் என் மேனி வாடியிருக்கிறது. அன்னை வேறு வகையில் உணர்ந்து கொண்டிருக் கிறாள். வேலனுக்குப் பொருளைக் கொட்டித் தந்து தடுமாறுகிறாள். தாயிடம் பால் குடிக்க முடியாமல் இளந்தளிர்களை உண்ணும் ஆட்டுக்குட்டியைப் பலியிட விரும்பி, தொடர்பே இல்லாத வேலன் வெறியாட்டத்தில், கழுத்தில் மாலை அணிந்துகொண்டு உடுக்கடித்துப்

பாடுகிறான்.அது என்னை நாண வைக்கிறது. எனக்கோ வளையல் கழலும் துன்பம்.

காட்டில் மேயவேண்டிய யானை அதனை விட்டுவிட்டு இரவில் வயலில் மேய வருகிறது. அது காலடி வைத்து நடந்து வரும் ஓசையைக் கேட்ட கானவன் நள்ளிரலில் மலை நடுவில் கட்டி வைத்திருக்கும் பந்தலாகிய கழுதின் மேல் ஏறி இருந்துகொண்டு, தன் வலிமை மிக்க கையால் கவணில் கல் வைத்து எறிகிறான். அந்தக் கல் வானத்தில் எரிமீன் விழுவது போல மிக்க விசையுடன் செல்கிறது. அந்த விசையில் வேங்கைப் பூக்கள் சிதறுகின்றன. அடுத்திருந்த தேன் கூடு சிதறுகிறது. அதனை அடுத்திருந்த பலாப் பழத்துக்குள் நுழைந்து தங்கிக்கொள்கிறது. இப்படித் தங்கிக்கொள்ளும் மலைநாட்டுத் தலைவன் என் காதலன். அவன் என்னைத் தழுவாத காலத்தில் இந்த வெறியாட்டு நிகழ்கிறது. நான் என்ன செய்யவேண்டும் என்று சொல்.

யானைகளைப் பிடிக்க பல முறைகளை உள்ளன அவற்றில் பயம்பு வாரிப், கெட்பி அபதாம் அவபதம், வாரிபதம் வாசம் பந்தம் அனூக பந்தம் என்று பெயரிட்டு உள்ளார்கள் (தமிழர் வாழ்வியலில் யானை தென் கொங்கு சதாசிவம்) பயம்பு (யானை படுங்குழி)யானைகள் வழக்கமாக உணவு தேடி வரும் வழியில் ஆழமான பெரிய குழிகளை தோண்டி மூங்கில் படல் பரப்பி குழிகளை மறைத்து மேலே இலைகளோடு மண்ணை பரப்பி வைத்து யானைகளுக்கு பிடித்த உணவுகளை வளர்த்து அவற்றை உண்ணவரும் யானைகள் குளியில் விலச்செய்து பிடிப்பர். இவ்வாறு குழியில் விழுந்த பெரிய கொம்பு உடைய யானை குழியில் உள்ள மண்ணைத் தனது கொம்பால் குத்தி தப்பி வெளியேறிவிடும் என்று புறம் 17வது பாடலில் குறுங்கோழியூர் கிழார் பாடியுள்ளார்:

நீடு குழி அகப் பட்ட
பீடு உடைய எறுழ் முன்பின்,
கோடு முற்றிய கொல் களிறு,
நிலை கலங்கக் குழி கொன்று,
கிளை புகலத் தலைக்கூடி யாங்கு

விளக்கம்: யானைபடுங் குழியிலே செருக்கால் அறிவிழந்து வீழ்ந்தது ஒரு களிறு ; பின், அதனைத் தன் வலிய கொம்புகளால் தூர்த்துத் தானே வெளிப்பட்டுத் தன் இனத்தோடு சேர்ந்தது.

காயதலை மடப்பி பயம்பில் பட்டெனக்
களிறூ விளிப் படுத்தக் கம்பளை வெரிஇ (அகம் 165)

கோடை என்னும் கொடைக்கானல் மலைக்கும் அவன் அரசன். அவன் குறி தவறாமல் வளைந்த வாய் கொண்ட அம்பு எய்யும் திறம் பெற்றவன். தன்னை நாடிவந்த இரவலர்களுக்கு வரையறை இல்லாமல் வழங்குபவன். அவன் மக்களுக்குப் பயன் தரும் வேள்வி செய்தான்.

இவ்வாறு பிடிபட்ட யானையை,

10 வயதுக்கு மேல் 24 வயது வரை உத்தமம் வயது இந்த வயதில் யானையைப் பழக்கப்படுத்துவர்

25 வயதுக்கு மேல் 56 வயது வரை உள்ள யானைகளைப் போர்களில் பயன்படுத்துவர்

57 வயதுக்கு முதல் 70 வயது வரை உள்ள யானையை விவசாயம் போன்றவற்றிற்குப் பயன்படுத்துவர்

இவ்வாறு வேட்டுவர்கள் தங்கள் பிடித்த யானைகளை அதன் வயதைக் கொண்டு பணி செய்ய வைத்தனர். மேலும் தங்களிடம் வந்து உதவி கேட்கும் புலவர்களுக்கும் பாணர்களுக்கும் யானைகளைப் பரிசாகக் கொடுத்தனர். ஆகோள்பூசல் மற்றும் நாட்டின் மீது போர் போன்ற காலங்களில் யானையைப் பயன்படுத்தினர். ஒவ்வொரு போரின் தன்மையும் அதில் கலந்து கொண்ட யானைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வெற்றி தோல்வியை நிர்ணியத்தது.

வேட்டுவர்கள் சீறூர் தலைவர் என்ற நிலையில் இருந்து வேளிர்களாகவும் வேந்தர்களாகவும் உயர்ந்த நிலையை அடைந்தார்கள். காலம் மாற்றங்களும் ஆட்சி மாற்றமும் இருந்ததால் பதினெட்டாம் நூற்றாண்டு வரை ஆட்சி அதிகாரங்களுடன் பட்டக்காரர்கள் பாளையாக்காரர்கள் என வாழ்ந்து வந்தனர். 1801 - ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களின் ஆயுதத் தடைச் சட்டத்தின் காரணமாக பட்டக்காரர்கள் பாளையக்காரர்கள் மற்றும் ஊர்த் தலைவர்கள் அனைவரும் தங்களிடம் உள்ள போர் ஆயுதங்களை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்துத் தாசில்தாராகவும் பரம்பரை மணியக்காரர்களாகவும் பொறுப்பேற்று அந்த ஊர் நிர்வாகங்களைக் கவனித்து வந்தார்கள். அவ்வாறு ஆயுதங்களை ஒப்படைக்காத பட்டக்காரர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்து அவர்களுடன்

போரிட்டுத் தங்கள் ஆட்சி அதிகாரங்களை இழந்தனர். இன்று வரை 20 - க்கும் மேற்பட்ட பட்டக்காரர்கள் கொங்கு நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் இன்றும் தங்களின் ஊர்களில் உள்ள கோயில்களின் முப்பாடுகளையும் முதன்மை உரிமைகளையும் பெற்று, சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள்.

ஆய்வு நூல்கள்:

1. அகநானூறு.
2. புறநானூறு.
3. அல்லாள இளையான் பட்டயம்.

வேட்டுவ அரசரது தினமும் வேட்டுவர் தொலைக்காட்சியும்

எஸ். அர்ச்சுனன்
நிர்வாகக்குழு உறுப்பினர்
ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை
அலைப்பேசி : 87787 25961

வேட்டுவர்கள் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தனது உயிரையும் இரத்தத்தையும் கொடுத்துப் பாதுகாத்து வந்தார்கள். வேட்டுவ மன்னர் களைப் பற்றி சங்க இலக்கியங்களில் புகழப்பட்டுள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியத்தில் வேட்டுவர்கள் அரசர்கள் என்றும் கிழவர்கள் (நிலவுடைமையாளர்கள்) என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப் பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே
பாடல்-23, பொருளதிகாரம், அகத்திணையியல்.

இதன் மூலம் 2000 - ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே சிறப்பான நிலையில் வாழ்ந்துவரும் இனம் வேட்டுவர் இனம் என்று அறிஞர்கள் போற்றிக் கூறுகின்றனர். வேட்டுவர்கள் தமிழகத்தில் விவசாயத்தைக் கண்டறிந்தனர்.

அருவி ஆர்க்கும் கழை பயில் நனந் தலைக்
கறி வளர் அடுக்கத்து மலர்ந்த காந்தள்
கொழுங் கிழங்கு மிளிரக் கிண்டி, கிளையொடு,
கடுங் கண் கேழல் உழுத பூழி,
நல் நாள் வரு பதம் நோக்கி, குறவர்
உழாஅது வித்திய பரூஉக் குரல் சிறு தினை
முந்து விளை யாணர் நாள் புதிது உண்மார்
மரை ஆன் கறந்த நுரை கொள் தீம் பால்,
மான் தடி புழுக்கிய புலவு நாறு குழிசி
வான் கேழ் இரும் புடை கழாஅது, ஏற்றி,

சாந்த விறகின் உவித்த புன்கம்
கூதளம் கவினிய குளவி முன்றில்,

குதிரைமலை ஊராக் குதிரை குதிரைமுகம்
போலத் தோற்றம் அளிக்கும் மலை
செழுங் கோள் வாழை அகல் இலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ! கூர்வேல்,
நறை நார்த் தொடுத்த வேங்கை அம் கண்ணி,
வடி நவில் அம்பின் வில்லோர் பெரும!
கை வள் ஈகைக் கடு மான் கொற்ற!
வையக வரைப்பில் தமிழகம் கேட்ப,
பொய்யாச் செந் நா நெளிய ஏத்திப்
பாடுப என்ப பரிசிலர், நாளும்
ஈயா மன்னர் நாண,
வீயாது பரந்த நின் வசை இல் வான் புகழே.புறநானூறு 168

இந்தப் பாடலில் மூங்கில்காடு. அந்த மூங்கிலில் மிளகுக் கொடிகள் படர்ந்திருக்கும். காட்டுப் பன்றிக் குடும்பம் அங்குள்ள காந்தன் கிழங்குகளைக் கிண்டி உண்ணும். அவை கிண்டிய புழுதியில் அங்கு வாழும் குறிஞ்சி மக்கள் தினையை உழாமலேயே விதைப்பர். அதில் விளைந்த தினையை மரையான் என்னும் காட்டுப் பசுக்கள் மேயும். அந்த மரையானின் பாலைக் கறந்து ஊற்றி மான்கறியை அதில் ஊற்றிப் புன்கம் (பொங்கல்) சமைப்பர். சந்தன விறகில் தீ மூட்டிச் சமைப்பர். அவர்களின் வீட்டு முற்றத்தில் கூதளம்பூ பூத்துக் கிடக்கும். வரும் விருந்தினர்களுக்கெல்லாம் வாழை இலையில் அந்த முற்றத்தில் பங்கிட்டுத் தருவர்.இதேபோல் வள்ளிக் கிழங்கை தோண்டி எடுக்கும்போது ஏற்படும் பள்ளத்தில் தினை வரகு போன்றவற்றை விதைத்துப் பயிர் செய்தனர் என்று பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்கள். (புறம் 120)

மழைக்குப் பின்னர் நிலம் உழவு செய்யப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்கள். வன்புழம் உழவு செய்யப்பட்டுக் கீழ் மண் மேற்புறமாகப் புரட்டிப் போடப்பட்டது என்று அகநானூறு 194 - இல் கூறப் பட்டுள்ளது. அதேபோல் நற்றிணை 120-ஆவது பாடலிலும் கூறப்பட்டுள்ளது.

இந்தக் குறிப்புகள் குறிஞ்சிநில மக்கள் மற்றும் முல்லை நிலத்திற்கு உரியவர்கள்தான் முதன்முதலாக விதைகளை உழுது விதைத்தார்கள் என்று நமக்குச் சங்கப் பாடல்களின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. அதேபோல் நிலத்தில் முளைத்திருந்த களைச்செடிகளைப் பெயர்த்து எடுத்து மண்ணோடு கலக்கப்பட்டன என 122 - ஆவது பாடல் மூலம் அறிய முடிகிறது.

உழவு செய்யப்பட்டமையால் செம்மண் நிலம் மிருதுவான தன்மையைப் பெற்றது என்று அகம் 206 எருதுகள் பயன்படுத்தப்பட்டன என்று (அகம். 314) உணரமுடிகிறது. உழவிற்குப் பின் கை விதைப்பு நடைபெற்றது என்பதையும் நாம் அறிகிறோம். விதைத்த விதை முளைக்க மழை எதிர்பார்க்கப் பட்டது. மழை பொழிந்தால் மகிழ்வோடு ஏர் மங்கலம் பாடிக் கொண்டாடினார்கள். மழை இல்லை என்றால் மழைச் சடங்குகள் செய்து மழை வர வைக்க ஏற்பாடு செய்தனர்.

பறவைகள் மற்றும் விலங்குகளிடமிருந்து பயிர்களைக் காப்பாற்றும் அரிய பணியை ஆண்களும் பெண்களும் செய்தனர்.

குறிஞ்சியில் காவல் பரண்கள் அமைக்கப்பட்டன. இளம்பெண்களே பகலில் காவல் பணியை மேற்கொண்டார்கள். இவர்கள் கைக்குளிர், தட்டை, தழலை போன்ற கருவிகளைப் பயன்படுத்தி ஓசை ஏற்படுத்தி பறவைகளையும் சிறு விலங்குகளையும் விரட்டியுள்ளார்கள். (குறுந்தொகை 158, 291)

வன விலங்குகளை விரட்ட தீவெட்டிகளும், கல்லெறி இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டன. (அகம் 78, 88 மற்றும் நற்றிணை 119) சாகுபடி நிலத்திற்குள் புகும் யானைகளைத் தடுக்க அகழிகள் வெட்டப்பட்டன.(அகம் 88)

காவலில் தொய்வு ஏற்படாமல் அனைவரும் விலங்குகளை விரட்டுவதில்அகம் 348. பயிர்த் தொழில் பெருமளவில் மழையையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. இதற்காகக் கிணறு வெட்டப்பட்டு விவசாயம் செய்யப்பட்டது. குளம் ஏரி வெட்டப்பட்டது. (சுண்டை வேட்டுவர் மொளப்பாளையம் கல்வெட்டு) ஆற்றின் இடையில் கால்வாய் அணை கட்டப்பட்டது. (அல்லாள இளைய நாயகர்) தானியங்கள் செடியிலிருந்து தடியால் அடித்துப் பிரிக்கப்பட்டது; தானியங்கள் சேகரிக்கப்பட்டது.

அறுவடை செய்த தானியங்கள் வரை ஆட்டின் பாலில் சமைப்பது ஒரு சடங்காகவே மேற்கொள்ளப்பட்டது (குறுந்தொகை 105). இதுவே இப்போதைய பொங்கல் விழா தை-1 வேட்டுவர்களின் உழைப்பின் விழா வேட்டுவ மன்னர்கள் தங்கள் நிலங்களில் விதைத்த பயிர்களில் விளைந்த கேழ்வரகு, வரகு போன்ற பயிர்களின் அறுவடை தினமாக அனைவராலும் கொண்டாடப் படும் தை-1. இந்த நாளில் நம் முன்னோர்களைப் போற்றும் வகையில் அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் தை-1 அரசர்கள் தினமாக நாம் கொண்டாடுகிறோம்.

நாம் ஒவ்வொருவரும் நமது முன்னோர்களைப் போற்றும் வகையில் தை-1 வேட்டுவ அரசர்கள் தினத்தில் அவர்களை வணங்கிப் போற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

வேட்டுவார் டிவி 06.03.2021 - அன்று தெய்வத்திரு புலவர் தேவன் அவர்களின் நினைவுநாளில் தொடங்கப்பட்டது. புலவர் கு.தேவன் அவர்களின் குரலாக வேட்டுவர் டிவி தொடங்கப்பட்டது. புலவர்கள் தேவன் சமுதாய வளர்ச்சி என்பது தனிமனித வளர்ச்சியும் பெண்களின் முன்னேற்றமும் மிகப்பெரிய பங்காற்றும் என்று நம்பினார். அன்னாரின் கருத்தை மனதில் கொண்டு நமது வேட்டுவர் சமுதாயம் முன்னேற வேண்டும் என்ற நோக்கில் தனி மனித வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு வேட்டுவர் வணிக மேம்பாட்டு அமைப்பு உருவாக்கப்பட்டது வேட்டுவரில் வணிகம் செய்வோரை ஒருங்கிணைத்து வளர்ச்சிக்கு உதவி செய்யப்படுகிறது. கல்வி, பொருளாதாரம், வணிகம், வரலாறு போன்ற துறைகளில் வேட்டுவாரின் வளர்ச்சியை உலகறியச் செய்ய வேட்டுவர் டிவி உதவி செய்து வருகிறது. டிவியில் தொழில், கல்வி மற்றும் தொழில் சார்ந்த ஆங்கிலம் கற்றுக் கொடுத்தல் வரலாறு சார்ந்த கல்வெட்டுத் தொல்லியல் செய்திகள் மற்றும் வல்வில் ஓரி கருத்தரங்கம் மூலம் வேட்டுவர் மன்னர்களை உலகறியச் செய்தல், வேட்டுவர்களின் வீரம் அரசாட்சி நீர்ப்பாசனம் அணைகட்டிக் குளம் வெட்டிக் கல்வெட்டு வைத்தல், காசு தயாரிப்பு, தொழிற்சாலை அமைத்து கல்வெட்டு கோயில் திருவிழா, உள்ளி விழா, கும்மிப் பாட்டு போன்ற பாரம்பரிய விழாக்களை உலகறியச் செய்தல்; பட்டிமன்றம் நிகழ்வுகள் மூலம் விழிப்புணர்வை உருவாக்குதல் போன்றவை தொடர்ந்து செய்து வருகிறது. மேலும் முதன் முதலில் வேட்டுவர்கள் அரசர் தினம் உருவாக்கிக் கொண்டாடி வருகிறது.

இதன்மூலம் வேட்டுவர்களின் பெருமையை உலகறியச் செய்யப்பட்டது. தமிழகத்தில் உள்ள இருபதுக்கும் மேற்பட்ட பட்டக்காரர்களை ஒன்றிணைத்த பெருமை வேட்டுவர் டிவியைச் சாரும். (2021)

Vettuvar.com, vettuvartv.com, Rajavettuvar.com போன்ற இணையதளங்கள் மூலம் வேலைவாய்ப்பு, கல்வி, வரலாறு போன்ற செய்தி வெளியிடுதல் ரத்ததானம் கொடுக்க ஒருங்கிணைக்கச் செய்தல் மூலம் மக்களுக்கு உதவி செய்து வருகிறது.

பட்டக்காரர்கள்

எம்.எம். நடராஜன்
நிர்வாகக் குழு உறுப்பினர்
ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை
அலைப்பேசி : 90039 65971

1) வி. சத்தியமூர்த்தி
ஆணுராய பட்டக்காரர்
சத்யமூர்த்தி விஸ்வநாதன் கவுண்டர்
வெட்டயம் பாளையம் எலத்தூர்
பட்டாலி வேட்டுவக் கவுண்டர்
காங்கயம் பட்டாலி ஆனுவராய பட்டக்காரர்

சிறப்பு :

எங்கள் கொள்ளு பாட்டனார் சடையப்ப கவுண்டர் சிங்கிரி பாளைத்திலிருந்து கொடிவேரிக்கு - பவானி ஆற்றிக்கு இடையை நடந்து செல்ல பாலம் கட்டிக் கொடுத்தவர்.

2) எம்.சம்பத்குமார் நடந்தைப் பட்டக்காரர்

3) ரத்தினசாமி ஆணுவராயப் பட்டக்காரர்

4) க.குணசேகரன் நல்ல குமரன் பட்டி பட்டக்காரர்

1-க.குணசேகரன் (பட்டக்காரர்)
நல்லகுமாரன்பட்டி, அரவக்குறிச்சி, கரூர் மாவட்டம்

(தென்கரை வேங்கலநாடு), 8/19, பிரதட்சணம், ரோடு "ஏ" பிளாட், கரூர்-639001

2-கொடையூர்
ரீகுங்குமக்காளியம்மன் கோவில், தர்மக்கர்த்தா

3- திருமணம் ஆனவர்
மனைவி; ஜி.மலர்விழி
மகன்கள் ;
1-ஜி.குங்குமராஜ்(எ)
கார்த்தி பி.இ.
2-ஜி.பரத்ராஜ் பி.இ.
அம்மா ; தனம்
அப்பா ;இல்லை

தற்போது; தமிழக வாழ்வுரிமைக் கட்சி
மாநிலச் செயற்குழு உறுப்பினர்

5) சோமசுந்தரம் இருக்கூர் பட்டக்காரர்

அல்லாள இளைய நாயக்கர் வழித் தோன்றல் கொங்கின் 24 நாட்டில் அரையநாட்டைப் பரமத்தியில் கோட்டை கட்டி ஆண்ட சிற்றசரர். இவர் மூலகுலத்தைச் சேர்ந்தவர். மதுரை நாயக்க மன்னரால் இளையநாயக்கர் என்னும் பட்டம் பெற்றவர். ஜேடர்பாளையத்தில் அணைகட்டி, ராசவாய்க்கால் அமைத்தவர். கொமாரபாளைய வாய்க்கால் பொய்யேரி வாய்க்கால் போன்றவற்றையும் கட்டியவர் இவரே. 74

பாளையப்பட்டுகளில் தலைமைப் பாளையக்காரர் மழகொங்கு சித்திரமேழிச் சபை அதிகாரம் இவரிடமே இருந்தது. இவரை மணவாளர் வாளரசர் என்று இவரது செப்பேடு கூறுகிறது. திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயில் திருப்பணியும் செய்துள்ளார். கபிலர் மலையில் முருகனுக்குக் கோயில் அமைத்த பெருமைக்குரியவர். இவரது வம்சாவழியினர் அரையநாட்டுப் பட்டக்காரர்களாக இன்றும் பல அறப்பணிகளைச் செய்து வருகின்றனர்.

6) மருத்துவர் சக்கரவர்த்தி மயிலேறுரவீந்தரன் அப்பிச்சிமார் மடம் மடாதிபதி

7) எம். மனோகரன் பிச்சம்பட்டி பட்டக்காரர்

8) ஆர். கண்ணன் தென்னிலை பட்டக்காரர்

9) ஈ. பாரி சீதப்பட்டி பட்டக்காரர்

10) ப. மோகன்ராஜ் பி.இ, இலுப்பக்கிணத்துப்பட்டி பட்டக்காரர்

ப. மோகன்ராஜ் பி.இ. பட்டக்காரர்,

த/பெ பி. பழனிச்சாமி கவுண்டர் பட்டக்காரர். இலுப்புக் கிணத்துப்பட்டி பவித்திரம் கிராமம்.

கரூர் மாவட்டம் (வடகரை வேங்கல நாடு)

இலுப்புக் கிணத்துப்பட்டி பகவதி அம்மன் கோயில் முப்பாடு, குளத்தூர் பட்டி ஸ்ரீ நீரைசால் சந்தன ஸ்வாமி கருப்பண்ணசாமி. கோயம்பள்ளி ஸ்ரீ செல்லியாய் ஒரு முதன்மை, பவித்திரம் பாலமலை மண்டகப்படி ஒரு முதன்மை, பவித்திரம் மருதகாளியம்மன் மலை அம்மன் ஸ்ரீ மணிவேல் சாமி கோவிலில் நான்கு முதன்மைகளில் ஒரு முதன்மை உண்டு...

11) சு. மகுடீஸ்வரன் நிமித்தம் பட்டி பட்டக்காரர்
சு.மகுடீஸ்வரன் பி.ஏ.
த/பெ.(லேட்) மு.சுப்பிரமணியன் கி.நி.அ.
நிமித்தப்பட்டி, பட்டக்காரர்,
பி.அணைப்பாளையம் கிராமம்,
அரவக்குறிச்சி வட்டம்,
கரூர் மாவட்டம்
(வடகரை வேங்கலநாடு)

தற்போது இருபிடம்;
வெள்ளக்கவுண்டன் நகர் 2வது தெரு,
ராயனூர், கரூர்,
(அரசு ஊழியர்)
வருவாய்த் துறையில் முதுநிலை வருவாய் ஆய்வளார்.
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர்.

அம்மா; லட்சுமி
மனைவி ; தமிழ்வாணி
மகன் ; பிரஜித்
தொட்டிவாடி
பத்தரகாளியம்மன்
கோவில் தர்மகர்த்தா, முப்பாடு,

நிமித்தப்பட்டி மாரியம்மன் கோவில் மற்றும் பகவதி அம்மன் கோவில் முப்பாடு மற்றும் முதல் உரிமை,

பவித்திரம்; மருதகாளியம்மன், மலையம்மன், மணிவேல்சாமி கோவிலில் ஆறு முதன்மைகளில் நிமிந்தப்பட்டி வகையறாவிற்கு ஒரு முதன்மை உண்டு.

12) பி.வி.செல்வராஜ் ஈரோடு மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்

13) இரத்தினராயர் த/பெ இராமச்சந்திரராயர் ராயர் பட்டம்

சம்மந்தா ராயர் கவுண்டர் வெங்கம்பூர் புல்லை குல முன்னோர் ஆகவும், அவங்கள் சந்ததிகள் அக பெரியவர் பழனி வேலப்பா கவுண்டர், பெரியவர் அங்கணகவுண்டர் - பெரிய தனம் , சாம்பராயர் கவுண்டர், பெரிய தம்பி கவுண்டர், வழுவந்தராயர், ராமச்சந்திர ராயர், குமார ராயர், பீமா ராயர், கிருஷ்ணா ராயர், கணேச ராயர்,அருணாச்சலம், ஜெயச்சந்திர ராயர், சவுந்தர ராயர், ரத்தின ராயர் எனா பெரும் விருசமாகா வாழ்கிறோம்.எங்களில் பெரும்பாலோர் நல்ல கல்வி மற்றும் நிபுணத்துவ பெற்றவராகவும் அரசு பணி புரிபவராக இருந்தனர்.

14) காளிபட்டி பட்டக்காரர் குப்புசாமி கவுண்டர் மகன் ராமசாமி கவுண்டர்

காளிபட்டி கிராமத்தில்300 ஆண்டுகளுக்கு முன்பு குறுநில அரசராக ஆட்சி செய்து வந்தார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் குறுநில மன்னர்கள் மற்றும் பட்டக்காரர்கள் ஆட்சி அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சியில் ஆயுதத் தடைச் சட்டம் 1801- இல் வந்தபொழுது தங்கள் வைத்திருந்த போர் ஆயுதங்களை ஆங்கிலேயரிடம்

ஒப்படைத்தனர். ஆங்கிலேயர்கள் ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டு தாசில்தாரராக நியமித்தார்கள். மேலும் 700 ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்து கொண்டிருந்தவர்கள் தவசி மாரியம்மன் கோயிலுக்குச் சிவன் ராத்திரி பூஜை செய்து முதல் உரிமை பெற்று வந்துள்ளார்கள் .

இவர்கள் குதிரைப்படை வைத்திருந்தார்கள். குதிரையில்தான் பயணம் செய்துள்ளார்கள். மேலும் இந்த ஊர் வழியாக யார் குதிரையில் செல்லும் போதும் குதிரையை விட்டு இறங்கி இவர்களுக்கு மரியாதை செய்து விட்டுத்தான் இந்த ஊரை விட்டுச் செல்ல வேண்டுமாம். இவர்களுக்கு பட்டி�ளூர், அந்தியூர் பதிராகளி அம்மன் கோவிலில் உரிமை இருந்துள்ளது; தற்பொழுது இல்லை . பரம்பரையாக வாள் வைத்துப் பூஜை செய்து வருகிறார்கள். வாள் இன்றும் வைத்துள்ளார்கள். ஊரில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இவர்கள் வீட்டுக்கு வரும் பொழுது அவர்களுக்குத் தீர்ப்பு சொல்லப்படும். அவ்வாறு தீர்ப்பு சொல்லும் பொழுது செங்கோல் வைத்து அவர்களுக்குத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஒருமுறை ஏற்பட்ட தீ விபத்தில் அனைத்து ஆவணங்கள் எரிந்து போயின. இவர்கள் கள்ளிப்பட்டி மிகவும் வறட்சியான நிலமாகியதால் குடிநீர் தேவைக்காக அரிஜன மக்களுக்குக் கிணறு வெட்டிக் கொடுத்துள்ளார்கள். அரிஜன மக்கள் ஓங்காளி அம்மனுக்குத் திருவிழா நடத்தும் பொழுது அந்தத் திருவிழா தொடங்குவதற்குத் தேவையானப் பொருட்களை முதன் முதலில் பட்டக்காரர் வீட்டிற்கு வந்து மரியாதை செலுத்தி அதற்கானப் பொருட்களைப் பெற்றுச் சென்றுள்ளார்கள்; இது பரம்பரையாக நடந்து வந்துள்ளது.

ஊர்ப் பொது மக்களுக்காக பள்ளிக்கூடம் கட்டுவதற்கு நிலம் கொடுத்துள்ளார்கள். தந்தையின் பெயர் குப்புசாமிக் கவுண்டர் தாய் களியம்மாள்; குடும்ப முன்னோர்கள்:

1. ராமசாமிக் கவுண்டர்
2. பெத்த கவுண்டர்
3. திருமலைக் கவுண்டர்
4. தேவன கவுண்டர்
5. பெத்தா கவுண்டர்
6. குப்புசாமிக் கவுண்டர் மகன்கள்

1. ராமசாமிக் கவுண்டர்
2. பெத்தா கவுண்டர்
3. தேவன்
4. பூரானன்
5. தர்மர்
6. புண்ணியகிருஷ்ணன்
7. ராஜேஷ்வரன்

15. ஆண்டமுத்து வள்ளல் தலையூர் பட்டக்காரர்
16. எம்.சி.கனகராஜ் அரண்மனையார்
17. கே.துரைசாமி அறுநாட்டார் மலைப் பட்டக்காரர்
18. அடசப்பாளையம் சந்திரசேகரன் அந்தியூர் பட்டக்காரர்
19. ஏ.சந்திரசேகர் நவமரத்துப்பட்டிப் பட்டக்காரர்
20. வி.எம்.எஸ்.அல்லிமுத்து பூவாணிய வேட்டுவக் கவுண்டர் குலதெய்வம் பூந்துறை கரி காளியம்மன்.

வேட்டுவ அரசர்கள் வரிசை

ஈ.ராமசாமி
பொருளாளர்
ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை
அலைப்பேசி : 93616 32525

1) கோடைப் பொருநன் கடியநெடு வேட்டுவன் கொடைக்கானல் மலை

கொங்கு நாட்டின் தெற்கெல்லையாகத் தென்கோடியில் உள்ளது கோடை மலை. இது பழனிமலைத் தொடரின் தென்கோடியாகும். கொங்குநாட்டினைச் சேர்ந்த இம்மலை இப்பொழுது கொடைக்கானல் என்றழைக்கப்படுகின்றது. வளம் பலபொருந்திய இம்மலை நாட்டின் வடசாரலின் அடிவாரத்தில் கடியம் என்னும் ஊர் இருந்தது. இது கோடைமலை நாட்டின் தலைநகராகும். இவ்வூரிலிருந்து நெடுவேட்டுவன் என்கின்ற கொங்கு வேளிர் குடித்தலைவன் வீரமும், ஈரமும் மிக்கவனாக திகழ்ந்து ஆண்டுவந்தான். கொடைக்கானல் எனப்படும் கோடை மலைக்கு அரசன் சங்க காலத்தில் இவனே ஆவன். வேடர் குலத்தைச் சேர்ந்த இவன் பாண்டியன் கோடைப் பொருநன்.

தண்கடற் பிறந்த முத்தின் ஆரமும் முனைதிரை கொடுக்குந் துப்பன் தன்மலைத் தெறலரும் மரபின் கடவுட் பேணிக் குறவர் தந்த சந்தின் ஆரமும் இருபே ராரமும் எழில்பெற அணியும் திருவீழ் மார்பின் தென்னவன் மறவன் குழியிற் கொண்ட மராஅ யானை மொழியின் உணர்த்துஞ் சிறுவரை யல்லது வரைநிலை யின்றி இரவலர்க் கீயும் வள்வாய் அம்பற் கோடைப் பொருநன் பண்ணி தைஇய பயங்கெழு கேள்வியின் விழுமிது நிகழ்வ தாயினுந் தெற்கோ்பு. (அகநானூறு: 13-1-12 வரிகள்)

2) விச்சிக்கோன்

ஆண்டமலை விச்சிமலை. இது கொல்லிமலைச்சாரலில் அமைந்துள்ள பச்சைமலை ஆகும். இவனுடைய இனத்தவர் விச்சியர்

என அழைக்கப்பட்டனர். அதாவது வில் வித்தையில் சிறந்தவர்கள் என்ற பொருளாகும். இவனுடைய தம்பி இளம் விச்சிக்கோன் ஆவான். இவனுடைய ஊர், பிற வேட்டுவ வேளிர்களுடையது போலவே சிற்றரசனைக் கொண்ட குறும்பூர் ஆகும். கபிலர் விச்சிக் கோனிடம் பாரியின் மகளிரை மணஞ்செய்ய உடன்படாமல் மறுத்து விட்டான். கபிலர் பாரி மகளிரை அவன் செய்து கொள்ளும்படிக் கேட்டார். (புறம் 200)

3) ஆய் அண்டிரன் - பொதியில் மலை

ஆய் என்பது இவனது வேடர்குலக் குடிப் பெயர். எனவே அண்டிரன் என்னும் எயினன் (வேட்டுவன்) ஆகிய இவனை ஆய் அண்டிரன் என்றும் ஆய் எயினன் என்றும் புலவர்கள் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். மேலும் இவன் வேனாட்டின் அரசனாக இருந்ததால் வேள் ஆய் எனப்பட்டான்.

ஆய் நாட்டை வேணாடு என்பார்கள் வேள் + நாடு வேணாடு எனப்பட்டது. இந்த நாடு பாண்டிய நாட்டிற்குத் தென்மேற்கில், பேரியாற்றுக்கும், குமரி முனைக்கும் இடையில் திருவாங்கூர் நாட்டின் தென் பகுதியில் இருந்தது. ஆயின் மலைகள் பொதியில் மலை மற்றும் கவிர மலையாகும். ஆய் பொதியில் மலையின் அடியிலிருந்து வேணாட்டை ஆண்டான்.

4) ஆய் அண்டிரனின் உறவினன்

பொதியில் மலையின் ஒரு பகுதியை ஆண்டு வந்தான். சேர்ந்த காட்டில் சிறு அரண் சூழ்ந்த அழுந்தூரிலிருந்தது திதியனின் அழுந்தூர். நெடுங் கொடி துடங்கும் நறவு மலி பாக்கத்து நாள் துறைப்பட்ட மோட்டு இரு வரா அல், துடக்கண் கொழுங்குறை நொடுத்து உண்டு ஆடி வேட்டம் மறந்து துஞ்சும் கொழுநர்க்குப் பாட்டி, ஆம்பல் அகல் இலை அமலை வெந்சோறு தீம்புளிப் பிரம்பின் திரள்கனி பெய்து விடியல் வைகறை இடூஉம் ஊர!

தொடு கலம் குறுக வாரல்! தந்தை கண்கவின் அழித்ததன் தப்பல தெறுவர, ஒன்று மொழிக் கோசர்க் கொன்று முரண் போகிய கருந்தேர்த் திதியன் அழுந்தை கொடுங்குழை அன்னி மி லியின் இயலும் நின் நலத் தகுவியை முயங்கிய மார்பே. (அகநானூறு : 196)

பாடலின் பொருள்:- தலைவி, தலைவன் மீது ஊடல் கொண்ட நிலையில் கூறியதாய் அமைந்த பாடல். பாக்கத்தில் உள்ள பாணர்கள்

கடல் துறையிடத்தே அகப்பட்டவரால் மீனின் கொழுத்த துண்டுகளை விற்று அதனைக்கொண்டு கள்ளினை வாங்கி அருந்திக் களித்தனர்.

பழனி மலைக்கு இந்த ஆவியர் குடியினரால் - ஆவின்குடி, திருஆவிநன்குடி என்ற பெயரும் உண்டு. பழனி மலைக்குப் பக்கத்தில் உள்ள ஆவியர் குடியே தற்பொழுது ஆய்க்குடி என்றழைக்கப்படுகின்றது.

5) வீரை வேண்மான் வெளியன் தித்தன்

திருச்சி மலைக்கோட்டை, பொன்மலை உறந்தைக் காவலன் ஆன இவனைத் தித்தன் உறந்தை என்றே அழைத்தனர். தித்தன் வீரை என்னும் ஊரின் அரசன் ஆவான். வேண்மான் வெளியன் தித்தன் உறைந்த ஊராகியதால் வீரை என்னும் பெயர் பெற்றது. வெளியன் வேண்மான் ஆ அய் எயினன், திதியன் போலவே தித்தனும் வேட்டுவ வேளிர் ஆவான். ஆனால் இவன் அவர்களை விடத் தொன்மை யானவன். தித்தனின் வரலாற்றில் தித்திக்கும் மற்றும் திகைக்க வைக்கும் சங்கதிகள் நிறைய உண்டு.

பிற வேட்டுவ வேளிர்க்கு இல்லாத தனிச்சிறப்பு தித்தனுக்கு உண்டு. புலவர்கள் தம்மைப் புகழ்ந்து பாமாலைகள் சூட்டி புகழ் மாலைகளாக அவைகள் குவியும் வரை வீரத்திலும், ஈரத்திலும் அவர்கள் ஓயவில்லை. ஆனால் அவர்கள் காலம் எல்லாம் எதற்காக ஏங்கினார்களோ, அந்தக் கவி படைக்கும் தனி ஆற்றலும் இவனே பெற்றிருந்தான். புரவலனே புலவனாகவும் இருந்துள்ளான். அதுவும் எப்படி? அந்த செய்யுள்களைப்படித்து புலவர்களே ரசித்து அனுபவித்துப் பாராட்டும் வண்ணம் சொல், பொருள், நடை எல்லாமே சிறப்பாக அமைந்திருக்கும் வண்ணம் படைத்தளித்துள்ளான். புறநானூறு 320 வது பாடலும், அகநானூறு 188 வது பாடலும் இவ்விரு நூல்களிலும் முதலிடம் வகிக்கின்றன.

புறநானூறு 320 வது செய்யுளை இயற்றியவர் வீரை வெளியனார் ஆவார். இவர் வீரை வெளியன் வேண்மான் தித்தன் அல்ல என்று தமிழறிஞர்கள் சிலர் கூறுகின்றனர். ஆனால் வீரை வேண்மான் வெளியன் தித்தன் இயற்றிய அகநானூறு 188 வது பாடலும், புறநானூறு 320 வது பாடலும் ஒரே விதமான சுவைநயம் மிக்கதாக இருப்பதால் இரண்டு பாடலும் தித்தனால் இயற்றப்பட்டதே என்பதைத் தமிழறிஞர்கள் பலர் கூறுகின்றனர்.

வேட்டையிலும் வல்வில் ஓரிக்கு இணையாகத் திகழ்ந்துள்ளான். வீரத்திலும் வித்தியாசம் காட்டியுள்ளான். அவன் கிணை என்றும் போர்ப் பறையை ஒலிக்கக் கேட்டே பெரும் சேனையோடு வந்த கட்டி என்னும் வேளிர், கிள்ளி வளவனுடன் போர் புரியாமலே ஓடிவிட்டான். இதுவும் போர் பற்றிய வரலாற்றிலேயே புதுமையான ஒன்றல்லவா? போர் புரியாமலே பகை வென்ற புதுமையைச் செய்தஉலக வாலாற்றிலேயே வற்றை நாயகனாக ஒளிவிடுகின்றான்செய்து உலக வரலாற்றிலேயே ஒற்றை நாயகனாக ஒளிவிடுகின்றான்.

இவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் படைத்தலைவன் பொன்னியில் செல்வன், புதுமை பல படைத்தவன். உறந்தை எனப்பட்ட தற்பொழுதிய உறையூரின் காவலன். தமிழ் வல்லவர்களின் காதலன். பகைவர்க்குக் காலன். உறையூர், சோழப் பெரு வேந்தர்கள் முடிசூட்டிக்கொள்ளும் பழம்பதிகள் ஐந்தில் ஒன்றாகும்.

தித்தனின் முரசு ஒலி, சங்கொலி முழங்காத மாலை வேளை.

பெருமுது செல்வர் பொன்னுடைப் புதல்வர் சிறுதோட் கோத்த செவ்வரிப் பறையிலா கண்ணகத்து எழுதியகுரீ இப் போலக் கோல்கொண்டு அலைப்பப் பபீ இயர் மாதோ வீரை வேண்மான் வெளியன் தித்தன் முரசு முதல் கொளீஇய மாலை விளக்கின் வெண்கோடு இயம்ப, நுண்பணி அரும்பக் கையற வந்த பொழுதோடு மெய் சேர்த்து அவல நெஞ்சினன் பெயர உயர்திரை நீடு நீர்ப் பனித்துறைச் சேர்ப்பன் ஓடுதேர் நுண்நுகம் நுழைந்த மாவே!

கண்ணகத்து எழுதியகுரீஇப் போலக் கோல்கொண்டு அலைப்பப் பபீ இயர் மாதோ வீரை வேண்மான் வெளியன் தித்தன் முரசு முதல் கொளீஇய மாலை விளக்கின் வெண்கோடு இயம்ப, நுண்பணி அரும்பக் கையற வந்த பொழுதோடு மெய் சேர்த்து அவல நெஞ்சினன் பெயர உயர்திரை நீடு நீர்ப் பனித்துறைச் சேர்ப்பன் ஓடுதேர் நுண்நுகம் நுழைந்த மாவே!" - நற்றிணை - 58

போரவைக் கோப்பெரு நற்கிள்ளி (தித்தனின் மகன்)

தித்தன், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்னும் சோழ மன்னனின் தளபதியாக இருந்த காரணத்தால் பிரியத்தைக் காட்ட சோழன் கோப்பெரு நற்கிள்ளி எனப் பெயரிட்டுள்ளான். பேரவை என்பது அவன் பட்டப் பெயராக இருக்க வேண்டும். பேராண்மை மிக்க நற்கிள்ளி,

ஆமூர் மல்லனிடம் போரிடும் வீர நிகழ்வினை, தித்தன் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் பார்த்தே ஆக வேண்டும் என்று புலவர் சாத்தந்தையார் ஆசைப்படுகின்றார்.

சிந்துச் சமவெளியில் கிடைத்த முத்திரைகளில் தித்தன் என்ற பெயர் பொரித்திருப்பதிலிருந்து இவன் சிந்து வெளி நாகரீகக் காலக் கட்டத்தைச் சேர்ந்தவன் என்பதும் நன்மரக்கலம் கொண்டு கடல் கடந்து அயல் நாட்டு வாணிபத்தின் அதிகப் பொருள் ஈட்டி, முத்திரை பதித்த காசுகளை வெளியிடும் அளவிற்கு முக்கியமானவனாகத் திகழ்ந்துள்ளான். சங்ககால வேளிர்களிலும் தனி முத்திரை பதித்தவன். சரித்திரத்தில் இடம் பெற்று சாகா வரம் பெற்றவன்.

6) போரவைக் கோப்பெரு நற்கிள்ளி

இவன் வீரை வேண்மான் வெளியன் தித்தனின் மகன். ஐயை-யின் சகோதரன். வீரனுக்குப் பிறந்த மாபெரும் வீரன். இவன் ஆமூர் மல்லனுடன் போர் புரியப் போகும் அதிசய நிகழ்ச்சியை அவன் தந்தை காண வேண்டும் என்ற எண்ணத்தோடு புலவர் சாத்தந்தையார் எழுதிய பாடல்.

பேரவைக் கோப்பெரு நற்கிள்ளியின் மற்போர் இன் கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண் மைந்துடை மல்லன் மதவலி முருக்கி, ஒருகால் மார்பு ஒதுங்கின்றே; ஒருகால் வருதார் தாங்கிப்பன் ஒதுங்கின்றே (புறநானூறு - 80)

7) கொடுமுடி குறும்பொறை மலை

ஈரோட்டிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில், காவிரி நதிக்கரையின் மீது அமைந்துள்ள கறையூர், கொடுமுடி என்னும் சங்க கால வேட்டுவ வேளிர் ஆண்ட ஊராகும். அருள்மிகு. கொடுமுடி நாதர் பெயரே தனக்குச் சூட்டப்பட்டதால் இந்த அரசன் பெயர் கொடுமுடி என்பதாகும். தேவாரப் பாடல்களில், தேவாரம் பாடிய மூவருமே கறையூர் என்றே இவ்வூரை அழைத்த பொழுதும் இம் மன்னனின் மாவீரத்தைப் போற்றும் விதத்தில் கொடுமுடி என அழைக்கத்தொடங்கினர்.

பாண்டிய அருள்மிகு. கொடுமுடிநாதர் என்றும் அருள்மிகு. மகுடேஸ்வரர் மன்னன் மலையத்துவச பாண்டியன் இத்தலத்து இறைவனை வேண்டி வணங்கித் தனது மகனின் அங்கம் (கைவிரல்) வளரப் பெற்றதால், அங்கம் வளர்த்தபுரம் என்றும் அழைக்கப்படுகின்றது. இதனால் இறைவன் மீது அபாரப் பற்றும், அதீதப் பக்தியும் உற்ற

வேட்டுவ மன்னன் இந்த எழில்மிகு ஆலயத்தை எடுத்ததால் திருப்பாண்டியக் கொடுமுடி என்ற பெயரையும் இவ்வூர் பெற்றது.

8) திதியன்

நலம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான பொன் இணர் நறுமலர்ப் புன்னை வெஃகி திதியனோடு பொருத அன்னி போல விளிகுவை கொல்லோ, நீயோ கிளி எனச் சிறிய மிழற்றும் செவ்வாய், பெரிய கயல்என அமர்ந்த உண்கண், புயல் எனப் புறம் தாழ்பு இருளிய பறங்கு குரல் ஐம்பால் மின்நேர் மருங்குல் ; குறுமகள் பின்னிலை விடாஅமடம் கெழு நெஞ்சே.

பாடலின் பொருள்:- நெஞ்சே! நீயும் உன் எண்ணங்கள் தான் பெரிது எனவும், உண்மை எனவும் எண்ணிப் பல சமயங்கள் பெரிதும் வருந்தித் துன்புறுகின்றாய். அச்சம் தரும் மலையில் பறந்து கடலில் கலக்கும் காவிரி ஆற்றில் பாண்மகளின் அண்ணன்மார்கள் நள்ளிரவில் சென்று பெரியவாளை மீன்களைப் பிடித்து மறுநாள் விடியலில் கொண்டு வருவார்கள்.

அழகிய பாண்மகள் அவைகளைக் கள்ளுக்கும், நெல்லுக்கும் தெருவில் விற்காமல் பெரிய முத்துக்கள் பதித்த நல்ல அணிகலன்களைப் பெற்றச் செல்லுதற்கு இடமான வளம் மிக்க ஊர்களையும், பலவேற்படைகளையும் உடையவன் எவ்வி என்பவன்.

மோதிரம் வெள்ளலூர் பாயும் புலி உருவம் பொறித்த திரம், கழுத்து அணி, வெள்ளநார், சுடுமண் காதணிகள், மகர மோதிரம், பாயும் புலி உருவம் பதித்த மோதிரம், கழுத்து அணி.

கல்தோன்றி மண்தோன்றாக் காலமுதலா நாங்கள் மல்வலயத் தோள்கொண்டு மாவலியர் எனஇருந்து காவலராய் கொங்கர்களாய் கமழ்அரசு புரிநாட்டில் தாவளம்சேர் மன்னனுந்தான் தனியரசாச் செய்ததனால் கொங்கன்என எம்நாமம் நலம்தருஞ்சீர்ப் பெருங்கீர்த்தி நிலைபெறு பாண்டியனின் குலம்பெருசு வந்துதித்த கோவேந்தர் ஐம்பிரியர் பூவலியர் மாவலியர் பொற்புமிகும் காவலியர் சேவகமே மிகுவேடர் செம்மைமிகு வேட்டுவர்கள்.

கொங்கு வேட்டுவ வேந்தர்கள்

1. வல்வில் ஓரி
2. தலையூர் காளிங்க அரையர் சுந்தர பாண்டிய சோழகோன்

3. அல்லாள இளைய நாயக்கர்
4. கடியநெடு வேட்டுவன்
5. வீர வெஞ்சமன்
6. செயங்கொண்ட சோழ கொங்காள்வான்
7. கொங்கு ராயர்

1) வல்வில் ஓரி

சிறப்புமிக்க வேட்டுவ அரசர்களில் முதன்மையானவர் கொல்லிமலையை ஆண்ட அரசர் வள்ளல் வல்வில் ஓரி. வல்வில் ஓரி மிகச் சிறந்த மன்னன். வேட்டுவர் குடியில் பிறந்த இவர் மிகச்சிறப்பாக ஆட்சி செய்து வந்தார். இவர் கொடைத்தன்மை மிக்கவர். இவர் மழவர் குடியைச் சார்தவர் என்றும் இலக்கியங்கள் போற்றும் இளமையான, அழகுமிக்க, கம்பீரமானவர். இவர் பல போர்களில் வெற்றி பெற்றுள்ளார். இவருடைய தந்தை வேட்டுவ மன்னன் ஆதன் ஓரி ஆவார் (புறநானூறு -153).

வல்வில் ஓரி ஆட்சிசெய்த பகுதிகள்:

வளப்பூர் நாடு, வாழவந்திநாடு, திண்ணனூர் நாடு, சேலூர் நாடு, அரியூர் நாடு, குண்டூர் நாடு, தேவானூர் நாடு, குண்டுனி நாடு, ஆலந்தூர் நாடு, திருப்புலி நாடு, எடப்புலி நாடு, சித்தூர் நாடு, பைல்நாடு, பெரக்கரை நாடு (ஒவ்வொரு நாடும் ஒரு கிராம ஊராட்சியைக் குறிக்கிறது) என 14 நாடுகள் உள்ளன. இந்த 14 நாடுகள் கொல்லிமலையைத் தலைமையிடமாகக் கொண்டு வேட்டுவ மாமன்னர் வல்வில் ஓரி ஆட்சி செய்து வந்தார்.

போர்களில் வெற்றி:

ஓரி என்ற குதிரை மேல் ஏறி ஓரியும், காரி என்ற குதிரை மேல் ஏறி காரியும் போரிட்டு காரியை வென்று காரியின் குறும்பொறை நன்நாடு முழுவதையும் கோடியர்க்கு அதாவது, யாழ் மீட்டும் பாணர்க்குப் பரிசளித்தார். இதன் மூலம் வல்வில் ஓரியின் வீரத்தையும், தமிழ்ப்பற்றையும், புலவர்களுக்கு வான் போல் வரையறாது வழங்கும் வள்ளல் தன்மையையும் நாம் அறிந்து கொள்ளலாம். மேலும் இவர் பலமுறை காரியை போரில் வென்று அவரது நாடுகளைக் கவர்ந்து புலவர்களுக்குப் பரிசாகக் கொடுத்துள்ளார். (சிறுபாணாற்றுப்படை - வரி 107-110)

மழவர் (இளமையானவர்) :

சங்க இலக்கியங்களில் அரசர்களைப் புகழ்ந்து பாடும்போது அவர்களின் இளமை, அழகு மற்றும் திறமைகளைப் பாடுவது இயல்பு. அவ்வாறு புலவர்கள் வல்வில் ஓரியை மழவர் கோமான் என்று அவரின் இளமையைப் புகழ்ந்து பாடியுள்ளார்கள். வல்வில் ஓரி மிக இளமையான அழகு உடையவர். கூர்மையான அறிவாற்றலும், மிகச்சிறந்த வில்லாற்றலும் மிக்கவர். இத்தகைய சிறப்புமிக்க வேட்டுவ அரசர் வல்வில் ஓரியின் புகழை சங்ககாலப் புலவர்கள் பலர் பாடியுள்ளனர். (நற்றிணை - 52 பாலை)

வீரம்:

ஒரு முறை வல்வில் ஓரி போர்ப் பயிற்சி செய்ய காட்டு விலங்குகளை வேட்டையாடுகிறார். அப்பொழுது அவரைச் சுற்றி இருந்த யானை, புலி, மான், பன்றி, உடும்பு ஆகிய ஐந்து வகை விலங்குகள் ஒருசேர வேட்டையாடுகிறார். இதை நேரடியாகப் பார்த் பாணர்களுக்குத் தன் தொழிலான இசை இசைப்பது மற்றும் பாடுவதை மறந்து மெய்மறந்து நின்றதில் வியப்பேதும் இல்லை (புறநானூறு - 153)

கொடை:

போரில் தான் வெற்றிபெற்ற காரியின் குறும்பொறை நாட்டை கோடியர்க்குத் தானமாகக் கொடுத்தார். தான் வேட்டையாடிய விலங்குகளை தன் கையால் சுட்டு, தேனுடன் கலந்து சிறந்த உணவாக அங்கு வந்த பாணர்களுக்குக் கொடுத்தார். தன்னிடம் பொருள் வேண்டி வந்தவர்களுக்கு வரையாது பொன்னால் அலங்கரிக்கப்பட்ட யானைகளையும், முத்து மாலைகளையும் பரிசளிப்பார். பெண்கள் விரும்பி அணியும் பொன்னால் செய்த குவளை மலர்களை விறலியர் களுக்குப் (பாணர்களின் மனைவிகள்) பரிசளிப்பார். இவ்வாறு தன்னைக் காணவரும் அனைவருக்கும் வானம் போல வரையாது வழங்கிய வேட்டுவ மாமன்னர் வல்வில் ஓரி தன் மக்களுக்கும், தமிழ்ப் புவலவர்களுக்கும் வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்துள்ளார். (சிறுபாணாற்றுப்படை வரி 107-110, கொங்குமண்டலச் சதகம் - 43) புறநானூறு - 152, 153)

2).தலையூர் காளி மன்னர்

கொங்குச் சக்கரவர்த்தி தலையூர் காளி மன்னர் கொங்கு (24) நாட்டின் தலைமை நாடாம் தலையநாடு. அத்தலைய நாட்டிற்குத் தலையூர் எனும் ஊரே தலைநகராகும். அத்தலைய நாட்டின் மாமன்னர் நம்பினோரை கைவிடாத நட்பின் இலக்கணம் போற்றும் கொங்குத் தலையூர் மாமன்னர் தலையூர் காளி மன்னர் ஆவார். இவர் கொங்கர் இனத்தைச் சார்ந்தவர். வேட்டுவர் குலத்தைச் சார்ந்தவர். போரில் முரட்டுத்தனமாகத் தண்டேறி எறிபவர். இவருடைய வம்சத்திற்குத் தண்டேறி முத்துராஜா பட்டமுண்டு. இவர் வேட்டுவர்களின் பாரம்பரியமான குலதெய்வம் காளி எனப்படும். கொற்றவை எனப்படும் போர்த்தெய்வத்தை வணங்கக் கூடியவர். இவர் மிகச்சிறந்த காளி பக்தர் என்பதனால் வெற்றித்திலகம் நெற்றியில் இடும் பழக்கமுடையவர். இவர் பிறந்த வேட்டுவர் குலம் தழைப்பதை நிறுத்தி வைப்பதற்காகப் போர்க்களத்தில் சூழ்ச்சிவலை பின்னப்பட்டபோது தன்னுடைய கொற்றவை குலதெய்வமான தலையூர் பிரம்மகாளி தேவியிடம் வணங்கி, சத்தியம் காக்கும் கொங்கு வேட்டுவர்குல அரசவம்சம் சத்தியமாய் வெட்ட வெட்ட தழைக்கும் என தன்னுடைய கொங்கர் படைக்கு வரம் வாங்கியவர். பொன்னர்சங்கர் கதையின் வெற்றித் திருமகன் ஆவார்.

3). அல்லாள இளைய நாயக்கர்

அரைய நாட்டு மாவீரன் அல்லாள இளையான் - கொங்கு 24 நாட்டில் அரைய நாட்டில் பரமத்தியில் கோட்டை கட்டி விஜய நகரப் பேரரசின் கீழ் சிற்றரசராக மழகொங்கு நாட்டை ஆட்சிபுரிந்து வந்தார். விஜய நகர வேந்தரால் இவருக்கு நாயக்கர் பட்டம் கொடுக்கப்பட்டது. இவர் மூல வேட்டுவர் குலத்தைச் சார்ந்தவர். இவர் ஜேடர்பாளையத்தில் ராச வாய்க்கால் வெட்டி அணைகட்டினார். மேலும் கொமாரபாளையம் வாய்க்கால், பொய்யேரி வாய்க்கால் போன்றவற்றையும் வெட்டியுள்ளார்.

இவர் 72 பாளையப்பட்டுகளின் தலைமைப் பாளையப்பட்டுக்காரர் ஆவர். மந்திரக்கோல் வைத்து ஆட்சிபுரிந்தவர். கொல்லிக் கிரியை உடையவர். இவருடைய ஆட்சி அதிகாரம் சேலம், ஆத்தூர், ஆறகளூர் வரை பரவி இருந்தது குறிப்படத்தக்கது. மழகொங்கு சித்திரமேழி சபை அதிகாரம் இவரிடமே இருந்தது. இவரை வாளரசர் மணவாளர் என்றே இவருடைய செப்பேடு கூறுகிறது.

4). கடிய நெடு வேட்டுவன்

கோடை மலையை ஆண்ட கடியநெடுவேட்டுவன். கடியநெடு வேட்டுவன் சங்ககால மன்னர்களில் ஒருவர். கோடை மலையை (இன்றைய கொடைக்கானல் மலையை) ஆண்ட மன்னர் ஆவார். இவர் வேட்டுவர் குலத்தைச் சார்ந்தவர். இவர் நாயுடன் வேட்டைக்குச் செல்லும் பழக்கமுடையவர். இவர் நாய்களைத் தன்னுடன் எப்போதும் கூடவே வைத்திருப்பவர். கடியம் என்பது நெடுவேட்டுவனது ஊர் ஆகும். இவ்வூர் கோடைமலைக்கடியில் உள்ளது.

5). வீரவெஞ்சமன்

களப்பிரர்களைப் புறங்கண்ட வீர வெஞ்சமன் - கொங்கு தேசத்தை ஆண்ட கொங்க மன்னர்களுள் வீர வெஞ்சமன் என்பவர் 5-ஆம் நூற்றாண்டில் வெஞ்சமாங்கூடலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தவர். இவர் ஒரு மிகச்சிறந்த சிவபக்தர். சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களையும் பிடித்து சிறைக்கூடத்தில் வைத்த அச்சுதன், பரசுராமன், களப்பாலன் ஆகிய நான்கு ராஜாக்களையும் எதிர்த்துப் போர் செய்து வெற்றி கனிந்து சிறப்புப் பெற்று வந்த வெஞ்சமன் வேட்டுவ ராஜக்களுடைய காணியும் பூமியும் கொங்குநாடு என கல்வெட்டுச் சாசனம் செய்துகொண்டார். சமணப் படைகளான களப்பிரர்களைப் புறங்கண்டு சைவத்தைக் கொங்குநாட்டில் நிலை நிறுத்தினார். கொங்கேழு சிவத்தலங்களில் ஒன்றான வெஞ்சாமங் கூடலூரில் உள்ள விருகிதீஸ்வரர் எனும் சிவாலயத்தை அமைத்தார். சோழமன்னனுக்கும், வெஞ்சமனுக்கும் எல்லைப் பிரச்சனை இருந்தது. ஏழுமுறை போர்தொடுத்து தோல்வியுற்ற சோழமன்னன் எட்டாவது முறையாகச் சூழ்ச்சியால்தான் இவரை வென்றான். இவரை வென்ற சோழமன்னன் இவரின் வீரத்தைப் பாராட்டி நடுகல் நட்டும், கல்வெட்டு செதுக்கியும் வைத்துள்ளான். இவருக்கு கொங்குநாடு வேட்டுவக் கவுண்டர் இனமக்கள் சிலையும் மணிமண்டபமும் வெஞ்சமாங் கூடலூரில் அமைத்துள்ளனர்.

6). செயங்கொண்ட சோழ கொங்காள்வான்

முதலாம் குலத்துங்க சோழன் ஆட்சி காலத்தில் (கி.பி 1070 -1125) வடகரை நாட்டைச் சிற்றரசாக இருந்து ஆட்சி செய்தவர். இவர் செம்ப வேட்டுவர் குலத்தைச் சார்ந்தவர். இவர் கொங்கு நாட்டில் முதன்முதலில்

பவானி ஆற்று நீரை குளவாற்றூர் என்ற இடத்தில் நீரைத்தேக்கி (இக்குளம் அட்டி) கால்வாய் வெட்டிய பெருமை இவரையே சாரும்.

முதலாம் குலத்துங்க சோழன் ஆட்சி காலத்தில் (கி.பி. 1070-1125) 55-ஆவது (1125) ஆட்சி ஆண்டில் சோழ கொங்காள்வான் கொடிவேரியில் பவானி ஆற்றுநீர் பாயும் இடத்தை அகலப்படுத்தி நீரைப் பெருங்கற்களைக் கொண்டு தேக்கி கால்வாய் வெட்டினான். இந்தச் செய்தியை, பவானி ஆற்றங்கரையில் உள்ள கல்வெட்டு கூறுகிறது. (இக்கல்வெட்டு தற்போது வ.ஊ.சி. பூங்கா அருங்காட்சியகத்தில் உள்ளது) கொடிவேரி அணை அமைந்துள்ள ஊரின் பெயர் குளவாற்றூர் என்பது குறிப்பிடத்தக்கது.

7). கொங்குராயர்

மட்டுக்கடங்காத கொங்குராயர் - கொங்கின் 24 நாட்டில் மண நாட்டை ஆண்டவர் கொங்கு ராயர். இவர் வெங்கச்சி வேட்டுவர் குலத்தைச் சார்ந்தவர். மட்டுக்கடங்காத மண நாட்டான் என்று கூறுவார். கடவுடளிடம் வாள்முனையில் வீரத்தை வரமாக வாங்கிய கொங்கு ராயன் என அழைக்கப்படுவார்.

இவர் செங்கோல் கொண்டு ஆட்சி புரிந்தவர். கொங்கு நாட்டில் மைசூர் உடையார் ஆட்சி வராமல் இருக்க நஞ்சராயரை எதிர்த்தான். கொங்கு நாட்டில் உள்ள சில மன்றாடியர்கள் வஞ்சகத்தால் சூழ்ச்சியால் அவர்களின் உதவியால் விசயமங்கலத்து கண்ண பறையர் என்ற கைக்கூலியால் வெட்டிக்கொல்லப்பட்டார்கள். அதில் இவரும் அகப்பட்டார்.

வேட்டுவர் சமூக ஆவணத்தின்படி விச்சிக்கோ, பேகன், புன்றுறை, பழையன், நன்னன், தாமான், தோன்றிக்கோன், கொண்கானங்கிழான், கொடுமுடி, குமணன், கடியநெடு வேட்டுவன், ஓரி, ஏற்றை அத்ரி, அதியமான், ஆய், ஈர்த்தூர் கிழான். இவர்களெல்லாம் கொங்கர், கோசர், மழவர், வேளிர் மரபில் வந்த அனைவரும் வேட்டுவ அரசர்களே என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

ராஜவேட்டுவர்

கவிதா வாழைபரமேஸ்வரன்
ஒசூர்.
அலைபேசி: 8585868632

முன்னுரை

வேட்டுவர் என்றால் தலைவன் அரசன் அனைவருக்கும் உணவு கொடுபவன், உதவி செய்பவன் என்று பல பொருள்களில் பயின்று வருகிறது வேள் வேளிர் வேடர் வேட்டுவர்.

வேள் வேளிர் வேடர் வேட்டுவர்

வேட்டுவர் என்பது பெயர்ச் சொல்லா அல்லது வினை யாலனையும் பெயரா என்பதைக் குறித்தும் ஆய்வுகள் உண்டு. வேட்டு என்னும் சொல் வேள் என்பதிலிருந்து தோன்றியிருத்தல் வேண்டும் என்று அறிஞர்கள் சுட்டுவர்.

வேள் என்னும் நிலைமொழி 'து' (உணவு) வருமொழியுடன் புணர்ந்து வேட் என்ற தொடக்கத்தைப் பெறுகிறது

வேள் +து =வேட்டு

வேட்டு + அர் = வேட்டுவர் (உணவு கொடுத்து உதவி செய்யும் அரசன்)

வேள் என்றால் விரும்பத்தக்கவன், தலைவன் என்று பொருள்.

வேள் - விரும்பத்தக்கத் தலைவன்.

வேள் என்னும் சொல் அரசன் பெயரோடு சேர்ந்து வந்தால் அந்த அரசனைக் கொடையாளி என உணர்ந்து கொள்ளவேண்டும்.

வேள் என்னும் சொல் உதவி என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது

வேளான் - அரசியல் அதிகாரிவேட்டை, வேட்டுவன் போன்ற சொற்கள்

*விள்/ *விய் போன்ற வேரில் வந்திருக்க முடியும். ஏனெனில் மேற்கண்ட வேருக்கு துளைத்தல், பிளத்தல், வெட்டுதல் போன்ற பொருள் உண்டு.

தொடர்புடைய சொற்கள் : விரிவு, விளி, பிரி, (வ் கர ப்கரப் போலி)

வேள் + து = வேட்டு.

வேட்டு + அர் = வேட்டுவர்

வேளிர் = வேட்டுவார் குலம்

வேளிர் குலத் தலைவன்

செவ்வேள்; செவ்வேள் முருகப் பெருமானைக் குறிக்கும். முருகவேள் எனினுமாம். கருவேள் மன்மதனாம் மாறனைக் குறிக்கும். வேள் முல்லை மற்றும் குறிஞ்சித் தலைவர்க்காம் பெயர்.

இருதிணைக்கும் உரியவர்கள்

வேட்டுவர்க்குத் தமிழ்நாட்டு வரலாற்றில் குறிப்பாக, கொங்கு நாட்டிற்குத் தனித்ததோர் சிறப்பும் உண்டு. பழமைமிக்க இக்கொங்கு நாடு சங்க காலத்திலேயே தனி நாடாகக் கருதப்பட்டது. இக்கொங்கு நாட்டின் பூர்வகுடிகள் வேட்டுவர்களே என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. புராணங்களும், பழங்கதைகளும் இவர்களைக் குருகுலத்தினர் எனக் கூறுகின்றன. போர் குடியான வேட்டுவரின் முதன்மைத் தொழில் போர் அரசு நிர்வாகம் மக்களைப் பதுகாத்தல். இவர்கள் கொங்கு நாட்டின் பல பகுதிகளில் மன்னர்களாகவும், ஆட்சியாளர்களாகவும், படைத் தலைவர்களாகவும் விளங்கினர் என்பதனைப் பல சான்றுகளால் அறியலாம். இவர்கள் அரச குலத்தவர் என்பதனைக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் உறுதி செய்கின்றன. கொங்கு தேச ராஜாக்கள் எனும் நூல் இவர்களை ராஜா வேடர்கள் என்றே சுட்டுகின்றது.

வேட்டுவரின் பல்வேறு பட்டப் பெயர்கள்

வேட்டுவர்கள் வேடர், வேட்டுவர், வெற்பன், சிலம்பன், எயினன், ஊரன், வேட்டைக்காரன், வேடுவன், வேட்டுவன், வேட்டுவதியரையன், ஊராளி, கொங்கர், நாடாழ்வான், ஊராளி வேட்டுவன் (ஊராண்மை), பாண்டிய புத்ரவர்க்கம், குருகுலராயர், முதலான பெயர்களால் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் குறிக்கப் பெறுகின்றனர். கவுண்டர்,

காடவராயர், மன்றாடியார், பல்லவராயர், வானவதிராயன், நாயக்கர், காடுவெட்டி, வள்ளல், கொங்குராயர், ராயர், காங்கயன், ஊர்க்கவுண்டன், கங்கதிராயர், பிள்ளை முதலானப் பட்டங்களை இவர்கள் பெற்றிருந்தனர் என்பதனைச் சாசனங்களால் அறிகிறோம். வேட்டுவ ராசாக்கள் பல்லவராயர், பூலுவராயர், சந்தனராயர், நரசிங்கராயர், வாளரசர், வாளரச மணவாளர் முதலான பெயர்களால் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுகின்றனர்.

இவர்கள் காளஸ்திரி மலைக் காவலர், சிவராத்திரி கண்ட பெரியோர், சித்திரபுத்திரர், கொங்கு தேசத்திற்கு உரியோர், கொல்லிமலைக்கு உரியவர்கள், சித்திர மேழிக் கொடியைப் படைத்த பெரியோர், வெற்றி வாளரசர், வங்கக் கடலொலி கைவர வாகை மாலை சூடியவர், கற்றவர்கள் என்று அல்லாள இளையான் செப்பேடுகளில் குறிக்கப் பெறுகின்றனர்.இவர்களுள் வேட்டுவன், வேடன், காவிலவன், மாவிலவன் பூவிலவன் எனும் ஐந்து பிரிவுகள் இருந்தன. பழங்குடியினரான. வேட்டுவரிடையே கணக்கில் அடங்காத கூட்டப் பெயர்கள் இருந்தன. எனவே தான் வேர் வகையை எண்ணினாலும், வேட்டுவர், வகையை எண்ண முடியாது எனும் முதுமொழி பிறந்தது. இருப்பினும் பல சான்றுகளின் அடிப்படையில் இவர்களிடையே ஏறத்தாழ 415 குலப் பிரிவுகள் இருந்தன என்பது அறியப்படுகின்றது. போர் தொழிலை மேற்கொண்ட இவர்கள் வாழ்வில் படிப்படியான முன்னேற்றம் ஏற்பட்டது. இவர்களுள் பலர் ஓரிடத்தில் நிலையாகத் தங்க ஆரம்பித்தனர். சிலர் ஆடுமாடுகளை வளர்த்தனர். வேட்டுவரின் இம்முன்னேற்றம் குறித்து, எட்கார் தர்ஸ்டனும், 'தென்னிந்தியக் குலங்களும், குடிகளும்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். பின்னர் இவர்கள் தலைவர்களாக குறிப்பாக படைத் தளைவாராக இருந்தனர் எனவே வேளான் (குறுநில அரசர்) என்றும் அழைக்கப்பட்டனர்.

வேட்டுவ அரசர்கள்

1. வல்வில் ஓரி
2. தலையூர் காளிங்க அரையன் சோழகோன்
3. மட்டுகடங்கா கொங்கு ராயர்
4. கடியநெடு வேட்டுவன்
5. அல்லாள இளையான்

6. கொங்காள்வான்
7. வீர வெஞ்சமன்
8. குன்னி வேட்டுவ ராஜா
9. கண்டீரக் கோப்பெருநள்ளி
10. செய்யான் பல்லவராயர்
11. கொடுமுடி அரசன்
12. வில்லி வேட்டுவ ராஜா
13. வேள் ஆய் இனியன்
14. சிறுத்தலை வேட்டுவ ராஜா
15. கஜேந்திர மாகாராஜன்
16. வேள் ஆய் அண்டிரன்
17. நீலிய கூடன்
18. குமணன்
19. பிட்டன் கொற்றன்
20. ஆய் எயினன்வேளாண் (தலைவன்) ஆகிய கூத்தன் கரையன் (வேட்டுவர்) என்பவா? 'முக்கண்ண' என்கிற ஏரியை உருவாக்குகினார்.

பல்லவராயன் எனும் பட்டம்

மன்னர்கள் தங்கள் உயர் அதிகாரிகளுக்கு பட்டப் பெயர்களை அளிப்பது வழக்கம். அப்படிப்பட்ட பட்டப் பெயர்களில் "பல்லவராயன்" என்பதும் ஒன்று. வேட்டுவர் சமுதாயத்தில் பலர் அச்சிறப்புமிகு பல்லவராயன் பட்டத்தைப் பெற்றுள்ளதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

"அறச்சலூரில் கரைய வேட்டுவரில் செய்யான் பல்லவராயன்"

"பட்டாலியில் காவலன் வெண்கொற்றரில் சோணாப் பல்லவரையன்"

"முத்தூர்காவலன் வளவரில் உத்தமசோழப் பல்லவரையன்"

"ஈங்கையூரில் காவலன் குறும்பிள்ளரில் போத்தன் செய்யான் ஆன குலோத்துங்க சோழப் பல்லவரையன்"

"கரூரில் கரடி வேட்டுவரில் மானாபரணப் பல்லவராயன்"

"கவையன்புத்தூர்பூலுவர் முட்டைகளில் அடையன் போத்தன் ஆன உத்தம சோழப் பல்லவரையன்" இவர்கள் அனைவரும் அரசர்களால் சிறப்பிக்கப்பட்ட சிற்றசர்கள் ஆவர்.

வேட்டுவர் சமூகத்தில் பலர் "கூத்தன்" என்று பெயரைப் பெற்றுள்ளனர். கூத்தன் என்பது தில்லையில் நடனம் ஆடுகின்ற நடராசப் பெருமானையும் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆனால் கூத்தன் (கூத்தாடுகின்ற கூத்தன்), ஆனந்தக் கூத்தன் என்பன போன்ற தொடர்களால் இவர்கள் சிவ பக்தர்களாக இருந்தனர்.

"பட்டாலி காவலர் குறும்பிள்ளரில் கூத்தன்
கூத்தனான வாழவந்தான்"

"பட்டாலி காவலன் குறும்பிள்ளரில் கூத்தன்
கூத்தனான அதியமான்"

"பட்டாலி கூத்தன் கூத்தன் ஆன அகளங்க நாடாழ்வான்"

"பந்தரத்தை பூவாணி வேட்டுவரில் பெரும்பற்றார்
கூத்தன் உடையார் ஆன ஆன்ந்தக் கூத்தர்"

"வடகரையாற்றூர் புல்லை வேட்டுவரில்
கூத்தாடும் தேவன் இருங்கோவே ளனான வலங்கை மீகாமன்"

என்பன கல்வெட்டுகளில் காணப்படும் சில சிவபக்தர்களான குறுநில மன்னர்கள் ஆவர்.

பட்டாலிக் கல்வெட்டு ஒன்றில் யாழ்வல்லான் என்று ஒருவர் குறிக்கப்பட்டுள்ளார். அக்காலத்தில் பட்டாலி வேட்டுவ குலப் பெருமக்கள் கலைப் பயிற்சி உடையவர்களாகவும், கலையார்வம் மிக்கவர்களாகவும் இருந்துள்ளனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

வேட்டுவரின் குலங்களும், கூட்டப் பெயர்களும்

கொங்கு நாட்டு வேட்டுவரிடையே பல குலப் பிரிவுகள் காணப்படுகின்றன. இவர்களிடையே 1) வேட்டுவர், 2) வேடர், 3) காவிலுவர் (காவலர்), 4) மாவிலுவர் (மாவலர்), 5) பூவிலுவர் (பூவலர், பூலுவர்) எனும் பெரும் பிரிவுகள் இருந்தனவென்று பழங்கால இலக்கியங்கள் கூறுகின்றன.' இவர்கள் போர்த் தொழிலில்ஈடுபட்டவர்

எனலாம். வேர் வகையை எண்ணினாலும் வேட்டுவர் வகையை எண்ண முடியாது எனும் முதுமொழி வேட்டுவரிடையே நிலவிய எண்ணிறந்த குலப்பிரிவுகளை உணர்த்துகின்றது. இவை தொழில் அடிப்படையில் ஏற்பட்டப் பிரிவுகள் ஆகும். காவலர் என்போர் நாடு காவல் தொழிலில் (Watch and Ward) ஈடுபட்டிருந்தனர். பூவிலுவர் நிலம் தொடர்பான அதாவது வேளாண்மை புரிந்தனர். மாவிலர் என்போர் பெரும் வலிமை படைத்தவர்.

வேட்டுவர்கள் கூட்ட (குலம்) அடிப்படையிலும் பல பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். சிலர் தாம் எந்த ஊரிலிருந்து குடி பெயர்ந்தனரோ அந்த ஊரின் பெயரைத் தமது கூட்டத்திற்கு வைத்துக் கொண்டனர். சிலர் பறவைகள், விலங்குகள், மரம், செடி, கொடி, வீரம், பண்பு ஆகிய வற்றையும் தமது கூட்டப் பெயர்களாகக் கொண்டனர். வேட்டுவரிடையே ஏறத்தாழ 360 கூட்டப் பெயர்கள் காணப்படுகின்றன, இவற்றை நாம் கல்வெட்டு, செப்பேடு, நடுகல், வேட்டுவர் கலிவெண்பா, பஞ்சவர்ண ராஜ காவியம், இலக்கியம் - ஆகியவற்றின் வாயிலாக அறிகிறோம்.

இக்கூட்டப் பெயர்கள் எவ்வாறு தோன்றின? என்பதற்கான சில விளக்கங்களையும் இங்கே காணலாம். சிலவற்றிற்கான பெயர்க்காரணங்கள் முழுமையாக ஆராயப்படவில்லை. இவற்றுள் கரடி, கடம்புலி, புலி, நரிய, ஆமை, வராஹ ஆகியன விலங்குகளின் பெயர்களையும், காடை, குறுங்காடை, கௌதாரி, பறவை, மயில், அந்துவ பூச்சந்தை ஆகிய பெயர்கள் பறவைகளின் பெயர்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தன. கொன்னை, தும்பை, புட்ப ஆகிய வேட்டுவ இனப் பிரிவுகள் பூக்களின் பெயரால் ஏற்பட்டன. கீரை, மணிய, பன்ன, புல்லை, பனைய, வாகை,வன்னி, புன்ன, விறகு ஆகியன செடி, மரங்களின் பெயர்களைக் கொண்டுள்ளன.

வேட்டுவர்கள் வீரப் பெருங்குடி மக்கள். போர் அவர்களுக்கு ஒரு பொழுதுபோக்கு, விழுப்புண் படாத நாட்களை வீண் நாட்களாகக் கருதுபவர். இவர்கள் பலவகைப்பட்ட படைப் பிரிவுகலை கையாண்டு உள்ளார்கள் கீழ்க்காணும் கூட்டப் பெயர்கள் இவற்றை உணர்த்துவதாக உள்ளன. சொட்டை என்பது ஒரு படைக் கருவி.மூலப் படை , கரிப்படை, பரிப்படை, உரிமைப் படை, சாந்தப் படை, மாந்தப் படை, பாசறை, வீர, சொட்டை, பறைப்படை, பம்பை - ஆகியன போர்க்களத்தில் வாசிக்கப்படும் இசைக்கருவிகள்.

கல்வெட்டுகள் வேட்டுவர், பூலுவர், காவலர் - என்னும் மூன்று பிரிவுகளை மட்டுமே குறிப்பிடுகின்றன. வேட்டுவரின் பல்வேறு பண்புகளை உருவத்தை, குணங்களை விளக்குவதாகவும் சில கூட்டப் பெயர்கள் அமைந்துள்ளன. சில உடலின் பகுதிகளையும் குறிப்பன. அவை முறையே மான, முரட்டு, மின்ன, மினுக்க, பொன்ன, சிறுத்தலை, மூலை.குடுமி, செம்ப, வெள்ளை என்பனவாகும். சிறுத்தலை வேட்டுவன் எனும் பெயரில் வீரத் தலைவன் ஒருவன் இருந்தான். இவ்வீரன் கபிலர் மலை முதல் கை தீண்டா பாழி வரை, ஆண்டான்கோயில் முதல் தென்னிலை வரை உள்ளப் பகுதிகளை ஆண்டு வந்தான். அவன் வழியினரும் அவனது நினைவாக சிறுத்தலை வேட்டுவர் எனப்பட்டனர்.

பாண்டிய வேட்டுவர், சேர வேட்டுவர் எனும் பெயர்கள் அவர்களது வழி தோன்றல்கள் அவர்கள் எடுத்துக்காட்டாக பாண்டிய வேந்தனின் முன்னோன் (அல்லது தலைவனின்) வழி வந்தவர்கள் பாண்டிய வேட்டுவர் ஆயினர்.

தமது சொந்த ஊரின் பெயரை நினைவு கூர்தல் பொருட்டும் குலப் பெயர்கள் இடப்பட்டன. எடுத்துக்காட்டாக கொல்லி மலையில் வாழ்ந்து, கொல்லி மலையை விட்டு வெளியூர்களுக்குக் குடி பெயர்ந்தவர்கள் கொல்லி வேட்டுவர் எனப்பட்டனர். கீழ்க்காணும் பட்டியல் இவர்களது பூர்வீகத்தை நினைவுபடுத்தும்.

இடத்தின் பெயர்	**கூட்டப் பெயர்**
விஜயமங்கலம்	விஜயமங்கல வேட்டுவர்
வராகமலை	வராக வேட்டுவர்
கொடுமுடி	கொடுமுடி வேட்டுவர்
காக்காவாடி	காக்காவாடி வேட்டுவர்
தென்னிலை	தென்னிலை வேட்டுவர்
பூவானிய நாடு	பூவானிய வேட்டுவர்
அந்தியூர்	அந்தி வேட்டுவர்
சலங்கபாளையம்	சலங்கை வேட்டுவர்
ஆப்பக்கூடல்	ஆப்ப வேட்டுவர்
கண்ணாடிப்புத்தூர்	கண்ணாடி வேட்டுவர்

கரடிப்பட்டி	கரடி வேட்டுவர்
வெங்கம்பூர்	புள்ளை வேட்டுவர்
நஞ்சைக்காளிக்குறிச்சி	நஞ்சை வேட்டுவர்
மலையம்பாளையம்	மலைய வேட்டுவர்
மூலனூர்	மூலவேட்டுவர்
பருத்திப்பள்ளி	பருத்திவேட்டுவர்
காட்டுப்பாளையம்	காட்டுவேட்டுவர்
கரட்டாம்பாளையம்	கரட்டுவேட்டுவர்
மின்னவேட்டுவன்பாளையம்	மின்னவேட்டுவர்
வராகமலை	வராகவேட்டுவர்
வடுகம்பாளையம்	வடுகவேட்டுவர்
பொன்னம்பாளையம்	பொன்னவேட்டுவர்

இவ்வாறு சில வேட்டுவ இனப் பிரிவினரின் பெயரால் சில ஊர்கள் பெயரிடப்பட்டுள்ளதை இங்கு நாம் அறியலாம். இவ்விதமாக புன்னம், படடாலி, பௌத்திரம், ஈங்கூர், நொய்யல் முதலான ஊர்களைச் சேர்ந்தவர்கள் தமது குலப் பெயரை ஊர்ப் பெயருடன் அமைத்துக் கொண்டனர். கரைய குலச் சொக்கனேந்தல் என்பானின் பெயர் பழமங்கலம் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளதனைச் சுட்டலாம். ஊராளியாக, கிராமத் தலைவன் போன்று விளங்கியவன் ஊராளி வேட்டுவன் எனப்பட்டான். எடுத்துக்காட்டாக 'ஊராளி வேட்டுவன் அழகன் காளி' என வரும் துக்காச்சி நடுகல் கல்வெட்டைக் குறிப்பிடலாம்.

கவுண்டர் பட்டம்

வேட்டுவர், 'கவுண்டர்' எனும் பட்டம் கொண்டுள்ளனர். காமிண்டன் என்பதே கவுண்டர் என ஆயிற்று. காமிண்டன் என்ற சொல்லிற்கு வலுவானவன், செல்வாக்கு மிக்கவன் எனும் பொருள் உண்டு. காமிண்டன் எனும் சொல் பயின்று வரும் கல்வெட்டுகள் அனைத்தும் நிலம், நீர்ப்பாசனம் போன்ற வேளாண்மை தொடர்பான செய்திகளாகவே உள்ளன. இச்சொல் கர்நாடகக் கல்வெட்டுக்களில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பயிலப்பட்டு வருகின்றது. தருமபுரிக் கல்வெட்டுக்களில் இச்சொல் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. காமிண்டன் எனும் பெயரே திரிந்து பின்னாளில் கவுண்டன், கவுட என்று

மருவியிருக்கலாம். கர்நாடக தேசத்தில் கிராமத் தலைவனாகத் திகழ்பவன் 'கௌடா' என அழைக்கப்பட்டான். தமிழில் காமுண்டன் என்பதுவே கன்னடத்தில் 'கௌடார்' ஆகும். கா எனும் சொல் மக்களைக் காப்பவன் எனும் பொருள்படும். எனவே மக்களைக் காக்கும் வலிமை மிக்கத் தலைவன் 'காமிண்டன்' எனப்பட்டான். பின்னர் படைத்தலைவர்களுக்கும் கவுண்டன் எனும் பட்டம் வழங்கப்பட்டது. பிற்காலத்தில் சமுதாயத்தில் அந்தஸ்தும் மதிப்பும் பெறுவதற்காக வசதி படைத்த சிலர் இப்பட்டத்தைச் சூடிக் கொண்டனர். இன்று இது சாதிப் பட்டமாக மாறிவிட்டது. வேட்டுவர் கவுண்டர் எனும் பட்டத்தைக் கொண்டுள்ளனர்.

கொங்கு 24 நாட்டுக்கும் உரிய வேட்டுவர் குலப் பெருமக்கள்

(1) பூந்துறை நாடு- வேந்த வேட்டுவர்

(2) வடகரைநாடு - கரடி வேட்டுவர்

(3) காஞ்சிக் கோயில் நாடு - வேம்ப வேட்டுவர்

(4) ஒடுவங்க நாடு - இலங்கை வேட் டுவர்

(5) குறுப்புநாடு - உரிமைப்படை வேட்டுவர்

(6) ஆறுநாடு - அரிச்சந்திர வேட்டுவர்

(7) பொன்குலுக்கிநாடு - தணம்ப வேட்டுவர்

(8)மணநாடு - வெங்கச்சி வேட்டுவர்

(9) காவடிக்காநாடு - மணிய வேட்டுவர்

(10)வாரக்கநாடு -மோக்காளி வேட்டுவர்

(11) அண்ட நாடு - சுண்டை வேட்டுவர்

(12) வைகாவூர் நாடு - வாகை வேட்டுவர்

(13) நல்லுருக்கா நாடு - புல்ல வேட்டுவர்

(14) தென்கரை நாடு - புன்னாடி வேட்டுவர்

(15) தட்டய நாடு - பட்டாலி வேட்டுவர்

(16) தலைய நாடு - கதுகால வேட்டுவர்

(17) சேலநாடு - சேர வேட்டுவர்

(18) காங்கய நாடு - சாந்தப்படை வேட்டுவர்

(19) வெங்கல நாடு - மீன வேட்டுவர்

(20) கிழங்கு நாடு- கிழங்க வேட்டுவர்

(21) நரைய நாடு - காட்டு வேட்டுவர்

(22) அரையநாடு - கரைய வேட்டுவர்

(23) பூவாணிநாடு - பூவாணி வேட்டுவர்

(24) எழுகரை நாடு - உசர வேட்டுவர் - (அப்பிச்சிமார் காவியம்)

ஆய்வு நூல்கள்:

1. வேட்டுவர் சமூக ஆவணங்கள்- புலவர் இராசு.
2. வேட்டுவர் சமூகம் ஓர் வரலாற்றுப் பார்வை - சிற்பி ராஜசேகர தங்கமணி.
3. அப்பிச்சிமார் காவியம் - புலவர் இராசு.

மதுரை புலிக்கவுண்டர்

முனைவர் வே.ப.சுதாமகேஸ்வரி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்.

முன்னுரை

உலகப்புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு எனும் வீரவிளையாட்டு தொன்று தொட்டு அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு ஆகிய இடங்களில் ஆண்டுதோறும் பொங்கல் திருநாளன்று வீரவிளையாட்டாக நடைபெற்று வருகிறது. இந்த விளையாட்டை காண வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான மக்கள் கூடும் சிறப்புப்பெற்ற ஊர் இது.

தமிழகத்தின் தென்பகுதியான மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஏ.புதுப்பட்டியில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து தமிழற்கு பெருமை சேர்த்தவர். வேங்கை வேட்டுவர் குலதை சார்தவர் மதுரை புலிக்கவுண்டர் ஐயா அவர்கள் உயர் கல்வி பயிலவில்லை என்றாலும் கேள்வி ஞானத்தாலும், அனுபவத்தாலும் உயர் கல்வி கற்றோருக்கு ஈடாகத் திகழ்ந்தார். அவர் பெயருக்கேற்றவாறு துணிச்சலும், அஞ்சாநெஞ்சமும், சொல்திறனும், செயல்திறனும் பெற்றிருந்தார். அலங்காநல்லூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் அனைத்து சமுதாய மக்களும் சாதி மதம் பாராமல் தங்கள் குடும்பப்பிரச்சனைகளை ஐயா அவர்களிடம் முறையிட்டு அவர் விசாரித்து நல்ல தீர்ப்பு சொல்லி எல்லோரையும் ஒற்றுமையாக வாழவைத்த குடும்பங்கள் எண்ணற்றவை.

அரசியலில் ஈடுபாடு

மதுரை புலிக்கவுண்டர் சிறந்த காந்தியவாதி 1954 முதல் 1957 வரை மதுரை ஜில்லா காங்கிரஸ் கட்சித்தலைவராக இருந்தார். நம்நாடு சுதந்திரம் பெறும் முன்பிருந்தே அதாவது 1929 முதல் மதுரை ஜில்லா போர்டுக்கு அலங்காநல்லூர் பகுதிக்கு அந்த ஜில்லா போர்டு

கலைக்கப்படும் வரையிலும் இவரையே தொடர்ந்து மக்கள் தேர்ந்தெடுத்து வந்தார்கள்.

இவர், பதவிக்காக யாரையும் நாடியதில்லை. ஆனால் பதவிகள் தொடர்ந்து இவரை நாடி வந்தன. நிலக்கோட்டை, சோழவந்தான் சட்டமன்றத் தேர்தல்களில் இவர் யாரைக் கைகாட்டினாரோ அவர்களே வெற்றி பெற்றனர். மேலும் மக்களுக்கு சேவை செய்யக்கூடிய கூட்டுறவு ஸ்தாபனங்களில் இவரின் பங்கு மிக அதிகமாக இருந்தது.

சமூகப்பணி

மதுரை புலிக்கவுண்டர் ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். தமது ஊரில் ஆசிரமும், கோவிலும் அமைத்துள்ளார். மதுரை அழகர் கோயிலில், கள்ளழகர் தேவஸ்தானக் கமிட்டி மெம்பராக பலகாலம் இறைபணியாற்றியிருக்கிறார்.

அலங்காநல்லூரில் சர்க்கரை ஆலை அமைவதற்கும், பாலமேடு அருகில், சாத்தியாறு அணை கட்டுவதற்கும், அலங்காநல்லூர் உயர்நிலைப்பள்ளி கட்டிடம் கட்டுவதற்கும் காரணகர்த்தாவாக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு வேட்டுவக்கவுண்டர் மகாஜன சங்கத்தலைவராக இருந்து முதல் மாநாட்டை வத்தலகுண்டிலும், இரண்டாவது மாநாட்டை அரச்சலூரிலும் சிறப்பாக நடத்தி நம்மவர்கள் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றுள்ளார்.

புலிக்கவுண்டர் வகித்த பதவிகள் விபரம்

1. கல்லணை கிராம முன்சீப்
2. கல்லணை ஊராட்சி மன்றத்தலைவர்
3. அலங்காநல்லூர் கூட்டுறவு மேற்பார்வை யூனியன் தலைவர்
4. அலங்காநல்லூர் கூட்டுறவு ஸ்போர்ட்ஸ் தலைவர்
5. தொடர்ந்து ஜில்லாபோர்டு காங்கிரஸ் உறுப்பினராகவும், 1949 முதல் 1952 வரை ஜில்லாபோர்டு கொறடாவாகவும் தொடர்ந்து மதுரை ஜில்லா காங்கிரஸ் தலைவராகவும் இருந்துள்ளார்.

6. மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி உறுப்பினராகவும், 1944 முதல் 1952 வரை உப தலைவராகவும், பின் 1963 வரை தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.
7. தமிழ்நாடு வேர்ஹவுஸ் மதுரை கிளைத் தலைவராக இருந்துள்ளார்.
8. அலங்காநல்லூர் கூட்டுறவு தேசிய சர்க்கரை ஆலைக்கு வங்கியின் பிரதிநிதியாக இருந்துள்ளார்.
9. சென்னை மாநில அடமான வங்கி நிர்வாக உறுப்பினராக 1963 வரை இருந்துள்ளார்.
10. மதுரை மாவட்ட சப்ளை மார்க்கெட்டிங் சங்க தலைவராக 1963 வரை இருந்துள்ளார்.
11. தமிழ்நாடு கூட்டுறவு யூனியன், சென்னை மத்திய நில அடமான வங்கி நிர்வாக உறுப்பினராக இருந்துள்ளார்.

முடிவுரை

மதுரையைப் பூர்வீகமாகக் கொண்ட நடிகர் விஜயகாந்த் நடித்து அவருக்குப் பெரும் புகழைத் தேடித்தந்த சின்னக்கவுண்டர் எனும் திரைப்படம் மதுரைப் புலிக்கவுண்டர் அவர்களின் வாழ்வியல் நிகழ்வுகளை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டது என்பதிலிருந்து ஐயாவைப்பற்றி இன்றைய தலைமுறையினர் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். ஐயா அவர்கள் பொதுவாழ்வில் பல பதவிகளை வகித்து சிறப்பான பணி செய்து புகழ்பெற்றுள்ளார். ஐயா அவர்கள் 1963 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகம் சென்றார்.

புலிக்குத்திக் கற்களில் வேட்டுவர் வீரமும் திறமும்

வீ. குலோத்துங்கராயர்
நிர்வாகக்குழு உறுப்பினர்
ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை
94878 22333

முன்னுரை

பண்டைய காலங்களில் கொங்கு நாட்டில் வேட்டுவர்கள் கால்நடைகள் வளர்ப்பு மற்றும் விவசாயம் செய்வதிலும் பெரும்பங்கு வகித்தனர். குறிஞ்சி நிலங்களில் வனவிலங்குகள் அதிகமாக வாழ்வதால் புலிகளின் தாக்குதல்களை அடிக்கடி சமாளிக்க வேண்டியிருந்தது. புலியுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தவனுக்கு நடுகல் எடுத்து வணங்கி வந்தனர். அவன் வழிவருவோரும் தமது பெயருக்கு முன்னோ அல்லது பின்னோ புலிக்குத்தி என்ற பட்டப் பெயரை சூடிக்கொண்டனர்.

புலிக்குத்திக் கற்கள்

1. திருப்பூர் மாவட்டம் மூலனூரிலிருந்து 6 கி.மீ தொலைவில் போளரை என்னும் பகுதியில் உள்ள புலிக்குத்திக்கல்லை இப்பகுதியில் வசிக்கும் மக்கள் புலிக்குத்தி வேட்டுவர் சாமிக்கல் என்றழைத்து வழிபட்டு வருகின்றனர்.

2. மூலனூரிலிருந்து வெள்ளகோவில் செல்லும் வழியில் இராக்கியாவலசு என்னுமிடத்தில் உள்ள புலிக்குத்திகல்லை புலிக்குத்தி வேட்டுவ சாமிக்கல் என்று இப்பகுதி மக்கள் அழைத்து வருகின்றனர்.

3. கவுந்தப்பாடி - பேருந்து நிலையம் அருகில் வேடியப்பன் கோவிலில் புலிக்குத்தி சாமிக்கல் உள்ளது. இப்பகுதி மக்கள் வேட்டுவ அய்யன் என அழைத்து வழிபட்டு வருகின்றனர். இக்கல்

மின்ன வேட்டுவரில் ஒருவர் 13 புலிகளைக் கொன்று 14வது புலியைக் கொல்லும்போது இறந்துவிட்டார். இறந்த மின்ன வேட்டுவருக்காக எடுக்கப்பட்ட நடுகல் எனக் கூறப்படுகிறது.

4. பு.புளியம்பட்டியில் இருந்து ஓதிமலை முருகன் கோவிலுக்குச் செல்லும் வழியில் உள்ள இரும்பொறை என்ற பகுதியில் வேடியப்பன் கோயில் உள்ளது. அங்குள்ள புலிக்குத்திக்கல்லை அப்பகுதி மக்கள் புலிக்குத்தி அந்துவ வேட்டுவன்சாமி கல் என அழைக்கின்றனர். இப்பகுதியில் வெள்ளைக்கல்லே கிடையாது. ஆனால் இக்கல் வெள்ளைக்கல்லாக இருப்பது சிறப்பு அம்சமாகும்.

5. சென்னிமலை அருகே வாய்ப்பாடி என்ற ஊரில் வேடியப்பன் கோயிலில் வெள்ளை வேட்டுவன் புலிக்குத்திக்கல் உள்ளது.

6. வெள்ளோட்டில் உள்ள கல்வெட்டு ஒன்று பாண்டிய வேட்டுவரில் வீரன் புலிக்குத்தி தேவன் என்பவனைக் குறிப்பிடுகிறது.

கொங்கு நாட்டில் உள்ள பெரும்பாலான புலிக்குத்திக்கல் வேட்டுவர் வீரதை வெள்ளிபாடகவே உள்ளது.

புலிப்பல் தாலி

புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களிலும் பின்னர் தோன்றிய இலக்கியங்களிலும் குறிக்கப்பட்டுள்ள தாலி என்னும் சொல் சங்ககாலதிற்கும் முற்பட்ட பழமையுடையது என்பது தெரிகிறது. வீர வேட்டுவர் தங்களின் விவசாயத் தினைப் புலங்களைப் பாதுகாத்து வந்தனர். மலைவாழ் விலங்கினங்களுள் வலிமையினும் கொடுமையினும் மிக்கது புலியேயாகும். இந்த விலங்கினத் தாக்குதலில் இருந்து தங்களின் கால்நடைகளைக் காப்பது அவர்களின் தலையாயக் கடமையாகக் கருதினர். மக்களையும் கால்நடைகளையும் காக்கும் பொருட்டு கொடும் மிருகங்களை வேட்டையாடிக் கொல்வது வீரச்செயலாகக் கருதப்பட்டது. இங்ஙனம் புலியோடு பொருது வென்ற வீரத்தமிழ் மகன், தான் புலியை வென்று கொன்றதை வழிவழி நினைவுகூருதல் பொருட்டும், பல்லோர் பாராட்டுதற் பொருட்டும் தான் கொன்ற புலியின் பற்களை அழகு செய்து நூலிற் கோத்துத்தானும்

அணிந்ததோடன்றி, தன்பால் அன்புகொண்ட தன் மனைவி (புலிப்பல் தாலி) மக்களுக்கும் அணிந்து மகிழ்ந்தான்.

துணை நின்ற நூல்கள்:

1. மா.ராசமாணிக்கனார் தாலி-சொற்பொருள் ஆராய்ச்சிக் கட்டுரை, (தினமலர் - வாரமலர் (11.03.2018)
2. வேட்டுவர் வேந்தர் மரபினர்
3. வேட்டுவ மன்னன் வல்வில் ஓரி
4. கொங்கு நாட்டுக் கவுண்டர்கள்.

வேட்டுவ அரசன் வல்வில் ஓரி

மா. முனுசாமி எம்.ஏ.,
நிறுவனத் தலைவர்,
கொங்குநாடு வேட்டுவக்கவுண்டர் முன்னேற்றச் சங்கம்,
பதிவு எண்: 352/2013,
301/14 அழகர்நகர் பின்புறம், அந்தியூர்,
ஈரோடு மாவட்டம்-638501.
அலைப்பேசி: 94437 25367

முன்னுரை

கடைஎழு வள்ளல்களில் ஒருவரான கொல்லிமலையை ஆண்ட வேட்டுவ அரசன் வல்வில் ஓரி சிறப்புப் பெற்றவன். ஓரிக்குப் பல சிறப்புகள் இருந்தாலும் அவனுடைய வில்லாற்றாலே அவனுக்கு 'வல்வில் ஓரி' என்ற பெயரைக் கொடுத்தது. வேட்டைக் காரன் கோவில், வெட்டையம் பாளையம், வெட்டுக் காட்டு வலசு வேட்டுவன் பாளையம், வேட்டுவ நாவிதன் பாளையம் போன்ற எண்ணற்ற ஊர்களும் தெருக்களும் நிறைந்து காணப்படுவதே இந்தத் தொல்குடிக்கு சான்றாகும்.

ஓரியின் பண்பு

ஓரிக்கு முகச்சவரம் செய்தவன் கூட நாவிற்கு இதமாகப் பேசுவானாம். ஓரியின் வில்லாற்றல், பகைவற்கும் அருளும் பண்பு, ஓரியின் வள்ளல் தன்மை, "மூவேந்தர் முடி களையும் தினை அனக்கும் படிகளாய் வேட்டுவ மகளிர் வைத்திருந்தனர் என்பது புலவர்களின் பதிவு. ஓரியின் மனம் திருக்குறளில் சென்றது என்பதற்கு சான்றாக பொன் சொரி மலையில் திருக்குறள் கல்வெட்டாகப் பொறிக்கப் பட்டுள்ளது. ஓரி செங்காந்தள் மலரை அறிமுகப் படுத்தினான்.

மனித குலமே ஆரம்பத்தில் ஒடு வேட்டை சமூகமாக விளாங்க்கப் பட்டது. அந்த வேட்டை சமுகத்தின் வியப்பு மிகு வேட்டுவதலைவன் ஓரி மன்னன் ஆவர் என்பதும் வாரி வழங்கிய வள்ளல் ஓரி அணைவருக்கும் வாரி வழங்கி விட்டதால் ஈகைக கேட்போர் ஓரியின்

அரண்மனைக்கு வருவது குறைந்தது. கம்பர் காட்டிய அயோத்தியில் வறியவர் இல்லை என்ற காரணத்தால் வள்ளல்கள் இல்லை என்பதை நினைவு படுத்துகிறது என்பது ஆய்வர்களின் ஒத்த கருத்து. "உலக மாந்தர் அணைவரும் வேட்டைச் சமூக வாழ்க்கையில் உயிர் வாழ்ந்தார்கள்" என்பதே "வேடுவன்" என்னும் பெயர் சதியில்லை "சாதனை" என்பனவெல்லாம் தொல்குடியின் சான்றாகும்.

"ஆரந்தாழ்ந்த வம்ப கட்டு மார்மில்
சாரலருவிப் பயமலைக் கிழவன்
ஓரி கொல்போ வல்ளன் கொல்லொ" - புறம். 152

"காந்தன் வேலிச் சிறுகுடி பசிபின்
கடுங்கண் வேழத்துக் கோடு கொடுத்துண்னும்
வல்வில் லோனி" - கபிலர்

"பிறங்கு மிசைக்
கொல்லி யாண்ட வல்விளோரியும்" - புறம். 158

"செவ்வேல் முள்ளூர் மன்னன்
கழல் தொடிக் காரி செல்லா
நல்லிசை நிறுத்த வல்வில் ஓரி" - அகம். 209

"மாரி வண் மகிழ் ஓரி கொல்லிக்
கலி மயில் கலாவத் தன்ன வியன்
பிழையா வண்ணங்கள் பாடி நின்றாடுவார்.
அழையாமலே வரக என வரவேற்பவன ஓரி அன்றோ"
- பாணர்

"வல்வில் ஓரி என அழைத்தார் வன் பரணரே.
தெருப்பாடலில் வேட்டுவர் வரலாறு
கொல்லி மலை ராசாவே உன்னைக்
கும்பிடுரோம் சாமி நாங்க
தேனுக் குடுக்கிற மலை
தேளு வந்து கொட்டுச்சி
ஒரு காலை வெட்டிப்புட்டான்
ஒளிஞ்சு வந்து சேர்ந்தது கூத்தப் பூண்டி காளி
ஓரி செஞ்ச பாவ மென்ன
காரி செஞ்சி பவமையா" - மாகாளி (பாத்ணிக் கலைஞர்)

"மூனு ராசா சொல்லி வச்ச
முள்ளு ரான் குதிரையப்பா
வம்புல சொன்னான் காரி
அம்புலி கொள்னான் ஓரி" - பொம்மன் பட்டி. வெங்கனர்

வாரிக் கொடுத்தவன் என்கள்
வள்ளல் ஓரிங்க
காரிக் கென்ன வந்தது -பெருமாள் அம்மாணை ச

இது ஓடு காலிக் குதிரையில்ல
ஓரி யண்ணன் குதிரை
காரி மன்னன் காலை வெட்ட
காடு மேடு கடந்த குதிர
பாடு பாடு நல்லாம் பாடு
பாவப்பட்ட குதிர
ஆத னோரி பெத்த மக

ஆசைப்பட்ட குதிர- பைனாக்குர் முத்து - பவானி

முடிவுரை

சங்க இலக்கியங்கள் முதற்கொண்டு நாட்டுப்புறப் பாடல்கள்வரை ஓரியின் பெருமையைப் பறை சாற்றுவனவாக அமைந்துள்ளன.

கரைய வேட்டுவன்

முனைவர் கா. காமராஜ்,
உதவிப் பேராசிரியர்,
சமூகவியல், கலை (ம) பண்பாட்டுப் புலம்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை - 600113.

முன்னுரை

சங்க கால தமிழர்கள் இயற்கையோடு கலந்த வாழ்வினை மேற்கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர்.மனித நாகரீகம் அடையாத காலத்தில் காட்டத்தில் குகைகளிலும் விலங்குகளோடு விலங்குகளாகவும் வாழ்ந்த காலத்தில் தனது உணவு தேவைக்காகவும், பசியைப் போக்குவதற்கும் விலங்குகளை வீழ்த்தி வேட்டையாடி அதன் மாமிசத்தை உண்டு தனது பசியின் தேவையைப் பூர்த்தி செய்துகொண்ட காரணத்தினால் தமிழ் சமூகத்தில் வேட்டை தொழில் தோன்றி இருக்க வேண்டும் என்பது ஒரு முக்கிய பதிவாக இங்கு சொல்லப்படுகின்றது. அன்று தொடங்கிய இந்த வேட்டைத் தொழிலானது இன்றும் ஒரு கலையாகவே போற்றப்பட்டு வருகின்றது. அதேபோல் சங்க காலத்தில் ஐந்திணை மக்களும் வேட்டை தொழில்களில்ஈடுபட்டு வந்துள்ளனர். அந்த வகையில் இலக்கியங்களில் பல்வேறு வகையான வேற்றுவர்களையும் அவர்களின் சிறப்புகள் குறித்தசெய்திகளும் காணப்படுகின்றன. இதில் கரைய வேட்டுவன் என்ற வேட்டுவ இனத் தலைவர் குறித்து விளக்குவதாகக் கட்டுரை அமைகிறது. வேட்டுவர் பெயர் காரணம்:

வேட்டு+ வ் + அவர் = வேட்டுவர். வேட்டையாடுகின்றத் தொழிலை முதன்மையாகக் கொண்டு விளங்கியவர்களே வேட்டுவர்கள் ஆவர். வேடர் என்றும் வேட்டுவர் என்றும் அழைப்பார்கள். அதுமட்டுமல்லாமல் இவர்களை வேடன், வெற்பன், சிலம்பன், எயினன், ஊறன், வேட்டைக்காரன், வேட்டுவன், வேட்டுயதையன், ஊராணி வேட்டுவ

கவுண்டர், போன்ற பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்டுள்ளனர். குறிஞ்சி நிலத்தின் குறிப்பிட்ட மாந்தர்கள் வேட்டுவர் எனப்படுவோர் வேட்டுவர் குறித்துகிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன,

"வேட்டுவன் - வேடர், வேட்டையாடுவதை தொழிலாக கொண்டவர்"என்றுகுறிப்பிடுகிறார். (பக்கம் 1306, கிரியாவின் தற்கால தமிழ் அகராதி). அதேபோல் சங்க இலக்கியங்களும் வேட்டுவர் பெயர் காரணத்திற்க்கான காரணத்தை குறிப்பிடுகின்றது.ஒரு இனத்தின் வரலாற்றுச் சிறப்பினை அறிந்து கொள்ள வேண்டுமெனில் அம்மக்கள் வாழ்ந்த இடம் அவர்கள் பேசிய மொழி அவர்களின் கலை, மற்றும் பண்பாட்டுக் கூறுகள்போன்றவற்றின் வழியே நாம் அறிந்து கொள்ள முடியும். தமிழ் இலக்கியங்களில் பல்வேறு வீர வரலாற்றுக் கலைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அதில் வேட்டுவர் வரலாறும் ஒன்றாகும். சங்க காலங்களில் வேட்டுவர்களை வில் எயினர், வில் காவனர், வில்லர்போன்ற பெயர்களில் அழைக்கப்பட்டு வந்துள்ளனர். அதேபோல் வேட்டுவர் குடியைச் சார்ந்த போர் வீரர்கள் மழவர், மறவர், வயவர் என்ற குறிப்புப் பெயர்களாலும் அழைக்கப்பட்டு வந்துள்ளனர். சங்க இலக்கியங்களில் வேட்டுவர் என்று அழைக்கப்பட்டவர்களைக் கல்வெட்டுகளில் புழுவர் என்றும் காவலன் என்றும் வேட்டுவர் மாவலியர், வேடர் அல்லது வேட்டைக்காரன் என்றும் அழைக்கப் பட்டுள்ளனர்.

கரைய வேட்டுவன்

ஈரோடு மாவட்டம் மொடக் குறிச்சி வட்டத்தில் அமைந்துள்ள பழமங்கலம் என்ற ஊரில் உள்ள நந்தன் காடு என்கின்ற பகுதியில் கரைய வேட்டுவன் உருவம் பொறித்த நடுகல் ஒன்று உள்ளது. இக்கல்வெட்டில் கரிய வேட்டுவன் மீசையை முறுக்கி தலையில் இடப்பக்கம் பெரிய , கொண்டையுடன் வலது கையில் வாழை நீட்டியும் இடுப்பில் ஒரு வாலிணைசொருகியும் கம்பீரத்துடன்இவரின் உருவச் சிலை கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. கரையகுளத்தைச் சார்ந்த சொக்கன் என்னும் வீரன் புகழ் மங்கலம் என்னும் ஊரில்தன்னை எதிர்த்த பகைவரை வென்றான் என்றும் அவ்வீரன் தன் புகழைநிலைநாட்டி போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தான்என்றும் அவர் நினைவைப் போற்றுகின்ற வகையிலும் அவன் புகழ் மற்றவர்களுக்கு தெரிய

வேண்டும் என்று எண்ணி இந்த நடுகல் பொறிக்கப்பட்டுள்ளதுஎன்று அந்தக் கல்வெட்டு செய்தி குறிப்பிடுகின்றது. இந்த நடுகல் கிபி 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நடுகல் என்று சொல்லப்படுகிறது. மேலும் கிபி10ஆம் நூற்றாண்டு என்பதால் இந்த நடு கல் நடப்பட்ட காலம் சோழர் காலம் என்று ஆய்வாளர்களால் சொல்லப்படுகிறது. இந்த நடுகலில் உள்ள கரைய வேட்டுவ வீரன் தன் உரையில் உருவிய வாளினை கையால் மார்பு பகுதியோடு ஏந்தியபடி காணப்படுகின்றான். தலையில் பெரிய கொண்டையுடன் வலது காலைமுன்னோக்கியவாறு இருக்கிறான். இந்த கரைய வீரனைச் சுற்றி ஏழு சிறிய கற்களும் நடப்பட்டுள்ளன. இந்தக் கற்கள் இவருடன் இறந்த பிறர்வீரர்களாக இருக்கலாம் என்று குறிப்பிடப்படுகின்றது. இறந்த வீரர்களின் புகழைச் சொல்லும் நடு கல்லில் உள்ள குறிப்பு எழுத்துக்கள் வெண்பா வடிவில் காணப்படுகின்றன. தென் தமிழகத்தில் வெண்பா முறையில் பத்தாம் நூற்றாண்டில் அமைந்த கல்வெட்டு இதுவே ஆகும். புலவர் செ. இராசு அவர்கள் சொக்கன் என்னும் வீரனின் குலத்தைக் கரையகுளம் என்றும் இரா. நாகசாமி என்பவர்கரடிகுலம் என்றும் அதில் உள்ள கல்வெட்டு செய்திகளை படித்து காட்டி உள்ளனர். ஆனால் இருவருக்கும் இடையே இதில் முரண்பாடு இருப்பதை காண முடிகின்றது. கல்வெட்டுச் செய்தி:

> **வாய்ந்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்த்தமாற்றலவரைச்**
> **சாய்த்தமருள் வென்ற சயம்பெருக சீர்த்தபுகழ்**
> **நிக்குவணம் கற்பொறிக்கப்பட்டான்கரையகுலச்**
> **சொக்கனேந்தலேஉலகில் தான் இக்கற்பொறி இரக்ஷிப்பான்**
> **ரீபாதம் எந்தலைமேலே.**

அந்த நடுகல் வடிக்கப்பட்டுள்ள சிற்பத்தில் உள்ள செய்தி பி.லிட் முதுகலைப் பாடத்தில் பாடமாக வைக்கப்பட்டுள்ளது

முடிவுரை

வேட்டுவர்கள் பற்றிய பல்வேறு வரலாற்றுக் குறிப்புகள்சங்க காலம் தொட்டு ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகளில் இவர்கள் குறித்த பல்வேறு செய்திகள் ஆவணங்களாக உள்ளன. மேலும்வேட்டுவர்கள் குறுநில மன்னர்களாகவும், வேளாண்மையிலும் சிறந்துவிளங்கி வந்துள்ளனர். இத்தகைய சிறப்புமிக்க வேட்டுவர்களில், இவர்களின் வலிவந்த வழித்தோற்றல்கள் தான் கரையவேட்டுவன் ஆவர். இவர் குறித்துப் பல்வேறு செய்திகளை இக்கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய

வரலாற்றுச் சிறப்புமிக்க வேட்டுவர்கள் குறித்த பல்வேறு ஆவணங்களையும் சிறப்புகளையும் எடுத்துச் சொல்லி அதனைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். இன்னும்விரிவான ஆய்வுகள் மேற்க்கொண்டோம்என்றால் வேட்டுவர்கள் குறித்துப் பல்வேறு தகவல்கள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

இரும்பைக் கண்டறிந்தவர்கள் : வேட்டுவர்கள்

க. மல்லிஸ்வரன்
ஆசிரியர்,
கண்ணப்பர் கல்வி கல்வி மடல்
9715752680

ஆய்வுச் சுருக்கம்:

கொங்கு நாட்டில் பன்னெடுங்காலமாகப் பல்கி பெருகிச் சிறப்புடன் வாழ்ந்துவரும்சமுதாயம் வேட்டுவர்சமூதாயமாகும்."கொங்கு நாட்டு ஆவணங்கள்" பலவும் வேட்டுவர் சமூகத்தினரைப் "பூர்வ குடிகள்" என்றும் அவர்கள் தலைவரை "கொங்கராயன்" என்றும்இலக்கியங்கள் மற்றும் ஆவணங்கள் கூறுகின்றன?.

வேட்டுவர் வேட்டையில் சிறந்து விளங்கிவேட்டை ஆயுதங்களைப் போர் ஆயுதங்களாக ஆக்கி அரசு அமைத்தவர்கள் வேட்டுவர்கள் (1) ஆவர்.சங்க காலத்தில் போரில் வெற்றி பெற்றவர்கள் சூடும் மாலைவெட்சி மாலை எனப்பட்டது. என்ற நடுகல், புலிக்குத்திகல் தமிழ்நாடு முழுவதும் வேட்டுவர் வரலாற்றைக் கூறிக்கொண்டு உள்ளது. வேட்டுவா மன்னன் வல்வில் ஓரியின் கல்லாதில் கொள்ளி மலையிழலும் அதை சுற்றிய பகுதிலும் இரும்பு தங்கம் போன்ற உலோககங்கள் பயன்படுதிய வரலாறுகள் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு தொல்லியல் துறையால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மயிலாடும் பாறை என்ற இடத்தில் ஈமச்சின்னங்கள் மற்றும் வாழ்விடப் பகுதியில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பாறை ஓவியங்கள், புதியகற்காலக் கருவிகள் என அரியவகை தொல்லியல் அடையாளங்களைக் கொண்ட மயிலாடும் பாறையின் வாழ்விடப் பகுதியில் 104 செ.மீ. மற்றும் 130 செ.மீ. ஆழத்தில் சேகரிக்கப்பட்ட இரண்டு கரிம மாதிரிகள், அமெரிக்காவிலுள்ள ப்ளோரிடா மாநிலத்தின் பீட்டா பகுப்பாய்வுக் கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்தப்

பகுப்பாய்வின் எ.எம்.எஸ். காலக்கணக்கீடு முடிவுகள் தற்போது பெறப்பட்டுள்ளன. அவற்றின் சராசரிமைய அளவீட்டுக் காலம் முறையே கி.மு.1615 மற்றும் கி.மு.2172 என்று காலக்கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம், தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு 4200 ஆண்டுகளுக்கு முன்னரே நிலவி வந்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மனித இனம் இரும்பின் பயனை உணரத் தொடங்கிய பின்பு தான், அடர்ந்த வனங்களை அழித்து வேளாண்மை செய்திடும் போக்கு உருவாகியுள்ளது. காடு அழிது நடக்கியது வேட்டுவரே ஆவர் சோழர் பூர்வ பாட்டையம் உறுதி செய்கிறது.

அந்த வகையில், தமிழ்நாட்டில் வேட்டுவர் வேளாண்மை செய்யத் தொடங்கிய காலம் குறித்தான கேள்விகளுக்கு ஒரு தெளிவான விடை இன்று கிடைத்திருக்கிறது.

மேலும், இந்தியாவில் இரும்புக்காலப் பண்பாடு நிலவியகங்கைச் சமவெளி, கர்நாடகம் உள்ளிட்ட 28 இடங்களில் இதுவரை எ.எம்.எஸ். காலக்கணக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தற்போது கிடைத்துள்ள மயிலாடும்பாறை ஆய்வு முடிவுகளான, 4200 ஆண்டு களுக்கு என்பதே, காலத்தால் முந்தியது என்பது நமக்கெல்லாம் பெருமையளிக்கத்தக்க செய்தியாகும். அதே போன்று, கருப்பு சிவப்புபானை வகைகள் 4200 ஆண்டுகளுக்கு முன்னரே அதுவும் புதிய கற்காலத்தின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதையும் அறியமுடிகிறது. இந்த இரும்புக்காலம் குறித்த முக்கியமான கண்டுபிடிப்பை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பத்ம ஸ்ரீ திலீப்சக்ரபர்த்தி, புனே டெக்கான் கல்லூரியின் முன்னாள் இயக்குநர் பத்ம ஸ்ரீ பேராசிரியர் பத்தையா, ஒன்றிய அரசின் தொல்லியல் துறையின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் ராகேஷ்திவாரி, பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் விபாதிரிபாதி, கர்நாடகப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ரவி செட்டார் ஆகிய தலைசிறந்த வல்லுநர்கள் பாராட்டியுள்ளார்கள்.

முன்னுரை:

‘கல்தோன்றி, மண்தோன்றாக்காலத்தே, வாளோடு
முன்தோன்றிமூத்தகுடி’ - புறப்பொருள் வெண்பா மாலை.

உலகத்தில் ஆயுதங்கள் கண்டுபிடிக்காத காலத்தில் வாளும் வேலும், வில்அம்பும் கண்டுபிடித்து வேட்டையாடியவர்கள் வேட்டுவர்.

வேட்டை ஆயுதத்தையே போர் ஆயுதமாக மாற்றிப் போர் செய்தவர் வேட்டுவர்.(1) குறிஞ்சி நிலத்தில் வாழ்க்கையைத் தொடங்கிய வேட்டுவர்கள் சமுதாயத்தைக் கட்டமைத்து ஆளுமை செலுத்தினான் என்பதை சங்க இலக்கியங்கள் பெருமையுடன் எடுத்துக் கூறுகின்றனர். விண் கோள்களையும் அவற்றின் நிலை மாற்றங்களையும், பருவ மாற்றங்களையும் கண்டறிந்து வேளாண்மை, வாணிபம், கைத்தொழில் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தினான். பல கலைகள், போர், ஆடல், பாடல், ஓவியம், சிற்பம், கட்டிடம், அணை, (முதன் முதலில் கொங்கு நாட்டில் காவேரி ஆற்றில் அணை கடியது அல்லாள இலையான்) (2), குளம் (3), தெப்பம், ஓடம் நாவாய், கப்பல் கட்டுதல், பானை வரைதல், நெசவு, உழவுக் கருவிகள் போன்ற தொழில்களை தெளிவாகக் கற்று சிறந்து விளங்கினான் என்பதைச் சங்க இலக்கியங்கள் விளக்குகின்றன.

வேட்டுவர் இரும்பு பயன் படுதியாதைச் சுட்டும் சங்க பாடல்கள்
மடைசெறி முன்கைக் கடகமொடு ஈத்தனன்,
எந்நாடோ என நாடும் சொல்லான்!
யாரீரோ! எனப் பேரும் சொல்லான்,
பிறர் பிறர் கூற வழி கேட் டிகினே,
'இரும்பு புனைந்து இயற்றாப் பெரும் பெயர்த் தோட்டி',(புறம் 150)

அருங்குறும்பு உடுத்த காணப்பேர் எயில்,
கருங்கைக் கொல்லான் செந்நீ மாட்டிய
இரும்பு உண் நீரினும் மீட்டற்க்கு அரிது என,
வேங்கை மார்பன் இரங்க, வைகலும்
ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்(புறம் 21)

கூடை வெங்கச்சி வேட்டுவன்:

பாண்டிய மன்னனின் ஆட்சியில் தென்னிலைக் கோட்டையில் இருந்து மதுரைக்கு வெங்கச்சி வேட்டுவன் எனும் அரசன் கூடையில் தங்க காசுகள் எடுத்துச் சென்று கூடை வெங்கச்சி வேட்டுவன் என்று அடைமொழியோடு அழைப்பார்கள். இன்றும் இந்தக் கூடை கவுண்டனின் சிலை (6) தென்னிலை நீலியம்மன் கோவிலில் உள்ளது. நீலியம்மன் கோவிலும், நாட்ராயன் கோவிலும் கொங்கு நாட்டில் உள்ள 18 வேட்டுவ குல மக்களின் தலையாய குலதெய்வமாகும்.

கோவை அரசு கலைக் கல்லூரியின் முன்னாள் பேராசிரியர் பசுவலிங்கம் "சங்க கால கொங்கு" என்ற தலைப்பில் தெரிவித்த கருத்து:

கொங்குநாடு : 1.கொங்கர் நாடு, 2. கொடுமணம், 3. வேட்டுவர் என மூன்று காலகட்டங்களாக செயல்பட்டது. கொடுமணம் என்ற காலகட்டத்தில் அரசு அமைப்பு ஏற்பட்டது அப்போது வேட்டுவர் என்ற சிற்றரசர்கள் தோன்றினர்.

கொடுமணல் இரும்பு உலை:

வாழ்விடப் பகுதியின் தெற்குப் பகுதியில் அமைக்கப்பட்ட குழியில் 65 செ.மீ ஆழமும் 115 செ.மீ விட்டமும் கொண்ட ஒரு வட்ட வடிவ உலை கிடைத்தது. உலகின் உட்பகுதி வெள்ளை நிறம் கொண்டிருந்தன. அதிக வெப்ப நிலையில் நீண்ட நேரம் நெருப்பைப் பயன்படுத்தியது இதற்கான காரணமாக இருக்கலாம். இரும்பு கழிவு,கழிவுடன் கூடிய எரிந்த களிமண், கண்ணாடி போன்ற வாய்ப்பகுதியைக் கொண்ட ஊதுளை துண்டுகள் மற்றும் ஒரு கருங்கல் பலகை ஆகியவை உலைப்பகுதிக்கு அருகில் கிடைத்தன.வீட்டுத் தரைகள் மற்றும் மரம் நடுவதற்கான குழிகள் மற்றும் பிற புழங்கும் பொருட்கள் பானை ஓடுகளோ இரும்பு உருக்கும் உலைப்பகுதியில் இல்லை. எனவே இரும்பு உருக்கும் தொழில் குடியிருப்பு பகுதியில் எல்லையில் திறந்த வெளியில் நடைபெற்று இருக்கலாம் என கருதலாம்.

அதிகமான இரும்புக் கழிவுகள் கொண்ட இத்தகைய உலை கோயம்புத்தூருக்கு அருகில் இடையார் பாளையத்திலும், ஈரோடு அருகே உள்ள நிச்சாம் பாளையத்திலும், பல்லடம் அருகில் உள்ள செட்டிப்பாளையத்திலும் கண்டறியப்பட்டுள்ளன. இந்த மூன்று முக்கியமான தொல்லியல் தளங்கள் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். இத்தலங்கள் அனைத்தும் கி.மு ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவையாக இருக்க வேண்டும்.

கோவை இடையார் பாளையத்திலும், ஈரோடு நிச்சாம் பாளையத்திலும் வசிப்பவர்கள் வேட்டுவர்களே. கொடுமணல் அகழ் ஆய்வின் மூலம் இரும்பைக் கண்டறிந்தவர்கள் வேட்டவர்களே என்பது தெளிவாகிறது.

சங்க இலக்கியதில் இரும்பு, எஃகுதொழில்நுட்பம் பற்றிய செய்திகள் தொல்காப்பியம் இரும்பு குறித்துப் பல தகவல்களைச் சங்க இலக்கியத்தில்

காணலாம். தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. பொருளதிகாரம் தமிழ்மக்களின் வாழ்வியலைக் கூறுகிறது. பொருளதிகாரத்தில் 9 இயல்கள் உள்ளன. இவற்றுள் ஒன்றான புறத்திணை இயல் புறப்பொருள் என்னும் .போர், வீரம், கொடை, புகழ், பிறப்பு, இறப்பு முதலிய சமுதாயப்புறச் செய்திகளைக் குறிப்பிடுகின்றது.

குடையும் வாளும் நாள்கோள் அன்றி
மடையமை ஏணிமிசைமயக்க முங்கடைஇச்
(தொல்காப்பியம் புறத்திணை இயல் 71)

கணையும் வேலும் துணையுறமொய்த்தலிற்
சென்ற உயிரின் நின்றயாக்கை
இருநிலந்தீண்டா அருநிலை வகையொடு
இருபாற்பட்டஒரு சிறப்பின்றே.
(தொல்காப்பியம் புறத்திணை இயல் 71)

களிற்றொடுபட்ட வேந்தனை அட்டவேந்தன்
வாளோர் ஆடும் அமலையும்-
(தொல்காப்பியம் புறத்திணை இயல் 72)

புறத்திணை இயலின் 71 மற்றும் 72 சூத்திரங்கள்வாள், வேல், கணை போன்ற படைக்கருவிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளன. இந்தப் படைக்கலன்கள் செய்யப்பட்ட உலோகம் எது என்பது பற்றிய குறிப்பு இல்லை. தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் இரும்புக் காலத்தை 4200 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக நிறுவியுள்ளது. தொல்காப்பியரின் காலம் கி.மு.10 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்பதால் இந்நூல் இரும்புக் காலத்தைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம்.

சங்க இலக்கிய நூல்கள்

சங்க இலக்கியத் தொகைநூல்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகியவை இரும்பு மற்றும் எஃகுத் தொழில்நுட்பம் மற்றும் பயன்பாடு பற்றி நிறைய செய்திகளைப் பதிவு செய்துள்ளன. பொன், இரும்பொன், கரும்பொன், கருந்தாது, இரும்பு, எஃகு, கொல்லன், கருமைக்கொல்லன், உலை, உலைக்கூடம், உலைக்கல், துருத்தி, விசைவாங்கி, விசைத் துவாங்குதுருத்தி, மிதியுலை, ஊதுகுருகு, குடம், குறடு, குறுக்கு போன்ற தொழில் நுட்பக்கலைச் சொற்கள் சங்க காலத்திலேயே இரும்பை உருக்கி

எஃகாக உரு மாற்றும் தொழில் நுட்பத் தெரிவு (Technical Knowhow) பற்றிச் சான்று பகர்கின்றன.

இரும்பின் அன்னகருங்கோட்டுப் புன்னை
நீலத்து அன்னபாசிலை அகந்தோறும்
வெள்ளி அன்னவிளங்கினர் நாப்பண்
பொன்னின்அன்னநறுந்தாதுஉதிர. - (நற்றினை 249: 1-4)

இந்தச் செய்யுளில் உலோகங்கள் பற்றியமுரண் உவமைகளாக அமைக்கப்பட்டுள்ளது. இரும்பு புன்னை மரத்தின் கரிய கிளைகளுக்கும்; நீலம் மரத்தின் பசுமையான இலைகளுக்கும்; வெள்ளி மரத்தின் இலைகளின் நடுப்பகுதியில் காணப்படும் நரம்புகளுக்கும், பொன்மரத்தின் நறுந்தாதுக்களுக்கும் உவமையாகப் பேசப்படுகிறது.

வேட்டுவர் இரும்பை உருக்கி எஃகாக உருமாற்றி அதனைக் கொண்டு பல கருவிகளைச் செய்தனர் இவர்களது தொழிற்கூடம் உலை என அழைக்கப்பட்டது. உலைக்கல், துருத்தி, சம்மட்டி, பட்டடைக் கல் போன்ற துணைக்கருவிகளும் இங்கு இருந்தன. வேளாண் கருவிகள், போர்க்கருவிகள் ஆகியவற்றை இவர்கள் உருவாக்கினர்.

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக்கடனே
- (புறநானூறு 312: 2; பொன்முடியார்)

கருங்கைக் கொல்லன் செந்தீமாட்டிய
இரும்பு உண்நீரினும் மீட்டற்கு அரிது
- (புறநானூறு 21: 7-8 ஐயூர்மூலங்கிழார்)

கரிய வலிமை வாய்ந்தகை களையுடைய கொல்லனின் உலையில் கொழுந்து விட்டெரியும் செந்தீயில் பட்டு உருகிய இரும்பின் நீரை மீட்டெடுப்பது அரிது.

இரும்பு பயன்படுக்குங் கருங்கைக் கொல்லன்
விசைத்து எறிகூடமொடு பொருஉம்
உலைக்கல் அன்னவல்லாளன்னே.
(புறநானூறு 170: 15-17 உறையூர் மருத்துவன் தாமோதரனார்)

இரும்புத் தொழில் புரிவதால் கருத்து வலிவானகைகளை உடைய கொல்லன் தன் சம்மட்டியினை ஓங்கி வேகமாக ஓங்கி உலைக்கல்லின் (பட்டடைக் கல்லின்) மீது அடிக்கிறான். அந்த உலைக்கல்லைப்

போலப்பிட்டங்கொற்றன் (குதிரை மலையை ஆண்ட குறுநிலவேட்டுவ தலைவன்) வலிமையானவன்.

இரும்பு வடித்தன்ன மடியாமென்தோல்
கருங்கை வினைஞர்காதல் அம்சிறாஅர்
(பெரும்பாணாற்றுப் படைகடியலூர் உருத்திரங்கண்ணனார் 222 -223
இரும்பு வடித்தன்ன கருங்கைக் கானவன்
(அகநானூறு. மதுரைப்பாலாசிரியர்நப்பாலனார் 172:6)

கொல்லனின் கைகள் இரும்புத் தகட்டிற்கு உவமைப்படுத்தப் பட்டுள்ளன.

எஃகு

எஃகு என்னும் உருக்கு (Steel) ஒரு கலப்பு உலோகம் ஆகும். இரும்புடன் கார்பன் என்னும் கரிமம் சேர்த்த பின்பு இதன் வலிமையும் வளையாத தன்மையும் குன்றாத தன்மையும் கூடும். மாங்கனீசு, நிக்கல், வனேடியம் போன்ற கனிமங்களும் சேர்க்கப்பட்டு வல்லிரும்பான எஃகு உருவாக்கப்படுகிறது. வேல் என்னும் ஆயுதத்தை எஃகு என்றே குறித்தனர்.

........அடுபோர்
எஃகு விளங்கு தடக்கை மலையன் கானத்து
(குறுந்தொகை 198)

ஒளிறு இலைய எஃகு ஏந்தி
(புறநானூறு 26 மாங்குடிமருதனார்)

போன்றவரிகள் எஃகின் வலிமையை விளக்குகின்றன.
எஃகுடை எழில் நலத்து
(அகநானூறு 116)

எஃகுறுமாந்தரின் இனைந்து கண்படுக்கும்
(அகநானூறு 371)

எஃகுபடை அறுத்த கொய்சுவற் புரவியொடு
பதிற்றுப்பத்து 62:3.

வென்றிச் சிறப்பு

எஃகில் செய்த படையால் (கத்தரியால்) கத்தரித்து
ஒழுங்கமைக்கப் பட்ட குதிரையின் பிடறிமயிர்
எஃகுடை வலத்தர்
(பதிற்றுப்பத்து 30; காக்கைபாடினியார்நச்செள்ளையார்)

என்று எஃகின் உறுதியையும் வலிமையையும் சங்க இலக்கியங்கள் வியந்து போற்றுகின்றன. எஃகின் வலிமைக்கு வேல் என்னும் போர்க்கருவியை உவமையாகக் கூறியுள்ளனர்.

கொல்லன் உலைக்களம்
[1]கொல்லன் உலைக்கான படமுடிவு
புல்அளைப் புற்றின் பல்கிளைச்சிதலை
ஒருங்கு முயன்று எடுத்தநனைவாய் நெடுங்கோடு,
இரும்பு ஊதுகுருகின், இடந்து, இரைதேரும் (அகநானூறு 81)

"இரும்புஊதுகுருகு" அகநானூறு 81 PC: Sergeev Pavel Wikipedia

அசைவரல் வாடை டதூக்கலின், ஊதுஉலை
விசைவாங்குதோலின், வீங்குபுஞெகிழும் - அகநானூறு 96
கொல்லன் குருகுஊதுமிதி உலை (அகநானூறு 202)

இரைதேர் எண்கின் பகுவாய் ஏற்றை
கொடுவரிப் புற்றம் வாய்ப்ப வாங்கி
நல்அராநடுங்க உரறி கொல்லன்
ஊதுஉலைக்குருகின் உள்உயிர்த்து அகழும்
நடுநாள்வருதல் அஞ்சுதும்யாம் - (நற்றிணை 125)

கொல்லன் ஊதுலைக் குருகுமேற்கோள்பாடல் நற்றிணை 125 PC: Ciell Wikipedia

அகன்ற வாயையுடைய ஆண் கரடி தனக்கு வேண்டிய இரையை நாடுகிறது. வளைந்தவரிகளையுடைய புற்றைப் பெயர்த்து எறிகிறது. அப்போது அந்தப் புற்றில் வாழும் நல்லபாம்பு பெரும் மூச்சுவிட்டுப் பயந்து நடுங்கியதை கொல்லன் ஊதுகின்ற உலைமூக்குப்போல உள்ளதாக உவமைப் படுத்தப்படுகிறது.

ஆண்கரடி புற்றைப் பெயர்ப்பதை நிறுத்திவிடுகிறது.
காமுறுதோழி காதல் அம்கிளவி
இரும்பு செய்கொல்லன் வெவ்உலைத் தெளித்த
தோய்மடல் சில்நீர்போல
நோய்மலி நெஞ்சிற்கு ஏமம்ஆம்சிறிதே

(நற்றிணை 133: 8 - 11)

கொல்லனின் சூடான உலையில் பழுக்க இரும்பைக் காய்ச்சும் போது தண்ணீரைத் தெளித்துக் குளிர வைத்தது போல உன் இனிய சொற்கள் வலிநிறைந்த என் நெஞ்சிற்கு ஆறுதல் அளித்தது. பனை ஓலைக் காம்பில் செய்த கைவிசிறியால் விசிறிக் குளிர்வித்தது போலவும் உள்ளது.

வல்லோன் அடங்குகயிறு அமைப்பக் கொல்லன்
விசைத்து வாங்குதுருத்தியின் வெய்ய உயிராக்
கொடுநுகத் துயாத்த தலையகடுநடைக்
கால்கடுப்பு அன்ன ....
(அகநானூறு பெருந்தலைச் சாத்தனார் 224: 2 - 5)

தேரில்பூட்டப் பெற்ற குதிரைகள் கொல்லன் வலித்து இழுக்கும் துருத்தியைப் போல வெப்பமாகப் பெருமூச்சுவிட்டன.

சங்ககால செந்நாக்குழிக்கான படமுடிவு - செந்நாக்குழி Smelting Unit PC: Wikimapia

புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக் கோட்டை (வேட்டுவர் வாழ்ந்த இடம்) என்ற இடத்தில் செம்பாறங் கற்படுகையில் குழி அமைப்புகள் காணப்படுகிறது. செந்நாக்குழி என்று அங்குள்ளவர்களால் அழைக்கப்பட்டு வருகிறது. இது சங்க காலத்தைச் சேர்ந்த தொல்பழங்கால உருக்கு ஆலையாகக் கருதப்படுகிறது,

வெள்ளி, செம்பு, வெண்கலம், பித்தளை
வெள்ளி விழுத்தொடிமென் கருப்பு உலக்கை
(அகநானூறு 286, ஓரம்போகியார்)
வெள்ளிப்பூண் இட்டகருப்பு உலக்கை
..... மாசில்வெள்ளிச்
சூர்ப்புறு கோல்வளை.....

(அகநானூறு 142, பரணர்)

வளைந்து கனத்துடன் காணப்படும் வெள்ளிவளையல்
செம்பு இயன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
(நெடுநல்வாடை 112)

செம்பில் செய்யப்பட்டது போலக்கட்டப்பட்ட நெடியசுவர். கணக்கதிகாரம் காரிநாயனார் இயற்றிய கணக்கதிகாரம் என்ற நூலில் இடம் பெற்றுள்ள செய்யுள் இது. செம்பில் கலக்கத்தக்க உலோகங் களையும் இவற்றின் கலப்பு விகிதங்களையும் இந்தச் செய்யுள் விளக்குகிறது.

செம்புத் தொழில் நுட்பம் பற்றி விளக்கும் செய்யுள் இதுவாகும்.
எட்டெடை செம்பிலி ரெண்டையீயமிடில்
திட்டமாய் வெண்கல மாஞ்சேர்ந்துருக்கி - லிட்டமுடன்
ஓரேழு செம்பிலொரு மூன்று துத்தமிடில்
பாரறியப் பித்தளையாம்யார்"
(காரிநாயனார் கணக்கதிகாரம் செய்யுள் 11)

உரை: எட்டுப்பலஞ் செம்பிலே இரண்டு பலம் ஈயமிட்டுருக்க வெண்கலமாம். ஏழலரைப் பலஞ்செம்பிலே மூன்று பலந்துத்தமிட்டுருக்க பித்தளையாம். (குறிப்பு: பலம் பழந்தமிழர் எடை அளவு (40.8 கிராம்).

பிளைனி

பிளைனி எழுதிய இயற்கை வரலாறு (Natural History = Historia Naturalis) என்ற கலைக்களஞ்சியம் இந்தியாவிற்கும் ரோமிற்கும் இடையே நடைபெற்ற கடல் வணிகத்தைப் பற்றிவிவரிக்கிறது. ரோம் நாட்டுடன் தொடர்பு கொண்டு உலகின் அனைத்துப் பகுதிகளிலும் செயல்பட்ட இரும்புச் சுரங்கத் தொழில் மற்றும் இரும்பு உருக்காலைகள் பற்றிய மிகமுழுமையான கணக்கைத் தனது நூலில் பிளைனி பதிவு செய்துள்ளார். இந்த நூலின் 34வது புத்தகத்தில் (34th book) இரும்பு பற்றிய ஒரு பத்தி (பத்தி 145) உள்ளது:

"Of all the kinds the palm is to the Seric iron. The Seres send this with their textile fabrics and skins. The second place is to the Parthian, and there are no other kinds of iron which are tempered into the true steel for they are mixed with other elements".

பிளைனி Seres என்று குறிப்பிட்டது கி.மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்த சங்க காலத்துச் சேரர் வேட்டுவர் நாடு சேரநாடு என்றும், Seric

Iron என்று குறிப்பிட்டது சேரநாட்டு இரும்பு என்றும் கருதப்படுகிறது. வூட்ஸ் எஃகு (Wootz Steel) என்று அழைக்கப்படும் எஃகின் உலோகவியல் பெயர்கள் இவையாகும்: ferrum candidum (bright iron = பிரகாசமான இரும்பு), ferrum indicum, ferrum sericum. Sericum v‹w brhš Seres உடன் ஒத்து வருவதால் இது சேரநாட்டு எஃகு என்று கருதப்படுகிறது. இந்த வகைவூட்ஸ் எஃகிற் குடமாஸ்கஸ் எஃகு (Damascus Steel) என்ற மற்றுப் பெயரும் உள்ளது. சிரிய அரபிக்குடியரசு நாட்டின் தலைநகரான டமாஸ்கஸ் நகருடன்டமாஸ்கஸ் எஃகு தொடர்புடையது. அரபுமொழியில் “டமா” (Dama) என்றால் நீர் என்று பொருளாம். வூட்ஸ் எஃகு பண்டைய தமிழகத்தில் வார்க்கப்பட்டது. தென்னிந்தியாவில் இந்த எஃகை பழுக்கக் காய்ச்சி அடித்து வலுவாக்கி வாட்களும் ஈட்டிகளும் அம்புகளும் செய்தார்கள். இந்த எஃகை பெர்ஷியாவிலும் அரபியாவிலும் மென்மேலும் அடித்து (கடிசபந) வலுவேற்றி அழகிய வாள்களும், கத்திகளும்செய்யப்பட்டன.

12-ஆம் நூற்றாண்டில், அரபுப்பயணியும் வரைபடவியலாளருமான (Arab traveler and cartographer) அல்இட்ரிஸ்ஸி (Al Idrisi) இவ்வாறு பதிவு செய்துள்ளார்:

‘The Hindus excel in the manufacture of iron, and in the preparations of those ingredients along with which it is fused to obtain that kind of soft iron which is usually styled Indian steel (Hindiah). They also have workshops wherein are forged the most famous sabres in the world. …It is not possible to find anything to surpass the edge that you get from Indian steel (al-hadid al-Hindi)’

மற்றொரு அரபுப் பயணியான அல்பிரூணியும் (Al-Biruni) (கி.பி. 973-1048) இது பற்றிப் பதிவு செய்துள்ளார்:

“There will never be another nation, which understood separate types of swords and their names, than the inhabitants of India”

12.5.2012 கோவை பதிப்பு தினமலர் நாளிதழ் "அரசு உருவாக்கத்தில் வேட்டுவர்" என்ற தலைப்பில் வரலாற்று பேராசிரியர் ம. இராசசேகர தங்கமணி "வில்லோர் அரசே கொங்கு நாட்டில் உருவான முதல் அரசு" ஆகும். இதனை வேட்டுவ அரசு எனமும் கூறலாம்.வேட்டுவ இனப்பிரிவுகளில் வில்,வில்லி கூட்டங்கள் இருப்பதை நாம் அறிவோம்.தொல்குடியினரான இவர்கள் வில்லை அரசு சின்னமாகக்

கொண்டனர். கரூர் அமராவதி ஆற்றங்கரையில் இதுகாறும் நூற்றுக்கு மேற்பட்ட இரு பக்கமும் வில் சின்னம் பொறித்த காசுகள் கிடைத்துள்ளன.

இதில் சேர அரசின் சின்னமான யானை காணப்படவில்லை. எனவே இதில் சேர அரசின் தலைவன் ,வில்லோர் பெரும் என்று இலக்கியங்கள் சுட்டப்படுகிறான்.(புறம் 169).இந்த அரசே சேர அரசாக நாளடைவில் உருவாகிற்று. வேட்டுவருள் சேர வேட்டுவர் என்கிற கூட்டப்பெயரும் உண்டு,பனைய வேட்டுவரும் உண்டு. வில்லூர் அரசு சேர அரசாக உருவான பின்னர் வில்லம்பும் யானையும் சேரரது அரசு சின்னமாக மாறியது.

தொல்குடி:

வேட்டுவ முருகனின் வேல் உலகின் முதன் முதலில் தோன்றிய மாந்த இனம் குமரிக்கண்டம். தமிழ் கடவுள் குமரன் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். குமரிக்கண்டத்தில் தோன்றிய முதல் மாந்தன் தமிழன். தமிழ் கடவுள் குமரனுக்கு வேல் கொடுத்து வேலவன் என்று அழைத்த இனம் வேட்டுவ இனம். வேட்டுவ தலைவன் குறிஞ்சி கடவுள் குமரன் ஆவான்.எனவே தான் உலகின் முதல் இனமான வேட்டுவ இனம் தொல்குடி எனப்படுகிறது.இவ்வாறு இரும்பை வேட்டுவர் புராண காலதில் இருந்து பயன்படுதூகிறார்கள் என்பதை உறுதி செய்யலாம்.

உலகின் முதல் அரசன்:

வில், வேல் போன்ற வேட்டை ஆயுதங்கள் போர்களில் ஆயுதங்களாக மாற்றி ஆ நிரைகளுக்காக போரிட்டு (அசையும் சொத்துக்களின் உரிமைகளுக்காக) பின் அசையா சொத்தாகிய நில உடமைகளுக்காக போரிட்டு உலகின் முதல் அரசு உருவாக்கியாவர் வேட்டுவரே. இரும்பின் மூலம் ஆயுதங்கள் உருவாக்கி பேரசர்களாக உருவகினார் இவர்களே இரும்பு தங்கம் போன்ற உலோகங்களை கண்டறிந்தனர் .

முடிவுரை:

லண்டன் விக்டோரியா மகாராணி அருங்காட்சியகத்தில் உள்ள சிவன் வில்லுடன் வேட்டுவ கோலத்தில் இருப்பது, வேட்டுவனே உலகின் முதல் அரசன் என்பது உலகத்தினருக்கு உணர்த்துகிறது. வில்லில்

இருந்து ஏற்படும் உந்துவிசை தத்துவத்தை உணர்ந்தது தான் இன்றைய ஏவுகணைகளும் ராக்கெட்களும் இயங்குகின்றன. தமிழகத்தில் இரும்பின் பயன்பாடு 4200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை மயிலாடும்பாறை ஆய்வு முடிவுகள் இன்று நிலைநிறுத்தி யுள்ளது நமக்கெல்லாம் பெருமை.

மேற்கோள் குறிப்பு:

1. வேட்டுவர் வேந்தர் மரபினர், Dr.வாழைபரமேஸ்வரன். அன Page 34
2. வேட்டுவர் வேந்தர் மரபினர், Dr.வாழைபரமேஸ்வரன். அன Page 98
3. வேட்டுவர் சமூக ஆவணங்கள் புலவர். செ.ராசு page 53
4. கொடுமணல் இரும்பு அறிக்கை.
5. புறநானூறு பாடல் 21,150
6. கூடை கவுண்டனின் சிலைதென்னிலை நீலியம்மன் கோவிலில் உள்ளது.
7. பழந்தமிழர்களின் தொழில்மேன்மை http://arch.kumarinadu.com/index.php? option=com_content & view=article & id=9074:2015-03-24-19-34-59 & catid=57:2010-01-31-18-23-42 & Itemid=78
8. யுத்தபூமி அத்தியாயம் 46 நடுகற்கள் வகைகளும் வகைப்பாடும் 39 த.பார்த்திபன் தொல்லியல் மணிதின மணிபிப்ரவரி 09, 2017 http://www.dinamani.com/tholiyalmani/yuththa-bhoomi
9. A Brief History of Wootz. Atul Sabnis. The Custodian. March 12, 2016

   Iron History http://nautilus.fis.uc.pt/st2.5/scenes-e/elem/e02610.html
10. Sasisekaran, B., and B. Raghunatha Rao. "Iron in Ancient Tamil Nadu." India; Metallurgy in India: A Retrospective. NML Jamshedpur. Web. 17 July 2015.

11. The Eastern Iron Trade of the Roman Empire. Journal of the American Oriental Society Vol. 35 (1915), p224-239

http://penelope.uchicago.edu/Thayer/E/Journals/JAOS/35/The_Eastern_Iron_Trade_of_the_Roman_Empire*.html

12. Kodumanal, Tamil Nadu 638751, India

13. தமிழகத்தின் இரும்புக்காலம்: 2 இரும்பு உருக்காலைத் தொழில் நுட்பமும் இரும்பின் பயன்பாடும் தி செம்பர் 2, 2018 ஐடீ "தமிழ்"

14. மதுரை உலகத்தமிழ்ச் சங்கவளாகத்தில் தற்காலிக கீழடி அருங்காட்சியகம் பிப்ரவரி 29, 2020In "தொல்லியல்"

15. பட்டறைப் பெரும்புதூர் அகழாய்வு: அரிய கற்காலக் கருவிகள், ரோமானிய ரௌலட்மண் கலன்கள் கண்டு பிடிப்பு ஜூன் 25, 2018ஐடீ "தமிழ்நாடு"

16. முத்துசாமி இராதொல்லியல், வரலாறு இரும்பு, இரும்புக்காலம், உலைக்களம், எஃகு, சங்க இலக்கியம், சங்ககாலம், டமாஸ்கஸ்எஃகு, தமிழ், பிளைனி, பெருங்கற்காலம்.

மாந்தரஞ்சேரல் : மெய்க்கீர்த்தி

மகேஸ்வரி சுப்ரமணி, MCA
2/41, செங்கோடம்பாளையம் புதூர்,
கரடிப்பட்டி அஞ்சல், நாமக்கல் மாவட்டம்.
தமிழ் நாடு 637019.
அலைப்பேசி: 95667 62526.

சேரநாட்டை ஆண்ட சேர மன்னர்களுக்கு முசிறி எனும் பெருங்கடற்கரை துறைமுகமும் பூழிநாட்டில் உள்ள தொண்டி, மாந்தை கடற்கரை துறைமுகங்களும் இருந்தன. அப்பொழுது கொங்கு நாட்டை ஆண்ட இரும்பொறை அரசர்களுக்கு கடற்கரை துறைமுகங்கள் இல்லாது போனதால் கொங்குநாட்டை ஆண்ட செல்வக் கடுங்கோவுக்கு பூழிநாட்டை சேர மன்னர்கள் கொடுத்தனர். இதனால பூழி நாட்டில் உள்ளதொண்டி, மாந்தை கடற்கரை துறைமுகங்கள் செல்வக்கடுங் கோவாழியாதன் எனும் இரும்பொறை அரசனுக்கு உரிமை யுடையதாதனது. இதனால் செல்வக்கடுங்கோ பூழியர்கோ என்றும் மாந்தை கடற்கரை துறைமுகத்தை உடையவன் ஆனதால் மாந்தரன் கடுங்கோ என்றும் அழைக்கப்பட்டான். இவனுக்குப் பின் கொங்கு நாட்டை ஆண்ட இரும்பொறை அரசன் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் என்று போற்றிப் புகழப்பட்டான். இவன் மாந்தை நகரில் மாந்தப்படை எனும் படைவீடு வைத்திருந்தான். இன்றும் வேட்டுவரில் மாந்தப்படை வேட்டுவர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்தியூர் காணியாளர் (அந்தியூர் ஆதினம்) ஏ.கே. சந்திரசேகரனின் முன்னோர்களிடம் இருந்த அந்துவன் காணிப்பாடல்கள், மாந்தரஞ்சேரல் மெய்க்கீர்த்தி போன்ற ஆவணங்களைத் தமிழ்தொல்லியல் துறையினர் பெற்றுக் கொண்டனர். பின்பு மாந்தரஞ்சேரல் மெய்க்கீர்த்தி ஏடுபெயர்த்து எழுதும் பொழுதுதற்காலத்தில் வழங்கிய வண்ணம் சில இடங்களின் மாற்றம் செய்துள்ளனர்.

கொங்குநாட்டைக் கைப்பற்றிய வெற்றியில் மகிழ்ந்த சேரன் கொங்கு நாட்டில் தன் பெயரால் மாந்தைநகர் ஏற்படுத்திச் சாத்தன்

ஐயனைப் பிரதிட்டை செய்கின்றான். இன்றும் வேட்டுவர்களில் மாந்தைப் படைவேட்டுவர்கள் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வருகின்றனர். இன்றும் கொங்கு நாட்டில் மாந்தபுரி (மாந்தை) என்னும் ஊர் விளங்குகிறது. அங்கு புகழ்வாய்ந்த நாட்டராயன் கோயிலும் உள்ளது. மாந்தீசுவரர் என்ற சிவன்கோயிலும் உள்ளது குறிப்பிடத் தக்கதாகும். கொங்கைக்கைப் பற்றி ஆண்ட அந்துவன், சேரல் இரும்பொறைக்குப் பின் கொங்கு நாட்டை ஆண்ட மாந்தரன் செல்வக் கடுங்கோவாழியாதன் மற்றும் யானைக்கட் சேய்மாந்தரஞ்சேரல் இரும்பொறை குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

மாந்தரன் I : மாந்த்ரன் செல்வக் கடுங்கோவாழி ஆதன்

மாந்தரன் II : யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை.

தேன்நாடு (கொங்குநாடு):

வஞ்சிமாநகர் (கருவூர்), தாராபுரம்நகர் (இராஜஇராஜபுரம்), விளங்கில், மூலனூர், மையூர் அயோத்திய பட்டினமும், வேங்கடம், துவரை, செய்யூர், காகம், திருச்செங்கோடு, மாந்தை என்ற ஊர்களும் சேரன், பாண்டியன் கொங்கர் எனும் வேட்டுவ வேளிர்கள், எழினி இருங்கோவேள், திதியன், மையூரன், கிள்ளி, நள்ளி, ஏனாதி, கோவேந்தர், ஐம்பிரிவர்பூவலியர், மாவலியர், காவலியர், வேடர், வேடுவ (வேட்டுவர்) கொத்து முடிசெழியன் எனும் மன்னர்களும் பன்றிமலை, விலாடபுரி, குடமலை, வடமலை, குணமலை, ஏறைமலை, பழனிமலை (பொதிணிமலை) என்ற மலைகளும் மாந்தரல் சேரல்மெய்கீர்த்தியில் குறிப்பிடப்படுகின்றன. கரூர் (வஞ்சி) மாநகரில் இருந்து ஆண்ட மாந்தரஞ் சேரல் இரும்பொறை மாமதுரை பாண்டியனுடனும், கொங்கர் எனும் வேட்டுவ வேளிர்களுடனும், சோழ ஏனாதிகளுடனும் போரிட்டு கொங்கு நாட்டைக் கைப்பற்றி கொங்கில் மாந்தபுரி (மாந்தை) எனும் ஊர் தன் பெயரில் (மாந்தரன்) அமைத்து சாத்தன் ஐயனை பிரதிஷ்ட்டை செய்து மாந்தீஸ்வரன் என்ற சிவன் கோயிலையும் தன்பெயரில் அமைத்து மாந்தப்படை எனும் வேட்டுவபடையையும் அமைத்து நாட்ராயன் கோயிலிலும் அமைத்து நாட்ராயன் கோவிலுக்கும் அதைச் சுற்றியுள்ள ஊர்களுக்கு வேட்டுவா வேளிர்களை தென்னவர்தம் (பாண்டியர்) பூமியினுள் தலைவர்களாக்கினன் இன்றும் ஈரோடு மாவட்டம் தோட்டணியில் நாட்ராயன் கோவில் உரிமை தெய்வ திரு சின்னபகவுண்டர், தெய்வ திரு ராமசாமி கவுண்டர் பங்களிக்கலான வில்லி வேட்டுவர்கலுக்கு மட்டுமே உரியது அதேபோல் ஈரோடு மாவட்டம்

மொட குறிச்சி வட்டம் காட்டுப்பாளையம் ஸ்ரீ நாட்ராயன் நச்சிமுத்து கோவில் மூல(படை) வேட்டுவர்கு உரிமை உள்ளது மேலலும் அணைத்து நாட்ராயன் கோவில் உரிமைகள் பெரும்பாலூம் வேட்டுவர்க்கே முன்னுரிமை உள்ளது நாட்ராயன் கோவிலை உருவாக்கிய மாந்திரஞ்சேரல் மக்களிடம் நிலையான புகழடைந்தான்.

மாந்தரஞ் சேரல் மெய்க்கீர்த்தி பாடல்:

உதியனது நல்மரபில் பதியெனவே வந்தமர்ந்து ஆய்ந்துணர்வு
கொளும் புனித மாந்தரஞ்சேரல்மன்னன் சேரலமாநகர் என்னும்
திகழ்வஞ்சி மாநகரும்
1)கருவூர் எனும்நற்பதியும்
2)கனக தாராபுர நகரும்
3) விளங்கிலெனும் பதியதுவும்
4)மிகுமூலனூரதுவும் பாரதனினில்
பலதலைமைப்பண்புடையநகர்போக்கி,
பாண்டியர் தம்புத்திரராய்ப்பகர் கொங்கர்ஜவரொடும்.

வேண்டிய சீர்வேளிர்களும் விறல்கெழுநற் (கொற்றவை) நற்புகழ் பாடகொலுவமர்ந்துகுடி புரந்து (கத்தல்) கொற்றமதுபுரி நாளில். திங்களையும்

மெய்க்கீர்த்தி திகழ்சோழர் தம்குடியில்மைக்
கருமைமை யூரும்
மருவுதிரு அய்யோத்தி ப்பட்டினமும்
வேங்கடமும்
பாங்கமரும் துவரையதும்
சக்கரமோட்டிய அரசபுரியும் சக்கரவர் சக்கரவர்த்திகள்

எனவே தார் அரசு புரிநிலமை மையூரும் பிற தலமும் மாதவ நீராடிவரும் செய்யூரு மாதவத்தர் செப்புநலம் கேட்டயிவன் அங்கவரில் வாழ்வு பெறும் அழகிய சீர்த்துவரையில் வாழ் செம்பியனைப் பொன்னணியும் திகழ் சோழ எழினியையும்வம்பியல் செந்தார் அணியும் மாண்பன் இருங்கோவேள் லையும்தியனொடுமையூரன் திகழ் பொருநான்என்பவனை நட்பரசு ஆக்கியவர். நல மிகு சீர் நற்குடியில் தன் சேய் மந்தரஞ்சேரல் தனக்கு மகட் கொடை நேர்ந்து சேரலா மா நகர அதனில் திகழ்காக பதி அதனில் பரளவும் கீர்திபுனை பகர்த் திருச்செங்கோடதனில் மன்னு பலபதிகளும் மகன்றனை நல் லரசாக்கி துன்னு பல வளங்களொடு சுபமாக விளக்கதனில் வந்து தன தரசியலைவகையாக நடத்திடு நாள் விந்தை பெறு இவன் தோள்மேல் விந்தையுமே கூடினளால்.

நட்பரசர் தனக்கும் அவன் நல புலமை தருவதற்கே பெட்புடையா மனம் அதனில் பெரு விருப்பும் மிகக் கொண்டு இருங்கோவைச் சகபுரி யிருந்துவரும் எழினியையும் திதியனையே பேரென்னும் ஓர் பொற்புடைய பதி தந்து வரு குறைஒன்றும் இல்லாது மணி அரசு செய்திடும் நாள் வந்தமரும் வேளிரெல்லாம் வகைபடவே சொல் தரும் இந்தநிலம் தமதாக்கி எழில்வளணை இயற்றியதால் மந்திரி மார் தம்முடனே வரும் சேனை தானை நடத்தும் தந்திரமும் மிக்கச்செய்து தருவளவர் எனும் பதமும் கிள்ளியோடு நள்ளி முதல் கேடில்கா விதிப்பதமும் வில்ளருஞ்சீர் ஏனாதி மிகுபதமும் மோதிரமும் தனது இனும் பலகாணி தகு சிறப்புச்செய்து நலமைந்து பெற அவர்களுடன் மகிழ்ந்து அரசு புரிந்திடும் நாள்.

நிலந்தரு சீர்ப் பெருங்கீர்த்தி நிலைமைபெரும் பாண்டியனின் குலம்பெருக வந்துதித்த கோ வேந்தர் ஐம்பிரிவர் பூவலியர்,மாவலியர் பொற்பு மிகும் காவிலியர் ,சேவாகமே மிகு வேடர் செம்மைமிகு வேட்டுவர்கள் பன்றி மலை மண்டிலத்துப் பாகொழுகுமரு நாட்டில்

வென்றிதரு விரடபுரி (தாராபுரம்) மேவியமர்ந்து அரசு புரி காவிலியர் கொங்கர் எனும் கமழ்தாரார் இவனுடைய மந்திரியர் சேனைதனை வகை பெறவே நடத்துநர். இந்தநிலை தமக்கு எதிரா எங்கிருந்தோ வந்தவர்கள் மந்திரராய் சேரல் மனம் மகிழ்தருசீர்ப் பண்பினாராய் சம்பந்தரய் உளவிப் தமக்குறிய பூமிதனில் பிம்பமிரும் காணியராய்ப் பெருகி வளர் நிலைகண்டு ஆத்திரமும் கோபமதும் அருமனத்து மிகத் தாங்கி தங்களது தலைவரெனத் தருசீர்த்திமாவலியன் பங்கு பெறும் காவலவப் பண்புடைய கொத்து முடிப்பாண்டியன் தன்பால் அணுகிப்பாராளும் பதமுடைய ஈண்டு புகழ் தம்பதத்தை இன்று வருவோர்க்களித்த சேரலனைச் செருவருத்துச் சென்று தொலைத்திடுவம் எனக் கோபித்துக்கூற அதைக் கொத்துமுடியோன் கேட்டுநாக்கடித்து அருமீசை துடிதுடிப்பவடக்கமரும் சேரலனை மன்னனெனக் கொண்டது நம் அடக்கரியவன்மை தனக்கருமாகதந்தெமை போர்க்கெழுந்து ஆங்கவனைப் புறங்கண்டும் நம்மவர்கள்தார் குதிரையானையெலாம் சமர்க்கோலம் செய்ம்மின் என போக்கினன்.

ஓர் தூதுவனைப் புறங்காணும் ஆசையதால் குடமலையும் வடமலையும் குணமலையும் பிறவாயதர மலைகள் ஆளும் நலத்தருசேரல் முன்வந்து அத்தூதன் மொழிகின்றான் ஆன்றமைந்த மிகுகேள்வி கொத்துமுடி யோன நின்பால் குணமமையவிட வந்ததூதனிவன். வந்தெனனச் சொல்லு முறையும் உண்டென்ன மாந்தரனும் கோபித்த வருவயணம் (காரணம்) கூறென்றான் கல்தோன்றி மண்தோன்றாக்கால முதலா நாங்கள்மல் (வலிமையான) வலயதாதோள் கொண்டு மாவலியர்என இருந்து காவலராய்க் கொங்கர்களாய் கமழரசு புரிநாட்டில் தாவளஞ் சேர்மன்னனுந்தான் தனியரசாச் செய்ததனால் கொங்கனென எந்நாமம் கொடுத்து உம்மை மகிழ்வித்து எங்களது புயவலியால் எண்டிசையும் வென்றளித் துமந்திரராய்ச் சேனைதனை வகைபெறவே நடத்திடு சீர்த்தந்திரராய் இருந்த எமை தான்மதியாதிது நாளில் வடக்கிருந்து வந்தவரை மதித்தவரை மந்திரியாய் தடக்கிரிசூழ் உலகமதில் தனிக்காணி தந்தளித்தால் எங்கள் குலத்தவர் தமக்கு இழிவாகும் ஆதலினால் பொங்குமதைப் போக்கவரும் போர்க்கெதிராய்ப் போர்புரிய கொங்கரெனும் பேரெமரைக்கொன்று பினர்த்தரிக்கவெனும் என கொத்து முடியோன் வார்த்தை.

குவலயபூபதி செவியில் மெத்துதிறலுடன்வீழ வெகுண்டமரில் பார்ப்பம் என தூதுவரைப் போக்கி வரும் (அனுப்பிவிட்ட-குறள்-774) தூறர் (பழி சொல்லும்)

எனும் மந்திரரை எதுவுடன் மிகப்பார்த்து எழுந்தவாரே சமர்புரிய தனக்கு உபகாரம் புரியதலை இளி செய்யு வாரையும் மனக்கினிய முறைமை அதில் மகிழ்விக்குமாறியம்பி ஏறை மலையாருகாசு இருக்குமொரு செங்களத்தில் திங்கள் மரபினில் வந்த சீர்மை மிகுபாண்டியர்கள் பொங்கிவரும் புத்திரரை போற் றிவரும் கொத்து முடிக்கொங்கனுடன் மலையரசு குணம் நிறையப் புரிநிறைந்து. கொங்கனெதிர் அமர்புரியக் கொண்டவன் நற்படை நாட்கோள் சேரலன்தன் படையெடுப்பும் செம்மையுள அவன்சேனை ஆரவாரமுடன் வந்த அதனைமனமது கொண்டுயாக புரியொடு பிறவும் அரசு புரிகொத்து முடிவேகமிகு மன்னவனும் விடுத்தனன். தென்மதுரை சேர்அரசு புரிபாண்டியனும் அனுப்பினன் நற்படைவேண்டி விரசு புரிதிருக்கோலம் விளங்குதிறல் மாமதுரை மன்னவனும் இதுகேட்டு மனம் பெருகச்சினம் கொண்டு தென்னவனென்றில் இவ்வுலகில் திகழ்சீர்மை கொண்டிலகும் நம்மது புத்திரவர்க்கம் நாடாளும் தேன்நாட்டில் செம்மையுடன் சேரலனைச் சேரவமைத் திட்டதுவும் அன்றி நமதாங்குடியின் அணிமலரைத் தந்ததுவும் கொங்கன் என நமது பெயர் கொடுத்ததுவும் சீர்மைபெற இங்கு அவன்தனைப் போற்றி இருந்ததுவும் தப்பாமல் அத்தவரைப்போர் முறையில் அகற்றி வரும் செயல்புரிய இத்தரையில் படைகொடு நாம் எழுதலே நலம் என்று மாமதுரைப் பாண்டியனும் மாண்பு மிகும்தேன் நாட்டுசேம மிகும்கொத்து முடிச்செழியன் எனும் மன்னனுடன் கொங்கர் எனும் பெயர்கொண்டு குலவும் நலவேட்டுவரை அங்கமரும் வேடர்தமை ஆதரித்துத்தான் கூட்டிபெருஞ்சேனை கடல் போலப் பேரார ஆர்ப்பரித்து அருஞ்சீர்த்திச் சேரலனை அடுத்ததனால் அவர்களுடன் வந்தெதிர்த்த சேனைகளை வல்லமை கொண்டே தாக்கி பைந்துணர்சேர்ர பனந்தாரன் பக்கமுள்ல மற்றவரும் பல நாட்கள் போர் புரிந்து பலபடியாய் மிகவென்று நலமனைய வெற்றிகொடு நாயகராய் வந்தெதிர்ந்த பாண்டியனை, விடலாபுரி பார்திபனையாக புரி ஆண்டு வரும் காவலனை யாவரையும் அணி போரில் படத்துரதி மிக வெட்டி பனபுயரும் மற்றவரை இதத்துயரும் பொதினி வரை ஏகவமர்தனில் ஒட்டிபுரிந்து செயக்கொடி நாட்டிபுவனியெலாம் தமக்காக்கி தெரிந்து மெத்திறம் விளைத்த திறல்வேளிர்தமைப் புகழ்ந்துமைந்துடனே

வாகையது மாண்புபெறவே புனைந்து உதவி வரும் வேள்பலர்க்கும் ஊர்க்காணி பரிசளித்து பதமிகுந்த அரசாட்சி பார்மகிழ நிலைநிறுத்தி தன்னரசு மிகப் புரியத்தகு வாரை ஆராய்ந்து தென்னவர்கள் ஊர்கள்தொறு திறல் வேளிர்தமை நிறுவிவடமலையும் தென்மலையும் வாகுபெருபல இடமும் குடகடலும் குணகடலும் குலவிடு நற்பூமியெலாம் தன்னரசை நிலைநிறுத்தித் தகுந்த நாடுநிலம் ஆய்ந்துதென்னவர் தம் பூமியினுள் திகழ்தலமாம் ஓரிடத்தில் மாந்தையெனத் தன் நாமம்மருவ ஒருநகர் அமைத்து பாந்தமுடன் ஐயன் எனும் பகர்சாத்தன் தளிஎடுத்து நாட்டரயன் என நாமம் நவின்று தொழுதவன் குறைதீர் மோட்டு நலத்தொருபூதம் முழுநலத்தால் எழுவித்து மந்திரநன் முறைமையினில் வருதெய்வத்திறம் பேண எந்திரசாதனம் முதல் இயற்று வித்து நாட்டினர்க்கு ஒரு குறையும் இல்லாது வறுதுயரம் நில்லாது மாரிவளங்குறையாது மனுநீதி தவறாது தன்னுயிர்போல் மன்னுயிரைத் தலையளி செய்தே ஆண்டு சேயான மாந்தரனும் திறமையொடு புவிபுரத்தல் (ஆட்சி செய்தான்) ஆயான் நலம்பலவும் அமைய விளக்குதல் கண்டும் அன்னவனுக்கு உறுதுணையாய் அறுவர் துணை நலம் கண்டும் பூரித்து தன் உள்ளம்போல் புயம் வரைப் புகழ்குடி அறிந்து நலங்கண்டு அவனியெல்லாம் புகழ் பரப்பி இறைவனது திருவடியை இதயமதில் மிகக்கொண்டு பல்லூழி வாழ்கவென்றான்.

பார்த்திபனும் கோமகனும் நீடுழி வாழ்க வெனநித்தமுமை வாழ்த்துவமே!.

ஆய்வு நூல்

1) ஆவணம் இதழ்4 1994 புலவர் ராசு யீயபந 90

2) காலபிளர் போர் அடசா பாளையம் சந்தராசேகர் .

3) தொல் குடி வேட்டுவர் சமூக ஆவணம் ப ஆனந்தகுமார்

4) வேட்டுவர் வேந்தர் மரபினர் Dr.Valaiparameswaran.Md

ஒடுவங்க நாட்டு வரலாறு

சரோஜினி சந்திரசேகரன்,
11/16, அடசப்பாளையம்,
கோபி - வட்டம்,
ஈரோடு - மாவட்டம் 638 505

"வங்கநாட்டின்" வங்கபுலிக்கவுண்டன்வரலாறு (வங்கநாயக்கன் பாளையம்) நாய்க்கன் எனும் பட்டம் நாய்க்கர் காலங்களில் வேட்டுவ பாளையக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டம் ஆகும். இந்த ஒடுவங்க நாட்டின் தலைநகர் இரும்பொறை ஆகும்.

ஓதிமலை ஆண்டவர்:

இரும்பொறை என்றால் இரும்பு போன்ற வலிவுடைய குன்று என்பது அர்த்தம். பொறை என்றால் குன்று என்று அறியப்படுகிறது.

அப்பனுக்கேபாடம் ஓதியமலை சுப்பனுடைய ஓதிமலை ஆகும். பெரிய ஆண்டவர் எனும் சிவனுக்கு ஓம் எனும் மந்திரத்தை ஓதியமலை ஓதிமலை எனப்பட்டது. (பிரம்மனுக்கு ஐந்து தலைகள் இருந்தது எனும் ஆணவத்தைப் போக்கி நான் முகனாக்கி ஆலயத்தின் வெளியே உள்ள வன்னிமரத்தடியில் அமரச் செய்தான் முருகன். பிரம்மனுக்கு ஆலயம் கிடையாது ஐந்து தலைகளில் ஒரு தலையைக் கொய்து பிரம்மனின் ஆணவத்தை அடக்கியவனுடைய மலை ஓதியமலை)

(பஞ்சபூதங்களை அடக்கி ஆண்டவன் மலை ஆதலால் 'ஓதிமலை ஆண்டவர்' என்று அம்மலையில் உள்ள ஆண்டவனை அழைக்கின்றனர்) ஐந்து தமிழகத்தையும் ஆண்டு எட்டு திசைகளிலும் புகழ் அடைந்த தமிழ்வேள் நமது முருகவேல். ஐந்து தலைகளும் எட்டுகைகளும் உடையவன் ஓதிமலை ஆண்டவன்.

ஏர் உழவு அந்தியூர், கார் உழவு மூடுதுறை என்கிறது அந்துவ வேட்டுவர் காணிப்பாடல். இன்று அந்துவன் அந்தி எனும் அந்துவ வேட்டுவப் பாளையக்காரர் ஆளுமையில் உள்ள கோயில் ஓதிமலை ஆண்டவர்கோயில். இன்று ஆண்டவருக்கு இரும்பறையில் தேர் ஓட்டி

திருவிழா செய்பவர்கள் அந்தி வேட்டுவரே ஆவர். ஓடுவங்க நாட்டின் தலைநகரில் இருந்து ஐந்து முகங்களையும் எட்டுகைகளையும் உடைய ஒரு அரிய முருகனின் அருள் வேண்டிய மலைதான் ஓதிமலை.

பஞ்சபூதங்களை (நீர், நெருப்பு, காற்று, நிலம், ஆகாயம்) அடக்கி ஆளத்தெரிந்த பின்மனித சக்தியே மாபெரும் சக்தி என்பதை உணர்ந்தனர். வேட்டுவ இனக்குழு மக்கள் மரம் மற்றும் விலங்குகளின் சக்தியே மனித சக்தியைவிட பெரியதாக தெரிந்த காலத்தில் மரம், செடி, கொடி, விலங்கு, பறவையின் பெயரில் வேட்டுவ இனக்குழுக்கள் ஆதியில் தோன்றின. பின் மனித சக்தியே மாபெரும் சக்தி என்று உணர்ந்து நாகரிகம் பெற்றகாலத்தில் இனக்குழுக்கள் தலைவன் பெயரில் தோன்றின. அந்துவன் பெயரில் தோன்றியதே அந்தி எனும் அந்துவ வேட்டுவ இனம், பின் உலகில் முதன்முதலில் அரசு ஏற்பட்டது அது வேட்டுவ அரசு எனப்பட்டது.

இயற்கையையும் இயற்கைச் சக்தியையும் வழிபட்ட வேட்டுவ இனம்மனித உருவ வழிபாட்டைதன் இனக் குழுதலைவனானசிவன், பெருமாள், குமரன் இவர்களை வழிபட ஆரம்பித்தனர். குறிஞ்சியில் தோன்றிய நாகரீகத்தை முல்லை, மருதம், நெய்தல் எனும் நிலங்களில் பரப்பினர்.

இதை உணர்த்துவதே ஓதிமலை சின்ன ஆண்டவனின் ஐந்து தலைகளும் எட்டுகரங்களும் இது வேட்டுவதலைவர்களின் தொன்மை வரலாறு கூறும் உண்மை எனப்படும்.

இந்த வேட்டுவ அரசு ஐந்து தமிழகத்தையும் ஆண்டது எட்டுதிக்கிலும் அதன் புகழ் பரவியது. தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி! போற்றி!! எனும் வரலாறு வரிகளை இங்கு மணிவாசகர் நினைவு கூறுகிறார். நாவலத் தீவை ஆண்டவன் தென்னாட்டை ஆண்ட தட்சிணா மூர்த்தி (தட்சணம் என்றால் தென்தசையை குறிக்கும்) சிவன் ஒரு பாண்டிய வேட்டுவன், பெருமாள் ஒரு சேரவேட்டுவன், சோழன் இவர்கள் இருவருக்கும் மாமன்மச்சான் முறையாகும் முருகவேல் (தமிழ்வேள்) சங்ககாலத்தில் வேட்டுவத் தலைவன் முருகனுக்கு ஒரே மனைவி வள்ளிதான் வேட்டுவமன்னன் நம்பிராசனுக்கு ஒரே மகள் வள்ளி, நம்பிராசனுக்கு வள்ளி மலையில் உள்ளதினைப் புலம் சொந்தமானது. தேனும் தினைமாவும் தான் வேட்டுவனின் முதல் உணவு. ஆதிகாலங்களில் தினையை

விதைக்கவில் அம்பால் கீறினான். உலகின் முதல் உழவுவில் உழவுதான். இன்றும் பழனி மலையில் இரவு நடைசாத்தும் பொழுது அந்த வேட்டுவத் தலைவனுக்கு தேனும் திணைமாவும் படைக்கின்றனர். இன்றும் இலங்கையில் திணைக்களம் என்று தான் கூறுகிறார்கள், ஆனால் தமிழகத்தில் வேளாண்மை கழகம் என்று கூறுகிறார்கள். இந்த வேட்டுவ நாகரீகம் முல்லை, மருதம் என பரவிய போது மருதநிலத்தின் கடவுள் இந்திரன் எனவே இந்திரனின் மகளான தேவானையை (தெய்வானை) முருகன் மணந்ததாக புராண வரலாறு கூறுகிறது. புராணம் வரலாறு அல்ல ஆனால் பழைய புராணங்களில் வரலாற்று கீற்றுகள் இருக்கும். இது மருதத்தில் பரவிய வேட்டுவர் நாகரீகத்தை குறிக்கிறது.

வேட்டுவ இனகுழுக்களுக்குப் போர்தெய்வம் கொற்றவை (காளி). கொற்றவை எட்டுகரங்களுடன் வேட்டுவ இனகுழுக்களுக்கு எட்டு திசையிலும் வெற்றி தரும் கன்னித்தாயாக உள்ளாள். வேட்டுவர்கள் ஆதியில் வாழ்ந்த இடத்தைக் குறிஞ்சி என்பர். ஆதலால் தான் வேட்டுவர்களின் கோயில்களில் தெய்வத்திற்கு முன் குறிஞ்சி அமைக் கின்றனர். குறிஞ்சியில் தெய்வத்தைத் தாலாட்டுகிறார்கள் ஊஞ்சலில், இதுவேட்டுவரின் தொன்மை பற்றியது ஆகும்.

வேட்டுவத் தலைவன் முதல் தலைவன் பெரிய ஆண்டவன் சிவன் பஞ்சபூதங்களை அடக்கிஆண்டதைநினைவுகூறும் பொருட்டு நமச்சிவாய என்னும் ஐந்து எழுத்து மந்திரத்துடன் பஞ்சபூத ஸ்தலங்களில் சிவன் குடி இருக்கிறார். வாயுதளம் காளகஸ்தி, நெருப்புதளம் திருவண்ணாமலை, நீர்தளம் திருவானைக்காவல், நிலம்காஞ்சிபுரம், ஆகாயத்தலம் தில்லை ஆகும். ஐந்து தமிழகத்தையும் ஆண்டபஞ்சவர்ண இராசாக்கள் வேட்டுவர்கள்.

வடுக வேட்டுவர்:

சுந்தர மூர்த்தி நாயனார் கொங்கில் பயணம் செய்த பொழுது சேரமன்னன் சேரப்பெருமாளிடம் பெரும்பொருள் பெற்று திருமுருகன் பூண்டிவரும் பொழுது சிவனின் கணங்களாக வடுக வேட்டுவர்கள் வந்து வழிமறித்து அப்பொருள்களைப் பறித்துச் சென்று விடுகின்றனர். பின் திருமுருகன் பூண்டி வந்து தெய்வத்தை (சிவனை) வேண்டியதால் அப்பொருள்கள் திரும்பக் கிடைக்கின்றன. இந்நிகழ்ச்சி உலகில் உள்ள அனைத்துக் கோயில்களிலும் 'வேடுபறி' என்ற பெயரில் நடக்கிறது.

திருமுருகன் பூண்டியில் உள்ள சிவனின் லிங்கவடிவம் வில்லுடன் காட்சி அளிக்கிறது. சிவன்வில்லுடன் காட்சியளிக்கும் லிங்கம் இரும்பொறை (புஞ்சை புளியம்பட்டி) அருகில் உள்ள பெரிய குமாரபாளையத்திலும் காணப்படுகிறது. இந்த வடுகவேட்டுவன் தான்தன்னுடைய கதாநாயுடன் காலபைரவராக வடுகமூலையில் சிவன் கோயிலில் (வடுகநாதர்) சன்னதி உள்ளது. தேய்பிறைஅஷ்டமி அன்று வைகத்து (கேரளம்) ஈஸ்வர மகாதேவன் ஆலயத்தில் இந்த கால பைரவருக்கு விசேஷ பூஜை இன்றும் மிகச்சிறப்பாக நடக்கிறது.

தமிழகத்தின் முதல் சொத்து ஆடுமாடுகள் தான். பழனியில் முருகனுக்கு வெள்ளியால் ஆன ஆட்டுவாகனம் உண்டு. ஆடுகளுக்குச் சொந்தக்காரன் அவ்வையிடம் சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? என்று கேட்டதால் அவ்வையார் முருகனைப் பழம் நீ அப்பா பழனியப்பா என்று அழைக்கிறார். ஆடுகளுக்கு உரிமை உடைய தமிழ்வேள் முருகன் சின்ன ஆண்டவர். குமரன் பெருமாளுக்கு (சேரனுக்கு) மாப்பிள்ளை முறையாகும்.

சிவனுக்கு வாகனம்மாடு, மாடுகளுக்குச் சொந்தக்காரன் சிவன் பெரிய ஆண்டவர், எனவே "ஆகெழுகொங்கர்" வேட்டுவரே ஆவர்.

மௌரி என்றால் மயில் என்று பொருள். தமிழன் மௌரியர்களைத் தமிழகத்தில் நுழைய விடாமல் அடக்கியதால் தமிழ்கடவுள் வேட்டுவத் தலைவன் முருகனுக்கு மயில் வாகனமாக அமைந்தது. கோசர்களை அடக்கியதால் சேவல் கொடியோன் என்று அழைக்கப்பட்டான்.

கொற்றவை:

கொற்றம் என்றால் வெற்றி என்று பொருள். ஔவை என்றால் தாய் என்று பொருள்படும். வேட்டுவர்களுக்கு வெற்றியைக் கொடுக்கும் கன்னித்தாய் அவள்வேட்டுவர்கள் சிங்ககூட்டத்தினரை அடக்கியதால் சிங்கம் கொற்றவைக்கு வாகனம் ஆனது, மகிடம் அல்லது மகிஷம் என்றால் எருமை என்று பொருள்படும். எருமைநாடு என்பது இன்றைய மைசூர் ஆகும். மைசூர் எருமை கூட்டத்தை அடக்கி ஆண்டதால் மகிஷாசுரவர்த்தினி என்று கொற்றவை அழைக்கப்படுகிறாள், கொற்றவையின் காலடியில் எருமையின் தலைகிடக்கும்.

விநாயகர் (கணபதி) யானை கூட்டம் எலிகூட்டத்தை அடக்கியதால் விநாயகருக்கு எலிவாகனம் ஆனது.

தணாய்க்கன் கோட்டை (தனநாயக்கன் கோட்டை):

கொங்கு நாட்டில் உள்ள 32 ஊர்களுக்கு மேல் கோட்டை நகர் அதிகாரத்திற்கு வேட்டுவ சமூகத்தார் நியமிக்கப்பட்டதைச் சோழன் பூர்வப்பட்டையம் கூறுகிறது. இப்பணியைச் சேரமான் பெருமாள், கரிகாலச் சோழன் மீனாட்சி சௌந்தரபாண்டியன் ஆகியோர் செய்ததாகபட்டயம் கூறுகிறது.

வேட்டுவ சமூகத்தைச் சார்ந்த சத்தியமங்கலம் சின்னப்ப மண்ணாடி வகை தானையத்து மண்ணாடிக்குக் கரிகாலச் சோழனால் தணாயக் கண்கோட்டை நகர் அதிகாரத்திற்கு நியமிக்கப்பட்டார் அடுத்து வேட்டுவ சமூகத்தைச் சார்ந்த தாணையத்து மண்ணடி வகை கங்குநதி மண்ணாடிக்குக் கரிகாலச் சோழனால் குள்ளந்துறை கோட்டை நகர் அதிகாரத்திற்கு நியமிக்கப்பட்டார்.

வரலாற்று பெருமை மிக்கதணாய்க் கன்கோட்டை ஒடுவங்க நாட்டில் மோயாற்றின் கரையில்மோயாறும், பவானி ஆறும் சந்திக்கும் இடத்திற்குச் சற்று மேலே தொரவலூர் என்ற இடத்தில் பல பெருமைகளை யுடையதாய் அமைந்துள்ளது. சோழன் பூர்வபட்டியத்தில் தணாய்க்கன் கோட்டை தணக்கன்கோட்டை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கோட்டை அதிகாரம் அவிநாசி வரை பரவியிருந்தது, இக்கோட்டை ஒடுவங்கநாட்டு அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தது கிழக்கிந்திய கம்பெனியின் ஆய்வு அலுவலராக நியமிக்கப்பட்டபுக்கானன் கொங்குநாட்டில் பவானிகோவை, நீலமலை பகுதிகளில் மக்களிடம் கருத்துக்கள் கேட்டு அவரது பயணக் குறிப்பில் எழுதி வைத்திருக்கிறார். அக்குறிப்பில்" அக்கோட்டை மதுரை ராஜாவின் கீழிருந்ததணா நாய்க்கன் என்ற பாளையக்காரரால் கட்டப்பட்டதாகும். அந்தப் பாளையக் காரரின் சந்ததியினரிடமிருந்து மைசூர்ராஜா அதைக் கைப்பற்றினார் என்று அவ்வூர் மக்கள் கூறினர். தணாய்க்கன் கோட்டை பகுதியில் ஊருக்குச் சற்றுமேற்கேபவானி ஆற்றின் அணை ஒன்று கட்டி சிதைந்த நிலையிலும் 400 ஏக்கர் நிலத்துக்கு நீர் பாய்ந்து வந்தது" என்று கண்டுள்ளார்.

இக்கோட்டையில் உள்ள சோமேஸ்வர மங்கலாம்பிகை கோயில் கோட்டைகோயில் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயில் கருவரை மேற்குச்சுவரில் இக்கோயிலின் முற்காலபெயர்" தான் தோன்றீஸ் வரமுடையார்" என்றும் இவ்வூருக்கு துரவலூர் என்றும் இங்குள்ள முற்காலக் கோட்டைக்கு 'நீலகிரி சாதாரண கோட்டை என்றும் அழைக்கப்பட்டன என்பதை கல்வெட்டில் செதுக்கி வைத்துள்ளனர். இக்கல்வெட்டு போல பதினொரு கல்வெட்டுகள் இக்கோயிலில் அறியப்பட்டுள்ளன இக்கல்வெட்டுக்கள் இதன் பழமையை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

இக்கோட்டை ஒடுவங்க நாட்டு வேட்டுவப் பாளையக் காரனிடமிருந்து மைசூராரும் அதனைத் தொடர்ந்து இங்கிலீஷ்காரரும் பறித்துக் கொண்டனர். சோழன்பூர்வ பட்டயத்தில் தணாய்க்கன் கோட்டை, குள்ளந்துறை கோட்டை நகர் அதிகாரத்திற்கு வேட்டுவ சமூகத்தார் நியமிக்கப்பட்டிருந்ததை அறிந்தோம். எனவே இக்கோட்டை பண்டு தொட்டுவேட்டுவ அதிகாரத்தில் இருந்ததை வரலாற்றுச் சான்றுகள் மூலம் அறியலாம். இக்கோட்டை அந்நியர்கள் வசமானதை ஒரு பழம்பாடல் ஒன்றை ஓதிமலை ஆண்டவரை தரிசிக்க மலை ஏறும் போது மக்கள் இக்கோட்டையை பார்த்து பாடி செல்வார்கள் அப்பாடலில் சிலவரிகள்.

இங்கிருந்து பார்த்தால் அது இங்கிலீஷ்கோட்டை
அங்கு போய் பார்த்தால் அது தணாய்யன் கோட்டை
புட்டுப் பார்த்தால் அதுபுலியன் கோட்டை...

புலியன்பட்டி வங்கநாயக்கன் நாயக்கன் என்பது பட்டம்:

அந்துவன் சேரல் இரும்பறையின் கால்வழியினரான அந்துவ வேட்டுவர் (அந்திவேட்டுவர்) ஒடுவங்க நாட்டின் பாளையக்காரர்களாகத் தொன்றுதொட்டு அந்நாட்டில் அதிகாரம் செலுத்திவந்தனர். ஓதிமலை இரும்பறைக்கு அருகில் அந்துவவேட்டுவர் புலிகுத்திகற்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இந்த ஒடுவங்க நாட்டுபாளையக்காரர் 'வங்கநாட்டுபுலி' என்று அம்மக்களால் அழைக்கப்பட்டனர். இன்றும் இப்பாளையக்காரர்கள் வசிக்கும் ஊருக்கு வங்கநாயக்கன் பாளையம் என்று அழைக்கப்படுகிறது, இவர்கள் மதுரை விஜயநகர ஆட்சியாளர்கள் காலத்திலும் ஒடுவங்க நாட்டுபாளையக் காரர்களாக சிறந்து விளங்கினர். கொங்குநாட்டில் முதன் முதலில் வடகரை ஆத்தூரில் காவேரியைக் கரை ஏற்றி ராஜவாய்க்கால்

(அல்லாள இளைய நாய்க்கன் கால்வாய்) வெட்டிய அல்லாள இளைய நாய்க்கன் எனும் அரைய நாட்டு வேட்டுவப்பாளையக்காரன் சிறந்து விளங்கினார். வங்கப்புலி எனும் ஒடுவங்க நாட்டு அந்துவ வேட்டுவ பாளையக்காரர்கள் இன்று புலியின் பட்டி என்று வழங்கும் ஊர் அன்று இந்த புலிகவுண்டனின் ஆட்டுப்பட்டி, மாட்டுப்பட்டி மட்டும் சுமார் 300 ஏக்கருக்கு மேல் போடப்பட்டிருந்தது. அன்று புலியம் பட்டியாக இருந்தது பின் அது நெசவாளர், கண்ணடி கன்னடியர் எனபல குடியேற்றங்கள் நடந்து இன்று அது புளியன் பட்டி என்றும் புளியம் பட்டி என்றும் திரித்து வழங்குகின்றனர் அன்று போல் இன்றும் இந்த அந்திவேட்டுவப் பாளையக்காரர்கள் இரும்பொறையில் தைப்பூசத் திருநாளில் ஓதிமலை ஆண்டவருக்குத் தேரோட்டி திருவிழா சிறப்புடன் செய்து வருகின்றனர். இவர்கள் பவானிசாகர் சேர்மன் ஆக வெகுகாலம் பதவி வகித்தனர். புளியம்பட்டியிலும் அந்துவனின் ஒருகிளைகோட்டை இருந்ததாக வரலாறு கூறுகிறது.

வீரநஞ்சராய உடையார் (கி.பி.1489 - 1500) கல்வெட்டு ஒன்றும் தணாய்க்கன் கோட்டையில் உள்ளது. மைசூர்மன்னர்களின் அதிகாரிகள் தணாய்க்கன் கோட்டை, சத்தியமங்கலம் கோட்டை, புளியம்பட்டி கோட்டை, கொடிவேரிகோட்டை, அந்தியூர்கோட்டை, ஊராட்சிகோட்டை எனும் கோட்டைகளில் தங்கி இருந்து வரிவசூல் செய்தனர் என்று அறியப்படுகிறது, மேலே குறிப்பிட்டுள்ள கோட்டைகள் எல்லாம் வேட்டுவ ஆட்சியாளர்களின் கோட்டைகளே ஆகும்.

சத்தியமங்கலம் கோட்டைநகர் அதிகாரத்திற்கு வேட்டுவரில் சின்னப்ப மண்ணாடி என்பவரைச் சேரமான் பெருமாள் நியமித்தார் என்று சோழன்பூர்வபட்டயம் கூறுகிறது என்றாலும், மைசூரார் கொங்குநாட்டை கொள்ளையடிக்க அதன் தனவாய்கள் அடிக்கடி கொங்கு நாட்டின் எல்லை பகுதிகளில் படையெடுத்ததால் திருமலை நாயக்கர் சத்தியமங்கலத்தில் ஒரு ராணுவக்கோட்டையைக் கட்டினார் என்று வரலாறு கூறுகிறது.

பெருமாள் தணாய்க்கன் (தணாய்க்கன் என்பது தண்டநாயக்கன் என்பதன் மரூஉ ஆகும்) என்பவர் போசள வேந்தன் நரசிம்மனின் அமைச்சனாகவும், படைத்தலைவனாகவும் பணியாற்றினார். இவன் நீலகிரியை வென்றுதன் நாட்டுடன் இணைத்து ஒரு கோட்டையையும் கட்டிக் கொண்டு ஆட்சி செய்தான். இவன் மகன் மாதப்பதண்ட நாய்க்கன்

நரசிம்மன் மகன் வீரவல்லாளனின் படைத்தலைவன் ஆவான். போசள வேந்தன் வீரவல்லாளன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து அதன் ஒரு பகுதியை கைப்பற்றி ஆண்டான். அவனது கல்வெட்டுகள் அவிநாசி, அந்தியூர், சேவூர், பட்லூர், அரச்சலூர், அயலூர், பெருந்தலையூர், பேரூர், வெள்ளலூர், தணாய்க்கன்கோட்டை, குன்னத்தூர், ஈரோடு, விஜயமங்கலம் ஆகிய இடங்களில் உள்ளன.

தணாய்க்கன் கோட்டையின் கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் வீரவல்லாளன் காலத்தில் மாதப் பதண்ட நாயக்கரும் அவருடைய மக்களும் இக்கோவில்களுக்கு தானம் செய்ததை குறிப்பிடுகின்றன.

வீரவல்லாளன் காலத்திய போசளத்தண்ட நாயக்கர்களும் கொங்கு நாட்டின் நிர்வாக நடவடிக்கைகளில் பங்கு பெற்றுள்ளனர்.

இவர்கள் அரசனின் பெயரைக் குறிப்பிடாது தன்னாட்சி பெற்ற ஆட்சியாளர்கள் போன்று இவர்கள் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளனர். மாதப்பதண்ட நாயகன் "நீலகிரி சாதாரணன்" என்ற பட்டமும் நீலகிரியை வென்று ஒத்தையைப் பிடித்ததால் "ஒத்தைக்கு மிண்டான்" என்ற பட்டமும் பெற்றான். ஒத்தை என்பது ஒத்தக்கல்மந்து என்றிருந்தது பின்னர் அதுவே உதகமண்டலம் எனும் ஊட்டி ஆயிற்று. தணாய்க்கன் கோட்டைக்கு "நீலகிரி சாதாரண கோட்டை" என்று பெயர் ஆயிற்று.

மாதப்பனுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். மாதப்பாவின் மூத்தமகன் வீரசிக்ககேத்தய்யா பவானி ஆற்றின் மேல்கரையில் 'ஸ்ரீ மாதவராயப் பெருமாளுக்கு' ஒருகோயில் கட்டினான். அக்கோவிலுக்குக் குறுப்பு நாட்டு மக்கள் சிலமானியம் கொடுத்தனர் என்பதைத் திருவாய்பாடி விஜயமங்கலம் கல்வெட்டு உறுதி செய்கிறது.

மாதப்பாவின் இளையமகன் சிங்கய்யாதணாய்க்கன் இரண்டு ஊர்களைதானமாகத் துரவலூர் நீலகிரி சாதரணன் கோட்டை தான் தோன்றீஸ்வரமுடைய நாயனார் கோயிலுக்குத் தந்துள்ளான் என்றும் மாதப்பாவும் அவர் புதல்வர்களும் 14 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர் என்றும் பேரூர் கல்வெட்டு உறுதி செய்கின்றன.

நரையனூர் நாட்டில் அஞ்சாவது நல்லூர் என்ற ஊரைமாதவ நல்லூர் என்று புதிய பெயர் சூட்டி மாதவப்பெருமாள் கோவிலுக்குக் கொடையாக அளித்துள்ளதை நறையனூர் ஊர்ச் சபையினர் உறுதி செய்துகல்வெட்டு குறித்துள்ளனர். இக்கல்வெட்டுதாராபுரம் அருகே தாளக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் வீரவல்லாளன் கல்வெட்டு ஈரோடு திருத்தொண்டீஸ்வரர் கோயிலில் மேற்கு மற்றும் கிழக்கு சுவரில் உள்ளது. இக்கல்வெட்டு ‘திண்டல்’ என்ற ஊரைத் திருத்தொண்டீஸ்வரர் கோவிலுக்குத் தானமாக வழங்கியதாக கூறுகிறது.

மற்றும் இவருடைய கல்வெட்டு பெருந்துறை வட்டம் கத்தாங்கண்ணி நின்மனீசுவரர் கோயில் கருவறை மேற்குச்சுவரில் உள்ளது. இக்கல்வெட்டு மார்கழி திங்களில் திருவெம்பாவை பாடச் சிவப்பிராமணர் மூவர்க்கு மூலப்பொருளாக 50 பணம் தந்ததைக் குறிக்கிறது.

மூன்றாம் வீரவல்லாள தேவன் காலக்கல் வெட்டுதிருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம் பாப்பினி ஊரில் உள்ள நத்தக்காட்டு சாம்பல் மேட்டில் உள்ள தூணில் பொறிக்கப்பட்டுள்ளது.

ஸ்வஸ்தஸ்ரீ

நீலகிரிசா

தாரன்கோ

ட்டையில்

நாயனார்ஸ்ரீ

மாதவப்

பெருமாளுக்

குக்காங்

கயனாட்டா

ர்திருவிடை

யாட்டமா

கவிட்டப்பா

ற்பனியாள

கொங்கரமா

ரிமாத

வநல்லூர்

இதற்கும்

னான்

கெல்லைக்

குட்பட்டா

ர்க்

கும்

மூன்றாம் வீரவல்லாளன் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான் அவனது பிரதிநிதியாக கொங்கு நாட்டில் ஆட்சி புரிந்தவர் இராகுத் தராயமாதப் பதண்ட நாயக்கன் என்பவர். இவருக்கு பின் இவரது மகன் வீரசிக்கய்ய தண்டநாயக்கன் பிரதிநிதியானான். இவன் தந்தை பெயரால் மாதவப் பெருமாள் கோயில் கட்டி கொங்கு நாட்டில் பல ஊர்களைக் கொடையாக விட்டான். கொங்கரமாரி எனும் பட்டப்பெயர் இவனுக்கும் இவன் தந்தைக்கும் உண்டு என்று இக்கல்வெட்டால் அறியப்படுகிறது. தணாய்க்கன் கோட்டைக்கு 'நீலகிரி சாதாரன் கோட்டை' என்ற பெயர் இருந்ததை இக்கல்வெட்டு உறுதி செய்கிறது. பாப்பினிக்குத் தந்தை பெயரால் கொங்குரமாரிமாதவ நல்லூர் என்ற புதிய பெயரை வைத்துள்ளான்.

புக்கானன் பயண குறிப்பு "இக்கோட்டையைப் பற்றி என்ன கூறுகிறது என்றால் இக்கோட்டை மதுரை ராஜாவின் கீழிருந்ததணாய்க்கன் என்ற பாளையக்காரரால் கட்டப்பட்டதாகும். அந்த பாளையக்காரரின் சந்ததியினரிடம் இருந்து மைசூர் ராஜா அதைக் கைப்பற்றினார் என்று அவ்வூர் மக்கள் கூறினார்கள்"

இதுவரை நாம் அறிந்த வரலாற்றுச் சான்றுகளின் மூலம் அறியப்படுவது என்னவென்றால் தணாய்க்கன் கோட்டையைக் கட்டி ஆண்டவர்கள் ஒடுவங்க நாட்டு அந்துவவேட்டுவ பாளையக்காரர்களே என்பது தான்.

தணாய்க்கன் கோட்டைக்கருகில் குள்ளன் துறை இருந்தமையும் அதில் பரிசல் போக்குவரத்து நடந்தமையும் வனதுர்க்கை பத்திர காளிக்கு கரிகாலச் சோழனை கொண்டு உத்திரவாசல் கோவிலும் கட்டிவைத்த செய்தியும் சோழன் பூர்வபட்டையம் கூறுகிறது.

கொங்கு நாட்டில் உள்ள 32 ஊர்களுக்கு மேல்கோட்டை நகர் அதிகாரத்திற்கு வேட்டுவ சமூகத்தார் நியமிக்கப்பட்டதைச் சோழன் பூர்வபட்டயம் கூறுகிறது. இப்பணியை சேரமான் பெருமாள்,

கரிகாலச்சோழன், மீனாட்சி சௌந்தரபாண்டியன் ஆகியோர் செய்ததாக பட்டயம் கூறுகிறது.

வேட்டுவர் சமூகத்தைச் சார்ந்த சத்தியமங்கலம் சின்னப்ப மண்ணாடி வகை தாணையத்து மண்ணாடிக்குக் கரிகாலச் சோழனால் தணாய்க் கண்கோட்டை நகர் அதிகாரத்திற்கு நியமிக்கப்பட்டார்.

அடுத்து வேட்டுவ சமூகத்தைச் சார்ந்த தாணையத்து மண்ணாடி வகை கங்கு நதிமண்ணாடிக்குக் கரிகாலச் சோழனால் குள்ளந்துறை கோட்டை நகர் அதிகாரத்திற்கு நியமிக்கப்பட்டார்.

கஜல் கட்டிக்கணு வாய்க்கு சமீபத்தில் ஸ்கந்தபுரம் இருந்திருக்க வேண்டும் என சொல்லப்படுவதால் நீலகிரி தொடரில் குண்டா (குந்தா) மலைத்தொடரில் தோன்றி வடக்கு நோக்கி சென்றமாயாறு காவேரி உபநதியான பவானியாற்றில் சேரும் இடத்திற்குச் சமீபத்தில் மாயாற்றங்கரையில் தணாய்க்கன் கோட்டை என்னும் தணாய்க்கன் கோட்டை ஊர் அமைந்துள்ளது. இக்கோட்டை தற்பொழுது பவானிசாகர் அணையில் மூழ்கியுள்ளது.

கஜல் கட்டி கோட்டை

நீலமலைத் தந்த மற்றொறு பேராறுமோயாறு:

இந்த தணாய்க் கண்கோட்டை அமைந்த மாயாற்றின் கரையிலேயே தணாய்க்கன் கோட்டைக்கு 25 கிலோ மீட்டர் தூரத்தில் கசல்கட்டிகோட்டை, கசல்கட்டிகணுவாயில் 20 ஏக்கர்பரப்பளவில் உள்ளது. மைசூர் படையெடுப்பு இந்த கஜல் கட்டிகணு வாய்வழியாகத் தான் கொங்கில் புகுந்து கொங்குநாட்டு வேட்டுவ பாளையக்காரர்களுக்கு அடிக்கடி தொல்லைகள் தந்தனர். திப்புவின் படையெடுப்பில் இக்கசல்கட்டி கோட்டை திப்புவின் வசம் சென்றது அது முதல் இக்கோட்டை திப்புசுல்தான் கோட்டை என்று மக்கள் அழைத்துவந்தனர்.

பைகாரா - மோயாறு:

இந்த மோயாறு உதகையிலிருந்து கூடலூர் சாலையில் முதலில் வருவது தலைக்குந்தா, இந்த மோயாற்றங் கரையில் தான் ஆற்றங்கரை வேட்டுவ தலைவர்கள் இரண்டு கோட்டைகள் கட்டியுள்ளனர். ஒன்று கஜல் கட்டிகணு வாயில் (ஸ்கந்தபுரம்) அமைந்த கஜல்கட்டி கோட்டை மற்றொன்று தணாய்க்கண்கட்டிய தணாய்க்கன் கோட்டைஆகும்.

"நொய்யலாற்றங் கரையில் 'கொடுமணல்' சங்ககாலத்தில் புகழ் பெற்ற நகரமாக விளங்கியது. நான்கு திசைகளில் இருந்தும் வணிகர்கள் வந்து குவிந்து இங்கு மணிகற்களைப் பெற்றுச் சென்றனர். வடக்கு நோக்கி செல்லும் பெருவழி விசயமங்கலம், சத்தியமங்கலம் கடந்து பவானி ஆற்றின் துணை ஆறான மோயாற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்திருந்தடணாய்க் கன்கோட்டை வழியாக எருமையூரான் மைசூர் அடைந்தது"

(கொடுமணல் - தொல்லியல் அகழாய்வு அறிஞர்,
முனைவர். கா. இராஜன்)

ஆப்பக் கூடல் கல்வெட்டு:

"சுவஸ்தி ஶ்ரீமனுமகாப்பிரதானம் மாதப்பதண்டநாய்க்கருக்கு வடகரை நாட்டு நாட்டவரும், காலயுத்தி சம்பவத்சாகு சித்திரகண்டன் சந்ததிக்கு அமுது படிசாத்துப் படி உபயமாக இவ்வூர் நாற்பாற்கெல்லை நஞ்சைபுஞ்சை மேல்நோக்கிய மரமும், கீழ்நோக்கிய கிணறும் மற்றும் எப்பேர்பட்டனவும் கடமை குடிகளும் இருக்க கூடவராகவும் என்று செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொடுத்தோம். விஷ்ணுரட்சை 720 "தணாய்க்கன் கோட்டை அரசனாக ஆண்டவன் மாதப்ப தண்டநாயக்கன்.

(பவானி போற்றதும்,
முனைவர் க. வி. வேதநாயகம்பக்கம் - 107, 108)

அட்டப்பாடி - அத்திக்கடவு:

கூடல் பட்டியின் மேற்கேகொடுங்கரை பள்ள ஓடையும் சிறுவாணி ஆறும் ஒன்று சேர்ந்து வடக்கே சென்று வானியில் கலக்கிறது. வாணி (பவானி) ஆற்றுடன் இவ்விரு நீர்நிலைகளும் சேர்வதால் இப்பகுதி 'கூடல்பட்டி' என்றுஅழைக்கப்பட்டது. இங்குத் தமிழகத்தின் வனப்பகுதி தொடங்குகிறது, வானியாறு இங்கிருந்து அத்திக் கடவு வனப்பகுதிக்குச் சென்று பில்லூர் அணையை அடைகிறது.

காவேரிபுரம் (கஜல் கட்டி கோட்டைகள்):

காவேரிபுரம் காவிரி நதிக்கரையில் அமைந்த கோட்டையும், மோயாறு நதிக்கரையில் அமைந்த கஜல் கட்டி கோட்டையும் வேட்டுவ அரசர்களால் கட்டப்பட்ட கோட்டைகள் என்பதை அறிந்தோம்.

அத்திக் கடவு வனப்பகுதியை ஆண்ட வேட்டுவ மன்னன் அத்தி எனப்பட்டான். மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளை ஆண்ட அத்தி, கங்கன், கட்டிவல்வில், புன்துறை போன்றவர்கள் சங்ககாலத்தில் கொங்கை ஆண்ட வேட்டுவ மலை மன்னர்கள் தான். இவர்கள் சங்க காலத்தில் கொங்கை ஆண்ட இரும்பொறை எனும் சேர மன்னர்களுக்கு உற்ற துணையாகவும் படைத்தளபதியாகவும் சிறந்து விளங்கினார்கள் இதை சங்கபாடல்

“நன்னன் ஏற்றை, நறும்பூண்அத்தி
துன்னருங் கருத்திறற் ‘கங்கன்’கட்டி
வல்வில்புன்துறைஎன்றாங்கு”

சோழன் பெரும்பூண் சென்னிபுன்னாட்டை வயப்படுத்த அவனுடையதானைத் தலைவன் பழையனைஅனுப்பினான். அவன் புன்னாட்டின் தலைநகர் கட்டூரை நெருங்கியதும் இளஞ்சேரல் இரும்பொறைக்குக் கீழடங்கிய நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி, துன்னருங் கருத்திறற்கங்கன், கட்டி, வல்வில் புன்துறை ஆகிய சிற்றரசர் ஒன்று கூடி பழையனைப் போர்க் களத்தில் உயிர் நீக்கினார்கள்.

ஒப்பீட்டு நோக்கில் கண்ணப்பரும் காரைக்காலம்மையாரும்

பாரதி. சா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்,
sbarathe90@gmail.com
8883827308

பேரா. ச. இரவி,
நெறியாளர், தமிழ்த்துறை
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்,
திருவாரூர் - 610 005.

ஆய்வுச் சுருக்கம்

திண்ணப்பர் என்றழைக்கப்படும் கண்ணப்ப நாயனார் மற்றும் காரைக்காலம்மையார் ஆகிய இருவரின் காலம், வழிபாட்டு மரபு, பிற இலக்கியங்கள் வழி அறியப்படும் இருவரின் செய்திகள், இறைத்தொண்டு போன்றனவற்றை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்

திண்ணப்பர், கண்ணப்பர், காரைக்காலம்மையார், நாயன்மார், தொண்டு

முன்னுரை

சிவபெருமானின் மீது தீராக்காதல் கொண்ட அறுபத்து மூன்று நாயன்மார்களை மெய்யன்பர்கள் என்றழைப்பர் தமிழ்ச் சான்றோர் பெருமக்கள். இவர்களில் அன்பே உருவான அடிகளாக, இறைவனுக் கென்று தன் கண்ணையே பிடுங்கிக் கொடுக்கும் பேரன்பு மிக்க வேடர்குலத் தலைவனாக கண்ணப்பரின் வரலாறு கூறப்பெறுகின்றது. நாயன்மார்களில் எம்பெருமானை இசையால் துதித்து பாடல்கள்

இயற்றுவதில் முன்னோடியாகக் கருதப்படுபவர் காரைக்காலம்மையார். சைவ சமயம் இத்தமிழ் மண்ணில் தழைத்தோங்கும்படி துணை செய்த பக்தி இயக்கக் காலத்திற்கு முற்பட்டவர் ஆவார். கண்ணப்பர் மற்றும் காரைக்காலம்மையாரின் காலச் சூழல் வேறாயினும் தேவார மூவருக்கு மூத்தவர்கள் என்பது இருவரின் தனித்த சிறப்பாகும். இவ்விருவரையும் ஒப்புமை நோக்கில் ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

காலம்

கண்ணப்ப நாயனார் காலம் பற்றிய சான்றாதாரங்கள் கிடைக்கப்பெறவில்லை. ஏனெனில் கண்ணப்பர் பற்றிய வரலாறுச் செய்திகள் வாய்வழி மரபாகவே பெறப்பட்டு வருகின்றன.

'பெரியபுராணஆராய்ச்சி' என்ற நூலில் மா. இராசமாணிக்கனார், காரைக்காலம்மையாரின் 'புனிதவதி'எனும் இயற்பெயர் தூய வடமொழிப் பெயராக உள்ளது. சங்க காலத்தினர் வடமொழிப் பெயர்களை வைத்துக் கொண்டனர் என்பதற்குப் போதிய சான்றில்லை. சம்பந்தர் காலத்திற்கு முற்பட்ட சுமார் 6 அல்லது 5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக காரைக்காலம்மையார் இருந்திருக்கக்கூடும் எனவும், மற்றொரு இடத்தில் கண்ணப்பர், காரைக்காலம்மையார் ஆகிய இருவரும் கி.பி. 400 600 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கின்றார்.

'கல்லாடம்' எனும் நூலில் தேவார மூவரைக் குறிப்பிடாது திருமூலர், காரைக்காலம்மையார், மூர்த்தியார் ஆகியோரைக் குறிப்பிட்டமையால், காரைக்காலம்மையாரின் காலம் ஐந்தாம் அல்லது ஆறாம் நூற்றாண்டாக இருக்கக் கூடுமென்று 'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்' எனும் நூலில் மறைமலையடிகள் பகர்கிறார்.

வழிபாட்டு மரபு

1. கண்ணப்பர் கால வழிபாட்டு மரபு

கண்ணப்ப நாயனாரின் வரலாற்றுக் காலம், திருக்கோயில்கள் தோன்றிய நாட்பூசனைக்காக ஆசாரியார்கள் நியமிக்கப் பெற்றிருந்தும் பொதுமக்கள் வந்து வழிபாடு செய்துகொள்ளும் உரிமையைப் பெற்றிருந்த காலமாக இருத்தல் வேண்டும். ஏனெனில், திருக்கோயிலில் நாட்பூசனைக்காக நியமிக்கப்பெற்ற சிவகோசரியாரும் முறையே ஆகம வழியில் பூசிப்பவர் என்பதைச் சேக்கிழார்,

“எய்திய சீர் ஆகமத்தில் இயம்பிய பூ சனைக்கேற்பக்
கொய்தமல ரும்புனலும் முதலான கொண்டணைந்தார்”
- (திருத்தொண்.புரா. கண்ணப்ப.135)

என்றும்,

“சிந்தை நியமத்தோடும் செல்கின்றார் திருமுன்பு”
- (திருத்தொண்.புரா. கண்ணப்ப.136)

என்றும் கூறுவதால் அறியக்கிடக்கிறது. இதே திருக்கோயிலில் கண்ணப்ப நாயனார் பத்திமை நெறியில் அன்பு மேலிடத் தாமே வழிபாடு செய்கிறார். ஆகத் தாமே வழிபாடு செய்து கொள்ளும் உரிமை இருந்தமை பெறப்படுகிறது எனக் குன்றக்குடி அடிகளார் தன் ‘நமது நிலையில் சமயம் சமுதாயம்’ எனும் நூலில் தெரிவிக்கின்றார்.

சிவபெருமானின் திருவடிப் பேற்றை அடைவதற்கு மூன்று வகையான வழிபாடுகள் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. அவை 1. குரு வழிபாடு, 2. லிங்க வழிபாடு, 3. ஜங்கமவழிபாடு ஆகியனவாகும். இதில் கண்ணப்பர் ஆறே நாட்கள் இறைவனின் லிங்கத் திருமேனியை வழிபட்டு ஈசுவரனின் அனுகிரகத்தைப் பெற்றார் என திருவையாறு அண்ணாசுவாமி சிரௌதிகள் தனது ‘சேக்கிழார் காவ்யம் கண்ணப்ப நாயனார் (சில புதிய கருத்துக்கள்)’ எனும் நூலில் தெரிவித்துள்ளார்.

2. காரைக்காலம்மையார் கால வழிபாட்டு மரபு

தோழியருடன் விளையாடும் எல்லா விளையாட்டுக்களிலும், இளம் பிறைமதியைச் சூடிய சடைமுடியினை உடைய தேவர்களுக் கெல்லாம் தலைவனாகிய சிவபெருமானின் திருவார்த்தைகளையேதன் வாயில் உச்சரிப்பதாகப் பயின்றும், சிவனடியார் வரின், அவர்களைத் தொழுதுவதுமாகக் காரைக்காலம்மையார் வளர்ந்து வந்தார். இதனை,

“வண்டலபயில் வனஎல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
அண்டர்பிரான் திருவார்த்தை அணையவரு வனபயின்று
தொண்டர்வரின் தொழுது” - (பெரிய. காரைக்காற்.05)

எனும் பெரிய புராண காரைக்காலம்மையார் வரலாற்றுப் பாடல்பகுதி நவில்கிறது.

இதன் மூலம் காரைக்காலம்மையார் சிவனடியார் அனைவரையும் நடமாடும் தெய்வமாகக் கருதி வழிபட்டு இறைவனின் அருளைப்

பெற்றிருக்கிறார் எனலாம். இவ்வகை வழிபாடு திருவையாறு அண்ணாசுவாமி சிரௌதிகளால் மேலே கூறப்பட்ட ‘ஜங்கமவழிபாடு’ என்பதாகும்.

பெரியபுராண வரலாற்றில் கண்ணப்பரும் காரைக்காலம்மையாரும்

1. கண்ணப்ப நாயனார்

வேட்டுவர் குலத்தில் பிறந்து விற்கலையில் கைதேர்ந்தவராகத் விளங்கிய இவரது இயற்பெயர் திண்ணன். பூர்வ வினையால், சிவன் மேல் பித்தனைப் போல் காதல் கொண்டார். தான் வேட்டையாடிய மாமிசத்தையே படைத்து இறைவனை வணங்கிச் சென்றார். சிவனைக் காண மறுநாளும் ஆவல் எழ, நிறைய மாமிசம் கொண்டு சென்று, ஆசை தீர இறைவனிடம்பேசிவிட்டு வந்தார்.

ஈசனின் லிங்கத் திருமேனிக்கு அபிஷேகம் செய்யும் ஆவல் மேலிட்டு, வாயினால் நீர் கொணர்ந்து, இறைவனின் திருமேனியில் உமிழ்ந்து, தனது பக்தியை வெளிப்படுத்த, அதுவே திருமஞ்சனம் என இறைவன் ஏற்றார். மலரைத் தன் தன் தலையில் சேகரித்து அதைக் கொண்டே இறைவனைப் பூசித்தார். அக்கோவிலை பராமரித்து வந்த அந்தணர் இறைவனின் கோலத்தைக் கண்டு, வருத்தமுற்று இறைவனிடம் முறையிட இறைவனோ, தனது பக்தனின் மேன்மையை மறைந்திருந்து காணுமாறு கூறினார்.

அடுத்தநாள் கண்ணப்பர் வந்த போது சிவலிங்கத்திலிருந்து ஒரு கண்ணில் இரத்தம் பெருக்கெடுத்தோடியது. சற்றும் தயங்காமல் தனது கண்ணை அம்பினால் பெயர்த்தெடுத்துச் சிவபெருமானுக்குப் பொருத்திய பின் இரத்தம் வருவது நின்றது. உடன் மற்றொரு கண்ணில் இரத்தம் வழிந்தது. இம்முறை நாயனார் தனது காலைச் சிவலிங்கத்தின் இரத்தம் வழியும் கண்ணில் வைத்துக்கொண்டு, தனது இன்னொரு கண்ணையும் பெயர்த்தெடுக்கும் நேரத்தில் “நில் கண்ணப்பா” என மூன்று முறை கூறி இறைவன் தடுத்தாட்கொண்டார். இதனாலேயே திண்ணப்பர், கண்ணப்பரானார் என்ற பெயர் காரணம் சொல்லாமலே அனைவருக்கும் விளங்கும்.

2. காரைக்காலம்மையார்

புனிதவதி என்று பெயர்சூட்டப்பட்டு பேரன்பு கொண்ட சிவபக்தையாக காரைக்காலில் வாழ்ந்து வந்தார். பின் பரமதத்தன் என்பவரை, பெற்றோர் மணமுடித்து வைத்தனர். சிவனடியாருக்கு அளித்த மாம்பழத்தை, தம் கணவருக்காக இறைவனிடத்தில் வேண்டிய மாத்திரத்தில் பெற்றதை கண்டு அதிசயித்த பரமதத்தன், தமது மனைவி தெய்வீகத்தன்மை பொருந்தியவர் என உள்ளுணர்ந்து, வாணிபம் செய்ய செல்வதாகக் கூறி பாண்டி நாட்டிற்குச் சென்று வேறு பெண்ணை மணந்தார். அவர்களுக்கு பிறந்த பெண்ணுக்கு புனிதவதி என்று பெயர் சூட்டி தமது மரியாதையை செலுத்தினார். இதை நேரில் சென்று அறிந்த புனிதவதியார், தன் இளமையை விட்டு நீங்கி, சிவபூதகண வடிவமான பேயுருவை இறைவனிடம் வேண்டிப் பெற்றார். பின் இறைவனிடம் பிறவா வரம் பெற்று, இறைவனின் திருவடிகீழ் இருக்கும் பெரும்பேறு பெற்றார்.

தமிழ் இலக்கியங்களில் கண்ணப்பர் மற்றும் காரைக்காலம்மையார்

சண்டேசுவரர், கண்ணப்பர், காரைக்கால்அம்மையார்ஆகிய மூவரும் பூத உடலில்இவ்வுலகில்உள்ளவர்கள்என ‘பெரியபுராணத்தில் சமுதாயச் சிந்தனைகள்’ எனும் நூலில் சிதம்பரம் மயில்வாகனன் பகர்கிறார்.

1. திருத்தொண்டத்தொகை

சுந்தரரால் இயற்றப் பெற்ற திருத்தொண்டத்தொகைநூல் 8 ஆம்நூற்றாண்டில்தோன்றியதாகஅறியப்பெறுகிறது. 11 பாடல்களை உடைய இத்திருப்பதிகம் நாயன்மார்களது வரலாற்றிற்கு முதன் நூலாகத் திகழ்கின்றது.

பெரியபுராணத்திற்கு முற்பட்ட படைப்பாகிய திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் ‘கலை மலிந்த சீர் நம்பி கண்ணப்பன்’ என கண்ணப்பனாரைப் பாடியுள்ளார். இதன் பொருள் நூல்களில் பெரிதும் காணப்படுகின்ற புகழ் உடையவர் கண்ணப்பர் என்பதாகும்.

காரைக்காலம்மையாரைப் பற்றிப் பாடுமிடத்தில் ‘பேயார்க்கும் அடியேன்’ எனக் கூறியுள்ளார். இதன் பொருள் ‘இறைவனிடம் விரும்பி

பேய் வடிவம் பெற்ற பேயாராகிய காரைக்காலம்மையாருக்கு அடியவன்' என்பதாகும்.

உ. திருத்தொண்டர் திருவந்தாதி

நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதிஇயற்றியுள்ளார். இந்நூல் 11 ஆம்நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். 85 பாடல்களை கொண்ட நாயன்மார்களது வரலாற்றிற்கு வழி நூலாக இந்நூல் திகழ்கின்றது.

திருக்காளத்தி எனும் இருப்பிடத்தை உடைய சிவபெருமானின் திருநெற்றியின் மேல் கண்ணில் குருதி வழிவதைக் கண்டு, உள்மனம் துயருற்று தன் மலர் போன்ற கண்ணை அம்பினால் எடுத்து இறைவனுக்கு அப்பினான், குலத்தில் வேட்டுவராகிய கண்ணப்ப நாயனார் என்று அறிஞர் கூறுவதாக திருத்தொண்டர் திருவந்தாதி தெரிவிக்கிறது. இதனை,

> **“நிலத்தில் திகழ்திருக் காளத்தி யார்திரு நெற்றியின்மேல்**
> **நலத்திற் பொழிதரு கண்ணிற் குருதிகண் டுள்நடுங்கி**
> **வலத்திற் கடுங்கணை யால்தன் மலர்க்கண் இடந்தப்பினான்**
> **குலத்திற் கிராதனங் கண்ணப்ப னாமென்று கூறுவரே.”**
> **- (திருத்தொண். திருவந். : 11)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலாய மலையை என் இரு பாதங்களால் மிதியேன் என பாதங்களை ஆகாயம் நோக்கி வைத்துக்கொண்டு, தன் தலையாலே நடந்து சென்றார். உமையம்மை நகைத்து யாரென வினவ, செம்பொன் உருவான சிவபெருமான் ‘என் அம்மை’ என சொல்லும்படியான பெரும்பேறு பெற்றவள். இவள் காரைக்காலில் பிறந்த குலத்தின் செல்வம் போன்றவள். இவ்வாறு காரைக்காலம்மையாரை நம்பியாண்டார் நம்பி பாடியுள்ளார். இதனை,

> **"நம்பன் திருமலை நான்மிதி யேனென்று தாளிரண்டும்**
> **உம்பர் மிசைத்தலை யால்நடந் தேற உமைநகலும்**
> **செம்பொன் னுருவன்என் னம்மை எனப்பெற் றவள் செழுந்தேன்**
> **கொம்பி னுகுகாரைக் காலினில் மேய குலதனமே.”**
> **- (திருத்தொண். திருவந். : 28)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

3. திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

திருக்கண்ணப்பதேவர் திருமறம் 'மறம்' எனும் சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்ததாகும். 'மறம்' எனும் சொல்லுக்கு வீரம் என்பது பொருளாகும். திருக்கண்ணப்பதேவர் திருமறம், பதினோராம் திருமுறையில் திண்ணனாரின் வீரச்செயலைப் போற்றிப் பாடும் நோக்கத்தில் நக்கீரர் பாடிய பிரபந்தமாதலால் திருமறம் எனும் பெயர் கொண்டு வழங்கப்படுகிறது. இது 157 அடிகளைக் கொண்டதாக உள்ளது. இது சேக்கிழாரின் பெரிய புராண வரலாற்றைப் போன்றே உள்ளது.

கல்லாட தேவநாயனார் பாடிய 'திருக்கண்ணப்பதேவர் திருமறம்' பத்தொன்பதாவது பிரபந்தமாக உள்ளது. இதில் 38 அடிகளில் கண்ணப்பரின் வரலாறு கூறப்படுகிறது. இரண்டும் இருவேறுபட்ட கண்ணப்ப நாயனாரின் வரலாற்றைக் கூறுகின்றன.

4. பெரியபுராணம்

கண்ணப்ப நாயனார் மற்றும் காரைக்காலம்மையார் வரலற்றைப் பொருத்தவரை பெரியபுராண வரலாற்றுப் பாடல் பகுதிகளே இருவரின் வரலாற்றை அறிந்துகொள்ளப் பெரும் சான்றாதாரங்களாகத் திகழ்கின்றன.

பெரியபுராணத்தில் 63 நாயன்மார்கள் வரலாற்றில் 17-ஆவது இடத்திலும், இலைமலிந்த சருக்கத்தில் 10-ஆவதாகவும் கண்ணப்பர் புராணம் இடம்பெற்றுள்ளது. கண்ணப்பர் புராண வரலாற்றை 186 விருத்தப்பாக்களைக் கொண்டு பாடியுள்ளார்.

'காரைக்கால்அம்மையார்புராணம்'எனும்வரலாற்றுப்பாடல்பகுதி, பெரிய புராணத்தில் 22-ஆவது இடத்திலும், திருநின்றவூர் சருக்கத்தில் 7-ஆவது இடத்திலும் இடம்பெற்றுள்ளது. இதில் 66 பாடல்கள் இடம்பெறுகின்றன.

5. திருவாசகம்

எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் மாணிக்கவாசகர் தன் திருவாசகத்தின் கண்ணப்பனுக்கு நிகரான அன்பு என்னிடம் இல்லையென்றாலும் கூட இறைவன் என்னையும் ஆட்கொண்டருளினான். இதனை,

‘கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி’
- (திருவாச. திருக்கோ.)

என்ற திருக்கோத்தும்பிப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

6. பட்டினத்தார்

நாளாறில் தன் கண்களை எடுத்து திருக்காளஹஸ்தீஸ்வரருக்கு அப்பிய கண்ணப்ப நாயனார் செய்த் அற்புதச் செயலைச் செய்யும் வல்லமை இல்லாதவன் நான். ஆதலால் நான் இனிச் சென்று திருக்காளத்தி இறைவனுக்கு ஆளாவது எவ்வாறு எனப் பட்டினத்தார் வருத்தமடைகிறார். இதனை,

“நாளாறில் கண்ணிடந்தப் பவல்லேனல்லன் நானினிச்சென்று
ஆளாவதெப்படியோதிருக்காளத்தியப்பருக்கே”
என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன.
- (பட்டினத்தார் : 112)

7. திருத்தொண்டர்மாலை

குமரபாரதியார் இயற்றிய திருத்தொண்டர்மாலையில் திருக்குறளை உதாரணம் காட்டி அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்வியல் குறித்த விளக்கங்கள் இடம்பெறுகின்றன. இதில் கண்ணப்பருக்கு ‘அன்புடைமை’ அதிகாரமும், காரைக்காலம்மையாருக்கு ‘வினைத்திட்பம்’ அதிகாரமும் உதாரணங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன.

முடிவு

கண்ணப்பர், காரைக்காலம்மையார் ஆகிய இருவரின் வரலாறு பற்றிய புறச் சான்றுகள் பிற இலக்கியங்களின் வழி பெறப்பட்டாலும், கண்ணப்பர் பற்றிய அகச்சான்றுகள் கிடைக்கப் பெறாமையே அவரின் காலத்தையும் உறுதியாகக் கூறமுடியாததற்குக் காரணமாகும். காரைக்காலம்மையார் பற்றிய அகச் சான்றுகள் கிடைப்பினும், அவை முழுமையாக அம்மையாரின் காலச் சூழலைப் பிரதிபலிக்கவில்லை என்பதே உண்மையாகும். கண்ணப்பரும் காரைக்காலம்மையாரும் இறைவன் மீது கொண்டிருந்த மெய்யன்பினால் தான் இவ்வுலக மக்களால் அறியப்படும் பெரும்பேறு பெற்றிருக்கின்றனர். இதற்கு

பெருந்துணைபுரிவது இவ்விருவர் பற்றிய இலக்கியப் பனுவல்களே ஆகும்.

துணைநூற்பட்டியல்

1. காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி (உரையுடன்), ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள், 1949.

2. குமாரபாரதியார்., திருத்தொண்டர் மாலை, மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம், மதுரை, 2009.

3. ஞானசம்பந்தன். அ. ச., பெரிய புராணம் ஓர் ஆய்வு, வானதி பதிப்பகம், சென்னை, 2021.

4. சாந்தா.எம்.எஸ்., கன்னடத்தில்காரைக்காலம்மையார்வரலாறு, உலகத்தமிழாராய்ச்சிநிறுவனம், சென்னை, 1997.

5. சிதம்பரம் மயில்வாகனன், பெரிய புராணத்தில் சமுதாயச் சிந்தனைகள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2017.

6. சிவகுருநாதப் பிள்ளை. மா, நாயன்மார்கள் வரலாற்றில் பல்வகைச் செய்திகள், திருவரசு புத்தக நிலையம், சென்னை, 1999.

7. சேக்கிழார், பெரியபுராணம் (உரையுடன்), கோவைத் தமிழ்ச் சங்கம், கோயம்புத்தூர், 1954.

8. குன்றக்குடி அடிகளார், நமது நிலையில் சமயம் சமுதாயம், சென்னைப் பல்கலைக் கழகக் வெளியீடு, 1990

9. திருவையாறு அண்ணாசுவாமி சிரௌதிகள், சேக்கிழார் காவ்யம் கண்ணப்ப நாயனார் (சில புதிய கருத்துக்கள்), ஸ்ரீ ஹரதத்த பக்த ஜன சபை கோட்டூர் அக்ரஹாரம், தஞ்சாவூர், 1965

10. மறைமலையடிகள், மாணிக்கவாசகர் வரலாறுங்காலமும், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2003.

11. வெள்ளைவாரணன். க., பன்னிரு திருமுறை வரலாறு (இரண்டாம் பாகம்), சாரதா பதிப்பகம், சென்னை, 2016.

தியாகச் செம்மல் ஐயா ஆண்டமுத்துக் கவுண்டர்

திருமதி. வேணுகா தேவி
மயிலேறு ரவீந்திரன்
ஈரோடு

முன்னுரை:

திருநீறு திகழும் அகன்ற நெற்றி, சிவந்தமேனி, முறுக்கு மீசை, காண்போரை ஈர்க்கும் காந்த விழிகள், கம்பீரமான தோற்றம்,வேட்டுவர் இனத்தைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்திய பிரமுகர் அவர்தான் அப்புச்சிமார் மடத்து அதிபதியும், பட்டக்காரருமான ஐயா ஆண்டமுத்துக் கவுண்டர்.

குடும்பம்:

ஈரோடு மாவட்டம் குறிப்புநாட்டு பரம்பரையில் அப்புச்சிமார்மடம் எனும் ஊரில் 16.6.1893-இல் அழகப்பகவுண்டர் பொன்னம்மாள் தம்பதிக்கு மூத்த மகனாய்ப் பிறந்தார். மூன்று தம்பியரும் ஒரு தங்கையும் இவரைச் சகோதரராகப் பெறும் பேற்றினைப் பெற்றிருந்தனர். நாமக்கல் மாவட்டம் மொளசிக்கு அருகே உள்ள தேவம்பாளையத்தைச் சார்ந்த திருமதிநாச்சம்மாள் இவரது இல்வாழ்க்கை துணையானார். குழந்தைப்பேறு இல்லாதபோதும்கணவரின் தம்பியரையே தம் பிள்ளைகளாகக் கருதிப்பாங்குடன் வளர்த்தார்.

பள்ளி செல்லாத மேதை:

14-ஆவது வயதிலேயே தனது தந்தையை இழந்த குடும்ப சூழல் காரணமாக பள்ளிக்குச் சென்று முறையாகக் கல்வி கற்க இயலவில்லை. ஆனால் கல்வியில் ஆர்வம் கொண்ட ஐயா அவர்கள் குரு ஒருவரை தமது இல்லத்திலேயே தங்க வைத்து தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்று தேர்ந்தார். ஆங்கில நாளிதழ்களைத் தவறாமல்

படிப்பதோடுநன்கு பேசுமளவு தேர்ச்சி பெற்றிருந்தார்?. இந்தி மொழியை நன்கு புரிந்து கொண்டுவாசிக்கும் மாமனிதர். பிற்காலத்தில் அப்பிச்சிமார் மடம் திங்களூரில் பள்ளி துவங்கிகாரணகர்த்தாவாகத் திகழ்ந்தவர்?.

நீதி காத்தவர்:

குறிப்புநாட்டு எல்லையில் எந்த வழக்காக இருந்தாலும் ஐயா அவர்களே தீர விசாரித்து மனிதநேயத்துடன் நல்ல தீர்ப்பை வழுங்குவதில் வல்லவர். ஒவ்வொரு வாரமும் புதனன்றும், ஞாயிறன்றும் அவரது வீட்டு முற்றம் நீதிமன்றமாக செயல்படும். ஐயா அவர்களின் இல்லம் எப்பொழுதும் தூய்மையாகவும், அழகிய நந்தவனத்துடனும், அழகிய விருந்தினர் மாளிகையுடனும், நூலகத்துடனும் இருக்கும். முன்னாள் முதல்வர் ராஜாஜி அவர்கள் இரண்டு முறை இவரது இல்லத்தில் தங்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல்:

காந்தியடிகளிடம் மிகுதியான ஈடுபாடும் பக்தியும் கொண்டிருந்தார். காந்தியடிகளின் அகிம்சைக் கொள்கையைத் தீவிரமாக பின்பற்றியதோடு கோவில்களில் பலியிடும் புராதனவழக்கத்தை வன்மையாக கண்டித்து தடுத்து நிறுத்தினார். எளிய கதர் ஆடைஅணிவதோடு ஏராளமான இராட்டைகளை மக்களுக்கு கொடுத்து நூற்க்கச் செய்தார்.

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் சத்யாகிரகப் போராட்டத்தைத் தொடங்கிய போதுஐயா அவர்கள் ரூ 900/- நன்கொடையாக அனுப்பி வைத்தார். அக்காலத்தில் அது பெருந்தொகை 1937-ல் காந்தியடிகள் ஈரோடு புகைவண்டி நிலையம் வந்த போது தனது பெயரை ஐயா அவர்கள் சொன்னதும் என் பழைய நண்பர் என அங்கிருந்தவர்களிடம் நினைவு மலர அறிமுகப்படுத்தினாராம். சுதந்திரப் போராட்ட காலங்களில் பல தியாகிகளுக்கு ஐயாவின் இல்லம் புகலிடமாகத் திகழ்ந்து. கோவையில் வினோபாவை சந்தித்துப் பூமிதானம் செய்ததோடு தம்மைச் சார்ந்த பலரையும் பூமிதானம் செய்ய வைத்த மாமனிதர்.

வகித்த பதவிகள்:

1. அப்பிச்சிமார் மடத்தின் மடாதிபதி.
2. திங்களூர் பட்டக்காரர்.

3. திங்களூரில் இருந்த அழகப்பா மில்லின் உரிமையாளர்.
4. நான்கு பேருந்துகளைக் கொண்டு PMS பஸ் சர்வீஸ் என்ற பேருந்து நிறுவனத்தை நடத்தினார்.
5. திங்களூர், சிறுவலூர், அருள்மலை, புளியம்பட்டி, கரி வரதராஜப் பெருமாள் போன்ற பல கோயில்களுக்கு அறங்காவலராகத் திகழ்ந்தார்.
6. காங்கிரஸ் கமிட்டி, மது விலக்குகமிட்டி உறுப்பினராகத் திகழ்ந்தார்.
7. திங்களூர் உயர்நிலைப்பள்ளி நிறுவ ஐந்து ஏக்கர் நிலத்தை நன்கொடையாக வழங்கினார்.
8. இரண்டு ஏக்கர் இடத்தை மருத்துவமனை நிறுவ நன்கொடையாக வழங்கினார்.
9. அப்புச்சிமார் மடம் கூட்டுறவு நாணய சங்கத் தலைவராக இறுதி வரை பதவி வகித்தார்.
10. பெருந்துறை பிர்க்காகோ-ஆப்ரேட்டிவ் மார்க்கெட்டிங் சொசைட்டித் தலைவராக இறுதிவரை பதவி வகித்தார்.
11. கோவை ஜில்லா போர்டுஉறுப்பினராகத் திகழ்ந்தார்.
12. ஈரோடு தாலுகா போர்டு மெம்பராகத் திகழ்ந்தார்.
13. கோவை ஜில்லா அர்பன் வங்கித் துணைத் தலைவராகத் திகழ்ந்தார்.
14. 1920-ல் காங்கிரஸ் தாலுக்கா மாநாடு நடத்தி அதில் பெரியார் ஈ.வெ.ரா கலந்து கொண்டு சிறப்பித்தார்.
15. 1934-இல் நம் இனத்தவர்களையும் வேடர், காவலர், பூவலவர், மாவலர் ஆகிய இனத்தவர்களையும் உள்ளடக்கி ” குருகுல மாநாடு ” நடத்தி அதை பிடி. ராஜா அவர்கள் துவக்கி வைத்தார்.
16. நம் இனத்தாருக்கு விழிப்புணர்வு ஏற்பட குருகுலம் என்ற இதழை நடத்தினார்.

நிறைவு:

27.9.1954 அன்று தனது 61-ஆவது வயதில் உறக்கத்திலேயே ஐய்யாவின் உயிர் பிரிந்தது. அனைவராலும் ‘‘கோயில்ஜயன்’’ என்று அன்போடும் மரியாதையோடும் வளர்க்கப்பட்டார். ஐயாஅவர்கள் பலர் உயர் கல்வி கற்பதற்கு பேருதவி புரிந்தார் என்பதை நினைவு கூற கடமைப்பட்டிருக்கிறோம்.

மேற்கோள்: ஜனவரி 22 மாத கண்ணப்பர் கல்வி மடல்

பக்தி இலக்கியங்களில் வேட்டுவர்

திருமதி. தி. பவள சங்கரி
நிறுவனர், தலைவர்
தமிழர் வாழ்வியல் ஆய்வு அறக்கட்டளை

Abstract

The meaning of Bhakti is surrendering to the Supreme Lord with deep devotion and attaining salvation. Bhakti movements with the support of respective governments have had a great impact on social, political, religious, cultural and linguistic platforms through literature. The period of renaissance in South India was from the 7th to the 10th century. Bhakti literature often presents Puranas, the history of monks, and so on... There are also inscriptional evidences for this.

Bhakti literature appeared in large numbers only during the Pallavar period, but its beginnings were formed during the Sangam period. Tolkappiyam contains news about the deity of each land and also mentions the glory of Lord Muruga in Kurundogai. There is a separate devotional book called 'Thirumurugaartuppadai' in Patuppattu. The amount of devotional literature that appeared in Tamil did not appear in any other language.

In the human relationship, that the human mind establishes, this state of devotion is a noble state that motivates and activates them. The dualities of time and space have played an important role in the development of theories related to physical and physical transcendence. These apply to the fields of science, philosophy, and spirituality.

"The creation of society can be found in literature," said Karl Marx. Here we are going to analyze the elements of Bhakti literature and their trends, important activists of Vettuvar community, Kannappa Nayanar, etc. and their impact on our social and cultural life.

Keywords : Vettuvar, Kannappa Nayanar, Sekkhizar, Water Management.

பக்தி இலக்கியங்களில் வேட்டுவர்

ஆய்வுச் சுருக்கம்

பக்தியின் பொருள் ஆழ்ந்த பற்றுடன் அனைத்திற்கும் மேலான இறைவனைச் சரணடைந்து முக்தி பெறுவதாகும். அந்தந்த கால அரசுகளின்ஆதரவோடு பக்தி இயக்கங்கள், இலக்கியங்கள் மூலமாக சமூக, அரசியல், மதம், பண்பாடு, மொழி போன்ற தளங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளன. தென்னிந்தியாவிற்கு மறுமலர்ச்சி ஏற்பட்ட காலம் என்றால் அது 7ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரை. பக்தி இலக்கியங்கள் பெரும்பாலும் புராணங்கள், திருத்தொண்டர்களின் வரலாறு, புறச்சமயத்தார்கள்தோற்கடிக்கப்பட்ட வரலாறு போன்றவற்றை முன்நிறுத்துகின்றன. இதற்கான கல்வெட்டுச் சான்றுகளும் உள்ளன.

இம்மையைவிடவும் மறுமையே மேன்மை தரும் என்கிற பௌதீக அதீதங்களை மையப்படுத்துபவர் ஆன்மிக வாதியாகிறார். பக்தி இலக்கியங்கள் பெருமளவில் தோன்றியது பல்லவர் காலத்தில் தான் என்றாலும் இவற்றின் தொடக்கம் சங்க காலத்திலேயேஉருவாகி விட்டது. தொல்காப்பியத்தில் ஒவ்வொரு நிலப்பரப்பிற்கும் உரிய தெய்வம் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளதோடு, குறுந்தொகைக் கடவுள் வாழ்த்திலும் முருகனின் அருட் சிறப்பு பேசப்படுகிறது. பத்துப்பாட்டில் ‘திருமுருகாற்றுப்படை’ என்ற தனி பக்தி நூல் இடம்பெற்றுள்ளது. தமிழில்தோன்றிய அளவு பக்தி இலக்கியங்கள் வேறு எம்மொழியிலும் தோன்றவில்லை.

மனித உறவு நிலையில், மனித மனம் ஏற்படுத்திக் கொள்கின்ற தொடர்பு நிலையில் பக்தி என்ற இந்த உணர்வு நிலை, அவர்களை ஊக்குவிக்கின்ற (Motivate), செயல்படச் செய்கின்ற (activate) ஒரு உன்னத நிலை. பௌதீகமும், பௌதீக அதீதமும் தொடர்புடைய கோட்பாடுகளின் வளர்ச்சியில் காலம் - வெளி ஆகிய இருமைகள் முக்கிய இடத்தை வகித்து வந்துள்ளன. அறிவியல், மெய்யியல், ஆன்மிகம் ஆகிய தளங்களுக்கும் இவை பொருந்தும்.

'சமூகத்தின் உருவாக்கத்தை இலக்கியத்தில் காணலாம்' என்றார் கார்ல்மார்க்ஸ். நாம் இங்கு பக்தி இலக்கியங்களின் கூறுகளையும், அவற்றின் போக்குகள், வேட்டுவர் இனத்தின் முக்கியமான ஆன்மீக வாதிகள், சமூக நலன் சார்ந்த அரசர்கள், வீரர்கள் படைப்பாளர்கள், கண்ணப்ப நாயனார், நம் சமூக, பண்பாட்டு வாழ்வியலில் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்தும் பகுத்தாய்வு செய்ய உள்ளோம்.

திறவுச்சொற்கள்: வேட்டுவர், கண்ணப்ப நாயனார், நீர் மேலாண்மை, சேக்கிழார்.

ஆய்வின் அறிமுகம்

மொழி என்பது, தகவல் பரிமாற்றத்திற்கு மனிதர்கள் பயன்படுத்தும் ஒரு முறையான அமைப்பைக் கொண்ட இணைப்புக்கருவியாகும். இது இலக்கணம், இலக்கியம் மற்றும் சொல்வளங்களையும் உள்ளடக்கியது. ஆனால் பொது மொழியியல் என்பது சொற்பொருள், ஒலியியல், உருவவியல், சொற்களஞ்சியம், இலக்கணம் ஆகியவற்றின் மூலம்மொழியின் பகுப்பாய்வைக் கொண்டுள்ளது. அந்த வகையில் பக்தியின் மொழி என்பது,

வணிகமொழி ஆங்கிலம் என்றால், சட்டத்தின் மொழி இலத்தீன் என்றால், இசையின் மொழி கிரேக்கம் என்றால், தத்துவத்தின் மொழி ஜெர்மன், தூதின்மொழி பிரெஞ்சு என்றால் தமிழ் பக்தியின் மொழி என்கிறார் தனிநாயக அடிகளார். பக்தி இலக்கியங்கள் இறைவனையும் இறையடியாரையும் மட்டுமின்றி இறை வழிபாட்டுத் தலங்களான கோவில்களின் கட்டுமானத்தின் சிறப்பு, தலபுராணங்களின் சுவையான தகவல்கள், தலவிருட்சங்கள் குறித்த தகவல்கள் போன்ற பலவற்றை அறிந்து கொள்ள வழிவகுக்கிறது. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம், கோபுர தரிசனம் கோடி புண்ணியம், திருநீறில்லாத நெற்றி பாழ் என்னும் எண்ணம் மக்கள் மனத்தில் தோன்றியதற்கும் முக்கியமான காரணங்கள் என்றால் அவை பக்தி இலக்கியங்களே. அப்படிப்பட்ட இலக்கியங்களின்பாடுபொருள் பக்தி சார்ந்தே இருந்து வருகின்றது.

சங்க காலத்தில் திணை சார்ந்த வழிபாட்டு மரபுகள் பரவலாகக் காணப்பட்டன. பின்னர் சமணம், பௌத்தம், கிறித்தவம், இசுலாம் என ஆட்சிகளுக்கு ஏற்ப மாற்றம் பெற்றது. அத்தகையச் சமயங்களைப் பரப்புவதற்குரிய முக்கியக் கருவியாக தோன்றியவையே சமய

இலக்கியங்கள். இலக்கியங்களில் நேரடியாகவும் உள்ளீடாகவும் சமயம் சார்ந்த சிந்தனைகளும், அறம் சார்ந்த வாழ்வியல் நோக்குகளும் எழுந்தன.

இந்த வகையில் பக்தி இலக்கியங்களில் சிறப்பான, சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயமான சைவ சமயம் சார்ந்து எழுந்த இலக்கியங்கள் சைவ இலக்கியங்கள் எனப்படும். கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரையான காலங்களில் சிற்றிலக்கியம், பெருங்காப்பியம், எனப் பல சைவ இலக்கியங்கள் இயற்றப்பட்டன. கி.பி. 650 காலப்பகுதி தொடங்கி, 550 ஆண்டு காலம் தமிழ்மொழியைச் சைவசமயச் இலக்கியங்களே செல்வாக்குப் பெறச் செய்தன.

பன்னிரு திருமுறைகள்

சைவ சமய இலக்கியங்களுள் பன்னிரு திருமுறைகள் குறிப்பிடத்தக்கன. அவை,

முதலாம் திருமுறை	- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
இரண்டாம் திருமுறை	- திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்
மூன்றாம் திருமுறை	- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
நான்காம் திருமுறை	- திருநாவுக்கரசு நாயனார்
ஐந்தாம் திருமுறை	- திருநாவுக்கரசு நாயனார்
ஆறாம் திருமுறை	- திருநாவுக்கரசு நாயனார்
ஏழாம் திருமுறை	- சுந்தரமூர்த்தி நாயனார்
எட்டாம் திருமுறை	- மாணிக்கவாசகர்
ஒன்பதாம் திருமுறை	- (திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி, நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலிய முதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர்)
பத்தாம் திருமுறை	- திருமூலர்

பதினொன்றாம் திருமுறை- 12 ஆசிரியர்கள்

பன்னிரண்டாம் திருமுறை - சேக்கிழார்.

சிவபெருமான் அனைவருக்கும் உரிய இறைவனாகக் கருதப்படுகிறார். ஆயினும் சிவபெருமானின் அடிகளாராக விளங்கிய 63 நாயன்மார்களால், சிவபெருமானின் தனித் தன்மையை விளக்குவதன் பொருட்டு சைவ வழியைத்தோற்றுவித்தனர்.

அந்த வகையில் வேட்டுவ இனத்தைச் சார்ந்த வெஞ்சமன் எனும் வேட்டுவ மன்னன் ஆண்டதாலும்; அமராவதியின் கிளை நதியானசிற்றாறு, அமராவதியுடன் கூடுமிடத்தில் உள்ளதாலும் வெஞ்சமாக்கூடல் என்று பெயர் பெற்றது.

கொங்கு நாட்டை ஆண்டகொங்கமன்னர்களுள்சிறந்தவனான வீர வெஞ்சமன் என்பவன் வெஞ்சமாங்கூடலூரைதலைநகராகக் கொண்டு 5-ம்நூற்றாண்டில் ஆண்டு வந்தவர். மிகச்சிறந்தசிவபக்தரான இவர் சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களையும் பிடித்து சிறைக்கூடத்தில் வைத்த அச்சுதன், பரசுராமன், களப்பாலன் ஆகிய நான்கு அரசர்களையும் எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்று வந்த வெஞ்சமன் வேட்டுவ அரசர்களுடைய காணியும் பூமியும் கொங்குநாடு என கல்வெட்டு சாசனம் செய்துகொண்டார்.கொங்கேழுசிவத் தலங்களில் ஒன்றான வெஞ்சாமங் கூடலூரில் உள்ள விகிர்தீசுவரர் எனும் சிவாலயத்தை அமைத்த வரும் இவரே.

இத்தலத்தில் சுந்தரரின் பாட்டில் மகிழ்ந்த இறைவன் கிழவி வேடம் பூண்டு சுந்தரரின் பிள்ளைகளை ஈடுகாட்டிப்பொன் கொடுத்தார் என்பது தொன்நம்பிக்கை. சுந்தரரால் பாடல் பெற்ற இத்தலம் கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது தேவேந்திரன் வழிபட்டதலமாகும்.

இக்கோயிலின் சிவபெருமானைப் புகழ்ந்து சுந்தரர் பாடல்கள் பாடியுள்ளார். அமராவதியின் கிளை ஆறு அமராவதி மற்றும் குடகனாறு ஆகிய ஆறுகள் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ளது.

சிவபெருமானைப் போற்றி சுந்தரரின் தேவாரப் பாடல்

எறிக்கும் கதிர்வேய்உதிர்முத்தமொடு ஏலம்
இலவங்கம் தக்கோலம் இஞ்சி

செறிக்கும்புனலுட்பெய்துகொண்டுமண்டித்
திளைத்து ஏற்று சிற்றாறுஅதன்கீழ்க்கரைமேல்
முறிக்கும்தழைமாமுடப்புன்னைஞாழல்
குருகத்திகள்மேல்குயில்கூவலறா
வெறிக்கும்கலைமாவெஞ்சமாக் கூடல்
விகிர்தா அடியே னையும்வேண்டுதியே

சோழமன்னனுக்கும், வெஞ்சமனுக்கும் எல்லைப் பிரச்சனை இருந்த காரணத்தினால், ஏழு முறை போர்தொடுத்து தோல்வியுற்ற சோழ மன்னன் எட்டாவது முறையாக சூழ்ச்சியால் தான் இவரை வென்றான். இவரை வென்ற சோழமன்னன் இவரின் வீரத்தைப் பாராட்டி நடுகல்நட்டும், கல்வெட்டு செதுக்கியும் வைத்துள்ளான். இவருக்கு கொங்கு நாடு வேட்டுவக் கவுண்டர் இன மக்கள் சிலையும் மணிமண்டபமும் வெஞ்சமாங் கூடலூரில் அமைத்துள்ளனர்.

இக்கோயிலின் சிவபெருமானுக்கு நந்தனூர் கிராமத்தில் வரியில்லா நிலம் வழங்கியதை ஆண்டு இல்லாமல் கொங்கு சோழ மன்னன் கல்வெட்டு பதிவு செய்துள்ளது. பனை ஓலைக் கல்வெட்டு செப்புத் தகடுகள் மற்றும் சிலைகளில் அதையே மீண்டும் உருவாக்க அனுமதி அளித்துள்ளது.

ஜடாவர்ம சுந்தர பாண்டியன் காலத்து ஆறாம் ஆண்டு ஆட்சிக் கல்வெட்டு, இளமடத்தூர் கிராமம், ஆதி சண்டேசுவரர் சன்னதிக்கு வரி நீக்கிய பின், நான்கு திசைகளிலும் சூலக்கால் தேவதானம் என்று கொடையாகப் பதிவாகியுள்ளது.

மற்றொரு கொங்கு மன்னன் திரிபுவன சக்கரவர்த்தி கோனேரிமை கொண்டான், காலத்து கல்வெட்டுகளில் தினசரி வழிபாடு மற்றும் திருவிழாக்களுக்கான செலவுகளை சந்திப்பதற்காக இந்த கோவிலுக்கு நான்கு திசைகளிலும்சூலக்கால்களுடன் கூடிய வரியில்லாபாலைவன நிலத்தை தேவதானமாகவழங்கியதாக பதிவு செய்துள்ளார். நிலம் மீண்டும் குடியேற்றப்பட்டது. கல்வெட்டு ராஜகேசரி என்று முடிகிறது.

மற்றொரு தேதி குறிப்பிடப்படாத கொங்கு மன்னர் ஜெயகேசரிகோனேரிமை கொண்டான், கல்வெட்டு அனைத்து கிணறுகள், அணை இந்த கோவிலுக்கு ஒரு வெஞ்சாமக்கூடல் கிராமம் பரிசாக பதிவு செய்யபட்டுள்ளது மற்றொரு கல்வெட்டு ராஜகேசரி ஸ்ரீ

திரிபுவன சக்கரவர்த்தி கோனேரிமை கொண்டான், முடிகொண்ட சோழபுரம் கிராமத்தில் 6 கலம் நெல் விதைப்பு அளந்து, கருவூலத்தில் செலுத்தப்பட்ட 120 அச்சு காசுக்கு நிலத்தை வாங்கி, அதன் சுற்றளவுடன் காணியை பரிசாக பதிவு செய்துள்ளார். இந்த நிலத்துக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டது.

மற்றொரு கல்வெட்டு கொங்கு மன்னர் ராஜகேசரி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்தி கோனேரிமை கொண்டான், இக்கோயிலின் சிவபெருமானுக்கு வெங்கல நாட்டின் நாகம் பள்ளி கிராமத்தில் வரியில்லா நிலம் வழங்கியதை பதிவு செய்துள்ளார். 60 களம் நெல் விதைப்பு பரப்பளவில் நிலம் பரவியது. நிலத்தில் கிடைக்கும் வருமானம் காய்கறிகளுடன் தினசரி பூஜைக்கும் நைவேத்தியத்துக்கும் பயன்படும்.

மற்றொரு கல்வெட்டு கொங்கு மன்னர் ராஜகேசரி ஸ்ரீ திருபுவன சக்கரவர்த்தி கோனேரிமை கொண்டனின் 2ஆம் ஆண்டு ஆட்சியில், தட்டையூர் நாட்டில் உள்ள துறையூர் நத்தம் கிராமத்தில் தேவதானமாக வரியில்லா நிலம் வழங்கப்பட்டது. மன்னன் பிறந்த நட்சத்திரத்தன்று மூலவருக்கு நைவேத்தியமும் அபிசேகமும் செய்ய நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம்.

மற்றொரு கல்வெட்டு கொங்கு மன்னன் ராஜகேசரி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்தி கோனேரிமை கொண்டான்ஆட்சியின்15வது ஆண்டு 14வது வாரம் (மாசி மாதம்) கிராமம் கண்டியதேவநல்லூர் இறையிலி எனப் பதிவுசெய்துள்ளது. மேலும் தினசரி வழிபாடு, நைவேத்தியம் மற்றும் சிறப்பு புரட்டாசி திருவிழாவை சந்திக்கிறது.

சிலப்பதிகாரத்தில் வேட்டுவர்கள் குறித்து பாடல்கள் உள்ளன. இவை பக்தி இலக்கிய விதைகள் எனக் கருதப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் உள்ள வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகியவற்றில் காணலாகும் பாடல்கள் பக்தி இலக்கிய விதைகள் ஆயின.

வேட்டுவர் குலத்தைச் சேர்ந்த திண்ணனார் கண்ணப்ப நாயனார் ஆன வரலாறு:

இறைவனாகி சிவபெருமானா ஆட்கொள்ளப்பட்டு சிவதொண்டுக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்து கொண்டவர்க

நாயன்மார்கள். பெரியபுராணம் எனும் காப்பியம் 63 நாயன்மார்களைப் பற்றி பேசுகிறது.

"வேடரதிபதியுடுப்பூர் வேந்தனாகன்
விளங்கிய சேய்திண்ணனார் கன்னி வேட்டைக்
காடதில்வாய் மஞ்சனமுங்குஞ் சிதருமலருங்
காய்ச்சினமென்றிடு தசையுங்காளத்தி யாருக்குத்
தேடருமன் பினிலாறு தினத்தளவு மளிப்பச்
சீறுசிவகோசரியுந்தெளியவிழிப்புண்ணீ
ரோடவொரு கண்ணப்பி யொருகண்ணப்ப
வொழிகவெனுமருள்கொடருகுறநின்றாரே."

பெரிய புராணம் என்னும் காப்பியத்துள்63 நாயன்மார்கள் வரலாற்றில் கண்ணப்ப நாயனார் வரலாறு இலைமலிந்த சருக்கத்தில் 10-ஆவது புராணமாக இடம் பெற்றுள்ளது. சேக்கிழார் பெருமான் கண்ணப்ப நாயனார் புராணத்தை 186 விருத்தப் பாக்களினால் இயற்றியுள்ளார்.

இப்பாக்கள் வேட்டுவர் குலத்தைச் சேர்ந்த திண்ணனார் கண்ணப்பர் ஆன கதையை விளக்குகின்றது. இக்கதை நிகழ்ந்த இடம் இன்று காளத்தி என வழங்கும் திருக்காளத்தி மலையான பொத்தப்பி நாடு ஆகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளால் கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர் என்றும், பட்டினத்தாரால் நாளாறில் கண்ணிடந்து அப்ப வல்லேன் அல்லன் என்றும், திருநாவுக்கரசரால் திண்ணன், கண்ணப்பன், வேடன் என்றும் பலவாறாகச் சான்றோர்கள் பலரால் கண்ணப்பர் பாராட்டப்படுகிறார்.

சிவலிங்கத் திருவுருவத்தின் கண்ணிலிருந்து இரத்தம் கசிந்ததைக் கண்டு, தன் கண்ணைத் தோண்டி அப்ப இறைவனால் கண்ணப்பன் என்று அழைக்கப்பட்ட செய்தியினை இக்கதை விளக்குகின்றது.

பொத்தப்பி நாட்டில் உடுப்பூர் என்னும் ஊரின் வேடர் குலத் தலைவன் நாகன் என்பவன். அவன் மனைவி தத்தை என்பவளுக்கு நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறில்லாமல் இருக்கவே, முருகப் பெருமானை வேண்டி விழா எடுத்த நல்வேளையில் முருகன் அருளால்

அவர்களுக்கு அழகான வலிமை மிக்க ஆண்குழந்தை பிறந்தது. திண் என்றிருந்த அக்குழந்தைக்கு திண்ணன் என்று பெயரிட்டான் நாகன். திண்ணன் குலமரபிற்கேற்பவில், அம்பு, ஈட்டி, வாள் முதலான போர்ப் பயிற்சிகளைக் கற்றுவளர்ந்தான். தக்க வயதில் நாகன் தன் மகனாகிய திண்ணனிடம் நாடாளும்படி பட்டம் சூட்டியபோது, தேவராட்டியின் வாழ்த்துகளையும் பெற்றான்.

ஒரு நாள் திண்ணன் நாணன், காடன் ஆகிய நண்பர்களோடு வேட்டையாடச் சென்ற போது, வேட்டைக்காக அவர்கள் விரித்த வலைகளை அறுத்துக் கொண்டு பன்றி ஒன்று தப்பி ஓடியதுகண்டு, அதனை விடாது துரத்திச் சென்றதிண்ணன், புதருள் மறைந்த அந்தப் பன்றியைத் தம் குறுவாளால் வெட்டி வீழ்த்தினான். திண்ணனின் வலிமையைக் கண்டு வியந்த நண்பர்கள் அவனைப் பாராட்டினார்கள். அருகே ஓடும் பொன்முகலி ஆற்றையும் வானாளாவ நிற்கும் காளத்தி மலையையும் கண்டு வியந்த திண்ணனைக் கண்ணுற்ற நாணன், அந்த மலையின் மீது அருள் பாலிக்கும் குடுமித்தே வரைக்கும் பிடச்செல்லலாம் என்றான். மலை ஏறும்போதே திண்ணனுக்கு ஒரு புதுவிதமான இன்பமும் உணர்வும் ஏற்பட்டன. குடுமித் தேவருக்கு, சிவகோசரியார் என்பவர் ஆகம விதிமுறைப்படி பூசை செய்து வருகிறார் என்று நாணன் மூலம் அறிந்தார். மலையேறிய திண்ணன், குடுமித்தேவரைக் கண்டவுடன்ஆனந்த மிகுதியால் அவரை வணங்கியும், கட்டித் தழுவியும் ஆடினார்; பாடினார். அதோடு நில்லாமல், நண்பன் காடன் ஆற்றங்கரையில் தங்களுக்காக தீயில் இட்டுப்பக்குவப் படுத்திய இறைச்சியை ஒரு கையிலும், மறு கையில் வில் இருந்ததால் வாய் நிறைய ஆற்று நீரையும், அருகில் இருந்த மரத்தின் மலர்களைத் தலையில் செருகியும் எடுத்துக்கொண்டு வந்து, குடுமித்தேவருக்குத் திருமஞ்சனமாகத் தன் வாய் நீரையும், அமுதமாகப் பன்றி இறைச்சியினையும் தலையில் சூடிய மலரை வழிபாட்டு மலராகவும் இட்டு மகிழ்ந்தார் திண்ணனார். அதன் பின் இரவு முழுவதும் இறைவனுக்கு வில்லேந்திக்காவலும் புரிந்தார். மீண்டும் மறுநாள் காலையில் குடுமித்தேவருக்கு உணவு படைக்க வேண்டி அதைத் தேடி வரப் புறப்பட்டார்.

ஆனால் வழக்கம் போலப்பெருமானாருக்கு பூசை புரிய வந்த சிவகோசரியார் இறைவன் மீதிருந்த இறைச்சி முதலானவற்றைக் கண்டு

அதிர்ச்சியுற்று வருந்தினார். அவற்றையெல்லாம் நீக்கித் தூய்மை செய்து விட்டு பூசனையும் செய்தார். அடுத்து, திண்ணனாரும்இறைச்சியை எடுத்து வந்து வைத்து வழிபட்டார். மறுநாளும் இறைச்சி இருப்பது கண்டு வருந்திய சிவகோசரியார் மிகவும் வருந்தி இறைவனிடம் முறையிட்டு வீட்டிற்குச் சென்று உறங்கினார். அவரது கனவில்தோன்றிய சிவபெருமான் திண்ணனாரின் அன்பு வழிபாட்டைபற்றி அறிய அடுத்த நாள் மரத்தின் மறைவில் நின்று பார்க்கச் சொல்லி மறைந்தருளினார்.

ஆறாம் நாளான அன்று திருக்காளத்தி நாதர்திண்ணனாரின் அன்பின் பெருமையைக் காட்ட விரும்பியவர், வலக் கண்ணில் இருந்து உதிரம் பெருகும்படிச் செய்தார். அதனைக் கண்ட திண்ணனார், செய்வதறியாமல் திகைத்தவர், தம் கைகளால் துடைத்தும் பச்சிலை இட்டும்ஏதேதோ செய்தும் குருதி நிற்காமல்போகவும் மிகவும் மனம் வருந்தி நின்றாலும், உடனே தம் வலக்கண்ணைஅம்பினால்அகழ்ந்து எடுத்து அப்பியவுடன் உதிரம் நின்றுவிட்டது. இதைக் கண்டு மகிழ்ந்து கொண்டாடினார். ஆனால் அத்தோடு நிற்கவில்லை. பெருமானாரின் இடக்கண்ணிலும் உதிரம் பெருகுவதைக் கண்டவர், அடையாளத்துக்காகத் தம் காலின் பெருவிரலை இறைவனின் உதிரம் பெருகும் கண் மீது ஊன்றிக் கொண்டு, தம் இடக்கண்ணையும் பெயர்த்து எடுத்து அப்பினார். உடனே காளத்திநாதர் நில்லு கண்ணப்ப என்று மூன்று முறை கூறித் திண்ணனாரைத் தடுத்தருளினார். இறைவன் தடுத்தருளிய அந்த நொடி முதல் திண்ணனார் கண்ணப்பர் ஆனார். குடுமித் தேவர் மீது திண்ணனார் கொண்டிருந்த மெய்யன்பு சடங்குகளை விட உணர்வே உயர்ந்தது என்பதனை விளக்குகின்றது. அதாவது தனி மனித வாழ்வுக்கும், சமுதாய வாழ்வுக்கும் அன்பே முதன்மையானதும் சிறந்ததும் ஆகும் என்பதற்கு ஆதாரமாகின்றது. அது மட்டுமில்லாமல் திண்ணனாரின் இந்த கண்தானச் செயல், அறிவியல் பலகாதம் முன்னேறியுள்ள இக்காலத்தின் கண்தானங்களுக்கு முன்னோடியாகவும் முற்போக்குச் சிந்தனை உடையதாகவும் திகழ்வதை அறிந்து பெருமை கொள்ளவும் முடிகிறது. ஆகமநெறியினைக் காட்டிலும் அன்பு நெறியே சிறந்தது என்பதனை மக்களுக்கு உணர்த்துகின்றது.

கல்வெட்டில் கண்ணப்பர் குறித்த தகவல்கள்

- கல்வெட்டுகளில் கண்ணப்பர் மாதேவடிகள் என்றும், இராமதேவர் என்றும் அழைக்கப்படுகிறார்.

- கண்ணப்பர் வேடன் என்றும் பலவாறாகச் சான்றோர்கள் பலரால் பாராட்டப்படுகிறார்.
- திருச்சாய்க் காட்டில் திருநாவுக்கரசர் பாடிய திருநேரிசை பாடலில் கண்ணப்பரை இறைவன் ஆண்டு கொண்டருளிய செய்தி கூறப்பட்டுள்ளது.
- சகராண்டு 1342க்குரிய திருக்காளத்திக் கல்வெட்டில் கண்ட தவப்பெருந்தேவு செய்தார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

தவப்பெருந்தேவு செய்தார்

"குவப்பெருந்தடக்கை வேடன்
கொடுஞ்சிலைஇறைச்சிப் பாரம்
துவர்ப்பெருஞ்செருப்பால்நீக்கித்
தூயவாய்க் கலசம் ஆட்ட
உவப்பெருங் குருதி சோர
ஒருகனைஇடந்தங்கப்ப
தவப்பெருந்தேவு செய்தார்
சாய்க்காடுமேவினாரே"

என்பது திருச்சாய்க்காட்டில் திருநாவுக்கரசர் பாடிய திருநேரிசை இதில் கண்ணப்பரை இறைவன் ஆண்டு கொண்டருளிய செய்தி கூறப்பட்டுள்ளது.

இப்பாடலிற் கண்ட தவப்பெருந்தேவு செய்தார் என்பது சகராண்டு 1342க்குரிய திருக்காளத்திக் கல்வெட்டில் ஒருவர் பெயராகக் காணப்பெறுகிறது. திருக்காளத்தித் திருமணிக் கெங்கையுடைய நாயனார் கோயிலில் திருமணிக்கங்கைசீயன் என்ற அதிகாரி அவ்வூரில் உள்ள சில நிலங்களின் உரிமைகளை மாற்றியமைக்கிறார். அச்சாசனத்தில் பலரும் கையொப்ப மிடுகிறார்கள். அவர்களுள் ஒருவர் திருக்காளத்தியாண்டார் தவப்பெருந்தேவு செய்தார் என்பராவார். இதே நாளில் இன்னொரு அறக்கட்டளை பிறப்பிக்கப்பெறுகின்றது. திருக்களாத்தித் திருமணிக்கெங்கையுடைய நாயனார் கோயிலின் வடக்குத்திரு வீதித்தெற்கடையப்பாதியில் தவப்பெருந் தேவுசெய்தார்க் குரிய நிலம் திருநாமத்துக் காணியாகக் கொடுக்கப்பெற்றது.

வேட்டுவர்கள் பக்திச் சிறப்புடைய கண்ணப்பரையே தம் குலமுதல்வராகக் கொண்டுள்ளனர். இவர்கள் சத்திரியசாதியினர், காளத்திமலைக்கு உரியவர்கள்,

கண்ணப்ப நாயனார் கி.பி.7 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர். கி.பி.7 ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்பு வேட்டுவ குடியினரை வேட்டுவர் என்றும் காவலன் என்றும் பாணர்கள் (மாவலியர்) என்றும் புன்பொதுவர் (பூலுவர்) என்றும் வேட்டம் (வேட்டை) புரிபவர்கள் என்றும் இந்த ஐந்து பெயர்களில் சங்க இலக்கியங்களில் அழைக்கப்பட்டனர்.சேர மன்னன் கண்ணப்ப நாயனார் செய்த செயல்களைக் கண்டு உடுப்பூருக்கு சென்று புலி வேடர்களை (வேட்டுவர், காவலன், மாவலியர், பூலுவர், வேடர் (அ)வேட்டைக்காரர் (அ)வேட்டம் புரிபவர்) கொங்கு நாட்டுக்கு அழைத்து வந்தான் என கொங்குமண்டல பூர்வ வரலாறு மற்றும் புரவிபாளையம் வரலாறுகளில் கூறப்பட்டுள்ளது.

ஏராளமான கோயில் திருப்பணிகளை அல்லாள இளையநாயக்கர் மேற்கொண்டுள்ளார். இதற்கான செப்புப் பட்டயம், கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

நீர் மேலாண்மையில் வேட்டுவர்

நில அடிப்படையில் கொங்கு பழந்தமிழர்களின் நிலப்பிரிவுகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை ஆகிய ஐந்து பிரிவுகளையும் உள்ளடக்கி அமைந்தது தனிச் சிறப்புடையது. கொங்கு நாட்டில் இயற்கையில் அமைந்த மேற்கு தொடர்ச்சி மலையில் வாழ்ந்த பழங்குடிகள் மலையில், குகைக்குள், காட்டுவாசிகளாக வாழ்ந்த நிலையில் இருந்து மாறி முல்லை நிலத்தில் வேட்டுவர்களாகவும் காடர்களாகவும் வாழ்ந்த கற்கருவிகள் மற்றும் இரும்புக் கருவிகள் துணையுடன் காடு திருத்திக்கழனியாக்கப் பயிர்த்தொழில் செய்யும் நிலைக்கு உயர்ந்தனர். இந்த முன்னேற்றத்தின் அடிப்படையில் அவர்களின் சமூக வாழ்வியல் மரபும் மாற்றம் பெற்றுப் பல்தொழில் செய்யும் பலரும் ஒன்று கூடிக்குடிகளாகப் பல இடங்களில் தங்களின் வாழ்விடங்களையும்அமைத்துக்கொண்டனர். ஐவகைநிலங்களிலும் பரவி வாழ்ந்த சிறுகுடாவினர் தங்கள் பொருட்களைப்பண்டமாற்றும் செய்யும் வணிகத்தை மேற்கொண்டனர்.

காடுகளில் இருந்து நாடுகளை உருவாக்கியவர்கள் காடுகளில் சுற்றித் திரிந்த சில விலங்குகளைப் பழக்கித் தன்னுடைய உழைப்புக்கு உற்ற தோழனாகப் பாவித்து வளர்த்தனர். காடுகளில் கிடைக்கும் மரங்களைக் கற்கருவிகளை இரும்புக் கருவிகளுடன் இணைத்து

வியத்தகு புதிய நுட்பங்களை உருவாக்கினர். எருதுகள் பூட்டியசால் களின் மூலம் நீர் மேலாண்மை, சரக்குகளை நிலவழியாக ஏற்றிச் செல்லும் கட்டை வண்டிகள் மற்றும் நீர்வழியே செல்லப் படகு என்று புதிய கண்டுபிடிப்புகளைச் செயல்படுத்தி நிலம்சார் பொருளாதார மேம்பாட்டுக்கான வழியையும்உருவாக்கினர்.

இரும்புக் கனிமங்களை வெட்டியெடுத்து உலைக்களங்களைப் பயன்படுத்தி இரும்பையும் இரும்புக் கருவிகளையும் உருவாக்கும் தொழில் பரவி வாழ்ந்த பல சிறு குடிகளுக்கும்பரவியது. இரும்புக் கருவிகளை உருவாக்கிய உலைக்களங்களை மேலும் தரப்படுத்தி எஃகு தயாரிக்கும் தொழிலிலும் முன்னேற்றம் கண்டனர். உலகின் பல பகுதிகளிலும் கற்காலம் முடிந்து செம்பு தாமிரம் என்ற காலவரிசையில் பயணித்த நிலையில் கொங்கு நாட்டில் மட்டும் கொங்கு நாட்டு வேட்டுவர் கற்காலத்திலிருந்து நேரடியாக இரும்புக் காலத்துக்குள் அடியெடுத்து வைத்தனர் என்று கற்கால ஆய்வுகளில் தலைச் சிறந்த ஃபுட் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்!

அல்லாள இளைய நாயக்கர் என்ற வேட்டுவசிற்றரசர் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் இன்றும் நினைவு கூறப்படுகிறார் என்றால் அது அவர்தம் மக்கள் நலம் சார்ந்த சிறந்த ஆட்சியும், பண்பும் என்றால் அது மிகையில்லை.

எவ்வித பெரிய நவீன தொழில்நுட்ப வசதிகளும் இல்லாத 1623-ஆம் ஆண்டில், மனித உழைப்பின் மூலதனத்தைக் கொண்டே ராஜ வாய்க்கால் வெட்டியுள்ளார் மூல வேட்டுவர் குலத்தைச் சார்ந்தவரான அல்லாள இளைய நாயக்கர். இதன் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் 25 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள்பாசன வசதி பெற்றுள்ளன. விவசாயிகள் மட்டுமின்றி, பொதுமக்களும் இதனால் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

கொங்கு மண்டலசதகம்,
வடமுக நின்றும் வரு காவிரியின் வளத்தை என்றும்
திடமுறுகொங்கினும்பாசனமாகச் செலப்பிரித்த
அடல்கொள் அல்லாளன்இளையான் பெருக்கம் அமைந்துவளர்
வடகரைஆற்றூர்திகழ்வதுவும் கொங்கு மண்டலமே

என்று போற்றுகிறது.

தாம் ஆட்சிப் பொறுப்பேற்ற அடுத்த ஆண்டில், அதாவது 1623-ல், அல்லாள இளைய நாயக்கர், ஜேடர்பாளையம் காவிரி ஆற்றின் அருகேவிவசாயப்பயன்பாட்டுக்காக 24 அடி அகலமும், 33 கிலோ மீட்டர் தொலைவும் கொண்ட ராஜவாய்க் கால்வெட்டியுள்ளார்.

இதன் மூலம் நேரடியாக 5,116 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றதாக சான்றுகள் தெரிவிக்கின்றன. ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன் வெட்டப்பட்ட இந்த வாய்க்கால்தான், தற்போதும் சுற்று வட்டார விளை நிலங்களுக்கு பாசன ஆதாரமாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொங்கு 24 நாட்டில் அரைய நாட்டில் பரமத்தியில் கோட்டை கட்டி விஜய நகர பேரரசின் கீழ் சிற்றர சராகமழ கொங்கு நாட்டை ஆட்சிபுரிந்து வந்தவர்இவர். ஜேடர்பாளையத்தில் ராஜவாய்க்கால் வெட்டி அணைகட்டியுள்ளதோடு, குமாரபாளையம் வாய்க்கால், பொய்யேரி வாய்க்கால் போன்றவற்றையும் வெட்டிசிறந்த மக்கள் நலச் சேவையை செய்துள்ளதை அறிய முடிகின்றது.

72 பாளையப்பட்டுக்களின் தலைமை பாளையப்பட்டுக்காரரான இவர் மந்திரக்கோல் வைத்து ஆட்சி புரிந்தவர் என்றும் கொல்லிக்கிரியை உடையவர்என்றும் கூறுவர். இவருடைய ஆட்சி அதிகாரம் சேலம், ஆத்தூர், ஆறகளூர் வரை பரவி இருந்துள்ளது. மழகொங்கு சித்திரமேழி சபை அதிகாரமும் இவரிடமே இருந்துள்ளது. “வாளரசர் மணவாளர்” என்றே இவருடைய செப்பேடு குறிப்பிடுகின்றது.

அப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரமாகவே திகழும் அக்கால்வாயை அமைத்த வரை பெருமைப்படுத்தும் வகையில், அப்பகுதி விவசாய பெருமக்களின் கோரிக்கையை ஏற்று, அல்லாள இளைய நாயக்கருக்கு, 21.80 லட்சம் ரூபாய் மதிப்பில், குவிமாடத்துடன் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டு, 2023 ஜன., 28ல், துணை முதல்வர் மாண்புமிகு உதயநிதி அவர்கள் திறந்து வைத்துள்ளார். தொடர்ந்து, அவரது பிறந்த நாளான தை, 1இல், அரசு விழாவாக கொண்டாட அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது.

நடுகற்களில் வேட்டுவர்

ஒரு நாட்டின், ஒரு இனத்தின் மக்களின் தொன்மை, மரபியல், பழம்பெருமை, பண்பாடு, கலாச்சாரம் போன்ற உன்னத விசயங்கள் அனைத்தையும் அறிந்து கொள்வதற்கான சின்னங்களில் முக்கியமானவை

என்றால் அவை கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், ஓலைச் சுவடிகள், நினைவுச் சின்னங்கள், நடுகற்கள் போன்றவைகளே. இவைகள் முற்றிலுமாகப் பாதுகாக்கப்பட்டு இளைய தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதன் மூலமே அவர்கள் தங்கள் பாரம்பரியப் பெருமைகளைப் புரிந்துகொண்டு அவைகளைக் கட்டிக்காக்க முனைவார்கள். அந்த வகையில் உலகிலேயே, தெற்காசிய நாடுகளில் மட்டுமே, குறிப்பாக நம் தென்நாட்டில் மட்டுமே, அதுவும் தமிழ் நாட்டில் மட்டுமே, இத்தகைய தொன்மையையும், கலாச்சாரங்களையும் பறை சாற்றுகின்ற ஆதாரங்கள் மலிந்துகிடப்பதை பல்வேறு அகழாய்வுகள் மூலம் அறிய முடிகின்றது. பெரும்பாலும் மிகக்குறைவாகவே பதியப்பட்டுள்ள நம் வரலாறுகளின் சொச்சங்களே தற்போது வரலாறு படைத்துக் கொண்டிருக்கின்றன என்றால் அது மிகையாகாது. தென்னிந்தியாவில் நடைபெற்ற மீப்பெரும் அகழ்வாராய்ச்சி நொய்யல் ஆற்றங்கரையில் அமைந்துள்ள கொடுமணல் அகழாய்வு.

வேட்டுவகுடியினர் தமிழ் மண்ணில் முதன் முதலில் நடுகல் மற்றும்கொற்றவை வழிபாடுகளை உருவாக்கி வழிபட்டவர்கள் என்கிறார்கள். காலப்போக்கில் அனைவராலும் பின்பற்றப்பட்டிருக்கலாம். ஆதி வழிபாடான கொற்றவை வழிபாடு முருகன், சிவன், காளி போன்ற கடவுள்களோடு தொடர்புபடுத்தப்பட்டது.

உலகின் மற்ற சமுகாயங்கள் போலன்றி தமிழர் சமுகாயத்தின் வாழ்வியல், கற்காலத்திலிருந்து நேரடியாக இரும்புக் காலத்தை நோக்கிச் சென்றது என்பது ஒரு ஆய்வுக் கோட்பாடு. பல படிநிலைகளை அடைந்த நிலையில் தமிழர்கள் கற்காலத்தையும் இரும்புக் காலத்தையும் ஒருங்கிணைத்ததொரு வாழ்வியலை மேற்கொண்டனர். காடுகளிலும், குகைகளிலும் வாழ்ந்தமக்கள் தங்கள் வாழ்வியலிலிருந்து மாற்றம் பெற்று சிறு குழுமங்களாக ஆதிக்குடிகளாக வாழத் தொடங்கினர். நிலவியல் அடிப்படையில், தென்புலத்தைப் பொருத்தவரை அது வடபுலத்தின் நில அமைப்புபோல் சமவெளி, நதிக்கரை என்பது போலல்லாமல், வெவ்வேறு தட்பவெப்ப நிலைகள், மலைகள், பள்ளத்தாக்குகள், சமவெளி கொண்ட பகுதிகளாக இருந்தது. பழந்தமிழர்கள் தங்கள் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியஐந்து வகைகளாகப் பிரித்து பண்டமாற்று முறையில் பொருளாதார வளர்ச்சிக்கான வணிகத்தை மேற்கொண்டனர். இயற்கையில் அமைந்த மேற்கு தொடர்ச்சி மலையில் வாழ்ந்த

பழங்குடிகள் மலையில், குகைக்குள், காட்டுவாசிகளாக வாழ்ந்த நிலையிலிருந்து மாறி முல்லைநிலத்தில் வேட்டுவர்களாகவும், காடர்களாகவும் வாழ்ந்த கற்கருவிகள், இரும்புக்கருவிகள் துணையுடன் காடு திருத்தி கழனியாக்க பயிர்த்தொழில்செய்யும் நிலைக்கு உயர்ந்தனர். இந்த முன்னேற்றத்தின் அடிப்படையில்அவர்களின் சமூக வாழ்வியல் மரபும் மாற்றம் பெற்று பல்தொழில் செய்யும்பலரும் ஒன்றுகூடி குடிகளாக பல இடங்களில் தங்களின் வாழ்விடங்களையும்அமைத்துக்கொண்டனர். விளைபொருள் உற்பத்தியில் எஞ்சியவற்றைக் கடல்வழியாகக் கிழக்காசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பொருள் ஈட்டினர்.

நாடாகொன்றோ; காடாகொன்றோ;
அவலாகொன்றோ; மிசையாகொன்றோ;
எவ் வழி நல்லவர் ஆடவர்,
அவ் வழி நல்லை; வாழியநிலனே! - ஔவையார்

வேட்டுவர்கள் பூர்வ குடிகள்' எனவும், வேட்டுவர் சமூகத்தினர் 'கொங்கர்' எனவும், வேட்டுவத் தலைவர்கள் 'கொங்குராயன்' எனவும் அழைக்கப்பட்டதாக ஆவணங்கள் கூறுகின்றன. 'ஊராளி', 'நாடாழ்வான்', 'கொங்காள்வான்' போன்ற ஆவணச் சொற்கள், வேட்டுவர் ஆட்சிப் பொறுப்பிலும் இருந்தனர் என்பதைக் காட்டுகின்றன.

வேட்டுவர்கள் கொடை, வீரம், பக்தி போன்ற முப்பெரு நிலைகளிலும் சிறப்புற்றிருந்தனர். வேட்டுவர், காவலியர், மாவலியர், பூவலியர், வேடர், வேட்டுவர் என ஐவகையாகப் பிரிக்கப் பட்டிருந்ததையும் ஆவணங்கள் குறிக்கின்றன. வேட்டுவர்அளித்துள்ள கொடை பற்றிய செய்திகளை அர்த்த மண்டபம், மகாமண்டபம் கட்டித் திருப்பணி செய்தமை, சிவராத்திரி, பூசைக்கொடை வழங்கியமை, இறையிலி நிலம் அளித்தமை, சந்தியா தீபம் கொடுத்தமை, நெற்கொடை, கறவைப்பசு, குதிரைச் சிலை வழங்கியமை போன்ற ஆவணக் குறிப்புகளால் அறியலாம்.

வீரத்திலும் சிறந்திருந்தனர் என்பதனை மன்னர்களுக்குப் படையுதவி அளித்தல், ஆநிரை மீட்டல், கள்ளர்களை அடக்குதல், நாட்டிற்காக வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபடுதல் போன்ற பலவகை வீரதீரச் செயல்களில் ஈடுபட்டிருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

வெள்ளை (வெள்ளாடு) - வெள்ளை வேட்டுவ ‘குலம் ஆய் அம்மன்’ இன்று வெள்ளை வேட்டுவகுலத்தினரின்குல தெய்வம் ஆகும் . பல்லடம், பொங்கலூர் கல்வெட்டு ‘பூலுவகுடுமரில் பெரிய பிள்ளையனான கண்டி முடையார்’ என்பவரை பற்றி கூறுகிறது. (பொங்கலூர் கல்வெட்டு, வீர பாண்டியர், கி.பி13). குடுமி (குடுமர்)-குடுமி வேட்டுவ குலம் ‘...பூலுவன் சோழன் மனைக்கு வடக்கு மேற்பக்கெல்லை குடுமி சிறுவன் ..’ (கரூர், வேட்டமங்கலம் கல்வெட்டு (South Indian Temple Inscription,Vol-2,No-736), பாண்டியர், கி.பி13). சோழர் -சோழவேட்டுவ குலம் . குடுமி -குடுமி வேட்டுவ குலம் குடுமி சிறுவன் பூலுவவேட்டுவகுலத்தைச் சேர்ந்தவன் என்பதை இந்த கல்வெட்டுகள் மூலம் அறியலாம். கொங்கு மற்றும் கோனாட்டு பகுதிகளில் காணப்படும் கல்வெட்டுகளில்குடும, குடுமி என்ற சொல் குடுமி வேட்டுவகுலத்தைகுறிக்கும்.

வேட்டுவர் கலிவெண்பா பூலுவ வேட்டுவகுலத்தைப் பற்றிக் கூறுகிறது. பூலுவ வேட்டுவரின் உட்பிரிவுகள் (சோழ குலம், குடுமி குலம், செய்யர் குலம், முட்டை குலம், பெரும்பற்றார் குலம், மயில் குலம், வெள்ளை குலம், குடதியர் குலம், உத்திரர் குலம்) பற்றிக் கல்வெட்டுகள் கூறுகிறது. காவலர் வேட்டுவர் ‘...உத்தம சோழ சதுவேதி மங்கலத்து இருக்கும் காவலன் கரையரில் செயகங்கனான தம்பிரான் சோழன் ...’ (ஈரோடு பெருந்துறை கல்வெட்டு, கி.பி13) கரையர் - கரையவேட்டுவ குலம். வேட்டுவர் கலிவெண்பா காவலர் வேட்டுவ குலத்தை பற்றி கூறுகிறது . காவலர் வேட்டுவரின்உட்பிரிவுகள் (கரைய குலம், பட்டாலி குலம் (கள்ளிபிலர், குறும்பிலர்),வேந்த குலம் (வளவர்), மண்ணடி குலம்) பற்றி கல்வெட்டுகள் மற்றும் பட்டயங்கள்கூறுகிறது. மாவலிவேட்டுவர் ’...இராகுத்தமிண்டன்சொரிவன்னியர் சூரியன் புவனேக வீரன் பதினெட்டு வன்னியரை முதுகு புரங்கண்டான் காங்கேயனை வென்று கடையில் விலை கொண்டான் வேட்டு மாவலிக்கு விரிந்திடோம் பாண்டியன்...’ (புதுகோட்டை கல்வெட்டுகள் எண்-758, திருமெய்யம், கிபி15)

வேட்டுமாவலிக்கு - வேட்டுவமாவலிக்கு. ‘ஸ்ரீ மாவலிவாணகோ வலங்கை மீ .ம ..’ (தமபுரி, அரூர், கிபி8) ஆனைமங்கலம் என்னும் ஊரை ஆண்ட’ வேட்டுவதிவாண கோவரையார்’ பற்றி கல்வெட்டு (செங்கம் நடுகற்கள் 1971/39) கூறுகிறது. வேட்டுவர் கலிவெண்பா மாவலி வேட்டுவகுலத்தை பற்றி கூறுகிறது. மாவலி வேட்டுவரில் உட்பிரிவுகள்)

புன்னம் குலம், புன்னாடி குலம், புன்னகர் குலம், புன்னம்குடி குலம், பெருமாள் குலம், வெங்காஞ்சி குலம், இலங்கை குலம், உரிமைப்படை குலம், நல்வாள் குலம்) பற்றி கல்வெட்டுகள் கூறுகிறது . பூலுவவேட்டுவர் (பூலுவர்), காவலர் வேட்டுவர் (காவலன்), மாவலிவேட்டுவர் (மாவலியர்), வேடவேட்டுவர் (வேடர்) போன்றோர்கள் வேட்டுவர் இனத்தின் உட்பிரிவுகளாகப் பட்டயம் மற்றும் கல்வெட்டுகளில் கூறப்பட்டு உள்ளது. தொழில்கள் அடிப்படையில் தமிழ் மண்ணில் சாதிகள் உருவானது. கிமு300 களில் வேட்டு (போர்) தொழில் செய்தததால் வேட்டுவ சாதி உருவானது. இதனால்தான் வேட்டுவசாதியைதொல்குடி என்று இலக்கியங்கள் கூறுகிறது . வேட்டு தொழில் (குடிகாவல், போர் தொழில்) செய்தவர்கள் தங்களது உணவுக்காகவும் போர் பயிர்ச்சிக்காகவும் மான், முயல், காட்டு கோழி போன்ற விலங்கு களையும், பறவைகளைவும் வேட்டையாடினார்கள்.இதனால் வேட்டுவ இனத்தவர்களை வேட்டவர் அல்லது வேடுவர் அல்லது வேடர் என அழைக்கபட்டது.

சேலம், ஆத்தூர் கல்வெட்டு (கி.பி13) நில வாளைவேட்டுவ கூட்டத்தை சேர்ந்த ராமன் சோழகோன் என்பவர் நீர் பாசனத்தை பெருக்க கிணறு வெட்டியதை பற்றி கூறுகிறது . அவன் திருச்சி முசிறிகல் வெட்டுகளில் (கி.பி13) 'நிலவாளைவேட்டுவார்' என்று கூறபடுகிறான். இவன் பாண அரசரின் படைத்தலைவனாக இருந்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. குடுமி வேட்டுவகுலத்தை 'குடுமியார்' என்று அழைக்கப் பட்டதை கோனாட்டு கல்வெட்டுகள் கூறுகிறது. வில்லிவேட்டுவ குலத்தை 'வில்லியர்' என்று அழைக்கபட்டதைக் கரூர் கல்வெட்டுகள் கூறுகின்றன.

நடுகற்கள், கல்வெட்டுகள், சோழன் பூர்வ பட்டயம், அப்பிச்சிமார் காவியம், வேட்டுவ கலிவெண்பா, வேட்டுவ செப்பேடுகள் போன்ற ஆவணங்களில் பேசப்பட்ட வேட்டுவக் குலத்தவர்கள் சங்க இலக்கியத்தில் பேசப்பட்டவர்கள். சங்க இலக்கியத்தில் பேசப்பட்ட வேட்டுவ குலத்தவர்களைப் 'பூலுவர்' என்றும் 'காவலன்' என்றும் 'மாவலியர்' என்றும் 'வில்வேடுவர்' என்றும் அழைக்கப்பட்டது.

தொறுபூசலில் ஈடுபட்டு இறந்த மறவர்களுக்கு நெடுநிலை நடுகலுடன் கூடிய கற்பதுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. (தொல்லியல் நோக்கில் சங்க காலம்., ப. 31) க.ராஜன் அவர்களின் கூற்று இதனை மெய்ப்பிப்பதாக அமைகின்றது. தற்போது கண்டறியப்பட்டுள்ள

பதுக்கைகள் பலவற்றில் கிழக்குப் புறத்தில் ஒரு மனிதன் நுழையும் அளவிற்கு இடைவெளி காணப்படுகின்றன. இங்கு இறந்தவனின் ஆத்மா தனக்கு வேண்டும்போது வெளியே சென்று வரவேண்டும் என்ற நம்பிக்கையுடன் அந்த இடைவெளி அமைக்கப்பட்டுள்ளன. பதுக்கையில் காணப்படும் இத்தகைய துளைகளைப் பற்றிய குறிப்புகள் ஏதும் புறநானூற்றிலும் இல்லை.

கற்பதுக்கை

கற்பதுக்கை சங்க காலம் என்பது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் கி.பி.மூன்றாம் நூற்றாண்டு வரை எனத் தொல்லியல் ஆய்வுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் தமிழகத்தில் பல போர்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை அக்கால இலக்கியங்கள் மூலம் அறிகின்றோம். அப்போர்களில் பலர் வீரமரணம் அடைந்தனர். அவர்களைப் புதைத்த இடங்கள் 'பதுக்கை' எனப்பட்டன. இதைப் பெருங்கற்காலப் பண்பாடு என்றும் கூறுவர்.

பதுக்கையில் கல் நடல் அல்லது அந்தப் பதுக்கைகள் மீது கல்நட்டு அதில் அவர்கள் உருவத்தைச் செதுக்கி, அவற்றில் அவ்வீரர்களின் பெருமைகளையும், பெயரையும் பொறித்து வைத்தனர். வீரர் நினைவாக நட்டகல் என்பதால் அது நடுகல் எனப்பட்டது. இதனை,

> **'அம்புவிட வீழ்ந்தோர்வம்பப் பதுக்கை'**
>
> **'பதுக்கை சேர்த்தி'**
>
> **'பீடும்பெயரும் எழுதி'**
>
> **'இனி நட்டனரேகல்லும்'**

எனச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

இந்நடுகற்கள் வீரர்களுக்கான வீரக்கல், நினைவுக் கற்கள் என்றும் கூறப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் எழுத்துடைய பல நடுகற்கள் இருந்தன என்ற குறிப்புகள் கிடைக்கப்பெற்றாலும், எழுத்துடைய சங்ககால நடுகற்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அகழாய்வு களில் பல பெருங்கற் படைச்சின்னங்களைத் தோண்டியெடுத்து ஆய்வு செய்துள்ளனர்.

நவகண்டச் சிற்பங்கள்- தலைபலி சிலைகள்

கொங்கு நாட்டுச் சிவன் கோவில்களில் நவகண்டச் சிற்பங்கள் காணப்படுகின்றன. வேட்டுவர்கள் கொற்றவையின் பல புகழையும் கூறிப் பரவி, விறல் வெய்யோன் வெட்சி சூடுக எனத்தம் அரசனை வாழ்த்தினர். வேட்டுவ வரிசித்தரிக்கும் கொற்றவையின் தோற்றத்தில் வைதீகச் சார்பு மிக்கிருந்தாலும் எயினர்களின் கொற்றவை வழிபாடு பழைய வேட்டைச் சமூக மரபுகளையே அடியொற்றி அமைக்கப்பட்டுள்ளமை சிலப்பதிகார வேட்டுவவரியின் தனிச்சிறப்பாகும்.

இட்டுத் தலை எண்ணும் எயினர் அல்லது
சுட்டுத்தலைபோகாத் தொல் குடிக்குமரியை-
சிறு வெள் அரவின்குருளை நாண் சுற்றி
குறுநெறிக் கூந்தல் நெடு முடி கட்டி,
இளை சூழ் படப்பை இழுக்கியஏனத்து
வளை வெண் கோடு பறித்து, மற்று அது
முளை வெண் திங்கள் என்னச் சாத்தி;
மறம் கொள் வயப் புலி வாய் பிளந்து பெற்ற
மாலை வெண் பல் தாலி நிரை பூட்டி;
வரியும்புள்ளியும் மயங்கு வான் புறத்து
உரிவைமேகலைஉடீஇ; பரிவொடு
கருவில் வாங்கிக் கையகத்துக்கொடுத்துத்
திரிதருகோட்டுக்கலைமேல் ஏற்றி;
பாவையும், கிளியும், தூவிஅம்சிறைக்
கானக்கோழியும், நீல் நிற மஞ்ஞையும்,
பந்தும், கழங்கும், தந்தனர்பரசி;
வண்ணமும், சுண்ணமும், தண்நறுஞ்சாந்தமும்,
புழுக்கலும், நோலையும், விழுக்கு உடை மடையும்,
பூவும், புகையும், மேவிய விரையும்,
ஏவல் எயிற்றியர்ஏந்தினர் பின் வர;
ஆறு எறி பறையும், சூறைச்சின்னமும்,
கோடும், குழலும், பீடுகெழுமணியும்,
கணம் கொண்டு துவைப்ப; அணங்கு முன் நிறீஇ

விலைப்பலி உண்ணும் மலர் பலி - பீடிகை,
கலைப் பரி ஊர்தியைக்கைதொழுது ஏத்தி-2.
- வேட்டுவ வரி 20 - 40

பழங்குடிகள் நிறைந்த கொங்கு நாடு பலப்பல தொன்மை வரலாற்றைத் தனக்குள்ளே கொண்டுள்ளது. இன்றளவிலும் மொத்த மக்கள் தொகையில் 10 சதவிகிதம் பழங்குடியினர் வாழ்கின்றனர். சங்ககாலம் தொட்டு கொங்குச் சமவெளிப் பகுதியில் வாகலிங்கத்து பரணியில் சோழ அரசின் வெற்றிக்காக இப்படித் தலையை அறுத்து பலி கொண்ட வீரனைப் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. இது போலவே தண்டனையாகவும் தன் தலையைத் தானே அறுத்துக் கொள்ளும் வழக்கம் இருந்திருக்கிறது.

இந்த நிகழ்ச்சி ஒரு பெரிய விழா போன்று நடத்தப்படும். நவகண்டம் அரிகண்டம்கொடுப்பதற்கு முன் உறவினர்கள் அனைவரும் அழைக்கப்படுவர். நவகண்டம் கொடுப்பவர் இடையில் உடைவாளும், மார்பில் கவசமும் தரித்து போர்வீரன் போல் போர்க்கோலம் பூண்டு இருப்பார். கொற்றவைக்கு பூசை முடித்து பின்பு, தனது இடது கையினால் முடியைப் பிடித்து வலது கையினால் கழுத்தை வெட்டிக் கொண்டு இறப்பர்.

நவகண்டம்கொடுப்பதற்கான காரணங்கள் :

வலிமையான எதிரி நாட்டுடன் போர் புரிய நேரும்போது, வெல்வதற்கு வாய்ப்பே இல்லை என்ற தருணங்களில் தெய்வத்தின் அருளை நாட வேண்டியுள்ளது. துர்க்கைக்குப் பலி கொடுத்தால் தெய்வத்தின் அருள் கிட்டும் என்ற நம்பிக்கையில் நவகண்டம் கொடுக்கப் பட்டது. உடல் ஆரோக்கியம் கெட்டு படுத்த படுக்கையாகக் கிடக்கும் அரசனுக்கு, அவன் நலம் திரும்ப அவரது விசுவாசிகளால் நவகண்டம் கொடுக்கப்பட்டது.

கடுமையான நோய் தாக்குதலால்சாவை எதிர் நோக்கி காத்திருக்கும் ஒருவர் வீர சொர்க்கம் அடைய விரும்பி நவகண்டம் கொடுத்துக் கொள்வது.

குற்றவாளி ஒருவன் தான் செய்த குற்றத்தினால் மரண தண்டனைக்கு உள்ளாகும் போது, அவ்வாறு சாகாமல் அரசன் அனுமதியுடன் நவகண்டம் கொடுத்துக் கொண்டு வீர சொர்க்கம் அடைவது.

மற்றுமொரு சுவையான செய்தி - ஒருவன் போர்க் காயத்தினாலோ, நோயினாலோசாகும் தருவாயில் அவனுக்கு முடிக்க வேண்டிய கடமைகள் பாக்கி இருக்குமாயின் தனது இறப்பை தள்ளிப் போடுமாறு இறைவனிடம் வேண்டுவர். அந்த கடமை நிறைவேறியதும் நவகண்டம் கொடுத்துக்கொள்வர். பெரும் அவமானத்தைப் பெற்றபின் அதற்கு மேல் வாழ விரும்பாமல் சாக விரும்புபவன் கோழையாக இல்லாமல் வீரச்சாவை விரும்பி நவகண்டம் கொடுத்துக்கொள்வர்.

சோழர்களுக்கு "வேளக்காரபடைகள்" மற்றும் பாண்டியர்களுக்கு "தென்னவன் ஆபத்துதவிகள்" போன்ற தற்காப்புப் படைகள் இருந்தன. அரசர் உயிருக்கு ஆபத்து நேர்கையில் கொற்றவையின் சந்நிதியில் தங்களுடைய தலையைத் தங்கள் கையினாலேயேவெட்டிக் கொண்டு பலியாகிவிடுவர்.

உலகின் உயிரினங்கள் அடைந்த வளர்ச்சியினை உணர்த்தும் காலக் கண்ணாடி வரலாறு என்பது. வீரதீர செயல் புரிந்தவர்களின் வரலாற்று அடையாளமாகவே இந்த நவகண்டச் சிற்பங்கள் உள்ளன. இவை பல இடங்களில் கால வரலாற்றைக் காட்டும் முக்கிய ஆவணங் களாகவே விளங்குகின்றன.

பழங்குடியினரில் குறிப்பிடத்தக்கவர்கள், குறும்பர், பூலுவர், காவலர், ஆவியர், சோழர் பூர்வபட்டயம்மாவலவர், குறும்பிலார், வேட்டுவர், அவ்டர், படைத்தலைப் போன்ற பல இனத்தவர்கள் இருந்தாலும், அவ்டர், ஆவியர், குறும்பர் போன்ற இனத்தவர்களும் இந்தச் சமூக நீரோட்டத்தில் இணைக்கப் பெற்றதற்கான சான்றுகள் இல்லாவிட்டாலும், அவ்டநாடு, ஆவியர்நாடு, குறும்பநாடு போன்ற பெயர்கள் அரசியல் சமூகவியல் நீரோட்டத்தில் இருந்திருக்கின்றன. கொங்கு நாட்டில் சோழர் காலத்தின் பல நடுகற்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவைகளில் பெரும்பாலும் எழுத்துகள் அதிகமில்லை. ஆனாலும் கொங்கு நாட்டின் எல்லைப்புறத்தில் கிடைத்த நடுகற்கள் போன்றவற்றில் சேர, சோழ, பாண்டிய பேரரசின் முயற்சிகளால் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. கொங்கு நாடு முழுவதும் சோழர் காலத்திய நடுகற்கள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. கிடைத்தற்கு அரிதான சோழர் காலத்திய கொங்கு கல்வெட்டுகள், கன்னிவாடி, சேலைகாரிகள், வடிவுள்ளமங்கலம், பழமங்கலம், எண்ணாமங்கலம் போன்றவைகள் கல்வெட்டுகளுடன் உள்ளன. சங்கிராமநல்லூர்

கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளபடி, வீரராசேந்திர மன்னன் காரைவலி நாட்டை வெற்றிகொண்டு, பல கோவில்களை நாசம் செய்ததோடு பல உயிர்களையும் அழித்துவிட்டான். வீரராசேந்திரன், வீழ்ச்சியடைந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபடுவதற்கு அனுமதி அளித்தான். இந்தப் போர் வீரர்கள் கடவுளர்களாகக் கருதப்பட்டு பிற்காலச் சந்ததியினர் வழிபடவும் வழிவகை செய்தனர். வெள்ளக்கோவிலின் வீரகுமாரசாமி கோயிலிலும் வெள்ளக்கோயில் அருகில் நாட்டராயன் கோவில் போன்ற இடங்களிலும் நடுகற்கள் வழிபாட்டிற்காக பாதுகாக்கப் பட்டுள்ளன.

முடிவுரை

கொங்கு நாட்டின் வடபகுதியிலும், கர்நாடக நாட்டின் தென்பகுதியிலும் வாழ்பவர்கள் வேட்டுவர்கள் என்ற கிராதர் என்கிறார் டி.என்.சுப்ரமணியம். கங்கமன்னன் சிவமாறனின் செப்பேடுகள், வடமொழியில் சொல்லும் வாசகம் இதுதான். 'வேட்டுவ அரசர்களின் அரன்களை எறிந்து வேட்டுவ அரசிகளைச் சிறை பிடித்தான்' என்பதுதான் அது. பிற்காலச் சோழர்களின் முதலாம் ஆதித்தன் கொங்கில் 'வேடராஜாக்களை வென்றான்' என்று கொங்குதேச இராஜாக்கள் என்ற மரபுவழி நூல் செப்புகின்றது. சிவமாறன் போரும் ஆதித்தன் போரும்கி.பி. 9-10ஆம் நூற்றாண்டில் நடந்திருக்கின்றது. ஆதித்தன் காலத்து வேட்டுவ இராஜாக்கள் பலர் இருந்தனர் என்று வேட்டுவ இராஜாங்கம் என்ற நூல் கூறுகின்றது. நீர் மேலாண்மையிலும், கட்டுமானத்திலும் வேட்டுவர்கள் சிறந்து விளங்கியதும் அறிய முடிகிறது.

தமிழ் மண்ணில் முதன் முதலில் படைத்தொழிலில் ஈடுபட்டவர்கள் யார் என்று பார்த்தோமானால் அவர்கள் வேட்டுவ இனத்தவர்தான் என்கிறது வரலாறு. வேட்டுவ இனத்தில் இருந்துதான் சேர, சோழ, பாண்டிய அரசர்கள் உருவானார்கள். போர் தொழிலை தமது முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள் வேட்டுவர்கள். வேடர் என்ற சொல்லேவேட்டுவர் என்றாயிற்று. இவர்கள் வேடன், வெற்பன், சிலம்பன், எயினன், ஊரன், வேட்டைக்காரன், வேட்டுவன், வேட்டுவதியரையன், ஊராளி, வேட்டுவகவுண்டர் மற்றும் நாடாழ்வான் முதலான பெயர்களாலும் அழைக்கப்பட்டனர். "வேர் வகையை எண்ணினாலும், வேட்டுவர்வகையை எண்ணமுடியாது" எனும் முதுமொழியும் வழக்கில் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

வேட்டுவரின் பூர்வீகம் குறித்து அறிஞர்களிடையே பலவிதமான கருத்துகள் நிலவுகின்றன. சோழன் பூர்வ பட்டயம், வேட்டுவக் கவுண்டர்களைக் கொங்கு நாட்டின் ஆதிக்குடிகள் என்று சுட்டுகின்றது. சில பட்டயங்களில்வேட்டுவர், முத்தரையரின் வழித்தோன்றல்கள் என்று செப்புகின்றன. வேட்டுவக் கவுண்டரும் முத்தரையரும் கண்ணப்ப நாயனாரைத் தமது குலதெய்வமாகக் கொண்டு வழிபடுகின்றனர். எட்கார்ஃதர்ஸ்ட்டன் (Edgar Thurston) என்ற அறிஞர் முத்தரையர், வேட்டுவர், வலையர் ஆகியோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறியுள்ளதும் கருத்தில் கொள்ளத்தக்கது.

'வெட்ட வெட்டத்தழைக்கும் வேட்டுவர் படை' என்பர் பழங்குடியினர் வாழ்க்கையில் படையென்று ஒரு தனிப்பிரிவுகிடையாது, பழங்குடி இனம் மொத்தமுமே ஒரு படையாகச் செயல்படும் என்பர். ஒரு குழுவினர் போரில் மாண்டு விட்டால் அடுத்த குழுவினர் போருக்குத் தயாராகி விடுவர். உடல் பலம் உள்ளோர் அனைவரும் போர் வீரர்களே. அதனால் அழிவே இல்லாதவர்களாக நிலைபெற்று இருந்துள்ளனர்.

முதலாம் ஆதித்தன் கொங்கில் வேடராஜாக்களை வென்றான் என்று கொங்குதேச இராஜாக்கள் என்ற மரபுவழி நூல் செப்புகின்றது. வேட்டுவர்கள் போர் குடிமறவர்கள் என்றும் தம் மக்களையும், நாட்டையும் காப்பதற்கு தன் உயிரையும் தியாகம் செய்து உள்ளார்கள் என்பதை 26 வரிகள் கொண்ட ஆநிரை மீட்டல் சிற்பத்தையும் கொண்ட செங்கோட்டு அழகன் சோழங்கவேட்டுவன் பற்றிய வீரதீரசெயல்களையும், ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

'நீரளவே ஆகுமாம் நீராம்பல், தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு' என்பது ஔவை வாக்கு.

அடிக்குறிப்புகள்:

1. http://www.livemint.com/Sundayapp/ah8MlN3mwHQjIpmBZBhcXJ/Exploring-Indias-megalithic-culture-a-riddle-set-in-stone.html

2. கல்வெட்டு ஓர் அறிமுகம், தமிழ்நாடு தொல் பொருள்துறை ஆய்வுத் துறை வெளியீடு, 1976.

3. சிலப்பதிகாரம் மூலமும் உரையும்- பொ.வே.சோமசுந்தரனார், கழகப்பதிப்பு, சென்னை-1, 1973.

4. சிலப்பதிகாரம் (கட்டுரைத் திரட்டு) - கா.அய்யப்பன் (பதி.ஆ.) மாற்று, சென்னை-106, 2009.

5. https://tamilandvedas.com/tag/navakandam/

6. David Roy, 'The Megalithic Culture of the Khasis ANTHRORPOS.L.VIII.Pt 3 - 4. p.p522 ff')

7. The Internet Encyclopedia of Philosophy, http://www.iep.utm.edu.

8. (http://wikipedia.orange.fr/wiki/Wilkinson_Microwave_Anisotropy_Probe). ;

http://www.tamilvu.org/library

வரலாற்றில் வல்வில் ஓரி

முனைவர் மு.கலா,
இணைப் பேராசிரியர்,
வரலாற்றுத் துறை,
அரசு மகளிர் கலைக் கல்லூரி,
கும்பகோணம்

சங்க காலத்தில் கொடையில் சிறந்தவர்களில் பேகன், பாரி, காரி, ஆய்அண்டிரன், அதியமான், நள்ளி மற்றும் ஓரி ஆகிய கடையேழு வள்ளல்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இதில் வேட்டுவக் கவுண்டர் என்று சொல்லக் கூடிய இனமன்னர் வல்வில் ஓரி மன்னன் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார்.

வில் வித்தையில் சிறந்து விளங்கிய வல்வில் ஓரிமன்னனின் வீரம், கொடைத் தன்மை குறித்து சங்ககாலத் தமிழ் இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்கள் எனக்குறிப்பிடப்படும் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றிலும், பத்துப்பாட்டு நூலான சிறுபாணாற்றுப் படையிலும் ஏராளமான பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

வல்வில் ஓரி மன்னனின் சிறப்பைப் போற்றும் வகையில் கடந்த 1975-ஆம் ஆண்டு கொல்லிமலை செம்மேட்டில் ஓரிமன்னன் குதிரை மீது அமர்ந்திருப்பது போன்ற சிலை வடிவமைக்கப்பட்டது. ஆண்டு தோறும் தமிழ் மாதமான ஆடி 18-ஆம் தேதி வல்வில் ஓரி மன்னனுக்கு இருதினங்கள் அரசு விழாவும் கொண்டாடப்பட்டு வருகிறது. விழாவில் வில்வித்தையில் சிறந்து விளங்கிய வல்வில் ஓரி மன்னனின் சிறப்பைப் போற்றும் வகையில் வில்வித்தை போட்டி நடத்தப்படுகிறது. இதுபோல், பாரம்பரிய நடனங்களும் நடத்தப்படுகின்றன. இது போன்ற பல்வேறு சிறப்புகள் பொருந்திய வல்வில் ஓரி மன்னனுக்கு அவர் ஆட்சி செய்த கொல்லிமலையில் மணிமண்டபம் கட்டவேண்டும் எனச் சுற்றுலா ஆர்வலர்கள் உள்படப் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

கொல்லி மலைகிழக்குத் தொடர்ச்சிமலையில் பெரியமலையாக உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 4,500 அடி உயரம் கொண்ட கொல்லிமலை 441.4 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டது. ஏராளமான மூலிகை வளம் கொண்ட இந்தமலையில் வளப்பூர்நாடு, வாழவந்தி நாடு, திண்ணனூர் நாடு, சேலூர் நாடு, அரியூர் நாடு, குண்டூர் நாடு, தேவானூர் நாடு, குண்டுனி நாடு, ஆலந்தூர் நாடு, திருப்புலி நாடு, எடப்புலி நாடு, சித்தூர் நாடு, பைல் நாடு, பெரக்கரை நாடு (ஒரு நாடு என்பது ஒரு கிராம ஊராட்சியைக் குறிக்கும்) என14 நாடுகள் உள்ளன. இந்த14 நாடுகளையும் உள்ளடக்கிய கொல்லிமலையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டு வந்தவர் தான் வேட்டுவக் கவுண்டர் இனமன்னர் வல்வில் ஓரி. கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடரில், கடைசி மலையாக இருப்பது கொல்லிமலையாகும். மூலிகைகளுக்கும், சித்தர்களுக்கும் பெயர்போனது இந்தக் கொல்லிமலை. இப்போது இந்த மலை, நாமக்கல் மாவட்டதிலுள்ள இராசிபுரம் பகுதியில் இருக்கிறது. சங்ககாலம் தொட்டு, இந்த இடம் சிறப்புற்றிருந்தது எனலாம்.

கானகத்தில் ஒரு காட்சி

கொல்லிமலையில், மூலிகைகளும் சந்தன மரங்களும் அடர்ந்து வளர்ந்திருக்கும். வீசும் காற்றில், அந்த சந்தன வாசம் கலந்திருக்கும். அருமையான அந்த சந்தன மணத்தை அனுபவித்தபடி, ஒருகூட்டம் பாணர்கள், தங்கள் இசைக் கருவிகளோடு, அந்த மலைப்பாதைகளில் நடந்து கொண்டிருந்தனர். அவர்களின் மனைவியரான விறலியர், தங்கள் மெல்லிய பாதம் நோகும்படி, அவர்களுடன் சேர்ந்து நடந்து கொண்டிருந்தனர்.

அவ்வாறு நடந்துசெல்லும்போது, அவர்கள் சில குமளி மரங்களைக் கண்டனர். அவற்றில், சிகப்பான குமளிப்பழங்கள் காய்த்து, பழுத்து, தொங்கிக்கொண்டிருந்தன. ஆப்பிள் பழத்தின் தமிழ்ப்பெயர்தான், குமளிப்பழம். பழுத்த சில குமளிப் பழங்கள், காற்றுக்கு அசைந்து கீழே விழுந்து கொட்டிக்கிடக்க, சிறிய மான்குட்டிகள் சில, அவற்றை ருசிபார்த்துக் கொண்டிருந்தன.அந்த குமளிப் பழங்களையும், குட்டி மான்களையும், வேடிக்கையாய்ப் பார்த்தபடி நடந்துவந்த விறலியர், ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக்கொண்டனர். "உனக்கும் வேண்டுமென்றால், எடுத்துக்கொள்", என்றாள் ஒருத்தி. "இல்லை, வேண்டாம். என் பசிக்கு

இதுவெல்லாம் போதாது", என்று சொல்லிவிட்டு சிரித்தாள், இன்னொருத்தி. அவர்கள் சிரிக்கும் போது, அவர்கள் அணிந்திருந்த ஆடைகளில் தொங்கவிடப்பட்டிருந்த மணிகள், கிணிகிணியென்று ஓசை எழுப்பின. அந்த ஓசையுடன், ஒரு யானை பிளிறும் சத்தமும் சேர்ந்து, அவர்கள் காதில் விழுந்தது. அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள் அனைவரும், சத்தம் வந்த திசையைநோக்கி, தங்கள் கவனத்தைச் செலுத்தினர். அவர்கள் இருந்த இடத்திற்கு சற்று தொலைவில், ஒரு பெரிய, கரிய, யானை தென்பட்டது பாதையின் இடப்புறம் தென்பட்ட அந்த யானை, மரங்களின் ஊடே நின்றுகொண்டு இருந்தது. பாதையின் வலப்புறம், ஒரு வேட்டை வீரன், தனது குதிரைமீது அமர்ந்தபடி வில்தொடுத்திருந்தான்.அந்த'யானைக்குக் குறிவைக்கிறானோ', என்று நினைத்துக்கொண்டு, அந்த யானையையும் அவனையும், மாறி மாறிப் பார்த்தனர், அந்தக் கூட்டத்தார். இமைப்பொழுதில், அவன் வில்லிலிருந்து அம்பு புறப்பட்டது.

அந்த அம்பு, அந்த வேழத்தைக் கீழே வீழ்த்தியது. அதன்பின், எவருக்கும் தெரியாதவாறு பதுங்கி நின்ற, புலியின் வாயைத் துளைத்தது. வாய்பிளந்து உயிர்விட்ட, அந்தப் புலியின் பின்னால் நின்ற மானையும் துளைத்துப் பாய்ந்து, மானுக்கு அடுத்து நின்றிருந்த பன்றியையும் துளைத்தது. அதன் பின்னும் நிற்காது பாய்ந்து, இறுதியில், ஒரு மரப்பொந்தில் போய்த் தைத்தது. அந்தப் பொந்தில், உடும்போன்று குடிகொண்டிருந்தது போலும். பொந்தில் தைத்த அம்பு, உடும்பையும் தைத்திருந்தது.

இப்படி ஒரே அம்பில், இத்தனை மிருகங்களையும் வேட்டையாடிய 'அந்த வில்லாளன் யார்?' என்று மறுபடியும் ஒருமுறை அந்த வேட்டைவீரனை வியப்போடு பார்த்தனர், அந்தக் கூட்டத்தார். அவன் தோற்றம், அவன் மார்பிலிருந்த முத்துமாலை, அவன் கைகளில் அணிந்திருந்த கடகம், இவையெல்லாம், அவன் யாரென்று சொல்லியது.

அவர்கள் முன்னால் நிற்பது வேறு யாருமில்லை... கொல்லிமலைக் கோமகன், வில்வித்தையில் வல்லவன், வற்றாது கொடுத்த கொடைவள்ளல், வல்வில் ஆதன் ஓரி, என்று. இந்த கூட்டத்தார், அவனைப்பார்த்து "நீங்கள் ஆதனின் மகனான வல்வில் ஓரியா?"என்று கேட்டார்கள்.

அவன் பதிலேதும் சொல்லாமல், சிரித்தான். அவன் சிரிப்பில், அப்படி ஒரு கம்பீரம். பாணர்கள், தங்கள் கைகளில் வைத்திருந்த யாழ், முழவு போன்ற கருவிகளை இசைத்துப் பாடலானார்கள். அவனோ, அந்த இசையில் மெய்மறந்து நின்றான்.

"வல்வில் ஓரியின் புகழ் வாழ்க !!"என்று அவர்கள் பாடியபோது, அவன் நாணினான்.

அப்படியென்றால், இவர் நிச்சயம் ஓரிதான், என்று புரிந்துகொண்டு ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள். அவர்கள் மகிழ்ச்சி, அவர்கள் பாடலில் வெளிப்பட்டது. அவனோ, அந்த பாடலை ரசித்துக்கொண்டே, தான் வேட்டையாடிய மானின் துண்டுகளை நெருப்பில் வாட்டி, பக்குவமாக்கி, அதை அவர்களுக்கு அளித்து பசியாறச் செய்தான். அவர்கள் தொண்டை வறண்டுவிடாதபடி, அவன் காட்டிலேயே சேகரிக்கப்பட்ட, 'நெய்' போன்ற தேனைக் கொடுத்தான்.

வயிறார உண்டவர்கள், வாயார வாழ்த்தினார்கள். உண்ட மயக்கத்தில், பாடுவதைக்கூட மறந்தார்கள். அவர்களை வெறும் கையோடு அனுப்பாது, பொன்னும் மணிகளும் கொடுத்து அனுப்பிவைத்தான், வள்ளல் ஓரி.

ஓரியின் அரண்மனையில், ஒரு நாள்ஓரியிடம் பரிசுபெற்ற பாணர்கள், ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குச் செல்லும்போது, வல்வில் ஓரியின் புகழையும், அவன் கொடைச்சிறப்பையும் பற்றிப் பாட ஆரம்பித்தார்கள். அதைக்கேட்ட மற்ற பாணர்களும், கூத்தர்களும், புலவர்களும், தங்கள் வறுமையின்போது, அவனைத் தேடி, கொல்லிமலைக்கு வர ஆரம்பித்தார்கள். அப்படி வந்தவர்களுக்கு, வயிறார உணவும், நாவாற தேனும் கொடுத்து, அவர்கள் துயில்கொண்டு களைப்புரவும் ஏற்பாடு செய்திருந்தான், ஓரி. அவன் விருந்தோம்பலினால் அவர்கள், தாங்கள் எதற்கு வந்தோம் என்பதையே மறந்துபோனார்கள்.

அப்படி ஒரு புலவர், அவன் அரண்மனையில் தங்கியிருந்தபோது, ஓரியின் பணிப்பெண்கள் உட்கார்ந்து, மாலையொன்றைத் தொடுத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தார். நீல மணிகளால் ஆன குவளைப்பூ போன்ற ஒன்றை, வெள்ளியினாலான நார்களைக்கொண்டு தொடுத்துக் கொண்டிருந்தார்கள், அவர்கள். அப்போதுதான் அவருக்கு, தான் அங்கு எதற்காக வந்தோம் என்பதே ஞாபகம் வந்தது. உடனடியாக, ஓரியைச்

சென்று சந்தித்து, பாடலும் பாடி, அந்தக்காட்சியையும் தன் பாடலில் வைத்தார், அப்புலவர்.

பாடி முடித்த அவருக்கு, பாடலின் சுவையுணர்ந்த அவன், பொன் அணிகலன்கள் பூட்டிய யானைகளைப் பரிசாகத் தந்தான். இதற்கே வியந்தால் எப்படி? இதற்கு முன்பு ஒருசிலருக்கு, தனக்குச் சொந்தமான சில ஊர்களைக் கூடப் பரிசாகத் தந்தானாம்.

"இப்படிக் கொடுத்தால், என்னவாகும்? செல்வம் குறைந்து விடாதா?" என்று அந்த புலவர் வியந்தபோது, பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்களாம், "எங்கள் கொல்லிமலை வளங்களுக்கு முன்னால், இந்தப் பொருட்களெல்லாம், எம்மாத்திரம்?", என்று.உண்மைதான். கொல்லிமலையில் எக்காலமும் கிடைக்கும் தேனுண்டு. சந்தன மரங்கள் உண்டு. குமளிப் பழங்கள் உண்டு. எங்கும் கிடைக்காத அரியவகை மூலிகைகள் உண்டு. அவற்றைப் பறித்து மருந்தாக்கத் தெரிந்தோரும் உண்டு. வேட்டையாடி உண்டுகொள்ள உயிர்கள் உண்டு. அதற்கென, அவற்றை ஒரேடியாக வேட்டையாடித் தீர்க்காதிருக்கும் அறம் பின்பற்றப்பட்டதால், பல்லுயிர் பெருக்கமும் உண்டு. அதன் சிறப்பறிந்த மக்களும் உண்டு. இவற்றையெல்லாம் காக்கும் அரசனும் உண்டு. இப்படிப்பட்ட வளம் மிகுந்த கொல்லிமலைக்கு, சற்றும் எதிர்பாராத முறையில், ஒரு ஆபத்து வந்தது.

கொல்லிமலைக்கு வந்த ஆபத்து

அந்தக் காலகட்டத்தில், சேர மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறைக்கும், குதிரை மலையை ஆட்சி செய்த, அதியர் கோமகன் நெடுமான் அஞ்சிக்கும் பனிப்போர் நடந்துகொண்டிருந்தது.பின்னாளில், 'நெடுமான் அஞ்சி தனக்கு இணையாக வளர்ந்து விடக்கூடாது' என்பதற்காகச் சேரமன்னன் ஒரு திட்டம் தீட்டினான். அத்திட்டத்தின்படி, குதிரை மலையைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடிவும் செய்தான்.

குதிரை மலையைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆண்ட குறுநில மன்னர்களுக்கும், சிற்றரசர்களுக்கும், ஓலை அனுப்பப்பட்டது. பெரும்பாலானோர், ஓலையை ஏற்றுக்கொண்டு சேர மன்னனின் ஆட்சிக்குக் கீழ், தங்கள் பகுதிகளைக் கொண்டுவர இசைந்தார்கள். அதேமாதிரியான ஒரு ஓலை, வல்வில் ஆதன் ஓரிக்கும், அனுப்பப்பட்டது.

அந்த ஓலையைக் கண்டு சீறி எழுந்தான், வல்வில் ஓரி. அவன் அப்படி சீறி எழுந்ததற்கு, காரணம் உள்ளது. ஏனெனின், அந்த எல்லைப்பகுதிகளைக் கைப்பற்றியபிறகு, சேர மன்னன் ஒன்றும் சும்மாயிருக்கப் போவதில்லை.அவன் அமைக்க விரும்பியது, அவனது படைத் தளவாடங்களை. எக்காலமும், நெடுமான் அஞ்சியை எதிர்க்கத் தயார் நிலையில் இருக்கும் தளவாடங்களை.அப்படி தளவாடங்கள் அமைக்கப்பட்டால், தன் கொல்லிமலை என்னவாகும்? அதன் வளங்கள் என்னவாகும்? பட்டு மெத்தைபோல வளர்ந்த செடிகொடிகள் என்னவாகும்? சந்தன மரங்கள் என்னவாகும் ? சிந்தும் தேனடைகள் என்னவாகும்? இதைச் சிந்தித்துதான் வெகுண்டான், வல்வில் ஓரி."கொல்லிமலையைத் தர முடியாது", என்று பதிலும் அனுப்பினான்.

"தராவிடில் ஒன்றும் பிரச்சனையில்லை. மாவீரன் மலையமான் திருமுடிக்காரியின் தலைமையில் படைகள் அனுப்புகிறேன். முடிந்தால், உன் மலையைத் தந்து சரணடையலாம். இல்லையேல், செத்து மடியலாம்", என்று பதிலனுப்பினான், சேர மன்னன்."என்ன செய்யலாம் ? காரியின் படையோ மிகப்பெரியது. மண்டியிட்டு, வாழ்நாள் முழுவதும் இழுக்கோடு வாழ்வதா ? இல்லை, போரிடுவதா ?" , குழம்பினான், வல்வில் ஓரி. அப்பொழுதும், இப்போதுபோல், இளைஞர்கள் முன்வந்தனர். "நாங்கள் வருகிறோம் போருக்கு. எங்கள் மலையைக் காப்பதில் எங்களுக்கு பயமேதுமில்லை"என்றனர்.படையின் அளவு சற்று பெரிதானது. வில்லுக்கு வித்தகனின், ஊர் மக்கள் மட்டுமென்ன சளைத்தவர்களா? வில்வித்தையில் சிறந்தவர்கள்தான். எடுத்தனர் வில்லை. தொடுத்தனர் நாணை. பூண்டனர் போர்க்கோலம்.

கொல்லிமலையில் நடக்கும் போர்

வெகு விரைவிலேயே, போர் ஆரம்பித்தது.பெயரைக் கேட்டாலே, நடுங்குமளவுக்கு ஒரு மாவீரன், திருக்கோவிலூர் மன்னன், மலையமான் திருமுடிக்காரி. தன் பெரிய படையுடன், கொல்லிமலை வந்து சேர்ந்தான். ஓரியின் படை அளவைப் பார்க்கும்போது, காரியின் படையின் அளவு, மிக மிகப் பெரியது. ஆயினும், அதைக்கண்டு ஓரியின் வீரர்கள் எவரும் அஞ்சவில்லை. வில்லின் வீரர்கள், வேலின் வீரர்களை எதிர்கொண்டனர்.ஒருவருக்கொருவர், சளைக்காத போட்டிதான். யுத்தக்களம் சூடு பிடித்தது. ஓரியின் படையில் பலர் மாண்டனர். காரியின் படையிலும் சிலர் மாண்டனர். வல்வில் ஆதன் ஓரி, மலையமான்

திருமுடிக்காரியை நேருக்கு நேர் சந்தித்தான். வல்வில் ஆதன் ஓரிக்கு கூற்றுவனை நேரில் கண்டதுபோல இருந்தது. ஆயினும், துளி அச்சம் இல்லை, அவன் கண்ணில்.வீரனுக்கு அழகு, வீரனை வெற்றி கொள்வதுதான். காரியின் வேலும் ஆனந்தம் கொண்டது. இருவரும் ஒருவரையொருவர் தாக்கினர். கடுமையான அந்த போராட்டத்தில், பல வீரர்களையும் அரசர்களையும் துளைத்து, குருதியில் நனைவதையே தன் கருமமாகக் கொண்டிருந்த, காரியின் வேல், வில்லாளனின் மாரைத் துளைத்தது.

இதயத்தின் இரத்தம் மார்பில் கசிய, ஒரு கண்ணில் வானமும், மறுகண்ணில் கொல்லிமலையும் தெரிய, தன் மலையைக்காக்காது போகிறோமே, என்ற ஏக்கம் விரிய, உயிர்நீத்தான் வல்வில் ஓரி. அந்தப்போர் முடிந்து, கொல்லிமலை சேர மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறையிடம் கொடுக்கப்பட்டது. வெற்றிக் களிப்போடு, தங்கள் வீதிகளில் வலம்வந்த காரியின் வீரர்களைப் பார்த்து, கொல்லிமலை மக்களிட்ட ஓலம், விண்ணையும் துளைத்தது. சந்தனவாசம் வீசும் அம்மலையில், சாம்பல் வாசமும் கலந்தது. இதுவே, வல்வில் ஓரியின் வரலாறு.என்னைப் பொறுத்தவரை, வல்வில் ஓரி மறையவில்லை. கொல்லிமலையில் பசுமை உள்ளவரை, இயற்கையைக் காக்கும் எண்ணம் உள்ளவரை, வரையாது கொடுக்கும் கைகள் உள்ளவரை, தமிழ் உள்ளவரை, வல்வில் ஓரி மறையப்போவதுமில்லை.

துணை நூல் பட்டியல்

1. கவிதா வாழைபரமேஸ்வரன், வேட்டுவ மன்னன் வல்வில் ஓரி ஆய்வாளர்கள் பார்வையில், ஸ்ரீகண்ணப்பர் கல்வி அறக்கட்டளை, ஈரோடு, 2022
2. சின்னச்சாமி,தே.ப, வல்வில் ஓரி, தேன் தமிழ்ப் பதிப்பகம், சேலம், பிப்ரவரி 1988

வரலாற்றில் வேட்டுவர்களின் நிர்வாகப் பணிகள்

ப.செழியன்,
கரூர்.

கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் ஆதித்த சோழன் இராசா வேடர்களை வென்று, கொங்கு நாட்டினைக் கைப்பற்றினான். இந்நிகழ்ச்சி கொங்குநாட்டு வரலாற்றில் திருப்புமுனைஆகும். இதனால் வேட்டுவர் அரசர்களாக இருந்தமை புலனாகிறது. இக் காலத்தில் தான் நாடுகள், வளநாடுகள் முதலான அரசியல் பிரிவுகள் தோன்றின. பிரமதேயங்கள் நிறுவப்பட்டன. கொங்கு நாட்டின் பூர்வக் குடிகளான வேட்டுவர்நில உரிமைகளும், கோயில் வழிபாட்டு, முப்பாட்டு உரிமைகளும் வேட்டுவர்கு இருந்தது சோழன் பூர்வ பட்டயம் வேட்டுவர் காணியாட்சி உரிமை மாற்றம், பொருளாதாரத் துறையில் வேட்டுவர் உயர்ச்சி ஆகியவற்றை விரித்துக் கூறுகின்றது. வேட்டுவர்கலுக்கு கூட்டப் பெயர்களை (குலம்) வைத்துக் கொண்டார்கள். சில கூட்டப் பெயர்கள் அவை அந்துவன், அக்கினி, கரன், கீதை, கர்டை, மூலன், மணியன், பனையன், பாடியன், சேரன், பூஞ்சந்தை, வெலையன், காரி, புன்னை,பானன் என்பனவாகும். இப்பொதுக் கூட்டப் பெயர்களால் இருவரிடையே ஏற்பட்ட நெருக்கமான உறவு புலனாகிறது. (ம.இராசசேகர தங்கமணி, கொங்குச் சமுதாயம் வேட்டுவர், பக்கம் 37)

சோழருக்குப் பின்னர் வேட்டுவர்கள்

சோழரது ஆட்சி கொங்கு நாட்டில் மறைந்த பின்னர், பாண்டியரும், ஹொய்சாளரும் கொங்கு நாட்டில் மேலாண்மை செலுத்தினர். வேட்டுவ வீரர்களின் வில்லாற்றலில் முழு நம்பிக்கை கொண்ட பாண்டியர், வேட்டுவ வீரர்களைப் படைத்தலைவர்களாவும் நியமிக்கப்பட்டனர். சுந்தர பாண்டியனது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற போரில் பகைவர்களை வெட்டி வீழ்த்தி, வீரமரணம் எய்திய அந்தியூரனுக்கு நடுகல் எடுக்கப்பட்ட செய்தி இங்கு நினைவு கூறத்தக்கது.

விசயநகர வேந்தரது ஆட்சிக் காலத்தில் தெலுங்கு விவசாயிகளும், சக்கிலி, நெசவாளர், வண்ணான், மருத்துவர் (நாவிதர்) முதலான குடிப்படைகளும் விஜய நகர வீரர்களும் கொங்குச் சமுதாயத்தில் சங்கமம் ஆயினர். இதனால் கொங்கு நாட்டில் தெலுங்கர் ஆதிக்கமும் ஏற்படலாயிற்று. இக்கால கட்டத்தில் கொங்கு நாடு வேட்டுவ, பட்டக்காரர்களின் ஆதிக்கத்தைக் கண்டது. வேட்டுவப் பட்டக்காரர்களுள் தென்னிலை, புரவிபாளையம், திங்களூர் பட்டக்காரர் ஆகியோர் புகழ் பெற்றனர்.

காணியாளர் கொங்கு நாட்டில் வேட்டுவர் சிலர் காணியாளர் களாகச் சிறப்புற்று விளங்கினர். இவர்களுள் புத்தூர், பள்ளக்குழி, கழனூர், முத்தப்பனூர், தும்பங்குறிச்சி, சௌதாபுரம், இளநகர், பிரிதி, காளிப்பட்டி, ஊசிப்பாளையம், பழமங்கலம், குலவிளக்கு முதலான ஊர்களில் வேட்டுவரே காணியாளர்களாக இருந்தனர். மற்றும் அஞ்நூற்றுமங்கலம், திருமழப்பாடி, குளக்குறிச்சி, படலோடிக்குறிச்சி, தென்னிலை, இருப்பலி முதலான ஊர்களில் வேட்டுவர் காணியாட்சியாளர்களாகத் திகழ்ந்தனர். காணியாட்சியாளருள் வெங்கச்சி வேட்டுவர் சிலர் புகழ் பெற்று விளங்கினர். முன்னை வேட்டுவர், வடபரிசார நாட்டுக் கோசனத்திலும் சாந்தப்படை வேட்டுவர் கரைய வேட்டுவர் ஆகிய இருவரும் பூந்துறை நாட்டு அரச்சலூரிலும் காணியாளர்களாகத் திகழ்ந்தனர். (மேலது,பக்கம் 39)

ஊராளிகள்

வேட்டுவர் பலர் கொங்கு நாட்டில் பல ஊர்களில் ஊராளிகளாகத் திகழ்ந்தனர். இவர்களுள் சிலரைப்பற்றிக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. இவர்களுள் மேல்கரை அரைய நாட்டு வடிவுள்ள மங்கலத்தில் (துக்காச்சி) பாளி வேட்டுவன் அழகன்காளியும், பன்றி நாட்டு சாப்பாடியில் ஊராளி நெனூர் அத்தானியும் (நெருப்பூர் நடுகல்) எழுகரை நாட்டு பெரிய விளங்கியில் ஊராளி சுரண்டை வேட்டுவன் சிலம்பன் சிறியானும் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுப் பருத்திப்பள்ளியில் ஊராளி வேட்டுவன் அதியமான் நங்கனும் குறிப்பிடத்தக்கவர்கள். அந்தியூர் மலைகளில் (பர்கூர் மலைகள்) வாழும் பழங்குடிகளில் ஊராளி என்போரும் ஒரு பிரிவினர் என்பது வேட்டுவரின் தொண்மைச் சிறப்பினை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. சோழன் பூர்வ பட்டயத்தில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட வேட்டுவர் கிராமத் தலைவர்களாக (ஊராளி, மன்னாடி) நியமிக்கப்பட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

பாளையக்காரர்கள்

சேர, சோழ, பாண்டியரது ஆட்சிக்குப் பின்னர், கொங்கு மண்டலம் வேட்டுவ இனத்தைச் சேர்ந்த பாளையக்காரர்களால் ஆளப்பட்டு வந்தது. இவ்வாறு ஆளப்பட்டு வந்த பகுதிகளுள் சங்ககிரி, சாமப்பள்ளி (தென்னிலை) காவரிபுரம், ஆண்டியூர் முதலானவை குறிப்பிடத்தக்கவை யாகும். இப்பகுதிகளில் வேட்டுவர் பாளையக்காரர்கள் கோட்டைகள் கட்டிக் கொண்ட சிறப்புடன் ஆண்டுவந்தனர். கக்குவாடி பாளையக்காரரும் பண்டு புகழ்பெற்று விளங்கினர். இவர்களுள் நல்லண்ணி கவுண்டர் குறிப்பிடத்தக்கவராவார். இவருக்குப் பாண்டியவேந்தன் எழுபது வகை விருதுகள் வழங்கினார் என்று மெக்கன்ஸி குறிப்பிடுகிறார். (மேலது, பக்கம் 40)

படைத்தலைவர்கள்

சங்ககாலம் முதற்கொண்டே வேட்டுவ வீரர் பாண்டியரின் ஆட்சியை விரிவுபடுத்துவதில் பெரும்பணி புரிந்துள்ளனர். சிலகாலம் இவர்கள் சோழர், பாண்டியர், சேரர், நாயக்கர், ஹொய்சாளர் முதலானோரது ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் பணியில் பெரிதும் ஈடுபட்டிருந்தனர். வேட்டுவரில் பலர் வலிமைமிக்க படைத்தலைவர் களாகவும் விளங்கினர். வீரத்திற்கும் அஞ்சாமைக்கும் பெயர் பெற்ற வேட்டுவர் இலக்கியங்களில் பாராட்டப் பெறுகின்றனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் அதன் பின்னரும் வேட்டுவக் கவுண்டர்கள் விவசாயத்திலும், தொழில் நுறையிலும், கல்வித் துறையிலும், உத்தியோகத்துறையிலும் நல்ல நிலைக்குவந்தனர் .

வேட்டையாடுதல், நாட்டைக் காத்தல் ஆகிய தொழில்களை மேற்கொண்ட வேட்டுவர், ஊர்த் தலைவர்களாகவும் (ஊராளி) படை வீரர்களாகவும், படைத்தலைவர்களாகவும், குறுநில மன்னர்களாகவும், பட்டக்காரர்களாகவும் பல்வேறு காலக் கட்டங்களில் பணியாற்றியுள்ளனர். வேட்டைத் தொழிலை மேற்கொண்ட வேட்டுவர் பின்னர் காடுகளை அழித்து விவசாய நிலங்களாக வேளாண்மை புரிந்துள்ளனர். இவர்கள் இறைப்பணியில் மேம்பட்டு விளங்கினர். பலத்திருக் கோயில்களை அமைத்தும், கோயில்களைப் புதுப்பித்தும் அவற்றில் தொடர்ந்து பூசனை நடைபெற பல நிலக்கொடைகளை அளித்தும் தொண்டு புரிந்துள்ளனர். இவ்வாறு வேட்டுவர்கள், கொங்கு நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைத்து கொங்கு நாட்டு வரலாற்றில் தனித்ததோர் இடத்தைப் பெற்றுள்ளனர்.

தொகுப்புரை

பல வேட்டுவர்கள் வேளாண்மைத் தொழில் செய்து வேளான் (தலைவன்) ஆயினர். கொக்கராயன் பேட்டைக் கல்வெட்டு இதற்கோர் சான்று. வேட்டுவர்கள் பழங்கொங்கு நாடு முழுவதிலும் வாழ்ந்து வந்தனர். இருப்பினும் வடகொங்கில் இவர்கள் மிகுதியாக வாழ்ந்தனர். காவிரி, நொய்யல் அமராவதி ஆற்றங்கரைகளில் வேட்டுவர் குடியிருப்புகள் மிகுதி. வேட்டுவ குலத்தினின்றும் வேளான் (தலைவன்) மாறிய இவர்கள், தமது பெயருடன் வேட்டுவ இனத்தின் பெயரையும் இணைத்துக் கொள்ள மறக்கவில்லை. எடுத்துக்காட்டாக கரூர் பசுபதியீசர் கோயில் கல்வெட்டு 'ஒன்று புன்னம் பூவாணிய வேட்டுவரில் வேளான் கரியானான் மருதங்கவேளான் என்பவன் பசுபதியீசர்க்கு மூன்று கழஞ்சு பொன் அளித்தான் எனும் செய்தியைத் தெரிவிக்கின்றது வேட்டுவர் குலங்கள் எடுத்துக்காட்டாகப் பாண்டியன், பூச்சந்தை, காரி, மூலன், மணியன், பனையன் காடை, கீரை, அந்துவன், வெலையன் ஆகிய குலப்பெயர்கள் இருவரிடையேயும் காணப்படுகின்றன. வேட்டுவர் கோயில் வேட்டுவர்கு முப்பாடு வழங்கப்பட்டது. மேலும் பட்டாலி, பருத்திப்பள்ளி, தும்பங்குறிச்சி போன்ற ஊர்களில் காணியாளர்களாக வேட்டுவர் குறிக்கப்பட்டுள்ளனர்.

பிற்காலத்தில் முதலாம் ஆதித்தச் சோழனின் ஆட்சிக் காலத்திலும் வீரப்பெருங்குடியினரான வேட்டுவரிடையே பல குலங்கள் (கூட்டப் பிரிவுகள்) ஏற்பட்டன. இவை எத்தனை என்பதை நாம் அறுதியிட்டு உறுதியாகக் கூறவியலாது. எனவே தான் வேர் வகையை எண்ணினாலும் வேட்டுவர் வகையை எண்ணமுடியாது எனும் முதுமொழியும் ஏற்பட்டுள்ளது.

துணை நூல் பட்டியல்

1. இராசு,செ; வேட்டுவர் சமூக ஆவணங்கள், கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை, ஈரோடு, 2008
2. இராஜசேகர தங்கமணி,ம.இரா; கொங்குச் சமுதாயம் (வேட்டுவர்), கொங்கு பதிப்பகம், கரூர், 2003
3. பரணன், இல; பொன்னர் சங்கர் கதை ஒரு சமூகவியல் ஆய்வு, சமூக வரலாற்றுச் சங்கம், பெரியாரியல் கலை இலக்கிய ஆய்வு மன்றம், கரூர், 2010

வரலாற்று ஆதாரங்களில் வேட்டுவர்

முனைவர் ம.ஜெயலட்சுமி,
தமிழாசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி,
காமன் தொட்டி, ஓசூர்

கொங்குநாட்டு வேட்டுவரைப்பற்றி அறிந்து கொள்ளப் பலவிதமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அவற்றை நாம் 1. கல்வெட்டுகள் 2. செப்பேடுகள் 3. இலக்கியங்கள் மற்றும் புராணங்கள் 4. நினைவுச் சின்னங்கள் என்னும் பிரிவுகளாகப் பிரித்துக் காணலாம்.

1. கல்வெட்டுகள்

கல்வெட்டுகள் பெரும்பாலும் திருக்கோயில்களில் காணப்படு கின்றன. நடுகற்களிலும் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் வேட்டுவர் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகத் திருவெஞ்சமாக்கூடல், வெங்கம்பூர், திருமுருகன் பூண்டி, அவினாசி, திருச்செங்கோடு, புதுக்கோட்டை, கருவூர், ஈரோடு (கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகம்), ஏழூர் (நாமக்கல் வட்டம்), மூக்குத்தி பாளையம், பருத்திப்பள்ளி (சேலம் மாவட்டம்), வாழவந்தி அருகில் குட்லாம்பாறை (நாமக்கல் வட்டம்) முதலான ஊர்களில் உள்ள கல்வெட்டுகளைக் குறிப்பிடலாம். பழமங்கலம், சேலம் அருங்காட்சியகம், கூலிப்பட்டி, துக்காச்சி, கொக்கராயன் பேட்டை, சிவகிரி, அந்தியூர் நடுகல் கல்வெட்டுகளும் வேட்டுவ வீரர்களின் அஞ்சாமைப் பற்றிக் கூறுகின்றன.

2. செப்பேடுகள்

ஊசிப்பாளையம் செப்பேடு, தென்னிலைப்பட்டயம், திருச்செங்கோடு அல்லாளன் இளையான் பட்டயம், தருமபுரிப்பட்டயம், புதூர் பட்டக்காரர் பட்டயம், எட்டரைப் பட்டயம் (திருச்சி வட்டம்), சோழன் பூர்வ பட்டயம், காலிங்கராயன் அணை கட்டிய பட்டயம் - ஆகியனவும் வேட்டுவரின் வீர வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

3. இலக்கியங்கள், புராணங்கள்

கருவூர்ப்புராணம், திருவெஞ்சமாக்கூடல் புராணம், திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை, திருச்செங்கோட்டுப் புராணம், சோழன் பூர்வ பட்டயம், வெள்ளாளர் புராணம், பழனி ஓலைச்சுவடிகள், குருகுலக் காவியம், குருகுல வரலாறு, பஞ்சவர்ணராஜ காவியம், கள்ளழகர் அம்மானை, ஓதளர் குறவஞ்சி, மெக்கன்ஸியின் கையெழுத்துப் பிரதிகள், வில்சனின் கையெழுத்துப் பிரதிகள், கொங்குமண்டலச் சதகம், அவினாசிப் புலவரின் திங்களூர் நொண்டி நாடகம், சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மாந்தரஞ்சேரல் மெய்கீர்த்தி - முதலான இலக்கியங்களும் புராணங்களும் வேட்டுவரின் சமுதாய வாழ்வு பற்றிய செய்திகளைச் செப்புகின்றன.சிலப்பதிகார வேட்டுவரிப் பாடல்கள் வேட்டுவரின் வாழ்க்கை முறையைச் சித்தரிக்கின்றன.

4. நினைவுச் சின்னங்கள்

வேட்டுவரின் நடுகற்கள், வேட்டுவர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள், புதுப்பிக்கப்பட்ட கோயில்கள் முதலான நினைவுச் சின்னங்களும் வேட்டுவரது வரலாற்றை உருவாக்கப் பயன்படுகின்றன. வேட்டுவ பட்டக்காரர்கள் காலத்திய இடிந்த கோட்டைகள், வெட்டிய ஆறுகள், குளங்கள், ஆகியன அவர்களது ஆட்சியின் சிறப்பைக் கூறுகின்றன. (ம.இராஜசேகர தங்கமணி, கொங்குச் சமுதாயம் வேட்டுவர், பக்கம் 26)

இவை தவிர, கோவைக்கிழார் எழுதியுள்ள "கொங்குநாட்டு" வரலாறு, வீயாரம் எழுதிய கொங்குநாட்டுக் கவுண்டர்கள்", டாக்டர் ஆரோக்கியசாமி அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள கொங்குநாடு" (The kongu Country) பேராசிரியர்கள் ம.இராசசேகரத் தங்கமணி எம். சண்முகவேலு ஆகியோர் "வேட்டுவர் குரல்" எனும் மாதாந்திர இதழில் எழுதியுள்ள கட்டுரைகள், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள "கொங்கு நாட்டு ஆவணங்கள்" எனும் நூல், கல்வெட்டறிஞர் புலவர் செ.இராசு அவர்கள் கொங்கு இதழில்" வெளியிட்டுள்ள கட்டுரைகள் ஆகியன வேட்டுவரின் வரலாறு பற்றி ஆய்வு செய்யத் துணை புரிகின்றன.

வேட்டுவரின் பூர்வீகம் வேட்டுவரின் பூர்வீகம் குறித்து அறிஞர்களிடையே பல விதமான கருத்துகள் நிலவுகின்றன. வேட்டுவர்

பிரமனால் படைக்கப்பட்ட ஆதிவமிசத்தினர் என்று புராணம் குறிப்பிடுகின்றது. சோழன் பூர்வ பட்டயம், வேட்டுவர்களைக் கொங்கு நாட்டின் ஆதிகுடிகள் என்று சுட்டுகின்றது. சில பட்டயங்கள் வேட்டுவர் முத்தரையரின் வழித் தோன்றல்கள் என்று செப்புகின்றன. வேட்டுவரும் முத்தரையரும் கண்ணப்ப நாயனாரைத் தமது குல தெய்வமாகக் கொண்டு வழிபடுகின்றனர். எட்கர் தர்ஸ்ட ன் (Edgar Thurston) அவர்கள் முத்தரையர், வேட்டுவர், வலையர் ஆகியோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று கூறியுள்ளார். இருப்பினும் வேட்டுவரின் பூர்வீகம் குறித்து நான்கு முக்கியக் கொள்கைகள் (கருத்துகள்) உள்ளன. அவையாவன,

1. வேட்டுவர் நாகர் இனத்தவர்

2. குரு குலத்தவர்

3. கண்ணப்ப நாயனாரின் கால்வழியினர்

4. கொங்கு நாட்டின் பூர்வீகக் குடிகள் இக்கொள்கைகளின் உண்மைகளை இங்கே ஆராயலாம். நாகர் வேட்டுவர் நாகர் இனத்தவரே என்று கனகசபைப்பிள்ளை மதிப்பிட்டார். நாகரும் வேட்டையாடும் இனத்தின் பாலவர்களே ஆவர். எனவே தொழில் ஒற்றுமை கருதி, வேட்டுவர் நாகர் இனத்தினர் எனும் கனகசபையின் கருத்தினைப் பலர் ஏற்றுக்கொண்டுள்ளனர். (மேலது, பக்கம் 27)

‘பூர்வ குடிகளுள் நாகரும் ஒருவர் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்துதான். ஆனால், கொங்குநாட்டில் பழங்காலத்தில் நாகர்கள் வாழ்ந்தமைக்கோ, நாகர் வேட்டுவரின் முன்னோர் என்பதற்கோ இதுகாறும் சான்றுகள் கிடைக்கவில்லை. எனவே இக்கருத்து பொருத்தமுடையது அல்ல,

2. குரு குலத்தவர்

புராணங்களும் பழங்கதைகளும் வேட்டுவரைக் குருகுலத்தினர் எனக் கூறும். பாண்டவர், கௌரவர் ஆகியோர் குருகுலத்தவர். பாண்டவரது வீழ்ச்சிக்குப் பின்னர் இவர்களது கால் வழியினர் சிலர், தென்னிந்தியாவிற்கு வந்து, பொத்தப்பி நாட்டை உடுப்பூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். பொத்தப்பி நாடு தொண்டை நாட்டை ஒட்டி அமைந்துள்ளது. இவ்வம்சத்தில் தோன்றிய வேந்தருள் நாகராஜன் குறிப்பிடத்தக்கவன். இவ்வேந்தனது மகன் கண்ணப்பன்.

கண்ணப்பனுக்கு 1. வேட்டுவன், 2.வேடன், 3. காவிலவன், 4. பூவிலவன், 5. மாவிலவன் என்னும் ஐந்து மக்கள் இருந்தனர். கண்ணப்பனுக்குப் பின்னர் மூத்த மகனான வேட்டுவன் ஆட்சிக்கு வந்தான். இவனது பரம்பரையினர் வேட்டுவர் என்று அழைக்கப்பட்டனர் இக்கருத்தினை வேல்சாமிக் கவிராயர் என்பார் குருகுல வரலாறு எனும் நூலில் குறிப்பிடுகிறார். இக்கருத்து ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல.

கண்ணப்ப நாயனாரின் கால்வழியினர்

மேற்கூறப்பட்டுள்ள கருத்தும் வேட்டுவர் சைவ நாயன்மாராகிய கண்ணப்ப நாயனாரின் கால்வழியினர் என்னும் கருத்தும் ஏறத்தாழ ஒன்று தான். வேட்டுவ பட்டக்காரர்களின் பட்டயங்களிலும், திங்களூர் நொண்டி நாடகம் என்னும் கையெழுத்துப் பிரதியிலும் வேட்டுவரின் முன்னோர் கண்ணப்பன் என்று கூறப்பட்டுள்ளது. புராண காலத் தலைவர்களுள் புகழ் மிக்கவரைத் தங்கள் முன்னோன் என்று கூறிக்கொள்ளும் வீண் பெருமை பலருக்கு உண்டு. இது அவ்வகையைச் சார்ந்ததே. கண்ணப்பர் வேட்டுவர் குலத்தவர் என்பதும் உண்மையே. அவரை வேட்டுவர் வணங்கி வருவதும் உண்மையே. ஆனால் இவரே வேட்டுவரின் முன்னோர் எனக் கூறுதல் பொருந்தாது. இவன் காளஹஸ்தி வேடன் என்பது யாவரும் அறிந்ததே. (மேலது,பக்கம் 29)

4. பூர்வக்குடிகள்

இவர்கள் கொங்கு நாட்டின் பூர்வ குடிகள் என்பதற்குப் பலவிதமான ஆதாரங்கள் உள்ளன. சங்க இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் இக்கருத்தினையே உறுதி செய்கின்றன. பல அறிஞர்களும் இக்கருத்தினையே ஆதரிக்கின்றனர். வேட்டுவர்கள் தங்கட்கு அதிக எண்ணிக்கையில் படை பரவப்பட்ட போது காளஹஸ்தி சென்று அங்கிருந்த வடுவ வேந்தனிடம் படை உதவி பெறுவதுண்டு. ஒரு கட்டத்தில் காளஹஸ்தியில் இருந்த வேட்டுவர் கொங்கு நாட்டில் குடியேறியுள்ளனர். இதனால் வேட்டுவர் காளஹஸ்தி வேந்தரிடையே சுமுகமான உறவு இருந்தது. இதனை வைத்துக் கொண்டு வேட்டுவரின் பூர்வீகம் காளஹஸ்தி எனக் கூறுதல் தவறாகும். பட்டக்காரர் செப்பேடுகளில் கார் வெளிவெளு (வேள்) வேட்டுவ முத்திரைக்காரர் ஒருவர் குறிக்கப்பெறுகிறார். வேட்டுவப் பட்டக்காரருள் ஒருவரான தலைய நாட்டுவள்ளல் கவுண்டர் என்பார் சுந்தர பாண்டிய தண்டெறி முத்துராஜா என்று மெக்கன்ஸியால் குறிக்கப்பெறுகிறார். வேட்டுவருள் கொங்கர்

செல்வ முத்திரையன், சோழ முத்திரையன், சிய முத்தரையன், சேந்த முத்தரையன் முதலானோர் குறிக்கப்பெறுகின்றனர். கோபி வட்டம் கொங்கர் பாளையத்தில் இன்றும் பெருமளவில் முத்தரையர் வசிக்கின்றனர். திருச்சி மாவட்டம் திருச்சி வட்டத்திலும் (குறிப்பாக வடசேரிப்பகுதி) குளித்தலை வட்டத்திலும் வாழ்ந்து வருகின்ற ஊராளிக் கவுண்டர்கள் கண்ணப்பகுல வலையர்கள் முத்தரையர்கள் என அழைக்கப்படுகின்றனர். கொங்கு நாட்டின் பல பகுதிகளில் கண்ணப்பருக்கு வழிபாடு நிகழுங்கால் முத்தரையர் முதலுரிமை பெறுகின்றனர். இவற்றை நுண்ணிதின் ஆராய்ந்து பார்க்குங்கால் வேட்டுவருக்கும் முத்தரையருக்கும் ஏதோ ஒருவிதமான நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதனை ஊகிக்கலாம். ஒரு வேளை இவர்கள் இருவரும் ஒரே டஇனத்தவராகவும் இருக்கலாமோ? என்ற ஐயமும் எழுகின்றது. வேட்டுவரின் பிற பெயர்கள்

வேட்டையாடுதலைத் தமது முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள் வேட்டுவர்கள். வேடர் என்ற சொல்லே வேட்டுவர் என ஆயிற்று. இவர்கள் வேடன், வெற்பன், சிலம்பன், எயினன், ஊரன், வேட்டைக்காரன், வேட்டுவன், வேட்டுவதிரையன், ஊராளி, நாடாழ்வான் முதலான பெயர்களாலும் அழைக்கப்பட்டனர். இவர்கள் கவுண்டர், காடவராயன், மன்றாடியார், பல்லவராயர், வானவதிராயன், காங்கயன், நாயக்கர், முத்தரையர், காடுவெட்டி, ராயர், வள்ளல், கொங்கு ராயர், ஊர்க்கவுண்டர், கங்கதிராயர், பிள்ளை முதலான பட்டங்களைப் பெற்றிருந்தனர் என்பதனைக் கல்வெட்டுகளால் அறிகிறோம். வேட்டுவ வேந்தர்களோ பல்லவராயர், பூவல ராயர், சந்தனராயர், நரசிங்கராயர் முதலான பட்டப்பெயர்களைப் பூண்டிருந்தனர் என்பதனைக் குறிப்பு நாட்டுச் செப்பேட்டால் அறியலாம்.

காலந்தோறும் வேட்டுவர் சங்க காலத்திலும் அதற்கு முன்பும் கொங்கு நாட்டில் வேட்டுவர்கள் வாழ்ந்து வந்தனர் என்பதனைச் சங்க இலக்கியச் சான்றுகளால் அறிகிறோம். இக்காலக் கட்டத்தில் இவர்கள் வேட்டையாடுதலையே தமது தொழிலாகக் கொண்டிருந்தனர். பின்னர் இவர்களது வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திய பாறை ஓவியங்களும் குகை ஓவியங்களும் கொங்கு நாட்டிலும், அதனை ஒட்டிய பகுதிகளிலும்

கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் வேட்டையாடும் காட்சியும், அதன் தொடர்பான காட்சிகளும் விலங்குகளும் தீட்டப்பட்டுள்ளன. இவை யாவும் வேட்டுவரது வாழ்க்கை முறையினைச் சித்தரிப்பவையே. கொங்கு நாட்டின் பல பகுதிகளில் ஈமச் சின்னங்களும், புதை குழிகளும், இறந்தோர் நினைவுக்கற்களும், பெருங்கற்காலச் சின்னங்களும் காணப்படுகின்றன. இவையாவும் வேட்டையாடும் தொழிலைக் கொண்ட நாடோடி வாழ்க்கையை மேற்கொண்ட வேட்டுவருடையதே என்று அயல் நாட்டு ஆராய்ச்சி அறிஞர் நிக்கல்சன் குறிப்பிட்டுள்ளார். இந்த ஈமச் சின்னங்களின் சொந்தக் காரர்களான வேட்டுவர்கள் கொங்கு நாட்டின் பூர்வ குடிளே என்பதனைச் சந்தேகத்திற்கு இடமின்றி அறியலாம்.

சங்க காலமும் அதன் பின்னரும் (கி.மு. 3 - கி.பி. 91)

சங்ககாலம் தமிழரின் வசந்த காலம். இக்காலத்தில் வேட்டுவர் வேட்டையாடுவதையும் ஆடு, மாடி மேய்ப்பதையும் தமது தொழிலாகக் கொண்டிருந்தனர். இந்த சமயத்தில் பலர் போர்ப்படையில் வீரர்களாகப் பணி புரிந்தனர். இவர்களுள் சிலர் மலைகளிலும் மலைச்சரிவுகளின் சமவெளிகளிலும் விவசாயம் செய்து வந்ததாகவும் அறிய வேட்டுவர்கள் கள் குடிப்பதில் இன்பம் கண்டனர். கள் குடித்த கடனை அடைப்பதற்கு வேட்டுவர் சிலர் யானைத் தந்தங்களைக் கொண்டு சென்றனர் என்று பதிற்றுப் பத்து கூறுகிறது.

இவர்கள் எருதுச்சண்டை, கோழிச்சண்டை , ஆடல், பாடல் ஆகிய விளையாட்டுக்களில் ஈடுபட்டனர். இவர்கள் போர்ப் படைகளில் பணி யாற்றியது போன்று பாடி காவலிலும், நெடுஞ்சாலைகளில் காவலாளி களாகவும் வாணிகச் சொத்துக்குக் காவல் வீரர்களாகவும் அமர்த்தப்பட்டனர். போர்த்தெய்வமான கொற்றவை, காளி ஆகியவற்றை இவர்கள் வணங்கினர். பின்னர் கன்னிமார் தெய்வங்களை வழிபட்டனர்.

சங்க காலத்தில் வேட்டுவக் குலத் தலைவர்கள் சிலர் குறுநில மன்னர்களாகத் திகழ்ந்தனர். இதனைச் சங்கப் பாடல்களால் அறியலாம். இவர்களுள் கோடைமலைத் தலைவனான கடிய நெடு வேட்டுவன், தோட்டிமலைத் தலைவனான கண்டீரக்கோப்பெருநள்ளி, கொல்லி மலைத் தலைவனான வல்வில் ஓரி ஆகியோர் புகழ் பெற்று விளங்கினர். அகநானூறும் கோடைமலைத் தலைவனின் பெருமையைப் பேசுகின்றன. ஓரி மிகச் சிறந்த வில் வீரனாகத் திகழ்ந்தான். ஆமூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த குறும் பொறைக்கோமான் (கொடுமுடி)

மாவீரனாகத் திகழ்ந்தான். சேரரை வென்றான். தனது அரசை விரிவுபடுத்தினான். (மேலது,பக்கம் 33,34)

இளவெயினனார், எயிற்றியனார், எயினந்தையார், எழூஉப்பன்றி நான்குமரனார் போன்ற புலவர் பெருமக்களும் வேட்டுவர் குடிக்குப் பெருமை சேர்த்தனர். வேட்டுவகுலப் பெண்பாற் புலவர்களுள் வெறிபாடிய காமக்கண்ணியார், கழாரர் சீரன் எயிற்றி ஆகியோர் சிறந்த புலவர்களாகத் திகழ்ந்தனர்.

தொகுப்புரை

ஓரிடத்தில் நிலையாகத் தங்காமல் அலைந்து திரிந்து வேட்டையாடிய வேட்டுவர், சில காலம் சென்ற பின்னர் ஓரிடத்தில் தங்க ஆரம்பித்தனர். ஒருவகையாக நிலைத்து வாழ்ந்த இவர்கள் உணவு தேடும் நிலைமாறி உணவை உற்பத்தி செய்யும் நிலைக்கு முன்னேறினர். இதுவரை ஒரேயா விதமான தொழிலை மேற்கொண்டு வந்த வேட்டுவர் இக்காலக் கட்டத்தில் பல்வேறு தொழிலில் ஈடுபட்டனர் இம்முன்னேற்றத்தால் பல வேட்டுவர் வேட்டைத் தொழிலை விட்டனர். ஆடு மாடு மேய்த்தலைக் கைக் கொண்டனர். சில வேளாண்மையில் ஈடுபட்டு சமவெளியில் வாழ்ந்தனர் வேட்டுவரின் இம்முன்னேற்றம் பற்றி எட்கார் தர்ஸ்ட்டனும் (Edgar Thurston) தனது தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். (Castes and Tribes of Southern India).

திரு முருகன் பூண்டிப் பதிகத்தில் வடுக வேடுவரைக் கடுமையாக சாடிய நாயன்மாராகிய சுந்தரர், திருவெஞ்சமாக்கூடல் பதிகத்தில் வேடர் விரும்பி வாழ் வெஞ்சமாக் கூடல் என்று வேட்டுவரைப் பொதுப்டையாகக் கூறுகிறார். இதில் வேட்டுவரை இவர் குறை கூறவில்லை , வேட்டுவர் பலர் வெஞ்சமாக்கூடல் இறைவர்க்கு அறக்கொடைகள் விட்டுள்ளனர். இவர்கள் இறையன்பிலும் மேம்பட்டு விளங்கினர். ஓரிடத்தில் நிலையாக வாழவும் தலைப்பட்டனர்.

இக்காலக் கட்டத்தில் திருமுருகன் பூண்டி, நாமக்கல், கொடுமுடி, திரு வெஞ்சமாக்கூடல், பேரூர், முதலான இடங்கள் இந்துசமய வழிபாட்டு மையங்களாகத் திகழ்ந்தன.

திருமுருகன் பூண்டி, வெஞ்சமாக்கூடல், கொடுமுடி ஆகியத் தலங்களில் வேட்டுவரே பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சங்க காலத்தில் வேட்டுவர் யானைத் தந்தத்தின் உதவியோடு பொன்னைத் தோண்டி எடுத்ததாக இலக்கியம் கூறும். சங்க காலத்தையடுத்து வெஞ்சமன் எனும் வேட்டுவ மன்னன் திருவெஞ்சமாக்கூடலைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான்.

துணை நூல் பட்டியல்

1. இராசு,செ; வேட்டுவர் சமூக ஆவணங்கள், கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை, ஈரோடு, 2008
2. இராஜசேகர தங்கமணி,ம.இரா; கொங்குச் சமுதாயம் (வேட்டுவர்), கொங்கு பதிப்பகம், கரூர், 2003

வேட்டுவ அரசன் அல்லாள இளையான் பட்டயம் ஓர் ஆய்வு

வடிவேலு ராமசாமி
தமிழ் ஆர்வலர்,
ஓசூர்
9344498033

முன்னுரை

கொங்கு மண்டலத்தை ஆட்சி செய்த வேட்டுவ மன்னர்களில் அல்லாள இலையான் மிக முக்கியமான அரசன் ஆவர் பெயரில் இந்த செப்பேடு அலைகப்படுவது அவரை சிறப்பிப்பதாக உள்ளது இப்பட்டையம் சக ஆண்டு 4685 கி பி 1584 ஈசுவர ஆண்டு வைகாசி மாதம் பவுர்ணமி, விசாக நட்சத்திரம் 14 ஆம் தேதி எழுதப்பட்டது இதில் வேட்டுவர் ஆளுமை பக்கதி அவர்கள் பற்றிய வரலாற்று தரவுகளை அறிய முடிகிறது. இப்பட்டையம் கடவுள் வாழ்த்துடன் தொடாங்குகிறது.

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறிதான் தழைத்தோங்குக
தெய்வ வென் திருநீரு சிறக்கவே

அருளாலாதி நந்திகேசுபர என்னுக்கிற கித்துத் திரேததுவாபரக் கலியுககிறேதா யுகத்துக்கு விறுமா அற்சனை பண்ணுகையில் விறும்மகிரியும் விறும தீர்த்தமும் விறுமீசுரருமமனவர் திறேதாயுகத்துக்கு விஷ்ணு கிரியும் விஷ்ணு தீற்த மும் விஷ்ணு ஈசுபரருமானவர் துவாபர யுகத்தில் துற்கை அற்சனை பண்ணுகையில் துற்கை கிரியும் துற்க தீற்தமும் துற்கீசுரரு மானவர் கலியுகத்துக்கு துற்கை அற்சனை பண்ணுகையில் துற்கை கிரியும் துற்க தீர்த்தமுந் துற்கீசுரருமானவர் கலியுகத்துக்கு நாக அற்சனை பன்னுகையில் நாக கிரியும் நாக தீர்த்தமும் நாகீசுபரரு மானவர் இப்படி அனேகஞ் சதுரியுகம் பூசை கொண்டருளிய தேவர் தேவன் தெய்வ சிகாமணி தேவ தேவ வர்த்தமன் தேவதி

சார்ப்பூமன் பக்தப் பிரியன் பக்தலன் பார்வதி வல்லவன் பார்வதி மனோகரன் பார்வதி நாயகன் முக்திக்கு வித்து முக்கண்ணீசுவர் நின்ற கோலமகிய நிமலன் நேரமொரு பஞ்சவற்னப் பிரகாசன் திருமுருக வேலவன் தண்டாயுத அஷ்த்தன் செம்புத் தீவில் திராவிட தேசத்தில் தொண்டைமண்டலத்தில் காஞ்சிமானகரில் திருகைலாயாத்திலே பார்வதி தேவி அர்த பாகம் பெறவேண்டி அரிய தபசு பன்னுகையில் அப்போது காட்சி கொடுத்தருளிய அற்தனாரீசுபரருடைய தம்பிரானார் அவருடைய தம் பிரானார் அவருடைய ஶ்ரீமன் குமாரராகிய விப்பிறப் பிரியன் விசுவமூர்திச் சுவபாலன் சறவனபவன் குக் குடத்துவசன் குங்குமவண்ணன் கெவுரி திருமகன் கணபதி சகோதரன் சுரலோக லாட்சாதி லட்சன் தேவர் சிறை மீட்ட தேவர் சேனாதிபதி இகரைப் பகட்டரக்கர் பட்டிடப் பதைக்க வீறு கொக்கரித்து மறக்கனித்து குக்குடத்து வாசத்தினன் சக்ற வட்டமேட்டிரட்டித் 'தாவிச் சிறகாலடிக்குந் தேசகைப் பிறதாப துரங்கன் வள்ளி தெய்வாயானை மனோகரன் சிவிட்டிக்கும் விறுமனை சிரசு திண்டாடக் குடுமியை நெடை வாங்குங் குமரர் கண்டிரவன் துஷ்ட்டச் சமணரை வெட்டிக் கழுமிசை வைத்த சுப்பிறமண்னிய சுவாமியார் திருவுளப்படிக்கி சுவ்விதிரி மன்மகாமண்டல ஈசுவறன் மேதினி மீசுர கண்டன்

1) ஒருகுடையில் இவ்வுலக முழுதூம் ஆண்டவன்

2) கண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடாதான்

3) எம்மண்டலமும் திறை கொண்டருளிய ராசாதிராசன் ராசபறமேசுபரன் ராசமார்தாண்டன்

4) ராசக்கள் தம்பிரான்

5) கண்டர் கண்டன் கட்டாரிச் சாளுவன்

6) துட்டர் கண்டன் துட்டர்மோகந்தவிழ்த்தோன்

7) துஷ்ட்ட நெட்டூரன் பாஷைக்குத் தப்புவராய கண்டன்

8) மூவராய கண்டன்

9) ஒட்டிய சுரதானன் துலுக்கர் தளவிபாடன்

10) அசுபதி கெசபதி நரபதி நவகோடி நாராயணன்

11) பூறுவ தெஷ்சன பஷ்சிம்ம உத்திர சத்த சமுத்திராதிபதி

12) ராசநாராயணன் ராசகேசரி ராச புயங்கவன் ராசமனோ பயங்கரன் ராச கோலாகலன் ரணமுக சுத்தவீரன்

13) அறிவிக்கு அகத்தியன்
14) பொறுமைக்குத் தர்மன்
15) பகளுக்குக் குமணன்
16) கொடைக்குக் கர்ணன்
17) சத்தியத்துக்கு அரிச்சந்திரன்
18) மறத்துக்கு வன்னியன்
19) அழகுக்கு மன்மதன்
20) வாழுக்கு அபிமன்
21) பரிக்கு நகுலன்
22) கரிக்கு தையன்
23) வில்லுக்குவிசையன்
24) மல்லுக்குவீமன்
25) பதினநெடுப்பொம்மையும் பார் சங்கிலியும் படைத்த ராச தேவேந்திரன்
26) அஷ்ட்டபோக துரந்திரன்
27) சேரன்சோழன்பாண்டியப் பிறசஷ்டாசாரியன்
28) சத்தசாகரமும் ஒருகுடையின் கீல்உலகமும் ஆண்டவன்.

ஸ்ரீ கட்டாரிச் சாமுவரின்

1) உத்துங்கராயர்
2) கட்டரிராயர்
3) விருப்பாட்சிராயர்
4) நரசிங்க ராயர்
5) பிரவிடதேவமகாறாயர்
6) தேவமல்லிகர் சுணராயர்
7) சதாசிவதேவமகாராயர்
8) வீரவசந்தராயர்
9) கிருஷ்ண ராயர்
10) அச்சுத ராயர்
11) ராமராயர்
12) எறிதிம்ம ராயர்
13) திருமலை ராயர்
14) வேங்கிடபதி ராயர்
15) ராமதேவ ராயர்
16) ஆனை கொந்தி வேங்கிடபதிராயர்
17) சீரங்க ராயர் பிரிதிவி ராச்சிய பாரம் பண்ணியருளா நின்ற
18) விக்கிறமாறகப்
19) பிறதாப வீரலட்சுமி விசையலட்சுமி வாசன்

விசுவனாத நாயக்கர் வீரப்பனாயக்கரய்யன் அவர்கள் நாழில்

1) விசைய நகரம் 2) பெருங் கொண்டை 3) சந்திரகிரி

4) திருப்பதி 5) திருக் காளத்தி 6) காஞ்சிபுறம்

7) படைவீடு 8) திருவனனாமலை 9)தேவக்காபுரம்

10) செஞ்சி 11) வளுதிலன்பட்டிச்சாவடி 12) தஞ்சாவூர்

13) திருவாரூர் 14) திருமதூர் 15) திருக்குடந்தை

16) திருவையாருந் 17) சீரங்கம் 18) திருச்சிராபள்ளி

19) திருவானைக் காவல் 20) மதுரைக்

21) கலக்காடு 22) ராமேசுரம் 23) கொங்கு தராபுரம்

24) மலையாளம் 25) கொச்சி 26) ஈழும்

27) யாள்ப்பாணம் பட்டணம்

28) மற்று உண்டாகிய ஐம்பத்தாறு தேசம்

பதிநெட்டு யுகமாவத

1). முதலாகிய யுகம் அனந்தய என்கிர யுகம் அந்த யுகத்தில் பாந் தோண்றிச்சு

2) இரண்டாவது அற்புதனென்னும் யுகத்தில் ஆகாசந் தோன்றிச்சு

3) மூன்றாவது த்வாரசனென்னும் யுகத்தில் சந்திராத்தந் தோன்றினா்

4) னாலாவது த்ராச னென்னும் யுகத்தில் காற்றுற்றோன்றிற்றது

5) ஆஞ்சாவது தண்டச னென்னு யுகத்தில் நெருப்பு தோன்றிற்றது

6) ஆறாவது வின்னச னென்னு யுகத்தி மழை தோன்றிச்சு

7) ஏள வது வினாயதனென்னு யுகத்தில் விளைவு

8) யெட்டாவது அயயுத னென்னு யுகத்தில் வித்தை தோன்றிச்சு

9) ஒன்பதாவது மையுத னென்னு யுகத்தில் வேதம் தோன்றித்து

10) பத்தாவது மணமீரண னென்னு யுகத்தில் தன்மந் தோண்றிச்சு

11) பதினோராவது மணியாரணன் என்னு யுகத்தில் சோதிரிசம் தோன்றித்து

12) பதிமூன்றாவது அலங்கிதனென்னு யுகத்தில் சந்திராதித்தர் பொருந்தினர்

14) பதினாலாதது அரவிந்த னென்னு யுகத்தில் மற்சகூற்ம பொருந்தினர்

15) பதினஞ்சாவது கிறேதா யுகத்தில் தேவரசுரர் பொருதினர்

16) பதினாராவது திறேதா யுகத்தில் இராமர் பொருதினர்

17) பதினெழாதது துவாபுர யுகத்தில் தன்மர் திரியோதனர் பொருதினர்

18) பதிநெட்டாவது கலியுகத்தில் கலியன் பிறந்த பின்னால் வறையும்.

நாலு வேதமும்
ஆறு சாத்திரமும்
பதிநெட்டு புராணமும்
இருபத்தெட்டுத் தேயவியாகமும்
முப்பத்திரண்டு அறமும்
அறவத்துனாலு கலைக்கியானமும்
உள் சமையம்மாறு
பிற சமையமாறு விழங்கப்படா நின்ற

சோம சூரிய வங்கிஷ மானவன்

1) அமுதிராசாச் சூரன் மகன்
2) ஆதினாறாயணன் மகன்
3) விறுமர் விறுமர் மகன்
4) மகன் மாரீசன் மகன்
5) காசிபன் மகன்
6) ஆதித்தன் மகன்
7) சினியன் மகன்
8) நயதிரியன் மகன்
9) போசவாகனன் மகன்
10) துந்தும் ராசன் மகன்
11) திரிச்சங்கு மகன்
12) அறிச்சந்திரன் மகன்
13) லோபிதாவிசனன் மகன்
14) நளன் மகன்
15) இருமூச்சியன் மகன்
16) பொன்னுருவி மகன்
17) பரிதாபி மகன்
18) அமிறதன் மகன்
19) அனந்தராசன் மகன்
20) மத்துக் குரிச்சினன் மகன்
21) சேவின்மகன் தி
22) ருயுரு மகன்
23) ராகு மகன்
24) மீரேசன் மகன்

25) அசன் மகன்
26) திசரதன் மகன்
27) ராமர் மகன்
28) லவனன் மகன்
29) வருது மகன்
30) நீளகோபலன் மகன்
31) நந் தகோபாலன் மகன்
32) வாசுதேவன் மகன்
33) கிருஷ்னறாயர் மகன்
34) மன்மதன் தலமுறை முப்பத்தாறும் புறத்த இன்னாள் வரைகும்

1) தேவரிஷி,
2) விறுமரிஷி ,
3) விஷ்னுரிஷி,
4) தேனியே அஷ்டமாசித்தர்
5) நவனாத சித்தர்,
6) கலியாண சித்தர்
7) இருக்க படா நின்ற போமீசை - மாமுனி,
8) பாதலோக - மாமுனி,
9) துருவாசமுனி,
10) கண்டலமாமுனி,
11) தவமுனி,
12) கோமுனி,
13) வனச மாமுனி,
14) மகாமுனி,
15) கவசமாமுனி,
16) நாதமாமுனி,
17) அகத்திய மாமுனி,
18) பிறலவிச மாமுனி,
19) சகதேவன்
20) சனந்தன்,
21) சனக்
22) குமாரீசர் ,
23) சாத்தி
24) அக்கினி தெரிசினிகள்
25) விசு வாமுத்திர மாமுனி
26) சோமாக்கினி மாமுனி,
27)அரவாச மாமுனி ,
28) பரஞ்சோதி மாமுனி,

கணனாதர்,
விறும கணனாதர்,
வீரகணனாதர்,
சிவயோக கணனாதர்,
ஞானகலியாணர்,
விசுவாமுத்திர மாமுனி,
சோமாக்கினி மாமுனி,
அரவாச மாமுனி,

பரஞ்சோதி மாமுனி,
அஷ்ட்ட மாசுத்தர் கணனாதர்,
அந்திரமா சித்தர் ,
கலியாணர்,
அதிசெயஞானசித்தர் ,

கலியானர் ஆகாசஞானசித்தர்,
கலியாணர் அம்பிறக சித்தர்,
கலியாணர் பிலவேசஞான சித்தர்,
கலியாணர் அனுமீசர்றாடைக் காடாதவமுனி,
மழைமுனி,

வியாக்கிரம பாதமுனி, பதஞ்சலி மாமுனி, இப்படியாக் மொத்த நாற்பத்தென்னாயிறம் ரிஷிகளும்

1) பதினாயிறம் முனிவர்களும்
2) முப்பத்தினாலயிரம் கணனாதர்களும்
3) நாற்பத்தினாலாயிரம் ஆதி அந்த பயிரவர்களுட
4) ஆயிரங் கெருட காந்தர்வர்களும்,
5) முப்பத்தி முக்கோடி தேவர்களும்,
6) ஆகாச வருண நந்திவாகன
7) ஒருகோடி முக்கண்னுள்ளவர்கள்
8) ஒருகோடி பேர் ஆயிரங் கண்
9) ஒரு கோடி பேர் ஈசுபரணுக்கு
10) ஒரு கோடி பிறமானூம்

இப்படியாக் கொடுத்த ரிஷபவாகன வேதசாத்திர புராண ஆகமும் ஆதிவேதனாக விதையில்லாத வித்தாகி ஞான சுரூபமாயி ஞான பரனாய சிறப்பிற்கு ஆசனாயி சிற் சுரூ பனாய நீடுள்ள நீற்குணனாய நிராமயமாயி நிற்மலனாய துரிய ரதீத-னாய சச்சுதானந்த சுருபனாயறி யாதவனுமாயி அதர்க்கும் எட்டாதவனுமாயி இன்த இடத்தைத் காவனுமாயி மூன்று நடு விறுதி வியாதனுமாயி காடிக் குமாரன் கூழி கொட்ட கூகை பிசாசு தொக் கெணதாள மொத்த துற்சனக் கூழை கொட்ட பாரியாய் நீழிய கச்சை கட்டய்யராலே வெடுத்த யேத்தீரன்

நாககிரி வேலாயுத சுவாமி அர்த்தனா ரீசுப சுவாமி திருவிடத்தில்

1) காவலற் 2) பூலுவர் 3) வளவர் 4) வேடர் 5) வேட்டுவர்

2) கங்கையைத் தரித்த கடவுளாற்கு எச்சமிட்டு கண்ணை பிடந்து சாத்தி முத்தி பெற்ற கண்ணப்ப நாயனார் பெரியோர்

3) விதிரி மலை காவலர்

4) செம்பொற்சிலை கொண்டுவந்தவர்

5) வில்வத்தி லேறியே சிவறாத்திரி கண்ட பெரியோர்

6) சித்திரபுத்திர சீமைக்கு உடைய பெரியோர்

7) சேவுகத்துக்கும் உடையபேர்

8) கொங்கு தேசத்துங்குடையோர்

9) கொற்றவர்கள்

10) கற்றவர்கள்

11) கொல்லிகிரிக்குடையவர்கள்

12) கூற்றிய (குறுப்பு) நாடு தனிலே வாசகங் கூறி வைத்துக் கொண்ட பெரியவர்கள்

13) வங்கக் கடலொலி கைவர வாகை மாலையுடயவர்

14) சித்திரமேழிக் கொடிப் படைத்த பெரியோர்

15) வாகிருது (தவறாக) சொன்னவறை வாயைக்கிழித்திடும் வெற்றிவாழரசர் மணவாளர் ஏன்ற பெரியோர்

16) குன்றத்தூர் துருகம் குன்னாடிக் கவுண்டர்

17) மோரூறு பொன்ன வேட்டுவர்

18) கீழ்கரை பூந்துரை நாட்டில் பாண்டிய கோத்திரத்தில் பேரக்ககவுண்டன்

19) வேம்ப கோத்திரத்தில் குமரகவுண்டன், சினாக்கவுண்டர்

20) பரமத்திச் சீமை மூலகோத்திரத்தில் அல்லாளயிளையான் நாயக்கர் திருமலை நாயக்கரவர்கள் மண்னாதகவுண்டர் முத்துக்காழி கவுண்டர்

21) தலையநாடு குன்னாடிகோத்திரத்தில் வெள்ளயக்கவுண்டர்

22) மணல் நாடு பிள்ளைத் தேவணகவுண்டர்

23) நடந்தை குமாரகவுண்டர்

24) வேங்கல நாடு காளத்தி கவுண்டர் நீலியப்ப கவுண்டர்

25) கெழங்குனாடு திருமலை கவுண் டர், குமாரசாமி கவுண்டர் பின்னுங் கொங்கு மண்டலத்திலுள்ள (வேட்டுவர்) வாழரச மணவாழரெலாருங் கூடித் திருச்செங்கோட்டில்

கலியுக சகாற்பிம் 4685 கு மேல் செல்ல நின்ற ஈசுரரு வைய்யாசி மீ யரு உ பூர்ணமும் விசாக நட்செத்திரமும் பெற்ற சுபதினத்தில் காமாட்சித் தம்பிரானுகு மட தற்மம் உண்டு பண்ணிக் குடுத்தது.

மடம்

(கி.பி. 1584-ஆம் ஆண்டு வைகாசி விசாகத் திருவிழா மதியத்தன்று இப்பட்டயம் எழுதப்பட்டுள்ளது. வைகாசி மாதம் 14-ந் தேதி.)

நாககிரியன் மேல்

1) அர்தனாரீசுபர சுவாமியார் சன்னதிக்கு மேற்கு

2) விஷ்னு தீர்த்தக்கு தெற்கு

3) துற்கை அம்மன் சன்னதிக்கு வடக்கு

4) அமர மணியார் மண்டபத்துக்கு கிழக்கு இது நடுவில் மடம் இதில் இருந்துக் கொண்டு அற்தனாரீசுபர சுவாமி சன்னதியில் திருவிழக்கும் திருமாலைக் கட்டிக்கொண்டு வரவும்.

    1) பல்லக்கிள் வருவோர் கம்பு உக (21)

    2) குதிரையேரிய வருபவர் கம்பு ரு (5)

    3) சேறுவைகாறனுக்கு கம்பு ரு (5)

    4) பண்ணைய்குடிக்கி ஏறுக்கு கம்பு வள்ளம் உ (2)

    5) கலியாணத்துக்கு மாப்பிளை வீடு கம்பு க (1)

    6) பென்வீடு கம்பு க (1)

    தொடர் செலவுகளுக்கும் ஏற்பாடு செய்கின்றனர்.

    7) இந்த முறையில் நடத்தி குடுக்குறோமென்று நாங்கள அனைவருங் கூடி எழுதி குடுத்த தற்ம சாசனப் பட்டையம்.

இதன்படி சந்திராதித்தருள்ள வறைக்கும் மலையுள்ள காலத்துக்கும் நிலையுள்ள தர்மமாக கட்டளையிட்டது இந்த தற்மம் தேசம் சீமை நாடு எங்கிருந்தாலும் வாழரசர் மணவாழர் தற்ம பரிபாலனம் பண்ணி நடப்பிச்சி கொண்டவர்களாக இந்ததிராதி போகமும் அனுபவிச்சு சந்திராதித்தருள்ளவறைக்கும் சாச்சியக இருப்பார்கள்

இந்த தற்மத்துக்கு விகாதம் பண்ணின பேர் கெங்கைக் கறையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவார்கள்.

நட்டகல் லிட்ட சூலம் நீடுகள் வெட்டெல்லை வட்டமாவயவங்கள் தோறு மகதேவர் தான தற்மம் இட்டிடை பண்னி மெத்த இடஞ்சல் செய்புவாற்க்கு குட்டனோய் நறகந்தன்னில் தீகுழிப்பது தின்னந்தானே.

செங்கோடர் ரட்கிப்பார் உ.

ஆய்வுக் குறிப்புகள்

அறிமுகம்

திருச்செங்கோடு நகரத்தில் வைகாசி விசாகப் பெருவிழா வின் போது இறை பூசைக்கு ஏற்பாடு செய்த செய்தியைத் தருவது இப்பட்டயம். இந்த ஏற்பாடுகளைச் செய்தவர்களில் குறிப்பிடத் தகுந்த தலைவர்களில் அல்லாள இளையா நாயகர் என்பவர் குறிப் பிடத் தகுந்தவர். காவிரி ஆற்றில் ஜேடர்பாளையத்தில் அணை கட்டி சேலம் மாவட்டத்தில் பாய்கின்ற இராச வாய்க்கால் என்னும் வாய்க்கால் வெட்டி வேளாண்மை வளர்த்தவர் என்ற தகவலை கொங்கு மண்டல சதகம் என்னும் நூலின் மூலம் அறிகின்றோம் அந்தச் சிறப்பு கருதி இப்பட்டயத்தை அவர் பேரால் அழைக்கின் றோம். பொதுவாகப் பட்டயங்களை அவை கிடைத்த ஊரை வைப்பது வழக்கம். ஏற்கனவே இரண்டு பட்டயங்களுக்கு திருச்செங்கோட்டுப் பட்டயங்கள் என்ற பெயர் உள்ளதால், பட்டயத்தில் உள்ள செய் தியை வைத்துத் தலைப்பை அளிக்கின்றோம்.

முதல் பதிப்பு

இப்பட்டயத்தை Dr. A. சுப்ரமணியம் முதலில் சென்னையில் நடைபெற்ற இந்தியக் கல்வெட்டியற் கழகத்தின் கருத்தரங்கில் படித்த Journal of Tamil Studies 5 18 Triuchengodu Plates of Srirangaraya - A study - என்ற தலைப்பில் வெளியாகியது. அவரது கருத்துகளை அறிய அவரது கட்டுரையையே படித்து அறிந்து கொள்க.

மறுபதிப்பு

பட்டயத்தினை மீண்டும் வாங்கிவந்து, முழுக்கப் படித்து தற்போது வெளியிடப்படுகின்றது. ஆய்வதில் உதவியவர் பெ. அர்த்தநாரீசுவரன் ஆவார். பட்டயத்தில் எகர, ஒகர உயிர்மெய்கள் குறில் கள் போலத் தோன்றும். ஆனால் அவை நெடில் வடிவங்களேயாகும். அதனால் இடம் பொருளறிந்து நெடில் இடங்களை நெடிலாகவும் பதிப்பித்துள்ளோம் அதனால் படிப்போர் நேரடியாகப் பொருள் அறியாலம். வரிக்கு வரி தனித்தனியாக வெளியிடும் மரபை மாற்றி பொருள் வாரியாகப் பிரித்து வெளியிட்டுள்ளோம். வரி எண்களை நடுவிலேயே சேர்த்துள்லோம். இது ஆராய்ச்சியாளர்களின் மறு பரிசீலனைக்காக. காலம்

கி.பி. 1584-ஆம் ஆண்டு வைகாசி விசாகத் திருவிழா மதி யத்தன்று இப்பட்டயம் எழுதப்பட்டுள்ளது. வைகாசி மாதம் 14-ந் தேதி.

பாடல் தொடக்கம்

பாட்டயம் ஒரு பாடலோடு தொடங்குவதைக் காணலாம். இதே பாடல் வேறு இரு பட்டயங்களிலும் காணப்படுகிறது. எனவே இக்கால கட்டத்தில் இவ்வாறு தொடங்குவது மரபு எனக் கருதலாம்.

கோயில் மெய்கீர்த்தி

"அருள் கிருபையால் ஆதி நந்திகேசுபரன் அனுக்கிரகித்து திரு வாய் மலர்ந்தருளின படி" என்று தொடங்குவதிலிருந்து இரண்டாம் பக்கம் 90-ஆவது வரியில் "சுப்பிரமணிய சாமியார் திருவுளப்படிக்கி" என்பது வரை திருச்செங்கோட்டு நகரத்தில் உள்ள வேலவரின் மெய்க்கீர்த்தி என்று கருதலாம். மூன்று பட்டயங்களில் இதுபோல உள்ளது.

உலகம் தோன்றிய நாளிலிருந்து, பார்வதி தேவியார், காஞ்சி யில் கம்பை யாற்றின் கரையில் தவமிருந்து பரமேசுவரனை அடைந்ததும், முருகப் பெருமானின் பெருமைகளையும் மரபு வழிப் படி கூறும் செய்திகளாகும். அக்கால மரபு இது என எடுத்துக் கொள்ள வேண்டும் மன்னர் மெய்கீர்த்தி

30-ஆவது வரியிலிருந்து 50-ஆவது வரிரைவ விஜயநகர மன்னர் கள் பற்றியும் அவர்களின் உரிமைபெற்று ஆட்சிபுரிந்த சீரங்கராயர் வரை ஆன தலைவர் களைப்பற்றிய செய்திகள் உள்ளன. சோழர்கள் காலத்தில் தொடங்கிய மெய்க்கீர்த்தி மரபு இதிலுள்ள பல

செய்திகள் அரசியல் வரலாறு எழுத உதவுமென்பதில் ஐயமில்லை. அரசு வம்சம் கட்டாரிச் சாளுவர் ஆகும். அவரது உரிமை, பெற்று ஆட்சிபுரிந்த ராயர்கள் பெயர்ப்பட்டியல் உள்ளது.

ஆட்சிப்பரப்பு

50-ஆவது வரி முதல் 60 வரி வரை விஜயநகர மன்னர்களின் ஆட்சிப்பரப்பு கூறப்படுகிறது. கொங்கு நாட்டின் தாராபுரம் குறிப் படுகிறது. இக்காலத்தில் தலைநகரம் தாராபுரம் என்ற உண்மை புலனாகிறது.

புராணச் செய்திகள்

60வரி முதல் 115வது வரி வரை மீண்டும் புராணச்செய்திகள் "அர்த்த நாரிசுபார், வேலாயுதசாமி திருவுளத்தில்" என்ற தொடருக்கு முன்னுரையாக இவை அமையும்,

அத்ததனையும் பழைய மரபுகள். இறைமை பற்றிய பல கற்பனைகள். மூத்த தலைமுறையினர் பெரும்பாலும் கேள்விப் பட்டிருப்பர். இளைய தலைமுறையினர்க்கு அந்த வாய்ப்பு பிடைத்திருக்காது. பொருள் விளங்க உரை செய்வதாயின் பெரிய நூல் ஆகிவிடும்.

வேட்டுவர் வரலாறு பட்டயத்தின் செய்தி இனிமேல்தான் தொடங்குகின்றது. கொங்கு நாட்டில் அரசர் குடி வேட்டுவர் பற்றிய முன்னுரை கூறப்படுகின்றது. காவலர் , பூலுவர் , வளவர் , வேடர், வேட்டுவர் என்று குடிப்பெயர் கூறப்படுகிறது. "கங்கை யைத் தரித்த கடவுளார்க்கு, எச்சமிட்டு, கண்ணைப் பிடந்து சாத்தி, முத்தி பெற்ற கண்ணப்பர் என்று காளத்தியில் முத்தி பெற்ற கண்ணப்ப நாயனார் வழித் தோன்றலாகக் கூறப்படுகின்றனர். மற்றும் விதிரிமலைக் காவலர், செம்பொற்சிலை கொண்டுவந்தவர் வில்வத்திலேறிய சிவராத்திர கண்டபெரியோர் சித்திரபுத்திரர், சீமைக்குடைய பெரியோர், சேவுகத்துக்கும் உடையபேர், கொங்கு தேசத்துக்குடையயோர் , கொற்றவர்கள், சமயத் தலைவர்கள் கற்றவர்கள் கொல்லிமலைக் குடையவர்கள், கூற்றியநாடு தனிலே வாசகங் கூறி வைத்துக் கொண்ட பெரியோர் என்ற பல சிறப்புகள் கூறப்படுகின்றன, மேலும் வங்கக் கடலொலி கைவர வாகைமாலை உடையோர் சித்ரமேழிக் கொடி படைத்தோர் எனப்படுவது அரிய செய்தியாகும். கலப்பைக் கொடி விவசாய மக்களைக் குறிக்கும். இவர்கள் வேளாண்மை பெருக்கி கொங்கு நாட்டில்

தலைமை இடமாகவும் அரசர்களாகவும் இருந்ததால் இவர்களை மேழிக் கொடிக்கு உரியவர்கள் என்பதை உறுதியாக பதிவு செய்து உள்ளார்கள் அவையில் கூடியிருந்தோர் பெயர்கள் வருமாறு:

1. குன்றத்தூர் துர்கம், குன்னாடிக் கவுண்டர்
2. மோரூர் பொன்னவேட்டுவர் 3. கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் பாண்டிய கோத்திரம் பேரக் கவுண்டர்
4. வேம்ப கோத்திரம் குமர கவுண்டர், சின்னாக் கவுண்டர்
5. பரமத்திச் சீமை மூள கோத்திரம் அல்லாழி இளையா நாயக்கர் திருமலை நாயக்கர்நாத கவுண்டர்
6. தலைய நாடு குன்னாடி கோத்திரம் முத்துக் காளிக் கவுண்டர் வெள்ளய கவுண்டர்
7. மணல் நாடு பிள்ளைத் கோதிரம் தேவணன் கவுண்டர்
8. நடந்தை குமார கவுண்டர்
9. வேங்கல நாடு காளத்தி கவுண்டர், நீலியப்ப கவுண்டர்
10. கிழங்கு நாடு திருமலை கவுண்டர், குமாரசாமி கவுண்டர் மற்றும் பலர்.

திருச்சங்கோடு குன்றத்தூர் துர்க்கத்தைச் சேர்ந்தது. மோருர், நடந்தை என்பன ஊர்ப் பெயர்கள். பரமத்திச் சீமை அரைய நாட்டைச் சேர்ந்தது. தலைய நாடு, மணல்நாடு, வேங்கலநாடு,கிழங்கு நாடு ஆகிய கொங்கு 24 நாடுகளில் சில.

அல்லாள இளையான்

ஊராளும் பொறுப்பு அல்லாள இளையானுக்கு இருந்தது. அதனால் நாயக்கர் பட்டம் உண்டு. அவன் அரையநாட்டு வடகரை ஆற்றூரில் இருந்தவன். திருச்செங்கோட்டில் ஸ்ரீ நாகேசுவரர் அர்த்த மண்டபம், மகாமண்டபப் முதலியவை கட்டியவன். கொங்கு மண்டல சதகத்தில் இவனைப் பற்றிய குறிப்பு வருகின்றது

வடமுகம் நின்று வரும் காவிரியின் வளத்தை எ ன்றுந் திடமுற கொங்கினும் பாசனமாகச் செல்ல பிரித்த அடல் கொள் அல்லாளன்

இளையான் பெருக்கம் அமைந்து வளர்தவடகரையாற்றூர் திகழ்வதும் கொங்கு மண்டலமே

அவன் எடுத்த வாய்க்கால் இராசவால்க்கால் ஆகும். அது சேடர் பாளையம் அணையின் இடது கரையில் பிரிகின்றது. கொங்கு நாட்டில் காவிரியிலிருந்து பிரியும் முதல் வாய்க்கால் இதுவேயகும். இதற்கு முன் காவிரியால் கொங்கு வளம்பெறவில்லை. இதனை மாற்றிய புகழ் அல்லாளனை வந்து அடைகிறது.

காலம்

சக ஆண்டு 4685 கி பி 1584 ஈசுவர ஆண்டு வைகாசி மாதம் பவுர்ணமி, விசாக நட்சத்திரம் 14ந் தேதி

கொடை

காமட்சித் தம்பிரான் என்பவருக்கு ஒரு மடம் ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். மடத்தின் எல்லையாவன. 1)அர்த்தநாரீசுபரர் கோயிலுக்கு மேற்கு 2)விஷ்ணு தீர்த்தத்திற்கு தெற்கு,

3) துற்கை அம்மன் கோயிலுக்கு வடக்கு

4) அமரணியர் மண்டபத்துக்குக் கிழக்கு திருவிளக்கு இட்டு திருமாலை கட்டி வருதல் கமாட்சித் தம் பிரானின் பணியாகும்.

தொடர் செலவுகளுக்கும் ஏற்பாடு செய்கின்றனர்.

பல்லக்கில் வருவோர்ன 24 வள்ளம் கம்பு

குதிரையில் வருவோர்ன 5 வள்ளம் கம்பு

சேறுவைகாரர்ன 5 வள்ளம் கம்பு

பண்னை குடிக்கு ஏருக்கு 2 வள்ளம் கம்பு

கலியாணத்தில் மாப்பிள்ளை வீடுநா 1 வள்ளம் கம்பு

பெண்வீடுன 1 வள்ளம் கம்பு

என்றபடி வைத்துக் கொடுக்க வேண்டும். சந்திரன், சூரியன் உள்ளவரை இந்த தற்மம் நடக்கப் பணிக்கின்றனர்.

நன்மை தீமை

இதை விடாமல் செய்வோர் இந்திராதி போகம் அனுபவிக்க வாழ்த்துப் பெறுகின்றனர் இதை விலக்கு வோர் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்தில் போக வசவு பெறுகின்றனர். மற்றும் குட்டநோயால் அவதியுறுவார் எனவும் விதிக்கப்படுகின்றன. வசவு பாட்டு வடிவில் முடிகின்றது.

செங்கோடர் காப்பார் எனப்பட்டயம் நிறைவுறுகின்றது.

அளவுகள்

பட்டயம் செப்பால் ஆனது.23.5 சென்டிமீட்டர் நீளம், 5.5 சென்டி மீட்டர் அகலம் கொண்டது, ஒன்பது ஏடுகள் உள்ளன, நடுவில் ஒரு துளை உள்ளது. ஏட்டின் இருபக்கமும் எழுதப்பட் டுள்ளது. ஒரு முகப்பு ஏடும் உள்ளது. அதன் முன் பக்கத்தில் ஒரு விநாயகர், நந்தி, அர்த்தநாரீசுபரர், லிங்கம், பூச் செடிகள் முதலியன செதுக்கப்பட்டுள்ளன. முகப் பேட்டைச் சேர்த்து மொத்தம் 10 ஏடு கள் உள்ளள.

நடுகற்கள்

கொங்கு நாட்டில் பெரியார் மாவட்டத்தில் வேட்டுவர் குடிப் பெருமக்களுக்கு பல நடுகற்கள் உள்ளன. 1)எழுநூற்றி மங்கலத்தில் அழகன் காளி என்பவர் இராசேந்திர சோழன் காலத்தில் நடை பெற்ற பூசலில் காலமானார். 2) சிவகிரியில் இரண்டு நடுகற்கள் உள்ளன. ஒன்றில் "கிழங்கன்" என்றும் மற்றதில் "கிழங்க வேட்டுவரில் கிழங்கன் பெரிய கிழங்கன்" என்றும் உள்ளது. 3) பழமங்கலம் என்ற ஊரில் இட்டேரியில் உள்ள நடுகல் பாடல் வடிவில் உள்ளது. "வாய்ந்த புகழ் மங்கலத்து" எனத் தொடங்கும் வெண்பா உள்ளது. "சொக்கனேந்தல்" என்பானுக்கு : எடுக்கப்பட்ட கல். கொங்குநாட்டு வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த இடம் இக்குடியினருக்கு உண்டு. 'பூர்வகுடி' என்றும் அழைக்கப்படுவர்.

ஆய்வு நூல்

1. ஆய்வு களஞ்சியம் திருச்செங்கோடு-2 செப்பு பட்டயங்கள் - தேனோலை page 12
2. வேட்டுவர் வேந்தர் மரபினர், Dr.Valaiparameswaran. D -page 76

வேட்டுவ மாமன்னன் அல்லாள இளைய நாயக்கர்

பொறியாளர்; **கோபிநாத்**
சமூக ஆர்வலர் , ஈரோடு
செல் ; 09688661799

முன்னுரை :

பறந்து விரிந்த தமிழகத்தில் கொங்கு நாட்டிற்கு என்று தனிச்சிறப்பு உண்டு காரணம் கொங்கு மண்ணில் இயற்கை, மற்றும் கலாச்சாரத்தை காத்து ஆண்டு வந்த வேட்டுவகுல மாமன்னன் அல்லால இளைய நாயக்கரை பற்றி பார்ப்போமாக:

அரையனாடு:

கொங்கு 24 நாடுகளில் ஒன்றான கீழ்க்கரைஅரைய நாட்டினை ஆட்சி செய்த வேட்டுவகுறுநில மன்னன் மூல வேட்டுவகுளத்தில் பிறந்து பரமத்தியில் கோட்டை கட்டி சீரும் சிறப்புமாக ஆட்சி புரிந்தவர் வேடுவலத் தலைவர் அல்லாத இளைய நாயக்கர் ஆவார் மேல்கரை அரைய நாடான கொடுமுடி அருள்மிகு மகேஸ்வரர் கோயிலில் பட்டம் சூட்டிக்கொண்டு சாதி சமூக பாகுபாடுகள் இல்லாமல் சிறப்பாக ஆட்சி புரிந்தார் வீரத்திலும் விவேகத்திலும் இவருக்கு இணை எவருமில்லை என்றே சொல்லலாம்

திருச்செங்கோடு திருப்பணிமாலை, கபிலர்மலை கோவை, கொங்கு மண்டலசதகம், ராம பையன் அம்மானை போன்ற இலக்கியங் களிலும் பல்வேறு கல்வெட்டுக்கள் மற்றும் பல செப்பேடுகள் போன்றவை அவரின் வீர வரலாறுகளைஇன்றளவும் பறைசாற்றி வருகிறது நாமக்கல்லில் இருந்து கரூர் செல்லும் சாலையில் அமைந்துள்ளது இவரின் தலைநகரானபரமத்தி. இங்கு இவர் அமைத்த மண் கோட்டை மாமன்னரின்சாட்சிக்கு இன்றும் உள்ளது.

அம்பு சேர்வை:

விஜயதசமி அன்று அரச குலத்தவர் ஆயுதங்களைத் தூய்மைப் படுத்தி மாலையிட்டு வணங்குவர். படைக்கருவிக்கு மாலையிட்டு பூஜிப்பது இலக்கியத்திலும் கல்வெட்டுக்களிலும் இடம் பெற்றுள்ளன புரட்டாசி மாதம் நவராத்திரி ஒன்பது நாட்கள் முடிந்து அதாவது ஆயுத பூச்சிக்கு மறுநாள் விஜயதசமி தினத்தன்று மன்னர் மற்றும் குறுநில மன்னர் பரம்பரையினர்வேட்டைக்குச் செல்வது அம்பு சேர்வை மற்றும் பதிவேட்டை ஆகிய பெயர்களில் வழக்கத்தில் உள்ள நிகழ்ச்சியாகும்.

கபிலர் மலையில் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் ஆயுத பூஜைக்கு மறுநாள் அதாவது விஜயதசமி தினத்தன்று இளைய நாயகரின் வாரிசுகளுக்கு அன்பு சேர்வை நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கத்தில் இருந்து வருகிறது. விஜயதர்ஷினிதினத்தன்று இளைய நாயக்கர் வாரிசு இருக்கும் பட்டக்காரர் அவர்களை இருக்கூரிலிருந்து கபிலர் மலை வரை பல்லக்கில் வைத்து அழைத்து வருவார்கள் இவரை கோயில் சார்பாக பூரண கும்பத்துடன் வரவேற்று மாலை மரியாதையுடன் கோவிலுக்கு அழைத்துச் செல்வார்கள்

இருக்கும் பட்டக்காரர் அவர்களது முன்னிலையில் கபிலர் நிலை மேல் உள்ள மூலவர் ஸ்ரீ முருகப்பெருமானுக்கு அபிஷேகம், அலங்காரம் செய்து ஆராதனைகள் நடைபெறும் தரிசனம் முடிந்த பின்னர் உற்சவரையும்இருகூர்பட்டக்காரரையும் மலை மேல் இருந்து கீழே அழைத்து வருவார்கள் உச்சவரை குதிரை வாகனத்தில் வைத்து கபிலர்மலைக்குவடக்கேகபிலகுறிச்சி அழைத்துச் செல்வார்கள் அங்கே உள்ள மைதானத்தில்புண்ணியாசனம் செய்து வாழை மரத்திற்கு துண்டு, வேட்டி கட்டி அம்பு சேர்வை நிகழ்ச்சி நடைபெறும் . இருக்கு ஒரு பட்டக்காரர் செய்வார்கள் பின்னரும் பூஜை முடிந்து வரும் பட்டக்காரர் களை கோயில் ஸ்தானிகர்குருக்களின்இல்லத்திற்கு அழைத்துச் செல்வார்கள் மறுநாள் காலை குருக்களின்இல்லத்தில் இருந்து மீண்டும் பல்லக்கில் வைத்து இருக்கூரில் உள்ள அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்று விடுவார்கள் இந்நிகழ்ச்சி இன்றும் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது.

ராசா:

சைவமும் வைணவம் தழைத்தோங்க பல கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்துள்ளார் கொங்கு ஏழு சிவத்தலங்களில் ஒன்றான

திருச்செங்கோடு மலை கோவில் பல திருப்பணிகளைசெய்துள்ளார். கபிலர்மலைதிருக்கோவிலை அமைத்தார் குடிமக்களால் ராசா என்று அன்புடன் அழைக்கப்பட்டார் அதன் விளைவு அவர் வெட்டிய வாய்க்கால் இன்றளவும்இராச வாய்க்கால் என்றும் நன்செய்யடையாரில்வரக்கூடிய கோயில் ராசா கோயில் என்றும் அழைக்கப்படுகிறது.

போர்படை:

மதுரையை ஆட்சி செய்த திருமலை நாயக்கரின் நண்பராக அல்லாள இளைய .நாயகர் விளங்கினார். திருமலை நாயக்கரால் (கிபி. 1623-1659) இளைய நாயகர் என்ற பட்டம் வழங்கப்பட்டது. மேலும் திருமலை நாயக்கர் தம்பி என்று அன்போடு அழைக்கப்பட்டவர் அல்ல நாயகரே. விஜயநகர மன்னர்களின் வெற்றிக்கு பெரும் உதவியாக இருந்தது இவரின் தலைமையிலான படைப்பிரிவு என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றி மாலை:

மைசூர் உடையார்களின் படைத்தலைவன் நஞ்சராயன் என்பவர் கிபி 1 643 இல்தாரண வருடம் ஐப்பசி மாதம் 25ஆம் நாள் தன் வேல் படையுடன் வந்து திருச்செங்கோடு மலை கோவிலில் உள்ள அருள்மிகு ஸ்ரீ அர்த்த நாரீஸ்வரருக்கு சொந்தமான பொன்னையும் பொருளையும் கொள்ளையடித்து விட்டு மைசூர் நோக்கி சென்று கொண்டிருக்கிறார் என்ற செய்தியை கேட்ட இளைஞர் தன் படையுடன் புறப்பட்டு நெஞ்சராஜனை தடுத்து நிறுத்தி கொள்ளையடித்துச் சென்ற பொருட்களை மீட்டு திருச்செங்கோடு மலைக்கு வெற்றி வீரனாக திரும்பினான் திருச்செங்கோடு மலையில் கொள்ளை போனதால் ஏற்பட்ட களங்கத்தை துடைத்தெறிய இம்மலை மீது தூய்மையாக்குவதற்கு உரிய சடங்கு வேலை செய்து தான் பெற்ற வெற்றியைச் சிறப்பாக கொண்டாடினான்.

கிபி 1643 ம் ஆண்டு இளைய நாயக்கர்திருச்செங்கோடு மலை மேல் உள்ள நாகேஸ்வரன் கோயில் கட்டினான் என்பதை சேலம் களஞ்சியம் (பக்கம் 93) கூறுகிறது.

ராசா வாய்க்கால்:

நீரின்றிஅமையாது உலகு என்ற வள்ளுவரின்வாக்கிற்கு ஏற்ப தனது ஆட்சி பரப்பில் காவிரி நதி கரைபுரண்டு ஓடினாலும் மேட்டுப்

பகுதியில் இருக்கும் தன் வேளாண் குடி மக்களின் நிலங்களில் விவசாயம் செய்ய வழியில்லாமல்போனதை கண்டு வருந்தியவர் உடனடியாக எவருக்கும் அடங்காத காவிரியை மரங்கள் கற்கள் மணல் மூட்டையில் போன்றவற்றின் உதவியுடன் காவேரியை தடுத்து அதனை பிரித்து வாய்க்கால் ஒன்றை கிபி 1623 ல் வெட்டி விவசாயத்தை செழிக்க வைத்தார்

இக்கால்வாய் ஜேடர்பாளையத்தில் தொடங்கி வேலூர் வழியாக நஞ்சைஇடையார் வரை ஓடி கூடுதுறைஎனும் இடத்தில் திருமணம் முத்தாரில் கலக்கும் விதமாக காவேரி ஆற்றில் இருந்து 36 கிலோ மீட்டர்தூரத்திற்குஇந்த வாய்க்கால் செல்கிறது. 24 அடி அகலம் கொண்ட காவிரி ஆற்றின் வடகரை ஓரமாக செல்லும் வாய்க்காலின் மூலம் 6 ஆயிரம் ஏக்கர் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இந்த வாய்க்காலின் தடுப்பணை நீரை ஒழுங்குபடுத்தும் தடுப்பணையாக 1952 ல் தமிழக அரசால் சிறந்த முறையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

ராசவாய்க்காலின் சிறப்புக்கள்:

1. மேட்டூரில் இருந்து கல்லணை வரை செல்லும் காவேரி ஆற்றில் முதல் வாய்க்கால் என்ற பெருமை.
2. மேட்டூரிலிருந்து கல்லணை வரையிலும் 17 பாசன வசதி பெறும் வாய்க்கால்கள் அமையப் பெற்றிருப்பினும் தடுப்பணை உள்ள வாய்க்கால் இது மட்டுமே.
3. தமிழ்நாட்டிற்குள் இருந்து செல்லும் காவிரி ஆற்றில் இருந்து 17ஆம் நூற்றாண்டில்
3. தமிழ்நாட்டுக்குள் இருந்து செல்லும் காவேரி ஆற்றில் இருந்து 17 ஆம் நூற்றாண்டில் முதன்முதலாக வெட்டப்பெற்ற வாய்க்கால் என்ற பெருமை.
4. காவேரி ஆற்றில் இருந்து 365 நாட்களும் பாசனவசதிக்கு பயன்படும்
5. நேரடியாக 600 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி வரும் வாய்க்கால்.
6. மூன்று பாகங்களும் பயிர் செய்யப்படும் வாய்க்கால் என்ற பெருமை.

7. நெல் கரும்பு வாழை மஞ்சள் வெற்றிலை, தென்னை கோரைப்புல் போன்ற பணப்பயிர்கள் பயிரிட உதவும் வாய்க்கால் என்ற பெருமையுடைய வாய்க்கால்.

ஜோதி:

8. வாழ்வீச்சு இவரை வெற்றிகொள்ள எவரும் இல்லை என்பதால் வானம் சார் மணவாளர் என்ற பெயரும் இவருக்கு உண்டு இ டிவிவீசுவதில்வல்லவரானதென் நிலை பட்ட காரணத்தால் தாக்குதலுக்குஉள்ளான இளைஞர் நஞ்சைஇடையாற்றில் தான் அமைத்து வழிபட்ட ராசா கோயிலிலேஇறைவனுடன்ஜோதியை கலந்து விட்டார் இன்றளவும் அவருக்கு தனி சன்னதி அமைத்து பூஜைகள் நடைபெற்று வருகிறது.

9. தமிழக அரசு சிறப்பு:

இவரின் ஆட்சித் திறமையைப் பாராட்டும் பொருட்டு தமிழக அரசால் ஜேடர்பாளையம் அணைக் கட்டுப் பகுதியில் மணிமேகண்டவத்துடன் கூடிய வெண்கலை சிலை அமைத்து 28.1.2013 அன்று திறப்பு விழா நடத்தப்பட்டது

2025 இவர் பிறந்த நாளான தை ஒன்னு அன்று நாமக்கல் மாவட்டத்தில் அரசு விழாவாக கொண்டாட முடிவு செய்யப்பட்டு அமைச்சர் பெருமக்களும் ஆட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

முடிவுரை:

இவர் குறுநிலமன்னராக இருந்த போதும் இவரது வீரம் கொடை இயற்கையைக் காத்தல் போன்றவை எல்லாம் ஒரு பேரரசுக்கு நிகராக வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

வேட்டுவர் ஆளுமையும் கலைப் பண்பாடும்

அனந்தபுரம் கோ.கிருஷ்ணாமூர்த்தி
9442135516

முன்னுரை

வான்தோன்றி, சூரியன் தோன்றி, நிலம் தோன்றியது. நிலம் தோன்றி மலையும் காடும் தோன்றின. நிலத்தில் நீரும் அடங்கியது. நிலத்தில் இருந்த மலையில் ஓரறிவில் தொடங்கி ஐந்தறிவு குரங்கு தோன்றியது பின்னர் குரங்கின் அறிவு வளர்ச்சியால் ஆறிவு மாந்தன் தோன்றினான். மலையில் தோன்றிய மாந்தர் கூட்டம் குழுவாக விலங்குகளோடு விலங்குகளாய் காடுகளுக்கு பரவினர். மாந்தன் விலங்குகளை உண்டான். வேட்டையாடியும் உண்டான் வேட்டை யாடிய மாந்தன் படிப்படியாக வேளாண்மையை அறிந்து கொண்டான். முதல் வேட்டையின் மூலம் மாந்தனின் வளர்ச்சி வேட்டை மாந்தனை உருவாக்கியது முதல்வேட்டை மாந்தனின் வளர்ச்சியே வேட்டுவன் என்பவன் ஆவான்.

வேட்டுவ மாந்தனே ஆளுமைக்கான முதல் மாந்தன் இவனே கலைக்கான முதல் மாந்தன், கலை முதல் பண்பாட்டு வளர்ச்சிக்கு தொடக்க மாந்தன்னான வேட்டைக்கார மாந்தன் வேட்டுவனே பெரும் பங்காற்றினான். இவ்வேட்டுவர் ஆளுமை குறித்து காண்போம்.

வேட்டைக் காலவேட்டுவன்

ஐந்து அறிவு விலங்கான குரங்கு இனத்தின்பரிணாம வளர்ச்சியில் ஆறாம் அறிவுடைய நிமிர்ந்த விலங்கு மாந்தனாக ஆனார். அவனே வேட்டைக்கான சமூகத்தில் தொடக்க மாந்தன். வேட்டை சமூகத்தின் வளர்ச்சியில் வேட்டுவத் தொழில் வேட்டையாடும் ஆளுமை வேட்டை கருவிகள் உருவாக்கம் ஆகியவை வளர்ந்தன. வேட்டைக்காலச் சமூக மாந்தர் குழுவே - வேட்டுவ சமூக குழு ஆகும். வேட்டுவர்இம்மரபுக்கு காரணம் வேட்டுவ சமூக பண்பாடுகள் தான். தொன்மைக் குடிஇனத்தவர்

களில் பெரும் சிறப்பு தன்மையையும் சிறப்பு பண்புகளையும் உடைய இனம் வேட்டுவர் இனத்தவர்களே.

வேட்டை சமூக மக்கள் வாழ்க்கை முறை வேட்டையாடுதளில் தொடங்கி இருக்கிறது. வேட்டைக் கால வேட்டுவர் இன குழுக்களில் இருந்தே மனித இனம் படிப்படியாக வளர்ந்திருக்கிறது. வேட்டுவர் காடு மலைகளில் குகை தளங்களில் வாழ்ந்துள்ளனர். குகை ஓவியங்களை வரைந்தவர்கள் வேட்டுவ இனத்தவரே அவர்கள் காடுகளின் வளர்ச்சியை கண்டு தெளிந்து உழவு செய்யத் தொடங்கினர். நீர் நிலைகள் சார்ந்த கரைப்பகுதியில் குடியமைத்து சிறு சிறுகுடிகளில் காட்டு விலங்குகளையும் இணைத்து வளர்த்தனர் வாழ்ந்தனர்.

வேட்டுவக்குடியின் வாழ்க்கை தொடக்கதில் வேட்டுவர் குழு தலைமையும் பின்னர் வேட்டுவ அரசும் தோன்றின. காடுகளை அழித்து வேளாண்மையை தொடங்கி நிலையான குடி முறை வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். வேளாண்மையில் ஈடுபட்ட வேட்டுவர் குறவர் எனப்பட்டனர்.

வேட்டுவரின் வேட்டை ஆளுமை வேளாண்மைக்கு மாறிய பொழுது குறவர்குடியானதுகாட்டை திருத்தி புதிய குடிப்பகுதியை அமைத்து வேளாண்மையை மேற்கொண்ட குடி வேட்டுவ வேளாளர் எனப்பட்டனர்.

தொழிலின் அமைந்த பெயர் வேட்டுவர்,
நிலப்பெயர், குடிப்பெயர், குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்பு சொல் பெயரை
பல்லோர் குறித்த முறைநிலைப்பெயரே
பல்லோர் குறித்த சினை நிலைப்பெயரே
பல்லோர் குறித்த திணை நிலை பெயரே
கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரை
இன்றியவர் என்னும் எண்ணியற்பெயரே
டன்றி அனைத்தும் அவற்றில் பினவே

என தொல்காப்பியர் 162 கூறுவதற்கு வேட்டுவரின் ஆளுமையாள் பெயர்கள் தோன்றின என தெரிகிறது வேட்டுவர் குழு வழி பெயர்களும் அவர்களின் இடப்பெயர்வு வளர்ச்சிதான் பலகுடி பெயர்களும், பல இனப்பெயர்களும், குலப்பெயர்களும் தோன்றுவதற்கு காரணமாக இருந்தது.

இப்பொழுதும் இந்திய பழங்குடிகள் என்னும் தொல்குடிகள் வேட்டுவர் குடியிலிருந்து வளர்ந்து பெருகியது. அக்குடிகள் தங்களை வேட்டுவஆளுமைக்குழப்பாகஆளுமையைஉருவாக்கிக் கொண்டு வாளந்தவையே.

தமிழ்நாட்டில் அரசகுடியினருக்கு தாய் குடி வேட்டுவர்குடியே ஆகும். வேட்டுவர்களின் வரலாறு சங்ககாலத்திற்கு முன்பிருந்தே தொடர்ச்சியான வரலாற்றை இன்று வரையிலும் கொண்டிருக்கிறது வேட்டுவர்ஆளுமையே தமிழ் நாட்டில் அரசு தோற்றத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

கொடும் திமிர் பரதவர் வேட்டம் வாய்த்து -அகம் 70

வேட்டை கன்வர்விசி உறு கடும் கண் - அகம் 63

பெருங்கடல் வேட்டத்துசிறுகுடி பரதவர் - அகம் 140

பெருமலை சிலம்பன் வேடம் போகிய
செருமடை கம்பன் வல்வில்கானவன் - அகம் 282

என அகநானூறு கூறும் வேட்டுவரின் தொழில் ஆளுமையை நன்கு உணற முடிகிறது இவை இன்னும் உள்ளன.

ஆயர் வேட்டுவர் ஆடு உத் திணை பெயர் ஆவயின்வரு உம் கிழவரும் உளறே என்னும் தொல் 21 வதுவரிகளை நோக்கினால் வேட்டுவர்தொல் குடி என்பதையும் அவரே ஆளுமைக்கு வித்திட்ட வித்தகர் என்பதையும் அறிவோம்.

சங்க நூல்களில், காப்பிய நூல்களிலும் குடி பெயராக வேட்டுவர், வேட்டுவ, வேட்ட என்று கூறியுள்ளன முல்லை 26 நற்றிணை 92 276 புறம் 324 333 336 காண்க)

குறிஞ்சி நிலத்தில் தொடங்கிய வேட்டுவரின் ஆளுமை பிற திணைகளுக்கும் பரவியது அதாவது வேட்டுவர் குறிஞ்சியை மட்டும் ஆளவில்லை முல்லை, மருதம், நெய்தல் ஆகிய திணை நிலத்தையும் ஆட்சி செய்துள்ளனர்.

தமிழ்நாட்டு இலக்கியங்கள் கல்வெட்டுகளை கொண்டு தமிழ்நாட்டினை வேட்டுவர்கள் ஆண்டனர் என்பதை

உறுதிசெய்ய முடிகிறது. தொல்காப்பியர் கூட ஆவயின் என்பது வேட்டுவரின் திணை வழியைத் தெரிவிப்பதாகவே உள்ளது. கீழ கிழவகிழவன் கிழவர் என்று சங்க இலக்கியங்களில் புறத்திணை நற்றிணை புறநானூறு ஐங்குறுநூறு பெரும் பாணாற்றுப்படை போன்ற நூல்களில் பரவலாக கூறப்பட்டுள்ளது. அவை வேட்டுவரின் கிளைதொழில் ஆளு மையை இங்கே உணர்த்துகிறது வேட்டுவர் ஆளுமையை எயினர் மழவர் வில்லர் என்று சங்க நூல்களின் மூலம் அறிகிறோம்.

வேட்டுவர் ஆளுமையை சங்க நூல்கள் கூறும் வல்வில் ஓரி கண்டிரங் கோப்பெருநல்லிபண்ணி (கடியநெடு வேட்டுவன்) இன்னும் கடையேழு வள்ளல்கள் மலைகளோடு தொடர்புடைய அரசர் களாகவே இருந்துள்ளனர். வேட்டுவர் சிற்ற ரசுகளை அழித்து சேர சோழ பாண்டிய பேரரசுகள் வளர்ந்துள்ளன புறம் 150 152 205 புறம் 202 374 அகம் 69 புறம் 306 319 320 324 326 333 ஆகிய பாடல்கள் வேட்டுவர் அரசர்களின் ஆளுமையை பெருமளவு பேசுகின்றன இன்னும் வேட்டுவர் பற்றிய செப்பேடுகள் பலவும் கல்வெட்டுகள் நடுகல் பலவும் வேட்டுவ மக்களின் ஆளுமையை குறித்து கூறியுள்ளன.

வேட்டுவர் கலைப்பாடுகள்

வேட்டவர்களின் ஆளுமைக்கான செய்திகள் யாவும் அவர்களின் கலைப்பண்பாட்டை சார்ந்த பிற பண்புகளை வெளிப்படுத்துவதாகவே உள்ளன.

புறம் 205 320 324 326 333 பாடல்கள் வேட்டுவர்களின் குடிபெயரை திணைப் பெயரைக் கூறுகின்றன. மூவேந்த அரசு தொடங்குவதற்கு முன்பே அரசு அமைப்பு உருவாக்கியவர் வேட்டுவ வழியினரே. சேர சோழ பாண்டியர் மூவேந்தர்களும் ஆட்சி செய்த பகுதி கல்பெரும்பாலும் வேட்டுவர் ஆட்சி செய்த நாடுகளே குறிப்பாக மிழலை நாடு, ஆய் நாடு, பாண நாடு, இடைப்பாடி நாடு,மகத நாடு, மழநாடு, கொங்கு நாடு இன்னும் பல நாடுகள் வேட்டுவரின் நாடுகளாக இருந்துள்ளன.

இந்நாடுகளில் ஆட்சி செய்ததோடு மட்டுமின்றி அந்நாடுகளின் தொழில் குடிகளாகவும் இருந்தனர்.

தொழில் மற்றும் கலை சார்ந்த மேன்மை காரணமாக காவலன் பூலூவர்மாவலியர், என்று வேட்டுவர் குறிப்பிடப்பட்டுள்ளனர் இப்பெயர்கள் வேட்டுவர், மறவன், மழுவர், என்று அலைகபடுகிறார்கள் இவர் கல்தொடக்கதில் காவல் பணிசெயிதல், ஆடு மாடு காத்தல், மேய்த்தல், போர் செய்தல், போர் கருவிகளை பயன்படுத்தி விளையாடுதல் முதலான கலை சார்ந்தவற்றின் காரணமாக வழங்கப்பட்ட பெயர்களே இவை . ஐந்திணையில் சாமை, திணை ,வரகு, தேன் தயாரித்து சேமித்து கற்றுக்கொடுத்தனர், புலி, யானை, காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, முதலான கொடிய விலங்குகளை வேட்டையாடிஅவற்றிடம் இருந்து தங்களையும்தங்கள் வளர்ப்பு விலங்குகளையும் காக்கவும் கற்றுத்தந்தனர், மேச்சல் கலை அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.கால்நடைகளிடம்மிருந்து பால் தோல் ஆகியவர்களை பயன்படுத்தவும் அவற்றைக் கொண்டு கலைப் பொருட்களையும் உருவாக்கிக் கொண்டனர்.

வேட்டுவர் சிந்துவர் ஆடை, காலில் தோல் செருப்பு, வில், அம்பு, மற்றும் பருத்தி ஆடைகலைதயாரித்தனர்பயன்படுத்தினர் என்பதை நற்றிணை 320 கூறுகிறது. பாறை ஓவியங்கள் மூலம் வேட்டவர்களின் கலை உணர்வை,பண்பாட்டுமேன்மையை, கூட்டு வாழ்க்கைகலையை காணலாம்.

வேட்டுவர்களே வேளாண்மை குடியிருப்புகளை அமைத்தனர் அக்குடியிருப்புகள் குறும்பு எனப்பட்டது.குரும்பின்வளர்ச்சியே பெரும் மாளிகைகள், கட்டங்கள், தோன்ற காரணமாக இருந்தன வீடுகள் குடியிருப்புகளை தொகுப்பாக அமைத்தனர் அவற்றைச் சுற்றி வேலி, மதில் அமைக்கப்பட்டது. குறும்பின் முன் முற்றமும், பந்தரும் அமைக்கப்பட்டன அங்கு பாணர்களோடும், உறவுகளோடும் கூடி உணவு உண்டனர். கலந்து பேசினர். ஆடினர், பாடினர், இசை இசைத்தனர்.(புறம் 320) குறும்பை சுற்றிலும் அமைத்த வேலியின் வளர்ச்சியே கோட்டையைச் சுற்றி அகழியை தோற்றுவிக் காரணமாக அமைந்தது.

வேட்டைக்கான கருவிகள் மட்டுமின்றிக் குழிகள் அமைத்து விலங்கினை கொள்ளும் வகையினை எயினர் கற்றிருந்தனர் பன்றி,

முயல் விலங்குகளை குழி அமைத்து பிடித்துள்ளனர். சில பொழுது பொறி வைத்து பிடித்தனர் அதில் கற்பொறி சிறு பொறி அடர் என்று கூறப்பட்டுள்ளன. விளை புனம் நிழத்தலின் கேழல் அஞ்சிப்

புழை தொறும்மாட்டியஇருங்கல்
அடாஅர்அரும்பொறி உடைய ஆறே

என்ற வரிகள் பாதைகளில் கற்பொரி வைத்ததை மலைபடுகலம் (193- 95) மூலம் அறிகிறோம். புலி வேட்டையில் அடர் பொறியையும், கற்பொறியும் வைத்து பிடித்துள்ளனர்.

தினையுன்கேழல் இனிய புலவன்
சிறு பொறி மாட்டியபெருங்கல் அடாஅர்
ஒண்கேழ்வயபுலிபடூ உம்.

என்ற நற்றிணை 119 வரிகள் பன்றியை பொறி வைத்து பிடித்ததையும். புறம் 19 புலியை புலியை பொறி வைத்து பிடித்ததையும் கூறுகிறது. இதன் மூலம் விலங்குகளை பொறிவைத்து பிடித்தையும் அவர்கள் வேட்டை நுட்பத்தை அறிய முடிகிறது. வேட்டுவர் ஒவ்வொரு விலங்கையும் ஒவ்வொரு முறையில் வேட்டையாடி உள்ளனர்.

உடும்பு வேட்டையைப் புறம் 326, பன்றி வேட்டையை மலைபடுகடாம் 193-95, நற்றிணை 119, புறா 13 குறிபிடுகிறது.

முள்ளம்பன்றி வேட்டையை புறம் 325, மலைபடு (300 43 47), மான் வேட்டை புறம் 166 முயல் வேட்டை புறம் 319 குறித்தும் யானை, வேட்டை மலைபடுகடம் 273 99 புலி வேட்டை புறம் 320 குறித்தும் சங்க நூல்கள் கூறப்படும் முறையை காணும் பொழுது வேட்டையின் விவரம் , காலம், இடம், ஆகியவற்றை தெளிவாக அறிந்து உணர்ந்து செயல்படுவதற்குத்தக்க முறையில் வேட்டைக் கலை அனைத்தும் வேட்டுவர் கற்று கொண்டனர் என்பதை அறியலாம்.

வேட்டைக்கான கருவிகளை உருவாக்கிக் கொண்டது, அவற்றை முறையாகப் பயன்படுத்திய முறை ஆகியவை வேட்டுவரின் அறிவியல் கலை நுட்பத்தை உணர்த்துவதாக உள்ளது. அடர், பொறி, கண்ணி, வில், அம்பு, ஐய்யாவி ஆகிய கருவிகளின் பெயர்களை கொண்டு அவற்றின் வடிவமைப்பு அளவு பயன்படுத்தும் வகை அதற்கான திறன் பயிற்சி இன்னும் பலவற்றையும் நோக்கும் பொது வேட்டுவாரின் திறமை நமக்கு தெரியும். ஆயுதங்களைத் தயாரிப்பை முதன் முதலில் அறிமுகப்

படுத்தியவர்கள் வேட்டுவர்களே இவர்களின் நுண்ணறிவு, சிந்தனை, செயல்திட்டத் திறன், செயல்படுத்தும் முறை,ஆகியன அவர்களின் நுட்பமான கலை பண்பாட்டு உணர்வுகளை அறிய உதவுகிறது. வேட்டுவர் வேட்டை தொழிலோடு உணவு உற்பத்தி உணவு சேமிப்பு, இரும்பு, தோல், பருத்தி ஆடைகளை, தயாரித்தல் ஆகிய கலையை வளர்தனர். சங்க இலக்கியங்கள் கூறும் வெட்சித்திணை கரந்தை திணை செய்திகள் கால்நடைகளோடு தொடர்புடையவை வேட்டுவர் பற்றியதே ஆகும். சமூக வளர்ச்சியில் திணை மரபு வழியினரான இவர்கள் பிரிந்து காணப்பட்டனர்.அதனால் ஒரே இனத்துக்குல் ஒரு குழுவினர் மற்றொரு குழுவின் ஆநிரையைக வர்ந்தனர் மற்றொரு குழு ஆநிரையை மீட்கப் போர் செயிதனர். இவர்களின் போர்கலை, போர் வகை போர் நிகழும் இடம் போருக்கான கருவிகள், குதிரை, யானை, தேர் என்பனவற்றை உருவாக்கினர். வீரர்ககள் போரில் இறந்தால் அவர்களுக்கு நடுகல் வைக்கப்பட்டது இதுவே பின்னர் பெரும் தெய்வம் சிவன், திருமால், முருகன், கொற்றவை, காளி, அணங்கு என்பவன போனற்ற தெய்வ வழிபடக்க வளர்ந்தது அதுவே வேட்டுவர்களின் ஆளுமையும் கலை நுண்ணறிவு சிந்தனைகும் எடுத்ததுக்காட்டுக்கும்.

கடம்ப மரக் கடவுள், ஆலமரக் கடவுள், வேம்பு மரக்கடவுள், பனைமரக் கடவுள், பலாமரை கடவுள், வேங்கை மரக் கடவுள், அரச மரக் கடவுள், எனவும் செடிகளையும் கடவுள் உறை இடமாகவும், பூக்குகளை கடவுள் விரும்பும் பொருளாகவும், வளர்க்கப்பட்ட நிலையில்.வேட்டுவர் வாழ்க்கை முறையையும், வீரமும், இன்னும் பிறகும் அடிமை நிலைக்கு போனது. தாய் வழிபாடு என்பது வேட்டைக் கால வாழ்க்கையில் தொடங்கி, பாறை ஓவிய கலையாக வளர்ந்தது, அணங்கு என போற்றப்பட்டு, வீரர்களின் வெற்றிக்குக் காரணமே கொற்றவை என மாற்றப்பட்டது,வேட்டைச் சமூகத்தில் தாய் முறை சமூகமே மேன்மை பெற்றது. கலைகளும் தொழில்களும் பல்கின அவை ஆண் வழி சமூகமாகமாறி அரசு ஆதரவு பெற்ற போழுது வேட்டுவறின் வீரம் சிறந்த தன்மையை மாற்றி பெரும் தெய்வத்தோடு இணைக்கப்பட்டு அவரது கலைகளும் பண்பாடும் வேறு வேறுமாற்றங்கள்ளாயின. காணமர் செல்வி அகம் (346), காடுறைகடவுள் (தொல் 42), மலையுறை தெய்வம், காடு கிழாள், காடு கெழு செல்வி, கடல் கெழுசெல்வி (அகம் 370), என்னும் பெயர்கள் காடு மலைகளிலும் கானகதேவி,அணங்கு, சூர்சூலி, காளி என வெவ்வேறு தெய்வ பிரிவுகளை தொடங்கியதால் தொடக்க கல

வேட்டுவரின் இயற்கை வழிபாட்டு பண்பாடுகளை தேட வேண்டியதாயிற்று.

வேட்டுவரின் இடப்பெயர்வு வளர்ச்சியாள் திணை வாழ்க்கையில் பல வகை உணவுப் பொருட்கள் தேவையால் வேளாண்மை முறையிலும் தொழில் முறையிலும் மிக்க வளர்ச்சி தோன்றின.வேட்டை காலத்தில் மர ஆடை, தழை ஆடை அணிந்த, வேட்டுவர் பருத்தியை கண்டறிந்தனர். பருத்தி உற்பத்தி செய்து அதன் மூலம் ஆடைகளை அனிந்தனர் புறம் 125 299 324 326 399 அகம் 133 நற்றிணை 247 353 பருத்தி ஆடைகள் தயாரிப்பு முறையினை அறிந்து கொண்டிருந்தனர் என்பதையும் பிரதிணைகளுக்கும் கொண்டு சென்றுள்ளனர் என்பதையும் அறிகிறோம். பருத்தி நூற்கும் கலையை பெண்கள் கற்றிருந்தனர் (புறம் 324 ,குறுந்தொகை 129,) என தெரிய வருகிறது,

வேட்டுவர்களின் இனப்பரவலில் வேட்டுவர்களின் வாழ்க்கை முறை பண்பாட்டு முறை ஆகியவற்றில் பல முக்கிய வளர்ச்சி நிலைகளை காண முடிகிறது. வேட்டுவர் தொடக்க கால உணவு பழக்கம் பல பிரிவுகவுக்கான மக்களின் உணவு முறையாகவும் தனித்த அடையாளமாகவும் உள்ளன. ஆயினும் விலங்கு உணவு தாவர உணவு என்னும் இருபெரும் பிரிக்குள்ளாகவே அடக்கம் பெற்றுள்ளதை மறந்திட இயலாது. அவ்வுணவு முறையில் மருத்துவ சிந்தனையும், நோக்கமும் கலந்துள்ளன. ஒவ்வொரு திணைக்குமான உணவு முறை, உணவு பொருள் உற்பத்தி, அவை சார்ந்து தொழில்முறை, வாழ்வியல், பண்பாட்டு முறையையும், தமிழர் பண்பாட்டுக்கு அளித்துள்ளனர் என்பாதை அறிய முடிகிறது.

வேட்டைக்கால வேட்டுவ இனத்தொன்மையும் சமூக அமைப்பில் உணவும், உடையும், அவை சார்ந்த பண்பாடும்,தனித்தன்மையுடன் கூடிய சிறப்பை தொடர்ச்சியாக தமிழர் சமூக அமைப்பில் காணமுடிகிறது. திணை வகைகள், நெல் வகைகள், கிழங்கு வகைகள், காய் வகைகள்,பழ வகைகள், யாவும் திணைக்கு திணை மறுபட்டிருந்தாலும் அவை வேட்டுவ சமூகத்தினர் கண்டுபிடிப்புகளின் பரிணாமங்களே ஆகும்.ஆற்றோர வேட்டை வாழ்க்கையில் மீன், நண்டு, ஆமை உணவு, கருவாடு, உப்பு,உற்பத்தியும். பொருளாதார செல்வநிலை வணிகம் அதன் நெறி வகைகளையும் விரிவடைந்துள்ளன. பொருளாதாரம் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் அரசு தோற்றமும் ஆகியவை

வேட்டுவார்களின் கோடையக்கும் மேலும், அரசுகளுக்கு இடையே ஏற்படும் போரில் வேட்டுவர் வீரமும் அம்மரபின்னறின்பங்கும் தமிழர் பண்பாடுகளில் குறிபிடத்தக்கவை ஆகும்.

அரசு வளர்ச்சியில் வேட்டுவ கிளை மரபினர் அரசு காலங்களில் 60க்கும் மேற்பட்ட உட்குழுக்களாக (பிரிவுகளாக) வாழ்ந்துள்ளனர். அவர்கள் தங்களுக்குள் தனித்தனி சிறப்பையும் தனிதன்மையும் உடையவர்களாக பலவகை அடையாளங்களால் வேறுபடுத்திக் கொண்டு அரசுக்கு உதவியும் இருக்கின்றன. அவை பல குலங்களாக விரிவடைந்து அவர்களுக்குள் பெருமையும் சிறப்புகளையும் தனித்தன்மையும் வளர்த்தி கொள்ளூவதிலும் முனைப்பு காட்டியுள்ளனர். 17ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டில் வேட்டுவரில் மூலகுலத்தைச் சேர்ந்த வேட்டுவர் பிரிவை சார்ந்த அரசன் அல்லாள இலையான் சிற்றாரசனாக வழ்துள்ளார் இவர். கடை ஏழு வள்ளல்களை நினைவுபடுதும் வகையில் தான் வாழும் காலதில் காவேரியை சிறையிட்டு கிழ்கரை அரைய நாட்டில் உள்ள ஜேடர்பாலையாதில் வாய்க்கால் வெட்டி 15,000 ஏக்கர் நிலங்களில் வேளாண்மை பெருக்கத்திற்கும் மக்கள் வாழ்க்கையில் வளம் பெருக அரும் செயலைச் செய்து உள்ளார். இந்த அல்லாள இலையான் அவர்களை நினைவு கூறும் வகையில் வேட்டுவர்களை ஒருங்கிணைப்பதற்கு விழிப்புணர்வு தேவையாகிறது. ஆம் வேட்டைக் கலவேட்டுவரின் தொடக்க முயற்சியானது இன்னும் அல்லாள இளையான் போன்ற வேட்டுவார்களிடம் தொடர்ந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கும் பொழுது வேட்டுவர் ஆளுமையும் கலைப்பண்பாடும் தொடர்கிறது என்பதை உறுதி செய்ய முடிகிறது, இது தொடர அனைவரும் முனைவோம்.

வேட்டுவரின் குலங்களும் அரசர்கள் வரலாறும்

முனைவர் வி.முருகன்,
உதவிப் பேராசிரியர்,
வரலாற்றுத் துறை,
அரசு கலை அறிவியல் கல்லூரி, கரூர்

கொங்கு நாட்டு வேட்டுவரிடையே பல பிரிவுகள் காணப்படு கின்றன. இவர்களிடையே 1) வேட்டுவர் 2) வேடர் 3) காவிலுவர் (காவலர்) 4) மாவிலுவர் (மாவலர்) 5) பூவிலுவர் (பூவலர், பூலுவர்) எனும் பெரும் பிரிவுகள் இருந்தனவென்று பழங்கால இலக்கியங்கள் கூறுகின்றன. காவலர் என்போர் நாடு காவல் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். பூவிலர் நிலம் தொடர்பான அதாவது வேளாண்மை புரிந்தனர் மாவிலர் என்போர் பெரும் வலிமை படைத்தவர்கள். அதாவது போர்த் தொழிலில் ஈடுபட்டவர் எனலாம். இவை தொழில் அடிப்படையில் ஏற்பட்ட பிரிவுகள் ஆகும்.

வேட்டுவர்கள் கூட்ட (குலம்) அடிப்படையிலும் பல பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். சிலர் தாம் எந்த ஊரிலிருந்து குடி பெயர்ந்தனரோ அந்த ஊரின் பெயரைத் தமது கூட்டத்திற்கு வைத்துக் கொண்டனர். சிலர் பறவைகள் விலங்குகள், மரம், செடி, கொடி, வீரம், பண்பு ஆகியவற்றையும் தமது கூட்டப் பெயர்களாகக் கொண்டனர். இதன் காரணமாகவே இக்கூட்டப்பெயர்கள் எண்ணிலடங்காத அளவு இருந்தன. வேட்டுவரிடையே ஏறத்தாழ 200 கூட்டங்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

சிலவற்றிற்கானப் பெயர்க்காரணங்கள் முழுமையாக ஆராயப்பட வில்லை. இவற்றுள் கரடி, கடம்புலி, புலி, நரிய, ஆமை, வராக ஆகியவைகளின் பெயர்களையும் காடை, குறுங்காடை கௌதாரி, பறவை, மயில், அந்துவன், பூச்சந்தை ஆகிய பெயர்கள் பறவைகளின் பெயர்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தன.

கொன்னை, தும்பை, புட்ப ஆகிய வேட்டுவ இனப்பிரிவுகள் பூக்களின் பெயரால் ஏற்பட்டன. கீரை, மணிய, பன்ன, புல்லை, பனைய, வாகை, வன்னி, புன்ன, விறகு ஆகியன் செடி, மரங்களின் பெயர்களைக் கொண்டுள்ளன:

வேட்டுவர்கள் வீரப்பெருங்குடி மக்கள். போர் அவர்களுக்கு ஒரு பொழுதுபோக்கு. விழுப்புண் படாத நாட்களை வீண் நாட்களாகக் கருதுபவர். இவர்கள் பலவகைப்பட்ட படைப் பிரிவுகளில் பணிபுரிந்தனர். கீழ்க்காணும் கூட்டப் பெயர்கள் இவற்றை உணர்த்துவதாக உள்ளன. சொட்டை என்பது ஒரு படைக்கருவி. கரிப்படை, பரிப்படை, உரிமைப்படை, சாந்தப்படை, மாந்தப்படை பாசறை, வீர, சொட்டை, பறைப்படை, பம்பை ஆகியன போர் மற்றும் அதனைச் சார்ந்த பெயர்களால் ஏற்பட்ட பிரிவுகளின் பெயர்களாகும். வேட்டுவரின் பல்வேறு பண்புகளை, உருவத்தை, குணங்களை விளக்குவதாகவும் சில கூட்டப் பெயர்கள் உள்ளன. சில உடலின் பகுதிகளைக் குறிப்பன. அவை மான, முரட்டு, மின்ன, மினுக்க, பொன்ன, சிறுத்தலை, மூலை, குடுமி, செம்ப, வெள்ளை என்பனவாகும். சிறுத்தலை வேட்டுவன் எனும் பெயரில் வீரத்தலைவன் ஒருவன் இருந்தான். இவ்வீரன் கபிலர் மலை முதல் கை தீண்டா பாழி வரையும் ஆண்டான் கோயில் முதல் தென்னிலை வரை உள்ள பகுதிகளை ஆண்டு வந்தான். அவன் வழியினர் சிறுத்தலை வேட்டுவர் என அழைக்கப்பட்டனர்.

பாண்டிய வேட்டுவர், சேர வேட்டுவர் எனும் பெயர்கள் அவர்களது தலைவர்களுக்கு அவர்கள் செலுத்திய மரியாதையையும் நன்றிக் கடனையும் வெளிப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாகப் பாண்டிய வேந்தனின் கீழ்ப் பணி புரிந்த முன்னோன் அல்லது தலைவனின் வழிவந்தவர்கள் பாண்டிய வேட்டுவர் ஆவர்.

இவ்விதமாகப் புன்னம், பட்டாலி, பௌத்திரம், ஈங்கூர் நொய்யல் முதலான ஊர்களைச் சேர்ந்தவர்கள் தமது குலப்பெயரை ஊர்ப் பெயருடன் இணைத்துக் கொண்டனர்.

சில வேட்டுவ இனப் பிரிவினரின் பெயரால் சில ஊர்கள் பெயரிடப் பட்டுள்ளதையும் அறியலாம். எடுத்துக்காட்டாக அந்தி வேட்டுவர் நினைவாக அந்தியூர், சலங்கை வேட்டுவர் பெயரால் சலங்கை பாளையம், ஆப்ப வேட்டுவர் பெயரால் ஆப்பக்கூடல், கண்ணாடி வேட்டுவர் பெயரால் கண்ணாடிப்புத்தூர், கரடி வேட்டுவர் நினைவாகக்

கரடிக்கோயில், கரடிப்பட்டி, வெங்கச்சி வேட்டுவர் பெயரால் வெங்கம்பூர், நஞ்சை வேட்டுவர் பெயரால் நஞ்சை காளிக்குறிச்சி, மலைய வேட்டுவர் நினைவாக மலையம்பாளையம், மூல வேட்டுவர் பெயரால் மூலனூர் பருத்தி வேட்டுவர் நினைவாகப் பருத்திப்பள்ளி, காட்டு வேட்டுவர் பெயரால் காட்டுப்பாளையம், கரட்டு வேட்டுவர் நினைவாகக் கரட்டாம் பாளையம், மின்ன வேட்டுவர் பெயரால் மின்ன வேட்டுவன்பாளையம், வடுக வேட்டுவர் நினைவாக வடுகபாளையம், பொன்ன வேட்டுவர் நினைவாகப் பொன்னம் பாளையம் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

கூட்டம் என்பதனைக் குலம் எனவும் சுட்டலாம். எடுத்துக்காட்டாகக் கரைய குலச் சொக்கனேந்தல் என்பானின் பெயர் பழமங்கலம் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளதைச் சுட்டலாம். ஊராளியாக, கிராமத் தலைவன் போன்று விளங்கியவன் ஊராளி வேட்டுவன் எனப்பட்டான். எடுத்துக்காட்டாக ஊராளி வேட்டுவன் அழகன் காளி எனவரும் துக்காச்சி நடுகல் கல்வெட்டைக் குறிப்பிடலாம்.

கவுண்டர் பட்டம்:

வேட்டுவர்கவுண்டர் எனும் பட்டம் கொண்டுள்ளனர். காமிண்டன் என்பதே கவுண்டர் என ஆயிற்று. கர்நாடக தேசத்தில் கிராமத் தலைவனாகத் திகழ்பவன் கௌடா என அழைக்கப்பட்டான். தமிழில் சாமுண்டன் என்பதுவே கன்னடத்தில் கௌடா ஆகும். கா எனும் சொல் மக்களைக் காப்பவன் எனும் பொருள்படும். அண்டன் என்றால் வலிமை மிக்கவன் என்பது பொருள். எனவே மக்களைக் காக்கும் வலிமை மிக்கத் தலைவன் காமிண்டன் எனப்பட்டான். காமிண்டன் என்பதன் திரிபே கவண்டன் என்றாயிற்று. பின்னர் படைத் தலைவர்களுக்கும் கவுண்டன் எனும் பட்டம் வழங்கப்பட்டது. பிற்காலத்தில் சமுதாயத்தில் அந்தஸ்தும் மதிப்பும் பெறுவதற்காக வசதிபடைத்த சிலர் இப்பட்டத்தைச் சூடிக்கொண்டனர். இன்று இது சாதிப்பட்டமாக மாறிவிட்டது. வேட்டுவரும், வேளாளரும் கவுண்டர் எனும் பட்டத்தைக் கொண்டுள்ளனர்.

வேட்டுவரின் பொதுப்பணி

தமிழகத்தின் வீரப்பெருங்குடி மக்களுள் வேட்டுவக் கவுண்டர் குறிப்பிடத்தக்கவர். வெட்ட வெட்டத் தழைக்கும் வேட்டுவர் படை என்னும் பழமொழி வேட்டுவரது வீரத்திற்கோர் சான்றாகும். இவ்வேட்டுவக் குடியினர் போர் மறவர்களாக விளங்கியதுடன், இறைவன்பால் நீங்கா

அன்பு கொண்ட இறையன்பர்களாகவும் விளங்கினர். இதனை உறுதிப்படுத்த இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் சான்றுகள் பல காணப்படுகின்றன. இவர்கள் சிறந்த பக்திமான்களாக விளங்கியதுடன் இறைவனுக்குக் கோயில் கட்டுவதிலும், கோயில்களைப் பழுது பார்ப்பதிலும் கோயில்களுக்கு நில தானங்கள் செய்வதிலும், கோயிலில் பூசைகள் சரிவர நடைபெறுவதற்குரிய பொருள்கள் வழங்குவதிலும் பேரார்வம் கொண்டிருந்தனர். குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமான வேலனும் வள்ளியும் வேட்டுவர் குடியினரே என்பது குறிப்பிடத்தக்கது. சைவ சமய வரலாற்றில் தனக்கெனத் தனித்ததோர் இடத்தினைப் பெற்றுள்ள கண்ணப்ப நாயனார் வேட்டுவ இனத்தைச் சேர்ந்தவர் என்பது பெருமைக்குரிய ஒன்று. கண்ணப்ப நாயனாரது இறையன்பின் சிறப்பினை அறியாத சைவர் எவரும் இருக்கமுடியாது. சிவனடியார்களுள் சிறப்பித்துப் போற்றப் பெறும் கண்ணப்பர் வேட்டுவக் குலத்தினுக்கோர் ஒளிவிளக்காவார்.

வேட்டுவ இனப்பிரிவுகளுள் பனைய வேட்டுவர் என்பதும் ஒன்று. இவ்வேட்டுவப் பிரிவின் தலைவனான பொன்னப்பனையன் என்பான் பாரியூர் கோயிலுக்குக் கதவுகளை அளித்துள்ளான். இச்செய்தியினைப் பாரியூர்க் கோயிலில் காணப்பெறும் திரிபுவன வீரதேவனான இராசராசக் கரிகாலனின் கல்வெட்டால் அறியலாம். (A.R.E.191/ 1910-11)

மோளப்பாளையத்தைச் சேர்ந்த காட்டு வேட்டுவர், திருச்செங்கோட்டுக் கோயிலின் அறுபதாம்படி (சத்தியப்படி) மண்டபத்தை அமைத்ததுடன், பூசனை இடையறாது நடைபெற தக்க ஏற்பாடுகளைச் செய்தார். வெங்கச்சி வேட்டுவன் ஒருவன் சங்ககிரி வட்டத்தில் மருதூர்க் காளியம்மன் (மதுரக்காளியம்மன்) கோயிலைக் கட்டியுள்ளான். அதியமான் நடுவில் நங்கன் எனும் வேட்டுவத் தலைவன் பருத்திப் பள்ளியில் இருந்த திருக்கோயிலைப் புதுப்பித்துப் புகழ் பெற்றுள்ளான்.

வீர வல்லாளனது ஆட்சிக்காலத்தில் கரைய வேட்டுவனான செய்யான் பல்லவரையன் என்பவர் அறச்சலூர் (ஈரோடு மாவட்டம்) சிவன் கோயிலுக்குத் திரு நிலைக்காலும் படியும் அமைத்தான். அத்துடன் பெருந்துறை வடிவேல் ஐயனைக் கொண்டு கோயில் கும்பாபிஷேகம் நடைபெறத் தக்க ஏற்பாடுகளையும் செய்தான்.

மேல்கரை பூந்துறைநாட்டு ஈங்கையூரில் வாழ்ந்த காவிலன் குறும்பில்ல குலத்தைச் சார்ந்த போக்கள் செய்யானான குலோத்துங்க

பல்லவரையன் வேட்டுவத் தலைவன், ஈங்கூர் கோயிலில் ஐயனார் எழுந்தருளச் செய்து, அறக்கொடைகளும் விட்டுள்ளான். இதனை ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம் ஈங்கூர் குட்டைத் தோட்டத்தில் கிடைத்த கொங்குச் சோழன் குலோத்துங்கனது ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறியலாம். புல்லை வேட்டுவனான வலங்கை வாழவந்தானான சுந்தர பாண்டிய வீரசங்காத தேவன், வீரபாண்டியனது ஆட்சிக்காலத்தில், வெங்கம்பூர் (ஈரோடு வட்டம்) சிவன் கோயிலுக்கு வெங்கம்பூரைத் தானமளித்தான். மேலும் இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள வீர ஜெயங்கொண்ட சோழீச்சுரமுடைய நாயனார்க்கும் சிவகாமி அம்மைக்கும் அமுது படைக்கத் தக்க ஏற்பாடுகள் செய்தான்.

புன்னம் பூவாணிய வேட்டுவரில் வெள்ளான் கரியனான மருதங்க வேளான் கருவூர் பசுபதியீசர் கோயிலுக்கு நிலதானம் செய்ய முக்கழஞ்சு பொன்னளித்தான். வடகரை ஆற்றூர் புல்லை வேட்டுவன் கூத்தாடுந்தேவன் இருங்கோளனான வலங்கை மீகாமன், நாமக்கல் - சேலம் மலையில் உள்ள ஏழூர் சிவன் கோயிலில் சிங்கத்தூண் வன்றை நிறுவினான். பட்டாளி வேட்டுவன் நந்தமூக்கன் அந்தியூர் சாலையில் உள்ள கணபதி பாளையத்தில் மாயகர் கோயிலைக் கட்டினான். சிறுத்தலை வேட்டுவன் தங்கோளன் மகன் தம்மன் கொடிவேரி முன்னை நடையார்க்குச் சந்தியா தீபம் வைத்தான். கொங்கு நாட்டின் நீர்ப்பாசனத்தைப் பெருக்கியவருள் அல்லாளன் இளையான் குறிப்பிடத்தக்கவனாவான்.

காவிரியாற்றின் முதல் கால்வாயை வெட்டிய பெருமை இவனையே சாரும். நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு இராஜவாய்க்காலை வெட்டிய இம்மாவீரன், போற்றுதற்குரிய இறைப்பற்றாளனாகவும் விளங்கினான் என்பது நமக்கெல்லாம் பெருமை தரக் கூடியதாக அமைந்துள்ளது. திருச்செங்கோட்டு இறைவர் மீது இணையற்ற அன்பு கொண்ட இவ்விளையானின் மகன் திருச்செங்கோடு ஸ்ரீநாகேசுவரர் கோயிலின் அர்த்த மண்டபத்தினையும் மகா மண்டபத்தினையும் அமைத்துப் புகழ் பெறுகிறான். திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை இவனது அருமை பெருமைகளைச் சிறக்கப் பேசுகின்றது. மைசூர் நாட்டு கொள்ளைக்காரனான நஞ்சைய உடையார் தனது ஆட்களுடன் ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் திருக்கோயிலில் உள்ள அணிமணிகளைக் கொள்ளையடித்துச் சென்ற போது, அவர்களை வழிமறித்து, ஆலயப் பெருட்களை மீட்டுவந்து கோயிலில் சேர்ப்பித்த

பெருமை இவ்விளையானையே சேரும். கொள்ளையடிக்கப்பட்ட போது விளைந்த சேதத்தையும் இவனே ஈடுசெய்தான் என்பது ஈண்டு நினைவிற்கொள்ளத்தக்கது. பீடிழந்து பெருமை இழந்து கிடந்த திருச்செங்கோடு ஸ்ரீ நாகேசுவரர் கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கு செய்தான். இக்குடமுழுக்கு கி.பி. 1643 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 25 ஆம் தேதி (சாலிவாகன சகாப்தம் 1565 ஆம் ஆண்டு) நடைபெற்றது. இதனால் கீழ்க்கரை அரையநாட்டு வடகரை ஆற்றூரில் வாழ்ந்த இம்முடித் திருமலை குமார இளையானின் இறையன்பு நன்கு புலனாகின்றது.

கொடுமுடிக்கு அருகில் அமைந்துள்ள ஊஞ்சலூர் நாகேசுவரர் கோயிலுக்கு மலைய வேட்டுவனான நல்லணன் என்பானும், நச்சுழி வேட்டுவனான மேவன் சிறியன் என்பானும் குறுங்காடை வேட்டுவனான சின்னான் தாயாண்டான் என்பானும் ஏழு மா, நிலத்தினைத் தானமாக அளித்துள்ள செய்தியும் வேட்டுவரது தெய்வப்பற்றினை எடுத்தியம்பு கின்றது. இதனை இக்கோயிலில் காணப்பெறும் விசயநகர வேந்தனான அச்சுதராயனின் கல்வெட்டால் அறியலாம்.

நாமக்கல் வட்டம், பருத்திப்பள்ளிக் கல்வெட்டில் நாமாழ்வா நாட்டுப் பருத்திப்பள்ளி ஊராளி வேட்டுவரில் அதியமான் நடுவில் நங்கன் என்பான் திருக்கற்றளி புதுக்கிய செய்தி கூறப்படுகிறது. (A.R.E. 148; 1915) கறைய வேட்டுவனால் சமைய மந்திரி சிறு பிள்ளை என்பான் குறுப்பு நாட்டுத் திங்களூரில் ஆலயத் திருப்பணி செய்துள்ளான். வாயறைகள் நாட்டுக் களந்தையில் பூலுவன் பெரும் பற்றரில் வானம் நிலையுடையான் என்பான் ஆலயப்பணி புரிந்துள்ளான். இதனைப் பெருங்களந்தைக் கோயில் கல்வெட்டு உணர்த்துகின்றது. (A.R.E. 174; 1927).

காங்கேய நாட்டுக் கீரனூரில் காவலன் கீழைக் கரையரில் பெரிய அரசு அழகிய பிள்ளை என்பான் செய்த ஆலயத் திருப்பணி ஈரோடு மாவட்டம் கீரனூர்க் கல்வெட்டால் அறியப்படுகின்றது. (A.R.E. 247; 1920) ஈரோடு மாவட்டம் பிரமியம் கல்வெட்டில் (A.R.E. 202; 1920) ஆலயத் திருப்பணி செய்த தென்கரை நாட்டுப் பிரமதேயம் ஸ்ரீ வீர சங்காத சதுர்வேதி மங்கலத்துக் காவலன் காச்சரில் சிலம்பன் அடைக் காவலன் (சிலம்பனைச் சாத்தி) பெருமை கூறப்பட்டுள்ளது. காங்கேய நாட்டுப் பட்டாலியிலிருக்கும் காவலன் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனாகிய அதியமான் ஈரோடு மாவட்டம் அரசன் பாளையத்தில்

திருக்கோயில் திருப்பணி செய்துள்ளான். (A.R.E. 266; 1920) மேற்படி வகையறாவைச் சேர்ந்த அதியமான் மனைக்கிழத்தியும் மகன் விராந்தகப் பல்லவரையனும் அதே ஊரில் ஆலயத் திருப்பணி புரிந்துள்ளனர். (A.R.E. 268; 1915)

துணை நூல் பட்டியல்

1. இராசு,செ; வேட்டுவர் சமூக ஆவணங்கள், கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை, ஈரோடு, 2008
2. இராஜசேகர தங்கமணி,ம.இரா; கொங்குச் சமுதாயம் (வேட்டுவர்), கொங்கு பதிப்பகம், கரூர், 2003
3. பரணன், இல; பொன்னர் சங்கர் கதை ஒரு சமூகவியல் ஆய்வு, சமூக வரலாற்றுச் சங்கம், பெரியாரியல் கலை இலக்கிய ஆய்வு மன்றம், கரூர், 2010

புதுக்கோட்டை மாவட்டச் சிற்றரசர்களில் வேட்டுவ நிசாத அரசர்கள்

புலவர் பு.சி.தமிழரசன்,
வரலாற்று ஆய்வாளர்,
புதுக்கோட்டை

பண்டைய காடுகளில் இருந்த மரங்கள் வீடுகட்டப் பயன்பட்டன. காடுகள் பல்வேறு சுவையான பழங்களைத் தந்தன. நோய் தீர்க்கும் இயற்கை மருந்தான மூலிகைப் பயிர்கள் நிறைந்திருந்தன. வேட்டையாட விலங்குகளும். பறவைகளும் பெருகிக்கொண்டே யிருந்தன. அக்காலத்தில் இக்காட்டு வளம் வேட்டுவர்களின் வாழ்வாதாரமாக விளங்கியது.புறமலை நாட்டு நிசாத அரசர்களின் தொடக்கம் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் உறுதி செய்யத் தக்க சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை எனலாம். 12-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை காணப்பட்ட நிசாதராசர்கள் பற்றியும், அவர்கள் ஆட்சிப் பகுதி பற்றியும் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது.

நிசாதராசர்கள் தோற்றம்

அவர்கள் சோழர்கள் மேலாண்மையின் கீழும் பாண்டியர்கள் மேலாண்மையின் கீழும் குறுநிலமன்னர்களாக விளங்கியிருக்கிறார்கள். அவர்கள் கோயில்களைக் கட்டியதுடன். பல்வேறு கொடைகளையும் அளித்திருக்கிறார்கள். தொடக்கத்தில் இவர்கள் வேட்டுவத் தலைவர்கள் அல்லது வேட்டுவ அரையர் என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் சோழர்கள் காலத்தில் புதுக்கோட்டையில் தோன்றிய அரசியல் தலைவர்கள் அரையர்கள் என்று அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. வடமொழித் தாக்கத்தால் தங்களை நிஷாதராயர் என்று அழைத்துக் கொண்டனர். நிஷாத என்பதற்கு வேட்டுவர் என்று பொருள்; இராயர் என்பதற்கு அரையர் அல்லது அரசர் என்று பொருள்படும்.

நிசாத அரசர்களின் கொடைகள்

இரண்டாம் இராஜேந்திரசோழனின் (கி.பி.1051-1063) அரசியல் தலைவனாக, புறமலை நாட்டு வேட்டுவரில் ஒருவன் பொன்னமராவதியில் இருந்திருக்கிறான் போலும். இரண்டாம் இராஜேந்திரனின் மகன் சோழ கேரளன் (கி.பி. 1055 1058) என்பான் பாண்டியருடன் நடைபெற்ற போரில் உயிர் நீத்துள்ளான். பொன்னமராவதி வேட்டுவத் தலைவனான நிசாதராசன், இரண்டாம் இராஜேந்திர சோழன் மேல் கொண்ட மரியாதையாலும் அவன் மகன் சோழ கேரளனுடன் போராளியாக இருந்த நட்பினாலும் தன் மகனுக்கு இராஜேந்திரன் என்னும் முன் ஒட்டைச் சூட்டியிருக்க வேண்டும். கேரளனான நிசாதராசர்கள் கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டது திருக் கொடுங்குன்றமுடையான் நிசாதராசன் கல்வெட்டு கி.பி. 1098-க்கு உரியது. எனவே, இதுவரை எனக்குக் கிடைத்த கல்வெட்டுகளின்படி நிசாதராசர்களின் ஆட்சித் தொடக்கம் கி.பி. 1098-ஆம் ஆண்டு அளவில் என்று கொள்ளப்படுகிறது.

வேட்டுவ நிசாத அரசர்கள் கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பதிமூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை பிரான்மலையான திருக்கொடுங்குன்றம், பொன்னமராவதி ஆகிய நகரங்களைத் தலைநகரங்களாகக் கொண்டு குறுநில மன்னர்களாக ஆட்சி செய்துள்ளனர். இவர்களுடைய கல்வெட்டுகள் கிபி.1098 முதல் கிபி 1208 வரை கிடைத்துள்ளன. திருக்கொடுங்குன்றத்தில் அரசை ஏற்படுத்திய இவர்களே, பொன்னமராவதியிலும் மற்றொரு ஆட்சியை ஏற்படுத்தியுள்ளனர். திருக்கொடுங்குன்றத்தில் ஆட்சி செய்த நிசாதராசர் களுடைய உறவு முறையையும், வரிசை முறையையும் அமைத்துப் பிரிப்பது அரிதானது.

பிரான்மலை நிசாத அரசர்கள்

பிரான்மலை வேட்டுவ நிசாதராசர்கள் கேரளன் அழகிய தேவன், வீரம் அழகிய தேவன் என்னும் பெயர்களைக் கொண்டிருந்தனர். இவ்வரசர்கள் பட்டப் பெயர்களுடன் கொடைகளை அளித்துள்ளனர். வீரசோழனான வீரராஜேந்திர சோழன் (1063-1070) காலத்தில் கி.பி.1098 ஆம் ஆண்டு திருக்கொடுங்குன்றமுடையான் கேரளனான நிசாதராசன், சாத்தனூர் உமாபதீசுவரமுடைய நாயனாற்குத் திருப்பள்ளியறை நாச்சியாரைத் திருப்பிரதிட்டை செய்ய, ஊரார் பக்கம் திருமணிகிழார் தேவன் உமையொருபாகன், விலை கொண்ட இரண்டு

மா நிலத்திலிருந்து இறை கடமை, கார் கடமை, நெல் கடமை கொண்டு படிமாற்றுச் செய்யச் செய்துள்ளான்.

"சோழன் இராஜாதிராஜ தேவனின் (1163-1178) 7-ஆம் ஆட்சியாண்டுக் காலத்தில் கிபி.1170-ஆம் ஆண்டு திருக்கொடுங்குன்ற முடையான் இரண்டாம் (கேரளன்) கேரளனான நிசாதராஜன், திருக்கோளக்குடி சீதர்மேசுவரமுடைய நாயனார் கோயிலுக்கு நிலம் வழங்கியுள்ளான்.

மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் (1178 - 1218) 21-ஆம் ஆட்சியாண்டுக் காலத்தில் கி.பி.1199 ஆம் ஆண்டு திருக்கொடுங்குன்ற முடையான் கேரளனான நிசாதராயன், சிவகங்கை மாவட்டம் திருப்பூர் வட்டம் சிவபுரி மட்டியூரான நிருபகேசரி சதுர்வேதி மங்கலத்து, திருதான்தோன்றிசுவரமுடைய நாயனார் கோயிலுக்கு, வீரமழகியான் சந்திக்காகச் சில நிலங்களை வாங்கி வரி நீக்கி அளித்துள்ளான்.

மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் (10-ஆம் ஆட்சியாண்டுக் காலத்தில் கிபி 1188-ஆம் ஆண்டு குன்றன் வீரமழகிய நிசாதராஜன், கூடலூர் நாட்டுக் கீழ்நெல்வேலி (திருமெய்யம் வட்டம்) நாயகற்கு, இவ்வூர் பற்றில் இறையிலி தேவதானமாக நிலம் வழங்கியுள்ளான். அதே கி.பி. 1188 ஆம் ஆண்டு திரு ஆலத்தூர் உடையான் திருக்கொடுங்குன்ற முடையான் (நிகழ்தராயன்) நிசாதராசன் சாத்தனூர் சீகயிலாயம் உமாபதியிச்சரமுடைய நாயனாற்குக் குடிகாடு ஒன்றை வரிநீக்கி வழங்கியுள்ளான்.

மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் (13 ஆம் ஆட்சியாண்டு) கிபி 1191 ஆம் ஆண்டு நிசாதராசன் திருக்கொடுங்குன்ற முடையானான (நிலைமையழகிய) வீரமழகிய தேவன் இராசேந்திர சோழபுரத்து (கள்ளம்பட்டி) அய்யபொழில் நாச்சியாருக்கு, அமுதுபடிக்குக் கரிப்பற்றில் சுந்தர ஏரி குளமும், குளப்புரவும் குடி நீங்காத் தேவதானமாக வழங்கியுள்ளான்.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கிபி 1199 ஆம் ஆண்டு, சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் சதுர்வேதிமங்கலம் என்ற ஊரில் உள்ள திருசுவாநாசம் பாண்டன் குகையை, உய்ய நின்றாடுவான் கந்தனான ஈசான தேவன் கட்டியுள்ளான். திருக்குன்றமுடையான் கேரளனான வீரமழகிய நிசாதரசன், மூன்றாம் குலோத்துங்கன் கிபி 1199

ஆம் ஆண்டு, அக்குகையில் தங்கும் சாதுக்களுக்கு உணவிற்காக நிலத்தைக் கொடையாகக் கொடுத்துள்ளான்.

சடையன் குலசேகரன் (1190 - 1193) காலத்தில் 1193 ஆம் ஆண்டு, திருக்கொடுங்குன்றன் கேரளன் அழகிய தேவனான வீரமழகிய நிசாதராசன், சிவபுரி திருத்தான்தோன்றீசுவரமுடைய நாயனார் கோயிலில் வீரமழகியார் சந்திக்காகக் குறிச்சி மற்றும் சந்து ஏரி ஊர்களைக் கொடையாக அளித்துள்ளான்.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கிபி 1196 ஆம் ஆண்டு பொன்னமராவதி திருக்கொடுங்குன்றமுடையான் அழகிய தேவனான நிசாதராசன், பொன்னமராவதி இராசேந்திர சோழிசுவரமுடைய நாயனார் திருமடைவளாகத்தில் உள்ள நிலமை அழகியான் திருமடத்துக்குச் சிவ வழிபாட்டிற்கும், ஆண்டார்கள் அமுதுபடிக்கும் குடிகாடு ஒன்றை மடப்புறமாக வழங்கியுள்ளான்.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கிபி 1207 ஆம் ஆண்டு பொன்னமராவதி திருக்கொடுங்குன்றமுடையான் கேரளனான நிசாதராசன், இடையாற்றூர் உடையார் திருத்தான்தோன்றீசுவரமுடைய நாயனாற்கு அமுதுபடி வெஞ்சனங்களுக்கு, இடையாற்றூர் குடிகாட்டில் முள்ளிவயலை இறை குடிமைகளைத் தவிர்த்து நீர்வார்த்துக் கொடுத்துள்ளார்.

முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1190-1218) காலத்தில் கிபி 1206 ஆம் ஆண்டு திருஆலந்துறை (திருஆலத்தூர்) திருக்கொடுங்குன்ற முடையான் அழகிய தேவனான (நிசாதராயன்) நிசாதராசன், திருக்குறம்பூர் உடையார் திருக்குறம்பாண்ட நாயனாற்குத் தேவன் குடிக்காடு, கோலன் ஏம்பல் மற்றும் சண்டமாருத பல்லவதரையன் குடிக்காடு ஆகியவற்றைத் தேவதானமாகக் கொடுத்துள்ளான். மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் கிபி 1217 ஆம் ஆண்டு, மேற்கண்ட திருக்கொடுங்குன்ற நிசாதரசன் தேவியும் பொன்னமராவதி கேரளாண்டார் நிசாதரசன் மகளுமான, கண்ணுடைய பெருமாள் பிராட்டி ஆழ்வார் ஆவார். இவர் ஆலங்குடி வட்டம் திரு அரங்குளமுடைய நாயனார் நாச்சியாரான பெரிய நாயகிக்குக் கோயில் கட்டுவித்துள்ளார்.

பொன்னமராவதி நிசாத அரசர்கள்:-

பொன்னமராவதி நிசாத அரசர்கள், இராசேந்திர சோழன் கேரளனான நிசாதராசன் மற்றும் வீமன் இராசேந்திர சோழன்

நிசாதராசன் ஆகியோர் அரசு செலுத்தியுள்ளனர். இராசேந்திர சோழன் கேரளனான நிசாதராயன், ஒருவரா அல்லது ஒருவருக்கு மேல் அரசு செலுத்தினரா என்பது புலப்படவில்லை. இராசேந்திர சோழ கேரளன் கல்வெட்டுகள் கிபி 1190 வரை காணப்படுகின்றன. இவர்கள் பொன்னமராவதி, கள்ளம்பட்டி, சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர், சிவபுரி ஆகிய ஊர்களில் உள்ள கோயில்களுக்குக் கொடையளித்துள்ளனர். அவை பின்வருமாறு...

இரண்டாம் இராசராசனின் (1146-1165) நான்காம் ஆட்சியாண்டில் (கிபி 1150) பொன்னமராவதி இராசேந்திர சோழீச்சுரமுடைய மாதேவற்குப் புறமலை நாட்டு குமரன் சேந்தகுடி நிலத்திலிருந்து வரிசை இருகலனே தூண் நெல்லும், அந்தராயமும் திருவிழாப் படிக்குக் கொடையளித்துள்ளான்.

கி.பி 1154 ஆம் ஆண்டு (இராசராசன் - 8) இராசராசப் பாண்டி நாட்டு இராசேந்திர சோழவளநாட்டு பொன்னமராவதி இராசேந்திர சோழீச்சுரம் உடைய மாதேவற்குச் சிவலிங்கப் பிரதிட்டைக்கும், விமானப் பிரதிட்டைக்கும், விளக்குப்புறத்திற்கும் தச்சாசிரியன் திருவரங்கத் தேவன் சோலையரசான திருக்கோட்டியூர் ஆச்சாரியனுக்கு, குளப்பற்றாக நீர் வழங்குவதற்கு வரி நீக்கி வழங்கப்படும் நிலம்) நீர்வார்த்துக் கொடையளித்துள்ளான்.

கி.பி 1154 ஆம் ஆண்டு (பராக்கிரம பாண்டியன் 11 ஆம் ஆட்சி ஆண்டில்) திருப்பத்தூர் திருத்தளியாண்டாற்குத் திருவிழாவிற்காக நெல் வழங்கியுள்ளான்.

கி.பி 1157-ஆம் ஆண்டு (இராசராசன் கி.பி 1146-1163) இரட்டபாடி கொண்ட சோழ வளநாட்டு ஒல்லையூர் கூற்றத்து இராசேந்திரசோழபுரத்து கள்ளம்பட்டி மாதேவர்

திருமதீசுவரமுடையாற்கு, திருவமுதிற்கு இறையிலியாக இலந்தை வயலை வழங்கியுள்ளான். அதேயாண்டில் கள்ளம்பட்டி படாரி ஐயப்பொலி நாச்சியாரைப் பிரதிட்டை செய்து, அக்கோயிலுக்கு இவ்வூரைச் சேர்ந்த பூத்தவயல் குடிகாட்டை நீர்வார்த்துக் கொடுத்து, மாத்தால் அரைக்கால் பழங்காசும், முக்கல நெல்லும் வழங்க கல்வெட்டிக் கொடுத்துள்ளான்.

கி.பி 1165 ஆம் ஆண்டு (இராசராசன் -12) பொன்னமராவதி இராசேந்திர சோழீச்சுரமுடைய மாதேவரைப் பிரதிட்டை செய்தும்,

விமானத்தை எழுந்தருளவித்தும் 30 நாட்களுக்கும் பட்டர்களைப் பிரித்துப் பணியாற்றச் செய்துள்ளான். இக்கல்வெட்டில் நிசாதராசன், வீமன் இராசேந்திர சோழனான நிசாதராசன் என்று குறிப்பிடப்படுகின்றன.

கி.பி 1190 ஆம் ஆண்டு (குலோத்துங்கண் கிபி 1178-1218) பொன்னமராவதி சோழீச்சுரமுடையாருக்குத் திருப்படி மாற்றுக்கும், பமைடி நிபந்தங்களுக்கும் திருமுக்கணி வயல், இராசகேசரி வயல், ஆனை நல்லூர்,வேளாநேரி, பண்டிதக் குடிக்காடு, பிச்சாண்டிக் குடிக்காடு ஆகிய நிலங்களைக் கொடையளித்துள்ளான்.

கி.பி 1179 ஆம் ஆண்டு சீவல்லபன். (1158-1185) கேரளசிங்க வளநாட்டுப் பிரமதேயம் திருப்பத்தூர் பரமேசுவரற்கு, ஒரு நொந்தா விளக்கு எரிப்பதற்கு ஆல உழக்கால் உழக்கு நெய் வழுங்க சாவா மூவாப் பேராடுகள் 50 வழங்கியுள்ளான்.

கி.பி 1183 ஆம் ஆண்டு சீவல்லபன் கேரளசிங்க வளநாட்டுப் பிரமதேயம் நிருபசேகரசருபேதிமங்கலத்து (சிவபுரி)திருத் தான்தோன்றீசுவரமுடைய நாயனாற்கு, திருமடைப்பள்ளிப் புறமாக அந்தராய அமுது கடமைக்கு, முடிகொண்ட சோழப் பேரேரி கீழ் மட்டியூர் வயலில் முக்காலே இரண்டு மாநிலம் இறையிலியாகக் கொடுத்துள்ளான். கி.பி 1190 ஆம் ஆண்டு (குலோத்துங்கன் -12) சிவபுரி திருத் தான்தோன்றிசுவரமுடையார் கோவிலுக்கு, சோழபாண்டிய வளநாட்டு சோழமார்த்தாண்ட சதுர்வேதி மங்கலத்தைப் பிரம்ம தேயமாக வழங்கியுள்ளான்.

வேலன் மரபினர்:-

திருக்கொடுங்குன்றத்திற்கு (பிரான்மலைக்கு) அருகில் துவராபதி என்னும் பேரூர் இருந்தது. அவ்வூர் இப்பொழுது துவரங்குறிச்சி என அழைக்கப்படுகிறது.

இத்துவராபதியில் வேலன் என்னும் மரபினர் கிபி 11 ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் அரசு செலுத்தியுள்ளனர். அவர்களில் கந்தன் சுந்தரத் தோழன் (55, 1928-29) கந்தன் மங்கலத் தேவன் (65 1928-29), கந்தன் கங்கை கொண்டான் (70 1928-29) ஆகியோர் முதன்மையானவர்கள். இம் மூவரில் கந்தன் சுந்தரத் தோழன் ஆன துவராபதி வேலன், இராசேந்திர சோழனான நிசாதரசனிடம் நெருங்கிய அரசியல் தொடர்பு வைத்திருந்ததாகத் தெரிகிறது.

இராசேந்திர சோழன் கேரளனான நிசாதரசனுக்குப் பிறகு 13- ம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் கேரளாண்டவரான நிசாதராசன் என்பவர், பொன்னமராவதியில் அரசு செலுத்தியதாகத் தெரிகிறது. இவருக்கு மகள் கண்ணுடைய பெருமாளான பிராட்டி ஆழ்வாரைத் திருக்கொடுங்குன்ற நிசாதரசனுக்கு மணம் முடிந்துள்ளான். பொன்னமராவதியில் மேற்கண்டவர்கள் தவிர வேறு யாரும் அரசு செலுத்தியிருக்கலாம்.

மக்கள் வேண்டுகோளுக்கு இணங்கி ஒருவரோ, சிலரோ நிசாதரசர்கள் ஓலை மூலம் அறங்கள் செய்ய ஆணை பிறப்பித்து நிறைவேற்றியுள்ளதைக் கல்வெட்டுகளில் பொறித்து உள்ளனர். அவை பின்வருமாறு.

மறவாமதுரையான வடமதுரை ஊரவருக்கு நிசாதரசன் ஓலையனுப்பியுள்ளார். அதன்பேரில் ஊரார், தங்கள் நாயனார் அகளங்கயீசுவரமுடையாற்குத் தங்கள் ஊர்ப்பற்றி நெடுங்குளம் நத்தம் ஆகியவற்றில் உள்ள நன்செய் புன்செய் நிலங்களிலிருந்து கிடைக்கும் வருவாயில் நாயனார் திருவமுதிற்கும், திருப்பணிக்கும் செலவிட முடிவு செய்தனர்.

பொன்னமராவதி திருமேற் கோயிலான அழகப் பெருமாள் கோயில் திருப்பணிக்கும் போனகத்திற்கும் ஏற்பாடு செய்ய, கோயில் காப்பாளர்களுக்கு நிசாதரசர் ஓலை அனுப்பியுள்ளார். உடன் விண்ணகர அழகப் பெருமாள் கோயில் காப்பாளர்களான திருவடி பிடிக்கும் நம்பிமாரும், வைணவர்களும் சீகாரியம் செய்வார்களும், கணக்கப் பண்டாரிகளும் கூடி, சேவூரான அழகப் பெருமாள் நல்லூரைக் கோயிலுக்குத் திருவிடையாட்டமாக வழங்கினர்.

முடிவுரை

நிசாதராசர்கள் வழங்கிய கொடைகள், அரசாட்சியில் தொடர்புடைய இடங்கள், பணிகள், அரசியல், நிர்வாகம் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன. பிரான்மலை நிசாதராசர்கள், பொன்னமராவதி நிசாதராசர்கள் ஆகியோர் பற்றிய செய்திகள் ஆராய்ந்து கொடுக்கப் பட்டுள்ளன. நிசாதராசர்களுக்கும் வேலன் மரபினருக்கும் உள்ள தொடர்புகள் ஆராயப்பட்டுள்ளன.

துணை நூல் பட்டியல்

1. இராசேந்திரன், கரு புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள், பாண்டியர் வரலாற்று ஆய்வு மையம், மதுரை

2. தமிழரசன், பு.சி, புதுக்கோட்டை மாவட்ட சிற்றரசர்கள், தமிழ்க் கோட்டம், புதுக்கோட்டை, 2022

பெருமைமிகு வேட்டுவர் - சில நினைவுகள்

பேராசிரியை சு.தமிழ்ப்பொன்னி M.Sc., B.Ed.,
கருவூர்

கொங்கு நாட்டின் பூர்வ குடிகளான வேட்டுவர்கள் பண்டைக்காலத்தில் கோட்டை கட்டியாண்ட பெருமைக்குரியவர்கள் இவர்களது வரலாற்றுப் புகழ்மிக்க ஊர்க்ளைப் பற்றியும், பக்திமார்க்கத்தில் தலைசிறந்து விளங்கிய கண்ணப்ப நாயனார் பற்றியும் சிந்தித்து ப்பார்த்தேன் பெருமகிழ்ச்சியடைந்தேன். ஆண்டாளுக்கு இணையான அப்பி பாளையம் சௌந்தரநாயகி, பழமங்கலம் நடுகல் புகழ் கரைய குலச் சொக்கன் வீரமிகு வெஞ்சமன், கடையெழு வள்ளல்களுள் முத்திரை பதித்த இணையற்ற கொடைவள்ளல், மாபெரும் வீரன் வல்வில்ஓரி, ராஜவாய்க்கால் வெட்டிய அல்லாள வேட்டுவன், பூலுவ வேட்டுவருள், புகழ்மிகு புரவிபாளையம் கோபண்ண மன்றாடியார், தலையூர் காளி, சிற்றரசன் கொடுமுடி ஆகியோரை சரித்திரம் என்றென்றும் போற்றிப் புகழும் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. என் எண்ணச் சிதறல்கள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் பேருவகை அடைகிறேன்.

தென்னிலை

வேட்டுவர் வரலாற்றில் தென்னிலைக்குச் சிறந்த தோர் இடமுண்டு. தென்னிலைப் பட்டக்காரரின் தலைமையிடம் தென்னிலை. தென்னிலையில் வேட்டுவர் கோட்டை கட்டி ஆண்டனர் தென்னிலை பட்டக்காரரின் குலதெய்வம் பொன்னீலியம்மன் இவருக்கு சின்னதாராபுரம் அகிலாண்டேஸ்வரி கோயிலில் முதல் உரிமை உண்டு. இப்பகுதிகளில் வேட்டுவர் படைவீரர்களாகப் பணிபுரிந்தனர். எனவே வேட்டுவர் விழாக் கொண்டாடும் உரிமையைப் பெற்றனர்.

தென்னிலை ஒரு பெரிய கிராமம். எனவே இது கீழ்ப்பாகம், மேல்பாகம், தென்பாகம் என்று மூன்று தனித்தனி கிராமங்களாகப்

பிரிக்கப்பட்டு மூன்று ஊராட்சிகள் செயல்படுகின்றன கீழ்ப்பாகம் மலையம்பாளையம் (P.T.தேவனகவுண்டரின் இருப்பிடம்).

இங்கு வசிப்பவர்களுக்கு தளிக்கோட்டையில் எழுந் தருளியுள்ள தேவியண்ணசாமியே குலதெய்வம். காட்டுப்பாளையம் தளிக்கோட்டை ஆகியவை இதனருகில் உள்ளன. தென்னிலை நீலியம்மன் வேட்டுவர்க்கு உரிமையுள்ள குலதெய்வம். மோக்காளிக்கு இக்கோயிலில் முதல் உரிமை இரண்டாவது முதன்மை சிறுத்தலை வேட்டு வர்க்கு. வேளாளர் இன ப் பெருங்குடியினர்க்கு மூன்றாவது உரிமை . நான்காவது உரிமை சோழிய வேளாளருக்கு. தென்னிலையில் வேங்கபுரம் அம்மன் கோயில், கண்டியம்மன் கோயில் மங்கலம் காளியம்மன் மின்னாம்பள்ளி வன்னியம்மன் கோயில் ஆகியனவும் இருந்தன இவ்வூரில் சிறுத்தலை வேட்டுவன் மாகாளி வேட்டுவன், வெங்கச்சி வேட்டுவன், குட்டியாக்கவுண்டன், மாந்தாக்கவுண்டன் ஆகிய 5 பேருக்குரிய அரண்மனையும், 5 பிள்ளையாரும் இருந்தன.

வேட்டுவர் தென்னிலைக் கோட்டை மட்டுமின்றி கோசணம் கோட்டை, அந்தியூர்க்கோட்டை, பரமத்திகோட்டை, வெஞ்சமாக்கூடல் கோட்டை ஆகியவற்றையும் கட்டி ஆண்டனர்.

பட்டாலி

கொங்கு நாட்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்களுள் பட்டாலியும் ஒன்று. கொங்கு 24 நாடுகளில் ஒன்றான காங்கய நாட்டுக்குரிய பழமை மிக்க ஊர்களுள் 14 ஆவதாக வைத்து சிறப்பிக்கப்படுகிறது.

1820 இல் எழுதப்பட்ட மெக்கன்சி ஆவணத்தில் இவ்வூரும் இடம் பெறுகிறது.

தென்னிலைச் செப்பேடு வேட்டுவரின் சாதனையைக் கூறும் செப்பேடுகளில் ஒன்றாகும் . இச்செப்பேடு தென்னிலை பட்டக்காரர் எம்.ஏ., பகவதிக் கவுண்டரிடம் இருந்தது. ஒக்கிலியர் முதலான பகைவர்களை வேட்டுவர் வெட்டி முடிக்கியதால் இச்செப்பேடு வழங்கப்பட்டது தென்னிலையிலிருந்து பல வீரர்களின் நடுகற்கள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்று இன்று கரூர் அகழ்வைப்பகத்தில் உள்ளது இதனால் தென்னிலை வீரம் விளைந்த ஊர் என்பது புலனாகும்.

செல்வப் பட்டாலி பத்தர் பணி பட்டாலி எனப் புகழ்ப் பட்டாலிக்கு அருணகிரிநாதர் மூன்று திருப்புகழ்ப் பாடல்கள் பாடியுள்ளார். பயிரலி

அருள் பட்டாலி, மயில்கள் நடமிகு பட்டாலி, கொங்கிற் பட்டாலி என அவர் பட்டாலியைப் புகழ்கிறார்.

சிவன்முருகன் பட்டாலி பால் வெண்ணீசுவரர் பாலன் எனக் குறிக்கப்பெறுகிறார்.

அன்னம் பயிலும் பட்டாலிச் சிவன்மலை,
ஞாலம் புகழும் பட்டாலிச் சிவன்மலை

என்பன இலக்கியத் தொடர்கள். சிவன்மலை முருகன் பட்டாலியூரன் என்றே அழைக்கப் பெறுவது சிறப்பாகும்.

பட்டாலி வேட்டுவருடன் வெண்கொற்றர், குறும்பில்லர் குல வேட்டுவர்களும் இங்கு வாழ்ந்தனர் ஆனால் பட்டாலிக் கிராமத்தின் உட்கிராமங்களில் வேட்டுவர்கள் எவரும் இன்று இல்லை வேட்டுவர்குலப் பெருமக்கள் பலர் செல்வம் செல்வாக்குடன் வாழ்ந்த பட்டாலியில் வேட்டுவர்களே கோயில் முப்பாட்டுக்கார ர்கள். முப்பாட்டுக்காரர் கிராமத்தில் வேண்டும் என்பதற்காக இன்று 24 ஊர்க் கொங்கு வேளாண் பெருமக்களும் வேட்டுவர் ஒருவரை அழைத்துவந்து குடியமர்த்தி யுள்ளனர்.

பட்டாலி வேட்டுவர் கல்வெட்டு

பிடாரிசிலை . 10.02.1995 அன்று பட்டாலியில் இராயவலசு, பூங்கந் தோட்டம், என்னும் பகுதியில் கரியகா ளியம்மன் என வழங் கும் பிடாரி சிலை பார்வையிடப்பட்டது. முற்றிலுமாக அழிந்த அக்கோயில் நிலையில் கொங்கு சோழர் கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

1) ஸ்வஸ்தி ஸ்ரீ
2) கோ அபி
3) மானசோ
4) ழுஸ்ரீராஜா
5) திராஜதேவ
6) ற்குத்திருநெ
7) வழுத்திட்டு
8) ச் செல்லா
9) நின்றதிரு
10) நள்ளியாண்
11) டு பத்தாவ
12) துநாயக்
13) விச்சி நாக
14) ந் சிலம்பி
15) யேந் குறும்
16) புள்ளரில் எ
17) ந் மணவான
18) ந் காவன்அ
19) ரையனைச்
20) சாத்தி எடுப்
21) பிச்ச பிடாரி
22) கோயில் இ
23) துரக்ஷிப்பா
24) ந் காலிற்பொடி
25) எந்தலை மேலிது

பிற கல்வெட்டுக்கள்

பட்டாலி பால்வெண்ணீசுவரர் - நல்மங்கையம்மன் கோயிலில் 17 கல்வெட்டுக்கள் உள்ளன. 1920 ஆம் ஆண்டு தாராபுரம் வட்டக் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் படியெடுக்கப்பட்டபோது அவைபடி எடுக்கப்பட்டுள்ளன. கூத்தன் யாழ் வல்லான் என்ற பெயர்களைப் பெற்ற ஆடவர் இங்கு இருந்துள்ளனர். கொங்கு அரசர்களின் உயர் அலுவலர்களான பெருமாள் முதலிகள் இங்கு பல திருப்பணிகளைச் செய்துள்ளார். கொங்குச் சோழன் வீர ராசேந்திரன் இங்கு வந்து தன் பெயரால் சந்தி ஒன்றை நிறுவினான் என்பது கல்வெட்டால் புலனாகிறது.

வணிக மையமான பட்டாலி

கிபி 10 முதல் 14 ஆம் நூற்றாண்டு வரை இவ்வூர் மிகச்சிறந்த வணிக மையமாக புகழ்ப் பெற்றிருந்தது. பிரான்மலையில் நடைபெற்ற பெரும் சந்தையில் கலந்து கொண்ட காங்கய நாட்டு ஊர்களில் பட்டாலியும் ஒன்று என்பது பெருமைக்குரியது இங்கிருந்த ஒரு வணிக மையத்திற்கு இரட்டருமொழி சோழப் பெருந்தெருவு என்று பெயர் உலகப் பு கழ்பெற்ற வண்ணக் கல்மணி வணிகத் தலமான படியூர் என்னும் புகழ்மிக்க ஊர் பட்டாலியின் அருகில் உள்ள என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இவ்வூரில் மழைக்காலங்களில் மேல்மட்டத்திலும், பலவகையான கல்மணிகள் கிடைக்கின்றன.

பட்டாலியில் பல புகழ்மிக்க வேட்டுவத் தலைவர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் பட்டாலி வேட்டுவர் சொக்கன் ஞானசம்பந்தன் என்பான் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம் விசயமங்கலம் நாகேசுவர சுவாமி கோயிலில் சந்தியா தீபம் ஏற்றிவைத்துப் பெருமைபட்டான் பட்டாலியில் வேட்டுவர் பலர், பல திருக்கோயில்களுக்கு அறக்கட்டளை நிறுவியுள்ளனர்.

கொங்குநாட்டு முருகன் மலைக்கோயில்களில் வேட்டுவர் முதல் உரிமை

ஆர். பழனிசாமி சிவன்மலை
அறக்கட்டளைச் செயலாளர்.
அலைப்பேசி: 94432 29037.

முன்னுரை

கொங்கு நாட்டில் பன்னெடுங்காலமாகப் பல்கிப் பெருகிச் சிறப்புடன் வாழ்ந்துவரும் சமுதாயம் வேட்டுவர் சமுதாயமாகும். கொங்கு நாட்டு ஆவணங்கள் பலவும் வேட்டுவர் சமூகத்தினரை, பூர்வ குடிகள் என்று கூறுகின்றன. வேட்டுவர்கள் கொங்கு நாட்டின் பூர்வ குடிகள் என்பதற்குப் பலவிதமான ஆதாரங்கள் உள்ளன. சங்க இலக்கியங்களும் கல்வெட்டுகளும் இக்கருத்தை உறுதி செய்கின்றன. பல அறிஞர்களும் இக்கருத்தை உறுதி செய்கின்றனர். குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான் என்பர். அவ்வகையில் குலதெய்வ வழிபாடு என்பது பழங்குடிகளால் தங்கள் முன்னோர்களை வழிவழியாக வணங்கி வருவதாகும். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலே வாளோடு தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி. இந்தத் தமிழ்க் குடியில் முதன்மை யானவர்கள் வேட்டுவர்கள் என்று பல இலக்கியங்களும் வரலாறுகளும் எடுத்துரைக்கின்றன. தங்களுடைய குலமுன்னோர்களைத் தெய்வமாக வேட்டுவர்கள் நடுகல் வைத்து வழிபட்டு வந்தார்கள். குலதெய்வத்தை வழிபடும்போது வேட்டுவ அரசர்களுக்கே முதன்மை வழங்கப்பட்டது. பின்னாட்களில் தொழில்களை வைத்து சாதிகளாகப் பிரிந்த பின்பும் அனைத்துப் பிரிவு மக்களும் ஒன்றுபட்டு, குல தெய்வங்களை வணங்கினர். அதனை இன்றும் கொங்குநாட்டில் காண முடியும் . குலதெய்வக் கோவில்களில் திருவிழா கொண்டாடும் பொழுது அந்த முறைமைகளை அங்கே கடைபிடிப்பதைப் பார்க்கலாம். ஒவ்வொரு பிரிவினருக்கும் திருவிழா காலங்களில் முறைகளை முறைப்படுத்தி

மரியாதை செய்வதைக் காணமுடிகிறது குலதெய்வக் கோவில்களில் முதல்திருநீறு வேட்டுவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. மேலும், பெரும்பாலான கொங்குநாட்டு மலைகளில் உள்ள முருகன், சிவன் கோவில்களில் முதல் மரியாதையான பரிவட்டம் கட்டுதல் முதல் திருநீறு கொட்டுதல் வரையான மரியாதை வேட்டுவர்களுக்கே கொடுக்க பட்டுகிறது. இதன் மூலம் வேட்டுவர்களின் தொன்மையை அறியமுடிகிறது.

வேட்டுவர்களுக்கு முதல் மரியாதை உள்ள முருகனின் மலைக்கோயில்கள் :

1) சிவன்மலை - பட்டாளி வேட்டுவர்
2) கபிலர்மலை - மூல வேட்டுவர்
3) அருள்மலை - மூல வேட்டுவர்
4) சென்னிமலை பிராட்டி அம்மன்
5) சொக்கநாதர் மலை - வேங்கை வேட்டுவர்
6) திருச்செங்கோட்டு மலை
7) ஆறுநாட்டார் மலை - சாந்தப்படை வேட்டுவர்
8) ஓதிமலை - அந்தி வேட்டுவர்
9) பாலமலை
10) பொன்மலை, ஆண்டவர் - பில்லை வேட்டுவர்
11) மருதமலை கோவை
12) நாகமலை அறச்சலூர்
13) பொன் நாகமலை, கண்ணாங்காட்டுப்பாளையம், நம்பியூர்
14) செஞ்சேரிமலை பொள்ளாச்சி புரவிபாளையம் ஜமீன்தார்
15) பு.புளியம்பட்டி - மாராயிபாளையம் மு.ஈ.ச. கோயில்
16) நன்னமலை (ஊராட்சிக் கோட்டை மலை).
17) ஸ்ரீ செல்லகுமாரசாமி மலை - மலையப்பாளையம்
18) திட்டமலை
19) வள்ளிமலை சோழசிராமணி
20) பச்சைமலை

முருக வழிபாடு

முருகனை வழிபடும் வழக்கம் பழங்காலந் தொட்டே இருக்கிறது. அவரை வழிபடும் வேட்டுவருக்கும் முருகனுக்கும் உள்ள தொடர்பானது நெடுங்காலப் பிணைப்பு ஆகும். வேட்டுவர் எங்கு இருக்கிறார்களோ அங்கெல்லாம் முருகனை மறவாமல் கொண்டு சேர்ப்பர். முருகன் ஆலயங்களில் நடைபெறும் பல்வேறு வகையான வழிபாடுகள்: காவடி எடுத்தல், அலகு குத்துதல், பால்குடம் எடுத்தல், முடி இறக்குதல் (மொட்டை போட்டுக் கொள்ள நேர்ந்து அதன்படி செய்தல்) மற்றும் பாத யாத்திரை. முருகன் கோவில்கள், முருக வழிபாடு தமிழ்நாட்டில் மிகவும் அதிகம் காணப்படுகின்றது. மேலும் இன்று தமிழகம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளில் முருக வழிபாட்டைத் தொடர்கின்றனர்.

முருகன் - பெயர்க் காரணம்

‘முருகு’ என்றால் தமிழில் ‘அழகு’ என்று பொருள். அதன் அடிப்படையில் முருகனானவன் அழகன் ஆகின்றான். தமிழின் மெல்லினம், இடையினம் மற்றும் வல்லினத்தை ஒருசேர இணைத்த பெயராக அமைந்தது. தென்னிந்தியாவின் பண்டைய தமிழர்களின் தலைமைத் தெய்வம் வேட்டுவ முருகன், போர் தெய்வமான கொற்றவையின் மகன். பின்னர் அவர் வட இந்தியப் போர்க் கடவுளுடன் ஓரளவு அடையாளம் காணப்பட்டார். ஸ்கந்தன் அவருக்குப் பிடித்த ஆயுதம் திரிசூலம் அல்லது ஈட்டி, அவரது பதாகையில் காட்டுக்கோழியின் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. முருகன் வழிபாட்டிற்கான வழிகாட்டியான" திருமுருகாற்றுப்படை, வழிபாட்டாளர்கள் பார்வையிட ஊக்குவிக்கப்படும் கடவுளின் முக்கிய ஆலயங்களின் விளக்கமாகும். தமிழ்நாட்டில் முருகப்பெருமான் இரண்டு இடங்களில் மிகவும் விரும்பி அருள்பாலிக்கிறார் என்று அருணகிரிநாதர் சுவாமிகள் திருப்புகழ் என்னும் செஞ்சொல் சந்தக்கவி மாலையில் குறிப்பிடுகிறார். முதலாவது, ராஜவேட்டுவர் திணைப்புனம் வந்து கிழவனாய் வேடம் புனைந்து வள்ளியை மனம் புரிந்த இடமான வள்ளிமலை. இரண்டாவது, காங்கயம் சிவன்மலை. இதிலிருந்து திருமுருகன் வேட்டுவர்மீது பற்றுக் கொண்டுள்ள பாங்கின் சிறப்பினைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

1. சிவன்மலை

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அருகே சிவன்மலையில் சுப்பிரமணியர் மலை திருக்கோயில் அமைந்துள்ளது. தமிழக அளவில் 36 பெரிய கோவில்களில் ஒன்றான இக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் பிரதானமான இக்கோயிலைத் தமிழக அரசு சுற்றுலா தலமாக அறிவித்துள்ளது. ஸ்ரீரங்கம் கோபுரம் போல பல கிலோமீட்டருக்குத் தொலைவிலேயே இருந்தாலும் பார்வைக்குத் தெரிய வருவது போலவே சிவன்மலை சுப்பிரமணிய சுவாமி கோயில் ராஜ கோபுரமும் தொலைவிலேயே பார்வைக்குத் தெரியும் வண்ணம் அமைக்கப்பட்டது சிறப்புமிக்கது.

வேட்டுவ வள்ளியைக் கவர்ந்து வந்த வேலாயுத பெருமானைத் தொடர்ந்து வெகுண்டு வந்த வேட்டுவ இளவரசர்களான வள்ளியின் சகோதரர்கள் போரில் மாய்ந்தனர். வள்ளியின் வேண்டுகோளுக்கு இணங்கி வேட்டுவ இளவரசர்களை உயிர் பெறச் செய்தார் என்ற இக்கருத்தை வலியுறுத்துவது போன்று சிவன்மலையின் மூலஸ்தானத்தில் முருகவேல் வள்ளியுடன் திகழ்கிறார். வேட்டுவ அரசர் பட்டாளி வேட்டுவர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்த பெருமைமிகு பதிகளுள் பட்டாளி என்னும் ஊர் மிகவும் குறிப்பிடத்தக்கது. இங்கு பட்டாளி வேட்டுவர் கல்வெட்டுகள் மிகுதியாக உள்ளன . இவ்வூர் காங்கேய நாட்டின் புகழ் பூத்த 14 ஊர்களில் ஒன்று. காங்கேய நாட்டில் உள்ள சிவன்மலை முருகன்தலம் வரலாற்றுப் புகழ்மிக்கது. இச்சிவன்மலைக்கு சிவன் மலைக்குரிய ஊராக இருந்தது எனவே தான் சிவன்மலை முருகப்பெருமான் பட்டாளி முருகப்பெருமான் என்றே கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் இலக்கியங்களிலும் குறிப்பிடப் பட்டுள்ளன. சிவன்மலை முருகன் பட்டாளியூரன் என்றே மக்களால் அழைக்கப்பட்டான் . பட்டாளிகுல வேட்டுவக் கவுண்டர் சார்பில் நடைபெறும் மண்டபக் கட்டளைதாரர் முதல் நிகழ்வாக சிவன்மலை முருகன் உற்சவம் விக்ரகம் வேட்டுவ முருகன் மற்றும் வள்ளி தெய்வானையுடன் சிவன்மலை அடிவாரத்தில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டுள்ள வேடுகவுண்டர் திருமண மண்டபத்தில் முதல்நாள் காலை முதல் மாலை வரை எழுந்தருளி பக்தர்களுக்குக் காட்சியளித்து வருகிறார். தாயாரோடும் வள்ளி தெய்வானையோடும் விநாயகர் மற்றும் இடும்பன்

படைத்தளபதி அனைத்து சுவாமிக்கும் அபிஷேகம் மற்றும் மலர் அலங்காரம் செய்து சமுதாய உறவுகள் அனைவரும் முருகப்பெருமானின் அருளாசியைப் பெரும் பொருட்டு அனைத்து விதமான தீபாராதனைகள் நடைபெறுகின்றன. மாலையில் முருகப்பெருமான் வீதி உலாவுடன் அழைத்துச் சென்று ஈஸ்வரன் கோவிலில் முறையாக அறநிலையத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது. ஒருநாள் முழுவதும் உற்சவர் வேட்டுவக்கவுண்டர் மண்டபத்தில் வேட்டுவக் கவுண்டர்கள் மக்களுக்காகக் காட்சியளித்து வருவது அரிய நிகழ்வாகும். தேர் வடம் பிடிக்கும் பொழுது முதல் தேங்காய் உடைக்கும் மாலை மரியாதையை இன்றுவரை ஒட்டப்பாளையத்தைச் சேர்ந்த பட்டாளிகுல வேட்டுவர்களுக்குத் தொடர்ந்து தொய்வின்றிச் செய்து வருகின்றனர்.

2. வள்ளி மலை

வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டத்தில் வேலூரில் இருந்து 23 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது ஞான சக்தியான முருகன் இச்சா சக்தியா வள்ளியை வள்ளி மலையில் திருமணம் புரிந்து கொள்கிறார். முருகப்பெருமானும் வள்ளியும் மனித வடிவில் வந்து தமிழர்களில் களவு (காதல்) வாழ்க்கையும் கற்பு (திருமணம்) வாழ்க்கையும் மேற்கொண்ட இடம் வள்ளி மலையாகும்.

மகாலட்சுமியின் அவதாரமான மான் வயிற்றில் குழந்தையாப் பிறந்தவள் வள்ளி. வள்ளி மலையை ஆண்ட வேட்டுவத் தலைவன் நம்பிராஜன் மரவள்ளிக்காட்டில் அவளைக் கண்டெடுத்து தன் மகளாக வளர்த்து வருகிறார். திருமுருகப் பெருமான் திருத்தணிகை மலையில் இருந்து கால்நடையாக வேடன் வடிவெடுத்து நடந்தே வள்ளி மலைக்குச் சென்று வள்ளியைக் காதல் செய்து விநாயகர் துணையுடன் மணக்கிறார். வள்ளிமலை சிறிய மலையாக இருந்தாலும் 450 படிக்கட்டுகளுடன் செங்குத்தாக அமைந்துள்ளது.

சித்திரை முதல் நாளன்று திருப்படித் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. வேடர்வரி உற்சவத்தை நம்பிராஜன் வம்சத்து வேட்டுவ குலத்தினர் இன்றும் தொடர்ந்து சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

3. ஓதிமலை

ஈரோடு மாவட்டம் புஞ்சைப் புளியம்பட்டியில் இருந்து மேட்டுப்பாளையம் செல்லும் வழியில் 10 கிலோ மீட்டர் தொலைவில்

அமைந்துள்ளது. முருகன் போகருக்கு முதல் தரிசனம் தந்த தலம். சுவாமி மலையில் ஓங்கார தத்துவத்தின் பொருளை உரைத்த முருகன் ஓதிமலையில் வேதத்தை ஓதியதால் இத்திருத்தலம் ஓதிமலை என்று அழைக்கப்படுகிறது. சுவாமி ஓதிமலை ஆண்டவர் எனும் பெயரால் அழைக்கப்படுகிறார். ஆறுமுகம் கொண்ட முருகன் 18 சித்தர்களில் ஒரு முகத்துடன் குமாரபாளையம் சென்றதால் ஓதி மலையில் ஐந்து முகங்களுடன் எட்டு கரங்களுடன் காட்சி தருகிறார்

பிரம்மனை இரும்புச் சிறையில் அடைத்ததால் இவ்வூர் இரும்பொறை என்று அழைக்கப்படுகிறது. முருகப்பெருமான் வீற்றிருக்கும் மலைகளிலேயே ஓதிமலை தான் மிகவும் உயரமானது இக்கோயில் 1800 படிகளுடன் செங்குத்தான பாதையில் அமைந்துள்ளது. போகர் யாகம் செய்த இடத்தில் தற்போது மணல் வெண்ணிறமாக உள்ளதால் விசேஷ காலங்களில் பக்தர்களுக்கு வெண் மணலே பிரசாதமாக வழங்கப்படுகிறது.

வரலாற்றுக் காலம் தொட்டு அந்தி வேட்டுவ குலத்தைச் சார்ந்தவர்களும் அவரது வாரிசுதாரர்களும் தர்மகர்த்தாவாகவும் பட்டக்காரராகவும் தேர்த் திருவிழா மற்றும் சிறப்பு பூஜைகளைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றனர்.

4. ஆறு நாட்டார் மலை

கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையத்தில் அமைந்துள்ளது. இங்குதான் சங்ககாலச் சேர மன்னர்களின் பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இங்குள்ள முருகப்பெருமான் வரலாற்றுக் காலம் தொட்டு கொங்கு 24 நாடுகளில் வேட்டுவ குலத்தினரே பெரும்பான்மையாக வாழும் ஆறு நாடுகளைச் சேர்ந்த வேட்டுவ குலத்தவர்களின் பூஜை உரிமையையும் குடிபாடும் பெற்று விளங்கி வருபவராகும். இவ்வாறு வேட்டுவர் நாட்டார்களின் குல தெய்வமாக இப்பெருமான் விளங்கி வருகின்றமையால் ஆறுநாட்டார் மலை என்று பெயர் பெற்றது. சாந்தப்படைகுல கவுண்டர்களுக்கே முதல் உரிமை உள்ளது. இம்மலையில் வேலூன்றி வழிபாடு நடத்தியதால் இவ்வூர் வேலாயுதம் பாளையம் என்று பெயர் பெற்றது. சமணர்கள் ஓய்வு பெற்ற சமணப் படுக்கையும் வெவ்வேறு கல்வெட்டுகளும் சேர நாட்டு வேட்டு அரசர்கள் மற்றும் படைத் தளபதிகள் நடுகல்லும் அமைந்துள்ளது.

சாந்தப்படை குலத்தைச் சேர்ந்த செம்புலிங்கப்பட்டக்காரரும் ஊர்க் கவுண்டர் முத்துசாமி கவுண்டர் அவர்களும் ஆறுநாட்டார் மலையில் முதல் மரியாதை, பரிவட்டம், முதல் திருநீறு, தேருக்கு முதல் தேங்காய் உடைத்தல் போன்ற மரியாதையைப் பெற்று வருகின்றனர். இவர்கள் பட்டக்காரரில் ஒருவராக விளங்குகின்றனர்.

5. கபிலர் மலை - அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணியர் திருக்கோயில்:

மூல வேட்டுவ மன்னனான அல்லாள இளைய நாயகனின் வாரிசுதாரர்கள்தான் முதல் மரியாதையும் முழு உரிமையும் பெற்று வருகின்றனர்.

புரட்டாசி மாதம் நவராத்திரி ஒன்பது நாள்கள் முடிந்து- அதாவது, ஆயுத பூஜைக்கு மறுநாள் விஜயதசமி அன்று மன்னர் மற்றும் குறுநில மன்னர் பரம்பரையினர் வேட்டைக்குச் செல்வது, அம்புப் பயிற்சி செய்வது அல்லது அம்புச்சேவை மற்றும் பரி வேட்டை ஆகிய பெயர்களில் வழக்கத்தில் உள்ள நிகழ்ச்சியாகும். கபிலர் மலையில் ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் ஆயுத பூஜைக்கு மறுநாள் அதாவது, விஜயதசமி அன்று இளைய நாயகனின் வாரிசுகளுக்குத் திருவிழாவினைப் போல் அம்புசேவை நிகழ்ச்சி நடைபெறுவது தற்போதும் வழக்கத்தில் இருந்து வருகிறது. விஜயதசமி தினத்தன்று இளைய நாயக்கர் வாரிசு பட்டக்காரர் அவர்களை இருங்கூரிலிருந்து கபிலர்மலை வரை பல்லக்கில் வைத்து அழைத்து வருவார்கள். இவரை கோயில் சார்பாக பூரண கும்பத்துடன் வரவேற்று மாலை மரியாதையுடன் கோவிலுக்கு அழைத்துச் செல்வார்கள்.

வேட்டுவப் பட்டக்காரர் முன்னிலையில் கபிலர் மலையின் மேல் உள்ள மூலவர் முருகப்பெருமானுக்கு அலங்காரம் செய்து ஆராதனைகள் நடைபெறும். தரிசனம் முடிந்தபின் உற்சவரையும் இருங்கூர் பட்டக்காரரையும் மலைமேல் இருந்து கீழே அழைத்துவந்து உற்சவரை குதிரை வாகனத்தில் வைத்து கபிலர்மலைக்கு வடக்கே கபிலக் குறிச்சிக்கு அழைத்துச் செல்வார்கள். அங்கே உள்ள மைதானத்தில் புண்ணியாசனம் செய்து வாழை மரத்திற்குத் துண்டு, வேட்டி கட்டி அம்புசேவை நிகழ்ச்சி நடைபெறும். பட்டக்காரனின் அம்புசேவை முடிந்ததும் உற்சவருடன் கபிலர் மலையை வலம் வருவார்கள். பின்னர் மலைமீது உள்ள கோவிலுக்கு அழைத்துச் செல்வார்கள். மலைமீது

உள்ள மூலவருக்கு அபிஷேகம் ஆராதனை செய்து இளைய நாயக்கருக்கு மாலை அணிவித்து முதல் மரியாதை செய்வார்கள் பூஜை முடிந்து பட்டக்காரரை மலைக் கோயிலின் குருக்களின் இல்லத்திற்கு அழைத்துச் செல்வார்கள். மறுநாள் காலை குருக்களின் இல்லத்தில் இருந்து மீண்டும் பல்லக்கில் வைத்து இருங்கூர் பட்டக்கார் இல்லத்துக்கு அழைத்துச் செல்வார்கள். தற்போதுவரை இந்நிகழ்வு நடைபெற்று வருகிறது.

6. அருள்மிகு பொன்மலை நாகமலை சுப்பிரமணியர் திருக்கோயில்

நம்பியூர் வட்டம் எலத்தூர் கிராமம். கொங்கு மண்டலத்தில் தொன்மையான பிள்ளை வேட்டுவர்களுக்கு உரித்தான ஆலயம் 600 ஆண்டுகளுக்கு மேல் பழமையான ஆலயம் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. பழங்காலத்தில் இந்தப் பகுதியில் சிலர் வியாபாரத்திற்காக மைசூர் வரை சென்றுள்ளனர். பொன்மலையின் குன்றின் மீது தனித்திருந்த முருகப்பெருமானை வணங்கிச் சென்றுள்ளனர். அப்போது மைசூரை ஆண்ட மகாராஜாவிற்கு முதுகப் பாலை நோய் வந்து மிகவும் அவதிப்பட்டு உள்ளார். வணிகத்துக்குச் சென்றவர்கள் இங்கிருந்து கொண்டு செல்லும் வெண்ணையை முருகனிடம் வைத்துச் சென்றனர் அந்த வெண்ணையை மகாராஜாவின் முதுகில் வைத்துக் கட்டியுள்ளனர் அவர் முதுகுப் பாலை நோய் குணமாகிவிட்டது. வணிகரிடம் இத்திருத்தலம் எங்கு உள்ளது எனக் கேட்டறிந்து முருகப்பெருமானுக்கு ஆலயம் எழுப்பி அதனைச் சுற்றியுள்ள நிலங்களைப் பூஜைக்கு 82 ஏக்கர் நிலங்களை ஒதுக்கி மங்கல இசையுடன் மூன்றுகால பூஜை நடைபெற்று வந்துள்ளது. நவராத்திரி விழாவும் கந்தர் சஷ்டி விழாவும் நமது சமுதாயத்தைச் சேர்ந்த வேட்டுவர் மணியக்காரர் குடும்பத்தார் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

7. பொன்மலை வேலாயுதசாமி கோயில்:

கோவை மாவட்டம் கிணத்துக்கடவு: பூலுவ வேட்டுவ குலத்தைச் சார்ந்த குறுநில மன்னர் புரவிபாளையம் கோப்பன மன்றாடியார் பொன்மலையில் உள்ள வேலாயுதசுவாமி கோயிலைக் கட்டினார். இன்றும் இக்கோயிலின் முழு உரிமையும் முதல் மரியாதையும் பெற்று வருபவர்கள் புரவிபாளையம் ஜமீன்தார் கோப்பண்ண மன்றாடியார் பரம்பரையினரே ஆவர்.

8. அருள்மலை முருகன் கோவில்:

கோபிசெட்டிபாளையத்தில் இருந்து திருப்பூர் பிரதான சாலையில் இருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் உள்ள தோரணவாவியில் இக்கோவில் அமைந்துள்ளது. அருள்மலை எனப்படும் தோரணவாவி முருகன் கோவில் ஒரு சிறிய குன்றின் மேல் அமைந்துள்ளது. இந்தக் கோவிலுக்குச் செல்ல 60 படிகள் அமைக்கப்பட்டுள்ளன. அருள்மலை ஆண்டவர் பழனி முருகனைப் போன்று தடி ஏந்தியவர். கோயில் முதல் மரியாதை முழு உரிமை பெற்று வருபவர்கள் வேட்டுவர்களே.

9. திருச்செங்கோட்டு மலை:

திருச்செங்கோட்டு மலையில் உள்ள நாகேஸ்வரர் கோயில் வேட்டுவ மன்னன் அல்லாள இளைய நாயக்கரால் கி.பி. 1643 - ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. மைசூர் உடையார்களின் படைத்தலைவன் நஞ்சராயன் என்பவன் கி.பி. 1643 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 25 - ஆம் நாள் தன் வேல்படையுடன் வந்து திருச்செங்கோட்டு மலைக்கோயில் உள்ள அருள்மிகு அர்த்தநாரீஸ்வரருக்குச் சொந்தமான பொன்னையும், பொருளையும் கொள்ளையடித்துக் கொண்டு மைசூர் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான் என்ற செய்தியைக் கேட்ட இளைஞர் நஞ்சராயன் படைகளைத் தடுத்து நிறுத்தி படையை வென்று கொள்ளையடித்துச் சென்ற பொன்னையும் பொருளையும் மீட்டு திருச்செங்கோட்டு மலைக்குத் தன் படையுடன் வெற்றி வீரனாகத் திரும்பி வந்தான். திருச்செங்கோட்டு மலையில் கொள்ளை போனதால் ஏற்பட்ட கலங்கத்தைத் துடைத்தெறிய இம்மலைமீது தூய்மையாக்குவதற்கான சடங்குகளைச் செய்து தான் பெற்ற வெற்றியைச் சிறப்பாகக் கொண்டாடிப் பெரும்புகழ் பெற்றான்.

கோவிலில் மண்டபம் கட்டி அதைப் பயன்பாட்டுக்குக் கொடுத்த நிகழ்வை அல்லாள இளையான் பட்டையம் தெளிவாகக் குறிப்பிடுகிறது. ஐப்பசி மாதம் அன்னாபிஷேகம் வேட்டுவக் கவுண்டர் சமுதாயத்தின் சார்பாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வெள்ளிக்கிழமைகளில் வேட்டுவர் சமுதாய மக்கள் பால் அபிஷேகத்துக்கான பால் கொடுத்து வருகிறார்கள். வைகாசி மாதம் தேர்த்திருவிழா மண்டபக்கட்டளை நடந்து வருகிறது. தை மாதம் கிருத்திகையன்று வேட்டுவக் கவுண்டர் சமுதாயம் சார்பாக சிறப்பு பூஜை நடைபெற்று திருக்கோயிலில் வேட்டுவர் சமுதாயத்தின் உரிமையைத் தொடர்ந்து நிலைநாட்டி வருகின்றனர்.

10. சென்னிமலை

ஈரோட்டில் இருந்து பெருந்துறை வழியாக, காங்கேயம் செல்லும் வழியில் 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. சென்னிமலையும் சிவன்மலையும் முருகனுக்கு உகந்த தலங்களாகக் கூறுவர். மலைமீது ஆயிரத்து 300 படிகள் உள்ளன. குடுமி வேட்டுவர்களின் குல தெய்வமாக விளங்கும் பிராட்டியம்மன் தேர் ரதவீதியில் முன்னே செல்ல சென்னிமலை ஆண்டவரின் திருக்கோயில்தேர் பின்னே செல்லும். இதை சிலர் வேட்டுவன் தேர் முன்னே செல்ல சுவாமியின் தேர் பின்னே செல்லும் என்று கூறுவதை மரபாகக் கொண்டுள்ளனர்..

11. ஈரோடு மாவட்டம்

பவானி தாழுக்கவில் காளிப்பட்டி கிராமத்தில் உள்ள சொக்கநாதர் மலைக்கு அரச குடியான வேங்கை வேட்டுவர்களுக்கு உரிமைகள் இருந்துள்ளன. இங்கு பாண்டிய மன்னர்கள் தலைமறைவாக வாழ்ந்தபோது இந்த மலையில் உள்ள குகையில் வாழ்ந்ததாகவும் சுரங்கப் பாதைகள் உள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த மலையில் வற்றாத சுனை ஒன்று உள்ளது. இம்மலையின் அருக்கில் காளி கோவில் உள்ளது குறிப்பிடத்தக்கது. 12. மருதமலை முருகன் கோவில்:

கோயம்புத்தூருக்கு வடமேற்கில் அமைந்த மேற்குத் தொடர்ச்சி மலையின் மத்தியில் மருதமலைக் குமரன் திருக்கோயில் அமைந்துள்ளது. திருக்கோயில் அடிவாரத்தில் இருநூறு ஆண்டுக்கு முற்பட்ட மருதமலை பற்றிய குறிப்பு உள்ளது. அங்குள்ள நூலகத்தில் மருதமலை முருகன் கோவிலில் கொங்கு வேட்டுவக் கவுண்டர் இனக்கோயில் என்பதற்கான வரலாற்றுப் புகைப்படமும் இடம்பெற்றுள்ளது.

நிறைவுரை

மலை மீது உள்ள முருகன் கோயில் அனைத்தும் உருவாக்கியவர்கள் வேட்டுவர்களே ஆவர். இன்றுவரை, புகழ்பெற்ற முருகன்கோயில் அனைத்திலும் முதல் மரியாதை வேட்டுவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. தற்போதைய காலகட்டதில் ஒருசில கோவில்கள் அரசு இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ளதால் வேட்டுவர்களின் பாரம்பரியம் பாதுகாக்கபட்டு வருகிறது. இருப்பினும் பணபலம் அதிகாரபலம் போன்ற காரணங்களால் வேட்டுவர்கள் உரிமை

பறிக்கப்படுவதை அரசு தடுக்க வேண்டும். தொல்குடிகளான வேட்டுவர் உரிமை பாதுக்காக்கப்படவேண்டும். வேட்டுவ அரசர்கள் தமிழ் நாட்டையும் குறிப்பாக, கொங்கு நாட்டை தன் உயிரினைக் கொடுத்து எதிரிகளிடம் இருந்தும், விலங்குகளிடம் இருந்தும் காத்து வந்தனர். நடுகல் வழிபாட்டின் மூலம் கடவுளை உருவாக்கினர். அக்கடவுள் அவர்களைக் காக்கும் என்று முழுமையாக நம்பினர். அதன் விளைவாக வேங்கை வேட்டுவர் இனக் குழுவைச் சார்ந்த வேங்கை மரத்தைக் காவல் மரமாகக் கொண்ட முருகனைக் குன்று தோறும் வைத்து வழிபட்டனர். அதன் வெளிப்பாடே குன்றுகளில் உள்ள கோவில் முன்னுரிமை வேட்டுவர்களுக்கே இன்றும் தொடர்ந்து கொடுக்கப்படுகிறது. இதன்மூலம் முருகன் ஆதிகுடி வேட்டுவர்வழித் தோன்றலே என்பதை உறுதிப்படுத்தலாம்.

குறிப்புக்காக

குறிப்புக்காக